இராசராசனின் ஆயிரமாவது முடிசூட்டு ஆண்டு விழா–நினைவு வெளியீடு

அருண்மொழி

(ஆய்வுத் தொகுதி)

பதிப்பாசிரியர்

நடன. காசிநாதன், எம்.ஏ.,

இயக்குநர் (பொறுப்பு)

தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை

1985

முதற் பதிப்பு—1988
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 101

10052
LIBRARY.
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

934.82

அருண்மொழி

காசி

பதிப்பாசிரியர்
நடன. காசிநாதன்

விலை: ரூ. 21-00

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை

உள்ளடக்கம்

		பக்கம்
	முன்னுரை	
1	சோழர் கால அரசமாதேவியர் — அப்துல் மஜீத்	1
2	சோழர் காலத்தில் காளாமுக சைவம் — கு. அருணாசலக் கவுண்டர்	6
3	சோழர் காலத்திய ஆவணப் பதிவு முறைகள் — சு. இராசகோபால்	13
4	சோழர் காலத்தில் கணக்குத் தணிக்கை — சொ. சந்திரவாணன்	21
5	சோழர் காலத்தில் ஊர் — சொ. சாந்தலிங்கம்	31
6	கணத்தார் — நா. மார்க்சியகாந்தி	38
7	சோழர் காலத்தில் வைணவர்கள் — பொ. இராசேந்திரன்	45
8	சோழர் காலத்து மூலபருடைச் சபை — இரா. ப. கருணானந்தன்	58
9	குந்தவைப் பிராட்டியின் சமயப்பணி — கு. தாமோதரன்	71
0	தேவதானம் — மா. செந்தில் செல்வக்குமரன்	81
1	சோழர் காலக் குற்றங்களும், விசாரணைகளும் — இல. தியாகராசன்	94
2	சோழர் காலச் சமயப்பணி — ஆ. வேலுசுவாமி சுதந்திரன்	108
3	சுவடிகள் கூறும் சோழர் வரலாறு — ம. இராசேந்திரன்	114
	காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி — நடன. காசிநாதன்	119
	இராசராச சோழனின் முதற்போர் — பொன். முனியப்பன்	125
	வரலாற்று நோக்கில் கலிங்கத்துப்பரணி — தா. வே. வீராசாமி	133
	ஆதித்த கரிகாலனின் கொலை வழக்கு—ஒரு மறு ஆய்வு — க. த. திருநாவுக்கரசு	143
	இங்கண் நாடு — அ. இராசேந்திரன்	154
	சோழர் கால ஆதுலர் சாலைகள் — தே. கோபாலன்	161
	இராசராசன் ஆட்சியில் பாண்டிநாடு — செ. போசு	167

21 கோயில் திருப்பணியில் குணமதாசர் குடும்பம் — ச. கிருஷ்ணமூர்த்தி 175

22 வீரகேரள விண்ணகரத்தில் முதல் இராசராசன் கல்வெட்டுகள் — வெ. வேதாசலம் 180

23 சோழ லங்கேஸ்வரன் யார்? — ஆ. பத்மாவதி 192

24 சோழர் காலத்தில் வணிகச் சங்கங்கள் — தி. சுப்பிரமணியன் 200

25 தெலுங்குச் சோழர்கள் — ர. சாந்தகுமார் 210

26 இராசராசன் பிறந்த, முடிசூடிய நீத்த நாள்கள் — என். சேதுராமன் 216

27 சோழர் காலத்தில் விளக்கு தானம் — கி. ஸ்ரீதரன் 224

28 சோழர் காலத்தில் ஆறுகளும், வாய்க்கால்களும் — ச. செல்வராசு 228

29 பெருமுக்கல் கல்வெட்டு — தாமரைக்கண்ணன் 232

30 வரலாற்றுக்கு முற்பட்ட தஞ்சை மாவட்டம் — கே. எஸ். சம்பத் 237

31 பழையாறை அகழ்வாய்வு — து. துளசிராமன் 242

32 சோழர் காலத்தில் தண்ணீர்ப் பந்தல் — சீ. வசந்தி 249

33 சோழர் கால நந்தவனங்கள் — ம. இராமகிருஷ்ணன் 254

34 இராஜராஜீச்வர்த்தில் பறையறைவு — இரா. நாகசாமி 259

35 சோழர் காலத்தில் பண்டாரம் — இரா. செல்வராசு 263

36 பள்ளிச்சந்தம் — ஆர். வசந்தகல்யாணி 268

37 ஒரு சோழ அரசனும், மதப் பூசலும் — எஸ். சௌந்தரபாண்டியன் 274

தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச்
செயலாளர்

டாக்டர் ஔவை. நட

அணிந்துரை

பொற்காலப் பொன்(

தமிழக வரலாற்றில் பொற்காலம் ற்காலச் சோழர் ஆட்சி போற்றத் தக்க பெருமை பூண்டது. ன்னர் குடியின் புகழ் விளக்கங்களாக அருள்மொழித்தேம் ம்பியன்மாதேவி, செம்பியன்சிறுபாக்கம், செம்பியனல்லூர், தேவி, மதுராந் தகம், கண்டராதித்த சோழபுரம், இரா சரம் போன்ற ளூர்கள் இன்றும் திகழ்கின்றன. வளவர் பெருவேந்தர்கள் ரியமைத்து வாரி பெருக்கிய வரலாற்றைக் தித்தப் பேரே (கடப்பேரி) என்ற ஊர்ப் பெயரே பே தேவதானம் சதுர்வேதிமங்கலம் போன்ற ஊர்ப் பெய சோழவேந்தர் வழங்கிய அறக்கொடைகளுக்குச் சான்றுகள

சிவநெறிப் பேரன்பில் சிறந்து விளா ாழ மன்னரும், அரசமாதேவியரும் திருப்பணிகள் பல தொடங்கிய திருப்பணிகள் முட்டின்றி முடிய மன்னர் பெ கல்வெட்டுக்கள் வரலாற்றுக் கருவூலங்களாக மிளிர்கின்றன.

தஞ்சைப் பெரிய கோயில் சோழர் ல்க்கு வாய்த்த மணிமுடியாகும். ஒரு மாமணியாய்க் கலை ந ஓங்கிய திரு மாமணியாய்த் திகழ்கிறது. திருமுறைகள தடி வழங்கிய

தனிப்பெரும் புகழும் பிற்காலச் சோழர்குல நாயகனுக்கே உரியது. சோழப் பெருவேந்தர் திருமுறை ஆசிரியராகவும் திகழ்ந்தார் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் சோழர் கால ஆட்சி முறைகளையும் ஆவணப் பதிவுகளையும் அரசர் வெட்டுவித்த கல்வெட்டுக்கள் நிரல்படக் காட்டுகின்றன.

சோழர் கல்வெட்டுக்களில் காணப்படும் கருத்துக்களை தொகுத்தும் வகுத்தும் எடுத்துரைப்பதே அருண்மொழி என்ற இ[illegible] வாய்வுத் தொகுதி. புத்தகம் என்பதற்குப் புதுமையை அகத்தே கொண்டது என்றும் பொருள் காணலாம். அத்தகைய பொருள் கோடலுக்கு வித்தகம் சான்ற இப்புத்தகம் பெரிதும் பொருத்த முடையதாகத் திகழ்கின்றது.

காந்தளூர்ச் சாலை கலமறுத்தல் பற்றிய ஆய்வு சிந்தனைக்கு விருந்தாகி, திருக்கோயில்கள் சமுதாய வாழ்க்கைக்கு நிலைக்களங்களாகத் திகழ்ந்தவாறும் காட்டப்படுகின்றன. ஆதுலர் சாலை பற்றிய கருத்துரைகள் உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச் செல்வான், என்ற மருத்துவ மரபினை நினைவுகூர்கின்றன. மருத்துவக் கல்லூரி அந்நாளில் அமைந்திருந்த மாட்சியும், நோய் நீங்க மன்னவன் வழிபாடாற்றிய புதுமையும் குறிக்கப்பெறுகின்றன.

சிவநெறியாளர்களாயினும் சோழப் பெருவேந்தர் சமயப் பொது நோக்கம் உடையவராய்த் திருமால் திருக்கோயில்களையும் போற்றினர். சுந்தர சோழ விண்ணகரம் என்ற பெயரே போதும்!

தமிழ்நெறி சாராது ஒரோவழி இடம்பெறும் கருத்தும், விரைந்த பதிப்பும் என இடர்கள் சில விளைந்தாலும் மிகை நாடிப் பெரிது காணும்போது மனம் மகிழ்கின்றது. இராசராசன் மீதே கொலைக் குற்றம் சுமத்திய வரலாற்று ஆசிரியர்களும் உள்ளனர். குறைகள் ஆராயப்பட்டு மன்னவனைப் பற்றிய மாசு துடைத்திருப்பது பாராட்டத்தக்கது.

சோழர் காலத்து ஆட்சி முறை, ஆலயப் பணிகள், ஆவண மரபுகள், ஊதிய முறை, வரி விலக்கு, குற்றவியல், வழக்கு தீர்ப்புகள் பண்டகசாலைகள், அரிய சொல் வழக்குகள் என்ற பல்துறைச செய்திகளையும் கொண்ட களஞ்சியப் பனுவலாக இவ்வாய்வேடு மிளிர்கின்றது.

சென்ற காலத்தின் பழுதில எதிர்காலத்தின் ஏற்றங்காண்பது ஆய்வாளர் பண்ட ணியினைச் செய்த கட்டுரை ஆசிரியர்கள் பேருழைப்பு பெருமுயற்சியும் பாராட்டுதலுக்குரியவை.

நினைவகங்களையும், இடிபா ழ்விடங்களையும் ஆயும் தொல்பொருளாய்வுத் துற ட்சி, பண்பாட் டியல், இலக்கியம், வழக்கு, வரலா நற்பொருளாய்ந் தும் நலம் விளைக்கின்றனர். தெ வும் செந்தமிழ்த் தொய்வும் கொண்டு திகழும் இயக் ன. காசிநாதன் அவர்களின் நல்லுணர்வைப் பாராட்

இராசராச மாமன்னரின் ஆயிரத் வத் தஞ்சையில் பெருவிழாவாகத் தமிழ் வளர்ச்சிப் ட றயின் சார்பில் (1984) அரசு கொண்டாடியது. நண் நாதன் முழுப் பொறுப்பேற்று விழா நிகழ்ச்சிகளுக்கு றம் நினைவில் நிற்பதாகும். கருத்தரங்கம், சிந்த இசையரங்கம், நாடக அரங்கம், அருங்காட்சியகத் ளியீடு எனப் பொலிவார்ந்து விழா திகழ்ந்தது. பின் பயனாக இவ்வாய்வேடு வெளியிடப்பெறுகி பாருளாய்வுத் துறையினர் இந்த வகையில் அரிய பெ த் தொடர்ந்து வெளியிட்டுத் தமிழ்நலம் ஓம்புவார்க

சென்னை ராசன்

20-12-1988. தம் டுத் துறை.

முகப்புப் படம் :

இராசராசன் கல்வெட்டு

இராசராசன் அகழ்வைப்பகம்,

தஞ்சாவூர்.

பதிப்பாசிரியரின் நன்றியுரை

தமிழகத்தை ஆட்சி செய்த மன்னர் பரம்பரைகளுள் சோழர்கள் மிகச் சிறந்த ஆட்சியை நிறுவியவர்கள் ஆவர். அச் சோழர் குலத்திலே வந்துதித்த பெருவேந்தர்களுள் மாமன்னன் இராசராசன் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி தமிழகத்தை ஆட்சி செய்தவன் ஆவான். தமிழகத்தின் பண்பாட்டையும், கலை நுணுக்கத்தையும் கீழ்த்திசை நாடுகளிலும், இலங்கையிலும் பரவச் செய்து சீர்மிகு சிறப்புக்கு இலக்கானவன். அவனுடைய ஆட்சிப் பகுதி இந்தியாவில் நர்மதை ஆற்றங்கரை வரை பரவி இருந்தது. இலங்கையில் பெரும் பகுதி அவனுடைய ஆட்சிக்குட்பட்டதாகத் திகழ்ந்தது. இராசராசன் வேங்கை நாட்டையும், கங்கபாடி, தடிகைபாடி, நுளம்பபாடி, கொல்லம், ஈழம் ஆகிய பகுதிகளையும் வெற்றி பெற்றான் என்ற செய்தியைத் தன்னுடைய மெய்க்கீர்த்திப் பகுதியிலே பட்டியலிட்டுக் காட்டியுள்ளான். எல்லாவற்றிற்கும் மேலாக மலை நாட்டிலே உள்ள காந்தளூர்ச் சாலையில் கலம் அறுத்து வெற்றி பெற்றதைச் "சாலை கலமறுத்தருளிய" என்று தன்னுடைய மிக முக்கிய மெய்க்கீர்த்தியாகக் கொண்டு இலங்கினான்.

அவனுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் கலைப்பணி மிக உன்னத நிலையில் மேன்மையுற்று விளங்கியது. அவனால் எழுப்பப் பட்ட ஆலயங்கள் அற்புதப் படைப்புக்களாகும். குறிப்பாகத் தஞ்சை மாநகரில் அவனால் எழுப்பப்பட்டுள்ள "இராசராசேச்சரம்" உலகக் கலை வல்லுநர்களின் உள்ளத்தில் நீக்கமற நிறைந்திருப்பது ஆகும். வானை முட்டும் சிகரத்தையுடைய இவ்வாலயம் இராசராசனின் வெற்றிச் சிறப்புக்கும், விழுமிய கலையார்வத்திற்கும், கொடைத் தன்மைக்கும், குடி புரத்தலுக்கும் கவின்மிகு காட்சி தரும் நல் கருப்பொருளாகும். அவ்வாலயத்தில் நாள்தோறும் நடைபெற்ற நாட்டிய நிகழ்ச்சிகளும், இசை நிகழ்ச்சிகளும் கல்வெட்டுக்களில் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பல நாடுகளை அவன் வெற்றி கண்டு, கொண்டு வந்த அனைத்துச் செல்வங்களையும் இராசராசேச்சுரத்து இறைவனின் திருவடியில் அட்டி அவன் வழங்கிய மாட்சி கல்வெட்டுக்களில் விரிவாகக் கூறப்படுகிறது.

அத்தகைய ஈடில்லா பெருமன்னன் முடி சூடிய 1000-த்தாவது ஆண்டினைப் பெரும் விழாவாகத் தமிழக அரசு கொண்டாடலாம் என்று இத்துறையின் முன்னாள் இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் அரசுக்கு ஓர் அரிய திட்டத்தைச் சமர்ப்பித்தார்கள். அத்திட்டத்தினை அரசு ஏற்று இராசராசன் முடி சூட்டப்பெற்று 1000 ஆண்டுகள் ஆனதின் நினைவாக மிகப் பெரிய அளவில் விழா நடத்தப்படுதல் வேண்டும் என்று ஆணை வழங்கியது. அவ்வாணையின் அடிப்படையில் இவ்விழா 1984-ஆம் ஆண்டு செப்டம்பர் த் திங்கள் 16, 17 ஆகிய நாட்களில் சோழர்களின் தலை நகரமாக விளங்கிய தஞ்சை மாநகரில் சீரும், சிறப்புடன் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையால் நடத்தப்பெற்றது. பாரதத்தின் முன்னாள் பிரதமர் அமரர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் இவ்விழா தொடங்கி வைக்கப் பெற்றது. தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் அமரர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமையேற்றுப் பொலிவுடன் இவ்விழாவினை நடத்தித் தந்தார்கள். அப்போதைய மற்ற அமைச்சர் பெருமக்களும் இவ்விழாவிலே பங்கு பெற்று இவ்விழாவினைச் சிறப்பித்தார்கள். இவ்விழா செம்மையாக நடைபெறுவதற்குத் தஞ்சையிலே முகாமிட்டு அனைத்து அலுவலர்களையும் கூட்டி உரிய ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் அவ்வப்போது வழங்கி விழா சிறப்புற அமைவதற்குத் தூண்டுகோலாகவும், பாதுகாவலராக வும் விளங்கிய அப்போதைய வருவாய்த்துறை நிர்வாக ஆணையரும், தற்போதைய மேதகு ஆளுநரின் மாண்புமிகு ஆலோசகருமான டாக்டர் அ. பத்மநாபன் அவர்களும் விழாவிலே பங்கு கொண்டு விழாவினை நெறிப்படுத்தினார்கள். தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை. நடராசன் அவர்கள் விழாவினை யொட்டி கருத்தரங்கம், கவியரங்கம், ஆகியவை நிகழவும், அருங்காட்சியகம் அமைக்கவும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துச் சிறப்பித்தார்கள்.

இவ்விழாவினையொட்டி அமைக்கப்பெற்ற இராசராசன் அருங் காட்சியகத்தில், சோழர்களுடைய ஆட்சிச் சிறப்பையும், கலைத் திறனையும் புலப்படுத்தும் தொல்பொருட்கள், வரைபடங்கள், சோழர் காலக் காசுகள், செப்பேடுகள், கைவினைப் பொருட்கள் ஆகிய அனைத்தும் காட்சிக்கு வைக்கப்பட்டன. மேலும் சோழர் காலச் சிறப்பை ஆய்வு செய்யும் முகத்தான் இத்துறையும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இணைந்து ஒரு கருத்தரங்கை யும் ஏற்பாடு செய்தது. இக்கருத்தரங்கில் இந்தியாவில் உள்ள

வரலாற்று வல்லுநர்களும், வெளிநாட்டைச் சேர்ந்த தொல்லியல் வல்லுநர்களும் பங்கு கொண்டு பல அரிய ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினார்கள். அக்கட்டுரைகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பருவ இதழ்களில் வெளியிடப்பெற்றுள்ளன.

மேலும் ஓர் ஆய்வுத் தொகுப்பு வெளியிடத் திட்டமிட்டதின் பயனாகத் தொல்பொருள் ஆய்வுத்துறையினைச் சேர்ந்த அலுவலர்களும், மற்றும் ஆய்வாளர் சிலரும் வழங்கிய கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப் பெற்று 'அருண்மொழி' என்னும் ஆய்வு நூலாக வெளிவருகிறது. இந்நூலில் சோழர் காலத்து ஊராட்சி முறை, தேவதானம், பள்ளிச்சந்தம் போன்ற அறக் கொடைகள், நீர்ப் பாசனம், நீதிமுறை, ஆடல்அணங்குகளின் வாழ்க்கை, ஆட்சித் திறன், சமயப்பொறை முதலானவை விரிவாக ஆராயப்பட்டுள்ளன. சோழர் காலத்தின் சமுதாய இயல் பற்றித் தெரிந்து கொள்வதற்கு இந்நூல் ஒன்றே போதுமானது என்று கூறத்தக்க அளவிக்கு இந்நூலின்கண் கருத்துக்கள் பொதிந்துள்ளன.

இந்நூலுக்கு ஏற்றமிகு அணிந்துரையைத் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலாளர் டாக்டர் ஔவை. நடராசன் அவர்கள் வழங்கியுள்ளார்கள். இந்நூலின் சிறப்பை உணர்ந்து கொள்வதற்கு செயலாளர் அவர்களுடைய அணிந்துரையே சான்றாகும். அத்தகைய அருமையான அணிந்துரை நல்கிச் சிறப்பித்துள்ள செயலாளர் அவர்களுக்கு எனது நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலிலே உள்ள கட்டுரைகள் அனைத்தும் முறையாகத் தொகுக்கப்பெற்று அச்சாக்கப்படுதல் வேண்டும் என்று ஆணை வழங்கிய இத்துறையின் முன்னாள் இயக்குநர் டாக்டர் இராநாகசாமி அவர்களுக்கும் எனது பணிவான நன்றி. இந்நூல் அச்சிடும் போது கட்டுரைகளை வகைப்படுத்தி நெறிப்படுத்திய இத்துறைக் கல்வெட்டாய்வாளர் திரு. அ. இராசேந்திரன் அவர்களுக்கும் எம் நன்றி. இத்துறையின் சார்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று, இந்நூலில் இடம்பெற்றுள்ள ஆய்வு தோய்ந்த கட்டுரைகளை எழுதி வழங்கியிருக்கும் இத்துறை அலுவலர்களுக்கும், மற்றும் பிற துறையைச் சார்ந்துள்ள ஆராய்ச்சி அறிஞர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றி. இந்நூலைச் சிறப்பாக அச்சாக்கியுள்ள இத்துறை அச்சுப் பிரிவினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தகைய ஆய்வு நூல்கள் தொடர்ந்து வெளிவருதல் வேண்டுமெனில் பொதுமக்களின் ஆதரவும், ஆராய்ச்சியாளர்களின் ஒத்துழைப்பும் மிகவும் இன்றியமையாதவை ஆகும். ஆதலால் இந்நூலில் காணும் குறை பொறுத்து நிறை பாராட்டி இத்துறைக்கு ஊக்கம் அளிக்கும் அனைவரின் திருவடிகளும் எம் முடிமேலன.

சென்னை
2-1-1989

அன்பன்,

நடன. காசிநாதன்

சோழர்கால அரசமாதேவியர்

அ. அப்துல் மஜீத்
பதிவு அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, திருச்சி

சோழநாட்டின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகத் திகழ்ந்தவர்கள் அந்நாட்டை ஆண்ட அரசர்களாவர். அவ்வரசர்களின் வாழ்விலும், தாழ்விலும் பிரிக்க முடியாத இடத்தைப் பெறுபவர்கள் சோழர் கால அரசமாதேவியர் ஆவர் இவர்கள் அரசர்களின் இல்வாழ்க்கை இன்பகரமாகவும், பயனுள்ள வகையிலும் அமைய வழி வகுத்தவர்கள்.

சோழப் பேரரசர்கள் சோழர்கள் அல்லாத மற்ற அரச குடும்பத்தினர்களான பல்லவர்களிடமும், இராட்டிரகூடர்களிடமும், சேரர்களிடமும், வைதும்பர்களிடமும், சாளுக்கியர்களிடமும், கொடும்பாளூர் வேளிர்களிடமும், மலையமான்களிடமும், மழவர்களிடமும் திருமணத்தொடர்பு கொண்டிருந்தனர். இத்திருமணத் தொடர்பே சோழநாட்டின் ஆதிக்கத்தைப் பிற நாடுகளில் பரப்ப வழி கோலியது. உதாரணமாக வேங்கி நாட்டு மன்னன் முதலாம் சத்திவர்மன் சோழரின் படைத்துணைகொண்டு பணிமுடி தரித்துக் கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றான். இவனுடைய தம்பி விமலாதித்தன் (கி.பி. 1011-1018) முதலாம் இராசராசனின் மகள் குந்தவையை மணம் முடித்துக்கொண்டான். கீழைச்சாளுக்கிய நாடும், சோழ நாடும் ஒன்றாக இணையும் வாய்ப்பை இத்திருமணம் உருவாக்கிக் கொடுத்தது. அழிவுகாலத்தை நோக்கித் தள்ளாடிக் கொண்டிருந்த சாளுக்கியர்களுக்குச் சோழர்களுடன் கொண்ட திருமண உறவு புத்துணர்ச்சியையும், மறுவாழ்வையும் அளித்தது. இத்தொடர்பினால் சாளுக்கியர் மட்டுமின்றிச் சோழரும் பெரும் பயன் எய்தினர். முதலாம் குலோத்துங்கன் காலத்திலும் அவனுக்குப் பின் அரசாண்ட சோழசாளுக்கியப் பரம்பரை மன்னர் காலத்திலும் சோழப் பேரரசானது மங்காத புகழுடன் நின்றதற்கும் இத்திருமண உறவு சிறப்பானதொரு காரணமாகும்.

சோழப் பேரரசர்களில் திருமண உறவினால் மற்ற நாட்டவர்களைச் சோழநாட்டு அரசியலிலும், சோழ நாட்டுடனும் தொடர்பு

கொள்ள ஏதுவாக இருந்தது. குறிப்பாக முதலாம் பராந்தகனின் மகன் அரிஞ்சயனின் அன்னை கேரளத்து அரசிளங்குமரியாவாள். இவளுடைய செல்வாக்கின் துணைக்கொண்டு சேர நாட்டவர் பெருமளவில் தமிழகததில் குடியேறினர். பலர் அரண்மனைப் பணியாளராக அமர்ந்தனர். தக்கோலத்துப் போரில் உயிரிழந்த இராசாதித்தனுக்குச் சேரநாட்டைச் சேர்ந்த வெள்ளங்குமரன் படைத்தலைவனாக விளங்கினான். இராசாதித்தன் முதலாம் பராந்தகனுக்கும், பேரரசி கோக்கிழானடிகளுக்கும் பிறந்தவன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்து வரலாற்றில் புகழொளி வீசிய செம்பியன் மாதேவியே சோழர்கால அரசமாதேவியர்களில் தலைசிறந்தவள். இவர் கண்டராதித்த சோழனின் பட்டத்தரசியாவாள். இவரும், இவர் கணவரும் சேர்ந்து சைவசமய வளர்ச்சிக்காகப் பல அரிய தொண்டுகள் புரிந்தனர். கண்டராதித்தன் பாடிய தோத்திரப் பாடல்கள், ஒன்பதாம் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளன. இவர் மழநாட்டை ஆண்ட மழவரையரின் மகள். நாற்பது ஆண்டுகாலம் தன் வாழ்க்கையைக் கோயிற் திருப்பணிகளில் இணைத்துக்கொண்டு ஆன்மீக நெறியில் வாழ்ந்த பேரரசியாவார். இவரிடம் கணவரின் சிவத்தொண்டும், அருட்பண்பும் மிக்குநின்றன. இவையே இவரைச் சோழநாடு முழுமையும் திருக்கற்றளிகள் எடுக்கச் செய்தன. எண்ணற்ற நிவந்தங்களைக் கோயில்களுக்குக் கொடுக்கத் தூண்டியது.

முதலாம் இராசராசன் செம்பியன்மாதேவி நினைவாக வட ஆர்க்காட்டில் உள்ள திருமுக்கூடலில் 'செம்பியன் மாதேவி பெரு மண்டபம்' என்ற ஊரவை மண்டபத்தை எடுத்தான். இராசராசனின் மகனாகிய இராசேந்திரனும் இவ்வம்மையார்பால் பற்றுகொண்டு விளங்கினான். செம்பியன் மாதேவி என்ற ஊரிலுள்ள திருக்கயிலாயமுடையார் கோயிலில் கி.பி. 1019-ஆம் ஆண்டில் இவ்வம்மையாரின் செப்புத் திருமேனி ஒன்றை எழுந்தருளுவித்து நிவந்தம் அளித்துள்ளான்.

தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்திற்கருகில் உள்ள செம்பியன் மாதேவி என்னும் ஊர் உத்தமச் சோழனின் 15-ஆம் ஆட்சி ஆண்டிற்கு முன்பு நிருமாணிக்கப்பட்டதாகும்.

இவர் கோனேரிராசபுரம் என வழங்கும் திருநல்லத்தில் உள்ள திருக்கோயிலைத் தம் கணவர் பெயரால் 'கண்டராதித்தம்' என்ற

கறறளியாகப் புதுப்பித்துக் கண்டராதித்தராகிய தம் கணவர் சிவ பெருமானைத் திருவடி தொழுகின்றவராக ஒரு படிமம் செய்து அக் கோயிலில் வைத்தார் இவர் செய்த கோயில் திருப்பணிகளில் தனிச் சிறப்பு முறை ஒன்றைக் காண்கிறோம். ஒரு கோயிலைப் புதுப் பிக்கும் முன்பு அக்கோயிலில் காணப்பட்ட கல்வெட்டுச சாசனங்கள் அனைத்துக்கும் புதிய படி ஒன்று எடுத்து அமைப்பது வழக்கம். இருபத்தாறு சாசனங்களுக்கு இவர் படியெடுத்துள்ளார். இவர் படியெடுத்த கல்வெட்டுக்களில் ஸ்வஸ்திஸ்ரீ' இதுவும் ஒரு பழங்கற் படி' என்ற சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கும்.

அடுத்து சோழப் பேரரசிகளில் சிறப்பாக விளங்குபவள் குந்தவை. இவள் முதலாம் இராசராசனின் சகோதரி. இராசராசனின் கல்வெட்டுக்கள் இவளை 'அக்கன்' எனக் குறிப்பிடுகின்றன. இவள் வல்லவரையன் வந்தியத்தேவனின் மனைவி. தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இவள் நான்கு செப்புத் திருமேனிகளைச் செய்தளித் தாள். அவற்றுள் இரண்டு தன் தாய் வானவன் மாதேவி, தந்தை சுந் தரச் சோழன் ஆகியோரது படிமங்களாகும். வட ஆர்க்காடு மாவட்டத் தில் செய்யாற்றுக்கருகிலுள்ள பிரம்மதேசம் என்னும் ஊரில் 'குந்த வைப் பேரேரி' என்ற ஏரியையும், 'சுந்தரச் சோழப் பேரேரி' என்ற ஏரியையும் வெட்டுவித்தாள். தஞ்சாவூரிலுள்ள விஷ்ணு கோயிலில் 'சுந்தரச் சோழ விண்ணகர ஆதுலர் சாலை' என்னும் மருத்துவமனை ஒன்றைத் தன் தந்தையின் பெயரால் ஏற்படுத்தினாள். இம்மருத்துவ மனையை நிருவகிக்கத் தஞ்சாவூருக்கு அருகிலுள்ள பண்டார வாடை என்னும் ஊரிலுள்ள வீட்டு மனைகளையும், நிலங்களையும் கொடை யாக அளித்தாள். தாதாபுரம் என்ற ஊரில் மூன்று கோயில்களையும், போளூருக்குக் கிழக்கே 16 கி.மீ. தொலைவில் உள்ள திருமலை என்ற ஊரில் 'குந்தவை ஜினாலயம்' என்ற சமணக்கோயிலையும் தோற்று வித்தாள். குந்தவை எடுப்பித்த சமணக் கோயில் அவளுடைய சமயப் பொறையை உலகுக்கு எடுத்துக்காட்டும் சான்றாக விளங்கு கிறது.

குந்தவைக்கு அடுத்தாற்போன்று சிறப்புறுபவள் உலகமா தேவியாகும். இவர் முதலாம் இராசராசனின் பட்டத்தரசியாகத் திகழ்ந்தவர். இவருக்குத் தந்திசக்திவிடங்கி என்ற பெயருமுண்டு. திருவிசலூர்க் கோயிலில் இராசராசன் துலாபாரம் ஏறியபோது இவள் இரண்யகர்ப்பம் புகுந்தாள். இவ்விரு விழாக்களிலும் கிடைத்த பொன்னைக்கொண்டு உலகமாதேவி திருவலஞ்சுழியில் கோயில் ஒன்றை எடுப்பித்தார். மேலும், இவர் திருவையாற்றில் உள்ள வட

கைலாசம் என்ற கோயிலைக் கட்டுவித்து அதற்கு உலகமாதேவீச்சுரம் என்னும் பெயரையும் சூட்டுவித்தார்.

முதலாம் குலோத்துங்க சோழனுக்குப் பல மனைவியர் இருந்தனர். அவர்களில் முதன்மையாகத் திகழ்ந்தவர் புவனமுழுதுடையாள். இம்மன்னனின் 30-ஆம் ஆட்சி ஆண்டில் இவர் இறந்து விடவே தியாகவல்லி என்பவர் மனைவியரில் முதன்மையிடத்தைப் பெற்றார். நாட்டில் அரசனுக்கிருந்த அதிகாரத்திற்குச் சமமான அதிகாரத்தைப் பெற்றுத் திகழ்ந்தார். முதலாம் குலோத்துங்கன் இவர் மேலுள்ள அன்பினாலும், பெருமதிப்பினாலும், சில நாட்டுப் பிரிவுகளுக்கு இவர் பெயரை வைத்து மகிழ்ந்தான். குலோத்துங்கன் தன் மனைவியிடம் காட்டிய அன்பிற்கு இணையாக விக்கிரம சோழனும் தன் மனைவி திருபுவன முழுதுடையாளிடம் அன்புகொண்டிருந்தான். அவன் கொண்டிருந்த அன்பிற்கு எடுத்துக்காட்டாக நாட்டுப்பிரிவிற்கு அவருடைய பெயரிட்டு மகிழ்ந்தான்.

அரசர்களுக்குப் பல மனைவியர் இருந்தாலும் பட்டத்தரசி ஒருவர் இருந்தார். அரசர்களுடைய அலுவல்களில் பட்டத்தரசிகளும் பங்கு கொண்டனர். அரசியர்களுக்கு ஆணையிடும் உரிமையிருந்தது. அரசிகள் தனிப்பட்ட முறையில் கோயில்களை எழுப்புவது, திருப்பணிகள் செய்வது போன்ற பொது நலன்களில் ஈடுபட்டிருந்தனர். சோழப் பேரரசர்கள் தங்கள் குடும்பத்தினர் மேல் அளவிலா அன்பைச் சொரிந்தனர். முதலாம் இராசராசன் தன் அக்காள் குந்தவையின் மீதும், மகள் குந்தவையின் மீதும், செம்பியன் மாதேவியின் மீதும் பேரன்பைப் பொழிந்தான். அரச குலப் பெண்கள் சிலரிடம் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. சுந்தர சோழன் இறந்தபோது அவன் மனைவி வானவன் மாதேவி உடன் கட்டை ஏறினாள். அரசனுடன் அவனுடைய அரசிகள் அரியணையில் அமர்ந்திருப்பர். அப்பொழுது ஆடல் மகளிர், பாடல் மகளிர், சூதர் (நின்று புகழ்வோர்) மாகதர் (இருந்து ஏத்துவோர்) மங்களப் பாடகர் ஆகியோர் குழுமியிருந்தனர். அப்பொழுது இசை விருந்து நடைபெறும். பல நாட்டு அரசிகள் பணிவிடை செய்து நின்றனர். அரசர்களும், அரசியர்களும் பெரிய அரண்மனைகளில் வாழ்ந்து வந்தனர். மன்னருக்கும், அவனுடைய குடும்பத்திற்கும் பணி செய்வதற்குப் பல ஊழியர்கள் அமர்த்தப்பட்டனர். அரண்மனை நீராட்டு அறையிலும், மடைப் பள்ளியிலும் பெண்களே பணி புரிந்து வந்தனர். அரண்மனைக்குள் பெண்கள் விளையாடுவதற்குத்

தனிப்பொழில்கள் அமைந்திருந்தன. அரசியர் தங்கியிருந்த அந்தப் புரக் காவல் பெண்களின் பொறுப்பிலேயே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

சோழர் காலச் சிற்பிகள் இவர்களுடைய சிற்பங்களை சீனிவாசநல்லூர் குரங்கநாதர் கோயிலிலும், குடந்தை நாகேசுவர சுவாமி கோயிலிலும் தோற்றுவித்துள்ளனர். அச்சிற்பங்களைக் கொண்டு அரசமாதேவியர் சுட்டி, தெய்வ உத்தி, பொற்பூ ஆகிய தலையணிகளையும் நெற்றியில் சுட்டி, காதுகளில் மகரக்குழை, கழுத்தில் முத்துமாலை, பிறைவடம், நட்சத்திர மணிமாலை, வலம்புரி முத்துக்கள் கோர்த்த வடம், நிரைத்தாலி, மாணிக்கத்தாலி, தாலிமணிவடம் ஆகிய அணிகலன்களை அணிவர் என்று அறிகிறோம்.

"எவ்விடத்துப் பெண்ணினம் போற்றப்படுகிறதோ அவ்விடத்து அனைத்துக் கடவுளரும் மகிழ்வெய்துகின்றனர். மாறாக எங்கே அவர்கள் போற்றப்படவில்லையோ அங்கே எத்தனை நல்லவை செய்தாலும் அதற்குரிய பலனைக் காண்பது இயலாத ஒன்று" என்ற மனுவின் நீதி நூலுக்கேற்பச் சோழப் பேரரசர்கள் பெண்களே வாழ்வின் உயிர்நாடி என்றும், பெண்களுக்கு உயர்ந்த இடம் கொடுத்துப் போற்றவேண்டுமென்றும் கருதிப் பெண்ணினத்தைப் போற்றி வந்தனர்.

சோழர் காலத்தில் காளாமுக சைவம்

கு. அருணாசலக் கவுண்டர்

சைவ சமயத்தின் பாசுபத அல்லது மகேசுவர பண்பாடு, மிகவும் தொன்மையானது. இதனினின்றும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டிலேயே லகுலி என்பவர் லாகுலீச பாசுபதத்தைத் தோற்றுவித்தார். அதனால் அம்மகேசுரப் பண்பாடு, லாகுலீசபாசுபதம் என்றும், பாசுபத சைவம் என்றும் இரண்டாகப் பிரிந்து இயங்கியது. இவ்விரண்டு வேறுபாடு இறை இயலை விளக்குவதிலேதான் தோன்றியது. சமய அனுட்டானத்திலே மாறுபாடு இல்லை. சற்றுப் பின்னர், மூன்றாவதாகக் காருணீக சித்தாந்தம் தோன்றியது. இதுவே காளாமுக சைவமாக வளர்ந்தது என்பர். வாசஸ்பதி மித்ரா (கி.பி. 9 ஆம் நூற்றாண்டு) சைவம் பாசுபதம் கபாலிகத்தைப் போலவே காளாமுகமும் தனித்த ஒரு சம்பிரதாயம் என்பர். முதல் மூன்றும் அகில இந்தியாவிலும் பரவியிருக்க, காளாமுகம் மட்டும் கி.பி. 10-13 என்ற காலக் கட்டத்திலே கருநாடகத்தும் இதைச் சார்ந்த தமிழகத்தும் அடங்கியிருந்தது, பின்னர் வீரசைவத்துடனும் சித்தாந்த சைவத்துடனும் கலந்து மறைந்தது.

காளாமுகத்தின் கோட்பாடுகள் சமயாசாரங்கள் பற்றி நமக்குக் கிடைத்த தகவல் சொற்பமே இவை பற்றிய நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. கன்னடக் கல்வெட்டுக்கள்தான் அவற்றின் ஆதார நூலாக லாகுல ஆகமத்தைக் குறிப்பிடுகின்றன. அந்தக் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் லாகுலீச பாசுபதத்துக்கும் காளாமுகத்துக்கும் தெளிவான வேறுபாடு காட்டப்படவில்லை. லாகுல ஆகமம் அவ்விரண்டுக்கும் ஆதார நூல் என்பதால் தத்துவ இயலில் குறப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் இல்லை என்று கருதலாம். சமயாசாரத்தில் வேறுபாடு உண்டா இல்லையா என்பது தெரியவில்லை.

கபாலிகளின் தீவிரவாதிகளே காளாமுகர் என்று நீலகண்ட சாஸ்திரி போன்றோர் கருதுகின்றனர். இவர்களுக்கு அந்தக் கருத்து இராமாநுசரிடமிருந்து கிடைத்திருக்கிறது. காளாமுகம் காபாலிகம் இரண்டுமே அருவருக்கத் தகுந்த நடைமுறைகளைக் கொண்டவை என்பது அவர்கள் கருத்து. காளாமுகர் அத்தகைய நடைமுறையை அனுசரித்தனரா என்பது கேள்விக்கு இடமே. அவர்களைப் பற்றிய

சமகாலக் கல்வெட்டுக்கள் வேறு விதமாகக் கூறுகின்றன. தத்துவ ஞானத்தில் கலை இலக்கியம் மற்றும் கல்விகளில் காளாமுக ஆசாரியர்கள் புலமை மிகுந்தவர்கள் என்பது கல்வெட்டுக்கள் தரும் செய்தி. இவர்களில் பலரும் ராஜகுருக்களாக விளங்கினர். சமய சக்கரவர்த்தி என்றும் போற்றப்பட்டனர். இதனால் இவர்கள் பெற்றிருந்த நன்மதிப்பு புலனாகிறது. சாளுக்கியர் காலம் தொடங்கி விசயநகர வேந்தர் காலம் வரையிலும் குடிமக்களும் இவர்களைத் தொடர்ந்து ஆதரித்து வந்துள்ளனர் என்பதைச் சாசனங்கள் பறைசாற்றும் தமிழகத்திலும் பல இடங்களில் காளாமுகம் நிலை கொண்டிருந்ததை இங்கே காணலாம். சாளுக்கியர், இராட்டிரகூடர் படை எடுப்புடன் அது தமிழகம் போந்தது ஆகலாம்.

புதுக்கோட்டையில் கருநாடகரது தமிழகப் படை எடுப்பில் கங்கன் பூதி விக்கிரமகேசரி, பாண்டி நாட்டில் ஊடுருவிச் சென்று, புதுக்கோட்டைப் பக்கம் கொடும்பாளூரைக் கைப்பற்றி அங்கே அரசு நிலையிட்ட செய்தியுள்ளது. இது நிகழ்ந்தது சுந்தரசோழன் பராந்தகன் காலத்தில் (கி.பி. 957-73) ஆகும். அங்கே விக்கிரமன் தன் பெயரிலும் கற்றளி வரகுணை என்ற தன் இரு மனைவியர் பெயரிலும் மூன்று கோயில்களைக் கட்டி மகேசுவரனைப் பிரதிட்டை செய்து வழிபாட்டுக்கும் நிபந்தங்களை விட்டான். மூவர் கோயில் அல்லது விமானத்திரயம் என்ற அவ்வாலயத்தைச் சார்ந்து பெரிய மடம் ஒன்றை அமைத்துக் கோயிலையும் மடத்தையும் வேதபாரகரும் மதுரைவாசியும் ஆன மல்லிகார்ச்சுனர் என்ற காளாமுக ஆசாரியர் பொறுப்பில் ஒப்படைத்தான். இந்த ஆசாரியர் வித்யாராசி தபோராசி என்பாரது சீடர் ஆத்ரேய கோத்திரத்தைச் சேர்ந்தவர். மடத்திலே தங்கியிருக்கும் ஐம்பது காளாமுகர்க்கு உணவு முதலிய வசதிகளும் செய்திருக்கிறான் (புதுக்கோட்டைக் கல்வெட்டு: 14) கொடும்பாளூர் முகுந்தேசுரர் கோயில் தெப்பக்குளப் படிக்கட்டில் பதிந்துள்ள இரண்டு கல்வெட்டுத் துண்டுகளில் அத்ரி என்றும் விக்ரமகேசரீசுவரர் என்றும் பழங் கன்னடத்தில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அத்ரி என்பது மல்லிகார்ச்சுனரையும் மூவர் கோயிலையும் குறிப்பதாகலாம். (புதுக்கோட்டைக் கல்வெட்டு: 1087, 1088).

பூதிவிக்கிரமகேசரி கருநாடகத்தின் தென்பகுதியை ஆண்டுவந்த மேலைக்கங்கர் வழியினன் என்பது தெளிவு. கொங்குநாடு அவன் தாய் வீடு. கங்கநாட்டைத் தன் சகோதரன் சிவமாறனிடம் விட்டு விட்டுத் தனக்கென்று ஒரு நாட்டை அமைத்துக்கொண்டு காலங்

கருதியிருந்தான். பல்லவர்-சாளுக்கியர் போர்களில் சாளுக்கியருக்குத் துணையாய்ப் போரில் கலந்துகொண்டு கொடும்பாளூரைக் கைப் பற்றினான். இந்த வெற்றியின் சின்னமாகவே மூவர் கோயிலையும், பெரிய மடத்தையும் எடுப்பித்தான். இந்த மூவர் கோயில் கட்டிடக் கலை வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது. சாளுக்கிய மரபின் சாயலில் அது தோன்றுகிறதே அன்றி, சமகாலப் பல்லவ, பாண்டிய, முத்தரையர் கட்டிட மரபில் இல்லை என்பர் ஆய்வாளர்.

கொடும்பாளூர்க் கல்வெட்டின் காலத்தைக் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு என்று மயிலை சீனி. வேங்கடசாமியும், கி.பி. 10 ஆம் நூற்றாண்டு என்று நீலகண்ட சாஸ்திரியும் கூறுவர். இந்தக் கல்வெட்டால் நாம் அறிவது: பூதிவிக்கிரமகேசரி காளாமுகர்களை ஆதரித்தான் என்பதும் அவனிடம் தானம் பெற்ற மல்லிகார்ச்சுனக்குரு, வித்யாராசியும், தபோராசியும் ஆவர் என்பதும் கவனத்துக்குரியது. காளாமுகரைப் பற்றிய கல்வெட்டு ஒன்று, தருமபுரியில் காணப்படுகிறது. இதன் காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு. எனவே கி.பி. 8-ஆம் நூற்றாண்டு அளவிலேயே காளாமுக சைவம் சாளுக்கியர் படை எடுப்புடன் தமிழகம் போந்திருக்கிறது எனலாம். முதலாம் இராசராச சோழன் காலம் வரையிலும் தமிழகத்தின் பல இடங்களிலும் இது பரவியிருக்கிறது.

குடுமியாமலை இசைக் கல்வெட்டை ஆய்ந்த வேங்கடராமன் என்பவர் அது, கி. பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்கிறார். அதில் காணப்பெறும் ருத்ராசாரியர், பாசுபத காளாமுகரைக் குறிப்பதாகலாம் என்பர். அக்கோயிலின் துவாரபாலகர் சிலையும் அந்த ருத்ராசாரியாரைக் குறிப்பதுதான். இந்த ஆசாரியச் காளாமுகரிலே புசங்காவளிக் கிளையைச் சேர்ந்தவர் ஆகலாம் என்று பி. ஜி. எல். சாமி கூறுகிறார். இதே காலத்ததான தருமபுரிக் கல்வெட்டும் ருத்ரபுசங்கரைச் சுட்டுவதாகலாம்.

தருமபுரியில் ருத்ரபுசங்கரைக் குறிப்பிடும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு, பழைய கன்னட மொழியில் செய்யுள் வடிவில் அமைந்தது. காளாமுக ஆசான் வித்யாராசி என்பவர் புகழைப் பாடுவது. மூவர் கோயில் மல்லிகார்ச்சுனருடைய ஆசிரியர் வித்யாராசியினும் வேறான இவர், லாகுலஆகமி என்ற ருத்ர போசங்கருடைய சீடர். போசங்கர் என்பது புசங்கரே. காளாமுகத்தின் ஒரு கிளையான புசங்காவளி சந்தானம், காஞ்சீபுரத்தைத் தலைமை இடமாகக் கொண்டது. இதன் ஆசிரியர் ருத்ரபுசங்கர். கி.பி. 8-ஆம்

நூற்றாண்டு அளவில் காஞ்சீபுரம் கங்கநாட்டைச் சேர்ந்த பூழ்புருசன் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது கவனத்துக்கு உரியது.

வடார்க்காடு, மாவட்டம் மேல்பாடி, சோழீசுவரம் என்ற கோயில் தற்பொழுது சீர்குலைந்திருக்கிறது. அரிஞ்சயேசுரம் என்று முன்னம் அது வழங்கப்பட்டது. முதலாம் இராசேந்திரன் கல் வெட்டு ஒன்று அக்கோயிலின் மடாதிபதியான லாகுலீசுவர பண்டிதரைக் குறிப்பிடுகிறது. சோழவேந்தன் அரிஞ்சயன் (கி.பி. 956–57) தன் தந்தை இறந்துவிட்ட திருமுனைப்பாடி, தொண்டை நாடுகளை மீட்டுக்கொள்ள இராட்டிரக்கூடருடன் போரிட்டு களத்திலே மடிந்து போனான். அவன் பெயரில் அரிஞ்சயேசுவரம் என்ற கோயிலை முதலாம் இராசேந்திரன் மேல்பாடியில் எடுப்பித்தான். இப்போர் களில் இராட்டிரக்கூடருடன் போந்த காளாமுகர் மேல்பாடியில் தங்கியவராதால் வேண்டும். வெடால் என்ற இடத்தும் அவர்கள் குடியேறியிருக்கின்றனர். அங்கே ஆண்டார் மடம் என்ற குகையின் முன் மண்டபத்துள் முதலாம் பராந்தகன் கல்வெட்டு, தசபூரியன் என்ற காளாமுகனை இனங்காட்டுகிறது.

திருக்கோயிலூருக்கு அடுத்துள்ள ஜம்பை அகிலாண்டேசுரர் கோயிலில் சோழன் வீரராசேந்திரன் 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று பூசகரின் தலைவராக மாவிரதி லாகுலீசுவர பண்டிதரைக் குறிப்பிடுகிறது. மேல்பாடியிலும் கருநாடகம் பெல்காமிலும் இப் பெயருடைய பண்டிதர்களைக் காண்கிறோம். இம்மூவரும் ஒருவரா வெவ்வேறானவரா என்பது தெரியவில்லை. வீரராசேந்திரன் சாளுக்கியருடன் துங்கபத்திரைக் கரையில் போர் புரிந்திருக்கிறான். அப்போது காளாமுகர் ஜம்பையில் வந்து தங்கினவராதல் கூடும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் காளாமுகரைக் குறிப்பிடும் மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. திருவையாறு பஞ்சநதர் கோயிலில் முதலாம் இராசேந்திரனின் 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மடாதிபதி ஆன லாகுலீசுவர பண்டிதருக்குக் கி.பி. 1018-இல் ஆசாரிய போகமாக நிலம் விட்டதைக் குறிப்பிடுகிறது (22-1985). இரண் டாவது கல்வெட்டு, பந்தநல்லூர் பசுபதீசுரர் கோயில் இராசகேசரி வர்மனின் 10-ஆம் ஆண்டில் காட்டூர் தட்சிணாமூர்த்தி பட்டன் மகன் பெரியநம்பி பட்டன், சிவப்பிராமணர்க்கு விளக்கெரிக்கப் பொன் கொடுத்ததைக் கூறுகிறது. இந்த சிவப்பிராமணர் காளாமுகரே. இராசகேசரிவர்மனை இனங்காண்பதற்கு இல்லை. மூன்றாவது கல் வெட்டு கோப்பெருஞ்சிங்கன் (கி.பி. 1253) காலத்தது (192-1928).

திருவலஞ்சுழிக் கோமடம் சோமதேவனுக்கு நிலமும், வீடும் கொடுத்ததைக் கூறுகிறது. இந்தக் கோமடம், காளாமுகத்தைச் சார்ந்ததே.

செங்கல்பட்டு மாவட்டம் திருவானைக்கோயில், திருவாலீசுரத்தில் 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் காளாமுகமடம் இயங்கியதை அறிகிறோம். அந்தக்கோயிலில் மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஒன்று, விக்கிரம சோழனின் (கி.பி. 1231) 9-ஆம் ஆண்டுக் கல்வெட்டு. அது சைவராசி பண்டிதரைக் குறிப்பிடுகிறது (360-1911) மற்ற இரு கல்வெட்டுக்களும் மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1205) மூன்றாம் இராசராசன் (கி.பி. 1231) காலத்தவை. (357-1911 352-1911) இவை, சைலராசி பண்டிதரையும் குணராசி பண்டிதரையும் குறிப்பிடுகின்றன. இவர்கள் கோமடத்தைச் சேர்ந்தவர்கள். காளாமுகப் பஞ்சோதி பண்டிதரின் சிற்ப வடிவம், திருவாலீசுரம் வடக்குச் சுவரிலே இருக்கிறது. (Ep.1912 Part II Para 28.).

திருவொற்றியூரில் பல்லவன் விசயகம்பவர்மன் கல்வெட்டு ஒன்று உள்ளது. (372-1911.) அவ்வூரில் நிரஞ்சனகுரு மடம் நிறுவியதை அது கூறுகிறது. இந்த மடத்தின் அதிபதிகளாய்ச் சதுரானன பண்டிதரின் பரம்பரையினர் இருந்து வந்தனர். இவர்களில் பலரும் பாசுபதர். பின் வந்த மடாதிபதிகள் காளாமுகர் ஆகலாம். திருவொற்றியூரைக் காளாமுகர் இடம் என்பர் இரா. நாகசாமி. சிவாலயத்தில் பத்மாசன நிலையில் அமர்ந்த கோலத்தில் காணப்பெறும் சிவபெருமானைக் கௌலீசர் என்கிறார். இதையே லகுலீசர் என்று கருதுவாரும் உளர். நான்கு கர மூர்த்தி ஆகிய சிவனார். சடாதாரியாய்ப் பழகக் குண்டலம் தரித்துக், கீழ் வலதுகரம் வக்கணிக்கும் நிலையில் இடதுகரம் மார்பின் மீது, மேல் இடதுகரம் கபாலம் ஏந்தி வலது கரம் தண்டு அல்லது சூலத்தின் காம்பைப் பற்றிய வண்ணம் தோன்றுகிறார். கோயில் விமானத்தின் மேல்தளத்தின் தென்பால் இது போலும் உருவம் ஒன்றைக் காணலாம். இந்தக் கௌலீசரைத் தட்சிணாமூர்த்தியுடன் இனங்காண்பார் நாகசாமி. தட்சிணாமூர்த்தி ஆலமரத்தடியிலே அமர்ந்திருப்பர். கௌலீசர் சிற்பத்திலே ஆலமரம் இல்லை. மேலும் கருநாடகத்தில் காணப்பெறும் நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்களில் தட்சிணாமூர்த்தியைக் காளாமுகர் வழிபட்டு வந்தனர் என்பதற்குச் சான்றில்லை. தட்சிணாமூர்த்தி பாசுபத சூத்திரங்களில் முக்கிய இடம் பெறுகிறார். திருவொற்றியூரில் காளாமுகம் போலவே சோமசித்தாந்தம் காபாலிகமும் சிறந்து விளங்கியதைக் கல்வெட்டுக்கள் புலப்படுத்தும். இவர்கள் வழிபடும் தெய்வம் கௌலீசர் ஆகலாம்.

காளாமுக மடங்கள், சந்தானங்கள் கிளைகள் என்ற அமைப்பில் இயங்கின இவற்றில் ஒரு பெரிய சந்தானம், சக்தி பரிசத் என்பது. இது பர்வதாளி புசங்காளி என்னும் இரு கிளைகளாக இயங்கின. புசங்காளியின் ஒரு பிரிவு மூவர்கோனேய சந்ததி. கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தருபபுரிக் கல்வெட்டு, காஞ்சிபுரத்தில் புசங்காளி தோன்றியது என்றும் ருதரபுசங்கர் அதன் ஆசான் என்றும் வித்யாராசி அவர் சீடர் என்றும் கூறுவது சிந்தனைக்கு உரியது. கருநாடகம் சாமராஜ் நகர் சாசனம் (E:C IV) பாலபுசங்கன் என்பவரையும் சந்திரகுடி சாசனம் (E:C VII) பிரம புசங்கர் என்பவரையும் குறிப்பிடும். இவர்கள் காஞ்சீபுரத்தினின்றும் வடகரை கருநாடகம் போந்தவராதல் கூடும். தெற்கே போந்தவர்கள் மதுரையில் தங்கியிருக்கின்றனர் இவர்களில் ஒருவர்தான் மூவர் கோயில் சாசனம் குறிப்பிடும் மல்லிகார்ச்சுனர்.

சிவாலயங்களும் காளாமுக மடாலயங்களும் அடுத்தடுத்து இருந்ததையும் இம்மடாதிபதிகளே கோயில் நிர்வாகம் பூசனைகளின் பொறுப்பை ஏற்றிருந்தனர் என்பதையும் கல்வெட்டுக்கள் புலப்படுத்கின்றன. கொடும்பாளூர் மல்லிகார்ச்சுனர், மூவர் கோயிலின் தலைமை அர்ச்சகராகவும் பெரிய மடத்தின் அதிபதியாகவும் இருந்திருக்கிறார். இவரே மூவர் கோனேய மரபைத் தோற்றுவித்தார். மூவர் கோனேய என்பது மூவர் கோயில் என்ற தமிழ்ச் சொல்லின் கன்னட மொழி பெயர்ப்பாகும்.

பெல்காம் ஷிமோகா மாவட்டங்களில் தார்வார், அப்லூர் என்ற தலங்களில் புசங்காவளியின் மூவர் கோனேய சந்ததி காலூன்றி வேர்விட்டுத் தழைத்திருந்ததை கி பி 12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன. எனவே காஞ்சீபுரத்தினின்றும் பதுரச்சுப் போந்த புசங்காவளியினர், கொடும்பாளூர் மூவர் கோயிலில் தங்களுக்கென அவ்விடத்தின் பெயராலேயே மூவர் கோனேய சந்ததியைத் தோற்றுவித்தனர். இச்சந்ததியினர், மைசூர் சாம்ராச் நகரிலும், வடமேற்குப் பெல்காம் சிமோகா, தார்வார் மாவட்டங்களிலும், குடிபுகுந்து காளாமுக சைவத்தின் காவலராக விளங்கினர். இவர்கள் காளாமுக சைவத்தின் அடிப்படையில் தமிழகத்தின் 63 நாயன்மார்களின் வரலாறுகளையும் பக்திப் பண்பாட்டையும், கருநாடகத்தின் வடபுலத்தில் பரப்பி வளர்த்திருக்கிறார்கள். இவையே கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இடையில் வீரசைவமாகப் பரிணமித்திருக்கிறது. போர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து, கருநாடகத்தினின்றும் தமிழகம் போந்த காளாமுகம், தமிழகத்தின்

பக்திப் பண்பாட்டுடன் மீண்டும் கருநாடகத்துக்கு போய் வீர சைவமாய் மலர்ந்திருக்கிறது.

பல்லவர் காலத்தில் தேவாரங்கள் பிரதிபலிக்கும் சைவ சமயம் குறித்து ஆழ்ந்த ஆராய்ச்சி இன்னமும் நடைபெறவில்லை. சிவ புராணங்களின் சார்பான பாசுபத சமயமே பல்லவர் காலத்தும் நிலவியது என்பதுதான் கிடைத்துள்ள சான்றுகளால் புலனாகிறது. பக்தி இயக்கத்தின் பயனாய்க் கோயிலைச் சார்ந்து புதுப் பொலிவுடன் பாசுபத சைவம் வளர்ந்து வந்தது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இடையில் வடபுலத்திலிருந்து வந்ததும் தத்துவ சிந்தனையோடு கூடியதுமான கோளகி சைவம், பாசுபதத்துடன் ஒன்று: தமிழ்ச் சைவத்தின்முன் தலை எடுக்கமுடியாது அதனோடு கலந்து மறைந்தது. தமிழ்ச் சைவத்துக்கும் காளாமுகத்துக்கும் நடைமுறை வேறுபாடுகள் இருப்பினும் ஆலய வழிபாடு சிவலிங்க ஆராதனை விரதம் விழாக்கள் இரண்டிலும் ஒன்று போலவே என்றாலும் இவற்றை வேறுபடுத்திக் காட்டுவது இவற்றின் ஆதார நூல்களான ஆகமங்களே. காளாமுகம் லாகுலாகமத்தைத் தழுவியது. தமிழ்ச் சைவமோ 28 ஆகமங்களைக் கொண்டது. இந்த 28-இல் லாகுலாகமம் சேர்க்கப்படாதது சிந்தனைக்குரியது.

சோழ வேந்தர்களின் ஆதரவில் தமிழ்ச் சைவம் வளத்தோடு வலிவுடன் தழைத்து வந்தபோது, காளாமுகமும் தழைத்திருக்க முடியாமல் அதனோடு கலந்து மறைந்தது. கருநாடகத்திலே வீர சைவத்துடன் இணைந்தது. இது நேர்ந்தது கி. பி. 12-ஆம் நூற்றாண்டில், இதன் பிறகு காளாமுகம் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை.

சோழர் காலத்திய ஆவணப் பதிவு முறைகள்

சு. இராசகோபால்
கல்வெட்டாய்வாளர்-பயிற்றுநர்
திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை

இரண்டு தரப்பினரிடையே ஏற்படும் பரிவர்த்தனைகள், விற்பனைகள், உடன்பாடுகள், சபை, ஊர் ஆகியவை எடுத்த முடிவுகள், தீர்மானங்கள், அளித்த சலுகைகள், அரசு அளித்த ஆணைகள், சலுகைகள், என்றென்றும் நடைபெற வேண்டிய தர்மங்கள். நியதிகள் ஆகியவை ஆவணங்களாகப் பதிவு செய்யப்பட்டன. ஓலையிலோ, கல்லிலோ அல்லது செம்பிலோ இவை பதிவாயின.

தர்மசாத்திரம் போன்ற நீதிநூல்கள் ஆவணங்கள் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு வரண் முறைகள் வகுத்துள்ளன. வியாசர், பிராஜபதி போன்றோர் ஆவணங்களை (பத்திரங்கள்) உபகதபத்ரம் (ரசீது ஒப்புச்சீட்டு), கிரயபத்ரம் (விலை), ஆத்கிபத்ரம் (அடைமானம்), சந்திபத்ரம் (உடன்படிக்கை), ஸ்திதிபத்ரம் (நிலையான நடைமுறை) விபாகபத்ரம் (பாகப்பிரிவினை), தானபத்ரம் (கொடை) தாசபத்ரம் (அடிமை) என்று வகைப்படுத்தியுள்ளனர்.

சோழர் காலத்தில் ஆவணங்களின் வகைகளும் அவை எழுதப்பட்ட முறைகளும் பிற்காலக் கட்டங்களைவிட அதிகம் காணப்படுகின்றன. கிடைக்கும் கல்வெட்டுக்களே ஆவணங்கள் என்றாலும் அவைமேலும் பலவகையான ஆவண வகைமுறைகளைக் காட்டி நிற்கின்றன. இவ் வகைமுறைகள் ஒரு விரிந்த தலைப்பின் கீழ் சொல்லப்பட வேண்டிய ஒன்று. இங்கு சில ஆவணங்களை விரிவாக விளக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆவண வகைகள்

ஆவணம்: ஆவணம் என்ற சொல்லாட்சியிலேயே விலை ஆவணம், நிலவிலை ஆவணம், பங்குவிலை ஆவணம் என்ற வகை வகையான ஆவணங்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. ஆவணங்களைப் பதிவு செய்து பாதுகாக்க ஆவணக்களங்கள் இருந்தன. இன்று பதிவாளரிடம் விலைக்குண்டான தொகையைக்

கொடுத்து வாங்குவது போலவே அன்றும் ஆவணக்களத்தில் தொகை கொடுத்து வாங்கப்பட்டது. ஆவணக்களி, ஆவணக்கிழிகை போன்ற சொற்களுக்கான பொருள்கள் மேலும் அறிந்து கொள்ளப்பட வேண்டியவையாகும்.

பிராமணம்: விலைப் பிரமாணம், நிலவிலைப் பிராமணம், பூமி பிரமாணம், இறைகாவல் பிரமாணம், ஆசிறியப் பிரமாணம், பிரியப் பிரமாணம், சண்டேசுவரப் (அல்லது பன்னர்கள் பெயரில்) பிரமாணம் எனப் பிரமாணம் என்ற சொல்லாட்சி சோழர்கள் காலக் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. ஆள்விலைப்பிரமாணம் இங்கு கீழே தனியாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆசிறியப் பிரமாணம் என்பது அஞ்சி ஓடிவந்தவர்களுக்கு அடைக்கலமளிப்பது தொடர்பானது. இறைகாவல் பிரமாணம் என்பது வரியைக் கட்டுவதற்குக் காப்பு அளிப்பது தொடர்பானது.

தீட்டு: தீட்டு என்பது எழுதப்பட்டது என்று பொருள்படும். கைத்தீட்டு, ஒட்டிசைவுத்தீட்டு, நிலைமைத்தீட்டு, அடையோலைத் தீட்டு, ஏவல் தீட்டு, விலைப் பிரமாணத்தீட்டு, உபயத்தீட்டு, இசைவுத் தீட்டு, அன்னியநாமகரணத்தீட்டு, ஆள்விலைப் பிரமாணத்தீட்டு என்று சோழர் காலக் கல்வெட்டுக்கள் பலவகைத் தீட்டுகளைக் காட்டுகின்றன. இசைவுத் தீட்டு என்பது சம்பந்தப்பட்ட இருவர் நடைமுறைகளையும், விலை முறைகளையும் இசைந்து ஏற்று எழுதிக் கொள்வது. அன்னியநாமகரணத்தீட்டு, நிலைமைத்தீட்டு ஆகியவை தனித் தலைப்புகளில் சொல்லப்பட்டுள்ளன.

ஓலை: அறையோலை, இறையோலை, இறைகாவல் ஒட்டோலை, பொருள் மாவறுதிப் பொருட் செலவோலை, சிலவோலை, அடைவோலை, செம்போலை, ஆளோலை, அறுதிப் பரிவர்த்தனைஓலை, விலையாவணவோலை, கையெழுத்து ஓலை என்று பல வகைகள் உள்ளன. மன்னன் கொடையாக நிலங்களைக் கொடுத்தது பற்றிய ஆணை நாட்டாரிடம் வரும் போது, நாட்டார் ஆணையைத் தலைமீது ஏற்று நிலங்களின் எல்லை காட்டி அறவோலை செய்து கொடுத்தனர் என்ற செய்தி செப்பேடுகள் பலவற்றிலும் காணப்படுகின்றது. இறையோலை என்பது வரிவிலக்கு தொடர்பானது. இறைகாவல் ஒட்டோலை என்பது ஒரு கொடை நிலத்தின் வருங்கால வரிகளுக்காக முன்னதாகவே காசு அல்லது பொன் போன்றவை கொடுத்து எழுதும் ஆவணமாகும். விலையாகப் பேசும் போது ஏற்படும் பல செலவினங்களையும் ஏற்றுக் குறிப்

பிட்டு இறுதி செய்து எழுதும் ஓலை பொருள்மாவறுதிப் பொருட் செலவோலையாகும்.

பிறவகைகள் : மேற்கண்ட வகைகளைத்தவிர மேலும் அறுதிப்பரிவர்த்தனை, நிலவழிப் பரிவர்த்தனை, விலை சிராவனை, இறையிலி சிராவனை, கைத்தடி, கையெழுத்து, கையடை, பரிசு, ஒழுகு, தெரிப்பு, வியவஸ்தை, முறி, நியோகம், போன்ற வேறுபட்ட வகைகளும் சோழர் காலக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஆவணங்களை நேரடியாகக் கல்வெட்டுகளாகவே பொறித்துப் பல இடங்களில் கல்வெட்டுக்களையே ஆவணங்களாக மேற்கோள் காட்டுகின்றனர்.

ஓலை வகைகள்

ஆள் ஓலை ; மனிதனை விலை பேசி விற்று அதற்காக எழுதிப் பதிவு செய்யும் ஆவணம் ஆள்ஓலை, ஆள்விலைப் பிரமாணம் என்று வழங்கப்பட்டது. வேதாரண்யத்தில் மூன்றாம் இராசராசன் காலத்தில ஒரு ஆள் விலைப் பிரமாணத் தீட்டு எழுதப் பட்டுள்ளது (541/17). இறைவனுக்கு அரியான் பிச்சன் என்ப னொல் 10 பேர் 1000 காசுக்கு விற்கப்பட்டுள்ளனர். இவனுக்கு எதிலிச் சோழ சங்கை நாடாழ்வான் என்ற அரசுப் பட்டப் பெயரும் உண்டு. பத்து பேரில் ஐவர் இவனது முன்னோரால் ஏற்கனவே விற்கப்பட்டவர்கள் ஆவர். கல்வெட்டு இவர்களை அடியார்கள் என்றும், சகையாண்டிக கூட்டத்தவர் என்றும், இந்த விற்பனை இவர் களது வழிவழியினரையும் உள்ளடக்கியது என்றும் குறிக்கின்றது. அடிமை வாழ்வு கூட்டம் கூட்டமாகவும், வழிவழியாகவும் விலைப் பொருளாகவும் இருந்ததைக் கல்வெட்டு நன்குணர்த்துகிறது. ஆள் விற்பனை ஆவணமாகப் பதிவு செய்யப்பட்டுக் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டதைக் காணும் போது அடிமை வாழ்வு அன்றைய சமுதாயம் ஏற்றுக் கொண்ட மரபு என்று நன்கு விளங்குகிறது.

தோற்ற மன்னர்கள் வென்ற மன்னர்களின் அடிமைகள். அது கூட ஆள் ஓலையாக எழுதப்பட்டதை ஒரு பாடல் கல்வெட்டு காட்டுகின்றது. இது மூன்றாம் குலோத்துங்கன் காலப் பாண மன்னன் கல்வெட்டு. தென் ஆர்க்காடு மாவட்டம் திருப்பாலப் பந்தலில் உள்ளது. (177/17) :

ஸ்வஸ்திஸ்ரீ
தாரு முடியு முரசுந் தமக்குரிய
பாருமுடன் பெறுவர்—பார்வேந்தர்

வீரப்பெருமாள் மகதேவன் பேரெழுதித்
தத்தந் திருமார்பில் ஆளோலைசெய்து."

பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம் நம்பியாரூநரை இறைவனுக்கு அடிமை என்று பேசுவதாகும். இறைவன்,

"அக்காலம் உன்தந்தை தன்தந்தை ஆள்ஓலைஈதால்
இக்காரியத்தை நீஇன்று சிரித்ததென்ஏட"

என்று அடிமையை ஏட என்று அடக்குகின்றார். மேலும்,

"இசைவினால் எழுதும் ஓலை காட்டினான் ஆகில் இன்று
விசையினால் வலியவாங்கிக்கிழிப்பது வெற்றிஆமோ"

என்று இறைவன் கூறும் சொற்களால் ஆள் ஓலை இசைவோடு எழுதப்பட்டது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அவ்வோலையில் எழுதப்பட்ட வாசகத்தைச் சேக்கிழார் முழு ஆவணமாகவே பாடலில் தருகின்றார்.

கல்வெட்டுக்களில் மட்டுமல்லாது சோழர் கால இலக்கியத்திலும் ஆவண முறை தெளிவாகக் காட்டப்படுவது சோழர் காலத்தில் ஆவண அமைப்புகள் வழக்கில் மலிந்திருந்தமைக்கு எடுத்துக் காட்டாகும்.

நிலைமைத் தீட்டு

இப்படி இப்படி நடக்க வேண்டுமென இருதரப்பார் எழுதிக் கொடுக்கும் உடன்படிக்கை நிலைமைத் தீட்டாகும். சோழர்க்களுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்கள் தங்களுக்குள் எழுதிக்கொண்ட நிலைமைத்தீட்டு செங்கத்தில் (வ. ஆ. மாவட்டம்) இன்றும் கல்வெட்டாகவுள்ளது. விக்கிரசோழ சம்புவராயர், கரிகாலச் சோழ ஆடையூர் நாடாழ்வார் ஆகிய இருவர்க்கு அதிகமான் வழி வந்த இராசராச அதிகமான் நிலைமைத்தீட்டு எழுதித் தந்துள்ளான்.

அன்னிய நாமகரணத் தீட்டு

கோயிலுக்கு வழிபாட்டிற்காக நிலங்கள் கொடுக்கும்போது இறைவன் பெயரிலேயே அதாவது திருநாமத்திலேயே ஆவணங்கள் எழுதுவது மரபு. இப்படி எழுதி கொடுக்கப்படும் நிலங்கள் திருநாமத்துக்காணி என்றழைக்கப்பட்டன. கொடையாளர் செய்ய நினைத்த தர்மத்திற்கு (விளக்கு, அமுதுபடி, உண்பித்தல் போன்றவை) உண்டான செலவுகளுக்கும் அதிகமாக அந்நிலத்தால் வரும்

அதிகப்படி வருவாய் கோயிலுக்குச் சேர்ந்துவிடும். இந்த அதிகப்படி வருவாயை வேறொருவருக்குத் திருப்பிக் கொடுக்கப் பிறறொருவர் பெயரில் அதாவது அன்னிய நாமத்தில் எழுதும் ஆவணமே அன்னிய நாமகரணத் தீட்டாகும்.

இத்தீட்டு கொடையாளருக்கும், அன்னியநாமகரணத்துக்குப் பெயர் தந்தவருக்கும் இடையில் எழுதப்படுவதாகும். கொடையாளர் தானே காசு கொடுத்து வாங்கிய நிலமான போதிலும் தன்பேரிலோ, திருநாமத்திலோ (இறைவன் பெயரிலோ) பிறர் பெயரிலோ நிலத்தை வாங்கும் (அன்னியநாமத்தில்) வழக்கினையும் சில அன்னியநாம கரணத்தீட்டுகளையும் சிதம்பரத்தில் உள்ள முதற் குலோத்துங்கன் மகளது கல்வெட்டு (226/4) இரண்டாம் இராசாதிராசனின் கல்வெட்டு (227/4), மூன்றாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டு (pp. 210-213/3 pt.2) ஆகிய கல்வெட்டுகளும், கோயில் தேவராயன்பேட்டை (66/13) திருவாரூர் (583/17) ஆகிய ஊர்களில் உள்ள இராசாதிராச சோழன் கல்வெட்டுகளும் நமக்குக் காட்டுகின்றன.

சில ஆவண வழக்காறுகள்

எழுத்து : ஆவணம் எழுதிக் கொடுப்பவர்கள் இறுதியில் கையொப்பமிடுவது என்ற மரபு சோழர் காலத்தில் மிக அவசியமான தாக இருந்தது. "இவை என் எழுத்து" என்று பெயர்களுடன் ஆவணத்திற்குக் கையொப்பங்கள் உயிர் கொடுத்து விளங்கின.

அறிவேன் : ஆவணங்களில் சாட்சிக் கையெழுத்து இடுவது என்பது சோழர் காலத்தில் பரந்து காணப்படுகிறது. சாட்சியொப்ப மிடுபவர்கள் 'இப்படி அறிவேன்' என்று தங்கள் பெயர்களுடன் ஒப்ப மிட்டு 'இது என் எழுத்து' என்று முடித்தனர். ஒரு ஆவணத்தில் பல சாட்சியொப்பங்கள் சோழர் காலக் கல்வெட்டுகளில் காணப் படும்.

சயிஞ்ஞை தற்குறி

கையொப்பமிடத் தெரியாதவர்கள் ஆவணங்களில் எழுத்தாணி யால் சிறிது கீறுவர். இந்தக் கீறல் அல்லது குறி, தற்குறி அல்லது சயிஞ்ஞை எனப்பட்டது. இவை என் எழுத்து என்பதற்குப் பதிலாக 'இது பாரதாயன் கேச்வன் அறிவரியான் சயிஞ்ஞை' (தற்குறி) என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

மாட்டறிதல்

சயிஞ்ஞை என்றும் தற்குறி என்றும் குறியிட்டவருடைய குறி, கையொப்பமிடத்தெரிந்த ஒருவரால் மாட்டறிந்து அதாவது சரி என்று சொல்லப்பட்டுக் கையொப்பமிடும் பழக்கம் சோழர் காலத்தில் இருந்தது. இவர்கள் 'தற்குறி மாட்டறிந்தேன்', 'சயிஞ்ஞை மாட்டறிந்தேன்' என்று குறிப்பிட்டு இது என் எழுத்து என்று தங்கள் கையொப்பமிட்டனர். இன்றுகூடக் கைரேகை வைக்கும் போது இன்னார் இடதுகைப் பெருவிரல் கீறல்' என்று மற்றொருவர் கையொப்பமிடும் பழக்கம் காணப்படுவது ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

இத்தம் விகதம்

ஒரு ஆவணம் தயாராகி முடிவடையும் தருவாயில் சம்பந்தப்பட்ட நபர் இறந்து போனாலோ காணாமல் போனாலோ அல்லது அனாதேசம் சென்று விட்டாலோ அவருக்காகப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளக் கூடிய மற்றொருவர் இத்தம் விகதம் என்று குறிப்பிட்டுத் தன் கையொப்பமிடும் வழக்கு சோழர் காவத்தில் இருந்தது. வடமொழியில் 'இத்தம்' என்ற சொல் இறந்து போதல், இல்லாது போதல்' என்று பொருள்படும். இராசராசன் தஞ்சைக் கல்வெட்டில் 'செத்தார்க்கும், அனாதேசம் போனார்க்கும்' என்று வரும் சொற்கள் இந்த இத்தம் விகதம் என்ற சொல்லுக்குச் சரியான சோழர் கால விளக்கமாகும்.

முதுகண்

ஒருவருக்கு மற்றொருவர் பிரதிநிதியாக இருந்து ஆவணங்களை எழுதும் மரபும் சோழர் காலத்தில் இருந்தது. அவ்வழக்குகளில் 'முதுகண்ணாக உடைய' என்று பெயரெழுதிக் கையொப்பமிட்டனர். குழந்தைகளுக்குத் தாயும் தாய்க்குக் குழந்தைகளும் முதுகண்ணாக இருந்தமை கல்வெட்டுகளால் தெரிய வருகிறது.

புணை

ஒருவர் ஒரு தர்மச் செயலைச் செய்ய ஒப்புக் கொண்ட போதிலும் அவருக்கு மற்றொருவர் புணை கொடுக்கும் மரபு சோழர் காலத்தில் இருந்தது. இது இன்றைய உறுதி (surety) கொடுக்கும் முறையை ஒத்தது. 'சேந்தனைப் புணையாகக் கொடுத்து' 'புணை பட்ட துருத்து சேந்தனும்' (116/19) என்ற கல்வெட்டு வரிகளை உதாரணத்திற்குக் குறிப்பிடலாம். புணை பட்டவர்கள் புணை கொடுத்தவர்களது தவறுகளுக்குக் கடப்பாடுடையவர்கள் ஆவர்.

ஒரு முறை புணை கொடுக்கப்பட்டவர் தண்டம் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் அந்த தண்டத் தொகையைக் கட்ட வில்லை. எனவே புணைபட்டவரிடம் வசூலிக்க முற்பட்டனர். புணைபட்டவரும் கையில் காசில்லாதிருந்ததால் புணைபட்டவரது நிலம் விற்று பணம் வசூலிக்கப்பட்டது என்பதைச் சோழர் காலக் கல்வெட்டு ஒன்று (260/19) குறிப்பிடுகிறது. வரி கட்டுவதற்காகப் புணை கொடுக்கும் வழக்கு 'இதற்கிறை புணை' என்ற கல்வெட்டுச் சொல்லால் (278/19) அறியக் கிடக்கின்றது.

திரிவிட்டுக் கொடுத்தல்

ஒருவர் பெயரில் உள்ள ஆவணத்தை அல்லது அவ்வாவணத்தில் குறிப்பிட்டுள்ள செயற்பாடுகளை மற்றொருவர் பெயருக்கு மாற்றிக் கொடுத்தல் 'திரிவிட்டுக் கொடுத்தல்' என்று வழங்கப்பட்டது (326,564/17).

ஒட்டிக் கொடுத்தல்

ஒரு செயலை ஒப்புக்கொள்வதும் ஏற்று நடத்துவதாகச் சம்மதம் கொடுப்பதும், ஏற்றுக் கொள்வதுமாக ஒருவர் ஒரு ஆவணத்தில் கையொப்பமிடுவது 'ஒட்டிக் கொடுத்தல்' என்று வழங்கியது. 'இப் படி ஒட்டி இட்டுக் குடுத்தோம்' (43-1) விஜயமங்கலமுடைய பரம சுவாமிக்கு ஒட்டி இறை காவல்லொட்டோலை இட்டுக் குடுத்தேன்' (76/13) என கல்வெட்டுக்களில் வருவதைக் காணலாம்.

அடுத்துக் கொடுத்தல்

கொடையாகக் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட ஆடு, நிலம் போன்றவற்றை பராமரிப்பதற்காக மற்றொருவருக்குக் கோயிலைச் சேர்ந்தவர்கள் கொடுப்பது 'அடுத்துக்குடுத்தல்' என்று வழங்கப் பட்டது. உதாரணமாக' இவ்வாடு அறுபதும் இடையற்கு அடுத்துக் குடுத்து (2/13) 'ஒலோக மாதேவியார் கந்மிகளுக்கு நிலம் அடுத்துக் குடுத்தோம் ஆழ்வார் கந்மிகளோம்' (36/24), குடுத்த பரிசாவது' (35/24) என வருகின்றன.

ஆவணம் எழுதியவர்கள்

ஆவணங்களை எழுதியவர்கள் ஊர்க்கணக்கர், ஊர்க்கரணத் தார், மத்யஸ்தர் போன்றவர்களாவர். ஆவணங்களை எழுதியவர் களது கையொப்பம் ஆவணங்களில் இடுவது இன்றியமையாத

தாகும். ஒரு ஆவணம் குயவர் ஒருவரால் எழுதப்பட்ட செய்தி, "எழுதினேன் வேட்கோவன்" (601/17) என்ற வரியால் தெரிகிறது.

முடிவுரை

பல்லவர் காலத்தை அடுத்து வந்த சோழர் காலத்தில் நீர்ப் பாசன வசதிகள் பெருக்கப்பட்டு நிறைய நிலங்கள் பயிறேற்றப் பட்டன. இதன் விளைவாக நிலப்பரிமாற்றங்கள் மிகுந்து எண் ணற்ற ஆவணங்கள் எழுதப்பட்டன. எனவே மேற்சொன்ன ஆவணங்கள் மட்டுமல்லாது இன்னும் பல்வேறு வகையான ஆவணச் சிக்கல்கள் தோன்றி ஆவண முறைகளும், வகைகளும் மிகுந்தன. கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பின்னதாக வந்த விசயநகர நாயக்கச் சமுதாயங்கள் நிலங்களை மையமாகக்கொள்ளாது வரி வருவாய் களையும், படைக் கண்காணிப்பையும் மையமாகக் கொண்டதால் ஆவணங்களின் வகைகள் குறைவதைக் காணலாம். இன்று வழக்கி லுள்ள ஆவணப் பதிவு முறைகள் அந்நியர் ஆட்சியால் ஏற் பட்டவை அல்ல. அவர்களது முறைகளுக்குத் தாக்குக்கொடுத்து ஏற்றும் விடுத்தும் வந்தவையாகும்.

சோழர் காலத்தில் கணக்குத் தணிக்கை

சொ. சந்திரவாணன்

அருங்காட்சியகக் காப்பாட்சியர், கொற்கை

சோழர்கள் தங்களது ஆற்றலாலும், படைபலத்தாலும் ஆட்சி முறையில் வழுவேற்படாது தேர்ந்த அதிகாரிகளைக்கொண்டு தம் ஆட்சிக்குட்பட்ட இடங்களை மண்டலங்களாகவும், வளநாடுகளாகவும், நாடுகளாகவும், கூற்றங்களாகவும், சதுர்வேதி மங்கலங்களாகவும், சிற்றூர்களாகவும் பிரித்து ஆட்சி செலுத்தினர்.

ஊராட்சிமுறையும் உட்பிரிவுகளும்

நாட்டு மக்கள் எல்லாவகையாலும் வளமான வாழ்க்கை வாழ்ந்தமைக்கு அடிமுதற் காரணமாய் அமைந்தது ஊராட்சிமுறையாகும். ஊர்ச்சபையின் நேரடி ஆளுகையின்கீழ்க் கிராமங்கள் அமைந்து விளங்கிய காரணத்தால் மக்களின் வாழ்க்கை அமைதியாக இருந்தது. நீதி வழங்கவும் அறநிலையங்கள் வைத்து நன்மை செய்யவும், ஊர்க் காரியங்கள் ஒழுங்காக நடைபெறவும் ஊர்ச் சபைகள் செய்து வந்த தொண்டு அளவிடற்கரியது.

அவற்றின் கடமைகள் வரவரப் பெருகிக்கொண்டே வந்தமையால் அவற்றை நிறைவேற்றச் சில உட்பிரிவுகளை அமைப்பது இன்றியமையாதிருந்தது. அவ்வாறான உட்பிரிவுகள் 'வாரியங்கள்' என்ற பெயரில் அழைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன. அதற்கான உறுப்பினர்கள் குடவோலை முறையில் தேர்வு செய்யப்பட்டனர் என்பது முதற் பராந்தகனின் செங்கற்பட்டு மாவட்டம், உத்தரமேரூர்க் கல்வெட்டால்[1] நன்கறியலாம்.

வாரியப் பெருமக்களும் வாரியங்களும்

ஊரும், நகரமும் பலபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுக் குடும்புகள் (ward) எனப்பட்டன. ஊர் சபையால் வாரியப் பெருமக்களாகத் தேர்ந்து எடுக்கப்பெறும் உறுப்பினர்கள் தகுதியின் அடிப்படையில் குடும்புகளுக்கு ஒருவராகத் தேர்வு செய்து அவ்வவ்வுறுப்பினர்களைக் கூட்டாக்கியோ, அன்றித் தனித்தோ வாரியங்கள் அமைப்பது முறைமை.

வாரியப் பெருமக்களை உள்ளடக்கிய வாரியங்கள் சம்வத்சர வாரியம், தோட்ட வாரியம், ஏரி வாரியம், பஞ்ச வாரியம், பொன் வாரியம், கழனி வாரியம்,[2] கணக்கு வாரியம், கலிங்கு வாரியம், தடிகை வாரியம், குடும்பு வாரியம்[3] என்பன போன்ற வாரியங்களாகக் கொள்ளப்பட்டன.

உறுப்பினர் தகுதி

அவ்வாறு கொள்ளப்பட்ட வாரியங்கள் நீதிமுறை வழுவாது செயல்பட்டன என்பதற்கு உறுப்பினர் ஆவதற்குரிய தகுதி இழந்தவர்கள் பட்டியல் தருவதிலிருந்து அறியலாம்,

உறுப்பினராக இருந்து இறுதியில் கணக்குக் காட்டாது இருந்தவர்களும் இவர்களுடைய உறவினர்களும், கூடத்தகாதவர்களோடு கூடியவர்களும், பஞ்சமா பாதகங்கள் செய்தவர்களும், கையூட்டுப் பெற்றவர்களும், குற்றம் காரணமாகக் கழுதைமேல் ஏற்றப்பட்டவர்களும், கள்ளக் கையெழுத்து இடலாகிய 'கூடலேகை' செய்தவர்களும் இவர்களது உறவினர்களும் தகுதி இழந்தவர்கள்[4] என்று கூறுவதால் அறியலாம்.

கணக்கு வாரியரது பணிகள்

ஊர்க்கணக்கரும் மத்யஸ்தரும் எழுதும் கணக்குகளை ஆய்ந்து உண்மை காண்பது கணக்கு வாரியத்தின் கடமையாகும்.

ஊர்ச் சபையார் பணித்தவற்றைச் செய்யும் பணிமக்கள் பலர். அவர்களுள் மத்யஸ்தன், கரணத்தான், பாடிகாப்பான், தண்டுவான் அடிக்கீழ் நிற்பான்[5] என்பார் சிலர்.

கணக்கர்கள்

ஊர்க் கணக்கன், கோயில் கணக்கன் என்ற முறையில் இருந்து கணக்குகளை எழுதி வந்தனர். கரணத்தான் என்பவன் ஊர்க் கணக்குகளை எழுதுபவன். தணிக்கை செய்பவனாகவும்[6] இருந்துள்ளான். கோயில் கணக்கனின் கீழ் எண்மர் இருந்து உதவி செய்து வந்தனர்[7] என்பதும் கல்வெட்டுகளால் அறியமுடிகின்றது.

கண்காணிக் கணக்கன், கண்காணிக் கரணத்தான், கண்காணி நாயகம், கண்காணி என்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டமை தெரிகிறது.

தகுதியும், ஊதியமும்

நல்வழியில் ஈட்டிய பொருளும், நல்லொழுக்கமும் உடையவர்களையே கரணத்தாராக நியமனஞ் செய்வது வழக்கம். ஒரு நாளைக்கு நாளாழி நெல்லும், ஓராண்டிற்கு ஏழு கழஞ்சு பொன்னும், இரண்டு கூறையுங் கரணத்தானுக்கு வழங்கப்பட்டது.[8]

பிற பணிகள்

சில ஊர்களில் கணக்கெழுதும் கரணத்தான் அவ்வூர் மத்தியஸ்தனாகவும் இருந்து பணிகள் செய்தனர் என்பதும் தெரிகிறது. "இப்படிக்கு சபை உள்ளிருந்து பணித்தார்.....பணிப்பணியால் ஊர்க் கணக்கு இவ்வூர் மத்தியஸ்தன் பண்டிதப் பிரியனேன் இவை என் எழுத்து"[9] என்ற கல்வெட்டுத் தொடரால் அறியலாம்.

கணக்கர்களின் பெயர்கள்

சில கல்வெட்டுக்களின்படி, கணக்கர்களின் பெயர்களை அறிய முடிகின்றது. கோயில் கணக்கன் ஒருவன் தஞ்சைக் கல்வெட்டில் "செம்பங்குடியான் தன்னிச்சை சதுரவிடங்கன்" என்று குறிப்பிடப் படுகின்றான். மேலும்

".....இவ்வூர்க் கணக்குச் செய்வாந் சுந்தர சோழ
முத்தரையநாந பிராந்தக முத்தரையர்க்கு[11]

".....ஸபைக் கணக்கன் புறக்கடல்
வாமநாந பெரிய கோயிலப் பிரியன்"

".....பணிப் பணியால் ஊர்க் கணக்கு
சாத்தனூருடையான் பண்டிதப் பிரியன்,...

"சேய்ஞலூருடையான் அலங்காரப்பிரியன்"

"இலங்கூறுடையான் மூலபருஷைப் பிரியன்"

"காட்டுடையனார் பட்டப்பிரியன்"[12]

என்று வருகின்றனவும் இன்ன பிற பெயர்களாலும் அறிந்து கொள்ளமுடிகின்றது.

தணிக்கை முறை

ஒரு முறை நேர் செய்து எழுதப்பட்ட கணக்கில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டபோதோ அன்றிக் குற்றம் ஏற்பட்டிருந்தாலோ, மீண்டும் கணக்கைச் சரிபார்த்துக் குற்றம் குறைகளைக் கண்டு

பிடித்துத் தீர்ப்பதற்குப் பயன்படும் முறைக்குத் தணிக்கை முறை என்று பெயர்.

பெரும்பாலும் கோயில் கணக்குகள் 'தணிக்கை' செய்யப்பட்டதைக் கல்வெட்டுகள் வழி அறியலாம். கோயிலுக்குக் கொடுக்கப்படும் தானங்கள், கொடைகள் பெரும்பாலும் பொருட்களாகவும், நிலங்களாகவும், காசுகளாகவும் அமைவது இயற்கை. இவற்றை நிருவாகம் செய்பவர்களோ அன்றிப் பிறரோ 'கைக் கொள்ளும்' போது கண்டு பிடிக்கப்பட்டுத் தணிக்கை செய்து நிரூபணம் ஆனதும் தண்டனை வழங்குவது முறையாக அமைந்துள்ளது. தணிக்கை செய்யும்போது யார் முன்னிலையில் நடைபெற்றது? யார்யார் இருந்தனர்? தணிக்கை செய்தது யார்? என்பன போன்ற விவரங்களும் அடங்கியுள்ளன.

கோயில் சொத்தில் தணிக்கை

கோயிலில் பணிபுரியும் கணக்குக் காணி உடையவர்கள் சிலர் கோயில் பணத்தைத் தமது சொந்தப் பணிகளுக்குப் பயன் படுத்தினர். அத்துடனின்றி இறைவனின் மீது சார்த்தப் பயன்படும் ஆடைகளையும், கோயிலுக்குச் சொந்தமான செங்கற்களையும் தமது சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் சென்றனர். இதனை அறிந்த கோயில் சபையார் தணிக்கை செய்தனர் என்பதைத் திருநாகேஸ்வரம் கோயிலில் உள்ள மூன்றாம் இராசராசனின் [கி.பி. 1225] இரண்டு கல்வெட்டுகள்[13] கூறுகின்றன.

> "ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீஇராஜராஜ தேவர்க்கு யாண்டு எட்டாவதின் எதிராமாண்டு 112 நால் பிரசாதஞ் செய்தருள வந்த திருமுகப்படி திருபுவனச் சக்கரவத்தி கோ நேர்மைகொண்டான். உய்யக் கொண்ட வளநாட்டு உடையார் திருநாகீஸ்வரமுடையார் கோயில் தேவகன்மிக்கும் ஸ்ரீமாகேஸ்வர கண்காணி செய்வார்க்கும் இக்கோயிலிலும் இக்கோயில் . . . . . தேவர்கள் கோயிலி லும் கணக்குக் கண்காணி உடையார் வித்த காசில் பாவையுடையான் ஆதித்தன் [த] நிமை நக்கனானும் இவன் தம்பி நச்சினார்க் [கினியனும்] . . . . கரியானும் என்பார் சிவத்துரோகமாக இருப்பனவும் சிவத்துரோகஞ் செய்தார்கள் என்று இக்கோயில் தாநத்தார் தாங்களும் தபஸியாரும் . . . . ."

என்று வரும் வரிகளின் பின்னர் வரும் எட்டாவது வரியில்;

> "..... கருவுகலத்திலே ஒடுக்கிருந்த காசிலே சில ... எலமே பூசை கொள்கிற தாயன் மாறையும் ... விலசியன் தங்குவாரைக் காலி ... பண்ணி நான் ஏறி .. னினதும் இப்பெருமாள் சாத்தி அருளும் [பொன்]னா[டையையும் கொடுபோய் தன் அகத்திலே விநியோகங் கொண்டும், இவ்வூரில் கோயில் கட்டணம் ... பண்தோம் ..... செங்கல்களையும் [விற்று] கொடுபோய் தங்கள் அகங்கள் [சேர்த்தும்] மற்றும் சிவத்துரோகமும் எரிசத் துரோகியாலே ..."

என்று வருவது காண்க. இதனை ஆய்வு செய்தவர்கள் யார் யார் என்று கூறுகையில்,

> "இக்கோயில் ஸ்ரீ காரியஞ் செய்வானும் ஸ்ரீமாஹேஸ்வரர் கண்காணி செய்வார்களும் தேவகன்மி கோயிற் கணக்கணும் இவ்வனைவோம் .."

என்றும் தெரிகிறது. இக்கோயிலில் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியாருக்கும், அஷ்ட பரிவாரதேவதைகளுக்கும், இறைவனுக்கும் தனித்தனியே கணக்குக்காணி உடையவர்கள் இருந்தனர் என்பது தெரிகிறது.

இதே போன்று கோயில் கணக்குகளில் தணிக்கை செய்யப் பட்ட செய்திகளைக் காஞ்சீபுரம் கல்வெட்டுகளிலும் நாம் அறிய முடியும்.

நகை கணக்குத் தணிக்கை

கோயிலுக்கு இட்ட நகைகளின் கணக்குத் தணிக்கை செய்து மீண்டும் நிறை அளந்து ஆபரணங்கள் செய்தமையும், அதனைக் கண்காணித்தவர்களின் பெயர்களின் வரிசையையும் கூறும் கல்வெட்டுகள் சில உள. திருநாகேஸ்வரம் கோயிலில் உள்ள முதல் இராசேந்திரனின் இருபதாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு[15] இக்கோயிலுக்கிட்ட பல பொற்பூக்களும் நகைகளும் இற்றனவும் முறிந்தனவும் இட்டுத் திருக்கொள்கையும், திருக்கொடுக்கும், திருக் கோசரமும்செய்ததையும் கணக்குத் தணிக்கை செய்யும் போது,

'இத்தேவர்க்கு முன்பு கல்வெட்டுப் படியும் பண்புறப் படியும்...' சரி பார்க்கப்பட்டதை அறிய முடிகின்றது. தணிக்கைக் கண்காணிகளாய் இருந்தவர்களின் பெயர்ப் பட்டியலும், நிறை எடுத்தவர்

பெயரும் கூறித் தன்மக் கட்டளைக் கல்லால் அளந்த பொன்னைக் குடிஞைக் கல்லால் நிறை அளந்து ஆபரணங்கள் செய்யப்பட்டதாம். பொற்பூக்கள், வாகுவளையம், திருக்காப்புக்காறை, பட்டம் முதலியன செய்து இறைவனுக்குச் சூட்டப்பட்டனவாம்.

ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி [வளர] . . . . . '' என்று மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டில்;

> ஸ்ரீ ராஜேந்திர சோழ தெவற்கு யாண்டு 20-ஆவது உய்யகொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுத் திருக்குடமூக்கில் திருநாகீஸ்வரம் உடையா . . . ளும் பல பொற்பூ[க்]களும் சில பணிகளாய்[க்கி] தந்த பொன்னும் இற்றனவும் முறிந்தனவும் இட்டுத் திருநாகீஸ்வரமுடையார்க்குத் திருக்கொள்கையும் திருக்கொடுக்கும் திருக்கோசரமுமாகப் பண்ணிச் சாத்துக''

என்று கூறப்படுகிறது. கண்காணிகளைக் கூறும்பொழுது அவர்களின் பணிகளுடன் பெயர்களும் கூறப்படுகின்றது:

> '' . . . . . கண்காணி திருக்குடமூக்கில் மூலபருடையார்க்கும் இந்நாடுவகை செய்கின்ற கொடந்திட்டை உடையா . . . சோழனுக்குமாகக் கண்காணி மாடலந் பாண்டந் தாமோதிரனு மாதவன் வாசுதேவன் பூதநும்
>
> இத்தேவற்கு ஸ்ரீகாரியம் பார்க்கின்ற சந்திரன் தாந தொங்கனாந கடாரங்கொண்ட சோழ மாயிலட்டி . . . . . கின்ற சத்திரிய மல்லத் தெரிந்த வலங்கை வேளைக்காரரில் பெருமான் சென்னியும், திருக்குடமூக்கில் மூலபருடையர்க்காக [ஸ்ரீகோயில்] காரியம் செய்கின்ற காவணியன் வாசுதேவன் சேந்தனும் கஸ்யபன் இராமதேவநாராயணனும் பண்டாரி திருக்கணாராமநு[ம்] இக்கோயில் காணி
>
> உடைய சிவப்பிராமணந் பாரதாயன் நக்கனங்காடியனும் பாரதாயன் சூரிய . . . நும் பா . . . . ம் ஸ்ரீகோயில் கண்காணிக்கு மத்யஸ்தந் அரங்கன் ஆடவல்லானும். திருமெய்காப்பான் வெண்காடன் பெருமங்கலமும் திருமெய்காப்பாந் சுப்பிரமணியந்சிங்கனும் பந்மா ஹேஸ்வரர் கண்காணி ந [டபள்ள] வ உருத்திராகிரம வித்தநான சண்

> டேசுவர பிடாரனும் ஸ்தான வாரியன் பரமாற்பன் பூர்வசனும் திருப்பதியம் பாடும் நம்பியாரூரனும் . . . நிச்சதும் இவ்வனைவர் கண்காணியாக . . . . ''

என்று கூறப்படுவதைக் காணலாம். பொன் வகைகளை நிறை எடுத்தவனின் பெயரைக் கூறும்போது,

> '' . . . . . கங்கை கொண்ட சோழபுரத்தில் மும்முடிச் சோழப் பெருந்தெருவில் வியாபாரி பிரமகுட்டன் உல களந்தான் நிறை எடுக்கையால்''[16]

என்று கூறப்படுகின்றது.

நிலக்கணக்குத் தணிக்கை

தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் பிறரால் கவரப்பட்ட போதோ, அன்றி இயற்கையின் சீற்றத்தால் விளைநிலம் நாசமான போதோ, அன்றி இறை கட்டத் தவறியபோதோ நிலங்களை மீண்டும் அளந்து தணிக்கை செய்தனர். அவ்வாறு தணிக்கை செய்தவன் பெயரைக் கூறும்பொழுது பொதுப் பெயரால் 'நாடுவகை செய் வான்' என்றும், 'நிலம் அளப்பிக்க வந்தோன்' என்றும் அழைத்தமை தெரிகிறது. அத்துடன் நிலம் அளந்து தணிக்கை செய்யும்போது, 'அனுபவப் படியும் கணக்குப் படியும்[17] நிலங்கள் அளந்து ஆழிக் கல்லும் சூலக்கல்லும் நட்டு எல்லை தெரிந்தனர் என்பதும் அறிய முடிகின்றது. நிலம் தணிக்கை செய்து அளக்கப்படும் முன்னர் ஊர்ப் பிடாரிக்கு ஆட்டைப் பலியிட்டனர்[18] என்றும் தெரிகிறது.

முதற் குலோத்துங்கனது பதினாறாம் ஆட்சியாண்டாகிய கி. பி. 1086-இல் சோழநாடு முழுவதும் இரண்டாம் முறையாக அளக்கப்பட்டுக் கணக்கு எடுக்கப்பட்டது.[19]:

> 'நம் உடையார் சுங்கம் தவிர்த்தருளின குலோத்துங்க சோழ தேவற்கு [யாண்டு] 16 ஆவது திரு உலகளந்த கணக்குப்படி நீங்கல் நீக்கிப் பனை நின்ற கொல்லையும் உவரும் உப்பு மண் ணும் ஆய் அருகெழுந்த படுதரையும் என்று அளந்த நிலத்து[20]

என்றும்,

> 'சுங்கம் தவிர்த்த குலோத்துங்க சோழ தேவர்க்கு பதினாறாவ தளக்கக் குறைந்த நிலத்தொடு'...[21]

எனவும் கூறும் கல்வெட்டுகளும் உள.

மூன்றாம் குலோத்துங்க சோழனின் இருபதாவது ஆட்சி ஆண்டில், திருவரங்கத்திலுள்ள கோயில் நிலங்கள் ஆற்றின் போக்கால் சிதைவுபட்டு மண்மேடிட்டுவிட்டதை மீண்டும் அளந்து, திருநந்தவனமானபடியும் தவிர்த்து வந்த கணக்கிலும் கழித்து நிலம் அளவு சாத்துப்படி கொண்டு ஊரடங்க அளந்து ஒக்க பரிவர்த்தனை பண்ணினர் என ஒரு கல்வெட்டு[22] தெரிவிக்கிறது.

> ''.....பாண்டிய குலாசனி வளநாட்டுத் திருவரங்கத்து வாரியனுங் கரணத்தானுங் கண்டு இன்னாட்டு மீகொன்(றை) நாட்டு உடையார் திருவானைக்காவுடையார் கோயில் இவ்வூர் குடியிறுப்பு நத்தத்துக்கு வடகிழக்கு.....விக்கிரசோழந் திருவீதியில் வடசிறகுட்பட்ட விட்ட அகளங்க நாடாள்வார் எழுந்தருளிவித்த திருக்காமக்கோட்டத்துப் பெரிய நாச்சியார் கோயிலும், திருமதிலும் [பெரிய] கோயிலுக்கு வடக்குப் பேர்தறுச் செய்வித்த ஒரு சிறகின் மனைகளுக்கு வால் நீளம் குறைவுபட்டு ஆறுகுத்தி இடித்தழிவு பட்டவாறே''

என்று போகிறது.

> ''அனுபவப் படியும் கணக்குப்படியும் நிலம் கலந்து கிடக்கும் உட்கிடை வாகில் திருவானைக்காவில் நிலத்திலே விட்டு நிலத்துக்கு ஒக்க பக்கஞ்சேர நிறுத்திப் பரிவற்தித்துத் திருவானைக்காக் குடியிருப்பு நத்தமாக வாய் இடுகிற இடம் எல்லைக்கு வேண்டுமளவிலே ஆறு பெற்று கல்லிட்டுத் திருவானைக்காவுடையார் கோயில் நடுவாகக் கொண்டு வாஸ்து வகுத்துக் குடியேறவும் பண்ணி.....''

> ''திருவரங்கத்து நிலமான.....பூந்திருநந்த வனமாந படியுந் தவிந்து கணக்கிலும் கழித்து...''

> ''நிலம் அளவு சாத்துப்படி கொண்டு ஊரடங்க அளந்து ஒக்க கண்ட பரிவர்த்தனை''...[23]

என்று வருவதைக் காணலாம்.

குற்றங்கள் தண்டனைகள்

கரணத்தான் தான் எழுதிய கணக்கை ஆண்டின் இறுதியில் சபையாரிடம் கொடுக்கும்போது 'சிவக்கக் காய்ச்சிய மழுவைக் கையில் ஏந்தி உறுதிமொழி கூறிக் கொடுத்தல் வேண்டும். அங்ஙனம் கொடுக்குங்கால் கையில் ஊறுபாடு நேராதாயின் ஏழுகழஞ்சின்மேல் கால்பங்கு பொன் சேர்த்தும் ஊறு நேர்ந்தபோது பத்து கழஞ்சு பொன்னும் தண்டம் விதிக்கப்பட்டது.[24]

TAMILNADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
10052
LIBRARY
CHENNAI

கோயில் சொத்துக்களைக் கையாடியவர்களின் நிலங்களை விற்று 4[illegible],000 காசுகளும் 3,000 காசுகளுமாகக் கோயிலுக்கு கருவூலத்தில் சேர்க்கப்பட்டன.[25] பிறிதோர் கல்வெட்டில் மகாசபையார் முன்னம் கணக்குக் காட்டாத குற்றத்திற்காக அவ்வூர்க் கணக்கனின் நிலம் 25 காசுக்கு இறையிலியாக விற்றுக் கொடுக்கப்பட்டது.[26] சொத்துக்களைக் கையாடியதற்கும் சிவத்துரோகம் செய்ததற்கும் அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்து கோயில் கணக்கில் சேர்க்கப்பட்டன.[27] இது போன்ற செய்திகளைத் தரும் கல்வெட்டுக்கள் பல உள்ளன.

குற்றம் செய்தவர்களேயன்றி தகுதி அற்றவர்களும் கரணத்தராய் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டு 25 பொன் தண்டம் அளித்ததும் அவர்களின் பதவி பிற கரணத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டதும் கல்வெட்டால்[28] அறிய முடிகின்றது

பிற செய்திகள்

மேற்சொன்ன செய்திகளே அன்றிப் பிற செய்திகளாகக் காண்போமானால் சேய்ஞலூர்க் கல்வெட்டு, வாரியம் அமைப்பது பற்றியும் கடமை முதலியவற்றை வசூலிப்பது பற்றியும், சபா விநியோகம் என்னும் வரிவாங்கிச் செலவிடுவது பற்றியும் அவ்வூர்க் கோயில் சபையார் செய்த முடிவை ஊர்க்கணக்கன் ஒப்பளிப்பு செய்ததைப் பற்றியும் தெரிவிக்கிறது. மாநாட்டுச் சபையின் கூட்டம் நடைபெற்ற போது ஒவ்வோரூரின் பிரதிநிதியோடும் அவ்வவ்வூரின் கணக்கரும் அங்கு இருத்தல் வேண்டும்[30] என்றும் கூறுகிறது. சபையினருடன் ஊர்க்கணக்கனும் உடன் இருந்து நிலம் விற்றுக் கொடுத்தான்.[31] ஊர்க்கணக்கன், கரணத்தான் ஆகியோரை மேற்பார்வையிடக் கண்காணிக் கணக்கனும் இருந்தான் என்று அறிய முடிகிறது. ஊர்க் கணக்கனே அவ்வூரின் மத்தியஸ்தனாகவும் இருந்து செயல்பட்டான் என்பது முன்னர் கண்ட செய்தியாகும்.

முடிவுரை

இவ்வாறு சோழர் காலத்திய அரசியல் முறைகளில் கோயில் ஊர்க்கணக்கர்களின் பணிகளும் அவர்களின் செயல்களும், தணிக்கை செய்த முறைகளும், அவ்வவற்றிற்கான குற்றங்களும், தண்டனைகளும் விளக்கும் கல்வெட்டுக்கள் பல உள. அத்துடன் கணக்குத் தொடர்பான பிற செய்திகளும் சிறப்புச் செய்திகளாக நன்கு விளங்கும்படி கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

அடிக்குறிப்புக்கள்

1. ARE 1904-1905 P. 131
2. உத்தரமேரூர்க் கல்வெட்டு.
3. ARE 99 of 1956.
4. உத்திரமேரூர்க் கல்வெட்டு.
5. S.I.I. Vol. VI, No. 362.
6. ,, Vol XIX No. 63.
7. தஞ்சைப் பெருவுடையார் கல்வெட்டு.
8. ARE 116 of 1916.
9. S.I.I. Vol VII. No. 204.
10. ,, XIX, No. 63.
11. ,, XXIV, No 59.
12. இராசராசன் III கி. பி. 1245இன் கல்வெட்டு, பி. சோ. சரித்திரம், பக். 707-708.
13. ARE 70 71, of 1931-32.
14. N. Sethuraman 'The Early Chola' 'The Chola'.
15. S.I.I. Vol. VI No. 33.
16. ,, Vol. VI Nos. 61, 63, 64, 65, 66, 67.
17. ARE. 113 of 1938-39.
18. திருமங்கலம் கல்வெட்டு.
19. பி. சோ. சரித்திரம், பக். 560.
20. S.I.I. Vol. V, No. 990.
21. ,, VI No. 36.
22. ,, XXIV, No. 142.
23. Ibid.
24. ARE 16 of 1916.
25. ARE 70-71 of 1921-32.
26. S.I.I. Vol. XIX, No. 63.
27. 38, 189 of 1929.
28. 39 S.I.I. Vol. XXIV, No. 1

★

சோழர் காலத்தில் 'ஊர்'

சொ. சாந்தலிங்கம்

தொல்பொருள் அலுவலர், தஞ்சாவூர்.

நிலவுடமைச் சமுதாயம் உச்ச நிலை எய்திய காலம் சோழர் ஆட்சிக்காலம். இதன்மூலம் சோழப் பேரரசில் நில உடமையாளராக வேளாளர் வர்க்கமே தலையாய வர்க்கமாகியது. இக்காலத்தில் கோயில்களே மிகப் பெரிய சமூக நிறுவனங்களாகச் செயல்பட்டு வந்தன. கோயில் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த பல்வேறு இயக்கங்களிலும் பங்கு கொண்ட சமூக நிறுவனமாக விளங்கியது.[1] வேளாளர்கள், நிலமுடைய பெருங்குடிகள் கோயில் நிலங்களை மேற்பார்வை செய்யும் நிர்வாகிகளாகவும், ஊரவராகவும், நாட்டினராகவும் அதிகாரம் பெற்றிருந்தனர்.[2] கோயில் நிர்வாகிகளாக இவர்கள் சர்வவல்லமை உள்ளவராக விளங்கினர்.[3] இவ்வேளாண்குடிகள் வாழ்ந்த பகுதி ஊர் எனப்பட்டது. ஊர் என்னும் சொல் வாழும் இடத்தையும், அதற்குரிய நிர்வாக அமைப்பையும் குறிக்கும். பிராமணர்கள் வாழும் இடங்கள் மங்கலம், பிரமதேயம், சதுர்வேதி மங்கலம் என்றும், வணிகர்கள் வாழும் பகுதி நகரம், மணிக்கிராமம் என்றும் பெயர் பெற்றது போல வேளாண்குடிகள் வாழ்ந்த இடம் ஊர் எனப்பட்டது. பிராமணர் சதுர்வேதிமங்கலங்களில் நிர்வாக அமைப்புகள் மகாசபை, பெருங்குறி மகாசபை என்ற பெயர்களில் இயங்கி வந்தன. வணிகர்களின் நிர்வாக அமைப்பு 'நகரம்' என்ற பெயரிலேயே இலங்கியது. வேளாண்குடிகளின் நிர்வாகம் 'ஊர்' எனப்பட்டது. பிராமணர்களின் மகாசபை நிர்வாகம், அதன் வாரியப் பகுப்புக்கள், செயல்பட்டு வந்த கணங்களின் வகைகள், அவற்றில் அங்கம் வகிப்போர்க்குரிய தகுதிகள், அவர்களைத் தேர்வு செய்யும் முறை ஆகியவற்றைச் சோழர் காலத்திய பல கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

ஊர் அமைப்பு:

சோழ மண்டலத்தின் பூகோள, அரசியல் அமைப்பை ஆராய்ந்தவர்கள் இரண்டு சதுர மைல்களுக்கு ஓர் ஊர் என்ற விகிதத்தில் ஊர்கள் அமைந்திருந்தன என்று கணக்கிட்டுள்ளார்கள்.[4] நாட்டில்

கிடைக்கக்கூடிய நீர்ப்பாசன வசதியைப் பொறுத்து ஊர்கள் நெருங்கியும் குறைந்தும் இருந்துள்ளன. நீர்வளம் நிறைந்த பகுதிகளில் நெருக்கமாகவும் வளங்குன்றிய பகுதிகளில் குறைவாகவும் மக்கள் வாழ்ந்துள்ளனர். ஓர் ஊர் என்பது மக்களின் வாழ்விடம், குடிநீர், பாசனக் குளங்கள், சுடுகாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

மக்கள் வாழ்விடங்களில் சில பிரிவுகள் உண்டு. நிலஉடமையாளர்கள், வேளாளர்கள் வாழும் இடம் ஊர் இருக்கை எனப்படும். பிற சிறு தொழில்கள் செய்யும் தொழிலாளர் வாழும் இடம் கம்மாளச்சேரி எனப்படும். பறை கொட்டுவோர் போன்றோர் வாழும் இடம் பறைச்சேரி எனப்பட்டது. இம்மூவகைப் பிரிவுகளைக் கொண்டே அக்காலச் சமுதாயத்திலிருந்த ஏற்றத் தாழ்வுப் படிநிலைகளையும் நாம் அறிந்து கொள்ளலாம். நில உடமையாளர்கள், பெருநிலக்கிழார்கள் என்னும் மேல்தட்டு மக்கள்; கருமான்கள், தச்சர், நெசவாளர் போன்ற தொழில் செய்யும் இடைத்தட்டு மக்கள்; பறை கொட்டுவோர், காளம் ஊதுவோர், உவச்சர் போன்ற கீழ்த்தட்டு மக்கள் என்று மூன்று அடுக்குகள் இருந்தன. நில உடமையாளர்கள் காணி உடையார் என்றும் அவர்களிடம் பணி செய்யும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் உழு குடிகள் எனவும் பெயர் பெற்றிருந்தனர். இவ்விரு தரத்தாரும் வேளாளர் என்றே கருதப்படுவர். நில உடமையாளர்களின் கோயில்களின் நலங்காப்போராக, நிர்வாகிகளாகப் பணிபுரிந்தனர் என்றால், பிறதொழிலாளர்கள் கோயிலில் அன்றாடப் பணியாளர்களாக இருந்து ஊதியம் பெற்றனர். அத்தகையவர்களில் வேட்கோவர், நந்தவனம் இறைப்பார், காளம் ஊதுவார், திருமெழுக்கிடுவார், பலி கொட்டும் உவச்சர், ஓதுவார், சுவாமிக்குப் பூசைகள் செய்வார் என்ற பலவகையினரும் ஊர்களில் வாழ்ந்தனர். குடியிருப்புப் பிரிவுகள் அங்கு வாழ்ந்த மக்கள் பிரிவினரைப் பொறுத்துப் பறைச்சேரி, ஈழச்சேரி, செக்காலைச் சேரி எனப்பட்டன. சுடுகாடுகள் கூடத் தனித்தனியே இருந்தன. வெள்ளான் சுடுகாடு, பறைச் சுடுகாடு[5] எனப் பாகுபட்டிருந்தன.

ஊர் (நிர்வாகம்)

ஊரின் நிர்வாக உறுப்பினர்கள் பெரும்பாலும் நில உடமையாளர்களாகவே இருந்தனர். பிராமணர்களின் மகாசபை போன்று கல்வித்தகுதி போன்ற தகுதிகள் வலியுறுத்தப்படவில்லை. ஊரின் நடவடிக்கைகள் பெரும்பான்மையும் நில விற்பனை, நிலவரி, நிலக்

கொடைகள், கோவிற் கொடைகளை ஏற்று நடத்துதல் போன்றவை யாக இருந்தமையால் பிற தகுதிகள் அவசியமாகப்படவில்லை. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியின் கருத்துப்படி 'சுயாட்சி பெற்ற ஊர் என்பது அரசினுடைய ஓர் அங்கம்' எனப்படும். பிராமணர் அல்லாதாரின் நிர்வாக அமைப்பான 'ஊர்' எல்லாவகையிலும் பிராமணர்களின் சபைக்கு நிகரானதாகும்.[6]

ஊர் நிர்வாகிகள்

ஊரின் தலைமைப் பொறுப்பை வகிப்பவர் அவ்வூரின் பெருநில உடைமையாளராக இருப்பார்கள். அவர்கள் பெரும்பாலும் உடை யான், கிழான் என்று பெயர் பெறுவார்கள். ஊர்த்தலைவன் 'ஊராள்வான்' என்றும் பெயர் பெறுவான்.

ஊர் நிர்வாகத்திற்கு உதவியாக ஊர்க்கணக்கன், பாடி காப் பான், தண்டல், அடிக்கீழ் நிற்பான் என்ற பலர் இருந்தனர்.[7] இவர்களுக்கென்று ஊராரால் ஊதியம் வழங்கப்படும். ஊர்க் கணக்கன் அல்லது கரணத்தான் என்பவன் ஊர்க் கணக்குகளை எழுதக்கூடியவன். இவன் நல்லொழுக்கமும், நேர்மையான பொருள் ஈட்டுபவனுமாக இருத்தல் வேண்டும். இவன் தன் பணியில் நற் பெயரைப் பெறாவிட்டால் தண்டனைக்குள்ளாவான். மீண்டும் அப்பணி அவனுக்கு வழங்கப்படமாட்டாது. உதாரணமாக உத்தமச் சோழன் காலத்தில் ஊர்க்கணக்கன் சரியாகக் கணக்கு காட்டாத காரணத்திற்காகவும், நிர்வாகிகள் முன்வந்து சரியாகப் பணி செய்யாத காரணத்திற்காகவும் அவனது நிலங்களை பறிமுதல் செய்தனர் என்பதைத் தஞ்சை மாவட்டம் புள்ளமங்கை கல்வெட்டு ஒன்றினால் அறிகிறோம்.[8] ஊர்க்கணக்கனுக்கு ஊதியம் வழங்குவதற்காக 'ஊர்க்கணக்கப்பேறு' என்ற வரி விதிக்கப்பட்டது. அவனுக்கு வழங்கப்படும் ஊதியம் அல்லது அதற்கான நிலம் 'ஊர்க்கணக்கு ஜீவிதம்' எனப்பட்டது. ஊர்க் கணக்கன் ஊரார் கூடி எடுக்கும் முடிவுகளை உடன்யிருந்து எழுதும் பணியை மேற்கொள்வான். 'இவர்கள் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் என அவன் தீட்டுகளில் கையொப்பம் இடுவான்.

பாடிகாப்பான் என்பவன் ஊரில் கலகம், திருட்டு போன்ற குற்றங்கள் நிகழாதவாறு பாதுகாக்கக் கூடியவன். இவனுக்கு வழங்கும் ஊதியத்திற்காகப் 'பாடிகாவல்' என்ற வரி விதிக்கப் படுவதுண்டு. தண்டல் அல்லது தண்டுவான் என்பவன் ஊருக்குரிய வரிகளை வசூலிப்பவன். அடிக்கீழ் நிற்பான் ஊரின் குற்றேவல்

பணிகளைச் செய்பவன் ஆவான். 'இவ்வூர் ஊர்த்தண்டல் நெற்குன்ற முடையார் திரு நட்டப்பெருமானான தென்னவன் மூவேந்தவேளார்' என்பதால் வேளாளரே நிர்வாகத்தின் சிறிய பெரிய பதவிகள் அனைத்திலும் இடம் பெற்றிருந்தனர் எனத் தெரிகிறது.

ஊரின் பணிகள்

ஊரின் அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளும் அமைப்பு ஊர். பெரும்பாலும் கோயில்களில் வைக்கப்படும் கொடைகளை ஏற்று அவை முட்டாமல் நடைபெறச் செய்வது முக்கிய கடமை யாகும். நொந்தாவிளக்குகளை எரித்தல், பூசைகளை தவறாது நடத்தல், ஊரில் நடைபெறும் நிலவிற்பனை போன்ற நிலப்பரிமாற் றங்களை முன்னின்று செய்தல் போன்ற பணிகளையும் ஊர் மேற் கொள்ளும். ஏரி, குளம், கலிங்கு ஆகியவற்றைத் திருத்தி நன்மை செய்வது வேளாண்குடிகளது ஊரின் தலையாய கடமையாகும். ஊர் நிர்வாகத்திற்குரிய வரிகளை விதிப்பது. அதை வசூலிப்பது ஆகியவை யும் ஊரின் பணிகளாகக் கருதப்படும்.

வெள்ளான் வகை எனப்படுகின்ற தனி நபர்களுக்குச் சொந்த மான விளைநிலங்கள் போக, ஊர்ப் பொதுவாகவும் நிலங்கள் இருந்தன. 'ஊர்ப்பொதுவாய்க் கிடந்த பட்டி, ஊர்ப் பொதுவாய்க் கிடக்கும் நிலம், எங்கள் ஊர்ப்பொதுவாய் எங்கள் காணியாய் நாங்கள் இறுத்து வருகிற நிலம், ஊர்ப் பொது நிலம்[9] எனக் கல்வெட்டுகள் கூறுவதைக்கொண்டு இதனை அறியலாம். ஊர் இதனை நிர்வகித்து வருதல் வேண்டும். இப்பொது நிலத்தைக் கோயில்களுக்கு நன்கொடையாக அளித்தல்[10] அல்லது நிலமற்ற, நிலம் வாங்க விரும்பும் உழுகுடிகளுக்கு விற்றல்[11] போன்ற பணி களையும் ஊர் மேற்கொள்ளும். வேளாண்குடிகள் தங்கள் நிலத்தை ஊருக்கு விற்கவும், ஒற்றிவைக்கவும்[12] வகை செய்யப்பட்டிருந்தது.

ஊர்களில் தனித்தனியே அளவைகள் இருந்தன. நாடு முழு வதும் புழக்கத்தில் இருக்கின்ற பொதுவான அளவைகள் தவிர இவை தனித்தனியாகவும் சில ஊர்களில் கையாளப்பட்டுள்ளன. 'ஊரளவு கோலாற் குழி இரண்டாயிரம்,[13] ஊர்க்கால் கொது குலவநால் அளப் பதாகவும்,[14] ஊர்க்கல்[15] என்று மூவித அளவைகளும் ஊர்களில் தனித்தனியே இருத்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. எடுத் துக்காட்டாகத் திருமறைக் காடன் என்னும் உழக்கு, திருவெள்ளறைக் காணம், கொற்றமங்கலத்து ஊராடுகல், திருவண்ணாமலை என்னும் மரக்கால், பாச்சில்கல் என்பவை அவ்வவ்வூர்களிலிருந்த ஊர்ப்

பெயர்களால் வழங்கிவந்த அளவைகளாகும். இவற்றையே அண்டை யூராரும் பயன்படுத்தியிருக்கலாம். இவ்வித ஊர் அளவைகளை நிர்ணயம் செய்தல், சரிபார்த்தல் போன்ற பணிகளும் கூட அவ்வவ் வூராராலேயே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

ஊர் நிர்வாகத்திற்கென ஆண்டுதோறும் தனிவரி விதிக்கப் படும். அதற்கு ஊர்வரி, ஊராட்டு வரி, ஊரிடுவரி, ஊரிடு வரிப்பாடு எனப் பல பெயர்கள் உண்டு. இவ்வரிகளை வசூலித்தே ஊர் நிர் வாகத்தை நடத்த வேண்டும். வசூலிப்பதில் கடுமையான அணுகு முறைகள் கூடாது என்ற விதிமுறைகள் உண்டு. ஆனால் வரி கொடாதோரிடம் இரட்டிப்புத் தண்டம் வசூலித்தலும், நிலங்கள் பறி முதல் செய்யப்படுவதும் நடைமுறையில் இருந்தது. மேற்சொன்ன வரிகள் தவிர 'ஊர்க்கடமை', 'ஊர்க்கணக்கப்பேறு', 'ஊர்நியோகம்', 'ஊர்த்தரிசு, 'ஊர்விவஸ்தை' என்ற வேறு சில வரிகளும் இக்காலக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வரிகள் அத்தனையும் ஒரே ஊரில் விதிக்கப்பட்டிருந்தன என்று கொள்வதற்கோ அல்லது குடிமக்கள் அனைவர் மீதும் பொதுவாக விதிக்கப்பட்டிருந்தன என்று கொள்வதற்கோ இயலாது. சில குறிப்பிட்ட காரியங்களுக்காக அக்காரியங்களோடு சம்பந்தப்பட்டவர்கள் செலுத்த வேண்டிய வரிகளாக இவை இருக்கலாம்.

ஊர் கூடுவதற்கு பறையறைந்து அல்லது காளம் ஊதிக் குடிகளுக் குத் தெரிவிக்கப்படும். பெரும்பாலும் கோயில் மண்டபங்களில் ஊர் கூடும். அப்போது குடிகள் அனைவரும் கலந்து கொள்வர் என்பது 'கூட்டம் குறைவறக் கூடி' என்னும் கல்வெட்டுக் கூற்றுகளால் தெரிய வருகிறது. கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளைக் கரணத்தான் கேட்டு எழுதப், பின்னர் அது கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் பொறிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும்.

ஊரும் சபையும்

சில ஊர்களில் விளை நிலங்கள் ஒரு பகுதி தேவதானமாகவும், மற்றொரு பகுதி பயிரிடுங் குடிகளுக்குரிய வெள்ளான் வகையாகவும் இருந்தன. இவ்வித இடங்களில் சபையும், ஊரும் சேர்ந்து சில காரியங்களில் ஈடுபட்டுள்ளன. எடுத்துக்காட்டாகத் திருவிடவந்தை ஆழ்வார் ஸ்ரீவராக தேவர்க்கு அவ்வூரிலுள்ள வேளான் குடிகள் பன்னிருவர் பொன் தானமும் வேறு சில கொடைகளும் செய்தனர். இச்சாசனத்தின் இறுதியில் 'இவ்வூர்ச் சபையோமும் ஊரோமும்

கையெழுத்து' எனக் கையெழுத்திட்டுள்ளனர். ஊர் நிர்வாகி களாக மூவேந்த வேளார் இருவர் கலந்துகொண்டு கையெழுத் திட்டனர். சில பிரமதேயங்களில் அதற்குரிய சபை செயல்பட்ட தோடு அதற்குட்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட ஊர்களும் இருந் துள்ளன. இவ்விதம் பிராமணர்க்குரிய சபையும், வேளாளர்க்குரிய ஊரும் ஒரே நேரத்தில் செயல்பட்டதோடு சில பொதுக் காரியங் களில் ஒன்றுக்கொன்று நெருங்கிய ஒத்துழைப்போடு செயல் பட்டன. ஆனால் பிற்காலத்தில் அவற்றுக்குள் தவறான எண்ணங் கள் தோன்றிப் பகைமை வளர்ந்தது.[16]

ஊரும் நாடும்

சுயாட்சி பெற்ற பல ஊர்கள் சேர்ந்து நாடு என்னும் பெரும் பிரிவு பெயர் பெற்றது. இந்நாடு 'எல்லைப் பிரிவையும்', 'நிர்வாக அமைப்பையும்' குறிக்கும் பொதுச் சொல். நாடு என்னும் அமைப்பின் உறுப்பினர்கள் நாட்டார் எனப்படுவர். இவர்கள் அந்நாட்டினுள் அடங்கிய ஊர்களின் தலைவர்களாகவே இருப்பர். ஊர்க்கிழான், ஊர் உடையான் என்றே அவர்கள் குறிக்கப் பெறுவர். ஒவ்வொரு நாட்டிலும் சுமார் 20 முதல் 40 ஊர்கள் வரை அடங்கியுள்ளன. ஒரு நாட்டின் எல்லை சுமார் 35 முதல் 200 சதுர மைல்கள் வரை விரிந் துள்ளன.[17] விரிவான எல்லை அமைப்பைக் கொண்ட நாடுகளில் மக்கள் தொகை குறைவு. நீர் வளப்பமும் குறைவு. குறைவான பரப்பைக் கொண்ட நாடுகளில் நீர் வளமும், மக்கள் நெருக்கமும் அதிகம். நீர்வளம் நிறைந்த காரணத்தாலேயே அடுத்தடுத்து நாடுகள் அமைந்தன.[18] இத்தகைய நாடுகளுள் அடங்கிய பிரம தேயங்களின் பிரதிநிதிகளாகப் பிராமணரும் நாட்டாரின் கூட்டத் தில் கலந்து கொள்ளலாம். ஆனால் அவர்கள் நாட்டின் உறுப்பின ராகக் கருதப்படமாட்டார். 'நாடு' என்னும் இப்பெருங்குழு, தன்னுள் அடங்கிய ஊர்களின் பொதுவான பிரச்சினைகள் பற்றி முடிவெடுக்கும் அமைப்பாகச் செயல்படும்.

இதுகாறும் கூறியவற்றால் கீழ்க்கண்ட செய்திகள் விளக்கப் பட்டுள்ளன. ஊர் என்பது வேளாண் குடிகளின் நிர்வாக அமைப்பு. ஊரின் நிர்வாகம், வழக்குகள், நீர்ப்பாசனப் பிரச்சினைகள், கோயில் நிர்வாகம், நில உறவுகள் பற்றிய பணிகளை அவை மேற்கொள்ளும். நிலவரி போன்ற வரிவசூல் மட்டும் அரசனால் நேரடியாக மேற் கொள்ளப்படும். மற்ற சமுதாயக் கடமைகள் யாவும் ஊரால் மேற் கொள்ளப்படும். அரசியல் கடமைகள் எதுவும் ஊருக்கு இல்லை.

பல ஊர்கள் சேர்ந்து நாடு என்னும் பொது அமைப்பாக செயல்பட்டு வந்துள்ளது. ஊர் பிராமணர் சபைகளோடு கூட்டாகச் சேர்ந்து சில காரியங்களை ஆற்றியுள்ளன. பிராமணர் சபைகளுக்குச் சமமான அமைப்பாக, சுயாட்சி பெற்ற ஒரு அரசின் அங்கமாக ஊர்கள் சோழர் காலத்தில் இருந்தன; செயலாற்றின.

அடிக்குறிப்புக்கள்

1. T. V. மகாலிங்கம், 'South Indian Polity' pp. 173-80 Ref. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும். பக். 171 க. கைலாசபதி.
2. நா. வானமாமலை, மூடுதிரை தாமரை. மே 1962. Ref. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் பக். 178 க. கைலாசபதி.
3. க. கைலாசபதி. 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்' பக். 178.
4. Y. சுப்பராயலு Political Geography of chola country. Ref. Peasan state and society in Medieval South India. P. 94. Burton stein.
5. S.I.I. vol. II No IV.
6. Burton Stein Peasant state and society in Medieval South India p. 106.
7. சதாசிவ பண்டாரத்தார், 'பிற்காலச் சோழர் வரலாறு' பக். 501.
8. S.I.I. XIX No. 63.
9. Ibid XIX No. 26.
10. Ibid VIII No. 30.
11. ARE. 201-1917.
12. S.I.I. XTI1 No. 462.
13. Ibid No. 546.
14. S I.I. XIII No. 182.
15. Ibid XIX No. 107, 163, 311.
16. Y. Subbarayalu. The place of Ur in the Economic And Social History of the Early Tamilnadu 760-1350 A.D. (paper).
17. Burton Stein. Peasant state and Society in Medieval South India, p. 95.
18. Ibid, p. 92.

கணத்தார்

நா. மார்க்சீயகாந்தி
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

கணம் என்ற சொல் இந்தியாவில் கிடைத்தனவற்றுள் பழைய இலக்கியங்களுள் ஒன்றான ரிக் வேதத்திலேயே உள்ளது. அதில் சுமார் 44 முறை பயன்படுத்தப்பட்டுள்ள இச்சொல் மருத்துக்களின் கூட்டு வாழ்வையும், வேத காலப் பாடல் இயற்றுவோரின் கூட்டு வாழ்வையும் குறிப்பதாக அமைகிறது. கணங்களைப் போற்றுவதாக அமையும் பாடல்கள் பல.[1]

இச்சொல் gens என்று லத்தீனிலும், genos என்று கிரேக்கத்திலும் வழங்கப்பட்டது. ஆரிய மொழிச் சொல்லான gan என்பதன் அடிப்படையில் 'பெற்றெடுத்தல்' என்ற பொருளில் இச்சொல் வருகிறது. 'பொது மூதாதையின் சந்ததிகள்' என்ற பொருளில் குழுக்களைக் குறிக்கும் சொல்லே 'கணம்' என்பதாகும்.[2] எனவே மனித குலத் தொடக்கத்தில் மனிதனின் வாழ்வுக் கூட்டத்தைக் குறித்த சொல்லாக வழங்கியது. பின்னர் அந்தக் கணத்தின் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யவும், கூட்டுப் பொறுப்புக்களை மேற்கொள்ளவும் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவும் 'கணம்' என்றே பெயர் பெற்றது. இந்நிலையில் தான் கணம், நிர்வாகத்தினைக் குறிக்கும் குழுவினைச் சுட்டுகிறது.

கி.மு. 6-ஆம் நூற்றாண்டு என்று கருதத்தகும் பாணினியம் சங்கம் என்பதற்கு இணையானதாகக் கணத்தினைக் குறிக்கின்றது. அதற்குரிய விதிகளையும் அது கூறுகின்றது. பிராம்மணர் அல்லாத, க்ஷத்திரியர் அல்லாத குழுக்களையே இந்நூல் கணம் என்ற சொல்லால் குறிக்கும். மானவ க்ருஹ்ய சூத்திரம், யாக்ஞவல்கியம், மனுஸ்மிருதி ஆகியவைகளும் கணங்களைக் குறிப்பிடுகின்றன. இவைகளிலும் குழுவின் நிர்வாகத்தைக் குறிக்கும் அமைப்பாகவே கணம் குறிக்கப்படுகிறது.

கி.பி. 4, 5-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இரு கல்வெட்டுக்கள் 'மாளவ கண ஸ்திதி' என்ற அமைப்பினைக் குறிப்பிடுகின்றன. இக்

கல்வெட்டினை ஆய்வு செய்த போது, இது பூர்வீகக் குழுவினைக் (Tripal Society) குறிப்பதே என்றும், குடியரசு நிர்வாகக் குழுவினைக் (Democratic Republic) குறிப்பதே என்றும் இரு வேறு பட்ட கருத்துக்களை அறிஞர்கள் கூறியுள்ளனர்.[3] எனினும் முன்னதின் முன்னேறிய அமைப்பே பின்னது. இவ்விரண்டும் ஓரளவு அடிப் படையில் ஒன்றுபட்ட அமைப்பே என்பதை நாம் மறந்து விடுதல் கூடாது.

இந்நிலையில் தமிழில் வழங்கப்பட்ட 'கணம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்று காணுதல் வேண்டும். சங்க இலக்கியத்தில் பேய்க்கணம், நரிக்கணம் ஆகியவை குறிக்கப்படுகின்றன.[4] தொல் காப்பியர் கூறும் 'அணங்கு' என்பதற்கு பொருள் கூறும் உரை யாசிரியர் அச்சந் தரத்தக்க கூட்டம் என்ற பொருளில் இச்சொல்லைப் பெய்துள்ளார்.[5] சைவ சமய இலக்கியங்களில் பூதகணம், ருத்திரப் பல்கணம், ஆகியவை குறிக்கப்படுகின்றன. இங்கெல்லாம் கணத் திற்கும், நிர்வாகத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. மொத் தத்தில் குழு, கூட்டம் என்ற பொதுப் பொருள் பெற்ற இச்சொல், குறிப்பாக முதலில் இரத்த உறவுகள் உள்ள ஒரு கூட்டு வாழ்வு அமைப்பினையும், பின்னர் அக்குழுக்களின் நிர்வாக அமைப்பையும் குறித்து இறுதியில் ஏதோ ஒரு வகையில் ஒற்றுமைப்பட்ட குழுக்க ளையும் குறிக்கும் சொல்லாக நின்றது என்ற அளவில் வெளிப்படை ஆகின்றது.

மனிதகுல அமைப்பில் இந்த விளக்கம் ஏற்பட்டது போலச் சமயத்துறையிலும், பலவகை அமைப்புக்கள் தோன்றிய போது அதனையும் இச்சொல் குறித்தது. ஒரு தலைவனுக்கு அடங்கிய பல குழுக்கள் தோன்றவே ஒவ்வொரு குழுவும் தமக்கெனத் தனிக் கண நிர்வாக அமைப்பினை ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே தான் ஒரே நேரத்தில் பல கணங்கள் நிலவி யுள்ளன. சமண சமயத்தில் துறவிகளின் பிரிவுகளைக் குறிக்கும் இடத்துப் பெரிய அமைப்பாக சங்கமும், அதன் கிளை அமைப்புக் களாக ஆனால் சங்கத்தினுள் அடங்கிய அமைப்புக்களாக கணங் களும் விளங்கின.[6] சிவ மதத்தினை ஏற்றுக் கொண்டவர்கள் 'சிவகணத்தார்' என்றும், ருத்திரனையும் இன்னும் அவனது சில சிறப்பியல்களை முழு முதலாகக் கொண்ட சமயப் பிரிவினர் தம்மை 'ருத்திரப் பல்கணத்தார்' என்றும் குறித்தனர். சமயத்தொடர்பான புராணங்கள் விரிந்த அளவில் எழுதப்பட்ட போது, பல்வகையான கற்பனைத் தோற்றமுடையார் பிறந்தனர். இவை அனைத்தையும்

தொகுத்துப் பொருளடிப்படையில் பிரித்து எழுத முனைந்த ஆசிரியர்கள் பதினெண்கணம் என்று கூறிப் போந்தனர்.[7] அவர்கள் பெரும்பாலும் புராணக் கதைகளில் வருவோரை வைத்துக் கற்பனைக் கெட்டா தேவதைகளையே தம் பட்டியலில் ஏற்றுக் கொண்டுள்ளனர்.[8]

இலக்கிய, சமய, உலகினை விடுத்து, வரலாற்று உலகிற்கு வருமிடத்து மீண்டும் நிர்வாகமும், அரசியலும் இடம் வகிக்கின்றது. தமிழகக் கல்வெட்டுக்களே வரலாற்று முறையில் கண ஆய்வுக்குப் பெருந்துணை புரிவன. கல்வெட்டுக்களில், சபை, நகரம், ஊர், கணம் ஆகிய நிர்வாகக் குழுக்கள் குறிக்கப்படுகின்றன. முன்னவை மூன்றும் எவ்விடங்களில் வழங்கப்பட்டன என்பது பல அறிஞர்களால் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் இறுதியான 'கணம் என்பதனைக் குறித்து அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துக்களே நிலவுகின்றன. திரு. கே. ஏ. என். சாஸ்திரி அவர்கள்[9] ஊரின் நிர்வாகக் குழுவே 'கணம்' என்றும் சில இடங்களில் சதுர்வேதி மங்கலங்களில் அவை வழங்கப்படக் காரணம் முதலில் வேளான் குடியிருப்பாக இருந்த ஊரின் ஒரு பகுதியே, மாற்றம் பெற்றதால் அதிலும் அக்கண நிர்வாகம் தொடர்ந்தது என்கிறார். ஆனால் பல்லவர் அரசியல், சமுதாய நிலைகளை ஆய்வு செய்த டாக்டர் மீனாட்சி, கணம் என்பது ஒரு நிர்வாக அமைப்பே என்பதை ஏற்றுக்கொள்கிறார். அவர் கணத்தினை எந்தவகை குடியிருப்புக்கும் உள்ள தனித்தன்மை கொண்ட நிர்வாக அமைப்பாக வரையறுத்துக் கூறவில்லையாயினும், ஏறக்குறைய சபையின் பொதுப் பணிகள் அனைத்தையும் கணத்திற்கும் கூறுகின்றார்.[10]

பின்னர் ஆய்வு செய்த திரு. சுப்பராயலு கணம் பிரம்மதேயங்களுக்கான நிர்வாக அமைப்பு என்றும், அந்தணர்களே இடம் பெற்றிருந்த அமைப்பு என்றும், 'ஊரு'க்கு இருந்த நிர்வாக சபையாகக் கருத இடமில்லை என்றும் கூறிவிட்டு, தமிழகத்தில் பிராம்மணர்கள் தங்கள் நிறுவனங்களை நிறுவத்தொடங்குகையில் தமிழ்ச் சொல்லான ஆளும் (அல்லது யாளும்) என்பதை ஏற்றுக் கொண்டும், பின்னர் முழுவதும் தன்மயமாக்கிக்கொண்ட நிலையில் 'சபை' இதன் பொருளையும், பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு விடவே, 'கணம்' என்ற தனி அமைப்பே சிறிது சிறிதாக மறைந்து விட்டது என்றும் கூறுகிறார்.[11] இம்முடிவுக்கு வர தமிழகத்தில் காணக்கிடைக்கும் கணம், 'ஆளும்கணம்' குறித்த வெளியிடப்பட்ட கல்வெட்டுக்கள் அனைத்தையும் கண்டு, ஆய்ந்து பார்த்துள்ளார்.

முன்பு குறிப்பிட்டபடி 'கணம்' என்பது நிர்வாக அமைப்பை-கூட்டுப் பொறுப்பை-குறிக்கும் குழு அல்லது கூட்டம் என்பதில் யாருக்கும் எவ்விதக் கருத்து வேற்றுமையும் இல்லை. எனினும் எத்தகைய நிர்வாக சபை அது. அதன் விதிகள் அல்லது முறைகள் என்ன என்பதை முன்னோர் பயன்படுத்திய அதே கல்வெட்டுக்களைக் கொண்டு மேலும் தெளிவுபெற முடியும் எனத் தோன்றுகிறது.

கணம், யாளுங்கணம், மீயாளுங்கணம் என்றும், அதன் உறுப்பினர்கள், கணப்பெருமக்கள், கணவாரியப் பெருமக்கள், யாளுங் கணத்தார் என்றும் குறிக்கப்படுகின்றனர். இவ்வாறெல்லாம் குறிக்கப்பெறும் இக் கணம் இரண்டு முறைகளில் வழங்கப்பட்டுள்ளது. ஒன்று மிகச்சிறு நிறுவனமாக அல்லது ஒரு குறிப்பிட்ட ஒரு செயலை நிர்வகிக்கும் அமைப்பு. சான்றாகக் காளி கணத்தார், சாத்த கணத்தார் குமார கணத்தார், கிருஷ்ண கணத்தார் போன்ற தனிப்பட்ட சிறிய கோயிலின் நிர்வாக குழுவினர் அல்லது கார்த்திகை கணத்தார், திருவோண கணப்பெருமக்கள், திருவாதிரை கணப்பெருமக்கள் துவாதசி கணப்பெருமக்கள், புண்ணிய கணத்தார், அம்ருத கணத்தார் போன்ற ஒரு குறிப்பிட்ட செயலுக்குப் பொறுப்பாளர்களாக விளங்கும் குழுவினர். இவர்கள் குறிப்பிட்ட ஒரு கொடையையோ, அல்லது குறிப்பிட்ட கோயிலையோ பற்றிய விவகாரங்களில் மட்டுமே தலையிடும் உரிமையும், அதன் நிர்வாகத்தை நடைமுறைப் படுத்தும், கட்டுப்படுத்தும் உரிமையும் உடையவர்கள். ஆனால் இரண்டாவது ஓரளவு விரிந்த முறையில் பெரிய அமைப்பாக 'சபை' யின் கிளை அமைப்பு போன்று செயல்படும் ஆளுங்கணம் ஆகும். இதற்கும் சபைக்கும் மிக நெருங்கிய உறவு உண்டு.

குறிப்பாகச் சோழர்கால நிர்வாக முறையினை நமக்கு விரிவாகத் தெரிவிக்கின்ற கல்வெட்டுக்களைக் கொண்டது, உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலம். இது பிரம்மதேயமான சதுர்வேதிமங்கலம். சபைக்குரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையையும், அந்த உறுப்பினர்களை வைத்து வகுக்கப்பட்ட வாரியங்களையும் பற்றிய விளக்கம் அவ்வூர்க் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. அங்கு 30 குடும்புகள் உள்ளன. 12 சேரிகள் உள்ளன. 12 சேரிகளே 30 குடும்புகளாகி, ஒவ்வொரு குடும்பும் ஒரு உறுப்பினரைத் தேர்ந் தெடுக்கிறது. அவர்கள் சபையின் உறுப்பினர்கள் ஆகின்றனர். இந்த அமைப்பு-அதாவது சபையென்னும் நிர்வாக சபை-மட்டும்

இன்றி இவ்வூரில் வேறுபல நிர்வாக அமைப்புக்களும் இருந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்றே 'ஆளுங்கணம்' என்பது.

ஒவ்வொரு சேரியும் தனக்கென ஒரு கணத்தினை அமைத்துக் கொண்டிருத்தல் வேண்டும். அதனைப் பின்வரும் கல்வெட்டு தெளிவாக உணர்த்துகின்றது. 'உத்திரமேருச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீகோவிந்தச்சேரி யாளுங் கணத்தாருள் நெரிட்டூர் யஞ்ஞாயக்ரமவித்த சோமாசியார் இவ்வுத்தரமல்லூர் சுப்ரமண்ய தேவற்கு வைத்த ஒரு விளக்கால் ஆடு தொண்ணூறும், இவ்வுத்தரமல்லூர் ஸ்ரீவாமனச்சேரி யாளுங்கணத்தார் அந்தியூர் நக்க . . . . . மாவது மூன்றாங் கண்ணாறு குழி ஆயிரமும் சிலாலேகை பண்ணிக் குடுத்தோம் ஆளுங் கணத்தோம்[12].

இவ்வாளுங் கணத்தவர்கள் சபை நடவடிக்கைகள் நடக்கும் இடத்து தேவைப்பட்டால் மட்டுமே பங்கேற்பர். தம்பணியினை மேற்கொள்ளுமிடத்து ஏதேனும் ஒரு காரணம் பற்றித் தடை வருமாயின், அது 'சபை'க்குக் கொண்டுசெல்லப்படும். சபையின் முடிவினை பிற நிர்வாக சபைகள் ஏற்றுக்கொள்ளும். தொடர்ந்து செயல்படும். இவ்விளக்கத்தினைப் பெற மற்றொரு அமைப்பான 'கிராம காரியம் செய்வார்' பற்றிய கல்வெட்டு பெரிதும் உதவுகின்றது[13] எனவே ஒவ்வொரு சேரியிலும் உள்ள தனிப்பட்ட சிறிய பிரச்சனைகளைக் கவனிக்கும் பொறுப்பையும், சபையின் முடிவுகளைத் தன் சேரியைப் பொறுத்த மட்டில் செயற்படுத்தும் பொறுப்பையும் இவ்வாளுங்கணம் ஏற்றுச் செய்திருத்தல் வேண்டும். எனவேதான் கல்வெட்டுக்களில் 'சபை'யின் பணிகள் அனைத்தும் ஆளும் கணத்தாருடனும் தொடர்பு படுத்திக் கூறப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் கணப் பெருமக்கள் ஊதியம் பெற்றே-அதாவது காணி பெற்றே பணி செய்திருந்தனர் எனலாம். பிரம்மதேயமான சந்திரலேகைச் சதுர் வேதி மங்கலத்தில் இரண்டு ஆளுங்கணத்தாரிடை விலைகொண்ட 'பங்கு' என்று குறிக்கிறது ஒருகல்வெட்டு.[14] கண்டராதித்தம் கல்வெட்டு ஒன்றிலும் யாளுங்கணத்தாருள் ஒருவன் தான் விற்ற பங்கு என்று குறிப்பிடுகிறான்.[15] இவை இக்கருத்துக்கு அரண் செய்வன. மேலும் இவர்கள் ஆண்டுதோறும் நியமிக்கப் படுபவர்கள் என்று ஊகிக்க உடையார்குடிக் கல்வெட்டின் 'இவ்வாண்டு ஸ்ரீகார்யம் செய்கின்ற கணப்பெருமக்கள்' என்ற வரி[16] துணை செய்

கின்றது. இதனைப் பரம்பரையாக, அதாவது தந்தைக்குப் பின் மகன் ஏற்பதும் ஏற்றுக்கொண்ட முறையாக இருந்திருக்கின்றது. இதனைக் கம்பவர்மனின் 10-ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பட்ட உத்திரமேரூர்க் கல்வெட்டின், 'யாளுங்கணத்தாருள் குரவசிரி அக்னி சர்மகிரமவித்த சோமாசியேன் எழுத்து எமப்பனார் படைத்துடைய பங்கின் வழி முதற் குடும்பிட்டு, நாலாம் பாடகம் ஊரின் தெற்கு பரமேஸ்வர வதியின் மேற்கு கணவதி வாக்கால்கரை எங்கள் பாடக மாயின 240 குழியாலும் வந்த . . . . .[17] என்ற வரிகள் உறுதி செய் கின்றன. இவ்வாளுங்கண உறுப்பினர்களே சபை உறுப்பினர் ஆதலும் உண்டு.

இவையெல்லாம் ஆளுங்கணத்தார்களைச் சதுர்வேதி மங்கலத்து நிர்வாக அமைப்பின் உறுப்பினர்களாகவே அறிய உதவுகின்றன. எனினும், ஆராய்ச்சித் திறன்மிக்க திரு. சாஸ்திரியார் 'ஊருக்கு அமைந்த நிர்வாக சபை' என்று கூறியமைக்கான காரணம் என்ன என்று நோக்குவது, ஆளுங்கணத்தைப் பற்றிய தெளிவினை மேலும் பெற உதவுகின்றது. நந்தி விக்ரமன் காலத்ததான பையனூர்க் கல்வெட்டு,[18] பயினூர்க் கணத்தோம் ஓட்டியது, என்ற முன்னுரை யுடன் பேரேரி தோண்டும் பணி பற்றிய செய்தியைத் தெரி விக்கிறது. அதே போல இராசராசனின் 17-ஆம் ஆண்டுக் கல்வெட்டு 'புழல் கோட்டத்து நின்றவூர் யாளுங்கணத்தாருள் பாடகத்து அத்தொணக் கிரமவித்தன்'[19] என்று குறிக்கிறது இவ்விரு கல்வெட்டுக்களும் முறையே பல்லவர், சோழர் காலங்களில் சதுர் வேதி மங்கலமல்லாத ஊர்களிலும், 'கணத்தார்' இருந்தமையைக் காட்டி நிற்கின்றன.

இவை அனைத்தையும் கொண்டு நோக்குகையில் பெயரில் சிற்சில வேறுபாடுகள் இருப்பினும், பொதுவாகப் 'பொதுப்பணி செய்யும் குழுக்கள்' என்ற பொருளில் அவை பெயர் பெற்றன. எனினும் பல்லவர் காலத்தில் குறிப்பிட்ட பணிகளுக்காக என்று மட்டுமே விளங்கிய இவ்வமைப்பு, சோழர் காலத்தில் சதுர்வேதி மங்கலத்துச் சேரிகளின் நிர்வாகக் குழு என்று அறுதியிடப்பெற்ற அமைப்பாக விளங்கிப் பின்னர் முதலில் இருந்த அமைப்புக்களோடு வேறுபாடு இன்றிக்கலந்து அடியோடு மங்கி மறைந்து விட்டது.

அடிக்குறிப்புக்கள்

1. chattopatyaya , Lokayata, page ,152.
2. குடும்பம், தனிச்சொத்து-அரசு ஆகியவற்றின் தோற்றம், பக்கம் 191.

2 a, வெள்ளான் வகைக் குடியிருப்பின் நிர்வாகக்குழு 'ஊர்' என்றும், வணிகர் குடியிருப்பின் நிர்வாகக் குழு 'நகரம்' என்றும் பெயர் பெற்றதைப் போல.

3. Lokayata, Ref: Journal of Royal Asiatic Society. பக். 413-4, 1914. 745-7, 1945 பக். 138- 40, 533-5, 802-4. etc.

4. புறம்: 366,373.

5. தொல்: பொருள்:256

6. மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும், தமிழும்.

7. புறம் - காப்புச் செய்யுள்

8. முருகாற்றுப்படை, புறம், சிலம்பு, தக்கயாகப்பரணி, தொல்-உரைகள்.

9. Cholas, பக்: 494.

10. Dr. Meenakshi. The Social and Administrative life under Pallavas.p. 144.

11. Y. Subbarayalu, A reconsidaration of Alunganam - (paper presented to Annual conference of Epigraphical Society of India held at Indian Museum, Calcutta).

12. S.I.I. Vol. VI, No.337.

13. S.I.I. Vol VI. No. 362.

"பெருங்குறி சபையோம் கூடி எம்மிற் செய்த வியவஸ்தையாவது. ஸபையோமால் தண்டிப்புண்ட துஷ்டர்கள் தண்டமிட்டந உள்ளந தண்டம் அவ்வவாண்டு கிராம கார்யஞ் செய்யும் பெருமக்களே ஸபையோமைக்கொண்டு தீர்வாராகவும், தீர்க்கமாட்டாதன சபையோமையே கொண்டு தண்டங்களிறுத்துக் குடுப்பாராகவும் சபையினின்று சபாமாற்றம் பேசிப் பணித்த தநிபுருஷரையும் சபையோம் பணியால் செய்த வாரியப் பெருமக்களையும் அடிக்கீழ் நிற்பாரையும் மத்யஸ்தர்களையும் பாடி காப்பார்களையும் உள்ளிட்ட ஸபைப்பணி செய்தார் எப்பேர்ப்பட்டாரையும் தண்டமிட்டன உள்ளன தண்டமிட்ட அவ்வாண்டுகள் கிராமகாரியஞ் செய்யும் பெருமக்களே சபையோமைக்கொண்டு தீர்வாராகவும் தீர்வுறாதந சபையோமைக்கொண்டு தண்டம் இறுத்துக் குடுப்பாராகவும் இப்பரிசு செய்யாராகில் தண்டமிட்ட அவ்வாண்டுகள் கிராமகார்யஞ் செய்தாரை மெய்வேறுவகையுஞ் செய்து காணந் தண்டமிடப் பெறுவாராகவும் இவ்வந்யாயம் வாராமே தீர்த்துக் குடுப்போமானோம் ஸபையோம்"

14. S.I.I. Vol. VIII No. 202,359.

15. -do-

16. S.I.I. Vol. XIX No. 22.

17. S.I.I. Vol. VI No. 294.

18. S.I.I. Vol. XII No. 84.

19. S.I.I. Vol. VI No. 337.

★

சோழர் காலத்தில் வைணவர்கள்

பொ. இராசேந்திரன்
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, மயிலாடுதுறை.

முன்னுரை

சுந்தரசோழ விண்ணகர்[1], குந்தவை விண்ணகர்[2], இராசராச விண்ணகர்[3], மும்முடிச்சோழ விண்ணகர்[4], வீரநாராயண விண்ணகர்[5], இராசேந்திர விண்ணகர்[6], குலோத்துங்கசோழ விண்ணகர்[7], என்று சோழப் பெருவேந்தர்களின் பெயர்களிலேயே பல வைணவ ஆலயங்கள் காணப்படுதலே, சோழர் காலத்தில் வைணவம் நன்கு செழித்திருந்தமைக்குச் சிறந்த சான்று. ஒரு சோழ மன்னன் (அதிராசேந்திரன்?) வைணவப் பெரியார் இராமானுசரையும், அவருடைய கூட்டத்தினரையும் நாடு கடத்தினான் என்றும், மற்றொரு சோழ வேந்தன் (இரண்டாம் குலோத்துங்கன்) தில்லையிலிருந்த கோவிந்த ராசப் பெருமாளை அப்புறப்படுத்தினான் என்றும்[9] கூறப்படுகின்ற ஒரு சில செய்திகளைத் தவிர்த்துப் பார்த்தால், பெரும்பாலும் சோழ அரசர்கள் வைணவத்திற்கு ஆதரவாக இருந்தனர் எனலாம். சோழர் காலத்தில் சைவமும் வைணமும் ஒன்றாக வளர்ந்தன என்று கூறுதலும் மிகையாகாது. இல்லையெனில், சோழர் காலத்தில் சைவ ஆலயங்களில் கூட வைணவக் கதைகள், குறிப்பாக இராமாயணக் கதைகள், சிற்பங்களாகக் சித்தரிக்கப்பட்டிருக்குமா? சோழர் காலத்தில் அரசர்களும், அரசைச் சார்ந்தவர்களும், பொது மக்களும், வைணவர்களும், வைணவ ஆலயங்களுக்கு, வைணவ வளர்ச்சிக்கு, எண்ணற்ற கொடைகளை வழங்கி வைணவத்தை வளர்த்தமை கல்வெட்டுகளாலும் நன்கு உறுதிப்படுகிறது. வைணவத்தோடு சேர்த்து, வைணவத்தைச் சார்ந்த வைணவர்களும் சோழப் பேரரசாட்சியில் நன்கு வளர்ச்சியுற்றிருந்தனர்.

வைணவப் பெரியார்கள்

திவ்விய சூரி, மாலுகந்த ஆசிரியர், மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர், பதியே பரவித்தொழும் தொண்டர், விண்ணுளாரிலும் சீரியர் என்றெல்லாம் வைணவர்களால் சிறப்பாக அழைக்கப்படும் ஆழ்வார்களுள் பெரியாழ்வார் முதல் மதுரகவி வரையிலானவர்கள்

சோழப் பேரரசுக் காலத்தில் வாழ்ந்து வைணவத்தைச் செழிக்கச் செய்தவர்கள் என்று கருதப்படுகிறது.[10]

ஆழ்வார்களுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படும் வைணவப் பெரியார்கள், ஆசாரியர் அல்லது தேசிகர் என்று அழைக்கப்படுபவர்கள். இவ்வரிசையில் நாதமுனிகள், உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி ஆளவந்தார், பெரியநம்பி, இராமானுசர், எம்பார், பராசரபட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, பிள்ளை லோகாச்சாரியார், திருவாய்மொழிப் பிள்ளை, பிள்ளான், சிடாம்பி ஆச்சான், எங்களாழ்வான், நடாதூரம்மான், அப்புள்ளார், வேதாந்த தேசிகர் போன்றவர்கள் சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கியவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இவர்களுள் நாதமுனிகள், நியாய தத்துவம், யோக ரகசியம் என்ற பிரபந்தங்களை அருளிச் செய்தவர்; நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்து வழங்கியவர். தென்னார்க்காடு மாவட்டம் வீரநாராயணபுரமாகிய காட்டுமன்னார்குடியில் ஈசுவர முனிகளின் மகனாகப் பிறந்த இவர், இரண்டாம் பராந்தகனின் அன்பில் செப்பேடுகளில் குறிக்கப்படும் ஸ்ரீநாதராக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது. குருகைக் காவலப்பன், புண்டரிகாட்சர், நம்பிகருணாகரதாசர், ஏறு திருவுடையார், திருக்கண்ணமங்கையாண்டான், வானமாதேவியாண்டான், உறுப்புட்டூர் ஆச்சான் பிள்ளை, சோகத்தூர் ஆழ்வான் போன்ற பல வைணவர்கள் இப்பெரியாரிடம் ஞானோபதேசம் பெற்றனர்.

நாதமுனிகளின் பிள்ளை வயிற்றுப் பேரனாகிய ஆளவந்தார் இரண்டாம் பராந்தகனது அரசியல் தலைவர்களுள் ஒருவராக இருந்தவர். இரண்டாம் பராந்தகனின் அமைச்சர் அனுருத்திரரையும் அவரது குடும்பத்தாரையும் வைணவத்திற்கு மாற்றினார். இராமானுசரை உருவாக்கியவர் என்ற பெருமையும் இவருக்குண்டு. இவர் எழுதிய நூல்களுள் ஆகமப் பிராமண்யம், புருஷ நிர்ணயம் ஆத்ம சித்தி, ஈச்சுரசித்தி, கீதார்த்த சங்கிரம், ஸ்ரீ தோத்திரம், சதுச்லோகி போன்றவை சிறப்புப் பெற்றவை. இவருக்கு யமுனைத் துறைவன், யாமுநாசர் என்ற பிற பெயர்களுமுண்டு.

எம்பெருமானார், யதிராசன், உடையவர், ஸ்ரீபாஷ்யகாரர், பெரும்புதூர் மாமுனி, இளைய ஆழ்வார், என்றெல்லாம் போற்றப்படும் இராமானுசர், ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்தசாரம்,

வேதார்த்த சங்கிரகம், கீதாபாஷ்யம் போன்ற நூல்களால் புகழ பெற்றவர். விசிஷ்டாத்வைதத்தை உருவாக்கிய இவர் கி.பி. பதினோராம் நூற்றாண்டில் வைணவம் மலரச் செய்தவர். இவர் முயற்சியால் 74 வைணவப் பீடாதிபதிகள், 700 ஏகாங்கிகள், 10,000 பாகவதர்கள் ஆகியோர் வைணவத்தை வளர்ப்பதில் தீவிர பங்கேற்றனர்.[12]

இராமானுசர் தம்முடைய தாய்மாமனின் திருக்குமாரரும், தம்முடைய தலை சிறந்த சீடருமான திருக்குருகைப் பிள்ளான் என்பவரைக் கொண்டு திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி என்ற உரையை எழுதச் செய்தார்.

இராமானுசரின் மற்றொரு சீடரான திருவரங்கத்து அமுதனார் என்பவர், கலித்துறையில் நூறு பாடல்களைக் கொண்ட இராமானுச நூற்றந்தாதி என்ற நூலை அருளியுள்ளார். இவர் திருக்கோயிலூர்க் கல்வெட்டில் குறிக்கப்படும் மூங்கிற்குடித் திருவரங்கத்தமுதனாராக இருக்கக் கூடும் என்று அறிஞர் கருதுவர்.

இராமானுசர் ஆற்றிய சிறந்த வைணவத் தொண்டின் காரணமாக, இவருடைய திருமேனிகள், இவரது காலத்திலேயே திருப்பெரும்புதூர், திருவரங்கம் திருநாராயணபுரம் போன்ற இடங்களில் நிறுவப்பட்டு வழிபடப்பட்டன.

இராமனுசரின் அடியார்களுள் ஒருவராகக் கருதப்படும் நெட்டூர் இளையாழ்வான் காலிங்கராயன் என்பவர் கி.பி. 1191-ஆம் ஆண்டளவில் காஞ்சி வரதராசப்பெருமாள் ஆலயத்தில் இராமானுசரின் திருமேனியை நிறுவி இராமானுச பாசிய விரிவுரை நிகழ்த்துவதற்காக உரிய நிவந்தங்களை வழங்கியிருக்கிறார்.[13]

இராமானுசரின் சிறிய தாயாரின் மகனான எம்பார், கூரத்தாழ்வாருடன் சேர்ந்து இராமானுசரை ஆச்சிரியத்து வாழ்ந்தவர். கூரத்தாழ்வாரின் திருப்புதல்வரான பராசரபட்டர், எம்பாரிடமும் கூரத்தாழ்வாரிடமும் பாடம் கேட்டு வளர்ந்தவர். இப்பராசரபட்டரின் சீடரான பிள்ளைப் பெருமாளய்யங்கார் பெரும் புலவராய்த் திகழ்ந்து அட்டபிரபந்தங்களை இயற்றினார். பட்டரால் புறச்சமயத்திலிருந்து வைணவத்திற்கு மாற்றப்பட்ட நஞ்சீயர், திருவாய்மொழிக்கு ஒன்பதாயிரப்படி உரை எழுதினார். இந்நஞ்சீயர் வேதாந்த

வேதியர் என்றும் மாதவாசார்யர் என்றும் வைணவர்களிடையே புகழ் பெற்றிருந்தார்.

நஞ்சீயரின் சீடர்களில் தலையாயவரான நம்பூர் வரதராசாச்சாரியர், வைணவர்களிடையே நம்பிள்ளை என்றும் லோகாசிரியர் என்றும் அறியப்பட்டிருந்தார். நம்பிள்ளையின் சீடர்களில் தலை சிறந்தவரான பெரியவாச்சான் பிள்ளை, திருவாய் மொழிக்கு இருபத்து நாலாயிரப்படி என்ற உரையையும், திவ்வியப்பிரபந்தம் 3000 பாடல்களுக்கு ஈடு என்ற உரையையும் எழுதிப் புகழ் பெற்றார். இவர் அருளிச் செய்த தனிசுலோகி, பரந்தபடி, திரிமத சித்தாந்த சாரசங்கிரகம், கலியனருளப்பாடு திவ்யப்ரபந்த வியாக்யானம் போன்ற நூல்கள் இவருக்கு வியாக்கியான சக்கரவர்த்தி என்ற பெரும் புகழை ஈட்டித் தந்தன.

நம்பிள்ளையின் மற்றொரு சீடரான வடக்குத் திருவீதிப் பிள்ளை என்பவர், பகவத் விசயம் என்றழைக்கப்படும் ஈடு முப்பதாயிரப்படியை அருளிச்செய்தார். இவருடைய இரு புதல்வர்களான, பிள்ளை லோகாசாரியர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்பவர்கள் நித்திய பிரம்மச்சாரிகளாக இருந்து வைணவத்தை வளர்த்தார்கள். பிள்ளை லோகாச்சாரியாரின் சீடர்களுள் திருவாய்மொழிப் பிள்ளை என்பவர் புகழ் பெற்றுத் திகழ்ந்தார்.

எங்களாழ்வான் என்று புகழ் பெற்ற விஷ்ணு சித்தாரியர் என்பவர் ஸ்ரீ விஷ்ணு புராணத்திற்கு 'விஷ்ணு சித்தீயம்' என்ற உரையெழுதிச் சிறப்புப் பெற்றார்,

காஞ்சியில் பிறந்த வேதாந்த தேசிகன் என்பவர் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வைணவத்தை வளர்த்தவர்.

சோழர் காலத்தின் இறுதியில்தான் வைணவம், இராமானுசரைப் பின்பற்றியவர்கள் மேற்கொண்ட சரணடைவுக் கோட்பாட்டில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக வடகலை, தென்கலை என இரண்டாகப் பிரிந்தது. வடகலையைத் தோற்றுவித்தவர் பிள்ளை லோகாசாரியர்; தென்கலையின் தலைவர் வேதாந்த தேசிகர்.

ஸ்ரீவைணவர்கள்

ஆழ்வார்களும், அவர்களுக்கு அடுத்த நிலையில் ஆசாரியார்களும் வைணவ வளர்ச்சியில் பக்தி சிரத்தையோடு ஈடுபட்டதைப்போல

அவர்களுக்கு அடுத்த நிலையில் வைணவத்தை வளர்த்தவர்கள் ஸ்ரீவைணவர்களெனலாம். தங்களைப் பெரிய திருப்பதி ஸ்ரீவைணவர்களென்றும், பதினெண் மண்டலத்து அல்லது பதினெண் நாட்டு ஸ்ரீவைணவர்களென்றும், எம்பெருமான் திருவடிகளை ஆசிரித்திருக்கும் ஸ்ரீவைணவரென்றும், திருவீதி திருப்பணி செய்யும் ஸ்ரீவைணவரென்றும் ஆள்வாருபாசகரென்றும் தங்களைத் தங்களது இடம் அல்லது தொழிலால் இனம் சுட்டிக் கொண்டார்கள். வைணவ ஆலயங்களில் பணிபுரிந்த வைணவர்கள், இறைவன் திருவடி பிடிக்கும் நம்பிமார், கோயில் ஸ்ரீவைணவர், ஆழ்வார் கன்மிகள், வைணவகன்மிகள் என்று தங்களைத் தங்களது தொழிலால் இனம் சுட்டிக் கொண்டனர். பல வைணவ ஆலயங்களில் வைணவ வாரியமொன்றும் இயங்கியிருக்கிறது. அக்காலத்திருந்த வைணவர்களின் நடத்தை குறித்த வரன்முறைகள் அய்யம்பேட்டை[14] போன்ற சில ஊர்க் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

சில ஊர்ச்சபையோரும், ஊரோரும் கூட ஆழ்வார்க்கே திருப்பணி செய்வது என்ற நிலை வகித்திருக்கிறார்கள். 'திருவிடவந்தை சபையோமும் ஊரோமும், இப்பட்டினவர் பன்னிரண்டு குடியும் புத்திர பவித்திராதிகள் ஆழ்வார்க்கேய் திருப்பணி செய்வார்களாகவும், எனக் குறிக்கும் முதலாம் இராசராசன் காலத்துக் கல்வெட்டு இதற்குச் சிறந்த சான்று.

வைணவ ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட கொடைகளைக் காக்கும் பணியில் வைணவர்கள் பக்தியோடு ஈடுபட்டிருந்திருக்கின்றனர். இரண்டாம் இராசராசன் காலத்தில் திருவரங்கத்திறைவனுக்கு நந்தவனத்திற்காக அழகிய மணவாளப் பெருமாள் என்பவர் நிலம் வாங்கி யளிக்கும்போது அதைத் திருவரங்கத்து ஸ்ரீ வைணவரான நல்லூர் திருவரங்கமலை நம்பி என்பவரிடம் அளித்திருக்கிறார்[15], முதலாம் குலோத்துங்கன் காலத்தில் திருவரங்கத்தில் திருவாய்மொழி விண்ணப்பம் செய்விக்கும் பொறுப்பினைப் பதினெட்டு நாட்டு ஸ்ரீவைணவர்கள் ஏற்றிருந்தனர்.[16] மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நந்தலூரில் உள்ள வைணவ ஆலயத்திற்கு வழங்கப்பட்ட நொந்தா விளக்குக்கான கொடையினைச் செலுத்தி வரும் பொறுப்பினை அன்றாடு கூட்டப் பெருமக்களோடு சேர்ந்து ஸ்ரீ வைணவர்களும் ஏற்றிருந்திருக்கிறார்கள்.[17] விக்கிரம சோழன் காலத்தில் மதுராந்தகம் கோதண்டப் பெருமாள் கோயிலுக்கு அமுது உள்ளிட்டவைகளுக்குப் பெரிய நங்கை சானி என்பவர் வழங்கிய கொடையினைக்கொண்டு மேற்படி அமுது உள்ளிட்டவைகளைச் செய்யும்

பொறுப்பினை அக்கோயில் ஸ்ரீகார்யம் செய்வார்களும், ஸ்ரீவைணவ வாரியரும் ஏற்றிருந்தனர்.[18] இவை போன்ற கல்வெட்டுக்கள் அக் காலத்தில் வைணவர்கள், வைணவ ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட கொடைகளைக் காப்பதில் கொண்டிருந்த பொறுப்பினைத் தெளிவாக்குகின்றன.

வைணவர்களுக்கு உணவளிப்பதற்காக வைணவ ஆலயங்கள் வைணவ மடங்கள் பலவற்றில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந் தன. பெரும்பாலானவை வைணவத் தலங்களுக்கு, அத்தலங்களில் நடைபெறும் விழாக்களுக்கு வருகை தரும் வழிநடை வைணவர் களுக்கு அமுதளிக்கச் செய்திருந்த ஏற்பாடுகளாகக் காணப்படு கின்றன. மதுராந்தகதேவன் மடம், அரிகேசவன் மடம், திருவயிந்தி புரத்தில் வைணவர்கள் அமுது செய்விக்கும் மடம், காஞ்சீபுரம் வைணவதாசர் மடம், வானமாமலை வைணவ மடம், மன்னார்குடி செண்டலங்கார மாமுனி மடம், சேரன்மாதேவி வைணவ மடம் போன்ற பல மடங்கள் வழிநடை வைணவர்கள் தங்கிச் செல்லவும் அமுது செய்யவும் பேருதவியாக இருந்து வைணவத்தை வளர்த்திருக் கின்றன.

உலகில் தங்கி இருக்கும் நாட்களில் ஆழ்வார் மங்களாசாசனம் செய்த திருப்பதிகளில் தங்கி அவர் திருக்குணங்களையும் அவர் வடிவழகையும் அனுபவித்துக்கொண்டு அவருக்குத் திருப்பணிகள் செய்து மகிழ்ந்த வைணவர்களுக்கு அமுதளித்த பாங்கினைப் பல கல் வெட்டுகள் பகர்கின்றன. முதலாம் இராசராசன் காலத்தில் திரு விடவந்தை வைணவ ஆலயத்தில் பங்குனி உத்திரத் திருநாள் திருமுன் ஆதியாக ஒன்பது நாளும் நித்தம் முப்பத்தைந்து பிராமணரை ஊட்டும்படி ஒருவருக்கு அரிசி நாழி மூவுழக்காக நித்தம் அரிசி அறுபத்தொரு நாழி செலவழிக்கப்பட்டிருக்கிறது.[19] இவர்களுக்கு உணவு அட்டுவாராக இருவர் பணிபுரிந்திருக்கின்றனர். இவ்வறத்தி னைச் செயலாக்கும் பொறுப்பேற்றிருந்த திருவிடவந்தைச்சபையார், இப்படி அமுது ஊட்டாவிடில் தன்மாசநத்தே நித்தம் நாலேகாற் காணம் தண்டப்படுவதற்கும் இசைந்திருந்ததால், இவ்வறம் பொறுப்புடனும் விழிப்புடனும் செயல்படுத்தப்பட்டமை தெளி வாகிறது. இதே திருவிடவந்தையில், இதே முதலாம் இராசராசன் காலத்தில் திங்கள் தலை உவாத்தோறும் பிராமணர் முப்பதிந்மரை ஊட்டும் பணியும் செவ்வனே நடைபெற்றிருக்கிறது.[21] இப்பணிக் கென அடுவார் இருவரும், கலமிடும் குசவனும், விறகிடுவான் ஒருவ னும் இருந்தமையும் கல்வெட்டால் தெளிவாகிறது.

முதலாம் இராசேந்திரன் காலத்தில் செய்யாறு வட்டம் பிரம்ம தேசத்திற்கு, திருவேங்கட மலையிலிருந்து நூற்றுக்கணக்கான வழி நடை ஸ்ரீ வைணவர்கள் வருவது வழக்கமாயிருந்திருக்கிறது அங்ஙனம் வருவோருக்கு உணவளிக்க உரிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.[21] இம்மன்னன் காலத்தில் திருக்கோவலூர் திருவிடைக்கழி ஆழ்வாரின் அய்ப்பசித் திருநாள் சேவிக்க வந்த வைணவருக்கு ஒன்பது நாளும் சோறிடப்பட்டது[22] முதலாம் இராசாதிராசன் காலத்தில் சேனாபதி இராசேந்திர சோழ மாவலி வாணராசன் என்பவரால் திரிபுவனியில் ஏற்படுத்தப்பட்ட இராசேந்திரசோழன் உத்தமாக்ரம் (நல்லுணவு) மூலம் மாசி திருப்புனர்பூசத்திலும், சயந்தி அட்டமியிலும், மார்கழி திருவேகாதசியிலும், ஐப்பசி, சித்திரை, விசுக்களிலும் விழா நடத்தவும், விழாவின்போது ஸ்ரீ வைணவர்களுக்கு உணவளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.[23]

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இராசராசன் மதுராந்தகன் என்பவர் தன்னுடைய நட்சத்திரமாகிய மிருகசீரிடத்தில், திருவரங்கம் அழகிய மணவாளப் பெருமாள் கோயிலில் இறைவனுக்குச் சிறப்பு வழிபாடு செய்யவும், திருவிழா நாட்கள் இரண்டின் போதும் மதுராந்தக தேவன் மடத்தில் ஸ்ரீ வைணவர்களுக்கு அமுதளிக்கவும் நிலக்கொடை அளித்திருந்தார்.[24] இவ்வரசனின் காலத்திலேயே காஞ்சியிலுள்ள குலோத்துங்கசோழ விண்ணகராழ்வார்க்குத் திருநாளெழுந்தருளும் மடத்தில் சேவிக்க வந்த வைணவர்க்கு அமுது செய்கைக்கு மடப்புறமாகக் கொடை வழங்கப்பட்டு உள்ளது.[25] மேலும், திருவயிந்திபுரம் தேவநாராயணப் பெருமாள் கோயிலில் அமாவாசையில் இறைவன் எழுந்தருளுமன்று சேவிக்க வந்த ஸ்ரீவைணவருக்கு அமுது செய்கைக்கென்று கொடை வழங்கப்பட்டிருந்தது திருவயிந்திபுரந்தில் ஸ்ரீ வைணவர்கள் அமுது செய்விக்கும் மடம் ஒன்றும் இருந்திருக்கிறது. திருக்கோவலூர் பிரம்ம தேயம் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துத் திருவிடைக்கழி ஆழ்வார் அமுது செய்யவும், அங்கு வரும் வழிநடை ஸ்ரீவைணவர்கள் உணவு கொள்ளவும் மேற்படி ஆலயத்திற்கு நிலக்கொடை வழங்கப்பட்டிருந்தது.[26]

விக்ரம சோழன் காலத்தில் ஸ்ரீலங்காநாடுடையான் என்பவர் அமாவாசை நாட்களில் திருவரங்கத்தில் வழிநடை ஸ்ரீவைணவர்களுக்கு உணவளிக்கவும், பங்குனித் திருநாளில் பத்து மலையாள பிராமணர்களுக்கு உணவளிக்கவும் நிலக்கொடை அளித்திருக்கிறார்.[27]

இரண்டாம் இராசேந்திரசோழன் காலத்தில் காஞ்சீபுரத்துக் குலோத்துங்கசோழ விண்ணகராழ்வார் கோயிலில் திருமட விளாகத் திற்குத் தெற்கில் மேற்கடைய புரவுவரி மாணிக்கமென்னும் மடம் இருந்திருக்கிறது. இம்மடத்தில் இவ்விறைவனின் திருவிழா பத்து நாள்களின்போதும் திருவீதி பணி செய்வாருக்கும், ஸ்ரீவைண வருக்கும் அமுது செய்கைக்காகக் கொடை வழங்கப்பட்டிருக்கிறது.[28]

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் விருத்தாசலம் வட்டத்தி லுள்ள திட்டக்குடியான திருச்சிற்றம்பலச் சதுர்வேதி மங்கலத்துத் திருமேற்கோயில் எம்பெருமான் அமாவாசைதோறும் திருவீதி எழுந்தருளியிருக்கிறார். அச்சமயம் திருவீதி திருப்பணி செய்த சீவயிண்ணவர்கள் முப்பதுபேர் அமுதுசெய்யக் கொடை வழங்கப் பட்டிருக்கிறது.[29]

திருவாய்மொழி இசைத்தல்

சிவாலயங்களில் தேவாரப்பாடல்கள் பாடப்பட்டதுபோல, வைணவ ஆலயங்களில் திருவாய்மொழிப் பாடல்களைப் பாடும் வழக்கம் சோழர் காலத்திலிருந்திருக்கிறது. இதற்காக அக்காலக் கட்டத்தில் நிவந்தங்கள் பல வழங்கப்பட்டிருக்கின்றன.

முதலாம் இராசராசனின் விருப்பப்படி நாதமுனி அவர்கள் நம்மாழ்வார் என்றழைக்கப்பட்ட சடகோபரின் ஊரான ஆழ்வார் திருநகரி என்ற குருகூர் சென்று நம்மாழ்வாரின் ஆயிரம் பாடல்களை யும், மற்றும் மூவாயிரம் பாசுரங்களையும் பெற்று வந்து நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்ற பெயரில் முறைமை செய்து கொடுக்க,[30] அன்று முதல் ஆலயங்களில் அப்பாடல்களை இசைக்கும் மரபு அதிக மாகியது. திருவாய்மொழிப் பாடல்களை இசைக்கும் வைணவர் களுக்குப் பூசை செய்வதைவிட அதிக ஊதியம் வழங்கப்பட்டது.

முதலாம் இராசராசன் காலத்ததான உக்கல் கல்வெட்டில் 'திருவாய்மொழித் தேவர்' குறிக்கப்படுவதால், இம்மன்னன் காலத்தி லேயே இம்மரபு தொடங்கிவிட்டது எனலாம்.

முதலாம் இராசேந்திரன் காலத்தில் இராசராச சதுர்வேதி மங்கலத்துச் (எண்ணாயிரம்) சபையார், ஆநாங்கூராகிய இராசராச நல்லூரில் 45 வேலி நிலத்தினை மன்னனின் ஆணைப்படி, இராசராச விண்ணகருக்கு வழங்கினார்கள்.[31] இந்நிவந்தத்திலிருந்து இக்கோயி லில் திருவாய்மொழி இசைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

TAMIL DEPARTMENT OF ANNAMALAI UNIVERSITY

இதே மன்னன் காலத்தில் உத்தரமேரூரில் இறைவனுக்கு முன்னர் தினமும் திருவாய்மொழி இசைப்பதற்கென மூவர் இருந்தனர். திருவாய்மொழி இசைக்கும் ஸ்ரீவைணவர்களுக்கு இறைவனுக்குப் படைக்கப்பட்ட அமுது வழங்கப்பட்டது.

முதலாம் இராசாதிராசன் காலத்தில் திரிபுவன சிதர்வேதி மங்கலத்தில் (திரிபுவன) சேனாபதி இராசேந்திர சோழ மூவேந்த வாணராசன் ஏற்படுத்திய இராசேந்திரசோழ உத்தமாக்ரத்தின் மூலம், திரிபுவனி கோயிலில் திருவாய்மொழி பாட நிவந்தம் அளிக்கப் பட்டிருந்தது.[32]

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் அவனது 15-ஆம் ஆட்சி ஆண்டில் திருவரங்கம் கோயிலில் அக்கோயில் ஆழ்வாருக்குத் திருப் பள்ளியெழுச்சியாகத் திருவாய் மொழி விண்ணப்பம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.[33] கோட்டூர் சேனாபதிகள் வீரசோழ முனைய தரையர் என்பவர் இதற்காக ஐம்பது கழஞ்சுப் பொன் கொடுத்திருந் தார். இம்மன்னனின் 40-ஆம் ஆட்சியாண்டிலும் திருவரங்கத்தில் திருவாய்மொழி இசைக்க மற்றொரு கொடை வழங்கப்பட்டிருக் கிறது. இதே கோயிலில் நடைபெற்ற விழா ஒன்றின்போது தொடர்ந்து மூன்று இரவுகள் 'தேட்டருந்திறல் தேனினை' எனத் தொடங்கும் குலசேகர ஆழ்வாரின் பாடல் பாடப்பட்டிருக்கிறது.[34]

இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் திருக்கோவலூரில் வைகாசி, ஐப்பசி, விழாக்களின்போது திருவாய்மொழியைப் பாட நிவந்தம் அளிக்கப்பட்டிருந்தது. இதே திருக்கோவிலூர் வைணவக் கோயிலில் திருநெடுந்தாண்டகம் ஓதுவதற்காகவும் மானியம் அளிக்கப்பட்டிருந்தது.[35]

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் காஞ்சீபுரத்தில் இராமானுச பாஷ்யவிரிவுரை நிகழ்த்த பாஷ்ய விருத்தியாகக் கொடையளிக்கப்பட்டிருந்தது.[36]

கி.பி. 1242 அளவில் காஞ்சியில் திருமொழி ஓதுவதற்கென 58 பிராமணர்கள் நியமனம் பெற்றிருந்திருக்கிறார்கள்.[37]

கி.பி. 995 அளவிலான கல்வெட்டொன்றில் திருமால்புரத்து விஷ்ணுவைப் புகழ்ந்து 'கோலனார் குழல்' எனத் தொடங்கும் பாடலொன்று காணப்படுகிறது.

இங்ஙனம் வைணவ ஆலயங்களில் திருவாய்மொழி இசைத்த, இசைக்கும் கலைஞர்கள் அரையர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இம்மரபு கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் திருமங்கையாழ்வார் காலத்தில் தொடங்கப்பட்டது. மார்கழி ஏகாதசி 11-ஆம் நாள் முதல் பத்து நாட்கள் திருவாய்மொழியைப் பண்ணுடன் பாடினர். இது இராப்பத்து அல்லது திருவாய்மொழித்திருநாள் எனப்பட்டது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டளவில் நாதமுனிகளால் இம்மரபு எழுச்சி பெற்றது. மார்கழி அமாவாசையிலிருந்து முதல் பத்து நாட்கள் முதலாயிரம், பெரிய திருமொழி, திருநெடுந்தாண்டகம் போன்றவை பாடப்பட்டன. இத்திருமொழித்திருநாள் பகல் வேளையில் நடை பெற்றதால் பகல் பத்து எனப் பெயர்பெற்றது.

சோழர் காலத்தில் திருப்பதிகம் விண்ணப்பிக்க நிவந்தங்கள் பல வழங்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டதுடன் அவ்வப்போது இவற்றின் செயல்பாடு பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டதைத் திருமுக்கூடல் கல்வெட்டொன்று உணர்த்துகிறது. இவ்வூரிலுள்ள வெங்கடேசப் பெருமாள் கோயிலில் இராசேந்திர சோழன் காலத் தில் திருப்பதியம் விண்ணப்பித்தல் தொடர்பான கணக்குகள் சரிபார்க்கப்பட்டபோது, அதிகப்படி இருப்பு இருந்தது கண்டுபிடிக் கப்பட்டது. பின்னர் இவ்வதிகப்படியை உபயோகித்துக்கொள்ளும் முறைபற்றி அக்கோயில் வைகானசர்கள் தங்களுக்குள் ஓர் உடன் பாடு ஏற்படுத்திக்கொண்டதை அக்கோயில் கல்வெட்டுணர்த்து கிறது.

கல்வி

வைணவ ஆலயங்களைச் சார்ந்தனவாகக் கல்வி நிறுவனங்கள் பல இயங்கியிருக்கின்றன. முதலாம் இராசேந்திரன் காலத்தில் தென்னார்க்காடு மாவட்டம் எண்ணாயிரத்தில் இருந்திருக்கிறது.[89] ஊர்ச்சபையினரே ஆசிரியர்களுக்கு ஊதியமும், மாணவர்களுக்கு உணவும் அளித்தனர். பாடங்கள் சமயம் சார்ந்தனவாகவே பெரும் பாலும் இருந்திருக்கின்றன. ரிக்வேதம், யஜுர்வேதம், வாக சனேயம், தலயகாரகாமங்கள், அதர்வவேதம், பௌதாயன இராஜ ஹிபம், வியாகரணம், பிரபாகர மீமாம்சம் போன்றவை கற்பிக்கப் பட்ட பாடங்கள். அங்கு 270 இளநிலை மாணவர்களும், 70 முதுநிலை மாணவர்களும் பயின்றிருக்கிறார்கள். இதற்காக எண்ணாயிரம் சபையரால் இராசராச விண்ணகர் கோயிலுக்கு ஆநாங்கூராகிய ராசராச நல்லூரில் 45 வேலி நிலம் வழங்கப் பட்டிருக்கிறது.

முதலாம் இராசாதிராசன் காலத்தில் திரிபுவனியில் இருந்த கல்லூரியில் ரிக்வேதம், யஜுர்வேதம், சண்டோக சாம, தலவகரசன, அபூர்வ வாஜசநேய, சத்தியஸ்தசூத்ரா, வேதாந்தம், வியாகரணம், ரூபாவதாரம், பாரதம், இராமாயணம், மனுசாஸ்திரம், வைகானச சாஸ்திரம் போன்றவை கற்பிக்கப்பட்டிருக்கின்றன.[40]

வீரராசேந்திரன் காலத்தில் திருமுக்கூடல் மகாவிஷ்ணு கோயில் மண்டபங்களில் கல்லூரி நடந்திருக்கிறது. இவையனைத்தும் வைணவர்களின் கல்வி நிலையை உயர்த்திச், சமுதாயத்தில் அவர்களுக்குச் சிறப்பிடம் வழங்கப் பேருதவியாக இயங்கியிருக்கின்றன.

வைணவ ஆலயங்கள் தவிர வைணவ மடங்களும் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தியிருக்கின்றன. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் காஞ்சி வரதராசப் பெருமாள் கோயிலைச் சேர்ந்திருந்த அரிகேசவன் மடத்தில் வேதபாராயணமும், விவாதங்களும் நடந்திருக்கின்றன.[41]

மருத்துவம்

வைணவ ஆலயங்களைச் சார்ந்து மருத்துவச் சாலைகளும் இயங்கியிருக்கின்றன. தஞ்சையில் 1015-இல் சுந்தர சோழ விண்ணகர் ஆதுலசாலை என்ற மருத்துவமனையினைக் குந்தவை ஏற்படுத்தியிருக்கிறார்[42] திருமுக்கூடலில் வீரராசேந்திரன் காலத்தில் அவ்வூர் விஷ்ணு கோயிலில் 15 படுக்கைகளைக் கொண்ட 'வீரசோழன்' என்ற மருத்துவமனை இருந்திருக்கிறது. அங்கு பரம்பரை வைத்தியர் ஒருவரும், இரண்டு செவிலிகளும், மூலிகை சேகரிப்பவர் இருவரும் பணியாற்றியிருக்கின்றனர்.[43]

முடிவுரை

சோழர் காலத்தில் பொதுவாக வைணவம் நன்கு செழித்திருந்ததென்றாலும் சிற்சில நேரங்களில் சிற்சில வைணவ ஆலயங்கள் வரிகட்டமுடியாமல் அல்லல்பட்டிருக்கின்றன. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் வலங்கை, இடங்கைப் பிரிவினரிடையே நடந்த போராட்டத்தின்போது இராசமகேந்திர சதுர்வேதி மங்கலத்திருந்த மும்முடிச்சோழ விண்ணகராழ்வார் கோயிலின் பண்டாரம் கொள்ளையடிக்கப்பட்டது.[44] இதன் காரணமாக இக் கோயிலால் கோயில் நிலங்களுக்கு வரி செலுத்த இயலாமற் போய் விட்டது. உடனே அவ்வூர்ச்சபையார் குறிப்பிட்ட ஒரு தொகையை மட்டும் பெற்றுக்கொண்டு கோயில் நிலங்களுக்கு வரியிலிருந்து விலக்களித்திருக்கின்றனர்.

தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டம் வளையமாதேவி சதுர்வேதி மங்கலத்து வேதநாராயணப் பெருமாள் கோயிலுக்கு வழிபாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த கோயில்களுக்கு விதிக்கப்பட்ட வரியினை அக்கோயிலால் கட்ட இயலவில்லை. பதினொன்றாம் நூற்றாண்டளவில் இங்ஙனம் தவித்த இக்கோயில் நிர்வாகிகள், கோயிலுக்குரிய சில தங்க நகைகளையும், வெள்ளிப்பாத்திரங்களையும் சுமார் 30 காசுகளுக்கு விற்று, அக்காசினை மகாசபையினரிடம் அளித்தனர். மகாசபையினரும் அக்காசினைமட்டும் பெற்றுக் கொண்டு கோயில் நிலங்களுக்கு அவர்களே வரி செலுத்த ஒப்புக் கொண்டனர்.[45]

சோழர் காலத்தில் சமயப்பொறை பொதுவாகக் காணப்பட்டது. எனினும் சிற்சில சமயங்களில் சைவ வைணவப் போட்டி தலைதூக்கவும் செய்திருக்கிறது. திருக்கடையூர் மகாசபை ஏற்படுத்திய தீர்மானம் இதனை நன்கு தெளிவாக்குகிறது. சிவன் கோயில் காப்பாளர்கள் வைணவரோடு சேர்ந்தால் அவர்களது சொத்தை மகாசபை பறிமுதல் செய்து கோயிலுக்கு எடுத்துக்கொள்ளும் என அத் தீர்மானம் கடுமையாக எச்சரிக்கிறது.[46]

சோழர் காலத்தில் சைவத்திற்கும், சைவர்களுக்கும் அடுத்த நிலையில் வைணவமும், வைணவர்களும் சிறப்புற்றிருந்தார்களெனில் மிகையாகாது.

அடிக்குறிப்புக்கள்

1. ARE 335/1917-18
2. ,, 8/1919
3. ,, 20/1940-41.
4, ,, 31/1936-37.
5. ,, 562/1920-21.
6. ,, 330/1959-60.
7. SII Vol IV No. 133.
8. மா. பாலசுப்ரமணியன், சோழர்களின் அரசியல் கலாச்சார வரலாறு, பக். 280.
9. Ibid பக் 284.
10. டாக்டர். கே. கே. பிள்ளை, சோழர் வரலாறு, பக். 627.
11. Dr. K. V. Raman, 'Some Epigraphical gleanings on Vaishwava Acharyas' Prof. K.A.N. Sastri Felicitation volume p. 126.
12. மா. பாலசுப்ரமணியன், சோழர்களின் அரசியல் கலாச்சார வரலாறு, பக். 281.

13. ARE 493/1919.
14. ,, 119/1927-28.
15. ,, 35/1936 37.
16. ,, 61/1892
17. SII Vol. XXIII No. 581.
18. ,, VII No. 479, ARE 263/1901.
19. ARE 267/1910.
20. ,, 260/1910.
21. ,, 255/1915-16.
22. SII Vol VII No. 141.
23. ARE 1919 Introduction.
24. ,, 15/1936-37.
25. SII Vol IV No. 133.
26. ARE 124/1900.
27. ,, 33/1936-37.
28. SII IV No. 134.
29. ARE 23/1903.
30. *மா. பாலசுப்ரமணியம், சோழர்களின் அரசியல் கலாச்சார வரலாறு, பக். 282.*
31. ARE 333/1917-18.
32. ,, 1919 Introduction.
33. SII vol. IV No. 509.
34. ARE 62/1892.
35. ,, 343/1921.
36. ,, 493/1919.
37. ,, 557/1919.
38. ,, 183/1915-16.
39. ,, 333/1917-18.
40. ,, 1919 Introduction.
41. ,, 635/1919.
42. ,, 248/1923.
43. ,, 335/1917.
44. ,, 33/1936-37.
45. ,, 573/62-63.
46. ,, 257/1925.

*

சோழர் காலத்து மூலபருடைச் சபை

இரா. ப. கருணானந்தன்
காப்பாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, தஞ்சை

சோழர் காலத்தில் சிவன் கோயில் நிர்வாகத்தை நடத்தி வந்த சபை மூலபருடை எனப்பட்டது.[1] மூலபரடை, மூலபருஷை, மூல பருடையோம், மூலபருடைச்சபை, மூலபருடைப் பெருமக்கள் எனச் இச் சபையினரைக் கல்வெட்டுகள் பலவாறாக அழைக்கும். கோயி லோடு தொடர்புடைய பிராமணர்கள் சிவப்பிராமணர், அகநாழிகை சிவப்பிராமணர், பதிபாதமூலத்தார், திருவுண்ணாழிகை கணப் பெருமக்கள், திருஉண்ணாழிகைச் சபை, பன்மாகேஸ்வரர், ஸ்ரீவைஷ்ணவர் எனப் பல அமைப்பினராகக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றனர்.[2] இவர்களைப் போன்று சோழர் காலத்தில் கோயிலோடு தொடர்புடையவராய் இருந்த பிராமணர்களின் ஒரு வகை அமைப்பினை மூலபருடை எனலாம்.[3]

பரிஷத் என்னும் சமஸ்கிருதச் சொல்லிற்குச் சபை, அமைப்பு எனப் பொருள். ரிக்வேதம், சதபத பிராமணம், கௌசிகி பிராமணம் என்னும் வேதகால நூல்களில் உள்ள குறிப்புகளைக் கொண்டு வேத காலத்திலேயே பரிஷத் என்னும் அமைப்பு இருந்தது எனலாம்.[4] பரிஷத் என்னும் சமஸ்கிருதச் சொல். பரிஷை பரிடை என மாறி பருடை எனும் வடிவத்தைச் சோழர் காலக் கல்வெட்டுக் களில் பெற்றன எனலாம். ஒரே கல்வெட்டு பருடை எனும் சொல்லாட்சியையும் மூலபருடை என்னும் சொல்லாட்சியையும் ஒரே பொருளில் பயன்படுத்துவதால் பருடை, மூலபருடை இரண்டும் ஒரு பொருள் பற்றியதே என்பதில் ஐயமில்லை.[5]

மூலபருடை என்னும் சொல்லுக்கு உயர்ந்தவர்கள் நிறைந்த முதன்மையான சபை எனப் பொருள்.[6] அனைத்திற்கும் மூலமாகிய கோயில் பணியைப் புரிந்த சபை மூலபருடை எனப் பொருள் கொள்ளவும் இடமுண்டு. பிராமணர்க்குக் கொடையாக அளிக்கப் பட்ட பிரம்மதேய ஊர்களில் எல்லாம் பெரும்பாலும் மூலபருடை யார் எனும் அமைப்பு இருந்தது.[7]

கோயில் நிர்வாகம் போன்ற பணியைப் பல்லவர் காலத்தில் அமிர்த கணத்தார் எனும் அமைப்பு மேற்பார்வையிட்டு வந்தது.[8] இடைக்காலப் பாண்டியர் காலத்தில் மூலபருடை என்னும் அமைப்பு இருந்ததைச் சுசீந்திரம் கல்வெட்டுகள் உணர்த்தும்.[9] எனவே மூலபருடை என்னும் சொற்றொடர் திடீரென்று சோழர்கள் காலத்தில் ஏற்பட்டது அல்ல.

இராசகேசரி ஆதித்தசோழன் காலம் தொடங்கி மூன்றாம் இராசராச சோழன் காலம் வரை மூலபருடையாரைப் பற்றிய குறிப்புகள் சோழர் கல்வெட்டுக்களில் கிடைக்கின்றன.[10] இருப்பினும் குறிப்பாகச் முற்காலச் சோழர் கல்வெட்டுக்களில் மூலபருடையாரைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. அதிலும் சிறப்பாக மதுரை கொண்ட பரகேசரியாகிய பராந்தகன் ஆட்சிக் காலத்தில் மூலபருடையார் என்னும் அமைப்பு மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது எனலாம்.

சோழர் கல்வெட்டுக்களில் மூலபருடையார் எத்தகைய பணியை மேற்கொண்டனர் என்னும் அடைமொழித் தொடர் காணப்பட வில்லை. ஆனால் சுசீந்திரம் மாறஞ்சடையன், சடையன்மாறன், சோழன் தலை கொண்ட வீரபாண்டியன் முதலியோர் கல்வெட்டுகள் "எம்பெருமான் ஸ்ரீ காரியம் ஆராய்கின்ற மூலபருடைச் சபையார்" எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன.[11] மூலபருடைச் சபை அனைத்துச் சோழர் காலத்து ஊர்களிலும், அனைத்துச் சோழர் காலத்துக் கோயில்களிலும் இருந்தது என்று கூறுவதற்கு இயலாது. குறிப்பிடத்தக்க சில ஊர்களில் மட்டுமே இவர்கள் இருந்திருக் கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கும்பகோணம், திருநாகேஸ் வரம், புஞ்சை, சேங்கனூர், திருப்பைஞ்ஞீலி, மேலப்பெரும்பள்ளம், ஸ்ரீநிவாசநல்லூர், திருவெள்ளறை, திருச்செந்துறை, சுசீந்திரம் முதலிய ஊர்களில் மூலபருடை அமைப்பு இருந்தமையைச் சோழர் கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம்.[12]

அபிஷேக தட்சிணை பெறுதல்

மதுரை கொண்ட பரகேசரி பராந்தகன் தன்னுடைய முடி சூட்டு விழாவின் போது அபிஷேக தட்சிணையாகத் திருக்குடமூக்கு மூலபருடைப் பெருமக்களுக்கு நிலக்கொடை வழங்கியுள்ளதைக் குடந்தை கீழக்கோட்டத்தில் உள்ள 4 கல்வெட்டுகள் தெரிவிக் கின்றன.[13] சதுர்வேதி மங்கலங்களாகவும், பிரம்மதேயங்களாகவும் பிராமணர்களுக்கு நிலக்கொடை வழங்கப்பட்டது போன்று அரசன்

முடிசூட்டும் சமயத்தில் மூலபருடை எனும் பிராமணர் அமைப்பிற்கு வழங்கிய நிலக்கொடையை அபிஷேக தட்சிணை எனலாம். பட்டாபிஷேகத்தின்போது வழங்கப்படுகின்ற தட்சிணை அபிஷேகதட்சிணை. அபிஷேக தட்சிணையாகப் பெறப்பட்ட நிலம் மூலபருடைச் சபையாரின் தனிப்பொறுப்பிலேயே இருந்தது. மூலபருடையார் கோயில் பணிகளைச் செய்வதற்காக இந்நிலங்கள் வழங்கப் பெறவில்லை. எனவே மூலபருடையார் அபிடேக தட்சிணையாக அரசனிடம் பெற்ற நிலத்தைக் கோயிலுக்கு விற்றுள்ளனர். 500 கழஞ்சு பொன்னைப் பெற்றுக்கொண்டு அபிடேக தட்சிணையாகப் பெற்ற நிலத்தில் 10 வேலி நிலத்தையும், 4 வேலி நிலத்தில் $\frac{1}{4}$ செய்யும், 25 கழஞ்சு பொன்னைப் பெற்றுக்கொண்டும் மற்றுமொரு $\frac{1}{4}$ செய்யும், இதே போன்று மற்றொரு $\frac{1}{4}$ செய்யும் குடந்தைக் கீழ்க் கோட்டத்துப் பரமசுவாமி கோயிலுக்கு மூலபருடையார் விற்றுக் கொடுத்து, இவ்வாறு விற்று விலையாவணம் செய்த நிகழ்ச்சியைக் கோயில் பணியாளனாகிய ஆயிரத்து முன்னூற்றுவன் என்னும் மத்தியஸ்தன் முன்னிலையில் பதிவு செய்து கல்வெட்டில் பொறிக்குமாறு பணித்துள்ளனர்.[14]

இதில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க செய்தி முதற் பராந்தக சோழன் பாண்டிப் படையின் செலவினங்களுக்காகத் திருக்குடமூக்கு மூலபருடைச் சபையார்க்கு 3,000 கழஞ்சுப் பொன்னைத் தண்டமாக விதித்தான். மூலபருடைச் சபையார் இத் தண்டத்தைச் செலுத்துவதற்காகப் பராந்தகனிடமிருந்து அபிடேக தட்சிணையாகப் பெற்ற அரிசலூர் 10 வேலி நிலத்தை 500 கழஞ்சு பொன்னுக்கு விற்று மேற்படி தண்டத்தைச் செலுத்தியுள்ளார். மூலபருடையார் தவறு செய்தமையால் இத் தண்டம் விதிக்கப்பட்டதா? அல்லது படையின் செலவுகளுக்காக இயல்பாக வசூலிக்கப்பட்டதா என்பது ஆய்வுக்குரியது.

சாவாமூவாப் பேராடு பெறுதல்

கோயில் பணிகள் செவ்வனே நடைபெறுவதற்காக அரசர்களும், அரசனைச் சேர்ந்தவர்களும், பொது மக்களும் ஆடு மாடுகள், நிலம், பொன் முதலியவற்றைக் கோயிலுக்கு வழங்குவது வழக்கம். கோயிலைச் சேர்ந்த அமைப்புகள் இவற்றைப் பெற்றுக்கொண்டு வழங்கியவர் குறிப்பிடும் கோயிற் பணியைச் செய்ய வேண்டுவது மரபு. மின்சார வசதியில்லாத அக்காலத்தில் விளக்கு எரிப்பதற்காக நெய்யைக் கொடுப்பதற்காக ஆடுகள் கொடையாகக் கொடுக்கப்

பெற்றன. இவற்றைச் சாவாமூவாப் பேராடுகள் எனக் கல்வெட்டுகள் அழைக்கும். இத்தகைய சாவாமூவாப் பேராடுகளைக் கோயிலுக்கு வழங்கிய கொடையாளர்கள் பெரும்பாலும் இடையர் எனப்படும் தேவரிடைச் சான்றாரிடம் மட்டுமே வழங்கினர். அப்போதுதான் ஆடுகள் சரிவரப் பராமரிக்கப்பட்டுக் கோயில் பணி சிறப்பாக நடைபெற வாய்ப்பு ஏற்படும். ஆனால் சுசீந்திரம் கல்வெட்டுகள் புதுமையாகக் கோயில் பணி தொடர்பாக மூலபருடைச் சபையார் சாவாமூவாப் பேராடுகளைப் பெற்றுக்கொண்டமையைத் தெரிவிக்கின்றன.[15] திருச்சிவிந்திரத்து மாதேவர்க்குத் தென்னாட்டுத் தலைக்குளத்து அரையன் வைத்த நந்தா விளக்கிற்கு நாள்தோறும் உழக்கு நெய் ஊற்றுவதற்காக மூலபருடைச் சபையார் 50 ஆடுகளைப் பெற்றுள்ளனர். களக்குடி நாட்டுக் கரவந்தபுரத்து வியாபாரி ஒருகை அரங்கன் நந்தா விளக்கு ஒன்றை அமைத்து இரவும் பகலுமாக உழக்கரை நெய் ஊற்றுமாறு 75 ஆடுகளையும், திருவேங்கட நிலை விளக்கிற்கு ஆழாக்கு நெய் வழங்குவதற்காக 25 ஆடுகளையும், சுசீந்திரத்து எம்பெருமான் ஸ்ரீகாரியம் ஆராயும் மூலபருடையார் வசம் ஒப்படைத்துள்ளான். இவையிரண்டும் முதற் பராந்தக சோழன் காலத்து நிகழ்ச்சிகள். முதல் இராசராசன் காலத்தில் ஈழநாட்டைச் சேர்ந்த மழவரையன் சென்னிகண்டன் என்பான் சுசீந்திரம் கோயிலில் நந்தாவிளக்கு ஒன்றை அமைத்து, இரவும், பகலும் எரிவதற்கு உழக்கு நெய் வழங்குவதற்காக 50 சாவாமூவாப் பேராடுகளை மூலபருடைச் சபையாரிடம் ஒப்படைத்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. மூலபருடையார் தாம் பெற்ற ஆடுகளை இடையர் போன்றோரிடம் ஒப்படைத்தே கோயில் பணிகளை மேற்கொண்டிருக்கவேண்டும் எனலாம். முதல் ஆதித்த சோழன் காலத்தில் திருவெள்ளறையில் இருந்த மூலபருடையார் இதேபோன்று விளக்கு எரிக்கும் பணிக்காக 20 பசுக்களைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.[16]

பொன்னும், நிலமும் பெறுதல்

ஆடு மாடுகளைப்பெற்று மூலபருடையார் கோயில் பணிகள் புரிந்ததைப் போன்று கொடையாளர்கள் வழங்கிய பொன்னையும், நிலத்தையும் பெற்று இவற்றிலிருந்து வருகின்ற வருவாயைக் கொண்டும் கோயில் பணி புரிந்துள்ளனர். திருச்சி மாவட்டம், திருச்செந்துறையைச் சேர்ந்த மூலபருடையார் இத்தகைய பணியில் சிறந்து நிற்கின்றனர். திருச்செந்துறை சோழர் காலக் கல்வெட்டுகள் இவர்களை ஈசானமங்கலத்து மூலபருடையார் என அழைக்கும். மதுரை கொண்ட பரகேசரியின் 12-ஆம் ஆட்சியாண்டில் ஈசான

மங்கலத்தைச் சேர்ந்த பாரதாயன் நாராயணன் நக்கன் என்பான் திருச்செந்துறைக் கற்றளி பரமேஸ்வரர் கோயிலில் விளக்கு எரிப்பதற்கும், சாந்திப் புறமாகவும் வழங்கிய நிலத்தை மூலபருடையார் பெற்றுள்ளனர்.[12] இதே கொடையாளன் பராந்தகனின் 20 ஆம் ஆண்டில் திருச்செந்துறை இறைவன் ஸ்ரீபாதமே சார ஆற்றுத் தண்ணீர் கட்டுவதற்காகத் திருச்செந்துறை ஊர்ச் சபையாரிடம் விலையாக நிலத்தைப் பெற்று அந்த நிலத்தை மூலபருடையாரிடம் ஒப்படைத்துள்ளான்.[18] திருவுண்ணாழிகையில் விளக்கு எரிக்கும் பணிக்காகவும் இதே கொடையாளன் சபையாரிடம் விலைக்குப் பெற்று வழங்கிய நிலத்தையும் மூலபருடையார் பெற்றுள்ளனர்[19].

திருச்செந்துறை இராசகேசரி கல்வெட்டு ஒன்று திருச்செந்துறை இறைவனுக்கு உடையார் வீரசோழ இளங்கோவேளாயின ஒற்றி மதுராந்தகன், விடேல்விடுகு கல்லால் கொடுத்த 100 கழஞ்சு பொன்னை மூலபருடையார் பெற்றுக்கொண்டு ஊர்ச்சபை நிர்வகித்து வந்த கோயில் நிலத்தை மூலபருடையார் பெற்று கோயிலுக்கு வரி முதலியவற்றை வழங்கினர் எனத் தெரிவிக்கிறது[20] மேலும் இரண்டு பரகேசரி கல்வெட்டு தென்னவன் இளங்கோ வேளாயின... பூதியார் தேவியார் உறத்தூர்க் கூற்றத்துக் கொடும் பாளூர் நக்கன் விக்கிரம கேசரியாரிடமும், நங்கை பூதி ஆதித்த பிடாரியாரிடமும் மூலபருடையார் விடேல்விடுகு கல்லால் முறையே 20, 10 கழஞ்சு பொன் பெற்று முறையே திருச்செந்துறைக் கோயிலில் விளக்கு எரித்தல், இறை, எச்சோறு, வெட்டி முதலிய வரிகளை இறுத்தல் முதலிய பணிகளைச் செய்து சிறந்துள்ளனர்[21].

திருவெள்ளறை மூலபருடையார் திருவானைக்கல் பட்டாரகர்க்கு நந்தா விளக்கு எரிப்பதற்காக, திருவெள்ளறையைச் சேர்ந்த சங்கரப் பாடி மருதன் ஆச்சன் வழங்கிய 25 கழஞ்சுப் பொன்னைப் பெற்றுள்ளனர்.[22] பரகேசரி கல்வெட்டுகள் இரண்டு மூலபருடையார் அரையன்தாழி, சோழப் பெருமானடிகளுக்கு அதிகாரம் செய்கின்ற பாண்டி நாட்டுக் கீரனூர் நாட்டு இடைக்காட்டூரைச் சேர்ந்த குமரன்கோன் ஆகிய இருவரிடமும் முறையே 30, 25 கழஞ்சு பொன்னைப் பெற்று விளக்கு எரிக்கும் பணியை மேற்கொண்டனர் என்றும்,[23] திருவெள்ளறை இராசகேசரி கல்வெட்டு ஒன்று சுவையான செய்தியைத் தருகிறது. திருவெள்ளறை திருவானைக்கல் பெருமானடிகள் உச்சிப்போதில் அமுது செய்யும்போது வேதம் வல்ல பிராமணர் ஒருவர் ஊட்டுவிப்பதற்காக, திருவெள்ளறை சாத்துவாய் காஞ்சன் தாமோதிரன் என்பான் திருவெள்ளறை ஊர்க்கல்லால் 70

கழஞ்சுப் பொன்னை வழங்கியுள்ளான். இதனைப் பெற்றுக்கொண்ட மூலபருடையார் இப் பொன்னின் வட்டியைக்கொண்டு தாலம் ஒன்று, வட்டில் ஒன்று, பத்தெட்டுக்குத்தல் பழவரிசி, கும்மாயம், ஆழாக்கு நெய், இரண்டு பழம், காய்கறி, புளிங்கறி, நாழி தயிர், பொரிக்கறி, வெற்றிலை பாக்கு முதலியவற்றிற்கு நாள்தவறாமல் ஏற்பாடு செய்தனர் எனச் சுவையாகச் சொல்கிறது.[24]

கோயிலில் விளக்கு எரிப்பதற்காகவும், திருமஞ்சனம் முதலிய பணிகளுக்காக ஆற்று நீர் கொண்டுவருவதற்காகவும், இறைவன் அமுது செய்வதற்காகவும், கோயில் நிலத்தை நிர்வகித்துக் கோயிலுக்கு வரி முதலியன செலுத்துவதற்காகவும் நிலங்களைப் பெற்ற மூலபருடைச்சபையார், அக்கோயில் நிலங்களைத் தாமே கூடி விற்பனைச் செய்து வேறு பணிகளுக்குச் செலவு செய்யும் மிகப் பெரிய அதிகாரமும் பெற்றிருந்தனர். இதற்குச் சோழர் கல்வெட்டு கிடைக்கவில்லையாயினும், பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு ஒன்று சான்று தருகிறது. இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் மூலபருடையார் கி.பி. 1166-இல் குலசேகர பாண்டியனைக் காண்பதற்காக மதுரை செல்ல விரும்பினர். அதற்குப் பணம் தேவைப்பட்டது. திருத்தளிநாயனார் கோயில் ஆயிரத்தெழுநூற்றுவன் திருமண்டபத்தில் கூடிப் பேசிய மூலபருடைச் சபையார் கோயிலுக்குச் சொந்தமாக இருந்த சில நிலங்களை விற்கலாம் என முடிவு செய்து, அந்நிலங்களில் பயிரிடும் உரிமையை 203 சோழிய நற்பழங்காசுகளுக்கு விற்றனர் எனத் தெரிவிக்கிறது கல்வெட்டு.[25]

வாரியம் அமைத்தல்

ஊர்ச்சபை, கோயில் பணிபுரிந்த சபைகள் தாம் செய்யும் பணிகள் செவ்வனே சிறப்பாக நடைபெறுவதற்காக தம் கட்டுப்பாட்டிற்குள் அடங்கிய வாரியம் என்னும் அமைப்பை ஏற்படுத்திக் கொள்வது வழக்கம். முதல் இராசராசனின் சுசீந்திரம் கல்வெட்டு அவ்வூர் மகாசபையார் கோயில் பணிகளை நிர்வாகம் செய்வதற்காக வாரியர் இருவரை நியமித்ததைத் தெரிவிக்கிறது.[26] கோயிலுக்குரிய நில வருவாய் போன்ற வரிகளை இவர்கள் வசூலித்தல் போன்ற தலையாய கடமைகளைச் செய்தமையால் வாரியர் என்றும் வாரியம் அழைக்கப்பட்டனர் எனலாம்.[27]

திருச்சி மாவட்டம் ஸ்ரீநிவாசநல்லூர் சோழர் கல்வெட்டுக்கள் இவ்வூர் மூலபருடையாரை பிரம்மதேயமான மகேந்திரமங்கலத்து மூலபருடையர் என அழைக்கும். முதல் இராசராசனின் இரண்டாம்

ஆட்சியாண்டில் அரையர் ஆச்சாரகாந்த பிரம்மாதிராசர் என்பவர் திருக்குரக்குத் துறைப் பெருமானடிகளுக்குச் சொந்தமான இறையிலி தேவதான நிலங்களைப் பதிவு செய்தும், அவற்றின் வரும் படியைக் கோயிலின் பல திறச் செலவுகளுக்கு ஏற்றவாறு வகுக்கு மாறும். மகேந்திரமங்கலத்து மூலபருடையாரிடம் கூறினார். மூலபருடையாரும் இப்பணி சிறப்பாக நடைபெறுவதற்காகத் தம் கட்டுப்பாட்டிற்குள் அடங்கிய வாரியம் ஒன்றை அமைத்தனர். இவ்வாறு அமைக்கப்பட்ட வாரியம், ஊர்க் கணக்கின் உதவியுடன் திருவமுது, நெய், திரு ஆராதனை செய்யும் சிவப்பிராமணர் முதலியவற்றிற்குரிய ஊதியம், சிவப்பிராமணர்க்கு உதவியாக இருக்கும் இருவர் ஊதியம், 18 விளக்குகளுக்கு எண்ணெய், திருப்பலி கொட்டுவாருக்கும் விளக்கிடுவாருக்கும் உரிய ஊதியம், திருஆராதனையின்போது இன்னிசை நிகழ்த்த அமர்த்தப்பட்ட மத்தளிகர் மூவர், கரடிகை இயக்குவார் ஒருவர், தாளம்; பாடகம், சேகண்டிகை இவற்றை இயக்குபவர் ஒவ்வொருவர் ஆகிய எழுவருக்கும் உரிய ஊதியம், காளம் இரண்டு ஊதுபவனுக்குரிய ஊதியம் முதலிய ஊதியங்களை வழங்குவதற்குரிய கோயில் நிலங்களை வரையறை செய்தது.[28] எனவே சோழர்கள் காலத்தில் இருந்த மூலபருடைச் சபையார் கோயிலில் விளக்கு எரித்தல், இறைவனுக்குத் திருவமுது செய்வித்தல்' சிவப்பிராமணர்க்கு ஊதியம் வழங்குதல், கோயிலில் இசைக்கருவிகள் முதலியன வாசிக்க ஏற்பாடு செய்தல் போன்ற அரிய கோயிற் பணிகளை தமது கண்காணிப்பில் வாரியம் அமைத்து மேற்கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர் எனலாம்.

கொள்கைகள் வகுத்தல்

வாரியம் அமைத்தற்குரிய உரிமை பெற்றிருந்த மூலபருடைச் சபையார் ஊர்ச்சபை நடவடிக்கைகள் பற்றிய கொள்கைகளை வகுத்துக்கொடுக்கும் வல்லமையும் பெற்றிருந்தனர். ஊர்ச்சபை ஒரு முக்கியமான செய்தி பற்றி முடிவுக்கு வர இயலவில்லையாயின், அவ்வூரில் உள்ள மற்றொரு சபையின் முடிவை ஏற்றுக்கொள்ளும்.[29] மூன்றாம் இராசராசன் கல்வெட்டு ஒன்று சேய்ஞலூர் மூலபருடையார் ஊர்ச்சபைக்குரிய தேர்தல் விதிகளையும் ஊராட்சி முறைகளையும் கொள்கைகளாக வகுத்துக் கொடுத்தமையைத் தெரிவிக்கிறது.[30]

மூன்றாம் இராசராசனின் 30-வது ஆட்சியாண்டில் விருதராச பயங்கர வளநாட்டு மிழலை நாட்டு சேஞலூர் உடையார்

வைஸ்வேஸ்வரதேவர் கோயில் மூலபருடையார் கூட்டம் குறைவறக் கூடினர். கிராம காரியம் தொடர்பான நெறிமுறைகளை வகுத்தனர். அவர்கள் வகுத்த கொள்கைகள் வருமாறு:

1. ஊர்ச்சபை உறுப்பினராக ஒரு முறை ஓராண்டு பணி புரிந்தவர், அடுத்த ஐந்தாம் ஆண்டில்தான் மீண்டும் உறுப்பினராகத் தேர்ந்தெடுப்பதற்கு உரியவர் ஆவார். அவருடைய புதல்வர்கள் நான்காம் ஆண்டிலும், சகோதரர் மூன்றாம் ஆண்டிலும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படலாம்.

2. 40 வயதிற்குக் குறையாதவர்களே உறுப்பினராகத் தகுதி யுடையவர்.

3. முன்னோர்கள் மேற்கொண்ட முறைகளைப் பின்பற்றி நடப்போம் என்ற உறுதிமொழியை உறுப்பினர்கள் எடுத் துக்கொள்ளுதல் வேண்டும்.

4. ஆண்டுதோறும் சபைக்குப் புதிய உறுப்பினர்களே தேர்ந் தெடுக்கப் பெறுதல் வேண்டும். அரசு அதிகாரிகளின் துணையினால் உறுப்பினர் ஆனவர்களும், நெறிகளுக்கு முரணாக உறுப்பினர் ஆனவர்களும், ஓராண்டுக்கு மேல் உறுப்பினராக இருப்பதற்கு முயல்வோரும் கிராமத் துரோகிகள் எனக் கருதப் பெறுவர்.

5. கடமை, குடிமை, சபா விநியோகம் முதலிய வரிகளை மக்களிடமிருந்து பெறும்போது குறிப்பிட்ட அளவுக்குமேல் பெறுதல் கூடாது. சபா விநியோகமும், குடிமையும் தனித் தனியாக வசூலிக்கப்படவேண்டும்.

6. ஒரு காரியம் குறித்து 2,000 காசுகளுக்கு மேல் செலவழிக்க நேருமாயின் மகாசபையின் அனுமதியை முன்பே பெற்று இருத்தல் வேண்டும்.

7. இவ்விதிகளின்படி செலவழிக்காமல் முரணாகச் செலவழித் திருப்பினும், அதிக வரி வாங்கியிருப்பினும் இதற்குக் காரணமான உறுப்பினர்கள் இத்தொகைக்கு ஐந்து மடங்கு தண்டம் செலுத்துதல் வேண்டும்.

8. மக்கள் கொடுக்க வேண்டிய வரி பாக்கித் தொகையை ஒன்றுக்கு இரண்டாகத் தண்டம் சேர்த்து வசூலிக்கலாம்.

9. மேலே குறிப்பிட்ட தண்டத் தொகைகள் எல்லாவற்றையும் பெற்று, சபா விநியோகத்தோடு சேர்த்துச் செலவிடலாம்.

10. ஊர்க்கணக்கனும், வாரியமும், குடும்பின் உறுப்பினர்களும் மகா சபையின் ஆணையின்படி ஆண்டுதோறும் மாறி மாறி நிற்றல் வேண்டும்.

இத்தகு நெறிமுறைகளை வகுத்த மூலபருடையார் சேய்ஞலூர் கோயில் திருநடைமாளிகையிலே இவற்றைக் கல்வெட்டாக வெட்ட வேண்டும் என்று பணிக்க அவ்வாறே கல்வெட்டும் வெட்டப் பெற்றது. உத்திரமேரூர்ச் சபையினரைப் போன்று ஆனால் அதே சமயத்தில் அரசனுடைய ஆணைகள் இல்லாமல் ஊர்க்கு நலம் பயக்கும் பல கொள்கைகளை வகுத்துக் கொடுத்திருந்தனர் என்றால், அந்த மூலபருடைச் சபையில் கல்வி கேள்விகளில் வல்ல அறிஞர் பெருமக்கள் பலர் இருந்திருத்தல் வேண்டும் என்பதில் ஐயமும் தோன்றுமோ? திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமி கோயில் கல்வெட்டு ஒன்று முதல் இராசேந்திர சோழனின் 30-வது ஆட்சி யாண்டில் சேய்ஞலூர் மூலபருடையார் திருவிடை மருதூர் கோயி லுக்கு 500 காசுகளுக்கு நிலம் விற்ற செய்தியைத் தருகிறது.[31] எனவே மூலபருடை என்னும் அமைப்பு சேய்ஞலூரில் முதல் இராசேந்திரன் காலம் தொடங்கி மூன்றாம் இராசராசன் காலம் வரையிலும் தொடர்ந்து இயங்கியது என்னும் முடிவுக்கு வரலாம்.

செய்த பணிகள் சில

இதுவரை குறிக்கப் பெறாத வேறு சில பணிகளையும் சோழர் காலத்தைச் சேர்ந்த மூலபருடையார் மேற்கொண்டுள்ளனர். முதல் இராசேந்திர சோழனின் 2-வது ஆட்சியாண்டில் திருக்குடமூக்கு மூலபருடையார் விக்கிரமசிங்க பல்லவரையன் என்பவரிடம் 100 காசு பெற்றனர். காவிரி வெள்ளத்தினால் அழிந்த கால்வாய்களைச் செம்மைப்படுத்தினர். வட்டியில் மீதித் தொகையைக் கொண்டு திருநாகேஸ்வரம் கோயில் வழிபாட்டிற்கும், இக்கோயில் திருச் சிற்றம்பலம் உடையார் என்னும் அரங்கில் நடைபெற்ற சிவதர்மத் திற்கும் பயன்படுத்தினர் என்பது கல்வெட்டு.[32] இதே சோழனின் 30-ஆம் ஆண்டுக் கல்வெட்டு திருக்குடமூக்கு மூலபருடையார் திருநாகேஸ்வரம் கோயில் ஊழியர்க்கு அனுப்பிய ஆணை ஒன்றைத் தெரிவிக்கிறது.[33] எனவே ஒரு ஊரைச் சேர்ந்த மூலபருடையார் அருகில் உள்ள ஊரின் பொதுப்பணிகளையும் கோயில் பணிகளை யும் மனமுவந்து மேற்கொண்டுள்ளனர் எனலாம்.

புஞ்சை நல்துணை ஈசுவரம், கல்வெட்டுகளில் திருநனிபள்ளி உடையார் கோயில் என அழைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின்

நிர்வாகப் பொறுப்பைப் பக்கத்து ஊராகிய தலைச்செங்காட்டு மூலபருடையார் மேற்கொண்டிருந்தனர்.[34] முதல் இராசேந்திரன் வடநாட்டுப் படையெடுப்பில் அடைந்த வெற்றிக்கு இறைவன் அருள் பாலித்ததன் நினைவாகத் தலைச்செங்காட்டு மூலபருடையார் புஞ்சை கோயிலில் உள்ள ரிஷபவாகன தேவர் சிலைக்குப்பூசனை, நிவேதனம் உற்சவம் முதலியன நிகழ்த்தும் செலவுகளுக்காகக் கோயில் நிலங்கள் சிலவற்றிற்குத் தாமே வரி செலுத்துவதாக ஒத்துக் கொண்டனர்.[35] மேலும் இதே ஊர் மூலபருடையார் மும்முடிச்சோழன் மண்டபத்தில் கூடித் தாம் கோயிலிலிருந்து பெற்ற 50 காசுகளுக்காக, கோயிலைச் சேர்ந்த 2 வேலி நிலங்களுக்கு வரி செலுத்தவும், பெரிய தளி மகா தேவர் கோயில் வைகாசி விழாச் செலவுகளை ஏற்றுக் கொள்ளவும் ஒத்துக்கொண்டனர்.[36] புஞ்சையைச் சேர்ந்த இவ்விரண்டு கல்வெட்டு களும் முதல் இராசேந்திர சோழன் காலத்தைச் சேர்ந்தவை.

தஞ்சை மாவட்டம் திருவாய்ப்பாடியில் உள்ள கோப்பெருஞ் சிங்கனின் 29-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சேய்ஞலூர் மூலபருடையார் திருவாய்ப்பாடிக் கோயிலைச் சேர்ந்த திருவாபரணத்தை அழித்துக் காணி நிலத்தை விலைகொண்டு திருத்தோப்பும் திருநந்தவனமும் திருநாமத்துக்காணியாகச் செய்து, அந்நிலத்துக்கு உரிய கடமை முதலிய வரிகளை ஊரிலேயே ஏற்றி ஊர்க்கீழ் இறையிலியாகச் செய்து கொடுத்தனர் என்கிறது.[37] எனவே மூலபருடை அமைப் பினர் காவிரி வெள்ளத்தினால் ஏற்பட்ட வெள்ள நிவாரணப் பணி, அரசனின் போர் வெற்றியின் நினைவாக எடுக்கப்பெற்ற விழா, கோயில் திருவிழா, கோயிலுக்குரிய திருத்தோப்பு திருநந்தவனம் அமைப்பு முதலிய பணிகளையும் தம்முடைய மேற்பார்வையில் மேற்கொண்டுள்ளனர் என அறியலாம். சேய்ஞலூர் மூலபருடை யார் கோயிலின் வேறு ஒரு பணிக்காகக் கோயிலுக்குச் சொந்தமான ஆபரணங்களை அழித்து விற்றுள்ளனர் என்னும் செய்தி குறிப்பிடத் தக்கது.

மூலபடைச் சபை கலைப்பு

இடைக்காலப் பாண்டியர் காலம் தொடங்கி பராந்தகசோழன் காலம் முதல் முதல் இராசராசன் காலம் வரை சுசீந்திரம் எம்பெரு மான் ஸ்ரீகாரியத்தைச் செய்து சிறந்தவர்கள் சுசீந்திரம் மூலபருடைச் சபையார். மாறஞ்சடையனுடைய 5-ஆம் ஆண்டில் இதே மூலபருடை அமைப்பினர் கொடையாளர் கோயிலுக்கு வழங்கிய பொன்னைப் பெற்று அமரபுசங்கப் பெருமாளுக்குத் திருமுடியும் திருவாபரணமும் செய்து அபிஷேகமும் செய்வித்து மகிழ்ந்துள்ளனர்.[38] அதுவரை

சுசீந்திரம் கோயில் தேவதான நிலங்களை மேற்பார்வையிட்டு கோயிலுக்கு வரி செலுத்தியும், ஸ்ரீகாரியம் ஆராய்ந்தும் பணிபுரிந்து வந்த மூலபருடைச் சபையார்க்கு முதலாம் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் ஏதோ ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்க வேண்டும். இராச ராசனின் 15-ஆம் ஆட்சியாண்டில் சுசீந்திரம் மகாசபையார் திருவக்கிரசாலையில் கூட்டம் குறைவறைக் கூடியிருக்கும்போது இவ்வூர் மாதேவர்க்கு ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற மூலபருடைச் சபை யார் 'இத்தேவர் தேவதானங்களுக்கு வரி கொடுக்க இயலாது என்றும், ஸ்ரீகாரியம் ஆராயவும் இயலாது என்றும்' கூறியதாகக் கல்வெட்டு கூறுகிறது.[39] மூலபருடைச் சபையினர் கருத்தை ஒட்டி பரடைக் குடிகளும் வரி கொடுக்க இயலாது என்ற இதே கருத் தைத் தெரிவித்துள்ளனர். கோயில் பொறுப்புகளிலிலிருந்து மூலப ருடையார் விலகிக்கொள்ள மகாசபையார் கோயில் பணிகளை கவனிப்பதற்காக வாரியர் இருவரையும் கரணத்தான் ஒருவனையும் நியமித்துள்ளனர். எனவே சுசீந்திரத்தில் மூலபருடைச்சபை கலைக் கப்பட்டது என்பது சிலரது துணிபு.[40] இக் கருத்துக்கு ஏதுவாக சுசீந்திரம் கல்வெட்டுகளில் முதல் இராசராசனின் கல்வெட்டு களுக்குப் பின்னால் மூலபருடையாரைப் பற்றிய செய்திகள் கிடைக் கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் கோயில் பொறுப்பிலிருந்து மட்டும் விலகிக்கொண்ட மூலபருடை அமைப் பினர் முதல் இராசராசனுக்குப் பின்னரும் தனிப்பட்ட அமைப்பாக சுசீந்திரத்தில் இயங்கியிருக்க வேண்டும் என்று கருதினாலும் அது தவறாகாது. கோயில் நிலங்களை உழுது பயிரிட்டு மூலபருடை யாரிடம் உரிய வருவாய்களைக் கொடுத்துவந்த பரடைக்குடிகள் சரிவர நிலவருவாயைச் செலுத்தாமையே மூலபருடையார் இவ்வாறு பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வதற்குக் காரணம் என எண்ணலாம் இவ்வாறு மூலபருடையார் சுசீந்திரம் கோயில் பொறுப்புகளிலிருந்து விலகிக் கொண்டமைக்கு வேறு ஏதேனும் அரசியல் காரணங்கள் இருக்குமா என்பதும் ஆய்வுக்குரியது.

கோயிலுக்கு விளக்கு எரித்தல், தேவதான நிலங்களை மேற் பார்வையிட்டுக் கோயிலுக்கு வரி செலுத்துதல், திருவமுது, திருவிழா நடத்துதல், கோயில் ஆபரணத்தை விற்று திருநந்தவனம், திருத் தோப்பு அமைத்தல், வாரியம் அமைத்து கோயிலில் இசைக்கருவிகள் முதலியன முழங்கச் செய்தல் முதலான கோயில் பணிபுரிந்தும், வெள்ள நிவாரணம் போன்ற பொதுப் பணிகளை மேற்பார்வை யிட்டும், முடிசூட்டு விழாவில் அரசனிடம் அபிஷேக தட்சிணையாக நிலம் பெற்றும் சோழர் காலத்தில் செல்வாக்குடன் திகழ்ந்த மூலப

ருடை என்னும் அமைப்பு வரலாற்றில் குறிப்பிடத்தக்க அமைப்பு என்பதில் ஐயமில்லை. பிராமணர் சமுதாயத்தின் தனிப்பட்ட அமைப்பாக குறிப்பிடத்தக்க ஊர்களில் இருந்து கோயில் பணியைத் தலையாய பணியாகக் கொண்டு சோழர் காலத்தில் சிறந்து விளங்கிய மூலபருடை என்னும் அமைப்பு பிற்காலப் பாண்டியர் காலத்திலும் சிதம்பரம், திருப்பத்தூர் போன்ற ஊர்களில் கோயில் பணிபுரிந்து சிறப்பிடம் பெற்றுள்ளனர்.[41]

அடிக்குறிப்புகள்

1. தென்னிந்திய கோயிற் சாசனங்கள், பாகம் 3, பகுதி 2, பக்கம்: 1480
2. K.A. Nilakana Sastri, The colas p. 489.
3. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு, மக்களும்.
4. Sir Monier Williams A. Sanskrit English Dictionary-p. 602
5. கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள் எண். 224.
6. திரு எண. சீனிவாசன், சரசுவதி மகால் வடமொழி பண்டிதர் கூறிய கருத்து
7. Dr. Y. Subbarayalu, Political Geography of the Chola country-p. 91
8. டாக்டர் மா. இராசமாணிக்கனார் பல்லவர் வரலாறு பக். 229-230
9. கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள் II எண். 205, 204
10. S.I.I. Vol. 13/46, ARE 1931-32 p. 57
11. கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள் எண். 224,205,212
12. S.I.I. Vols. 13/46, 4/537, 17/933, 13/27, 8/600, ARE 85/1896, 222/1925.
13. S.I.I. Vol. 13/No. 46, 44, 19/6. 96
14. S.I.I. Vol. 19/6
15. கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள் II எண் 178. 179, 204
16. S.I.I. Vol. 13/313
17. S.I.I. Vol. 8/600
18. S.I.I. Vol 8/607
19. S.I.I. Vol 8/609
20. S.I.I. Vol 1/611
21. S.I.I. Vol S.I.I. Vol 8/615, 620
22. S.I.I. Vol 13/4
23. S.I.I. vol 19/44, 218
24. S.I.I. vol 13/27
25. ARE 161/1908
26. Travancore Archaeological Series Vol:II, p.7
27. 'புயலென்னும் வாரி' என்னும் திருக்குறள் தொடரில் உள்ள வாரி என்பதற்குச் செல்வம், வருவாய் எனப் பொருள் கொண்டு, இவ் 'வாரி' என்னும் தமிழ்ச் சொல்லை வேர்ச் சொல்லாகக் கொண்டு வாரியம் என்னும் தமிழ்ச் சொல் தோன்றியது எனலாம்.
28. S.I.I vol 13/3 எஸ், ஆர் பாலசுப்பரமணியன், p. 90
29. டாக்டர் மா. இராசமாணிக்கனார், தமிழக ஆட்சி
30. ARE 1931-32 p.57, para 19
31. S.I.I. vol 23/220
32. ARE 1912/24

33. ARE 83/1897: S.I.I. vol 6-33
34. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்,பக் 331
35. ARE 182/1925
36. ARE 187-1925
37. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், கோப்பெருஞ்சிங்கன் பக். 150.
38. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் II எண். 224
39. Travancore Archaeological Series vol. II p. 7, ARE 85-1896
40. திரு. கு. தாமோதரன், தமிழக வரலாற்று அருவியில் சில மணிகள் (1976) பக் 71 .
41. ARE 228-1913, ARE 101-1908

குந்தவைப் பிராட்டியின் சமயப்பணி

கு. தாமோதரன், எம். ஏ.,
பதிவு அலுவலர், சென்னை

பொன் மாளிகைத் துஞ்சிய இரண்டாம் பராந்தகச் சோழனாகிய சுந்தரசோழனுக்கும், வானவன் மாதேவிக்கும் குந்தவை, ஆதித்த கரிகாலன், அருள்மொழியாகிய இராசராசன் ஆகிய மூன்று குழந்தைகள் பிறந்தனர். இந்த மூவரும் சோழர் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவார்கள். இராசராசனுடன் பிறந்த மூத்த சகோதரியே குந்தவை. இவரைக் கல்வெட்டுக்கள் ஆழ்வார் பராந்தகன் குந்தவை[1] என்றும், அக்கன்[2] (அக்காள்) என்றும் குறிக்கின்றன. இராசராசனுடைய மகள் பெயரும் குந்தவை. இவரை கல்வெட்டு "இராசராசன் குந்தவை ஆழ்வார்[3] என்று குறிக்கிறது. இராசராசன் தன்னுடைய தமக்கையிடத்தில் அளவற்ற அன்பும் பாசமும், மதிப்பும் வைத்திருந்த காரணத்தால் தன்னுடைய மகளுக்கும் 'குந்தவை' என்று பெயரிட்டு மகிழ்ந்தான். இவர்கள் இருவருக்கும் வேறுபாடு உணர்த்துவதற்காக இராசராசனின் தமக்கை 'பெரிய குந்தவை' என்று குறிக்கப்படுகிறார்.

இராசராசன் தான் எடுத்த 'பெருவுடையார் கோயிலுக்குப் பல்வேறு கொடைகளை அளித்துள்ளான். இராசராசனைப்போல் தமக்கை குந்தவைப்பிராட்டியும், பட்டத்து அரசிகளும், அதிகாரிகளும், அதிகாரிச்சிகளும், பொதுமக்களும் பெருவுடையாருக்கு கொடுத்துள்ள பல்வேறு வகையான கொடைகளைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு குறிக்கிறது.

இராசராசன் சிவபாத சேகரனாகவும், திருமுறைகண்ட சோழனாகவும் சிறந்து விளங்கினான். சிவபெருமானிடத்தில் அளவற்ற பக்தியுடையவன் என்பதை வெளிப்படுத்துகின்ற வகையில் இவன் எடுப்பித்துள்ள பெருவுடையார் கோயில் விளங்குகிறது. இவன் சிவபக்தியுடையவனாய்த் திகழ்ந்தமைக்குக் காரணம், சிவபெருமானிடத்தில் பேரன்பு பூண்டு பல தொண்டுகள் ஆற்றிய செம்பியன் மாதேவியும், குந்தவைப் பிராட்டியும் இவனை இளமையில் வளர்த்து நல்வழிப் படுத்தினமையேயாம். பெருவுடையார்க்குப் பல்வேறுகொடைகளை அளித்தது மட்டுமல்லாமல், வழிபாட்டிற்கும்,

வீதி உலாவாக எடுத்துச் செல்வதற்கும் பல செப்புத் திருமேனி களையும் செய்தளித்துள்ளான்.

சோழர்கள் ஆட்சி காலத்தில், சமுதாயத்தில் பெண்களின் நிலை நல்ல ஏற்றம் பெற்று இருந்தது என்பதை காணமுடிகிறது. இராச ராசனைப் போன்று குந்தவைப் பிராட்டியாரும் அரசியலில் சிறந்த இடத்தைப் பெற்று விளங்கியதோடு சைவ சமயத்திற்கும், பிற சமயங்களுக்கும் அரும்பணி ஆற்றிய பெண்மணியாவார். இவர் தனது பாட்டி செம்பியன் மாதேவியைப்போன்று தமிழகத்து கட்ட டக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் அரிய தொண்டு புரிந்துள்ளார். குந்தவைபிராட்டியார் கீழைச் சாளுக்கிய அரச குடும்பத்தைச் சார்ந்த வல்லவரையவந்தியத்தேவரை மணந்து கொண்டாலும் சோழ நாட்டையும் தனது தாய் வீட்டையும், பேணிக்காக்க மறந்துவிட வில்லை. வல்லவரைய வந்தியத்தேவர், இராசராசனுடைய சாமந் தர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்கியிருக்கிறார் என்பது குறிப் பிடத்தக்கது.

குந்தவையின் கலைத்தொண்டின் மூலம், இவள் நமக்கு ஒரு கலை அரசியாகவே காட்சி அளிக்கிறாள். இராசராசனைப் போன்று, அவனுக்கு அடுத்த நிலையில் குந்தவைப் பிராட்டியார் தஞ்சை பெருவுடையாருக்குப் பல்வகைக் கொடைகளை அளித்துள்ளார். வழி பாட்டிற்காக ஆடவல்லார் நம்பிராட்டியார் உமாபரமேஸ்வரி, தக்கணமேருவிடங்கர் நம்பிராட்டியார் உமாபரமேச்சுவரி, தஞ்சை விடங்கர் நம்பிராட்டியார் உ.மா பரமேச்சுவரி ஆகிய மூன்று செப்புத் திருமேனிகளையும் செய்தளித்துள்ளார். தன்னுடைய தந்தை சுந்தரசோழனுக்கும், தாய் வானவன் மாதேவிக்கும் திருமேனி கள் செய்தளித்துள்ளார்.[6] அவைகளுக்கு கொடையும் கொடுத் துள்ளார். பெருவுடையார் கோயில் விமானத்தின் தெற்குச் சுவற்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு 'ஆழ்வார் பிராந்தகன் குந்தவை யார்[7] உமாபரமேஸ்வரிகளுக்கு அளித்துள்ள கொடையினைக் குறிக்கிறது.

குந்தவைப் பிராட்டியார் தான் எடுப்பித்த செப்புத் திருமேனி களுக்குப் பொன்னின் திருவாபரணங்களையும். சின்னங்களையும் அளித்துள்ளார். இவ்வாபரணங்கள் "ஆடவல்லான்" என்னும் கல்லால் நிறை செய்யப்பட்டன.[8]

பொன்னின் தளிகை, பொன்னின் மண்டை, பொன் குடம், பொன்னின் வட்டில் ஆகிய பொருள்களை ஆடவல்லார் உமாபர மேஸ்வரிக்குக் குந்தவைப் பிராட்டியார் அளித்துள்ளார்.

ஆடவல்லார் தக்கணமேருவிடங்கர் நம்பிராட்டியார் உமாபர மேச்வரிக்கு, பொன் ஒட்டு வட்டில், தவுக்கை ஒன்று, பொன்னால் செய்யப்பெற்ற அன்னம், வெண்தாமரை கையொன்று, ஈச்சொப் பிக்கை, திருமகுடம், திருபொற்பூ, வைரச் செயல், தாலி மணிவடம், தாலி மணி, படுகன் கள்ளிப்பூ, கொக்குவாய், சவக்கம் உட்பட பொன் பதினொரு கழஞ்சு மஞ்சாடி, வைர காயலம் ஒன்று, திருக்கை பொட்டு, திருக்கை கடகம், திருக்கை காரை. திருவடிக் காரை, திருகால்மோதிரம், கலசப் பானை, கலசம், கரண்டிகைச் செப்பு, வெண்தாமரைக் கை, ஈச்சொப்பிக்கை, திருபொற்பூ ஆகியவை அளிக்கப்பெற்றுள்ளன.

தக்கணமேருவிடங்கருக்கு பழைய முத்துக்கள், பவளங்கள் நீல நிற மணிகள் ஆகியவை கோர்க்கப்பட்ட மணி ஒன்று, படுகன் ஒன்று, கொக்குவாய் ஒன்று-இதன் எடை மொத்தம் நான்கு கழஞ்சு எட்டு மஞ்சாடி (இதன் மதிப்பு 11 காசு) அளிக்கப்பெற்றுள்ளது.

உமை அன்னையின் திருமேனிகள் இருக்கும் திரு அரங்கத்தை அமைப்பதற்கும், அலங்கரிப்பதற்கும், திருவிழாவிற்கும் சேர்த்து மூவாயிரத்து ஐந்நூறு கழஞ்சு பொன் கொடுத்தது குறிக்கப்படு கிறது. இக்கொடை குடிஞைக்கல்லால் நிறுக்கப்பட்டுள்ளது. ஆடவல்லான் என்ற பெயரில் மற்றொரு எடைக் கல் குறிக்கப்படு கிறது. ஆடவல்லான் என்பது இங்கு எழுந்தருளியுள்ள இறை வனைக் குறிப்பதாகும். கோயிலுக்கு அளிக்கப்பெற்றுள்ள ஆபரணங் கள் அனைத்தும் 'காசுக்கல்' என்ற எடையால் நிறுக்கப்பட்டுள்ளது. அக்கல்லுக்குத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் உலா வரும் இறை வனின் பெயராகிய 'தக்ஷிணமேருவிடங்கர்' என்னும் பெயர் சூட்டப் பெற்றது. விழாக்களின்போது தெய்வங்கள் திரு உலா வருவதற்கும் திருவமுது, திருப்பள்ளித் தாமத்திற்கும், விளக்கெரிப்பதற்கும் எண்ணெய் மற்ற செலவுகளுக்காகவும் ஆகும் செலவினை ஈடுகட்டு வதற்காகக் குந்தவைப் பிராட்டியார் பல்வேறு ஊர்ச் சபைகளிடம் நிலையான பண முதலீட்டைச் செய்துள்ளார். இந்தப் பணத்திற்கு உரிய வட்டி நெல்லாக வசூலிக்கப்பெற்றது.

ஒரு காசுக்கு மூன்று குறுணி நெல், வட்டியாக ஆண்டு ஒன்றுக்கு பெருவுடையார் கோயில் பண்டாரத்திற்கு அளக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்துள்ளார்கள். இந்த நெல் 'ஆடவல்லான்' என்ற மரக்காலால் அளக்கப் பெற்றது.

சனநாத சதுர்வேதி மங்கலம் சபையாரிடத்தில் 200 காசுகள் செலுத்தப்பெற்றது. இதற்கு வட்டியாக ஆண்டு ஒன்றுக்கு 50 கலம் நெல் அளக்கப் பெற்றுள்ளது.

இரும்புதல் என்கிற மனுகுல சூளாமணிச் சதுர்வேதிமங்கலச் சபையாரிடம் 100 காசு ஒப்படைக்கப்பெற்று இதற்கு 25 கலம் நெல் ஆண்டு ஒன்றுக்கு வட்டியாக வசூலிக்கப் பெற்றுள்ளது.

இராசாச்சிரைய சதுர்வேதிமங்கலச் சபையாரிடம் நூறு காசுகள் நிலை முன்பணமாக வழங்கப்பெற்று, இதற்கு வட்டியாக ஆண்டு ஒன்றுக்கு 125 கலம் நெல் அளக்கப் பெற்றது.

பெருமிலட்டூர் கிராமச் சபையாரிடம் நிலை முன்பணமாக 200 காசு கொடுக்கப்பெற்று இதற்கு வட்டியாக 50 கலம் நெல் ஆண்டு ஒன்றுக்கு அவர்களால் அளிக்கப்பெற்றது.

பொன் மாளிகைத் துஞ்சினத் தேவர் திருமேனியின் வழிபாட்டிற்காக குந்தவைப் பிராட்டியார் பல்வேறு கொடைகளை அளித்துள்ளார். ஒரு ஆண்டிற்கு ஒரு காசுக்கு மூன்று குறுணி நெல் வட்டியாகக் கோயில் பண்டாரத்திற்கு அளக்க வேண்டும் என்ற நிபந்தனையில், 'கண்டராதித்த சதுர்வேதி மங்கலச் சபையாரிடம் 520 காசுகள் வழங்கப் பெற்று, இதற்கு வட்டியாக 130 கலம் நெல் அளக்கப்பெற்றுள்ளது. இதுதவிர தினப்படி பூசை செலவுகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஐம்பத்தொரு காசுகள் ஒதுக்கப்பெற்றுள்ளது. திருவாடை, திருத்தோரணம் புனித ஆடைகள், சீலைகள், மாலைகள் வாங்குவதற்கும் இந்தக் காசு பயன்படுத்தப்பட்டது. இந்தத் தொகையின், பண முதலீட்டில் பெறப்பெற்ற வட்டி பண்டாரத்தில் பணமாக சேர்க்கப்பட்டது 1/8 அக்கம் (1/12 காசு) வட்டியாக வசூலிக்கப்பெற்றது.

இந்த வகையில் வீரநாராயணன் சதுர்வேதி மங்கலச் சபையாரிடம் நூற்று தொண்ணூற்றாறு காசுகள் முதலீடாகக் கொடுக்கப் பெற்று, இருபத்து நாலரை காசுகள் வட்டியாக வசூலிக்கப் பெற்றது.

பராந்தகச்சதுர்வேதி மங்கலத்தாரிடம் நூற்று பன்னிரண்டு காசுகள் முதலீடாக அளிக்கப்பெற்று பதினான்கு காசுகள் வட்டியாக வசூலிக்கப்பெற்றது.

சூலமங்கலம் சபையாரிடம் 100 காசுகள் அளிக்கப்பெற்றது. இதற்கு வட்டியாக $12\frac{1}{2}$ காசுகள் வசூலிக்கப்பெற்றன.

ஆகமொத்தம் 408 காசுகள் முதலீட்டிற்கு 51 காசுகள் வட்டியாக வசூலிக்கப்பெற்றது.

பத்து நுந்தாவிளக்கு எரிப்பதற்கு, 32 காசுகள் பராந்தகன் அச்சன் அடிகள் என்பவரிடம் ஒப்படைக்கப்பெற்றது. இந்தக் காசுக்கு 3 செம்மறி ஆடுகள் ஒரு காசு வீதம் 96 ஆடுகள் வாங்கப் பெற்று, அதன்மூலம் கிடைக்கப்பெற்ற பாலைக்கொண்டு நெய் எடுத்து, விளக்கு எரிப்பதற்கு ஒரு நாளைக்கு உழக்கு நெய் வீதம் அளிக்கப்பெற்றது.

தன்னுடைய தந்தை 'பொன் மாளிகைத்துஞ்சின தேவர்' திருமேனிக்கு கொடைக் கொடுத்ததுப்போன்று குந்தவைப் பிராட்டியார் தம்மையாக எழுந்தருளிவித்த திருமேனியின் வழிபாட்டிற்கும் கொடை கொடுத்துள்ளார். தன்னுடைய தாயார் வானவன் மாதேவி திருமேனிக்கு 20 பொன்னாலான காதணிகள் அளித்துள்ளாள். அவற்றின் எடை 6 காசு 6 கழஞ்சு ஒரு குன்றிமணி.

குந்தவை நல்லூர் கிராமத்தில் ஐநூற்று இருபது காசுகள் நிலை முன்பணமாக வைத்து அதிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு நூற்று முப்பது கலம் நெல் வட்டியாக கிடைத்துள்ளது. இந்த வருமானத்தைக் கொண்டு வழிபாட்டிற்குத் தேவையான துணி, அரிசி, வழிபாட்டுக்கு வேண்டிய மாலைகள் வாங்குவதற்கு இந்தக் காசு பயன்படுத்தப் பெற்றன.

பராந்தக சதுர்வேதி மங்கலச் சபையாரிடம், குந்தவைப் பிராட்டியார் நிலை முன்பணமாக 488 காசுகள் கொடுத்துள்ளார். இந்தக் காசு கருவூலத்தில் வைக்கப்பெற்று இருந்தது.

குந்தவைப் பிராட்டியார், கலியன் பரதன் என்பவனிடத்தில், ஒரு காசுக்கு மூன்று ஆடுகள் வீதம், 96 ஆடுகள் வாங்குவதற்கு 32 காசுகள் நிலை முன்பணம் அளித்துள்ளார். இந்த ஆடுகளைக் கொண்டு தன்னுடைய தாய் திருமேனிக்கு 10 நுந்தா விளக்கு எரிப்பதற்கு, தினமும் உழக்கு நெய் அளிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இராசேந்திரனின் 3-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு தக்கண மேருவிடங்கர், தஞ்சை விடங்கர்-உமாபரமேச்வரிக்கு 6200 காசுகள் மதிப்புள்ள ஆபரணங்கள் கொடுக்கப்பெற்றதைக் குறிப்பிடுகிறது.

முதலாம் இராசேந்திரனின் 13-ஆம் ஆட்சியாண்டில் (தக்கண மேருவிடங்கர்) உமாபரமேச்வரிக்கு முடி, காதணிகள், கழுத்தணிகள்

பூவளையம், முழங்கை அணி, சிரச்சக்கரம், பொடுகள், கச்சுகள் ஆகிய வற்றுக்குச் சேர்த்து 11,280 காசுகள் கொடுக்கப்பெற்றுள்ளது.

குந்தவைப் பிராட்டியார், கோயில்களுக்குப் பல்வகைக் கொடை களைக் கொடுத்துள்ளதைக் கண்டோம். இனி அவர்கள் எடுத்துள்ள கோயில்களைப் பற்றியும், பொதுப் பணிகளைப் பற்றியும் காண் போம்:

தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் குந்தவைப் பிராட்டியார் தாதாபுரம் என்ற ஊரில் மணிக்கண்டேஸ் வரம் கோயில், குந்தவை விண்ணகரம், குந்தவை சீனாலயம் ஆகிய மூன்று கோயில்களை (கரிவரதப் பெருமாள்) எடுத்துள்ளதை மணிக்கண்டேஸ்வரம் கல்வெட்டு குறிக்கிறது.[8] இராசராசனின் 2-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு இரவிகுல மாணிக்கேஸ்வரம் என்று குறிக்கிறது). கல்வெட்டுகளில் இவ்வூர் 'இராசராசபுரம்' என்று குறிக்கப்படுகிறது.

பனையூரைச் சார்ந்த நிர்வாக அதிகாரி மணிக்கண்டேஸ்வரம் கோயிலில் அமைந்திருந்த பண்டாரத்தை ஆய்வு செய்து, அதில் இருந்த பல்வகை ஆபரணங்களுக்கு விவரப்பட்டியல் தயார் செய்துள்ளார் இதில் கோயிலுக்கு அளிக்கப் பெற்றுள்ள குடங்கள், பொன், வெள்ளி. முத்துக்கள் ஆகியவைகளினால் செய்யப்பெற்ற ஆபரணங்கள் இடம் பெற்றுள்ளன என்ற விபரம் அக்கோயில் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க தாகும்.

இராசராசனின் 19-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த சிவன் கோயில் கல்வெட்டில் குந்தவைப் பிராட்டியாரின் பணியாள் ஒரு நுந்தா விளக்கு எரிப்பதற்கு ஆடுகள் கொடை கொடுத்தது குறிக்கப் படுகிறது.

இராசராசனின் 25-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில்[10] பராந்த கன் குந்தவைப் பிராட்டியார் 10 விளக்கு எரிப்பதற்கு கொடை கொடுத்தது குறிக்கப்படுகிறது. முதலாம் இராசேந்திரனின் 4-வது ஆட்சியாண்டு கல்வெட்டும் ஆடுகள் கொடை கொடுத்ததைத் குறிக் கிறது.[11]

இராசராசபுரம், இரவிகுலமாணிக்கேச்வரம் கோயில் இராச ராசனின் 19-ஆம் ஆட்சியாண்டிற்கு முன்னர் கட்டப்பெற்று

இருக்கவேண்டும். இதே காலத்தில் தஞ்சை இராசராசேச்வரம் கோயில் எடுப்பிக்கப்பெற்றது என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

கரிவரதப் பெருமாள் கோயில்

இக்கோயில் மணிக்கண்டேச்சுரம் சிவன் கோயிலுக்கு தென் மேற்கே அமைந்துள்ளது. இது கல்வெட்டுகளில் 'குந்தவை விண்ணகர ஆழ்வார் கோயில், என்று குறிக்கப்படுகிறது. குந்தவை விண்ணகரம், குந்தவை பிராட்டியாரால், இராசராசனின் இருபதாவது ஆட்சியாண்டிற்கு முன்னரே எடுப்பிக்கப்பெற்றிருக்க வேண்டும். இதே காலகட்டத்தில் மணிக்கண்டேச்சுவரம் சிவன் கோயில் கட்டப்பெற்றிருக்கும் என்பது தெளிவு.

இக்கோயிலில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன், குலோத்துங்கன் ஆகிய மன்னர்கள் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றுள்ளன.

இராசராசனின் 21-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டு[12] நல்லூர் நாட்டைச் சார்ந்த, குந்தவைப் பிராட்டியார், குந்தவை விண்ணகரம், ரவிகுலமாணிக்கேஸ்வரம் குந்தவை சீனாலயம் ஆகிய கோயில்களுக்குத் தங்கக் குடங்களும், தங்கம், வெள்ளியால் செய்யப் பெற்ற ஆபரணங்களும், அணிகலன்களும் கொடுத்தது குறிக்கப் படுகிறது. பராக்கிரம சோழ மூவேந்த வேளார் என்ற அதிகாரி யின் பெயரும் குறிக்கப்படுகிறது.

இராசராசனின் 23-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில்[13] ஒரு பெண் பணியாள் ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்கு 96 ஆடுகள் கொடை கொடுத்தது குறிக்கப்படுகிறது. அதே காலத்தைச் சார்ந்த கல்வெட்டு ரவிகுலமாணிக்கேசுவரம், குந்தவை விண்ணகரம் ஆகிய இரண்டு கோயில்களுக்கு கோயில் நாட்டிய பெண்கள் இறைவனுடன் வீதி உலாவாக வேட்டை திருவிழாவிற்கு வருவதற்கு அமர்த்தப் பட்டுள்ளனர் என்பதுகுறிக்கப்படுகிறது. இரவிகுலமாணிக்கேச்சுவரம் என்ற பெயர் இராசராசனின் பட்டப்பெயரை நினைவூட்டுகிறது.

இராசராசனின் 25-வது ஆட்சியாண்டு கல்வெட்டு பராந்தகன் குந்தவைப் பிராட்டியார், குந்தவை விண்ணகர் ஆழ்வார் கோயிலுக்கு ஒரு விளக்கு எரிப்பதற்கு ஆடுகள் கொடை கொடுத்ததைக் குறிக் கிறது.சேனாபதி மும்முடி சோழ பிரம்ம மாராயன் என்பவன் இந்த கோயில் நிர்வாகத்தைக் கவனித்து வந்தான் என்பது தெரிகிறது. இவனே முதலாம் இராசராசனுக்கு சேனாதிபதியாகவும், பெருந்தன

மாகவும் விளங்கியவன். இவன் சோழ மண்டலத்தின் ஒரு பிரிவான வேணாட்டில் அமைந்திருந்த, கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து அமண் குடியைச் சேர்ந்தவன். இவனே தஞ்சை பெருவுடையார் கோயில் திருச்சுற்று மாளிகையும் கட்டியுள்ளான். இவன் அரசனுக்கும், அரசாங்க நம்பிக்கைக்கும் பாத்திரமான பணியாளாக விளங்கினான். இவனுடைய முக்கியத்துவம் கருதியே இவனை இராசராசன் தன்னுடைய தமக்கையின் சமயப் பணிகளையும் கவனித்து வரும்படி செய்துள்ளான் என்பது போற்றுதற்குரிய ஒன்றாகும்.

முதலாம் இராசேந்திரனின் நான்காம் ஆட்சியாண்டு கல்வெட்டில் குந்தவை விண்ணகர ஆழ்வார் கோயிலுக்கு, குந்தவைப் பிராட்டியார் பத்து விளக்கு எரிப்பதற்குக் கொடை கொடுத்தது குறிக்கப்படுகிறது.

முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டில், கோயிலில் ஒரு விளக்கு எரிப்பதற்கு 5 பசுக்கள் கொடுத்தது குறிக்கப்படுகிறது. மற்றொரு கல்வெட்டு பெண் ஒருத்தி சில பாத்திரங்களைக் கொடையாகக் கொடுத்ததைக் குறிக்கிறது.

குந்தவை சினாலயம்

இராசராசனைப் போன்று, குந்தவைப் பிராட்டியாரும் எம் மதமும் சம்மதம் என்ற கொள்கையினை ஏற்று சைவ, வைணவ, சமண மதத்தை ஒன்றாகவே வளர்த்துள்ளார். இவர் எடுத்துள்ள மூன்று கோயில்களும் ஒரே காலத்தில் எடுக்கப் பெற்றுள்ள தோடுமட்டுமல்லாமல், ஒரே கண்ணோட்டத்தில் போற்றிப் பாதுகாக்கப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கும் பல்வேறு கொடைகள் அளிக்கப்பெற்றுள்ளதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. தென்னிந்திய வரலாற்றில் குறிப்பாக சோழர்கள் ஆட்சிக் காலத்தில் 'மத சகிப்புத்தன்மை' ஆட்சியாளர்களிடத்தில் இருந்திருக்கிறது என்பது போற்றுதற்குரிய ஒன்றாகும்.

கட்டட அமைப்பு மற்ற கோயில்களைப் போன்றே அமைந்து உள்ளது. சிவன், திருமால் கோயில்களில் நந்தி, கருடன் ஆகியவை விமானத்தை அலங்கரிக்கின்றன. சமணக் கோயிலில் சிம்ம வேலைப் பாடுகள் அழகு செய்கின்றன.

திருமலை-குந்தவை சினாலயம்

சமணர்களின் உறைவிடமான இந்த ஊர் சங்ககாலத்தில் வஞ்சியைச் சார்ந்த, எழினி என்று அழைக்கப்படுகின்ற ஒரு யவனிகர் ஆட்சியின் கீழ் இருந்தது என்பதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன

இவன் இயக்கன், இயக்கியர் உருவங்களை எடுத்துள்ளான். இவன் காலத்தில் இந்த மலை குணவிரை திருமலை என்று வழங்கியிருக்கிறது என்பது தெரிகிறது. தடுத்தலையைச் சார்ந்த இரண்டு நபர்கள் ஒரு பக்தனின் உணவுக்காகப்பொன் கொடுத்ததை முதலாம் பராந்தகனின் மூன்றாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறிக்கிறது. கி.பி. 959-இல் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டிணனின் பணியார் ஒருவர், திருமலையில் உள்ள 'இயக்கனுக்கு' ஒரு விளக்கு கொடை கொடுத்தது குறிக்கப்படுகிறது.

இராசராசனின் 21-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு[15] 'குணவீர மாமுனிவன்' என்பவர் உள்ளூரில் அமைந்திருந்த நீர்த்தேக்கத்திற்கு ஒரு வாய்க்கால் கட்டி உள்ளதைக் குறிக்கிறது. இந்த வாய்க்காலுக்குச் 'சமண ஆசிரியர்' கணிசேகர மறு பொற்சூரியன் என்பவரின் பெயரில் இடப்பெற்றது.

முதலாம் இராசேந்திரனின், 12-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த இரண்டு கல்வெட்டுகளில் ஒன்று இந்த புனித மலையின் மீதுள்ள கோயிலுக்குக் கொடை கொடுத்ததைக் குறிக்கிறது. இது குந்தவை சினாலயம் என்று குறிக்கப்படுகிறது. இந்த சமணக் கோயில் குந்தவை பிராட்டியாரால் அல்லது குந்தவைக்காக கட்டப்பெற்றதாகும்.

செயங்கொண்ட சோழ மண்டலத்தில், பங்கள நாட்டில் உள்ள ஒரு பிரிவான முகை நாட்டில் அமைந்திருந்த வைகாவூர் பள்ளிச் சந்தத்தில் உள்ள திரு குந்தவை சீனாயத்திற்கு ஒரு திரு நந்தா விளக்கினை கரைவரி மல்லியூர் என்ற பெரும் பாணப்பாடியைச் சார்ந்த, நன்நப்பையன் மனைவியான சாமுண்டப்பை என்பவள் கொடையாக கொடுத்துள்ளாள் குறிக்கப்படுகிறது. ஒரு விளக்கு எரிக்க 20 காசும், திருவமுதுக்கு 10 காசும் அளிக்கப்பெற்றுள்ளது குறிக்கப்படுகிறது.[8]

குந்தவையின் பிற பணிகள்

முதலாம் இராசேந்திரனின் ஆட்சிக் காலத்தில் குந்தவைப் பிராட்டியார் தன்னுடைய தந்தையின் பெயரில் 'சுந்தரசோழ விண்ணகர் ஆதுலர் சாலை' என்று ஒரு மருத்துவ மனையை எடுத்துள்ளதைக் கல்வெட்டு குறிக்கிறது.[9] இந்த ஆதுலர் சாலை தஞ்சையில் உள்ள சுந்தரசோழ விண்ணகர் என்ற பெருமாள் கோயிலில் அமைந்திருந்தது. இக்கோயில் இராசராசன் அல்லது

குந்தவைப் பிராட்டியாரால் எடுக்கப் பெற்றிருக்க வேண்டும். இக் கோயில் தற்பொழுது தஞ்சையில் எங்குள்ளது என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. மருத்துவமனைச் செலவுகளுக்காகத் தஞ்சை மாவட்டம், பரிபநாசத்திற்கு அருகில் உள்ள பண்டாரவாடை என்ற ஊரில் நிலம் கொடுத்து, மருத்துவ மனை கட்டுவதற்கு இடமும் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

நீர்ப்பாசனத்திற்காகக் குந்தவைப் பிராட்டியார் தன்னுடைய பெயரில் குந்தவைப் பேரேரி என்ற ஏரியினையும் தன்னுடைய தந்தையின் பெயரில், சுந்தரசோழப்பேரேரி என்ற ஏரியினையும் வட ஆற்காடு மாவட்டம், செய்யாற்றுக்கு அருகில் உள்ள பிரமதேசம் என்ற ஊரில் எடுத்துள்ளதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.[19]

அடிக்குறிப்புகள்

1 S.I.I. II No. 6.
2 தஞ்சைப் பெருவுடையார் கோயில் கவ்வெட்டுகள் முதற்பகுதி பக்கம் 2.
3 119 of 1888
4 S.I.I. II, 2.
5 S.I.I. II No. 6.
6 lo 14—17, 20, 18, 19, 8, 14, 8, & 14 of 1919.
7 S.I.I. I No. 66.
8 S.I.I. I No. 67.
9 248, 249 of 1923.
10 264 of 1915.

தேவதானம்

மா. செந்தில் செல்வக்குமரன், எம்.
மாவட்டத் தொல்பொருள் அலுவலர், திருநெல்வேலி

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
ACCESSION.

கோயில்களின் திருப்பணிக்காகவும், நாடோறும் நடைபெறும் வழிபாட்டிற்காகவும், அரசர்களாலும், அதிகாரிகளாலும், மக்களாலும், நிலங்களும், ஊர்களும், பொன்னும் தானமாக வழங்கப்பட்டன. இவற்றுள் நிலத்தானம், வழங்கப்பெறும் கோயில்களுக்கு ஏற்ப, தேவதானம் என்றும், திருவிடையாட்டம் என்றும், பள்ளிச்சந்தம் என்றும் அழைக்கப்பட்டன. தேவதானம் என்ற சொல் பெரும்பான்மையான இடங்களில் சிவன் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடையைச் சுட்டி நிற்கிறது. சில இடங்களில் விட்ணு கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலத்தானத்தையும் தேவதானம் என்ற சொல்லாலேயே கல்வெட்டுக்கள் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. மாமல்லபுரத்திலுள்ள வராகப்பெருமானுக்கு அளிக்கப்பட்ட[1] நிலத்தானம், தேவதானம் என்றே குறிப்பிடப்பட்டிருப்பதை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

சிவன் கோயில் உண்ணாழியில் வீற்றிருக்கும் மூல இறைவனின் பெயரிலேயே தேவதானம் வழங்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், சிவன் கோயிலின் வளாகத்தில் எழுந்தருளியிருக்கிற, தென்முகக் கடவுள், சேத்திரபாலர், பிள்ளையார், அம்மன் ஆகிய தெய்வங்களுக்கும் தேவதானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இறைவனுக்கு வழங்கப்பட்ட தானத்தைக் குறிக்க, அம்பலப்புறம், அவலமுதுப்புறம், அர்ச்சனா போகம், சீபலிபோகம் அல்லது சீபலிபட்டி, அர்த்தசாமப்புறம், திருவிழாப்புறம், நிமந்தப்புறம், பூஜாவிருத்தி, மெழுக்குப்புறம் என்று பல்வேறு பெயர்கள் உள்ளன. இருப்பினும், தேவதானம் இவற்றிலிருந்து மாறுபட்ட பொருளைத் தரும் சொல்லாக விளங்குகிறது. மேலே குறிப்பிட்ட சொற்கள் குறிப்பிட்ட ஒரு செயலுக்காக வழங்கப்பட்ட தானத்தைக் குறிக்கும். சொல்லிலேயே அது எச்செயல் நடைபெறுவதற்காக வழங்கப்பட்ட தானம் என வெளிப்படையாகத் தெரியும். 'சான்றாக அபிஷேகப்புறம்' என்பது இறைவனுக்கு அபிஷேகம் செய்வதற்காக விடப்பட்ட நிலத்தை வெளிப்படையாகக் குறிக்கத் தன்பெயரிலேயே செயலையும் தாங்கி நிற்பதைக் காணலாம். ஆனால் தேவதானம் என்ற சொல்

கோயிலில் ஒன்றுக்கும் மேற்பட்ட செயல்கள் நடைபெறுவதற்காகவும், கோயில் திருப்பணிக்காகவும், வழங்கப்பட்ட நிலத்தைக் குறிக்கக் கல்வெட்டுக்களில் கையாளப்பட்டிருக்கிறது.

திருநாமத்துக் காணி என்பதும் கோயிலைச் சேர்ந்த நிலமாகும். திருநாமத்துக் காணியும், தேவதானமும் ஒரே பொருளைக் குறிக்கின்ற இருவேறு சொற்களோ என்று நம்மை ஐயுறச் செய்யும். திருநாமத்துக் காணி என்பது பலரிடமிருந்தோ, தனிப்பட்ட ஒருவரிடமிருந்தோ கோயில் நிர்வாகத்தால்[2] விலை கொடுத்துப் பெற்ற நிலமாகும். ஆனால் தேவதானம் என்பது இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, கோவிலுக்காக எவ்வித விலையும் பெறாமல் மனமுவந்து வழங்கப்பெறும் நிலங்களாகும்.

தேவதான நிலம்

அரசர்களோ, உயர் அதிகாரிகளோ, ஊர்ச்சபையோ தேவதானம் வழங்க நினைத்தால் ஊர்ப் பொதுவாக உள்ள நிலங்களைத் தானமாக வழங்கிட முடியும். சிலர் அரசர்களிடமிருந்து நிலம் வேண்டிப் பெற்றுத் தான் விரும்பிய கோயிலுக்கு தேவதானம் வழங்குவதும் உண்டு தனிப்பட்டவர்கள், கோயிலுக்குத் தானம் வழங்க விரும்பின் தனக்குச் சொந்தமாக நிலங்கள் இல்லாத நிலையில் பிறரிடமிருந்து விலை கொடுத்துப் பெற்று அந்நிலங்களைத் தானமாக வழங்குவது உண்டு. அவ்வாறு வழங்கும்பொழுது தனிப்பட்டவர்களிடம் நிலம் கிடைக்காதபோது கோயிலுக்குச் சொந்தமான பயிரிடமுடியாத நிலையில் உள்ள நிலத்தைப் பெற்று பயிரிடும் நிலையில் திருத்தி வேறு ஒரு கோயிலுக்குத் தங்களுடைய தேவதானமாக வழங்குவர். அவ்வாறு வழங்கும்பொழுது தாம் விரும்பும் வழிபாட்டை அந்நிலம் கொண்டு செய்யச் சொல்வர்.

இதுபோன்ற ஒரு செய்தியினைத் திருப்பாத்துறையில் காணப்படும் கல்வெட்டொன்று நமக்குத் தருகிறது. திருப்பாத்துறை பெருமானடிகளுக்குக் காசு கொடுத்து அவ்விறைவனின் தேவதான நிலத்தில் பயிரிடப்படாத நிலத்தைப் பெற்று அதைக் கல்லி, வயக்கி பயிரிடும் நிலமாக மாற்றி, கொடும்பாளூர்[3] திருப்பூதீஸ்வரத்துப் பெருமானடிகளுக்கு இரவும் பகலும் ஒரு நொந்தாவிளக்கெரிப்பதற்காகத் தானமாக வழங்கப்பட்டிருக்கிறது. பயிரிடப்படாத நிலமாக இருந்தமையால் தேவதான நிர்வாகத்தார் தேவதான நிலத்தை விற்றனர் போலும்.

பிரம்மதேயம் என்பது பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட கிராமம். இத்தானத்துள் அடங்கிய நிலத்தையும் அதற்கு

உரிமையுடையவர்களாகிய பிராமணர்களிடமிருந்து விலை கொடுத்துப் பெற்று அவையும் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கப் பட்டிருப்பதைக் கல்வெட்டுக்களின்மூலம் அறிய முடிகிறது. செம்பியன் இருக்கு வேளாயின பூதி பராந்தகன், ஈசானமங்கலத்து பிராமணனிடம் விலை கொடுத்து நிலம் பெற்று அந்நிலத்தை அந்தவநல்லூர் திருவாலந்துறை பரமேசுவர சுவாமிக்குத் தேவதானமாக வழங்குகிறான்.

கோயிலைச் சேர்ந்த நிலம் இத்திருநாமத்துக் காணியிலிருந்து ஒருபகுதி நிலத்தினை கோயிலுக்குத் தானமாகமாற்றி வழங்கலும் உண்டு. திருப்பாத்துறை உடையார்க்குத் தேவதானம் வழங்க விரும்பும் மன்னன், நன்நல்லூரில் இத்தேவர்திருநாமத்துக் காணியாக இருந்த நிலத்தில் இருபது வேலி நிலத்தைத் தேவதான இறையிலியாக வழங்கிவிடுகிறார்.

இதில் திருநாமத்துக்காணி தேவதானமாக மாற்றப்பட்டிருக்கிறது[4]. கோயிலுக்குச் சார்ந்த நிலத்திற்கான விலையைக் கோயிலுக்குச் செலுத்திவிட்டு அந்நிலத்தைத் தானமாக வழங்கியிருந்தால் அதனைத் தேவதானம் எனலாம். ஆனால் இங்கு மன்னன் நிலத்திற்கேற்ப விலை எதுவும் கொடுத்ததாகக் கல்வெட்டில் கூறப்படவில்லை. எனினும் தேவதானமாகக் கொடுத்த நிலத்திற்கு வரிவிலக்கு அளித்திருக்கிறான். எனவே இந்த 20 வேலி நிலத்திற்கும் மன்னன் அளித்த வரிவிலக்கே இவன் இக்கோயிலுக்கு அளித்த தேவதானம் எனலாம்.

தேவதானத்துள் தேவதானம்

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பைத் தேவதானமாக வழங்காது, ஊர் முழுவதும் தேவதானமாக வழங்கப்படுதலும் உண்டு. இது போன்று தேவதானங்களில் ஊர்ப் பொதுநிலங்களும், வழங்கப்பட்ட தேவதான நிலத்தில் அமைந்துள்ள பிறகோயில்களும், கோயில் நிலங்களும், பிற தானங்களும் நீக்கி வழங்கப்படுதல் மரபு. ஒரு கோயிலின் தேவதானத்துள்ளே மற்றொரு கோயிலின் தேவதானம் அமைதலும் உண்டு. தஞ்சை பெருவுடையார் கோயில் கல்வெட்டில் தானத்துள் தானம் அமைந்த செய்தி காணப்படுகிறது:

> 'வடகரை நாட்டு இராசேந்திர சிங்க வளநாட்டு
> சின்னம்பூர் நாட்டுக் கருப்பூர் தேவதானமும்,
> சால போகமும் நீக்கி'

என்று பிற தேவதானத்தையும், சாலா போகத்தையும், நீக்கி நின்ற

நிலத்தைத் தேவதானமாக வழங்கியிருப்பதை இக்கோயில் கல்வெட்டு காட்டுகிறது.

மேலும் திருவண்ணாமலை கோயிலில் காணப்படும் மூன்றாம் இராசராசனின் கல்வெட்டு தேவதானத்துள் தேவதானம் அடங்கியிருப்பதையும் அதுநீக்கி மற்றொரு தேவதானம் வழங்கப்பட்டிருப்பதையும் தெளிவுபடுத்துகிறது. திருவண்ணாமலை உடைய நாயனார்க்குத் திருக்காளத்தி தேவன் என்பவன் மடைப்பள்ளிப் புறமாகவும் சலமிகண்டன் சந்திக்காகவும், தேவதானம் வழங்குகிறான். இத்தேவதானத்துட்பட்ட உள்ளூர் தேவர் தேவதானம் நீக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறது.

> 'இராசராச வளநாட்டு வாணகோப்பாடி பெண்ணைத்[5]
> தென்கரை மீய்குன்ற நாட்டு சீற்றாம்பூர் நாற்பாற்
> கெல்லைக்குள்ளும் ஏந்தல் தாங்கல் உள்பட்ட நஞ்சை
> புஞ்சை நிலத்தில் உள்ளூர்த் தேவர்கள் தேவதான
> இறையிலி நீக்கி'

என்று உள்ளூர் தேவர் தேவதானம் நீக்கி 'கல்வெட்டிக் கொடுத்திருப்பதைக் கல்வெட்டு காட்டுகிறது.

தேவதானத்துள் பிற தானங்கள்

தேவதானம் மற்ற தானங்களுடன் சேர்ந்து காணப்படுவது கல்வெட்டில் காணமுடிகிறது. தேவதானமாக வழங்கப்பட்ட ஊர்களில் ஒருபகுதி தேவதானமாகவும் மற்றொரு பகுதி பிறவகுப்பினர்க்குரிய வெள்ளான்வகை நிலங்களாகவும் இருந்துள்ளன. திருவிசலூர், திருவேதிகுடி, திரைமூர் போன்ற ஊர்கள் தேவதானமும் பிரம்மதேயமும் ஒன்றியிருந்த தேவதானப் பிரம்மதேயங்களாக இருந்தன என்பதைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

திருவண்ணாமலைக் கல்வெட்டு ஒன்று இதனைத் தெளிவுபடக் குறிப்பிடுகிறது. 'திருவண்ணாநாட்டு தேவதானம் பிரம்மதேயம் புலியூர் நாட்டு சதுர்வேதி மங்கலத்து' என்ற கல்வெட்டில் 'தேவதானப்பிரம்மதேயம்' என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

திருநெய்த்தானம், திருவிடந்தை ஆகிய ஊர்களில் ஒருபகுதி தேவதானமாகவும் மற்றொரு பகுதி வேளாண்வகை நிலமாகவும் கலந்து காணப்படுவதைக் கல்வெட்டுக்கள் காட்டியுள்ளன.

பிரித்துப் புதுப்பெயர் வழங்கல்

தேவதானமாக வழங்கப்பட்ட நிலம் அதிகப் பரப்புடையதாகத் திகழுமாயின் அந்நிலம் ஏற்கனவே இணைந்து இருந்த கிராமத்தில் இருந்து பிரிக்கப்பட்டு, அதற்குப் புதுப் பெயரொன்றும் வழங்கப் படுதலுண்டு. இதிலிருந்து இது தேவதான ஊராகத் திகழும். இதற்கென்று தனிச் சபையும் அமைக்கப்பெறும். இதுபோன்று ஒரு நிகழ்ச்சி குலோத்துங்கன் காலத்தில் நடைபெற்றிருக்கிறது. முதற்குலோத்துங்கன் காஞ்சியில் முகாமிட்டிருக்கும் பொழுது வாணகோவரையன் சுத்தமல்லன் முடிகொண்டான் என்பவன் மன்னவரிடம் ஒப்புருவமில்லா மகாதேவர்க்குத் தானம் வழங்கக் கேட்டுக்கொள்கிறான். அவனின் வேண்டுகோளுக்கிணங்கி, இரதம் புத்தூர் என்ற ஊரிலிருந்து ஒரு பகுதியினைப் பிரித்து, அப்புதுப் பிரிவுக்கு வீரசோழநல்லூர் என்று பெயரிட்டுத் தேவதானமாக வழங்க ஆணையும் பிறப்பித்திருப்பதை அரகண்டநல்லூர் கல் வெட்டில் காணமுடிகிறது.[7]

திருமழபாடியில் காணப்படும் மூன்றாம் குலோத்துங்கனின் 32-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலிருந்து பல ஊர்கள் பிரித்துப் புதுப் பெயரிடப்பட்டுத் தானமாக வழங்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

> 'இவ்வூர் தென்பிடாகை கோதண்டராமநல்லூரில்[8]
> இந்நாயனார் தேவதானமாய் பிரிந்த எதிரிலிச்
> சோழமங்கலத்திலும், குலோத்துங்கச் சோழ
> மங்கலத்திலும்'
> 'நாடறிபுகழ் நல்லூர் பிறின்த இந்நாயனார்
> தேவதானம் நித்த விநோத மங்கலத்து'

என்ற கல்வெட்டு வரிகள் பிரித்துப் புதுப் பெயரிடப்பெற்று வழங்கி யதைப் 'பிரின்த' என்ற சொல்லால் காட்டித் தெளிவுபடுத்துகின்றன.

இவ்வாறு பிரித்துப் புதுப்பெயரிட்டது தவிர ஏற்கனவே வழங்கி வந்த பெயரை மாற்றிப் புதுப்பெயருடன் அவ்வூரினைத் தேவதான மாக வழங்கி வந்ததையு ; காணமுடிகிறது. விக்கிரமச் சோழன் தனது 7-ஆம் ஆட்சி ஆண்டில் திருவிடைமருதூருக்குச் சென்றபொழுது அந்த நகரைச் சார்ந்த கண்ணக்குடி என்றபெயரை 'தியாக சமுத்திர சதுர் வேதி மங்கலம்' எனப் பெயர் மாற்றித் திருவிடைமருதூர்க் கோயிலுக்குத் தேவதானமாக அளித்தான் என்று திருவிடை மருதூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது.

தானத்துக்குப் பொறுப்பு

தேவதானமாக வழங்கப்பட்ட நிலங்களுக்கு அந்தந்த கோயில் அதிகாரிகளே பொறுப்பாக இருந்து அவற்றின் வருமானத்தையும் செலவினையும் மேற்பார்வையிட்டு வந்தனர். இவர்களிடமே தேவ தானம் ஒப்படைக்கப்பட்டது. இக்கோயில் அதிகாரிகளுக்கு மேலாக ஊர்ச் சபையும், அரசாங்கமும் இத்தேவதானங்களை விழிப் புடன் கவனித்து வந்திருக்கின்றன.

> "தேவகன்மிக்கும் ஸ்ரீ மாகேஸ்வர கண்காணி செய்வார்[9]களுக்கும் ஸ்ரீகாரிய செல்வர்களுக்கும்
> இத்தேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கும் இறுப்பதாக உத்தராயணத்துத் தேவதான இறையிலியாக இட நாம் நீர்வார்த்த நிலத்துக்கு"

என்ற கல்வெட்டு வரிகளிலிருந்து தேவதான நிலம் தேவகன்மி, மாகேஸ்வர கண்காணி, ஸ்ரீகாரியம் செய்வார் ஆகிய மூன்று கோயில் அதிகாரிகளிடமே நீர்வார்த்து கொடுக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. இதன் மூலம் தேவதான நிலத்தினைப் பராமரித்து அதிலிருந்து கோயிலுக்கு வேண்டியவற்றைச் செய்வதற்கு இவர்களே பொறுப்பாக இருந்தார்கள் என்றும் தெரிய வருகிறது. இவர்கள் வேண்டும் பொழுது கோயில் தானத்தை விற்கவும், பயிரிடப்படாத தரிசு நிலங்களைப் பிறருக்கு வழங்கி பயிரிடச் செய்யவும் உரிமை உள்ளவர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர்.

மூன்றாம் குலோத்துங்கனின் 20-ஆம் ஆட்சி ஆண்டில் திருவண்ணாமலை உடையான் தேவதானத்துப் பயிரிட முடியாமல் கிடந்த நிலத்தைத் திருத்திப் பயிரிடல் வேண்டி சத்தியவாசகரான தன்ம வாணியர்கள் கோயில் பண்டாரத்து 500 காசு செலுத்தி பெற்றுத் திருத்தியிருகிறார்கள். இதன் மூலம் 1000 குழி நிலம் திருத்தப்பட்டிருக்கிறது. இந்நிலம் மூன்று திருநாள்களில் சோறிடு வதற்காகத் திருப்பி வழங்கப்பட்டிருக்கிறது.

தேவதான நிலத்தைக் கோயில் நிர்வாகம் தானே முன்னின்று பயிரிடவோ அல்லது பிறருக்குப் பயிரிடுவதற்கு வழங்கி அதன் வரவை மட்டும் பெற்றுக்கொள்வதோ உண்டு. முதலாம் இராசராசன் காலத்தில் சுசீந்திரம் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கப்பட்ட நிலம் இரண்டாக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் ஒரு பகுதி தனிப் பட்டவரிடம் ஒப்படைக்கப்பட்டுக் காணிக்கடன் பெறப்பட்டிருக் கிறது. ஒரு மா நிலத்திற்கு 3 கலம் முதல் 3 கலம் ஒரு தூணி வரை

காணிக்கடன் நெல்லாக குத்தகைதாரரால் பண்டாரத்தில் அளக்க உறுதி செய்யப்பட்டிருக்கிறது. மற்றொரு பகுதியினைத் தேவகன்மிகள் மேற்பார்வையிட்டு வந்தனர் என்று தெரிகிறது.

தேவதானத்தைத் தேவதானமாக்கல்

ஒரு கோயிலைச் சேர்ந்த தேவதான நிலம் பிரிதொரு[11] கோயிலுக்குத் தேவதானமாகக் கோயில் அதிகாரிகளால் வழங்கப்பட்டிருப்பதைக் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகிறது. திருவண்ணாமலை உடைய நாயனார் தேவதானமான செங்குன்ற நாட்டு மாத்தூரான இராசராச நல்லூரில் சில நிலம் திருத்தப்படுகிறது. அவ்வாறு திருத்தப்பட்ட நிலத்து எல்கைக்குள் மற்றொரு சிவன் கோயில் அமைந்திருக்கிறது. இச்சிவன் கோயிலில் எழுந்தளியிருக்கிற மெய்கண்டீஸ்வரமுடைய நாயனார்க்குத் திருவண்ணாமலை உடைய நாயனார் தேவதானம் இராசராசநல்லூரில் திருத்தப்பட்ட நிலத்தில் மூன்றில் ஒரு பங்கினை வழிபாட்டிற்கும், அமுதுபடிக்குமாக தேவதானமாக வழங்கப்பட்டிருக்கிறது.

குடிநீங்கிய குடிநீங்கா தேவதானங்கள்

ஊர்களையும், நிலங்களையும் தேவதானமாக வழங்கும்போது அதில் ஏற்கனவே இருந்து வருகிற குடிகள் பற்றிய பிரச்சனைகள் எழுவது இயல்பு. ஏற்கனவே இருக்கும் குடிகளை நீக்கி அளிப்பதா அல்லது குடிகளோடு சேர்த்து நிலத்தைத் தானமாக வழங்குவதா என்பது தேவதானம் வழங்கும்பொழுதே வழங்குவோரால் முடிவு செய்யப்பட்டு, வழங்கப்படுகிறது. குடிகளை நீக்கி வழங்கினால் அது 'குடி நீங்கிய தேவதானம்' என்றும், குடிகளை நீக்காமல் வழங்கினால் அது 'குடி நீங்கா தேவதானம்' என்றும் அழைக்கப்பட்டன. குடிகளை நீக்கி வழங்கினால் தேவதானம் பெறும் கோயிலுக்கு மேல்வாரம், கீழ்வாரம் என்று சொல்லப்பட்ட இரண்டு வருவாய்களும் கிட்டும். ஆனால் குடிநீங்கா தேவதானத்தில் மேல் வாரம் மட்டுமே கோயிலால் அனுபவிக்க முடியும்.

திருத்துறைப்பூண்டியில் உள்ள மூன்றாம் இராசேந்திரனின் கல்வெட்டில் தேவதான குடிமக்கள் பற்றிய தெளிவான குறிப்பு வருகிறது.

> "உடையார் திருவுசாத்தான முடையார்[12]
> கோயில் தேவதானக் குடிமக்களோம்"

என்ற கல்வெட்டு தேவதானத்தில் வாழும் குடிகளைத் தேவதானக்

குடிமக்கள் என்று அழைக்கும் வழக்கம் இருந்ததைத் தெளிவு படுத்துகிறது.

குடிநீங்கா தேவதானமாக வழங்கப்பட்டால், அக்குடிகள் கோயிலுக்கு அளக்கவேண்டிய நெல்லின் அளவு தானம் வழங்கும் பொழுதே உறுதி செய்யப்பட்டு, கல்வெட்டு வெட்டப்படுகிறது. இவ்வாறு குடிகள் கோயிலுக்கு அளக்கவேண்டிய நெல்லு காணிக் கடன் என்று அழைக்கப்பட்டது.

அண்டநல்லூர் வைத்தியநாதர் கோயில் கல்வெட்டு ஒன்றில் மன்னன் ஆணைப்படி குடி நீங்கா தேவதானம் வழங்கப்பட்டதாக உள்ளது. குடிகள் காணிக் கடனாக அளக்க வேண்டிய நெல்லின் அளவும் உடன் குறிப்பிடப்பட்டுள்ளது. மன்னனிடமிருந்து வந்த ஆணையில் அது ''தேவதானக் காணிக் கடமை''யாக வழங்கப்பட வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது:

> ''பரகேசரி அருளுப்பாட்டால் அரையன் வீரசோழனுக்கு[13]
> குடிநீங்கா தேவதானக் காணிக் கடமையாகச் செய்து
> கொடுக்க என்று செம்பியன் இருக்கு வேளானுக்குத்
> திருமுகம்வர''

இதில் அரையன் வீரசோழன் என்பவனுக்குக் குடி நீங்கா தேவதான மாக வழங்க வேண்டும் என்று, ஒரு குறிப்பிட்ட நபரின் பெயரைக் கூறி அவனுக்கே வழங்கவேண்டும் என்று ஆணை வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் குடிநீக்காமல் தேவதானமாக வழங்குவது ''குடிநீங்கா தேவதானக் காணிக் கடமை'' என்று அழைக்கப்பட்டது என்பதும் இதன் மூலம் அறியமுடிகிறது.

இவ்வாறு குடி நீக்காமல் அளிக்கும் தேவதானத்தைச் சேர்ந்த சில குடிகள் தங்களுக்குரிய காணிக் கடமையை அதே கோயிலுக்குத் தேவதானமாக வழங்கி விடுவதும் உண்டு. நெற்குப்பையைச் சேர்ந்த திருமுதுகுன்றமுடைய நாயனார் தேவதானக் குடிகள் தாங்கள் உத்தம சோழன்[14] காலத்தில் பெற்ற தேவதானக் காணிக் கடமையை முதலாம் இராசராசன் ஆட்சியின்பொழுது திருமுது குன்றமுடைய நாயானார்க்கே தேவதானமாக வழங்கிவிடுகின்றனர். அத்தானம் கொண்டு முதுகுன்றமுடைய நாயானார்க்குச் சந்தனமும் குங்கிலியமும் வழங்கக் கேட்டுக் கொள்கின்றனர்.

தேவதானக் குடிகள் தாங்கள் அனுபவித்து வரும் நிலத்திற் காகச் செலுத்தி வரும் காணிக் கடன் அதிகமாக உள்ளது என்று

முறையிட்டாலோ அல்லது ஆய்வின்பொழுது தெரியவந்தாலோ காணிக்கடன் குறைத்து நிர்ணயம் செய்யப்பட்ட செய்திகளைக் காணமுடிகிறது.

இரண்டாம் ஆதித்தன் கல்வெட்டு ஒன்று கோயிலின் வரவு செலவுக்கணக்கு, தணிக்கை அதிகாரியின் ஆய்வுக்கு வைக்கப்பட்டதையும், அவ்வாய்வின்பொழுது காணிக்கடன் பெறுவதில் தவறு நிகழ்ந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையும் வெளிப்படுத்துகிறது. 250 கலம் நெல் அளக்கவேண்டிய இடத்தில் 160 கலம் மட்டுமே அளக்கப்பட்டு வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற காலங்களில் குடிகளை மாற்றி அமைக்கவோ அல்லது விடுபட்ட நெல்லை ஏற்கனவே உள்ள குடியைக்கொண்டு பண்டாரத்தில் செலுத்தப் பண்ணுவதோ செய்யப்பட்டிருக்கிறது.

வரிகளோடு வழங்கல்

கோயிலுக்குத் தானமாக ஊர்களை வழங்கும்பொழுது நான்கு எல்லையிலும் கோயிலைச் சார்ந்த இறைவன் சின்னம்பொறித்த கற்களை நாட்டி அந்நான்கு எல்லைக்குட்பட்ட அனைத்து நிலத்தையும் கோயிலுக்கு வழங்குவதோடு அவ்வூரில் உள்ள அனைத்து வரிகளின் மூலம் ஏற்படும் வருவாயினையும் சேர்த்துத் தேவதானமாக வழங்குவது உண்டு. காளகத்தியில் உள்ள கைலாசநாதர் கோயிலில் காணப்படும் கல்வெட்டு ஒன்று இச்செய்தியினைத் தருகிறது.

நரசிங்கன் திருக்காளத்தி தேவனான யாதவராயன் திருக்காளத்தி உடையார்க்கு வைகாசித் திருநாள் கண்டு அது தொடர்ந்து நடைபெறுவதற்காக வெண்ணை நல்லூர் என்ற ஊரினையும் அவ்வூரின் வரிகளையும் சேர்த்துத் தானமாக வழங்கியிருக்கிறான்:

'திருக்காளத்தி உடையார்க்கு வைகாசித் திருநாள் கண்டு
இத்திருநாள் சந்திராதித்தவரை முட்டாமல் எழுந்தருளு
வதற்காக[15]

ஜயங்கொண்ட சோழமண்டலத்தில் திருவேங்கடக்கோட்டத்து
கருப்பற்று நாட்டு வெண்ணை நல்லூர் தட்டார் பாட்டம்
தறிஇறை வெட்டி முட்டையாள் படிக்காசு காணிக்கை
கன்மீயபேறு

மற்றும் எப்பேர்ப்பட்ட வரிகளும் அகப்பட தேவதானமாக
விட்டேன் நரசிங்கன் திருக்காளத்தி தேவனான யாதவராஜன்"

என்று எப்பேர்ப்பட்ட வரிகளும் அகப்படக்கொடுத்தது பற்றிக் கூறுகிறது.

பழந்தேவதானம்

ஏற்கனவே அக்கோவிலுக்கு வழங்கப்பட்ட தேவதானத்தைக் குறிப்பிட்டுச் சொல்லும்பொழுது 'பழந்தேவதானம்' 'முன்தேவ தானம்' என்ற சொற்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. ஒரு காலத்தில் வழங்கப்பட்ட தேவதானத்தைப் புதுப்பித்து மீண்டும் வழங்குவதும், பழைய தேவதானத்தோடு மேலும் நிலங்களைச் சேர்த்து வழங்கும் செயலும் காணப்படுகின்றன. வேண் மங்கலம் என்ற ஊர் பழந்தேவதானமாக இருந்தபடியால் புதுப்பித்து வழங்கப்பட்டதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது:

> 'வேள் மங்கலத்து ஊரார்க்குத் தங்களூர் திருவீரட்டானேஸ்வர முடைய[16]
>
> நாயனார்க்குப் பழந்தேவதானமானபடியினாலே அஞ்சாவது தைமாதம் முதல் தேவதானமாகக் கொடுத்தோம்'

திருப்பாத்துறை நாயனார்க்குத் தேவதானமாக நிலம் கொடுத்து அதன் எல்லை குறிப்பிடும்பொழுது முன் தேவதானம் என்ற ஒரு சொல் கையாளப்பட்டிருக்கிறது:

> 'முன்தேவதானமான நத்தத்திற்கு மேற்கு'[17]

என்று குறிப்பிடப்படுகிறது.

இறையிலி தேவதானம்

தேவதான நிலங்களுக்கு அரசாங்கத்திடமிருந்தும், ஊர்ச் சபையிடமிருந்தும் வரிவிலக்குப் பெறுவது இறையிலியாகும். இந்த வரி நீக்கம் 1. இறையிலி, 2. ஊர்க் கீழ் இறையிலி, 3. இறை காவல் என்ற மூன்று வகையாகச் செய்யப்பட்டு வந்திருக்கிறது. இவற்றுள் இறையிலி என்பது அரசன் தான் வழங்கும் நிலங்களுக்கும், தன்னிடம் வந்து பிறர் முறையிடும்பொழுதும் செய்து கொடுக்கும் வரிவிலக்கு ஆகும். 'ஊர்க் கீழ் இறையிலி என்பது கோயிலுக்குப் பதிலாக ஊரார் தேவதான நிலங்களுக்கான வரியை அரசாங்கத்திற்குச் செலுத்திவருவதாகும். 'இறை காவல்' என்பது ஒருவரிடமிருந்து வரி செலுத்துவதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையினைப் பெற்று அதனை முதலாகக்கொண்டு அரசுக்கு வரியை ஊர்ச்சபை செலுத்து வதாகும்.

வழங்கப்படும் பொழுதே தேவதானம் அதனை இறையிலி தேவ தானமாக வழங்கிவிடுவதுமுண்டு. தேவதானம் வழங்கி சிறிது காலத்திற்குப் பின்பு அதற்கு வரியில் இருந்து விலக்கு அளித்து இறையிலியாகச் செய்து கொடுப்பதும் உண்டு.

மூன்றாம் இராசராசனின் காலத்தில் சிங்கண தண்ணாயக்கன் என்பவன் திருவண்ணாமலை உடைய நாயனார்க்கு நிலம் வழங்கும் பொழுதே அதனை இறையிலி தேவதானமாக வழங்கிவிடுகிறான்.

"உடையார் திருவண்ணாமலை உடைய நாயனார்க்கு தேவதான இறையிலியாக விட்டேன் சிங்கண தண்ணாயக்கனேன்"

என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

ஒரு காலத்தில் ஒரு மன்னனால் வழங்கப்பட்ட தானத்திற்கு அவனுக்கு பின் வரும் மன்னனால் வரி நீக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. பராந்தகனின் 12-ஆம் ஆட்சி ஆண்டில் திருவலஞ்சுழி மஹாதேவர்க்கு மூன்று வேலி நிலம் தேவதானமாக வழங்கப்பட்டிருக்கிறது. இத் தேவதானத்தை முதலாம் இராசராசன் இறையிலியாகச் செய்து கொடுத்துள்ளான். தன்னுடைய 21-ஆம் ஆட்சியாண்டில் திருக்காலி வல்லத்தில் தென்பக்கத்துக் கோயிலில் மாளிகை மேலை கல்லூரியில் எழுந்தருளியிருந்தபோது இதனை இறையிலியாகச் செய்துகொடுத் துள்ளான்:

"இத்தேவர்க்கு நீக்கி இறைகட்டின நெல்லு முன்னூ ற்றெழுபத் தைங்கலனே இருதூணிமுக்குறுணி இத்தேவர்க்கு வேண்டும் நிவந் தங்களுக்கு இறுப்பதாக யாண்டு இருபத்தொன்றாவது முதல் தேவதான இறையிலியாக வரியிலிட்டுக் குடுக்க வென்று"

என்று வரிவிலக்கு அளித்ததோடு இதுவரை அரசுக்குச் செலுத்திவந்த வரியினைக் கோயில் காரியங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் இராசராசன் ஆணை பிறப்பித்துள்ளான்.

இராசராசன் தன் மனைவி தந்திசத்திவிடங்கி வழங்கிய தேவ தானத்திற்கு வரிவிலக்கு அளித்துள்ள செய்தியை மற்றொரு கல் வெட்டில் காணமுடிகிறது. தந்திசத்திவிடங்கி சேத்திரபாலருக்கும் கணபதியாருக்கும் கோயில் எடுத்திட்டு அதற்கு ராசராசனின் 16-ஆம் ஆட்சி ஆண்டில் தேவதானம் வழங்கியுள்ளார். இதனை இராசராசன் தன்னுடைய 24-ஆம் ஆட்சி ஆண்டில் இறையிலி தேவதானமாகச் செய்து கொடுத்துள்ளான். இதுவரை செலுத்தி வந்த இறைகட்டின

நெல்லை தேவர்க்கு வேண்டும் பல பணி நிமந்தக்காரர்களுக்கு வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ளான்.

குலோத்துங்கனின் 4-ஆம் ஆட்சி ஆண்டில் செயங்கொண்ட சோழ நல்லூர் புற்றிடங்கொண்டருளிய மஹாதேவர்க்கும், திருப் பள்ளியறை நாச்சியார்க்கும் நிலம் வழங்கும்பொழுது ஊராரே அதற்குரிய வரி செலுத்துவதாக ஏற்று அந்நிலம் தேவதான இறையிலி யாகக் கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

> "இந்நிலத்தால் வந்த இறையும் ஆளும் அமஞ்சியும் எப்பேர் பட்ட சில்வரியும் ஊரிலே ஏற்றி நாங்களே இறுத்துக் குடுக்கக் கடவோம் இப்படிச் சம்மதித்து இறையிழித்து"

என்று கல்வெட்டு ஊர் வரியினை ஏற்று இறையிழித்து வழங்கிய செய்தியைத் தருகிறது.

தேவதானத்திற்கு வரி செலுத்துவதற்கான ஒரு வைப்புத் தொகையினை யாராவது ஒருவர் முன் வந்து செலுத்த விரும்பினால் அதற்கான தொகையினை ஊர்ச் சபை உறுதி செய்கிறது. இவ்வாறு இறைகாவல் பெற்ற நிகழ்ச்சி சுந்தரச் சோழன் கல்வெட்டு ஒன்றில் காணமுடிகிறது. பொய்கைக்குடி சபையார் தேவதானத்திற்கு இறை காவல் அணுக்கப்பல்லவரையன் என்பவனிடமிருந்து பெற்று, இறையிலிக்கு வழங்கினார்கள்.

> "இப்பொய்கைக் குடி சபையோம் எங்களிலிசைந்த பொன் . . . .[20] அணுக்கப்பல்லவரையரிடை கைச்செலக்கொண்டு இறை யிழிச்சிக் கொடுத்தோம் பொய்கைக்குடி சபையோம்"

என்ற இறை காவல் பற்றிய செய்தியினைத் தருகிறது.

தேவதானத்திற்கு இறை நீக்கிக் கொடுப்பது உரிய அதிகாரி களுக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு உரிய அதிகாரி கள் அச்செய்தியினைப் பெற்றவுடன் கல்வெட்டில் குறிப்பிட்ட ஆண்டு முதல் தேவதானம், தேவதான இறையிலியாகக் கருதப்பட்டு இறை பெறுவது நிறுத்தப்படும். திருப்பாத்துறை திருநாகேஸ்வர சுவாமி கல்வெட்டில்,

> "தேவதான இறையிலியாக இடக்கடவதாகச் சொல்லி இப்படி கணக்கிலும் இட்டுக்கொள்ள வரிக்கூறு செய்வார்களுக்கும் சொன்னோம்"[21]

என்று முறையாக வரிவிலக்கு அளிக்கப்பட்ட செய்தி வரிக்கூறு செய்யும் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதைக் கூறு கிறது.

இவ்வாறு சோழர் காலக்கல்வெட்டுக்களில் தேவதானம் பற்றிய செய்திகளைப் பரக்கக் காணமுடிகிறது. தேவதானம் வழங்கப் பட்டதோடு அவை எவ்வாறு முறைப்படுத்தப்பட்டு, சரியான முறை யில் பயன்படுத்தப்பட்டன என்றும் சோழர் காலக் கல்வெட்டுக்கள் நமக்கு உணர்த்துகின்றன.

அடிக்குறிப்புக்கள்

1. S.I.I. vol. IV No. 378
2. S.I.I. vol. IV No. 381
3. S.I.I. vol. VIII No. 555
4. S.I.I. vol. VIII No. 592
5. S.I.I. vol. VIII No. 85
6. S.I.I. vol. VIII No. 65
7. A.R.E. 184/1934-35
8. S.I.I. vol. V No. 532
9. S.I.I. vol. VIII No. 592
10. S.I.I. vol. VIII No. 138
11. S.I.I. vol. VIII No. 74
12. திருத்துறைப்பூண்டி கல்வெட்டுக்கள், எண். 94
13. S.I.I. vol. VIII No. 668
14. S.I.I. vol. XIII No. 52
15. S.I.I. vol. VIII No. 379
16. S.I.I. vol. VIII No. 326
17. S.I.I. vol. VIII No. 587
18. S.I.I. vol. VIII No. 88
19. S I.I. vol. VIII No. 222
20. S.I.I. vol. XIII No. 89
21. S.I.I. vol. VIII No. 592

★

சோழர் காலக் குற்றங்களும், விசாரணைகளும்

இல. தியாகராசன்
வரலாற்று உதவிப் பேராசிரியர்
அரசினர் கலைக்கல்லூரி, அரியலூர்

அரசுக்கு வரி செலுத்தாமல் ஏமாற்றுவது, பொது நிறுவனங்களின் சொத்துக்களை முறையற்ற முறையில் அனுபவிப்பது, லஞ்சம் வாங்குதல், கோயில்களின் செல்வங்கள் மற்றும் அறநிறுவனங்களில் உள்ள பணத்தைக் கையாடல் போன்ற முறைகேடான செயல்கள் இக்காலத்தில் மட்டுமின்றி தொன்றுதொட்டே வழக்கில் இருந்து வந்துள்ளது. இவற்றை அவ்வப்போது அரசும், குடிமக்களே இது பற்றி அரசுக்கு தெரிவித்தும், குற்றவாளிகளைக் கண்டறிந்து தண்டித்த முறைகள் போன்றவை ஏராளமாகச் சோழர்கால வரலாற்றுக் குறிப்புகளில் காணக் கிடக்கின்றன. அவைகளைப் பற்றி இக்கட்டுரை ஆராயமுற்படுகிறது.

சோழர்களின் ஆட்சிக்காலத்தில் அரசுத்துறை மிகச் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டது. பல்வேறு வகையான அதிகாரிகள், ஊர்கள், நகரங்கள், சபைகள், கோயில்கள் ஆகிய அமைப்புகளை நிர்வாகம் செய்து சட்டம், ஒழுங்கு, தர்மநெறி முறைகள் ஆகியவற்றை நிலைநாட்டினர். இருப்பினும் ஆங்காங்கே ஊழல்களும் முறைகேடுகளும் நிகழ்ந்துள்ளன என்பது கல்வெட்டுகளால் அறியப்படும் செய்தி.

வகைகள்

இத்தகைய குற்றங்கள் அனைத்தையும் தொகுத்து நோக்கினால் அவற்றின் பொதுவான தன்மைகளைக் கொண்டு கீழ்க்கண்ட வகைகளில் பிரித்தறியலாம்:

1 அரசின் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் கணக்கு காட்டாமல் இருத்தல், அதிகாரத் துஷ்பிரயோகம் செய்து பிறர் சொத்துக்களை அபகரித்தல், கையூட்டு பெறுதல், அரசுக்கு வரி செலுத்தாமல் நிலங்களை அனுபவித்தல், தம் கடமையை செய்யாமல் ஏமாற்றுதல்.

2 கோயில் அலுவலர்கள் கோயில் வழிபாட்டுக்கென வைத்த நிவந்தங்களைச் சரிவர செய்யாமல் தாமே அனுபவித்தல்.

3 கோயில் செல்வங்களைத் திருடுதல், அதை ஒழுக்கக் கேடான காரியங்களுக்குப் பயன்படுத்துதல் போன்ற வகைகளில் பிரிக்கலாம்.

காலங்கள்

இத்தகைய முறைகேடுகளைப் பற்றிய செய்திகள் நமக்கு முதற் பராந்தக சோழன், உத்தம சோழன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், அதிராசேந்திரன், மூன்றாம் இராசராச சோழன் ஆகியோர் காலங்களில் கிடைக்கின்றன.

யார் யார்?

இத்தகைய குற்றங்களைப் புரிந்தோர்கள் யாவர் என நோக்கும்போதும், கிடைக்கின்ற கல்வெட்டுகளில் அதிக அளவு முறை கேடுகளைப் புரிந்தவர்களாக,

1 நிறைந்த உரிமைகளும், அதிகாரங்களும் தன்னாட்சி அந்தஸ்தும் பெற்ற தேவதான, பிரம்மதேய சதுர்வேதி மங்கலங்களை நிர்வகிக்கும் பிராமணர்கள்

2 கோயில் வழிபாடுகளை நடத்தி சமயத்தை வளர்க்கும் சிவ பிராமணர்கள், தேவகன்மிகள்

போன்ற அலுவலர்களாகவே உள்ளனர்.

ஊழல்களைத் தடுக்க விதிமுறைகள் செய்தமை

முதற் பராந்தக சோழன் காலத்தில் ஊர்ச் சபைகள் எவ்வாறு குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இயங்கின என்பதை அவனது 19 ஆவது, 21 ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன [1] முதல் கல்வெட்டு ஊர்ச்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் இன்னின்ன தகுதிகளைக் கொண்டிருக்கவேண்டும் என்று தெளிவாக கூறுகிறது. ஆனால் 3 ஆண்டுகட்கு பிறகு அதே ஊரில் நடக்கும் சபை தேர்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் தகுதிகள், விதிமுறைகள் முதலியன முழுதும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அவ்விதி முறைகளின் சீரிய, கடுமையான தன்மைகளை நோக்கும்போது, எந்த அளவுக்கு முந்தைய கால நிர்வாகத்தில் உறுப்பினர்கள் ஊழல்கள் புரிந்திருக்க வேண்டும் என்றும், அதனால் அரசனே ஆணையிட்டு அதனை

தடுக்கும் விதிமுறைகளை வகுத்து செயல்படுத்தினான் என்பதும் நன்கு விளங்கும்.

யார்யார் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர்கள் என்பதற்கான விதிமுறைகளை கூறும் கல்வெட்டுப் பகுதி:

1 வாரியங்கள் செய்து கணக்கு காட்டாதே இருந்தாரையும் (இவர்கள் உறவின்முறையார் அனைவரையும்) குடவோலை எழுதிப்புக விடாததாகவும்,

2 பரத்ரவியம் (பிறர் செல்வங்களை) அபகரித்தானையும் குடவோலை எழுதிப் புகவிடப் பெறாததாகவும்

3 எப்பேர்ப்பட்ட கையூட்டுங் கொண்டான் க்ருதப் பிராயசித்தஞ் செய்து சுத்தரானாரையும் அவ்வவர் ப்ராணயாந்திகம் (உயிர் உள்ளவரை) வாரியத்துக்கு குடவோலையெழுதிப் புகவிடப் பெறாததாகவும்,

4 வாரியஞ் செய்யாநின்றாரை அபராதங் கண்டபோது அவனை ஒழித்து விடுவதாகவும்

என்று இப்படி கடுமையான விதிமுறைகளை வகுத்து நடத்தப்பட்ட இரண்டாவது தேர்தலின் போது முறைகேடுகளை ஒழிக்க முயன்றமை தெளிவாகிறது. இந்த விதிகளை ஊன்றிக் கவனித்தால் செய்யப்பட்ட குற்றங்களின் தன்மையும், அளவும் தெற்றென விளங்கும்.

இதனை அரசன் கண்டறிந்து விதிகளை மாற்றி ஆணையிட்டு அதனை அவன் கீழ் இருந்த அதிகாரி தானே நேரடியாகச் சென்று விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட்டு தேர்தல் நடக்கிறதா என்று மேற்பார்வையிடச் சென்று தேர்தலை நடத்தியதாகவும் அறிகிறோம். மேலும் இவை இவ்வூரில் உள்ள தீயவர்களை ஒழித்து நல்லாட்சி ஏற்படச் செய்ததாகவும் கல்வெட்டுக் கூறுகிறது:

“. . . . தேவேந்திரன் சக்கரவர்த்தி பண்டிதவத்சலன்
குஞ்சரமல்லன் சூரசூளாமணி கல்பக சரிதை
ஸ்ரீ பரகேசரி பன்மர்கள் ஸ்ரீ முகம் அருளிச்
செய்து வரக்காட்ட ஸ்ரீ ஆக்ஞையால்
சொழநாட்டுப் புறங்கரம்பை நாட்டு ஸ்ரீவங்க
நகர்க் கரஞ்சை தொண்டயக்ரமவித்தபட்
டனாகிய சொமாசி பெருமானுடன் இருந்து
இப்பரிசு செய்விக்க நம் கிராமத்துக்கு

அப்யுதமாக துஷ்டர் கெட்டு விசிஷ்டர் வர்த்திப்பதாக வியவஸ்தை செய்தோம் உத்தர மேரு சதுர்வேதி மங்கலத்துச் சபையோம் . . . . . ''

என்று கூறுவதால் அறியலாம்.

வரி ஏய்ப்புச் செய்தமை

அடுத்தது, அரசுக்குச் சேர வேண்டிய வரியைச் செலுத்தாமல் வரி ஏய்ப்புச் செய்தல், வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம் திருமால்புரம் என்னும் ஊரில் சோழனுடையதாக கருதப்படும் 4-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இத்தகைய வரி ஏய்ப்புச் செய்த முறைகேட்டைச் சொல்கிறது. ஏறக்குறைய நூறு வரிக்கு மேல் உள்ள இக்கல்வெட்டு மிகத் தெளிவான முறையில் இவ்வரி ஏய்ப்பு நடந்த விதங்களைக் கூறுகிறது.

இதன்படி இந்த வரி ஏய்ப்பு முதலாம் ஆதித்த சோழனின் 22-ஆவது ஆண்டிலிருந்து (அதாவது கி.பி. 893) உத்தம சோழனின் 4-வது ஆண்டு வரை (அதாவது கி.பி. 974) ஏறக்குறைய 82 ஆண்டுகள் நடந்துள்ளது.

அதாவது திருமாற்புரத்து கோயில் வழிபாட்டுக்காகப் புரவு நெல் 3,000 காடியும், இரவு நெல் 561 காடியும் பொன்னாக 200 கழஞ்சும், இறையாக தரப்பட வேண்டிய சிற்றியாற்றூர் என்ற ஊர் கொடையாக அளிக்கப்பட்டது. இந்த ஊர் நிலங்களில் சங்கப் பாடிகிழான் என்பவனின் நிலம் மட்டும் நீக்கி விட்டு பிற நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டன.

இந்த ஊரை ஏற்று மேற்சொன்ன அளவு இறை செலுத்தும் பொறுப்பைப் பிரம்மதேயம் புதுப்பாக்கத்துச் சபையார் ஏற்றுக் கொண்டனர்.

இது தொண்டைமானாற்றூர் துஞ்சினதேவரின் (முதல் ஆதித்த சோழன்) 21-ஆவது ஆண்டில் கொடுக்கப்பட்டு 22-ஆவது ஆண்டில் சாசனமும் செய்யப்பட்டது.

ஆனால் இதுபற்றிய விவரம் வரியிலிடப்படாமல் அரசாங்க வருவாய் கணக்குப் புத்தகத்தில் எழுதப்படவில்லை.

ஆனால் இப்படி அரசுக் கணக்கில் எழுதப்படாமல் இருந்த விபரம் பராந்தக சோழனின் 4-ஆவது ஆண்டில்தான் கண்டறியப்

பட்டது. பிறகு அரசின் கணக்கில் சேர்க்கப்பட்டது. இதன் பிறகும் புதுப்பாக்கத்துச் சபையார் கோயிலுக்குச் சேர வேண்டிய பொன்னையும், நெல்லையும் கொடுக்காமல் இவ்வரசனின் 36-ஆவது ஆண்டு வரையும் (32 ஆண்டுகள்) ஏமாற்றி வந்தனர். இதனால் கோபமடைந்த அரசன் தற்போது சபையாரிடமிருந்து சங்கப்பாடிகிழான் முதலிய நிலங்களைத் தற்போது கோயிலுக்கே கொடுத்து அதன் நேரடி நிர்வாகத்தில் விடுகின்றான்.

ஆனால் இப்படி முன்னர் நீக்கிய சங்கப்பாடிகிழான் நிலத்தைக் கோயிலுக்கு வரியிலிட்டு குடுத்தப் பின்னரும் அந்த நிலத்தை, புதுப்பாக்கத்துச் சபையார் வன்முறையில், அடாத முறையில் கைப்பற்றி அனுபவித்துக் கொண்டதுடன் கோயிலுக்குச் சேரவேண்டிய இறையையும் கட்டாமல் விடுகின்றனர்.

இந்த வரி ஏய்ப்பை எதிர்த்துக் கேட்ட கோயில் அதிகாரிகளையும் அவர்கள் துன்புறுத்தியதாகத் தெரிகிறது. சபையார்களின் அட்டகாசம் எல்லை மீறியபோது இத்தகவல்கள் அரசனிடம் முறையிடப்படுகிறது:

> 'இப்பரிசு குடுத்த இச்சங்கப் பாடி கிழான் காணியைப் புதுப்பாக்கத்து ஸபையார் பற்றியாண்டு (வரை) தெவர்க்கு இறையிறா தொழிகின்றார்களென்று தெவகன்மிகளும் உண்ணாழிகையுடையாரும் பன்மாயெஸ்வரரும் வந்து அனியாயம் அடுகின்றார்கள் என்று நமக்குச் சொல்ல . . .'

இதன் பிறகு அரசன் கோயில் அதிகாரிகளையும் சபையார்களையும் அழைத்து நேரடி விசாரணை செய்தபோது ஊழல் வெளிப்படுகிறது. சபையார் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்கின்றனர். அவர்கள் தண்டிக்கப் படுகிறார்கள். தண்டிக்கப்பட்ட பிறகும் அரசன் மீண்டும் இந்நிலங்களை இச்சபையாரே பெற்று கோயிலுக்குத் தேவதான இறை செலுத்தும் சலுகையை வழங்குகிறான். இதனை,

> 'திருமால் பெற்றுத் தெவகன்மிகள் உண்ணாழிகை உடையார்களையும் பன்மாயேஸ்வரர்களையும் புதுப்பாக்கத்து சபையாரையும் அழைத்து நாம் ஆராய்ந்து இடத்து புதுப்பாக்கத்து ஸபையார்

சிற்றியாற்றூர் சங்கப்பாடி கிழான் காணியால்
தெவர்க்கு இறையிறுதெய் தெவதானங்களை
அனுபவித்து வருகின்றமைய் இசைந்தமையில்
புதுப்பாக்கத்து சபையாரைத் தண்டங்கொண்டு
இச்சங்கப்பாடி கிழான் காணி மூவாயிரக்காடியும்
திருமால்பெற்று உடையாற்கு புதுப்பாக்கத்து
சபையா ரெய் இறுப்பதாக இவர்களுக்கெய் யாண்டு
14 முதல் தெவதான பிரம்மதெயமாய் . . . . வரியிலிட்டு
க் கொள்க வென்று நாஞ் சொல்ல . . . .''

என்று கூறும் கல்வெட்டு வாசகங்களால் அறியலாம்.

இத்தகைய வரி ஏய்ப்பு ஊழல் விசாரணையானது இனிமேல் இந்த மாதிரி நடவாமல் இருக்கவேண்டும் என்று பலர் முன்னிலையில் நடத்தப்பட்டது. அதாவது இந்தப் பகுதி பிரம்மதேயக் கிழவர்கள், நாட்டார்கள், நகரத்தார்கள் ஊரார்கள் பள்ளிச் சந்தம் மற்றும் பிற சபை அமைப்புகளின் அலுவலர்கள் ஆகியோரை அழைத்து நடத்தப்பட்டது. இதனை அரசனே காஞ்சிபுரத்தில் வந்து தங்கி செய்தான்.

'' ஸ்வஸ்தி ஸ்ரீ கொனெரின்மை கொண்டான்மணையில்
கொட்டத்துப் மணையில் நாட்டார்க்கும்
பிரம்ம தெயக் கிழவர்க்கும் தெவதானப்
பள்ளிச் சந்தக் கணிமுற்றூட்டு வெட்டப்பெற்றுள்ளார்
களிலார்க்கும் நகரங்களிலார்க்கும் யாண்டு 14-வது நாள்
106 னால் கச்சிப்பெட்டு நம் வீட்டிநுள்ளால்ப் பொன் மாளிகை
ஆதிபூமியில் நாமிருக்க''

என்று கூறுவதால் அறியலாம்.

மேலும் அப்போது அவனுடன் கருமம் ஆராய்கின்ற (தலைமைச் செயலர்) அதிகாரியாக ஒருவனும், நடுவிருக்கை, ஆணத்தி, வாய்க் கேழ்வி, ஓலை எழுதும் அதிகாரி, ஓலை நாயகன், புரவு வரி அதிகாரி, உத்தர மந்திரி, வரிப்பொத்தகக் கணக்கு ஆகிய வருவாய்த்துறை அனைத்து அதிகாரிகளும் இருந்து இதனை நடத்தி ஒழுங்குபடுத்தியுள்ளனர். இதிலிருந்து பிரம்மதேய சபையார்கள் அரசனின் ஆணைகளையே மதியாமல் ஏமாற்றும் துணிச்சலைப் பெற்று விளங்கினர் என்றும் இந்த ஊழலில் அளவையும், தன்மையையும் நாம் ஒருவாறு உணரலாம்.

கோயில் உண்ணாழிகை உடையார்களின் ஊழல்கள்

இதேபோன்ற ஊழல்கள் திருமால்புரத்திலுள்ள கோயிலில் இராசராச சோழன் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அக்னீச்சுவரர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைத் தாங்களே அனுபவித்து வந்ததுடன் வழிபாட்டு நிவந்தங்களையும் செய்யாமலும் விட்டுவிடுகின்றனர். இறைவனுக்குப் படைக்கின்ற அமுதை வெறும் அரிசியாக அவித்து படைத்தனர். பல சிறிய பெரிய அதிகாரிகளின் துணையுடன் சென்று இதனை கண்டறிந்து அதிகாரிகளை தண்டித்துப் பழையபடி நிர்வாகத்தை சீர்பெறச் செய்தவன் உத்தமசோழனின் மகனான மதுராந்தகன் கண்டராதித்தன் என்பவன்,

இவனே இதேபோன்று திருவல்லம் கோயிலுக்குச் சென்று இறைவனுக்கு வழிபாடு நடத்தி வணங்கிய சமயத்தில், அங்கு இறைவனுக்குப் படைக்கப்படும் திருவமுதின் அளவு குறைந்தும் எண்ணெயின்றி விளக்கு ஒளி குறைந்து எரிவதையும் கண்டு இது பற்றி விசாரித்து ஊழல்களைக் கண்டு பிடித்துத் தண்டித்தார்.

> " . . . மதுராந்தகன் கண்டராதித்தனார் ஆழ்வாரை
> சகஸ்ரகலச மாட்டுவிக்க வந்து திருவடி தொழுது
> நிற்க ஆழ்வார்க்கு காட்டுகின்ற திருவமுர்தும்
> இருநாழியரிசித் திருவமுர்தாய்க் கறியமுர்து
> நெய் அமுர்தும் தயிர் அமுர்தும் இன்றியெய்
> தொந்தாவிளக்கும் ஆலஸ்யமாயிருக்க கண்டு
> இத்திருக்கொயில் சிவப்பிராமணரையும்
> திக்காலிவல்லத்து சபையாரையும்
> அழைத்து இத்தெவருடைய ஆயமும்
> வீயமும் திருவாணைக்குந் திருவொலைக்கும்
> உரிய வண்ணஞ் சொல்லுக வென்று வினவ
> சிவப்பிராமணரும் திக்காலிவல்லத்து சபையாரும்
> சொல்ல- "[3]

என்று கூறுகிறது. ஆனால் இக்கல்வெட்டு முழுதும் நமக்குக் கிடைத்திலது. இருப்பினும் விசாரணையின் முடிவு பற்றிய செய்தி மற்றொரு கல்வெட்டில் கிடைக்கிறது

> " ...யாண்டு ஏழாவது திக்காலி வல்லத்துத் திருத்
> திக்காலிப் பெருமானடிகள் பொகமான நிலங்களைய்

இக்கொயில் சிவப்பிராமணர்கள் இறக்கி உண்ட
மையில் இவர்களை மதுராந்தகன் கண்டராதித்தநார்
ஆராய்ந்து தண்டங்கொண்ட பொன் எழுபத்து
நாற்கழஞ்சும் -,'[1]

என்றும் கூறுகிறது. இவ்விசாரணையில் ஊர்ச் சபையார் விசாரிக்கப்பட்ட போதிலும் அவர்கள் குற்றமற்றவர்கள் என்றும் கோயில் சிவப்பிராமணர்களே குற்றம் புரிந்தவர்கள் என்பதும் பெறப்படுகிறது.

இவ்விசாரணையைத் தொடர்ந்து பல ஊழல்கள் இந்த கோயில் களிலும் கோயிலைச் சேர்ந்த ஊர்களின் நிர்வாகத்திலும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் இக்கோயிலுக்கென்று புது நிர்வாக அதிகாரி ஒருவன் இராசராசனின் 13-ஆம் ஆட்சி ஆண்டில் நியமிக்கப்பட்டதைக் காண்கிறோம்.

இவ்வதிகாரியின் பெயர் ஈராயிரவன் பல்லவனான மும்முடி சோழ போசன். இவன் இராசராச சோழனின் பெருந்தரத்து அதிகாரி. நித்தவினோத வளநாட்டு பாம்புணிக் கூற்றத்து அரை சூரைச் சேர்ந்தவன். தஞ்சைப் பெரிய கோயிலில் சண்டேசுவரர் திருமேனியை எழுந்தருளுவித்து ஏராளமான பொன்னைக் கொடை யாக அளித்தவன்[5].

இவன் திருவல்லம் கோயிலுக்கு 'மேநாயகஞ் செய்யும்' அதிகாரி யாக நியமிக்கப்பட்டான் (208/1921).[6] இவன் பொறுப்பேற்றபின் இவ்வூர் ஆளுங்கணத்தாருள் ஒருவனின் மருமகன் 25 பொன் பெற்றுக்கொண்டு ஒரு நொந்தா விளக்கு எரிக்க ஒப்புக் கொண்டான். ஆனால் எரிக்காமல் விட்டு விட்டான். இதனைக் கண்டுபிடித்துத் தண்டித்தான்.

இப்படி இவன் பலவகை ஊழல்களையும் கண்டறிந்து அபராத மாக வசூலித்து கருவூலத்தில் சேர்த்த பொன் 140 கழஞ்சு 7 மஞ் சாடி ஆகும்.

இதே போன்று திருவல்லம் கோயிலுக்கு சொந்தமான தேவதான ஊர் மந்திரத்துச் சபையார் செலுத்த வேண்டிய பஞ்சவாரத்தில் அளவு விதிக்கப்பட்ட வேண்டிய வரிவிதத்தில் விதிக்கப்படாமல் குறைந்த அளவாக நிர்ணயிக்கப்பட்டிருந்ததை (அல்லது வசூலாக வேண்டிய பஞ்சவாரம் செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்ததோ

சரிவரத் தெரியவில்லை) இவன் ஆராய்ந்து வகுலித்தான். இதனை இராசராசனின் 22-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது.

மேலும் இச்சமயம் இவ்வதிகாரி 'மேநாயம் செய்கின்றவர்' என்ற பதவியில் இருந்து 'ஸ்ரீகாரியம் கடைக்காண்கின்ற' அதிகாரியாக பொறுப்புகள் நிறைந்த உயர் அதிகாரியாக உயர்த்தப்பட்டுள்ளான். இதிலிருந்து இப்பகுதி நிர்வாக சீர்கேட்டின் ஆழமான சிக்கலும் அதை தீர்க்கும் முகத்தான் இவருக்கு கூடுதலான தனி அதிகாரங்கள் வழங்கப்பட்டமையும் புலனாகிறது.

மதுராந்தகன் கண்டராதித்தர், மும்முடி சோழ போசன் ஆகியோருக்குப் பிறகு இராசேந்திர சோழன் காலத்திலும் இக் கோயிலின் முறைகேடுகளைச் சரிபார்த்துச் சீரமைக்கும் பணி தொடர்ந்து நடந்துவந்தது. இப்பணியைச் செய்தவர் கொட்டையூர் பூவத்தபட்ட சோமாசியார். இவர் மேற்பாடி கோயிலில் இருந்து கொண்டு திருவல்லம் கோயில் கணக்குகளையும், மேற்பாடி கோயில் கணக்குகளையும் ஆராய்ந்தார். முன்பு மதுராந்தகன் கண்டராதித்தன் பின்பற்றிய முறையை இவரும் கடைப்பிடித்துக் கணக்குகளை ஆராய்ந்தார்.

திருவல்லம் கோயிலின் ஊழல் விசாரணை, அதிராசேந்திரன் காலத்திலும் தொடர்ந்து நடத்தப்பட்டது என்பதை இவனது 3-ஆவது ஆண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது. இதனைச் சோழ நாட்டு அதிகாரியும், படைகள் நடத்தும் சேனாபதி ஒருவனும் வந்து நடத்தினர். படைத்தளபதி வந்து விசாரித்தான் எனில் விசாரணைக்கு இப்பகுதியில் எதிர்ப்பு கிளம்பியதால் அதை அடக்க, படைகளுடன் வரவேண்டியிருந்திருக்கும் என ஊகிக்கலாம். இக்கோயிலின் பல தேவதான ஊர்களின் கணக்குகள் சரிபார்க்கப்பட்ட செய்தியை அறிகிறோம்.

அடுத்தது மேற்பாடி கோயிலில் செய்யப்பட்ட விசாரணைகள். இது திருவல்லத்துக்கு மேற்கே ஆறுகல் தொலைவில் உள்ள ஊர். இங்கு தான் இராசராச சோழன் சோழேந்திர சிங்க ஈச்வரம் என்ற சிவாலயத்தை 14-ஆவது ஆண்டிலும், அறிஞ்சய சோழனுக்குப் பள்ளிப்படையாக அறிஞ்சிகை ஈச்வரம் என்று கோயிலைத் தனது 29-ஆவது ஆண்டிலும் எடுப்பித்தான்.

அரசனால் கட்டப்பட்ட கோயில்கள் என்பதனால் அரசனும் அதிகாரிகளும், ஊர் மக்கள், நகரத்தார்கள் போன்ற ஏராளமான

பேர்களும் இக்கோயில்களுக்குக் கொடையளித்தனர். இக்கோயிலில் வந்து குவிந்த செல்வங்களைப் பற்றி இவ்வூர்க் கல்வெட்டுக்கள் நிரம்பப் பேசுகின்றன.

ஆனால் சோழேந்திரசிங்க ஈச்வரர் கோயில் கட்டிச் சரியாக 20 ஆண்டுகள் ஆவதற்குள்ளாகவே இக்கோயிலின் செல்வங்கள் சூறையாடப்பட்டு, செல்வங்கள் குறைந்து நிவந்தங்கள் நிறுத்தப் படுகின்ற நிலையைப்பார்க்கிறோம். இதனால் இராசேந்திர சோழனின் 4-ஆவது ஆட்சி ஆண்டிலேயே ஊழல் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

> "யாண்டு நாலாவது நடுவிருக்கும் கொட்டையூர்
> ஊவத்தபட்ட ஸொமாயாஜியார்
> . . . . . சொளெந்திரசிங்க ஈஸ்வரமுடையார்
> கோயிலின் வட பக்கத்து சாலை
> அருமொழி தேவனிற்க் கோயில் கருமமா
> ராயாவிருந்து . . . ."[7]

என்ற வரிகளால் அறிய முடிகிறது.

இவ்விசாரணை தொடர்ந்து இவ் வரசனின் 10-ஆவது ஆட்சி ஆண்டிலும் நடத்தப்பட்டது. இதற்கு மற்றொரு காரணம் இம் மன்னன் பழையாறை கோயிலினுள்ளால் திருமஞ்சன சாலை பள்ளி பீடத்து எழுந்தருளியிருந்த போது இக்கோயிலுக்கு வேண்டிய நிவந்தங்களாகக் கருவேடு, ஒழுகையூர், வாங்கூர், மருதம்பாக்கம், பெரும்பனூர் ஆகிய ஊர்களை அளித்தான். ஆனால் இவை இவனின் 10-ஆவது ஆண்டு வரை நிவந்தஞ் செய்யாமல் கிடந்தது. இதன் பிறகு மன்னன் மேற்கூறிய ஊர்களின் வருமானத்தைக் கோயிலுக்கு செலவிட ஏற்பாடு செய்த செய்தி காணப்படுகிறது.

இதேபோன்று முதலாம் இராசராசன் காலத்தில் ஏற்படுத்தப் பட்ட அறக்கட்டளை ஒன்று நடத்தப்படாமல் கிடந்தது. மூன்றாம் இராசராச சோழன் காலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

சித்தூர் மாவட்டம், புத்தூர் வட்டம் திருச்சானூரில் உள்ள திருப்பாலதீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டு இதுபற்றித் தெரிவிக் கிறது. கோயில்களில் மகர சங்கிராந்தியன்று 109 பாலிகைகள், 108 கலசங்கள் வைத்து விழாக்கள் நடத்தப்பட்டன. இத்தகைய விழா ஒன்றை தை மாத உத்தராயண மகர சங்கராந்தியன்று கொண்டாடு வதற்காகச் சோழ நாட்டைச் சார்ந்த நம்பன் கூத்தாடியான செயங்

கொண்ட சோழப் பிரம்மராயன் இக்கோயில் பண்டாரத்தில் 26 கழஞ்சுப் பொன்னை முதலீடாக வைத்தான்.

இதனை திருச்சானூர் பிரம்மதேயச் சபையார் கடனாகப்பெற்று அதற்கு வட்டியாக இவ்விழாவைச் செய்வோம் என்று கல்வெட்டு வெட்டிக் கொடுத்தனர். இது நடந்தது முதலாம் இராசராசனின் இருபத்து மூன்றாமாண்டு, 80-ஆம் நாள். அதாவது கி.பி. 1008-இல் ஆகும். ஆனால் இந்த அறக்கட்டளை சுமார் 217-ஆண்டுகள் நடத்தப்படாமலேயே திருச்சானூர் சபையினரால் ஏமாற்றப்பட்டு வந்தது.

மூன்றாம் இராசராசனைப், பாண்டியர்கள், காடவகோப்பெருஞ் சிங்கன் ஆகிய இருவரின் பிடியிலிருந்து மீட்டவனும், சோழ மண்டல பிரதிட்டாபனாச்சாரி என்ற பட்டம் கொண்டவனுமான போசள மன்னன் வீரநரசிங்கயாதவராயன் (வீரநரசிம்மன்) இப் பகுதியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தபோது இக்கோயில் பற்றிய வழக்கு கொண்டு வரப்பட்டது.

திருச்சானூர் பிரம்மதேய சபையார்கள் இக்கட்டளையை நடத்தாமல் விட்டனர் என்று இக்கோயில் தானத்தார்கள் இவ் வழக்கைத் தொடுத்தனர். இதனை மன்னன் திருகண்ணப்ப தேவன் திருக்காவண மண்டபத்தில் அமர்ந்து சபையாரை அழைத்து விசாரித்தான். அவர்கள் இக்கட்டளை பற்றி தங்களுக்குத் தெரியாதென்று கூறிவிட்டனர். ஆனால் கோயில் மாகேசுவரர்கள் கல்வெட்டுச் சாசனத்தை வழக்கு மன்றத்தில் படித்துக்காட்டி வழக்கை நிரூபித்தனர்.

இதன்படி இச்சபையாரிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பொன் 26 கழஞ்சை அவர்கள் கோவில் கருவூலத்தில் திருப்பிக் கட்டவேண்டும் என்றும், அதனைச் சபையார் நடத்தும் உரிமையை இழந்தனர் என்றும் மன்னன் தீர்ப்பளித்தான்.

இவ்வழக்கு பற்றிய தகவல் அடங்கிய அனைத்து விவரங்களை யும் மீண்டும் மூன்றாம் இராசராச சோழனின் ஒன்பதாவது ஆட்சி யாண்டில் (கி.பி. 1224-1225) கல்வெட்டாக வெட்டுவிக்கப்பட்டது.

கோயில் நிலங்களை அனுபவித்து வந்தவர்களை உலகிற்குக் காட்ட தம் உயிரையும் கொடுத்துள்ளனர் சிலர்.

தஞ்சை மாவட்டம் மாயவரம் வட்டத்தில் உள்ளது புன்செய் எனும் ஊர். இங்கு நல்துணைஈச்வரம், திருநனிப்பள்ளி உடையார்

கோயில் என்றழைக்கப்பட்ட சிவாலயம் உள்ளது. இது ஆக்கூர் நாட்டு பிரம்மதேயத்தில் தலைச்செங்காட்டு ஊர் சபையினரின் மேற்பார்வையில் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

இக்கோயிலுக்கு உரித்தான நிலங்களைத் தங்களுடையது என்று நான்குபேர்கள் பொய் உரிமை கொண்டாடி அனுபவித்து வந்தனர். இதனை யாரும் கேட்டு நடவடிக்கை எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டது.

இருப்பினும், இச்சொத்து கோயிலுக்கு உரியதுதான் என்று உலகிற்கு மெய்ப்பிக்கத் திருகூல வேளைக்காரன் என்ற சிவனடியார் இனத்தைச் சேர்ந்த சிலர் தீமூட்டி அதில் குதித்து இறந்தனர்.

இந்நிகழ்ச்சியினால் அதிர்ச்சியுற்ற சபையார்கள் உடனடியாகக் கூடி விசாரணைசெய்து பொய் உரிமை பாராட்டியவர்களைத் தண்டித்து, நிலங்களைத் திரும்பவும் கோயிலுக்கு வழங்கவேண்டும் என்றும், இறந்தவர்கள் அனைவர்க்கும் உலோகப் படிமங்கள் அமைக்க 200 காசுகள் அவர்களிடமிருந்து வசூலிக்கவேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கினர்.

மன்னர்களை விட இறைவனடியார்களுக்கு அவனின் உடைமைகளை காப்பதில்தான் எத்துணை ஈடுபாடு, தியாக உணர்வு இருந்தது என்பதை இக்கல்வெட்டுக் காட்டுகிறது.

முடிவுரை

இக் கட்டுரையில் இருந்து பெறப்பட்டும் செய்திகள்:

1 இத்தகைய முறைகேடுகளை செய்துள்ளவர்கள் சதுர்வேதிமங்கல, பிரம்மதேய, தேவதான ஊர்களில் உள்ள சபையார்கள். இவைகள் எல்லாம் அக்காலத்தில் சுயாட்சியும், தன்னாட்சியும் பெற்று விளங்கிய பிராம்மணர்களின் ஊர்களே.

2 கோயில் நிவந்தங்களை இறக்கி உண்டவர்கள் சிவப் பிராமணர்கள்.

3 நாட்டார், நகரத்தார், ஊர் மக்கள் ஆகியவர்கள் இத்தகைய செயல்களில் ஈடு பட்டதாக அதிக குறிப்புகள் இல்லை.

4 இத்தகைய ஊழல்கள் பற்றிய செய்திகள் அரசனுக்கு நேரில் கூறப்பட்டது.

5 அரசனே இவற்றைத் தீர விசாரித்து ஒழுங்கு செய்துள்ளான்.

6 அரசே இதற்கென தனிப்பட்ட அதிகாரிகளை நியமித்து ஊழல்களை ஆராய்ந்துள்ளது.

7 சில சமயம் அரசின் உயர் அதிகாரிகள் தாங்களாகவே இத்தகைய ஊழல்களை உய்த்தறிந்து கண்டு பிடித் துள்ளனர்.

8 மேலும் இத்தகைய விசாரணைகளின்போது எதிர்ப்புகளும் இருந்தமையால் இப்பணியில் ஆய்வு அதிகாரிகளுடன் படைத் தளபதிகளும் அனுப்பப் பட்டனர்.

9 ஊழல்கள் நடந்துள்ள காலங்கள் பெரும்பாலும் பராந்தக சோழன் காலத்திற்குப் பிறகும் இராசராசசோழனின் ஆரம்ப ஆட்சி காலத்திலும் ஆகும். இந்த இடைப்பட்ட காலத்தில் தக்கோலப் போருக்குப் பிறகு தொண்டை மண்டலமானது இராட்டிர கூடர்களால் கைப்பற்றப் பட்டதும், அதை மீட்கும் போராட்டத்தில் தங்கள் உயிரை இழந்தும் சோழ அரசர்கள் போராடி யுள்ளனர் என்பதும், அப்போது வலிவற்ற, நிலையற்ற அரசு நிலவியது என்பதும் வரலாறு காட்டும் உண்மைகளாகும்.

இதனால் இக்காலத்தில் கோயில் செல்வங்களும், நிலங் களும் கவனிப்பாரின்றி அவரவர்களே கிடைத்ததை அனுபவித்து வந்துள்ளனர் என்று கருதவும் இடமிருக்கிறது.

10 மேலும் விசாரணை நடத்தப் பட்ட இடங்கள் சோழப் பேரரசின் தலைமை இடங்களிலிருந்து (தஞ்சை, கங்கை கொண்டசோழபுரம்) சுமார் 500 கி.மீ. தொலைவில், பேரரசின் வடகோடி எல்லையில் அமைந்திருந்தமையால் நடுவண் அரசின் உடனடி கவனத்திலும், நேரடிப் பார்வை யிலும் இருக்க முடியாத நிலை இப்பகுதிக்கிருந்தமையால் முறை கேடுகள் நடக்க ஏதுவாயிற்று.

11 மேலும் சோழப் பேரரசின் மீது பாண்டியர்களும் ஹொய் சாளர்களும் கோப்பெருஞ்சிங்கன் போன்ற சிற்றரசர்களும், தாக்கிய காலத்தில் வலிவிழந்து சோழப் பேரரசு ஆடிக் கொண்டிருந்த மூன்றாம் இராசராசன் காலத்தில் (1216-36) மீண்டும் இதுபோன்று கோயில் சொத்துக்களைச் சிவப்

பிராமணர்கள் கொள்ளையடித்த செய்திகளைக் காண்கிறோம்.

சிவபுரத்தில் 1239-இல் எழுதப்பட்ட கல்வெட்டானது இக்கோயில் சிவப்பிராமணர்கள் இருவர் சிவபுர இறைவனின் நகைகளைத் திருடிச்சென்று தம் காதற்பரத்தைக்குக் கொடுத்தும் நிவந்தங்களைத் தீய வழிகளில் செலவிட்டும், அரசுக்கு வரி கொடுக்க மறுத்தும், வரி கேட்க வந்த வரித் தண்டலர்களை அடித்தும், கன்னட வீரர்களுடன் சேர்ந்து கொண்டு மக்களைத் துன்புறுத்தி 50,000 காசுகள் வசூலித்தும் புரிந்த அட்டூழியங்களை வரிசைப்படுத்திக் கூறுகிறது.

அடிக்குறிப்புக்கள்

1. சதாசிவப்பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு, பக் 490-497.
2. 286/1906.
3. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம், 3, எண்: 49.
4. 218/1921.
5. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் 2, எண்: 55.
6. 208/1921.
7. 227/1921.

★

சோழர் காலச் சமயப்பணி

ஆ. வேலுசுவாமி சுதந்திரன், எம்.ஏ., எம்.லிட்,
துணைப் பேராசிரியர்,
பூம்புகார் பேரவைக் கல்லூரி

சோழர் கால மன்னர்களைப்போன்று அவர்கள் காலத்திருந்த அரசியல் அதிகாரிகள் படைத்தலைவர்கள், குறுநில மன்னர்கள், பல் வேறு முறையில் இறைப்பணியாற்றியிருக்கின்றனர். ஒரு சிலவற்றை இங்கே காண்போம்.

கோயில் கட்டுவித்தல்

முதலாம் இராசராசன் காலத்தில் திருவையன் சங்கர தேவன் என்ற குறுநில மன்னன் வடார்க்காடு மாவட்டத்திலுள்ள, திருவல் லத்தில் திருவையேச்சுரம் என்னும் ஒரு சிவன் கோயிலை எடுப்பித் தான்.[1] இவன் எந்த குறுநில அரசைச் சார்ந்தவன் என்பது தெரிய வில்லை. ஈராயிரவன் பல்லவரையன் ஆரிய சோழ போசன் என்ற படைத்தலைவன் தஞ்சைப் பெரிய கோயிலில் சண்டேசுவர தேவர்க்கு ஒரு சிறு ஆலயம் அமைத்தான்.[2] இக்கோயிலின் திருச்சுற்று மாளி கையை அமைத்தவன் சேனாபதியாகிய மும்முடிச் சோழ பிரம்மமா ராயன் என்பவனாவான்.[3] இவன் பல்லவர்குலத்தில் தோன்றிய ஒரு சிறந்த அதிகாரியாக இருக்கலாமென்று தி. வை. சதாசிவ பண்டாரத் தாரவர்கள் கருதுகிறார்கள். முதலாம் இராசேந்திரன் காலத்தில் மாராயன் அருண்மொழியான உத்தம சோழ பிரம்மமாராயன் என்ற படைத்தலைவன் கி.பி. 1033-இல் ஒரு பிடாரி கோயிலை அமைத் தான்[4]. வீரராசேந்திரன் காலத்தில் கங்கைகொண்ட சோழ தன்ம பாலன் என்ற படைத்தலைவன் திருமுக்கூடல் கோயிலில் சனநாதன் மண்டபமும், திருச்சுற்று மாளிகையும் எடுப்பித்தான்.[5] இரண்டாம் இராசராசன் காலத்திலிருந்த படைத்தலைவன் திருச்சிற்றம்பல முடையான் பெருமான் நம்பியான பல்லவரையன் என்ற படைத் தலைவன் அரசன் பெயரால் இராசராசேச்சுரம் என்னும் கோயிலை அமைத்தான்.[6] இந்த ஊர் தற்போது பல்லவராயன்பேட்டை என்று அழைக்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறைக்கருகில் அமைந்திருக்கிறது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சம்புவராய குறுநில அரசைச் சார்ந்த அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டா னாகிய கண்ட சூரியன் சம்புவராயன் என்பவனின் திருவரைக்

கரையிலுள்ள சிவன் கோயிலில் சூரியன் திருக்கோபுரமென்ற கோபுரமும், கண்டர் சூரியன் என்ற ஆயிரங்கால் மண்டபமும் கட்டினான்.[7]

கோயில்கள் புதுப்பித்தல்

கோயில்கள் புதிதாக அமைத்தது போல், சில கோயில்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாம் இராசேந்திர சோழன் காலத்தில் மிலாடுடையான் நரசிங்கவர்மன், திருக்கோவலூரில் செங்கற்களாலமைந்த திருமால் கோயிலைத் திருக்கற்றளியாக மாற்றியிருக்கிறான்.[8] இதேபோன்று, வீரராசேந்திர சோழன் காலத்தில் இராசேந்திர மூவேந்த வேளான் என்ற அரசியல் அதிகாரி திருவொற்றியூரில் படம்பக்கநாதர் கோயிலைக் கற்றளியாக மாற்றினான்.[9] முதல் குலோத்துங்கன் காலத்தில் வாணகோவரையன் சுத்தமல்லன் உத்தம சோழனாகிய இலங்கேசுவரன் மேலப்பழுவூரிலிருந்த செங்கற் கோயிலைக் கற்றளியாக மாற்றி, அதற்கு மன்னன் பெயரால் "குலோத்துங்க சோழீச்சுரம்" என்று பெயரிட்டான். இரண்டாம் இராசராசன் காலத்தில் இராசகம்பீர சேதிராயன் என்ற மலையமான் வம்சத்தைச் சார்ந்த குறுநில மன்னன் ஒரு திருமால் கோயிலைக் கற்றளியாக மாற்றினான்.[10]

இறையிலி நிலங்கள் அளித்தல்

கோயில்களின் பராமரிப்பிற்காக நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. முதற் குலோத்துங்கன் காலத்தில் கிளியூர் மலையமான் நானூற்றுவன் அத்திமல்லனான இராசேந்திர சோழ சேதிராயன் என்ற மலையமான் வம்சத்துக் குறுநில மன்னன் திருக்கோவலூரிலுள்ள திருமால் கோயிலுக்கும், சித்தலிங்க மடத்திலுள்ள சிவன் கோயிலுக்கும் நிலம் கொடுத்திருக்கிறான்.[11] அது போன்று சித்தூர் மாவட்டத்திலுள்ள சிவன் கோயிலுக்குக் கி.பி. 1101-இல் நிலம் கொடுத்த பெருமை சீயகங்கன் என்ற குறுநில மன்னனைச் சாரும்.[12] இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் மலையமான் குலத்தைச் சார்ந்த கிளியூர் மலையமான் இராச கம்பீர சேதிராயன் என்பவன் தென்னார்க்காடு மாவட்டம் சண்பை என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிலுக்கு நிலம் கொடுத்தான்.[13] இரண்டாம் இராசராசன் காலத்தில் கரூர் மலையிலமைந்த ஒரு கோயிலுக்கு நிலம் கொடுத்துப் பெருமை பெற்றவன் இராசேந்திர சோழ பல்லவராதித்தனென்ற படைத்தலைவனாகும்.[14] மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் குறுநில மன்னர்களாயிருந்த கிளியூர் மலையமான் இறையூரன் இராச ராச சேதிராயனும்,[15] அதியமான் இராசராச தேவனும்,[16] அம்மை

யப்பன் கண்ணுடைப் பெருமாளான விக்கிரமசோழ சம்புவரா யனும்[17] செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழனான எதிரிலிச் சோழ சம்புவராயன் என்பவனும்[18] முறையே புல்லூர், தகடூர், சீய மங்கலம், திருவோத்தூர் கோயில்களுக்கு நிலம் அளித்தவர்கள்.

செப்புப் படிமங்களமைத்தல்

இரண்டாம் இராசேந்திர சோழன் காலத்தில் சேனாதிபதி அரையன் கங்கைகொண்ட சோழன் இராசராச அணிமுரி நாடாழ் வான் என்ற படைத்தலைவன் நடராசப் பெருமானுக்குப் பஞ்சலோ கத்தால் உருவம் அமைத்திருக்கிறான்.[19] வேறு சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை.

தேவார, திருவாய்மொழித் தொண்டு

பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்ற அரசியலதிகாரி கி. பி. 995-இல் திருச் சோற்றுத்துறைக் கோயிலில் தேவராப்பதிகம் பாடுவோர்க்குப் பொன் அளித்துத் தொண்டாற்றினான்.[20] முதற் குலோத்துங்கன் காலத்தில் அரும்பாக்கிழான் மணவிற் கூத்தனான காலிங்கராயன் என்ற படைத் தலைவன் சமயக் குரவர் மூவர் பாடிய தேவராப் பதிகங் களைச் செப்பேடுகளில் எழுதி வைத்தான். இராசேந்திர சோழ மாவலிவாணவராயன் என்ற மன்னன், கோயிலில் திருவாய்மொழி விண்ணப்பம் செய்வதற்கு ஏற்பாடு செய்து பெருமை பெற்றவனா வான்.[11]

பொன் வேய்தல்

இரண்டாம் இராசேந்திர சோழன் காலத்தில் வேளாள கூத்த னாகிய செம்பியன் மூவேந்த வேளான் என்ற படைத்தலைவன் திருவாரூர்க் கோயிலில் கருவறைக்கும், அர்த்த மண்டபத்திற்கும் பொன் வேய்ந்தான்.[22] இதேபோன்று திருவண்ணாமலைக் கோயி லுக்கு பொன் வேய்ந்து "பொன் பரப்பினான் மகதைப்பெரு மாள்"(ன்) என்று சிறப்புப் பெயர் பெற்றவன் இராசராச வாண கோவரையனென்ற குறுநில மன்னனாவான்.[23] சிதம்பரம் கோயி லுக்கு பொன் வேய்ந்த பெருமை காடவ குல அரசன் கோப்பெருஞ் சிங்கனுக்கும் உண்டு.

அணிகலன்கள் கொடுத்தல்

பொன்னாலான அணிகலன்களைப் பாண்டியன் சீவல்லபன் என்ற குறுநில மன்னனும்.[34] சூரிய நாயகன் மாதவராயன் என்ற

படைத்தலைவனும்[25] ஏழிசை மோகன் ஆட்கொள்ளியான குலோத்துங்க சோழ காடவராயன்,[26] கூடலூர் அரச நாராயணன் ஆளப் பிறந்தான் வீரசேகரக் காடவராயன் என்ற காடவ குலக் குறுநில மன்னர்களும் முறையே திருவியலூர், திருப்பாசூர், திருநாவலூர், திருவதிகை, விருத்தாசலம், திருவெண்ணெய் நல்லூர், திருவண்ணாமலை, திருமாணிக்குழி, எலவானாசூர், சித்தலிங்க மடம் ஆகிய ஊர்களிலமைந்த கோயில்களுக்குப் பலவிதமான அணிகலன்கள் கொடுத்திருக்கிறார்கள்.

மடங்கள் கட்டுதல்

முதலாம் இராசாதிராசன் காலத்தில் இராசாதிராசப் பல்லவராயன் என்ற படைத்தலைவன் அந்தணர்களையும் சிவயோகிகளையும் நாள்தோறும் உண்பிப்பதற்குத் திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கேயுள்ள திருப்பைஞ்ஞீலிக் கோயிலைச் சார்ந்த செந்தாமரைக் கண்ணன் என்ற மடத்திற்கு நிலமளித்தான். அதிராசேந்திரன் காலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள புறவார் பனங்காட்டூரில் ஒரு பெரிய மடம் நிறுவப்பட்டது[27]. விக்கிரமசோழன் காலத்தில் திருச்சிற்றம்பலவன் மானசேகரன் என்பவன் பூம்புகாரில் மடம் அமைத்து அந்தணர்களுக்கு உணவளித்திருக்கிறான்.[28]

திருவிழாக்கள் ஏற்படுத்துதல்

புதுச்சேரிக்கருகிலுள்ள திரிபுவனி[29], செங்கை மாவட்டத்தில் திருவொற்றியூர்,[30] தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவெண்காடு போன்ற கோயில்களில் திருவிழாக்கள் சிறப்பான முறையில் நடைபெற்றிருக்கின்றன.

கல்லூரி அமைத்தல்

சோழப் பேரரசர்கள் காலத்தில் எண்ணாயிரம், திருபுவனி, திருவாவடுதுறை ஆலயங்களில் கல்லூரிகள் அமைக்கப்பட்டு, வேதங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது போல், முதலாம் இராசாதிராசன் காலத்தில் புதுச்சேரிக்கு அருகாமையிலுள்ள திரிபுவனியில் ஒரு கல்லூரி ஏற்படுத்தி அதன் பராமரிப்பிற்காக 72 வேலி நிலத்தை, இராசேந்திர சோழ மாவலி வாணராயன் என்ற குறுநில மன்னன் கொடுத்தான்.[31]

நுந்தா விளக்கு எரித்தல்

குலோத்துங்கன் காலத்தில் பஞ்சநதிவாணன் முடிகொண்டானான வத்தராயன் என்ற அரசியலதிகாரி கோதாவரி மாவட்டம்

இராமச்சந்திரபுரம் வட்டத்தைச் சார்ந்த் திராட்சாராமம் பீமேசுர முடைய கோதேவர்க்கு ஒரு நந்தா விளக்கு கொடுத்தான். இதே போன்று வேளான் மாதவனாகிய இராசவல்லபப்பல்லவராயன் என்ற படைத்தலைவன் கோதாவரி மாவட்டம் பீமாவரத்திலுள்ள திருமால் கோயிலுக்கும்[33] சேனாதிபதி ஞானமூர்த்திப் பண்டிதனாகிய மதுராந்தகப் பிரமாதிராசன் திருவொற்றியூர்க் கோயிலுக்கும்,[24] புக்கத்துறை வல்லவனாகிய அகளங்க சம்புவராயன் என்ற குறுநில மன்னன் மதுராந்தகத்திலுள்ள ஒரு சிவன் கோயிலுக்கும்[35] நந்தா விளக்குகள் கொடுத்து, அதன் உபயோகத்திற்கு ஆடுகளும், பசுக்களும் தானமாகக் கொடுத்திருக்கின்றான்.

அடிக்குறிப்புகள்

1. S.I.I. vol. III, No. 213
2. S.I.I. vol. II, No. 55
3. T. V. Sadasiva Pandarattar, History of the Later Cholas, Vol. I, p. 139, 1949
4. Ep. Car., vol. X, KL., No. 109 A
5. Ep. Car., vol. XXI, No. 32
6. Inscriptions of Pudukkottai State, No. 135
7. ARE., 190 of 1904
8. Ep, Ind., Vol. VII, No. 19 K.. pp. 145 and 146
9. 228 and 232 of 1912
10. Ep. Ind., Vol. VII, p. 147
11. A.R.E. 388 of 1909
12. A.R.E. 432 of 1929
13. A.R.E. 102 of 1906
14. Ep. Car., Vol. A, KL., 75
15. S.I.I. vol. VII, No. 1021
16. S.I.I. vol. VIII, No. 126
17. A.R.E. 620/1919
18. S.I.I. vol. VII No. 103
19. S.I.I. vol. V No. 644
20. S.I.I. vol. V No. 611
21. Ep. Car., Vol, IX, NL-25
22. A.R.E. 669 and 675 of 1919
23. S.I.I., Vol. VII, No. 148
24. A.R.E. 46 of 1907.
25. A.R.E. 128 of 1930

26 S.I.I., Vol. VII, No. 150.
27. S.I.I. Vol. VIII, No. 754
28. A.R.E. 269 of 1911
29. Ep. Car., Vol. IX, NL-25
30. A.R.E. 221 and 232 of 1912
31. Ep. Car., Vol. H, NL-25
32. S.I.I., Vol. VI, No. 1338
33. Ep. Ind., Vol. XXII. No. 35
34. A.R.E. 119 of 1920, Ep. Indi., Vol. V, p. 106
35. A.R.E. 400 of 1922

சுவடிகள் கூறும் சோழர் வரலாறு

புலவர் ம. இராசேந்திரன், எம். ஏ. எம். பில்.,
கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை

முன்னுரை

இந்திய நாட்டின் பழைய வரலாறுகளில்-குறிப்பாகத் தமிழக வரலாற்றில் தமது ஈடுபாட்டைக் காட்டியவர்கள் பலர். அவர்களுள் கர்னல் காலின் மெக்கன்சி குறிப்பிடத்தக்கவர். அவரது தொகுப்பு களில் சோழர்கள் வரலாறு பற்றியும், வரலாற்றுத் தொடர்பு பற்றி யும் பல சுவடிகள் உள்ளன. அவற்றுள் காவிரிக்குக் கல்லணை கட்டியது பற்றிய பாடல்கள் அடங்கிய சுவடி பற்றி இக்கட்டுரை அமைகிறது.

கர்னல் காலின் மெக்கன்சி

கி பி. 1754-இல் ஸ்காட்லாந்து நாட்டில் லூவித்தீவில் பிறந்து, 1783-இல் இந்தியாவிற்குப் பயிற்சிப் பொறியாளர்களோடு வந்து சேர்ந்த காலின் மெக்கன்சி, 38 ஆண்டுகளில் பல்வேறு தொல்பொருட் தொகுப்பில் நாட்டமுடன் உழைத்தார். அதன் பலனாகப் பல மொழி களிலுமாக 9076 கல்வெட்டுகளும், 99 வரை படங்களும், 6218 நாணயங்களும், 106 சிற்பங்களும், 1568 சுவடித் தொகுப்புகளும், 2070 உள்ளூர் வரலாற்றுப் பதிவேடுகளும் (Local records) 40 புராதனப் பொருட்களும் தொகுக்கப்பட்டன.[1]

இந்தியாவின் முதல் தலைமை நில அளவையாளர் (First Surveyor General of India) பதவியிலிருந்து 1821-ஆம் ஆண்டு இந்தியாவில் ஹுக்ளி நதிக்கரையில் இயற்கையடைந்து விட்ட காலின் மெக்கன்சி, பல மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற பலரை மாத ஊதியத்திற்கு உதவியாளர்களாக அமைத்துக் கொண்டு தமிழ், மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம். மராத்தி முதலான பல மொழி களிலும் தமது இறுதி நாள் வரையில் தொகுப்புப் பணிகளில் தொய் வின்றி உழைத்தார்.

எந்த ஒரு தனி மனிதராலும் தனித்துச் சாதிக்க முடியாதவற்றை மெக்கன்சி இந்தியாவிலும் ஜாவாவிலுமிருந்த முப்பத்தெட்டாண்டு களில் சாதித்திருக்கிறார்.

மெக்கன்சி சுவடிகள்

மெக்கன்சி மறைவிற்குப் பிறகு அவரது மனைவியிடமிருந்து கிழக்கிந்தியக் கம்பெனி அத்தொகுப்புக்களை விலைக்குப் பெற்றது.[2] பின்னர் அத்தொகுப்புக் முழுவதும் மூன்றாகப் பகுக்கப்பட்டு இலண்டனில் உள்ள இந்திய அலுவலக நூலகத்தில் ஒரு பகுதியும், கல்கத்தா தேசீய நூலகத்தில் ஒரு பகுதியும் வைக்கப்பட்டன. மூன்றாவது பகுதி தற்போது சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் உள்ள சுவடிகள் மெக்கன்சி சுவடிகள் என்று அழைக்கப்படுகின்றன.

சோழர்கள் வரலாற்றில் சுவடிகள்

1 சேர சோழ பாண்டிய கைபீது (டி. 2999)
2 சோழ சேர பாண்டிய வமிசாவளி (டி. 3280)
3 சோழ தேசத்துப் பூர்வ மன்னர்கள் அட்டவணை (டி. 2995)
4 சோழ தேசத்துப் பூர்வராஜ சரித்திரம் (டி. 3178)
5 சோழபுரக் கிராம வரலாறு (டி. 3773)
6 சோழமன்னர் மகத்துவம் (டி. 2994)
7 தமிழ்த் தேயத்துப் பண்டைய மன்னர் ஒழுங்கு (டி. 3198)
8 தமிழ்த் தேயத்துப் பண்டைய மன்னர்கள் சக ஆண்டுகள் (டி. 3260)
9 தமிழ் தேயத்து மும்மண்டல மன்னர் வரலாறு (டி. 1518)
10 தமிழ் இராசாக்கள் கால ஒழுங்கு (டி. 3286)
11 தாய்மான் நள்ளிச்சோழன் என்ற முதற்சோழன் வரலாறு (டி. 3079)
12 சோழன் பூர்வ பட்டயம் (அ. கீ. சு. நூலக வெளியீடு)
13 காவேரியாற்றுக் கல்லணை (ஆர். 343 பி)

மேற்குறிப்பிட்டுள்ள சுவடிகள் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள மெக்கன்சி சுவடிகளில் சோழர்கள் வரலாறு பற்றியவையாகும். அவற்றுள் காவிரியாற்றுக்குக் கல்லணை யாரால் கட்டப்பட்டது என்பதுபற்றிய பாடல்கள் அடங்கிய சுவடி குறிப்பிடத்தக்கதாகும்.

காலின் மெக்கன்சியின் கல்லணைபற்றிய சுவடி

'தாய்மான் நள்ளிச்சோழன் என்ற முதற்சோழன் வரலாற்றில், தற்போது பிரச்சனைக்குரியதாக இருக்கும் காவிரியைப்பற்றி,

'காவேரி அக்காலத்திலே காட்டு வெள்ளாறு என்கிற பேரைக் கொண்டிருந்தது. மேற்கேயிருந்து கிழக்கே கொஞ்ச தூரம் மட்டும்

ஓடிவந்து அந்த தேசத்துக்கு உபயோகமில்லாமல் முழுதும் கொள்ளி டத்திலேயே. போய்விழுந்து சமுத்திரம் போய்ச் சேர்ந்துபோம். இந்த சோளராசா இந்த ஆற்றைத் தேசத்துக்கு நடுவாகக் கொண்டு வந்து சமுத்திரக்கரை மட்டும் ஆறுவெட்டவும், இந்த தேசத்துக்குப் பாய்ந்த தண்ணீர்போக மீதியான தண்ணீர் கடலிற்போய்ச் சேரத் திட்டமிட்டிருந்தான்.

அவன் மகன் விண்சோழன். இவன் தன்பேரில் விண்ணாற்றை வெட்டி வைத்தான். இவ்வளவு தண்ணீர் தேசத்துக்குப் போது மென்று அறிந்து மேல் தண்ணீர் போகும்படியான அணைபோட்டு வைத்தான். இவன் தேசத்தை அளந்து கண்டவனானபடியினாலே, 'மண்ணளந்த சோழன்' என்று பேர்பெற்றான். இவனுக்கு ஒரு பிள்ளை. அவன் பேர் காவேரிச் சோழன். இவன் இந்தக் காவேரி ஆற்றைச் சமுத்திர நதிக்கரை மட்டும் வெட்டிவிட்டபடியினாலே காவேரி கரைகண்ட சோழன் என்று பேர் வந்தது எனும் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.[3]

கல்லணை வெண்பா

மேலும் கல்லணைபற்றிய சுலோகம் என்றும், கல்லணை கட்டும்போது சொன்ன வெண்பா என்றும் ஆறுபாடல்கள் கூறப் பட்டுள்ளன. வெண்பா என்று அழைக்கப்பட்டாலும் சில இடங்கள் வெண்பா யாப்புக்குள் வராமலும், சில சொற்கள் சிதைந்தும் காணப் படுகின்றன. அச்சுவடி பின்வருமாறு:

காவேரியாற்றுக் கல்லணை

'கல்லணை கட்டினது பராந்தக சோள மகாறாசாவுனுடைய குமாரன் கரிகால் சோழ கோ ராசா அவர்கள் கட்டினது. அது யெப்போ வன்னில் கலியுகம் பொறந்து 990 தொளாயிரத்து தொண்ணூறாம் வருஷத்தில்[5] கறிகால் சோள மகாறாசா பொறந் தது. அவருக்கு அஞ்சாம் வருஷத்தில் சோளமண்டலாதிபத்தியம் றாச்சியம் பட்டம் கட்டினார்கள்.

அதன் பிறகு பொன்னியாறு கரைகண்டான் அம்பத்து மூனாம் வருஷம் காவேரி கரைகண்டு கல்லணையான அணைகட்டைக் கட்டினான்.

அப்போ கலியுகம் பொறந்த 1043 ஞு ஆயிறத்தி னாற்பத்தி மூணாம் வருஷம் அந்த கரிகால் சோளமகாறாசா 87 ஞு யெளம்பத்தேழு ஞு றாச்சியபாறம் பண்ணினார்கள். யிந்த கரிகால்

சோளமகாறாசா கதை பின்னாலே யெழுதி அனுப்பிவிக்கிறோம். இதுக்கு கல்லணைக்கி தெற்கு வடக்கு தச்சன் கோலாலே இத்தினை கோலெங்குறத்துக்கு பிறமாணம் கிழக்கு மேற்கு இத்தினை கோலெங்குறத்துக்கு பிறமானம் அழம் யித்தினை கோலெண்டு பிறமானம். இதற்கு கல்லணை கட்டச்சே சொன்ன வெண்பாவும் அந்த கரிகால் சோளறாசா கலியுகத்தில் பிறந்த பிறமாணத்துக்கும் அவர் றாச்சியபாரம் பண்ணின வருஷத்துக்கு பிறமாணமும் அதுக்கு ஆதரவு அவர் னாளையிலே சொன்ன வெண்பாவும் யெழுதி யிருக்குது.

வெண்பா

தொக்க கலியன் தொளாயிரத்தி தொண்ணூரில்
மிக்க கரிகால் வேந்துதித்து—பக்கம்
அலக்குழி திறைபொன்னி யார்கரை கண்டான்
மலைக்குநே ரானபுய மன். 1

அஞ்சில் முடிகவிந்து அன்பத்தி மூண்டளவில்
கஞ்சு காவேரி கறைகண்டு—தஞ்சையில்
எண்பத்தி மூண்டளவும் ரீரணடுநீ தானிருந்தான்
விண்புக்கான் தன்புக்கான் வேந்து. 2

உச்சங்கோ லெண்கோ லுயரம் பதினறு கோல்
எச்சம் பிறிவா யிருவதுகோல்—தச்சன்
மண்கொள்ளக் கொண்டகோ லெண்கோல் வளவர்கோன்
கண்கொள்ள கொண்ட கறை. 3

கவறை பதினொன்பான் கருமற மாறயற்
கெவுரியதிற் பேடென்று சென்றதற்பின்—தவருவறா
தாட்சி மதுரை நாடன் பத்தறுகாதம்
சாட்சிமறை யோன்பிறப்பன் தான். 4

சாலிய வாகனனாள் சகறார வடுகௌ
கோலு துலுக்குநாலில் கோட்டைவிட்டு—வேலியிள
வற்குசிலை பத்தேற வஞ்சியுறை செஞ்சியிறை
குதிகொள் வேதியனுந் தாம். 5

வலசை பதினாறு வலவடுகு நாலு
சிலைநான்கு பேடொன்று சென்றதிற்பின்—கொத்தவனும்
பட்டுவயல் தஞ்சமா நகரும்
அந்தணனே ஆளும் அறசு. 6

அடிக்குறிப்புகள்

1 W.C. Mackencie, 'colond colin Mackencie, W.I.R. Chambers Limited Edinburch and London, 1952, p. 213.

2 Ibid p. 211

3 'தாய்மான் நள்ளிச்சோழன் என்ற முதற்சோழன் வரலாறு' அ.கீ.சு. நூலகம் சுவடி எண். டி. 3079 பக். 46-48.

4 அ கீ.சு. நூலகச் சுவடி எண் ஆர். 343. (பி)

5 இக்கணக்குப்படி கி.மு. 2111-இல் கரிகால்சோழனால் கட்டப்பட்டிருக்க வேணடும். ஆனால் ஆண்டுக்கணக்கில் தமிழர்களிடமிருக்கும் ஆர்வத்தைக் காட்டுவதாக இதைக் கொள்ளலாமே தவிர ஆராய்ச்சிக்குரியதாய்க் கொள்ள முடியாது.

★

காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி

நடன. காசிநாதன், எம்.ஏ.,
துணை இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28.

சோழப் பெருமன்னன் முதலாம் இராசராசன் கி.பி. 985-இல் ஆட்சிக் கட்டிலேறியுள்ளான். அவனது முதல் வெற்றியாகச் "சாலை கலமறுத்த" செய்தி தான் கல்வெட்டுக்களில் காணமுடிகிறது.[1] இராசராசனின் நான்காம் ஆட்சி ஆண்டு முதல் இவ்வெற்றிச் செய்தியை தனது மெய்க்கீர்த்தியாகக் கல்வெட்டுகளில் பொறிப்பதில் பெருமையடைந்திருக்கின்றான்.

இச்செய்தி கல்வெட்டுக்களில்,

"காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி"

என்றும்,

"சாலைக் கலமறுத்தருளி"

என்றும் எழுதப்பட்டுள்ளது.

முதலாம் இராசராதிராசனும் இதே போன்றதொரு வெற்றியைத் தானும் அடைந்ததாகக் கூறிக்கொள்கிறான்.[2] முதலாம் குலோத்துங்கனும் தனது காந்தளூர்ச் சாலை வெற்றியைப் பெரிதாக மதித்திருக்கிறான் என்பதை விக்ரம சோழன் உலாவாலும் குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழாலும் அறிய முடிகிறது.

'இருகாற் சாலைக் கமறுத்த தண்டினான்' என்று விக்ரம சோழன் உலாவும்,

'வேலைகொண்டு விழிஞ மழித்ததும் சாலை கொண்டதும் தண்டுகொண் டல்லவோ' (தாழிசை 370) என்று கலிங்கத்துப் பரணியும்,

"தண்டில் விழிஞத் தெயில் தகர்த்துடைய முத்துச் சலாப முழுதும் பொறையன் சாலையொடு கொண்டாய்" என்று குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழும் பேசுகின்றன.

பாண்டிய மன்னன் சடாவர்மன் பராந்தக பாண்டியன் கூட தான் காந்தளூர்ச் சாலையை வெற்றி கொண்டதைக் கூறிக் கொள்கிறான்.

இவ்வளவு சிறப்புடன் பேசப்பெறும் காந்தளூர்ச் சாலை எத் தன்மையது என்பதில் பல் வேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. டாக்டர் ஹுல்ஷும், வெங்கையாவும் காந்தளூர்ச் சாலையில் உள்ள பல மரக்கலங்களை இராசராசன் அழித்தான் எனப் பொருள் கொண்டனர்.

பெரும் வரலாற்றறிஞர் கே. ஏ. நீலகண்ட சாத்திரியார், 'காந்தளூர்ச் சாலையின் ஓரத்தில் கப்பற் படைகளை வென்றதாகத் தெரிவிக்கிறது என்று கூறியுள்ளார்.[3] தேசிய விநாயகம்பிள்ளை "சாலையில் ஒவ்வொருவருக்கும் உணவு அளிக்க வேண்டிய முறை இவனால் வரையறுக்கப்பட்டது என்று கருதினார்.[4] டி. ஏ. கோபி நாதராவ், சாலையில் சோறு அட்டுவதை அரசன் நிறுத்திய செய்தி யைக் குறிக்கிறது என்று தெரிவித்தார்.[5] மு. இராகவையங்கார் 'மலை நாட்டு சாசனங்களிற் கறைக்கண்டீச்சுரம், கலைக் குளங் களில் கலமற்ற" என்று கூறப்படும் செய்தியை யொத்ததே காந்தளூர்ச் சாலையில் இராசராசனும் முதற்குலோத்துங்கனும் நடத்திய கல மறுத்த செயலென்றும், கலமற்றயாண்டென்பது

"கன்னிப்போர் செய்தருளிக் காந்தளூர்ச் சாலைக்
கலமறுத்து மன்னுபுகழ் மறையவர்தம்
மணியம்பலத்துள் இனிதிருந்து ஆயிரத்தெண்மர்"

பெருங்கலங்கள் நீங்கிய காலத்தைக் குறிக்கிறது என்றும் கூறு கிறார்.[6]

அண்மையில் என்னால் ஒரு கருத்து கூறப்பட்டது.[7] அதாவது 'கலமறுத்து' என்பதை, கலம் அறுத்து எனக் கொண்டு சாலைக்கு எவ்வளவு கலம் நெல் அனுப்புதல் வேண்டும் என்றும்; சாலையில் உள்ள ஒவ்வொரு பிரிவினரும் எவ்வளவு கலம் பங்காகப் பெறுதல் வேண்டும் எனவும் வரையறை செய்ததையே இது குறிக்கிறது என்பதாகும்.

சேரலன் வேலைகெழு காந்தளூர்ச் சாலை என்று முதலாம் இராசாதிராசனின் கல்வெட்டு கூறுதால் காந்தளூர் சேர நாட்டில் உள்ளது என்பது தெளிவு. டி. ஏ. கோபிநாதராவ் அவர்கள் காந்த ளூர்ச் சாலையைத் திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாக விளங்கும் வலிய சாலை என்று தீர்மானித்துள்ளார்.[8] சாலை என்பது கல்விச் சாலையைக் குறிக்கிறது என்றும், ஊர்திகள் செல்லுவதற்கு ஏதுவான பெரு வழியைக் குறிக்கவில்லை என்றும் பார்த்திவசேகரபுரச் செப் பேடு கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பிறகு அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக நிலவுகிறது.

ஆனால் 'கலமறுத்து' என்ற சொல்லுக்கு என்ன பொருள் கொள்வது என்பதில்தான் தற்போது கருத்து வேறுபாடு எழுந்துள்ளது. இதற்கு இன்னமும் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு பொருளைக் கூறினாரில்லை. கல்வெட்டறிஞர் டி. என். சுப்ரமணியம், "தென்னிந்திய கோயிற் சாசனங்கள்" என்னும் நூலில் தஞ்சாவூர் மாவட்டம் கோயில் தேவராயன் பேட்டையிலிருந்து கிடைத்துள்ள ஒரு கல்வெட்டில் கீழ்க்காணும் செய்தி உள்ளது என்று கூறுகிறார்.[10]

"ஸம்வத்சரம் பிரதி சந்தராதித்யவல் தேவர் தீர்த்த மாடின மார்கழித் திருவாதிரை நான்று இரா ஜைமிநிகள் ஸாமவேதத்து மேற்பாதத்து ஒரு துருவும் கீழ்பாதத்து ஒரு துருவும் கரைப் பறிச்சுப் பட்டம் கடத்துப் பிழையாமே சொன்னார் ஒருகாற் கொண்டாரல் லாதாரை மெய்காட்டித் தீட்டினாரெல்லாரும் தம்மில் அஞ்சுபுரியிலுஞ் சொல்லிக் கலமறுத்து நல்லாரானாரொருவற்கு விருத்தியான இக்காசு மூன்றும் இதேவரெ குடுப்பாராக....."[11]

"ஒவ்வொரு வருஷம் மார்கழிமாதம் திருவாதிரை நாள் இரவு திருச்சேலூர் மகாதேவர் முன்பு ஜைமினிகள் சாமவேதத்து மேற்பாதத்து ஒரு துருவும் கீழ்பாதத்து ஒரு துருவும் கரைப் பறிக்கப் பட்டம் கட்டித்துப் பிழையாமே சொன்னார்க்குப் பலிசையாக ஒருவனுக்கு இருபது பொன் அளித்ததைத் தெரிவிக்கிறது. இந்த இருபது காசு முதலுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் பலிசை மூன்று காசையும் ஒரு காற்கொண்டார் அல்லாதாரை மெய்க்காட்டுத் தீட்டினார் எல்லாரும் தம்மில் அஞ்சுபுரியிலுஞ்சொல்லிக் கலமறுத்து நல்லாரானார் ஒருவற்கு எம்பெருமானே அருளவேண்டும் என்பது ஏற்பாடு" என்று கூறிவிட்டு "இவ்விடத்திலே கலமறுத்து என்ற சொல்லுக்குச் சாசனத்தால் அல்லது ஓலையால் நிர்ணயிக்கப்பெற்ற என்ற பொருளே கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கிறார்.

மேலும் "இதைக் கொண்டு, இராசராசனும் காந்தளூரில் இருந்த பாடசாலையிலே நடந்த சாஸ்திரப் போட்டியிலே ஈடுபட்டுத் தன் திறமையை வெளிப்படுத்தி வெற்றி கொண்டு பரிசையும் அடைந்தான் என்று பொருள் கொள்ளத் தோன்றுவது இயல்பே" என்று கூறிவிட்டு இறுதியில், "ஆயினும், கல்வெட்டுக்களிலே காந்தளூரில் சோழர்கள் படை வலிமைகொண்டே வெற்றியடைந்தனர் என்று காணப்படுவதை நாம் முன்னரே எடுத்துக்காட்டியிருக்கிறோம். அதனால் அவ்விதம் பொருள் கொள்வது தவறாகும்" என்று கருதியுள்ளார்.

இராசராசன் காலத்துக் கல்வெட்டுக்களையெல்லாம் தொகுத்து வெளியிடவேண்டும் என்ற அடிப்படையில் கல்வெட்டுக்களைச் சேகரித்தபோது திருச்சி மாவட்டம் காமரசவல்லியிலிருந்து படியெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டு நகல் எடுக்கப்பட்டது. இக்கல் வெட்டு இராசராசனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டுப்படி மத்திய அரசு கல்வெட்டுத்துறை யின் பாதுகாப்பில் இருந்து வருகிறது. கல்வெட்டில் கீழ்வரும் வாச கம் காணப்படுகிறது:

"ஸம்வத்சரம் ப்ரதி சந்திராதித்தவற் இத்தேவர் தீர்த்தமாடின மார்கழி திருவாதிரை ஞான்று பகல் இத்தேவர் தீர்த்தமாட எழுந் தருளுவதற்கு முன்பு இதின் முன்னை இரவு தலவகார சாமவேதிகள் வந்தாரை எல்லாம் கீழ்பாதத்தொரு துருவு மேல் பாதத்தொரு துருவும் இப்படித்தான் ஒருக்காலும் கொண்டிலாதார்கேய் கரை யிட்டு பிழையாமல் ஒரே துருவும் சொன்னான் மெக்காட்டுத் தீட்டில் மெக்காட்டினார் எல்லாம் இரண்டு பாதத்தும் ஒத்துச் சொல்லி கலமறுத்து ஒருவாரக் கலமறுத்திச் சொல்லினல்லாரானார் கையிலே இப்பொன்னின் கழஞ்சே காலும் இடுவிதாச்சு" என வருகிறது.

மார்கழி மாதத்தில் தேவர் நீராடுகிற திருவாதிரை நாளில் தேவர் எழுந்தருளுகிறதற்கு முன்பு, முன்னாள் இரவு வந்த தலவகார ஸாமவேதிகள் எல்லாரையும் கீழ்பாதத் தொரு துருவும் மேல் பாதத் தொரு துருவும் பிழையாமல் சொல்ல வேண்டும் என்று ஆணையிட்டு அவ்வாறு பிழையாமல் சொன்னவரைத் தேர்ந்தெடுத்தவர்கள், தாமும் இரண்டு பாதத்தும் ஒத்துச் சொல்லி, அவர்களைப் பிழை நீக்கி (கல மறுத்து) சொல்லச் செய்து நன்கு சொன்னவர் கையிலே பொன் கழஞ்சே கால் அளிக்கப் பெற்றது என்று பொருள் கொள்ளலாம். இப்பொருள் சரியெனக் கொண்டால் 'கலமறுத்து' என்பதற்குப் பிழை நீக்கி என்று பொருள் படுகிறது. இதன்படிப் பார்த்தால் காந்தளூர்ச்சாலையில் சாமவேதம் பயில வந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் முதலாம் இராசராசனும் ஈடுபட்டான் என்றும், அவன் சாமவேதம் அறிந்தவனாக இருந்தான் என்றும் கருதலாம்.

இக்கருத்துக்குப் பார்த்திவசேகரபுரச் செப்பேடும் துணை நிற்ப தாகத் தெரிகிறது. இச்செப்பேட்டில்:

"திரைராஜ்ய வியவஹாரத்துக்கு வேண்டும் ஒத்துடையான்" இது ஸத்யம் என்று ஐவர் சட்டரைக் கொண்டு பஞ்சக்கஞ்செய்தான் புகழ் பெறுவான்"

என்ற வாக்கியம் காணப்படுகிறது. மூன்று இராஜ்ய விவகாரத்துக்கு வேண்டும் ஒத்துடையான் (அறிவுடையான்) இது சரி என்று ஐந்து சட்டர்கள் துணையோடு கூறி, அவனால் தேர்வு பெற்றவன் புகழ் பெறுவான் என்று பொருள் படுகிறது. இதிலிருந்து மூன்று இராஜ்ய (சேர, சோழ, பாண்டிய நாட்டு) விவகாரத்து வேண்டும் புலமையுடையாரை அவர்கள் தகுதியுடையவர்கள் என்று நிர்ணயக்கும் ஒருவர் பார்த்திவசேகரபுரச் சாலையில் இருந்தார் என்பது தெரியவருகிறது. அதே போன்ற பணியைத்தான் முதலாம் இராசராசனும் காந்தளூர்ச் சாலையில் செய்திருத்தல் வேண்டும் என ஊகிக்கலாம் ஆதலால் தான் தாம் அரசுப் பொறுப்பேற்ற நான்காம் ஆண்டிலேயே காந்தளூர்ச் சாலைக்குச் சென்றிருக்கிறான். அங்கு சென்றவன் தம் அரசாட்சிக்குத் தேவைப்படும் சிலரை அச்சாலையிலிருந்து தேர்ந்தெடுத்திருப்பான் என்று கருத இடம் ஏற்படுகிறது.

"சட்டர்கள் திரைராஜ்ய வியவாகாரத்துக்கு" என்ற வரிக்கு தமிழக வழக்குப்படி முடியுடை வேந்தர் மூவரான சேர சோழ பாண்டியர் ஆகிய மன்னர்களின் மூன்று இராஜ்யங்களது விவகாரங்களை நிர்வகிப்பதற்கு வேண்டிய பயிற்சியும் அறிவும் (ஒத்து) உடையவராக இருத்தல் வேண்டும்" என்று டி. என். சுப்ரமணியம் பாத்திவ சேகரபுரச் சாசனத்தைப் பற்றி எழுதுகையில் பொருள் குறிப்பிட்டிருப்பது ஈண்டு கூர்ந்து கவனிக்கத் தக்கது.[11]

மேலும் முதலாம் இராசராசனது முக்கிய உயர் அதிகாரிகளில் பலர் பிராமணர்களாயிருந்திருப்பதை நாம் கல்வெட்டுக்கள் மூலம் உணர முடிகிறது. தஞ்சைப் பெருவுடையார்க் கோயில் திருச்சுற்றை எடுப்பித்தவனான ஸ்ரீகிருஷ்ணன் இராமன் என்னும் மும்முடிச்சோழ பிரும்மாதிராயன், சேனாதிபதியாகப் பணிபுரிந்திருக்கிறான். இக் கோயிலில் திருவாய்க் கேள்வியாகப் பணிபுரிந்தவர்கள் மும்முடிச் சோழக் கடிகை மாராயன், இராசராச கடிகைமாராயன், ஜயங்கொண்டசோழக் கடிகைமாராயன். இம்மூன்று அதிகாரிகளும் கடிகையிலிருந்து அதாவது சாலையிலிருந்து (கல்வி நிறுவனம்) வந்தவர்கள் என்பது அவர்களது பெயர்களாலேயே புலனாகிறது.

ஆதலால் மேலே கூறியவற்றைக் கொண்டு ஆராய்கையில் முதலாம் இராசராசன் காந்தளூர்ச் சாலையில் கலமறுத்தது, மூன்று இராச்சிய விவகாரத்துக்கு வேண்டி அச்சாலையிலிருந்து சிலரைத் தேர்ந்தெடுத்த செயலேயாகும் என்று உறுதியாகக் கூறலாம்.

அடிக்குறிப்புகள்

1. தண்டார்ச்சாலைக் கலமறுத்த கோட்பாடே ARE 1917 No. 362
2. S.I.I, Vol. II, p. 241
3. The Colas, page 189
4. Kerala Society papers Series 2 pp. 100 ft.
5. T.A.S. Vol. II page 3-4
6. இலக்கிய சாசன வழக்காறுகள் பக்கம் 168-169
7. Hero Stones in Tamilnadu, p. 38
8. T.A.S. Vol. II, pp. 4-5
9. 'பாண்டியர் செப்பேடுகள் பத்து' பக். 18
10. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் தொகுதி 3, பகுதி 2, பக். 14
11. S.I.I. Vol. XIII. No. 258
12. A.R.E. No. 76/1914
13. பாண்டியர் செப்பேடுகள் பத்து, பார்த்திவசேகரபுரச் சாசனம், பக்கம் 65
14. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் தொகுதி 3, பகுதி 2. பக்கம் 264

★

இராசராச சோழனின் முதற்போர்

புலவர் பொன். முனியப்பன், எம்.ஏ.
சொல்லுதவியாளர்
அகர முதலித்திட்டம், சென்னை

'பொன்மான் பயந்த புலி'யாகிய இராசராசன் போற்றத்தக்க போர்கள் பல புரிந்து புகழ்பெற்றவன். மெய்ம்மைசான்ற மெய்க் கீர்த்தியை முறைப்படுத்திய மேன்மையாளன். இம்மன்னனின் முதற்போர் 'காந்தளூர்ச் சாலை கலம் அறுத்தருளியது' ஆகும்.

'காந்தளூர்ச்சாலை கலம் அறுத்தருளிய கோ இராசகேசரி வர்மன்' என்ற தொடரே தனி ஒரு மெய்க்கீர்த்தியாக இராசராசன் கல்வெட்டுகள் சிலவற்றுள் காணப்படுகின்றது'.[1]

இத்தொடர்கள் இம்மன்னனின் நான்காவது ஆட்சியாண்டி லிருந்தே உள்ளன. எனவே, காந்தளூர்ச்சாலைப் போர் இராச ராசனின் கன்னிப்போர் என்பது பெறப்படுகிறது. இதன் பின் பெற்ற வெற்றிகளுக்கேற்ப மெய்க்கீர்த்தி வளர்ந்து வந்துள்ளது.[2]

'கன்னிப்போர் செய்தருளிக் காந்தளூர்ச்சாலை கலமறுத்து'[3] என்னும் பாண்டிய மன்னனின் மெய்க்கீர்த்தியாலும், மேற்குறித்த ஆய்வுரையாலும் பேரரசனாய்த் திகழ்ந்த இராசராசனின் பெருமை சான்ற முதற்போர் காந்தளூர்ச்சாலைப் போரே என்பது தெளிவு.

இப்போர் குறித்து கல்வெட்டிலும், மெய்க்கீர்த்தியிலும் அமைந்த தொடரில் உள்ள மூன்று சொற்கள் பல ஐயப்பாடுகளைத் தோற்றுவித்துள்ளன. அவை, கலம்- அறுத்து- அருளி என்பவை. இம் மூச்சொற்களால் விளைந்த கருத்து மாற்றங்களை உரியவண்ணம் ஆராய்ந்து காண எழுந்தது இக்கட்டுரை.

காந்தளூர்ச்சாலை அன்றைய சேர நாட்டின் பேரூர்களில் ஒன்று. இன்றைய கேரள மாநிலத்தில் திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ளது. 'வலிய சாலை' என்னும் பெயர்கொண்டு இன்றும் உள்ளது இவ்வூர். இது கடற்கரைப்பட்டினம்.

'வேலைகெழு காந்தளூர்ச்சாலை'[4] என்னும் இராசாதிராச சோழனின் மெய்க்கீர்த்தித் தொடர் இதனை மெய்ப்பிக்கும். மேலும்,

'இராசராசன் நிகழ்த்திய கடற்போர்கள் மூன்று. அவற்றுள் காந்தளூர்ச்சாலை கலமறுத்தது முதலாவது போர். ஈழமண்டலம் கொண்டது இரண்டாவது போர். முந்நீர்ப் பழந்தீவு கொண்டது மூன்றாவதான இறுதிக் கடற்போர்'.[5]

இக்கூற்றாலும் இராசராசனின் முதற்போரே கடற்போராய் அமைந்தது என்பது தெளிவு. இப்போர் குறித்து உருவான மாறுபட்ட கருத்துகளை முதலில் காண்போம்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடான மெய்க்கீர்த்திகள் என்னும் நூலின் ஆசிரியர் திரு பூ. சுப்பிரமணியம் அவர்கள் இது பற்றிய கருத்துக்களைத் தொகுத்துத் தம் நூலுள் தந்துள்ளார்கள். அவை வருமாறு:

1 காந்தளூரிலே மணிமண்டபம் ஒன்றை எழுப்பினான்.

2 காந்தளூரிலே ஒரு கலத்தைத் துண்டாக்கினான்.

3 காந்தளூர்த் துறைமுகத்துச் சாலையில் மரக்கலங்களை அழித்தான்.

4 காந்தளூர் அறச்சாலையில் சோறு அட்டுவதை அரசன் நிறுத்தினான்.

5 காந்தளூர்ச் சோற்றுச் சாலையில் உணவு அளிக்க வேண்டிய முறையை நிர்ணயித்துத் திட்டம் செய்தான்'[6]

இவ்வைந்தும் கலம் அறுத்து அருளி என்பதற்கு ஆய்வாளர்கள் கண்ட கருத்துக்களாகும். இதில் முதற்கருத்துக்கான சான்று எங்கும் இல்லை. கலம் அறுத்தல் என்பதை மணிமண்டபம் அமைத்தான் எனக்கூறுதல் எவ்வகையிலும் பொருந்தாது.

இரண்டாம் கருத்தில் ஒரு கலம் என்பது எதைச் சுட்டுகிறது என்ற தெளிவில்லை. மண் கலமா? மரக் கலமா? மாறான வேறு கலமா? எல்லாவற்றிற்கும் பொருந்தும் என்பதும் ஏற்புடைத்தாகாது. எனவே, இக்கருத்தும் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

மூன்றாம் கருத்தை இறுதியில் ஆய்வோம். நான்காம் கருத்து 'அறச்சாலையில் சோறு அட்டுவதை அரசன் நிறுத்தினான்' என்பது. இது ஒரு மன்னனைப் போற்றும் கூற்றன்று. தூற்றுவதாகும்.

இது பகைவன் பழிதூற்றக் கூறும் கூற்றன்றி மெய்க்கீர்த்தியில் இடம்பெறும் மேன்மையுடையதன்று, அதுவும் தன்மெய்க்கீர்த்தியில்.

எனவே எவ்வகையில் நோக்கினும் கலம் அறுத்தருளி என்பதற்கு இந்த நான்காம் கருத்து அறவே பொருந்தாது.

ஐந்தாவதாக உள்ள கருத்து சில அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 'மெய்க்கீர்த்திகள்' என்னும் நூலாசிரியரும் இவை ஐந்தையும் மொழிந்து ஐந்தாம் கருத்தே 'பொருத்தமாகிறது' எனக் கூறியுள்ளார் (பக் 101). இதற்கான சான்றாக கோக்கருநந்தடக்கனின் செப்பேட்டுத் தொடர்களை எடுத்துக்காட்டுகின்றார்.

எனினும், அதுவும் பொருத்தமன்று. ஏன்? எப்படி? என்பதற்கான சான்றுகளையும், விளக்கங்களையும் நோக்குவோம்.

கோக்கருநந்தடக்கனின் பார்த்திவசேகர புரச் செப்பேட்டில், 'காந்தளூர் மர்யாதியால் தொண்ணூற்று ஐவர் சட்டர்க்குச் சாலையும் செய்தான்' எனக்குறிப்பிட்டுள்ளதை எடுத்துக்காட்டி, பார்த்திவசேகரபுரத்தில் அமைக்கப்பட்ட சாலை காந்தளூர்ச்சாலை முறையில் நிர்வகிக்கப்பட்டதைக் கூறியுள்ளார்.

பார்த்திவசேகரபுரச்சாலை, காந்தளூர்ச்சாலை நிர்வாக முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது என்பதில் கருத்து வேறுபாடில்லை. ஆயின், காந்தளூர்ச்சாலை நிர்வாக முறையை அமைத்தவன்-ஒழுங்குபடுத்தியவன் இராசராசன் அல்ல.

ஏனென்றால், பார்த்திவசேகரபுரத்தில் சாலையை அமைத்த கோக்கரு நந்தடக்கனின் காலம் கி பி. 865 ஆகும்.[7] இராசராசனின் காலம் கி பி. 985 முதல் 1014 வரை[8] இராசராசனின் காலத்திற்கு முற்பட்ட காலத்து நிகழ்ச்சியைக் குறிப்பதுவே பார்த்திவசேகரபுரச் செப்பேடு.

காலவேறுபாடு குறைந்த அளவு 100 ஆண்டுகளாகும். இராசராசன் ஆண்ட காலத்திற்கு 100-150 ஆண்டுகளுக்கு முன்பே காந்தளூர்ச் சாலை சிறப்புற்றிருந்தது. அதனைப் பார்த்து பார்த்திவசேகரபுரத்தில் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இது இராசராசனுக்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே நடந்தவை.

இதனை இராசராசனின் முதல் போராகிய காந்தளூர்ச்சாலை கலமறுத்ததுடன் இணைப்பது எவ்வகையிலும் பொருந்தாது.

ஏறத்தாழ நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பே சிறப்புற்றிருந்த காந்தளூர்ச்சாலை இடையில் சீர்கெட்டு இராசராசனால்

சீர்படுத்தப்பட்டிருக்கலாம். ஆயின் அச்செயல், ஒரு பேரரசனின் மெய்க்கீர்த்தியில் முதற் பணியாகக் குறிக்கத்தக்க சிறப்புடைய தன்று.

சீர்கெட்ட ஒன்றைச் சீர்திருத்துதல் அன்றாட நிர்வாகச் செயல்களில் ஒன்றேயன்றி, மெய்க்கீர்த்தியிலும், பல கல்வெட்டுக்களிலும் குறித்துப் போற்றத்தக்க ஏற்றமுடையதாகாது.

மேலும், இந்த ஐந்தாம் கருத்தைக் கூறும் அறிஞர்கள் கலம் என்பதற்கு உண்கலம் எனப் பொருள் கொண்டுள்ளனர். ஆயின் இவர் எடுத்துக்காட்டுச் சான்றாக இயம்பியுள்ள பார்த்திவ சேகரபுரச் செப்பேட்டில் கலம் என்னும் சொல் உண்கலம் என்னும் பொருளில் அமையவில்லை.

அச்செப்பேட்டில் ஏழாம் பக்கத்தில் 'இச்சாலைக்குப் பெய்த கலத்தில் பவிழிய சரணத்தார் உடைய கலம் நாற்பத்தைந்து'[9] என்னும் தொடர் அமைந்துள்ளது. இதில் உள்ள பெய்த என்னும் சொல் உற்று ஆராயத்தக்கது.

பெய்து அளத்தலும், முகந்து அளத்தலும் நெல் முதலான தவசங்களுக்கே உரிய கலைச்சொல். இதில் சுட்டப்பட்டது உண்கல மாயிருப்பின் 'அறுத்தல்' என்ற சொல் இடம் பெறவேண்டும்.

உண்கலங்களை எப்போதும் எங்கும் கொடுத்தல், தருதல், (அறுத்தெடுத்தல்) வழங்குதல் எனச் சுட்டுவதே பொருந்தும். உண்கலங்களைப் 'பெய்தல்' என்னும் வழக்கு இல்லை.

அடுத்து, இச்செப்பேட்டில் எட்டாம் பக்கத்தில் 'படைக்கலத்தால் புண்செய்தான்', "சட்டர் படைக்கலம் பிடித்து"[10] என்னும் தொடர்கள் உள்ளன. இதன்வழி கலம் என்னும் சொல் உரிய அடைச் சொல் பெறும் வழக்கு அன்றைக்கு உண்டு என்பதையும், அடைச் சொல் இன்றி கலம் எனவரும் சொல் பன்னிரண்டு மரக்கால் கொண்ட அளவையே குறிக்கும் என்பதையும் இச்செப்பேட்டுத் தொடரே தெளிவாக்குகிறது.

எனவே, ஐந்தாம் கருத்திற்குச் சான்றாக எடுத்துக் காட்டிய செப்பேடே கலம் என்பது உண்கலமல்ல என்பதை உணர்த்தும் சான்றாகத் திகழ்கிறது. கலம் என்பது ஓர் அளவுதான் எனத் தொல் பொருள்துறைத் துணை இயக்குநர் திரு. நடன. காசிநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளமையும் இதற்குப் பிறிதோர் சான்றாகும்.[11]

அடுத்துக் 'கலமறுத்தல்' என்பது அச்சாலையில் பயில்வதற்குரிய மாணாக்கரின் எண்ணிக்கையே என மெய்க்கீர்த்தியின் உரைவிளக்கப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.[12] இச்சாலையில் இந்தஇந்தப் பிரிவில் பயில்வோர் இத்தனைபேர் என எளிதாகச் சுட்டுவதை விடு அதனைக் கலமறுத்தல் எனச் சுற்றிவளைத்துச் சுட்டவேண்டிய தேவையில்லை; அவ்வாறு சுட்டப்படவும் இல்லை என்பதற்கு மேற் குறித்தவைகளே போதியச் சான்றாகும்.

மேலும், 'சோழ மன்னரும், பாண்டிய மன்னரும் தம் அரசுரிமைப் பொறுப்பை ஏற்றவுடன் இச்சாலையினை முறைப்படுத்தி, ஆங்குள்ள குறைபாடுகளை அறுத்து, அங்கு பயிற்சி பெறுவோர் அரசியல் பயிற்சிகள் பலவற்றிலும் நன்கு பயிற்சி பெற அருள்புரிந்தனர்'[13] என விளக்கியுள்ளார்.

இவ்விளக்கத்தை நோக்க, அச்சாலை கல்விச்சாலையன்று கலகச்சாலை என்றே தோன்றுகிறது. ஒவ்வொரு மன்னரும் பொறுப்பேற்றவுடன் குறைபாடுகளை அறுத்து முறைப்படுத்தவேண்டிய சீர்கெட்ட சாலையாக அல்லவா காந்தளூர்ச்சாலை தோன்றுகிறது. மன்னருக்குமன்னர் குறையறுக்கவேண்டிய குற்றச் சாலையாக அல்லவா காந்தளூர்ச்சாலை திகழ்ந்திருக்கிறது.

இத்தன்மை எவ்வகையிலும் அச்சாலைக்குப் பெருமைத் தராது. மேற் குறித்த விளக்கம் அச்சாலையில் சிறுமையையே சுட்டும். சிறுமை நோக்கியே செல்லும் ஒரு சாலையால் எந்த மன்னரும் பெருமையடைய முடியாது. எனவே, ஐந்தாம் கருத்துப் பொருத்மற்றது என்பது தெளிவு.

அறிஞர்கள் கூறிய ஐந்து கருத்துகளில் மூன்றாம் கருத்து நீங்கலாக, ஏனைய நான்கும் ஏற்புடையதன்று என்பதைக் கண்டோம். இனி, மூன்றாம் கருத்துப் பொருந்துமா? என்பதை நோக்குவோம்.

காந்தளூர்த் துறைமுகத்துச் சாலையில் மரக்கலங்களை அழித்தான் என்பது மூன்றாவதாக அமைந்த கருத்து. கலம் என்னும் சொல் இங்கு மரக்கலம் எனக் கொள்ளப்பட்டுள்ளது.

இக்கட்டுரையில் முன்பு சுட்டிய கருத்தின்படி அடைச்சொல் இல்லாத கலம் அளவைத் தான் குறிப்பது வழக்கு என்று கண்டோம். அதன்படி இதனை அளவு எனக்கொள்ளமுடியாமல், அடுத்து வந்த வினைச் சொல் தடுக்கிறது.

அறுத்தல் என்னும் வினை உண்கலத்திற்கும் பொருந்தும் வினைச்சொல்லே. ஆயின், கூறப்பட்டுள்ள இடம் மன்னனின் வீரத்தைச் சுட்டி எழுந்த மெய்க்கீர்த்தித் தொடர். அதுவும் பேரரசனாய்ப் பின்னர் திகழப்போகும் இராசராசனின் முதற்போர்.

எனவே, 'இடம், பொருள், ஏவல்' நோக்கிச் சொற்களுக்குப் பொருள்கொள்ள வேண்டும் என்பது தமிழ் மரபு. அதன்படி, இங்கு அறுத்தல் என்பது போர்ச் செயலுக்குரிய வினை. அதனால், இவ் வினைக்கு முன் அமைந்த பெயர்ச் சொல்லை மரக்கலம் எனக் கொள்வது இலக்கிய இலக்கண உலகியல் வழக்கிற்கு ஏற்புடையதே யாகும்.

காந்தளூர்ச்சாலை கலமறுத்தது போர்ச்செயலே என்பதற்கு,

'சேலைத் துறந்து சிலையைத் தடிந்திருகால்
சாலைக் கலமறுத்த தண்டினான்'[14]

என்று ஒட்டக்கூத்தரும்,

"வேலை கொண்ட விழிஞம் அழித்ததும்
சாலை கொண்டதும் தண்டு கொண்டு"[15]

என்று செயங்கொண்டாரும் கூறிய கூற்றுகளே காந்தளூர்ச்சாலைப் போர் கலமறுத்தபோர், வலிமை சான்ற கடற்போர் என்பதைக் காட்டும்.

காந்தளூர்ச்சாலையில் நிகழ்ந்தது இராசராசனின் இளமைப் பருவ முதற்போர். இதில் தன் வீரமும், ஆற்றலும் காட்டுவதே எவர்க்கும் இயல்பு. கல்விச்சாலையை ஒழுங்குபடுத்துவதும், வரை யறுத்து முறைப்படுத்துவதும், மன்னர்களின் அரும்பணிகளில் ஒன்றே. அதனைத் தம் வீரச் செயலாக-வெற்றிச் செயலாக எவரும் குறிப்பிடு வதில்லை. காந்தளூர்ச்சாலை வெற்றி தன் 'தண்டாற் கொண்டது' என மெய்க்கீர்த்தி கூறுவது எண்ணத்தக்கது.

மேலும், சில கல்வெட்டுகள் காந்தளூர்ச்சாலை கலமறுத்த செய்தியைக்கொண்டே தொடங்குகின்றன. இம்மன்னனுக்குப் பின்வந்தோர் தம் செப்பேடுகளில் இப்போர் குறித்தே சிறப்பித்துக் கூறியுள்ளனர். இவையெல்லாம் காந்தளூர்ச்சாலை கலமறுத்தது போர்-வீரப்போர்-வெற்றிப்போர் என்பதையே விளக்கி நிற்கின்றன.

காந்தளூர்ச்சாலை கலமறுத்த போர் புறத்திணைவகையில் கடற் கரையில் நிகழ்ந்த தும்பைப்போர்[17] போர்க்களத்தினின்றும் தப்பிய

பகைவர் கலத்துள் இருந்து தாக்கியதன்மையால் அப்போர் கடற் கரையினின்றும் கடலுள் புகுந்து கலமறுக்க வேண்டிய கடும் போராயிற்று.

சேரநாட்டின் கடற்பகுதியில் கடற்கொள்ளையர் வாழ்ந்தமைக்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன. அக்கடற் கொள்ளையருடன் கூடி சேரர் காந்தளூர்ச்சாலையில் இராசராசனை கலங்களில் இருந்த வண்ணம் எதிர்த்திருக்கக்கூடும்.

அப்போது அக்கடலுள் புகுந்து மரக்கலங்களை அறுத்தும், சிதைத்தும், அழித்தும் அப்போரை நிகழ்த்தவேண்டிய தேவை இராசராசனுக்கு ஏற்பட்டதையும், அதில் அவன் வெற்றிபெற்றதை யுமே மெய்க்கீர்த்தித் தொடர் விளக்குகிறது.

கடலில் வந்து, நிலத்தில் இறங்கி நிகழ்த்தும் போராக இல்லாமல், நிலத்தில் போர்புரிந்து பின்பு கடலுள் புகுந்து நிகழ்த்திய கடற் போராகக் காந்தளூர்ச்சாலைப்போர் ஆனதால் கலமறுத்தல் என்னும் உண்மை நிகழ்ச்சி மெய்க்கீர்த்தியில் இடம் பெற்றது.

போர் ஒழுக்கத்தில் நிகழ்ந்த இப்புது முறையால் கடலில் வீழ்ந்து தத்தளித்துத் துன்புற்றோரைக் காப்பாற்றி அருள்காட்டினான் இராசராசன் எனக் கருதலாம். அதனால்தான் காந்தளூர்ச்சாலை கலமறுத்தல் என்பதுடன் அருளி என்னும் சொல்லையும் மெய்க் கீர்த்தி இணைத்துக் கொண்டது எனலாம்.

கடலுள் புகுந்து பகைவர்களை வன்மையாகத் தாக்கியபின் அவர் தம் அல்லல்கண்டு மன்னன் காட்டிய மிகுந்த அன்பை 'அருளி' என்னும் சொல் குறிக்க வாய்ப்புண்டு. அசோகமன்னனின் கலிங்கப் போருடன் இராசராசனின் காந்தளூர்ப்போரை முழுமையாக அன்றி ஒரு பகுதி ஒப்பிட்டு நோக்கின. 'அருளி' என்னும் சொல்லின் அருமை புலப்படும்.

மேலும், அருளி என்னும் சொல்லுக்குக் கட்டளை, உத்தரவு, ஆக்ஞை என்னும் பொருளும் உண்டு என்பதைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி இலக்கியச் சான்றுகளோடு காட்டியுள்ளது. (முதல் தொகுதி. பக். 137) எனவே, இராசராசனின் கட்டளைப்படி மரக்கலங்கள் அறுத்தெறியப்பட்டன எனப்பொருள் கொள்ளவும் இடம் உண்டு.

இதற்கு வலிய சான்றாய்க் குறிக்கத்தக்க இன்னொன்றும் உள்ளது. அன்றைய காந்தளூர்ச்சாலை, இன்று கேரள மாநிலத்தில் 'வலியசாலை' என்னும் பெயரால் வழங்கிவருகிறது. வலிய என்னும் தமிழ்ச்சொல் போரோடு தொடர்புடைய ஆற்றலையே குறிக்கும். இதற்குப் பிற பொருளும் உளவே எனச் சிலர் எண்ணலாம். ஆயின், அவை சார்புப்பொருளேயன்றி நேர் பொருளன்று. ஆற்றல் உணர்த்தும் 'வல்' என்பதே இதன் வேர்ச்சொல் ஆகும்.

இவ்வண்ணம் படிப்படியாய் நிகழ்ந்த போரின் பாங்கை மெய்மைசான்ற முறையில் மிகத் திட்பமாய் மொழிந்துள்ளது மெய்க்கீர்த்தி. எனவே மூன்றாம் கருத்தே பொருத்தமும் சிறப்பும் உடையதாகிறது.

இராசராச சோழனின் முதற்போர் நிகழ்ந்த இடம் காந்தளூர்ச் சாலையாக இருந்தாலும் அன்றுமுதல் மக்களிடத்தில் அது 'வலிய சாலை' யாகவே இன்றுவரை வழங்கிவருகிறது. அவ்வலிய போர் நிகழ்ந்த இடத்தை மன்னன் மாற்றாமல் மக்கள் மாற்றிய மாண்பொன்றே இராசராச சோழனின்-முதற்போரின்-முதன்மைச் சிறப்பை மிக உயர்த்துகின்றது.

அடிக்குறிப்புகள்

1. மெய்க்கீர்த்திகள், பக். 7
2. ,, ,,
3. சடையவர்மன் பராந்தக பாண்டியன் மெய்க்கீர்த்தி. 1. வரி 8.
4. முதலாம் இராசாதிராசன் மெய்க்கீர்த்தி. வரி 12.
5. மெய்க்கீர்த்திகள். பக் 11.
6. மெய்க்கீர்த்திகள். பக் 99.
7. கல்வெட்டு ஓர் அறிமுகம். பக் 22.
8. மெய்க்கீர்த்திகள். பக் 3.
9. கல்வெட்டு ஓர் அறிமுகம். பக் 27, பக் 23.
10. ,, ,,
11. மெய்க்கீர்த்திகள் பக். 101, பக். 8, பக். 101.
12. ,, ,, ,,
13.
14. விக்கிரம சோழன் உலா. 24.
15. கலிங்கத்துப்பரணி. 370.
16. பண்டைத் தமிழர் போர் நெறி. பக் 58.

வரலாற்று நோக்கில் கலிங்கத்துப்பரணி

டாக்டர் தா. வே. வீராசாமி, எம்.ஏ., பி.எச்.டி.,
பேராசிரியர் - தலைவர், தொகுப்பியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்

வரலாற்று நூல்கள் என்பன வரலாற்று உண்மைகளை நெறி தவறாமல் கூறும். அந்நெறிக்கு மாறுபட்ட நூல்களால் உண்மையை அறிதல் கடினம். காலப்போக்கில் தோன்றிய ஒரு தனிப்பட்ட தலைவனின் போர் வெற்றியையும், கொடைத் தன்மையையும் மட்டுமே மேம்பாடு தோன்றப் புகழ்ந்துக் கூறும்போது வரலாற் றுண்மைகள் வெளிப்படத்தோன்றாமல் பின்னணிக்குச் சென்றுவிடும். அந்நிலையிலும் ஒரு சில வரலாற்றுண்மைகள் படிப்பவர்க்குப் புலப் படாமல் போகா.

இக்கருத்தடிப்படையில் கலிங்கத்துப்பரணி என்ற செயங் கொண்டாரின் படைப்பைப் பார்த்தால் அது கூறும் வரலாற்றுண் மைகளை அறிய வாய்ப்புள்ளது. இப்பரணியின் தலைவன் முதற் குலோத்துங்கன் (கி.பி, 1070-1120). ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தமிழகத்தை ஆண்ட பிற்காலச் சோழர் வரலாற்றைப் பற்றி அறி தற்கு இவ்விலக்கியம் துணைபுரிகிறது என்பர். இலக்கியம் வரலாற்றை அறியத் துணைபுரியுமா என்பது கேள்வி. அதற்கு விடை காண வரலாற்றுத் தடையங்களான கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நம்பு தற்குரிய செவி வழிச் செய்திகள் போன்றவற்றை இணைத்துப் பரணி கூறும் செய்திகளோடு ஒப்பிட்டால் தெளிவு பிறக்கும்.

மேலோட்டமாகக் கலிங்கத்துப்பரணியைப் பார்த்ததும் கூறி விடலாம், இது ஒரு வரலாற்று நூல் அல்ல என்று. கடவுள் வாழ்த்து முதல் களம் பாடியது வரை அமைந்துள்ள பதின்மூன்று பகுதிகளில் காடு, கோயில், தேவி, பேய்கள், இந்திரசாலம் என்பனப் பற்றிப் பாடும் பிரிவுகளைக் காணும்போது, முழுக்கமுழுக்க நம்ப முடியாத கற்பனையின் அடிப்படையில் நூலின் அமைப்பு உருவாகிச் செல்வ தைக் காணின் சோழர் வரலாற்றின் சான்றாக இதனைக்கொள்ள இயலுமா என்பது ஐயம்தான்.

கொற்றவையை வெற்றிச் செல்வியாகத் தமிழ் மக்கள் போற்றி வந்தது பண்டைய மரபு.

'மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே'.
(தொல். பொருள் 62. இளம்.)

என்ற தொல்காப்பிய நூற்பா இதற்குச் சான்றாகும்.

அரசர் போரில் பெறும் வெற்றியை உறுதிப்படுத்தக் காளியாம் கொற்றவை தானே முன் செல்வாள் என நம்புவது மரபு. இதனைக் கொற்றவை ..முந்துறுவதைப் - புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலும் (பு.வெ.மா. 20) கூறும். அம்மரபின் வளர்ச்சி நிலையாகக் கலிங்கத்துப்பரணியின் கலைப் படைப்பு அமைந்துள்ளது.

இலக்கிய மரபுநெறிக்குட்பட்ட கற்பனையினிடையே வரலாற்றுண்மை மணிகளைப் கலிங்கத்துப்பரணி ஆசிரியர் பாடியுள்ளார். அவற்றை 'நேரினமணியை நிறல்பட வைக்கும்' போக்கில் அவர் சொல்லவில்லை. கால வரைவில் அபயனுக்கு முன்னர்ச் சோழர் குடியில் கரிகாலன் தோன்றினான். அவன் நாரதர் கூறிய முறைப்படி (கலிங்கத்துப்பரணி. 181) சோழர் வரலாற்றை மேருமலையில் எழுதினான். இதனைத்-திருமால் அவதாரமாக முதற் குலோத்துங்கன் (அபயன்) பிறந்தருளும் வரையமைந்த செய்தியைத்-'திருமுடி அடைபு' (இத் தலைப்பு, சென்னை அரசுக் கையெழுத்துப் படியில் உள்ளது என்பார் இந்நூல் உரையாசிரியர். ஆ. வீ. கன்னையா நாயுடு, 1944 பதிப்பு பக். 97) என்று இராசபாரம்பரியம் கூறும்.

இவ்வாறு ஒருவர் கதை கூற அதனை மற்றவர் எழுதுவது என்பது தொல்பழங் கதைமரபில் காணலாம். சான்றாக வியாசர் கூறிய மகாபாரதத்தை விநாயகர் எழுதினார். அது போன்றக் கற்பனைக் கண்கொண்டு, வியாசர் பாரதம் கூறியது போல, நாரதர் சோழர் மரபு வழியைக் கூறினார். விநாயகர் பாரதத்தை மேரு மலையில் எழுதியது போலக் கரிகாலன் எழுதினான். இதில் குலத்தில் சிறந்தோன் ஒருவனைக் கொண்டு குலமரபு எழுதத் தேர்ந்தெடுத்த சிறப்புப் புலப்படும். ஆயினும் குலோத்துங்கனுக்கு முன் பிறந்த கரிகாலன் தனக்குப் பின் வந்த சோழ மரபைப் பற்றியும் அவர்களின் பல்வேறு செயல் பற்றியும் எவ்வாறு எழுத முடிந்தது எனின், இம்மரபைப் புராண இலக்கிய மரபு எனக் கொண்டால் கால மாற்றம் பற்றிய கருத்து மறைந்துவிடும்.

இந்நிலையில் இப்பரணி நூலில் வரலாற்றுண்மைகள் மற்ற வரலாற்றுச் சான்றுகளுடன் இணையும்போது இலக்கியக் கற்பனை நெறியில் செயங்கொண்டார் கூறிச் செல்வது புலப்படும். இதை

நேர்முறையில் ஏற்காமல் மற்றொரு வகையில் ஏற்கலாம். எனவே நேர்முறையில் வரலாறு கூறும் நூலாகக் கலிங்கத்துப்பரணி அமையாமல் மறைமுக நிலையில் வரலாற்றை உரைக்கிறது எனலாம்.

குலோத்துங்கன் தோன்றும் வரை முன்னர்த் திருமால், பிரமன் போன்ற தெய்வ மரபில் சோழர் குலம் தோன்றியதைக் கலிங்கத்துப் பரணி கூறும். பின்னர் மரீசி காசியபன் வழியே வளர்ந்து சோழகுல முதல்வனாகப் பிற்காலத்தில் கூறப்படும் கதிரவன் தோற்றம் பற்றிக் கூறும்.[1] மனு வழி இக்குவாகு வந்ததை அக்குலத்தோடு கவிஞர் இணைப்பார் (பரணி. 188). பின்னர்த் தேவர்கட்குச் சோழர்கள் செய்த துணையையும் பெற்ற பயனையும் கருத்தில்கொண்டு காகுத்தன், முசுகுந்தன், பிருதுலாட்சன், கிள்ளிவளவன், மிருத்யுசித் சித்திரன், தூங்கெயிலெறிந்தவன், உபரிசரன், சூரவர்க்கன் என் போரைப் புராணக் கதை அடிப்படையில் பரணி பாடும்.

இயற்கையின் ஆற்றல்களை அடக்கிய பெருமையைச் சுட்டும் போது சோழர்களில் கவேரன் (காவிரிப் புனல் கொணர்த்தல்), சமுத்திரசித் (ஒரு கடலிடை மற்றொரு கடலைப் புகவிடுதல்) பெயர் தெரியாச் சோழன் ஒருவன் (காற்றை அடக்கி ஆளுதல்) ஆகியவரைப் பரணி புகழும். இராசகேசரி, பரகேசரி, எனுமிருபட்டம் சூடியவர்களால் உலகில் புலிக்கொடி ஆட்சி நிலை நாட்டிதைக் கூறும். இங்ஙனம் பட்டம் சூடிக் கொள்வதை விசயாலய சோழன், 'பரகேசரி' என்ற பட்டம் புனைந்து கொண்டதால் அறிகிறோம். மற்ற சோழ மன்னர்களின் புகழைக் கூறுவதைவிடக் கரிகாற் சோழன் காவிரிக்குக் கரைகட்டியமை, பல மன்னரை வென்றமை, புலவர்க்குப் பரிசளித்தமை போன்றவற்றைப் பரணி விரிவாகக் கூறுவது குறிப்பிடத் தக்கது.

கரிகாலனைப் போன்றே முதல் இராசராசனின் சிறப்பையும், கூறும். அதனுக்குப் பின் சோழ மன்னர்கள் கங்கை, கடாரம் வென்றது; கம்பிலியில் வெற்றித் தூண் நட்டது; கல்யாணபுரத்தில் புலி பொறித்தது; கொப்பத்தில் போர் புரிந்தது; மனுநெறி தழைக்க அறம் செய்தது; குந்தளரை வென்றது போன்றவற்றை முறையே முதல் இராசேந்திரன், முதல் இராசாதிராசன், இராசேந்திர தேவன், இராச மகேந்திரன், வீரராசேந்திரன் ஆகியோர் செயலாக விளக்கும் (பரணி. 202-206).

இவ்வாறு கலிங்கத்துப் பரணி சோழர் குலத்தின் தொடக்கத்தைப் புராண நிலையில் தொடங்கியது வரலாற்றுடன் ஒத்துச்

செல்லாது. தமிழக வேந்தர்களின் மரபைச் சூரிய குலத்துடன் இணைத்துக் காணும் மரபு புலப்படுகிறது. உயிர்களிடத்துச் சோழமன்னர்கள் காட்டிய அன்பின் பெருமையைப் புலப்படுத்த மனுவையும் சிபியையும் கூறும். பகை நீங்கி அமைதியாக வாழ மாந்தாதாவின் பண்பைச் சோழர் விழிப் பண்பாகப் பரணி காட்டும். எனினும் இவ்வற நெறி சாரும் நோக்கைவிடப் பிற்காலச் சோழரின் போர் வெற்றியைச் சிறப்பிக்கும் போக்கே பரணியின் உள்ளீடாக மலர்ந்துள்ளது. இதன் வாயிலாக வரலாறு என்பதில் அரசர் புரியும் போரின் போக்கே பேரிடம் பெறும் நிலையை உணர முடிகிறது.

திருமாலின் அவதாரமே முதற் குலோத்துங்கன் என்பது கலிங்கத்துப் பரணியின் பாவியற் கொள்கை. அத்துடன் திருமாலின் அவதாரங்களில் ஒன்றான கண்ணனின் செயல்களையும், மற்றொரு அவதாரமாம் இராமனின் செயல்களையும் அபயன் மீது ஏற்றிச் சொல்வதும் (பரணி. 29) அந்நெறியின் விளைவேயாகும்.

தான் பிறந்த குலத்தின் பெருமையை விளக்க வந்தவன் குலோத்துங்கன் என்பது புலப்படக் 'குலதீபன்', 'சோழ குலசேகரன்' 'சோழ குல துங்கன்', 'குலோத்துங்க சோழன்', எனப் புகழ்வதுடன் சோழ குலத்தில் சிறந்த அரசனாம் கரிகாலன் பெயர் கொண்டு அபயனைப் புகழ்வதும் முறையே சுட்டும். பலவகைப் போர்களில் வெற்றி பெற்ற அபயனின் தோள் சிறப்பும், வாள் பெருமையும், குதிரை ஏற்றமும் புகழப் பெறுகின்றன.

அபயன் பெற்ற போர் வெற்றியைச் 'சயதரன்' 'சயதுங்கன்' என்று குறிப்பதுடன், கல்விச் சிறப்பைக் காட்டப் 'பண்டித சோழன்' எனப் பரணி பரவும். தில்லையில் கூத்தபிரானை அவன் வணங்கியதையும் குறிப்பிடும்.

அறத்தை நிலை நாட்டியதைக் குறிப்பிட்டவாறே அவன் கொடைச் சிறப்பைப் போற்றிப் 'பொன்மாரி' எனச் செயங்கொண்டார். பரணியில் புகழ்ந்துள்ளார். எனினும் பரணி முழுதும் அபயனின் சிறப்பை முழுமையாகக் காணும் போது அவனது கொடைச் சிறப்பு ஓரளவே புலப்படும். மாறாகப் போர்ச் சிறப்பின் அளவு நன்கு வெளிப்படும். அபயனின் ஆளுமையின் தனி நிலையை விடச் சோழப் படையும், அதன் ஆற்றலுமே பேரளவு வெளிப்பட்டுள்ளன. இவற்றை நோக்கின் பரணி ஆசிரியர் சோழ அரசில் காணும் கல்வெட்டு, செப்பேடு போன்றவற்றில் புலப்படாது பின் புலத்தின் அமைந்த பொது மக்களின் நிலையை வெளிப்படுத்தும் புதுப்போக்கு நன்கு விளங்குகிறது.

இயற்கைக்கு அப்பாற்பட்ட பழங்கதைகளில் ஆயிரம் யானைகளை அமரிடை வென்ற மானதனுக்கு வகுக்கும் நூலாகவும் உயர்வு நவிற்சிப் பண்பு மிகுந்த நூலாகவும் கலிங்கத்துப் பரணி உள்ளது எனினும் அது வரலாற்றாசிரியர்கள் வரவேற்கத் தக்க உண்மைகளைச் சோழர் வழி முறையில் குலோத்துங்கன் ஏவக் கலிங்கத்துடன் போரிட்ட செய்திகள் அவன் படை சென்ற வழிகள் வாயிலாகக் காண முடிகிறது.[2]

குலோத்துங்கன் சோழகுலத்திற்குத் தத்தாக வந்தானென்றோ சோழர் அரண்மனையில் வளர்க்கப் பட்டான் என்றோ கலிங்கத்துப் பரணி கூறவில்லை. கீழைச் சாளுக்கியருடன் சோழர் கொண்ட மண உறவால் முதல் இராசேந்திரனின் மகள் அம்மங்காதேவியின் மகனாக இரண்டாம் இராசேந்திரன் என்னும் முதற் குலோத்துங்கன் பிறந்தான்.

குலோத்துங்கன் பட்டம் சூடுமுன் சோழ நாட்டில் நிலையற்ற ஆட்சியில் அரசற்ற சூழல் இருந்ததைப் பரணி காட்டும். கூடல் சங்கமப் போரில் வென்ற அபயன் உலகைக் காத்தளித்த பின், ஆளும் வலிமை வந்தது என்பார் செயங்கொண்டார். இதனைப் படையில் சிலர் அவனை முதல் இராசேந்திரன் தத்து எடுத்ததாகவும் உரைப்பர்.[3] இது பற்றி நூலில் அகச்சான்று ஒன்றும் கிடைக்கவில்லை.

கங்கை கொண்ட சோழன் தேவி தன் மகள் பெற்ற மகனாம் முதற் குலோத்துங்கனைக் கையில் எடுத்து, 'அரசர்க்கு இந்திரனாம், அவனுடைய உறுப்படையாளம் நோக்கிச் சோழர் குலந்தை வளர்க்கத் தக்கவன் என இரு குலத்தால் பிறந்தவன் என மகிழ்ந்ததாகப் பரணி கூறும் (பரணி: 236). வீரராசேந்திரன் அவனை இளவரசாக ஆக்கினான் (பரணி: 249).

குலோத்துங்கன் பல மனைவியரை மணந்தான் மதுராந்தகியை மணந்து மக்கள் எழுவரைப் பெற்றதாக வரலாற்றிச் செய்தி கூறும். அபயனின் பட்டத்தரசி பெயர் புவன முழுதுடையாள் எனப்பர். தியாகவல்லி இவட்கு அடுத்து வந்தவளாவள். பரணி இவளையும் ஏழிசை வல்லபியையும் குறிப்பிடும் (பரணி: 285).

குலோத்துங்கன் தலைநகராகக் கொண்டது கங்கை கொண்ட சோழபுரம் எனும் கங்காபுரி ஆகும். இதனை அடுத்துக் காஞ்சிபுரத்தில் திருவோலக்கச் சித்திரமாளிகை சிறப்புடன் விளங்கியதாகப் பரணி கூறும். இதனைக் கல்வெட்டுகள் ஏற்கும்[4].

ஆயினும் சுங்கம் தவிர்த்ததால் 'சுங்கம் தவிர்த்த சோழன்' என்ற சிறப்புப் பெற்றான். ஒட்டக்கூத்தர் எனும் புலவர் இச்சிறப்பை மறவாமல் குறிப்பர்.

குலோத்துங்கன் ஆட்சி உரிமை பெற்றது பற்றி வரலாற்றில் பல கருத்துகள் நிலவுகின்றன. அரசற்று அல்லலுற்ற சோழநாட்டைக் குலோத்துங்கன் காத்தான் என்ற செய்தியைக் கல்வெட்டு, திருமகளையும் நிலமகளையும் பொதுமை நீக்கித் தன்னுரிமைக்குட் படுத்தியதைக் கூறும். வேள்வி, மனுநெறி, அறுதுறை ஆகியவை குன்றிச் சாதிகள் தடுமாறி ஒழுக்கங் கெட்டுக் கற்பு மாறிப் பாது காப்புக் குன்றிய போது 'கலியிருள் மறைய கதிரவன்' என அபயன் உலகுய்யத் தோன்றியதாகப் பரணிபாடும் (பரணி: 258). போரும் புரட்சியும் தலையெடுத்து நின்ற போது தன் முதற் கடமையாக அவற்றை நீக்க முயன்றான்.

மணலூரில் விக்கிரமாதித்தனுடன் பெரும் போர் புரிந்ததைப் பரணி புகழும் (பரணி: 564). அளத்தி, நவிலை போன்ற இடங்களில் போர் புரிந்து யானைகளைக் கைப்பற்றியதைக் கூறும். மைசூர்க் கல்வெட்டுகளில் நவிலை நாடுள்ளது என்ற உண்மை இங்கு ஒத்து நோக்கத்தக்கது.

வடபுறத்தை வென்று வணக்கியபின் தென்னவனாம் பாண்டிய னையும் குலோத்துங்கன் வென்றான். அத்துடன் சேரநாட்டையும் தனது 11-ஆம் ஆட்சி ஆண்டுக்குள் அடக்கினான். குலோத்துங்கன் படை பாண்டியன் மீனையும் சேரன் வில்லையும் அழித்தது. காந்தளூர்ச் சாலையிலுள்ள கப்பற்படையை அழித்தது. இதனைப் பரணி 'வேலை கொண்டு விழிஞ மழித்ததுஞ் சாலை கொண்டதும் தண்டுகொண்டே யன்றோ (பரணி:383). எனக் குறிக்கும். அவன் விட்ட தண்டினால் மீனவர் ஐவரும் கெட்ட கேட்டினைக் கூறும். இச் செய்தியைக் கல்வெட்டு விளக்கமாகச் சான்று பகரும். விழிஞம் இராசேந்திர பட்டினம் என அழைக்கப்பட்டதையும் கோட்டாற்றில் நிலைப்படை தங்கியதையும் வரலாற்றுச் சான்றுகள் ஒப்பும். கடாரம் வென்றதைப் பரணி வலிதாகச் சுட்டும். இச்செய்திகளுக்கு மேலாக அபயன் சீனர்களுடன் அரசியல் உறவு கொண்டதையும் அறிகிறோம்.[5]

குலோத்துங்கன் புகழ் பாடப் பல மெய்க்கீர்த்திகள் கிட்டி யுள்ளன. திரிபுவன சக்கரவர்த்தி என்ற பட்டம் பெற்றதையும் அறிகிறோம். இளங்கோப் பருவத்தில் இவன் குந்தளர்களை

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY

வென்றதை வரலாற்றுச் சான்றுகள் கூறுவதைப் பரணியுடனும், 'குந்தளரைக் கூடல் சங்கமத்து வென்ற பெருமபயன்' எனக் குறிக்கும். மேற்குச் சாளுக்கிய ஆறாம் விக்கிரமாதித்தனுடன் போர் புரிந்து வென்றதன் விளைவாக 'விருதராசபயங்கரன் (விருதராசனும் விக்கிரமாதித்தன் அஞ்ச விளங்கியவன்) என்ற பட்டம் பெற்றான். அப்போரில் பெற்ற யானை முகபடாங்களால் காளி கோயிலின் வெளியடங்கப் போர்த்தான் எனப் பரணி பாடும் (பரணி 103, 147).

இலங்கைப் போர் பல நிலையிலும் சோழர்களுக்கு இழப்பாக இருப்பினும் குலோத்துங்கனின் கல்வெட்டுகள் இதுபற்றி ஒன்றும் கூறவில்லை. பரணியில் குலோத்துங்கன் முன் திறையிட நின்ற அரசர்களில் சிங்கள மன்னரிருந்ததைச் சுட்டும். 'சிங்களத்தொடு தென் மதுராபுரி செற்ற கொற்றவன்' என்பதும் சோழர் மேம் பாட்டைக் குறிக்கும் (பரணி. 152).

குலோத்துங்கனின் கல்வெட்டுகளால் கலிங்கத்தின்மீது இரு முறை படை எடுத்துச் சென்றதை வரலாற்றறிஞர்கள் ஏற்பர். அவற்றில் ஒன்று, கலிங்கத்துப் பரணியின் பாடு பொருளாயிற்று. இரண்டாம் போரே இதற்குக் களம் என்பர். 'வண்டை வேந்தன்' என்ற தொடரை (பர. 366) 'வளவர் வந்தன்' எனக் கொண்டு அவனை விக்கிரம சோழனாகக் கொள்பவர் இக்கருத்துடன் மாறு படுவர். அனந்தபன்மனாம் கலிங்க மன்னனுடன் போர் நடந்த காலம் கி.பி. 1111 அல்லது 1112 என்பதால் இது தவிர்த்தற்குரியது என்பர் (பரணி. 375).

குலோத்துங்கன் தானே படை எடுத்துச் செல்லாமல் படைத் தலைவனாம் கருணாகரனைக் கொண்டு எழுகலிங்கத்தை வென்றான். கல்வெட்டுகள் இதுபற்றிப் பொது உண்மையாக அரசன் சிறப்பைக் கூறப் பரணி, கருணாகரன் சிறப்பு நிலையைக் காட்டும்.

கலிங்கத்துப்பரணி இப்போரின் தொடக்கத்தைக் கலிங்க மன்னன் இருமுறை கப்பங்கட்டாத நிலையைத் திருமந்திர ஓலை வாயிலாக அறிந்து அவன்தன் மலையரண் வலிமையை அழித்துக் கைப்பற்றிக் கொண்டுவரச் சோழன் ஆணையிட்டான் எனக் கூறும்.[6] படைத்தலைவன் கருணாகரத் தொண்டைமானின் தலைமையில் சென்ற சோழர் படை காஞ்சியை விட்டு வடபுலம் சென்றது. நால் வகைப் படைப் பெருமையைப் பரணி தனக்கேயுரிய இலக்கிய நயமும், ஒலி நயமும் கலக்கக் கூறும். சோழர் படை பாலாறு, குசைத்தலை, பொன்முகரி, கொல்லி, பெண்ணை, மண்ணாறு, குன்றி, கிருஷ்ணா,

கோதாவரி, பம்பா, காயத்திரி, கோதமை என்ற ஆறுகளைக் கடந்து சென்றது எனச் செயங்கொண்டார் கூறியிருப்பது இன்றைய இந்திய நிலவியல் உண்மைக்கு ஒத்ததாக உள்ளது.[7]

அமைச்சன் எங்கராயன் கலிங்கமன்னன் அனந்த பன்மனின் செயலுக்கு எதிராக அறிவுரை கூறியும் அவன் இணங்காது போர் புரிந்து சோழர் படையின் கையகடப்படாமல் தப்பினான்.

அக்காலச் சமுதாயத்தில் மக்கள் அன்றாட வாழ்வில் பின்பற்றும் சில பழக்க வழக்கங்களை மறைக்காமல் செயங்கொண்டார் வெளியிட்டுள்ளார். அரசர்கள், அவர்தம் போர்கள், புகழ்க் கொடைகள் என்பவற்றை மட்டும் வரலாறாகக் கொள்ளாமல் மக்கள் வாழ்வையும், அவர்களின் நடைமுறைகளையும் மறைக்காமல் வெளிப்படையாகக் கூறியுள்ளார். இந்நிலைக்குப் பரணியில் ஏராளமான சான்றுகள் இல்லை. எனினும் ஒருசில சான்றுகள் ஏற்குமளவு கிடைத்துள்ளன என்பது போற்றற்குரியது.

குழந்தைப் பருவத்தில் அதற்குத் தீங்கு வராமல் ஐம்படையாம் தண்டு, வில், வாள், சங்கு, சக்கரம் ஆகியவற்றை அணிவித்தனர் (பரணி. 24). அரசனைத் திருமாலின் அவதாரமாகக் கருதினர். அரசர் கல்வி கற்றுப் போரிற்குரிய பல தொழில் கற்றும் தொழிலில் ஈடுபட்டதுடன் கலை நயம் கனிந்த வாழ்விலும் இன்பம் கண்டது போலவே நாட்டுமக்களும் கலையனைத்தும் கற்றனர் (பரணி. 174) எனக் குறிப்பிடுவதை உணர முடிகிறது.

மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கவேண்டும் என்பதற்கு அளவீடாக மன்னன் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினர். முடி சூடும் பெருமன்னன் அடிமீது சிற்றரசர் அருகம் புல்லை இட்டு வணங்கினர். வீரர்களின் போர்க்கடன் செவ்வையாய் முடியத் தம் தலையை அடிக்கழுத்துடன் அரிந்து பலிபீடத்தில் வைத்துக் காளிக்குக் காணிக்கை செலுத்தினர். போர்க்களத்தில் அமணர் போன்ற மதத்தோர், கங்கையாடச் செல்லும் வைதிகர், பௌத்தர், போர் புரிதற்குரியரல்லா பிற நாட்டினர் போன்றோரைக் கொல்லாது தப்பவிட்டனர்.

கணவரைப் பிரிந்த மகளிர் விரைந்து அவர்களுடன் கூடும் நிலையைக் கூடலிழைத்து அறிந்தனர் (பரணி. 51). கணவர் இறந்த பின் அவரை வைத்தெரிக்கும் சிதையிலேயே அவர் மனைவியர் தீக் குளித்தனர். தம் கணவர் புறப்புண்பட்டு மாய்வதை அவர்தம்

மனைவியர் இழிவாகக் கருதினர். ஒருசிலர் கணவர் போர்க்களத்தில் மாய்ந்தவுடன் தாமும் அவருடன் உயிர்விட்டனர்.

இவ்வாறு குலோத்துங்கன் பரணிப் போரைப் பாடும்போது அக்கால மக்கள் வாழ்வை அரசியல் நிலையிலும், இல்லற நிலையிலும் மறவாமல் கவிஞர் கூறிச் சொல்வது அக்கால மக்கள் வரலாற்றையும் அறிதற்குத் துணைசெய்கிறது.

எனினும் போர்பற்றி எழுந்த இத் 'தெய்வப் பரணி' போர்க் குரிய நடைமுறைப் பெருமையைப் பண்டைய சங்க நெறியில் கூறாமல் பேயுலகமும், காளியின் தலைமையும் விளங்க இலக்கியப் பேராக்க நிலையில் படைத்துச் சென்றுள்ளது. இந்நிலையில் சோழ மன்னன் புகழ், படிப்போர் மனத்தில் நிலைபெறுவதிலும் போரின் விளைவாம் பேய்ச் செயல் பற்றிய வெறுப்பு விளைந்து போர் வேண்டா நல்லெண்ணம் அரும்ப வழி ஏற்படுகிறது.

போர் என்பது பண்டைக் காலம் முழுதும் மனித இனத்தில் தனியிடம் பெற்றுச் சிறந்து விளங்கிய நிகழ்ச்சி என்பதில் ஐயம் இல்லை. புறத்திணை என்று வாழ்வியல் ஒழுக்கப் பாகுபாடுற்றுத் தமிழகத்தின் மூவேந்தர், முகிழ்த்த காலத்தில் போர் தனக்கென ஒரு தனிச் சிறப்பைப் பெற்றிருந்தது உண்மையே. ஒருவரை ஒருவர் அடிமைப்படுத்தும் நிலைக்கு இப்போர் வழிவகுத்தது. இதன் விளைவை அறியாமலே போரின் புகழ் பெருகியது. அபயன் அரண் மனையில் மற்ற மன்னர்களும் அவர்களின் மனைவிமாரும் பட்டபாடு இதற்குச் சான்று பகரும்.[8] எனினும், அக்கால மன்னர்தம் வீர விளையாட்டாகப் போர் பூத்தது. சின்னஞ்சிறு செயலுக்காகக் கூடப் போர்த்தீ எழுந்தது. பரணியில் கலிங்க மன்னன் தான் கட்ட வேண்டிய திறைப்பொருளை இருமுறை கட்டாததுதான் கலிங்கத் தின்மேல் படையெடுக்கக் காரணம் ஆயிற்று. மாறாக, எண்ணிப் பார்த்து ஒரு தூதனை அனுப்பிச் செய்தி அறிந்து, பின்னர்ப் போரைத் தொடங்கியிருக்கலாம். திருமணங்கள் போரை முடிக்க வும், தொடங்கவும் காரணமாயிருந்ததற்குக் குலோத்துங்கனின் பிறப்பே சான்றாகும்.

அரசியல் வாழ்வில் கலிங்கத்துப்பரணிப் போர் சோழ நாட்டிற் கும், கலிங்க நாட்டிற்கும் நடைபெற்ற 'நாட்டுப் போர்' வகையில் அமைகிறது. கலிங்க வீரர்கள் 'அருவர் வருவரெனா விறைஞ்சினர் அபயம் அபயம் என நடுங்கியே'(பரணி 452). இச்செய்தியால் போரில் எழுந்த அச்சத்தின் அடிப்படை தெரிகிறது. நாட்டின் எல்லையைப்

பெருக்குவது நோக்கமாகத் தெரியாவிடினும் கலிங்கப்போர், நாட்டின் எல்லைபற்றிய விழிப்புணர்ச்சியைச் சுட்டும். 'போர், எல்லாப் பொருள்களின் தந்தை' என ஹெராக்லிசு கூற்றின் வழியே செல்வம், ஆட்சி ஆகியவற்றின் ஆற்றலைப்பெற இப்போர் சோழர்க்குத் துணைசெய்தது. இதனால் இடைக்காலச் சோழர்களின் அரசியற் புகழும், பெருமையும் புலப்படப் பரணி வழிசெய்கிறது.

அடிக்குறிப்புக்கள்

1 "சங்க இலக்கியங்களில் கதிரவன் மரபு வழியில் சோழர்கள் தோன்றிய குறிப்பு ஓரிடத்திலேனும் காணவில்லை". தா. வே. வீராசாமி. ஆய்வுக் கதிர், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர் 1974, ப. 22

2 K.A. Nilakanta Sastri, The Colas Vol. I, University of Madras, Madras 1935, p. 20

3 கலிங்கத்துப் பரணி 206, SII pp. 127, 196

4 SII, Vol. III, p. 73

5 K.A. Nilakanta Sastri, The Colas, Vol. II (part I), University of Madras, Madras 1937 pp. 25, 26

6 கலிங்கத்துப் பரணி 328, 337, 340

7 ,, 367, 368, 369

8 ,, 325, 286, 381

☆

ஆதித்த கரிகாலனின் கொலை வழக்கு ஒரு மறு ஆய்வு

டாக்டர் க. த. திருநாவுக்கரசு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

இடைக் காலச் சோழப் பேரரசர் மரபில் சிறப்புற்று விளங்கிய இரண்டாம் பராந்தகன் எனப்படும் சுந்தர சோழனுடைய (கி. பி. 957-970) மூத்த மகனே ஆதித்த கரிகாலன்; உலகப் புகழ் வாய்ந்த பேரரசன் இராசராசனின் (கி. பி. 985-1016) அண்ணன் எனும் சிறப்புக்குரியவன்.

இவனை வரலாற்று அறிஞர்கள் மூன்றாம் கரிகாற் சோழன் எனவும் இரண்டாம் ஆதித்த சோழன் எனவும் போற்றுவர். மதுரை கொண்ட இராசகேசரிவர்மரான, பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள் ஸ்ரீ சுந்தர சோழரின் அருந்தவப் புதல்வனான ஆதித்த கரிகாலனுக்குக் கி.பி. 960-ஆம் இளவரசுப்பட்டம் சூட்டப்பட்டது.[1] இப்பட்டம் சூட்டப்படுவதற்குச் சிறிது முன்னரே, வீரபாண்டியனை ஆதித்தன் வெற்றிகொண்டான்; பாண்டியன் கொலை செய்யப் பட்டான். இதனால் 'பாண்டியன் முடித்தலைக்கொண்ட ஆதித்த சோழன்' எனும் சிறப்பினைப்பெற்று இருந்தான்.[2]

இந்த இளவரசன், இதற்குப் பிறகு ஐந்து ஆண்டுகளே உயிர் வாழ்ந்ததாகத் தெரிகிறது. வீரநாராயணச் சதுர்வேதி மங்கலம் எனும் உடையார்குடியில், அவன் படைத்தலைமைப் ஆண்டு அமைதிப் பணிபுரிந்துகொண்டு இருந்த சமயத்தில், ஏறக்குறைய கி.பி. 965-இல் யாரோ சிலரால் கொலை செய்யப்பட்டதாக உடையார்குடி கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

'இந்தப் படுகொலையைச் செய்தவர்கள் யார்?' என்பதைக் குறித்து ஆராய்ச்சியாளரிடையே கருத்து வேற்றுமை இருந்து வருகிறது. இந்தக் கருத்து வேற்றுமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, அவற்றிடையே ஒளிந்துள்ள உண்மையைக் கண்டறிய முயல்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

உத்தம சோழனா?

பொதுவாகப் பல அறிஞர்கள், ஆதித்த கரிகாலனின் கொலைக்கு அவனுடைய பங்காளியான உத்தம சோழனானே (கி.பி.970-985) தூண்டுதலாக இருந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.[4]

சுந்தர சோழன், தன் ஆட்சியின் இறுதிப் பகுதியில், ஆதித்த னுக்குப் 'பரகேசரி' என்னும் பட்டப்பெயருடன் இளவரசுப் பட்டம் சூட்டினான். மூத்த கிளைவழி வந்த மதுராந்தகன் எனப்பட்ட உத்தம சோழனும் தனக்கு முடிசூட்டப்படும் காலத்தை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருந்தான். ஆனால் அவன் எதிர்பார்த்த தற்கு நேர்மாறாகச் சோழப் பேரரசின் மணிமுடி, பங்காளிக்கே உரித்தாக்கப்பட்டதைக் கண்டு, அவன் சீற்றமுற்றான்.

இதனால், அம்மணிமுடியை அடைவதற்குரிய சூழ்ச்சிகளில் அவன் ஈடுபட்டான். இந்தச் சூழ்ச்சியின் முதற்படியாக வேறு சிலரைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு உள்நாட்டுக் கலகத்தை அவன் உண்டாக்கினான். மேலும் கொள்ளிடத்தின் வடகரையில் இப்பொழுது உடையார்குடிக்கு அருகில் உள்ள 'வீரநாராயணச் சதுர்வேதி மங்கலம் எனும் ஊரில் இருந்த சிலரைகொண்டு ஆதித்தனை அவன் கொன்றுவிட்டான்[5] என்பது பேராசிரியர் கே.ஏ. நீலகண்டசாஸ்திரியாரின் துணிவாகும்.

ஆதித்த கரிகாலன் கொலையுண்ட பிறகு நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் இந்த எண்ணப் போக்கிற்கு மாறான சூழ்நிலையை-முரணான எண்ணத்தை எழச்செய்கின்றன.

அக்கொலையில், மதுராந்தகனுக்குத் தொடர்பு இருந்திருந்தால் அருண்மொழித் தேவனே அரசனாக முயன்று இருப்பான்; உத்தம சோழனை அரசனாக்குவதற்கு அவன் உடன்பட்டு இருக்கமாட்டான்; உத்தம சோழனுக்கு உதவியாகவும் இருந்திருக்க இயலாது!

அடுத்து ஒரு கொலைகாரனை நாட்டு மக்கள் அரசனாக ஏற்றுப் போற்றி இருப்பார்களா எனும் ஐயம் எழுகிறது. உத்தம சோழ னுடைய ஆட்சிக் காலத்தில், நாட்டில் எத்தகைய உள்நாட்டுக் குழப்பமும் கலகமும் இல்லாமல் இருந்ததை அறிகிறோம். இது ஒன்றே, அவன் நேர்மையான முறையில் ஆட்சிக்கு வந்தவன் என்பதற்குப் போதிய சான்றாகும்.

அரசனாகப் பட்டம் சூட்டிக் கொண்டவுடன், அவனுக்கு 'உத்தம சோழன்' எனும் பெயர் வழங்கலாயிற்று. மக்கள் மன்றத் தில் உத்தமன் எனும் தீர்ப்பைப் பெற்றவன் அவன் என்பதை இந்தப் பெயர் புலப்படுத்துகிறது

இது உண்மையானால், கொலைகாரர்களை உடனடியாகக் கண்டு பிடுத்து, உத்தமசோழனே தண்டித்து இருக்க வேண்டும்;

இவனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த இராசராசன் காலத்தில் தான் தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது. இது ஏன்?' எனும் வினாவினை எழுப்பலாம்.

ஆதித்தனின் படுகொலை ஒரு மர்மமாகவே இருந்திருக்கிறது. 'எப்படி கொலை செய்யப்பட்டான்?' யாரால் கொலை செய்யப் பட்டான் என்பதை யாரும் எளிதில் அறிய இயலாதவாறு சதிச் செயலில் வல்லவர்கள் திட்டமிட்டு முன்னறி திறனோடு தடையங்கள் கிடைக்காவண்ணம் செய்துள்ளனர். இதைத் துப்புத் துலக்கவும், புலன் விசாரணை செய்து உண்மையைத் தெளியவும் பதினேழு ஆண்டுகள் பிடித்தும் இருக்கலாம்.

எனவே, பழியை உத்தம சோழன்மீது சுமத்துவதற்குப் பொருத்தமான சான்றுகள் போதிய அளவிற்குக் கிடைக்கவில்லை என்பது போதருகிறது.

இராசராசன் காரணமா?

தன்னுடைய அண்ணனை, இராசராசனே 'பதவி வெறியால்' படுகொலை செய்து இருக்கவேண்டும் எனக் கருதுவோரும் உண்டு. "இராசராச சோழன், அவனுடைய இனத்தின் பெருமைக்கும், சிறப் பிற்கும் உரிய பேரரசனாகவும்; தென்னிந்தியாவின் புகழ்மிக்கப் பெருவேந்தனாகவும் போற்றப்படுகிறான். ஆனால், அவனிடம் இருந்த எதிர்மறை(தீய)ப் பண்புகளைச் சுட்டிக்காட்டுவதே என்னு டைய நோக்கமாகும்."[6] என்று ஓர் ஆராய்ச்சியாளர் தொடங்குகிறார்.

முன்கூட்டியே, முடிவுசெய்துகொண்ட சில கருத்துகளை இவ் ஆசிரியர், உள்ளத்தில் ஆழப் பதியவைத்துக் கொண்டுள்ளார் என்பதனை மேற்கண்ட கருத்துகள் வெளிப்படுத்துகின்றன. "அருண் மொழி (இராசராசன்) குற்றமற்றவன் என்பதை நிலைநாட்டுவதற்கு முன்னர், நான் எழுப்பும் இந்த வினாக்களுக்கு விடை கூறுங்கள் பார்க்கலாம்" என்று அவர் அறைகூவல் விடுத்துள்ளார். அவர் எழுப்பியுள்ள வினாக்கள்:

1 சோழப் பேரரசின் மணிமுடி, பிறப்பினால், உத்தம சோழ னுக்கு உரியது. அதை ஏன் அவனுக்குக் கொடுக்கவில்லை? ஒரு முறை அரசமரபின் முடிசூட்டும் வழக்கத்தில், மாற் றத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, அருண்மொழி ஏன் அதைக் கடைப்பிடிக்கவில்லை? மக்களுடைய ஆதரவு, தன்பக்கம் இருந்தபொழுது அவன் ஏன் ஒரு சமரச உடன்பாட்டிற்கு

வந்து, தான் அரசனாவதற்குரிய வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்து இருந்தான்?

2 தன்னுடைய பேரரசைத் திரும்பப் பெற உத்தம சோழன் நினைத்தது உண்மையானால், தனக்குப் பிறகு தன்கால் வழியினரே அரசராவதற்குரிய செயல்களை அவன் ஏன் செய்யத்தவறினான்? கலகம் செய்து, வஞ்சனையால் ஆதித்தனை அவன் கொன்று இருந்தால், அருண்மொழியை ஒழித்துக் கட்டுவது அவனுக்குக் கடினமான செயலா? எனும் இத்தகைய வினாக்களை எழுப்பிய அந்த ஆசிரியர், மேற் கொண்டு அவருடைய மனப்பதிவுமுறைக் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

"இதற்கு நேர்மாறாக, அந்த மறைமுகச் சான்றுகளே ஆதித் தனை, அருண்மொழி கொலை செய்யுமாறு சிலரைத் தூண்டினான் என்பதற்குச் சிறந்த ஆதாரங்களாக அமைகின்றன. தமையனைக் கொன்றதனால், தன் கைகளில் படிந்த இரத்தக்கறை உலரும் வரையில் (பொதுமக்கள் சீற்றத்திற்கு அஞ்சி) உத்தம சோழனை அரசபாரத்தைத் தாங்குமாறு அவன் வேண்டினான்; அல்லது தானே அவனைச் சிம்மாசனத்தில் வீற்று இருக்குமாறு செய்தான் எனக் கருதுவதற்குத் தடை யாதும் இல்லை. அதேசமயத்தில், தன்னை இளவரசன் என்று அறிவிக்குமாறு, உத்தம சோழனை வற்புறுத்திச் சிறிது காலத்திற்குள் தன்னுடைய நிலையை அவன் உறுதியும், பாது காப்பும் உடையது ஆக்கிக் கொண்டது ஏன்? திருவாலங்காட்டுச் செப்பேட்டின் வாசகத்தைச் சிறிது திருத்தி அமைப்போமானால், உத்தம சோழன் நாடாளும் பொறுப்பைச் சுமையாக ஏற்கவில்லை; அருண்மொழியின் வஞ்சகச் செயலையே, அவன் பொறுத்தற்கரிய சுமையாகச் சுமந்துகொண்டு இருந்தான் எனப் பொருள்படும் . . .

உத்தம சோழனுக்கு மகன் ஒருவன் இருந்துப், அவனை அரசு கட்டில் ஏற விடவில்லை. உயர்ந்ததோர் அரசியல் அதிகாரியாக அவனைப் பதவியில் இராசராசன் அமர்த்தியுள்ளான். இவை எல்லாம், அரசியலில் பேரதிகாரிகளாக இருந்த ஒரு சாரார், அருண்மொழிக்கு உடந்தையாக இருந்ததையே புலப்படுத்து கின்றன.

அருண்மொழியின் தமக்கையான குந்தவையும், அவள் கணவ ரான வல்லவரையன் வந்தியத்தேவனும் அருண்மொழிக்கு ஆதர வாக இருந்துள்ளனர். இதனால், இராசராசன் ஆட்சிக் காலத்தில்,

வந்தியத்தேவனுக்கு மிக உயர்ந்த பதவி அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவை யாவற்றையும்விட, இராசராசனின் பட்டத்து அரசியாக இருந்த இளங்கோப்பிச்சி, குந்தவையின் மகள் என்பதை நாம் கருத்தில் இருத்த வேண்டும்.''[11]

ஆராய்ச்சி என்பது உள்ளதை உள்ளவாறு கொண்டு, அதைத் துருவித் துருவி ஆய்ந்து உண்மை காண்பதாகும். நம்முடைய கருத்தையோ, கொள்கையையோ நிலைநாட்டுவதற்கு ஏற்றவகையில் கிடைத்துள்ள அடிப்படைச் சான்றுகளில் உள்ள சொற்களை மாற்றுவதோ, திருத்துவதோ முறையான ஆராய்ச்சியாகாது. ''இது தான் என்னுடைய கருத்து'' என்று காரணகாரியங்களைக் காட்டாமலேயே உணர்ச்சிக் கனிவுடன் உரைத்து விடலாம்.

''ஆதித்தனை கொலை செய்ய இராசராசனுக்கு அவனுடைய தமக்கையார் உடந்தையாக இருந்தார்'' என்பதற்குத் தக்க ஆதாரங்களைக் காட்ட வேண்டும். தன்னுடன் பிறந்த அருண்மொழி இளைஞனாக இருந்தபொழுதே, அவர்களுடைய தாய், தந்தையோடு உடன்கட்டை ஏறிவிட்டாள். அதற்கு முன்பே, மற்றோர் உடன் பிறப்பை (ஆதித்தனை) அவர்கள் இருவரும் இழந்து விட்டனர். இதனால், இவ்விரு உடன்பிறப்புகள் இடையே நெருக்கமும், பேரன்பும் பெருகி வளர்ந்து இருக்க வேண்டும். இவர்கள் ஒரு தாய் வயிற்று மக்கள்; இராசேந்திரனும் இளைய குந்தவையும் இருவேறு தாய்மார்களுக்குப் பிறந்த உடன்பிறப்புகள் என்பதையும் நினைவு கூர்தல் வேண்டும். இராசராசனின் உடன்பிறப்பான குந்தவைப் பிராட்டியார் (தமக்கை) மூத்தவள்; இளவரசி குந்தவை விமலாதித்தனோ இராசேந்திரனுக்குத் தங்கை. இந்தப் பின்னணியில் நோக்குவோமானால், இராசராசனிடம், அவனுடைய தமக்கையார் கொண்டிருந்த அன்பு, தாய்ப் பாசத்தைப் போன்றது என்பது புலனாகும். எனவே, இவ்விருவர் இடையே நிலவிய உடன்பிறப்புப் பாசத்தை, உள்நோக்கத்தின் அடிப்படையில் உண்டானது எனச் சொல்லுவது மனித இயல்புகளைப் புரிந்துகொள்ள விரும்பாதவரின் கூற்றேயாகும்.

''இராசராசனின் பட்டத்தரசி இளங்கோப்பிச்சி. அவள் இராசராசனின் தமக்கையான குந்தைவையின் மகள். இக்காரணத்தால் குந்தவைக்கு ஆதித்தனைக் கொன்றதில் பங்குண்டு''[12] என்று கட்டுரை ஆசிரியர் கூறுவது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும்.

குந்தவை நாச்சியாருக்கு மகள் ஒருத்தி இருந்தமைக்குச் சான்றே இல்லை! இராசராசன் அக்கா மகளை மணந்து கொண்டான் என்பது

பச்சைப் பொய். இராசராசனைப் பற்றிக் கிடைத்துள்ள 1368 கல்வெட்டுகள், ஏழு செப்பேடுகள் ஆகிய ஒன்றில்கூட அவனுக்கு 'இளங்கோப்பிச்சி' எனும் மனைவி இருந்ததைப் பற்றிய குறிப்பே கிடையாது.

சோழ மன்னன் முதலாம் ஆதித்தனுடைய மனைவியே இளங் கோப்பிச்சி என்பவளாவாள். எனவே, இராசராசன் மீது பழிசுமத்த விரும்பும் கட்டுரையாளரின் கற்பனையில் உருவாக்கப்பட்டவளே இராசராசனின் இளங்கோப்பிச்சி.

பாண்டியரின் கைக்கூலிகளே கொலைகாரர்கள்

அவ்வாறாயின், 'ஆதித்தனைக் கொன்றவர் யார்? அதற்குரிய காரணம் யாது? எனும் ஐயம் ஓயாமல் எழும்.

ஆதித்தனைக் கொன்றவர்கள் வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத் தைச் சேர்ந்த சோமன் ரவிதாசனான இருமுடிச் சோழ பிரமாதி ராசன், மலையனூரான் பஞ்சவன் பிரம்மாதிராஜன் எனும் பிராமணச் சகோதரர்களாவர். இவர்களுள் பஞ்சவன் பிரமாதிராசன், இருமுடிச் சோழ பிரமாதிராசன் என்ற இருவரும் உயர்ந்த அரசியல் அதிகாரிகளாகப் பணிபுரிந்தோர் என்பதை அவர்களுடைய பட்டப் பெயர்களே பறை சாற்றுகின்றன. இவ்விருவருள், பஞ்சவன் பிரமாதிராசன் என்பவன் பாண்டிய நாட்டில் அரசியல் அதிகாரியாக இருந்தவனாவான்.

ஆதித்த கரிகாலன் பாண்டியரோடு கடும் போர் புரிந்து, வீரபாண்டியனைக் கொன்று வாகை சூடியதை நாம் முன்னரே கண்டோம். இதனால், 'வீரபாண்டியன் முடித்தலைக் கொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்று அவன் பாராட்டப் பெற்றான். பழிக்குப் பழிவாங்கத் துடித்த பாண்டிய அரச மரபினர், போர்க் களத்தில் எதிர்த்து நின்று, ஆதித்தனை ஒழிக்க இயலாது என்பதை நன்கு உணர்ந்து இருக்கலாம். எனவே, வஞ்சனையால் அவனைக் கொலை செய்வதற்கு அவர்கள் திட்டமிட்டு இருக்கலாம். அத் திட்டத்திற்குச் சோழ மண்டலத்தைச் சேர்ந்தவனும், தங்கள் நாட்டின் அரசியல் அதிகாரியுமான ரவிதாசனான பஞ்சவன் பிரமாதி ராசனைப் பாண்டியர் குடியினர் ஒரு கருவியாகப் பயன்படுத்தி இருக்கலாம்.

அந்த ரவிதாசன், சிதம்பரத்திற்கு அருகிலுள்ள வீரநாராயணச் சதுர்வேதிமங்கலத்தில் (வீராணம்) வாழ்ந்தத் தன்னுடைய சகோதரர்

களோடு சேர்ந்து, சூழ்ச்சி செய்து, ஆதித்தனைக் கொன்று இருக்கலாம் எனத் துணிவதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்திற்கும் ஆதித்த கரிகாலனுக்கும் யாதோ ஒரு வகையில் நெருக்கமான தொடர்பு இருந்திருப்பதைக் காணுகின்றோம். பரகேசரிவர்மன் ஆதித்த கரிகாலனுடைய கல்வெட்டுகள் உடையார்குடி வட்டாரத்திலேயே மிகுதியாகக் கிடைத்துள்ளன,[12] அப்பகுதியில், இன்றைய காட்டுமன்னர்குடியை ஒட்டியுள்ளதே பண்டைய வீரநாராயணச் சதுர்வேதி மங்கலம் என்பது இங்குச் சிந்திக்கத்தக்கது. சிங்கத்தை அதனுடைய குகையில் சந்திக்க இயலாதவர்கள், யாதோ ஒருவகையில், உடையார் குடியில் சிங்கத்தை மயங்க வைத்துள்ளனர்.

இந்த அறிஞரின் கருத்துகள் அடிப்படை இல்லாத மணல் கோட்டை; பிராமண சமூகத்தினரின்மீது பழிசுமத்தப்பட்டதாகக் கருதி, ஆரிச்சல் கொண்டு எழுப்பப்பட்டுள்ள கற்பனைக் கோட்டை இதை அவருடைய வழிநின்றே, ஆராய்ந்து துணியலாம்.

உத்தம சோழனுக்குப் பிறப்பால் (மூத்த மகன் வழியில் வந்தால்) சோழப் பேரரசின் மணிமுடி உரியதுதான். இதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ இயலாது!

ஆனால், கண்டராதித்த சோழர் மேற்கு எழுந்தருளியபொழுது மதுராந்தகன் குழந்தையாக இருந்தான் என்பதைக் கல்வெட்டுக் குறிப்புகளால் அறிகிறோம்.[8] எனவே, கண்டராதித்தருக்குப் பிறகு, மதுராந்தகன் அரசனாக முடிசூட்டப்படாமைக்குரிய காரணம் பொருத்தமாகத் தோன்றுகிறது.

'அரச மரபில் உண்டான மாற்றத்தை அப்படியே அருண்மொழி போற்றாதது ஏன்? தான் அரசனாகாமல், உத்தம சோழனை (மதுராந்தகனை) அரசனாக்கியது ஏன்?' எனும் எண்ணம் எழலாம் தன்னை விட வயதில் மூத்த சிறிய தந்தை உயிருடன் இருந்தமையாலும், தந்தை இறந்த காலத்தில் சிறு குழந்தையாக இருந்தமையால், அரசனாகப் பதவியேற்கும் வாய்ப்பை அவன் இழந்துவிட்டவனாக இருந்தமையாலும் அருண்மொழிக்கு உத்தம சோழனிடத்தில் (மதுராந்தகனிடத்தில்) பரிவும், ஈடுபாடும் உண்டாகி இருக்கக் கூடும். மற்றும் அவனுடைய பெரிய பாட்டியான செம்பியன் மாதேவியிடத்து (உத்தமன் தாயாரிடத்து)ப் பெருமதிப்பும் பேரீடுபாடும் அருண்மொழி கொண்டிருந்தான். இதை "ஸ்ரீஉத்தமசோழ

தேவரைத் திருவயிறுவாய்த்த ஸ்ரீசெம்பியன் மாதேவிப் பிராட்டியார்'' எனவும், ''ஸ்ரீ செம்பியன் மாதேவியார்''[9] எனவும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பின்னணியில் அருண்மொழியின் செயல்களை நோக்கினால், 'தன்னுடைய சிற்றப்பனின் ஆவலை' நிறைவேற்றவே தன்னுரிமையை அருண்மொழி விட்டுக் கொடுத்தான் என்பது புலனாகும்.

ஆதித்த கரிகாலன் கொலை செய்யப்பட்டதனால், நாட்டு மக்களில் பலருக்கு மதுராந்தகன்மீது ஐயுறவு உண்டாகி இருக்கக் கூடும். இந்த ஐயப்பாட்டைப் போக்குவற்கே, தான் அரசனாகாமல், மதுராந்தகனை அரசு கட்டிலேற்றி, அவனுக்குற்ற துணைவனாக செல்லும் வகையெல்லாம் ஓயாது பணிபுரிந்தான் அருண்மொழி.

இச்செய்தியைத்தான், திருவாலங்காட்டுச் செப்பேடு, ''உத்தம சோழன் அரசுக்கு உரியவன் ஆக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும், அவன் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு, உத்தம சோழனுடைய வழித்தோன்றல்களுக்கு அரசுரிமைக் கிடையாது என்றும், திரும்பவும் அருண்மொழிக்கே அவ்வுரிமை கிடைக்கவேண்டும் என ஓர் உடன்பாடு செய்யப்பட்டது என்றும், இதனால், உத்தம சோழனுக்கு முடிசூட்டப்பட்டபொழுது, அருண்மொழியே இளவரசனாக முடிசூட்டப்பட்டான்'' என்றும் விரிவாகத் தெரிவிக்கிறது.[10]

இந்த உடன்பாடு எதைக் காட்டுகிறது? அருண்மொழியின் தன்னலமற்றப் போக்கையும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையையும், தனி மனிதனுடைய நலத்தைவிட, நாட்டு மக்களின் நலனையே முக்கிய நோக்கமாகக் கொண்டு ஒழுகும் இயல்பையும், அரசியல் மூதறிவையும் உணர்த்துகிறது. நேர்மையான சிந்தனை உடையவரும் மனத்தில் காழ்ப்பு அற்றவர்களும் இத்தகைய முடிவிற்குத் தான் வர இயலும்.

''தனக்குப் பின்னர், தன்னுடைய வழித்தோன்றல்களுக்கு அரசுரிமையை அளிக்க' உத்தம சோழன் முன்வராதது ஏன்? ஆதித்த கரிகாலனை வஞ்சனையால் கொன்ற, மதுராந்தகனுக்கு அருண்மொழியைத் தீர்த்துக் கட்டுவது இயலாத செயலா?'' என்னும் கேள்விக்குரிய விளக்கம் மேலே தரப்பட்டுள்ள விளக்கத்திலேயே இடம் பெற்று இருக்கிறது. முறைப்படி அரசு கட்டில் ஏறவேண்டிய நேரத்தில் சிறு குழந்தையாக இருந்தான் மதுராந்தகன்; இதனால், அரசனாகும் அரிய வாய்ப்பை இழந்தான். வாய்ப்பு இழந்த அவனுக்கு அருண்மொழி மீண்டும் ஒருமுறை வாய்ப்பு அளித்துச் சிறப்பித்தான்.

ஆனால் நாட்டு மக்கள் அருண்மொழியே அரசனாக வேண்டும் என்று ஆரவாரம் செய்தனர். எனவே, மக்கள் கருத்தை மதிக்கும் வகையிலும் மரபினைப் போற்றும் வகையிலும் உத்தம சோழன் நன்றியுணர்வோடு இராசராசனுக்கு இளவரசு பட்டம் சூட்டினான் எனக் கருதுவதுதான் அறிவுடைமையாகும்.

மற்றும், மதுராந்தகன் கண்டராதித்தன் என்பவன், உத்தம சோழனுடைய மகன் ஆவான். சோழ சிம்மாசனத்தினை அருண்மொழி அணி செய்யத் தொடங்கியபொழுது வயதில் இளையவனாகவே மதுராந்தகன் கண்டராதித்தன் இருந்திருக்க வேண்டும்,[11]

இராசராசனுக்கு மாசு கற்பிக்கத் துடிக்கும் கட்டுரையாளர், காட்டும் காரணங்கள் எல்லாம், அவருடைய உள்ளத்தில் ஆழப் பதிந்து கிடக்கும், இனம் அறிய இயலாத காழ்ப்புணர்ச்சியில் தோன்றிய கற்பனையேயாகும். திருவாலங்காட்டுச் செப்பேட்டின் வாசகத்தைச் சிறிது திருத்திக்கொண்டால், இராசராசன் 'கொலைகாரன்' என்பதை உறுதிப்படுத்தலாம் என்பது அந்த ஆசிரியரின் பேரார்வமாகும்.

பேரரசன் இராசராசனின் இரண்டாம் ஆண்டில், உடையார் குடியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று, ஆதித்த கரிகாலனின் கொலைக்குக் காரணமானவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையைத் தெரிவிக்கிறது.

> ''ஸ்வஸ்திஸ்ரீ கோராஜகேசரிவர்மர்க்கு யாண்டு 2-ஆவது வடகரை பிரமதேயம் ஸ்ரீவீர நாராயண சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்களுக்கு சக்கரவர்த்தி ஸ்ரீமுகம் பாண்டியனைத் தலைக்கொண்ட கரிகால சோழனைக் கொன்ற த்ரோகிகளான சோமன் . . . தம்பி
>
> ரவிதாஸனான பஞ்சவன் பிரஹ்மாதிராஜனும் இவன் தம்பி ஆன இருமுடிச் சோழ பிரஹ்மாதிராஜனும் இவர்கள் உடப்பிறந்த மலையனூரானும் இவர்கள் தம்பிமாறும் இவர்கள் மக்களும் இவர் பிராஹ்மணிமார் பேராலும் இ . . . ரமத்தும் . . . .''[13]

என்பது அக்கல்வெட்டு வாசகத்தின் தொடக்கமாகும்.

கொள்ளிடத்தின் வடகரையில் உள்ள வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி(மகாசபை)யின் உறுப்பினர்களுக்குச்

சக்கரவர்த்தியின் திருமுகம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் கரிகாலனைக் கொன்ற துரோகிகளின் பெயர்களும் அவர்கள் குடும்பத்தின் பிற உறுப்பினர்களும் சுட்டப்பட்டுள்ளனர்.

அந்தச் சபையைச் (ஊராட்சி மன்றத்தை) சேர்ந்த உறுப்பினர்களும், கோட்டையூர் பிரமசிரீராஜனும், புல்லமங்கலத்தைச் சேர்ந்த சந்திரசேகர பட்டரும் ஒன்றாகக் கலந்து ஆலோசித்து, அந்தக் கொலைகாரர்களின் நிலபுலன்களைப் பறிமுதல் செய்து, அவற்றை ஏலத்தில் விற்று, விற்றுவந்தத் தொகையைச் சக்கரவர்த்தியின் பண்டாரத்தில் (கருவூலத்தில்) சேர்த்துவிடவேண்டும் என்பது அரசனுடைய திருமுகத்தில் இடம்பெற்ற கட்டளையாகும்.

பேரரசன் ஆணைக்கு இணங்க, கொலைகாரர்களின் நிலங்கள் ஏலத்தில் விடப்பட்டதை அந்தக் கல்வெட்டால் அறிகிறோம். 'இராசராசனே கொலைகாரன்' எனும் எண்ணமுடைய (முன்பு குறிப்பிடப்பட்ட) கட்டுரை ஆசிரியர், "இளவரசனை - வருங்கால சக்கரவர்த்தியைக் கொலை செய்தவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படவில்லையே! இது எதைக்காட்டுகிறது"[14] என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறார்.

இராசராசன் விதித்த தண்டனை அக்கொலையாளிகளின் சொத்தைப் பறிமுதல் செய்தமையேயாகும். இந்த இலேசான தண்டனை அளித்தமையால், இராசராசன் அவர்களோடு கூட்டுச் சேர்ந்துகொண்டு, ஆதித்தனைக் கொலை செய்து இருப்பான் என்பது அந்த ஆசிரியரின் துணிவாகும்.

கடுமையான தண்டனை கொடுக்கப்படாமைக்குரிய காரணங்கள் பலவாகலாம். அவற்றுள் இரண்டினை இங்குச் சுட்டலாம்.

ஒருவன் மட்டும் தனியே, கொலைபுரிவதில் ஈடுபட்டு இருந்தால், எளிதில் தூக்குமேடைக்கு அவனை அனுப்பிவிடலாம். இந்த வழக்கில் ஒரு கொலைக்கு—நாட்டின் இளவரசனைக் கொன்றதற்கு நால்வர் காரணமாக உள்ளனர். மற்றும் இந்த நால்வரும் கொலை முயற்சியில் ஈடுபட்டதைக் கண்ணால் கண்டவர்கள் இருந்திருந்து, சாட்சியம் கூறி இருந்தால், அந்த நால்வருக்கும் கொலைத் தண்டனையை இராச்ராசன் உறுதியாகக் கொடுத்திருப்பான். ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலைகள் இந்த நால்வருமே ஆதித்த கரிகாலனைக் கொன்றவர்கள் எனும் உண்மையைப் புலப்படுத்தியுள்ளன.

மற்றும் இடைக் காலத் தமிழர் சமுதாயத்தில் பிராமணர்கள், பூதேவர்களாகப் போற்றப்பட்டார்கள். சோழ மன்னர்கள், 'மனு நெறி பிழையாது மன்னுயிர் காப்பதாகத் தெரிவித்துள்ளனர். எனவே, அந்த முறையில் ஆட்சிபுரிந்த இராசராசன், பிராமணர்களுக்குக் கொலைத் தண்டனை கொடுக்க முன்வருவானா? அல்லது தப்பித்தவறி அத்தண்டனையை அவன் கொடுத்து இருந்தால், அன்றைய சமுதாயம் இன்றைக்கு அவனுக்குள்ள பேரும் புகழோடு விளங்கவிட்டிருக்குமா?

'பிராமணன் கொலை செய்தாலும் அந்தப் பிராமணனை அரசன் கொலை செய்யக்கூடாது' எனும் மனுதரும சாத்திரத்தின் அறிவுரைப்படி,[15] இராசராசன் தண்டனை வழங்கினான் எனக்கருத இடமுண்டு.

இந்தப் பின்னணியில், ஆதித்த கரிகாலனின் கொலை வழக்கை மறு ஆய்வு செய்வோமானால், பாண்டியரின் கைக்கூலிகளான சோழ நாட்டுப் பிராமணச் சகோதரர்களே இந்த மாபெரும் சதிச் செயலைத் துணிந்து செய்துள்ளனர் என்பது புலனாகும்.

அடிக்குறிப்புகள்

1 N. Sethuraman, Early Cholas, p.64
2 Epi. Indi. Vol. 22, No. 34, Verse. 28
3 A. R. E. 577 of 1920, Epi. Ind. Vol. 21, p.165
4 A. R. E. 577 of 1920, K. A. N. Sastri, The Colas, pp.157-158
5 K. A. N. Sastri, The Colas, pp.157-158
6 R. V. Srinivasan, 'A Note on the Accession of Rajaraja Chola in VIVEKA, The Vivegananda College Magazine, Madras, 1971, p.13
7 R. V. Srinivasan, Op. cit, p.16
8 K. V. Subramania Aiyar, Historical Sketches of Ancient Dekhan, Vol. I, p.243
9 S. I. I. Vol. 13, Nos. 14, 72, 144, 170, 332
10 S. I. I. Vol. 3, No. 205, V 69
11 K. A. N. Sastri, op. cit. p. 166 F. N. 74 K. V. Subramanya Aiyar, op. cit. pp. 243-245
12 R. V. Srinivasan, op. cit, p.16
12 A. R. E. 588 of 1920, 610 of 1920; 619 of 1920
13 A. R. E. 577 of 1920; Epi. Ind. Vol. 21 p.165
14 'Viveka', pp. 15-16
15 Buhler, G. (Tr.) The Laws of Manu, Oxford, 1886, p.449

இங்கண் நாடு

அ. இராசேந்திரன், எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28.

தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர்-கும்பகோணம் நெடுஞ்சாலையில் எண்கண் என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூரை மையமாகக் கொண்டு எழுந்த நாடே இங்கண் நாடு. இந்நாடு, இன்றைய குடவாசல் ஒன்றியத்தின் தென்பகுதி, கொரடாச்சேரி ஒன்றியம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. சுமார் 25 கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்திருந்த இந்நாட்டுக்குக் கிழக்கே திருவாரூர் நாடும், வடக்கே வேளார் நாடு மற்றும் சேற்றூர் நாடும், தெற்கே மங்கல நாடும் எல்லைகளாக அமைந்திருந்தன.

முதற் சான்று

சோழமண்டலம் ஏறக்குறைய 140 நாடுகளைக் கொண்டிருந்தன.[1] இவற்றுள் இராசராசன் காலந் தொட்டு புகழ்பெற்ற ஒரு நாடாக விளங்கியது இங்கண் நாடு ஆகும். இந்நாட்டைப் பற்றிய குறிப்பை முதல் பராந்தகனின் 11-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்றால் அறிகிறோம்.[2] ஆதித்த கரிகாலன் கல்வெட்டிலும் இங்கண் குறிக்கப்படுகிறது. இந்நாடு, இங்கநாடு[3] இங்கள் நாடு[4] இங்கண் நாடு[5] இங்கனாடு[6] எனக் கல்வெட்டுக்கள் பல பெயர்களில் விதந்துக் கூறுகின்றன.

வளநாட்டுப் பிரிவு

இந்நாடு கடுவாய் ஆற்றை மையமாகக்கொண்டு பிரிக்கப்பட்டிருந்தது. கடுவாய் ஆறு என்பது தற்போது 'குடமுருட்டி ஆறு' என வழங்கப்படுகிறது. கடுவாய் ஆற்றுக்கு வடபால் உள்ள சத்திரிய சிகாமணி வளநாட்டில் சில ஊர்களும்[7] தென்பால் உள்ள அருள்மொழிதேவ வளநாட்டில் சில ஊர்களும் இங்கண் நாட்டில் இடம் பெற்றிருந்தன.

இங்கள் நாடு-இங்களூர் நாடு

திருவல்லம் கல்வெட்டில் இங்களூர் நாட்டு மகாராஜப்பாடி என்ற ஓர் ஊர் குறிக்கப்படுகிறது.[8] இந்நாடு கோலார் மாவட்டத்தில்

உள்ளதென்பதை மற்றொரு கல்வெட்டால் அறிகிறோம். இங்களூர் காலாட்சிக்கு அருகில் உள்ளது. தற்போது இங்கனூர் என்று வழங்கப்படுகிறது.[9] எனவே இங்கள் நாடும் இங்களூர் நாடும் வெவ்வேறானவை என்பது தெளிவு.

இங்கண் நாட்டின் தலைநகர்

இங்கண் நாடு எண்கண் என்று தற்போது வழங்கப்படும் இங்கண்ணைத் தலைமையிடமாகக் கொண்டு தோன்றியதென்பதை முன்னர் கூறினோம். இவ்வூர் முதல் பராந்தகன் காலத்தில் இங்கள் என்றும், முதல் இராசராசன் காலத்தில் இங்கண் என்றும், மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் பவித்திரமாணிக்கச் சருப்பேதி மங்கலம் என்றும், இராசாதிராசன் காலத்தில் இராசாதிராச சதுர் வேதி மங்கலம் என்றும் மாறுபட்டு வழங்கப்பட்டன. இங்கண் ஆதித்த கரிகாலன் காலத்தில் இங்கண்-சிற்றிங்கண் என இரண்டாக பிரிக்கப்பட்டிருந்தன.

கோயில்கள்

இவ்வூரில் சிவனுக்கு இரு கற்றளிகள் உள்ளன. இவற்றுள் பழமையானதும், வழிபாடில் இல்லாததுமான பிரம்மபுரீஸ்வரர் திருக் கோயில் இவ்வூரின் தென்பால் பாழடைந்த நிலையில் உள்ளது. இக்கோயிலில் இருந்து முதன்முதல் 25 சோழர் காலத்துக் கல்வெட் டுக்கள் படியெடுக்கப்பட்டன.[10] இவ்வூரின் நடுவே மற்றொரு சிவன் கோயில் காணப்படுகிறது இக்கோயிலின் மகாமண்டபத் தென்புறச் சுவரில் மூன்றாம் இராசாதிராசனின் 20-ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டுக் காணப்படுகிறது.[11] இச்சிவன் கோயில் தேவாரப் பாடல் பெற்ற தலம் என்பர்.[12] இதற்குச் சான்று இல்லை. எனினும் இவ்வூர் முருகன்மீது அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் நமக்கு கிடைத்துள்ளது.

இங்கண் நாட்டுச் சபைகள்

இங்கண் நாட்டில் பல கிராமச் சபைகள் செயல்பட்டு வந்தன. இங்கண் நாட்டுச் சபை[13] விமலசித்த மங்கலசபை[14] விருதராஜ பயங்கரபுரச் சதுர்வேதி மங்கலத்துச் சபை[15] முதலியவை குறிப்பிடத் தக்கன.

இங்கண் நாட்டு ஊர்கள்

பேராசிரியர் ஒய். சுப்பராயலு அவர்கள் இங்கண் நாட்டில் உள்ள 19 ஊர்களைத் திரட்டித் தந்திருக்கிறார்.[16] இவற்றுள்

1. செழிய மங்கலம் 2. இளையான்குடி 3. கஞ்சாநகர் 4. கீழ் வடுக்குடி 5. நட்டுவாக்குடி 6. பவித்திரமாணிக்கச் சதுர்வேதி மங்கலம் 7 ராஜகேசரி நல்லூர் 8. உச்சிக் கண்ணங்குடி 9. விமலசித்த மங்கலம் 10. விருதராஜபயங்கரபுரத்துச் சதுர்வேதி மங்கலம் ஆகிய பத்து ஊர்களும் எங்கே உள்ளன என்று பேராசிரியர் குறிப்பிடவில்லை.

செழியமங்கலம்

இங்கண் நாட்டில் உள்ள இவ்வூர்[17]. இங்கண்ணுக்கு அருகில் சோழமங்கலம் என்ற பெயரில் வழங்கப்பட்ட ஊராகும். இதைத் தற்போது ஆதிசோழ மங்கலம் என்றும் வழங்குவர். உத்தமசோழன் காலக் கல்வெட்டு இவ்வூரை 'சோழ மங்கலம்' என உரைக்கிறது.

கஞ்சா நகர்-ஊசிக் கண்ணங்குடி-உச்சிப்பாடி

இம்மூன்று ஊர்களையும் இங்கண் நாட்டில் இருப்பதாக திரு ஒய். சுப்பராயலு அவர்கள் குறிப்பிடுகிறார். இம்மூன்று ஊர்களும் எந்த நாட்டில் உள்ளவை என்று அறிந்துகொள்ள முடியாதபடி கல்வெட்டின் முற்பகுதியில் உள்ள நாட்டுப்பிரிவு சிதைந்துள்ளது[18]. இம்மூன்று ஊர்களும் கஞ்சாநகரம், கண்ணங்குடி, உச்சிப்பாடி என்ற பெயர்களில் செம்பனார் கோயில் ஒன்றியத்தில் உள்ளன. திரு இந்தளூருக்கு அருகே உள்ள கஞ்சாநகர் திருஇந்தளூர் நாட்டில் உள்ளதென்பதை நீடூர், அகரம் மற்றும் திருஇந்தளூர்க் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. எனவே இம்மூன்று ஊர்களையும் இங்கண் நாட்டுப் பிரிவில் இருந்து நீக்கிவிடலாம்.

கீழ்வடுகக்குடி

இவ்வூர் குடவாசல் ஒன்றியத்தில் வடுகக்குடி என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

நட்டுவாய்க்குடி

இவ்வூரை செங்கை மாவட்ட திருவோத்தூர் விக்ரமசோழன் கல்வெட்டு பாண்டி குலாசனி வளநாட்டு இங்கநாட்டு நட்டுவாய்குடி[19] எனக் கூறுகிறது. இதே அரசனின் மற்றொரு கல்வெட்டு இங்கண் நாடு குலோத்துங்க சோழ வளநாட்டில் உள்ளதெனக் கூறுகிறது.[20] பாண்டி குலாசனி வளநாடு தஞ்சையை மையமாகக் கொண்டு எழுந்த வளநாடு. நித்த விநோத வளநாட்டை அடுத்து அமைந்திருப்பது குலோத்துங்க சோழ வளநாடாகும். எனவே திருவோத்தூர் கல்வெட்டில் கூறும் இங்கநாடு தவறாகக் குறிக்கப்பட்டது

எனத் தெரிகிறது. எனவே இவ்வூரையும் இங்கண் நாட்டுப் பட்டியலில் இருந்து நீக்கிவிடலாம்.

பவித்திரமாணிக்கச் சதுர்வேதிமங்கலம்

இவ்வூரை எண்கண் கல்வெட்டு[21] இங்கணான பவித்திரமாணிக்க சருபேதி மங்கலம் எனக் கூறுகிறது. குலோத்துங்கனின் மற்றொரு கல்வெட்டு இங்கனாட்டு பிரமதேயமான பவித்திரமாணிக்சச் சருப்பேதி மங்கலம் எனக் கூறுகிறது. எனவே இங்கண் என்ற ஊரே இவ்வூர் என்பது தெளிவாகிறது.

விருதராஜபயங்கரபுரம்

இவ்வூரைத் திருவிடைவாசல் கல்வெட்டு (23/1918) விடையபுரமான விருதராஜபயங்கரபுரம் என்று கூறுகிறது. விடையபுரம் என்பது திருவிடைவாசல் என்பது தெளிவு.

ராசகேசரிநல்லூர்

தஞ்சாவூர்க் கல்வெட்டில்[22] இங்கண்நாட்டு ஊர்களான, 1. ராசகேசரி நல்லூரும் 2. ராசகேசரி நல்லூரான தண்ணீர் குன்றமும் குறிக்கப்படுகிறது. இவை முறையே தற்போது ராதா நல்லூர், தண்ணீர் குன்னம் என்ற பெயர்களில் வழங்கப்படுகிறன. மேலும் இங்கண் நாட்டுக் கல்வெட்டுக்களின் மூலம் அறியலாகும். சில ஊர்களை இங்கேக் காணலாம்.

மேலும் சில இங்கண் நாட்டு ஊர்கள்

1. ஆரப்பாழ்—ஆரப்பாழ் (குடவாசல் ஒன்றியம்)
   தெ. க. தொ. 2, எண். 4
2. கீரந்தேவன்குடி—கீரந்தங்குடி (குடவாசல் ஒன்றியம்)
   தெ. க. தொ. 2, எண். 4
3. பாழையூர்—கீழப்பாழையூர் (குடவாசல் ஒன்றியம்)
   தெ. க. தொ. 2, எண். 4
4. பன்றூர்—பெரும்பண்ணையூர் (கொரடாச்சேரி ஒன்றியம்)
   தெ. க. தொ. 7, எண். 158
5. தீயங்குடி—தீபங்குடி (கொரடாச்சேரி ஒன்றியம்)
   286/1917
6. ஊர்குடி—ஊர்குடி (கொரடாச்சேரி ஒன்றியம்)
   தெ. க. தொ. 2, எண். 4

7. இங்கண்—இங்கண் (கொரடாச்சேரி ஒன்றியம்) தெ. க. தொ. 2, எண். 70

8. ஓகையூர்—கீழஓகை (குடவாசல் ஒன்றியம்) நன். க. 210/1978

9. நெற்குப்பை—நெற்குப்பை (கொரடாச்சேரி ஒன்றியம்)

10. கொற்றங்குடி—கீழகொத்தங்குடி (கொரடாச்சேரி ஒன்றியம்) நன். க. 110/1977

மேலும் இங்கண் நாட்டு எல்லைக்குள் இருக்கும் சில ஊர்களைப் பற்றியும் சோழர் காலக் கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகிறது. அவை: 1. காற்றூர் (காட்டூர்) 2. சிறுகுடி (திருச்சிறுகுடி) 3. முகந்தனூர் (முகுந்தனூர்) 4. அண்ணவாசல் (அண்ணவாயில்) 5. வடகண்டம் (வடகண்டம்) 6, செல்லூர் (செல்லூர்) 7. விளக்கொளி மங்கலம் (விளக்கொளி மங்கலம்) முதலியன குறிப்பிடத் தக்கவை. இங்கண் நாட்டில் இருந்து இதுவரை 35 ஊர்களை அறிந்துகொள்ள முடிகிறது. இவற்றைக்கொண்டு ஒரு வரைபடம் தயாரித்தால் சோழர்கால இங்கண் நாட்டை ஓரளவு புரிந்து கொள்ளமுடியும்.

இங்கண் நாட்டு அதிகாரிகள்

சோழர் ஆட்சிகாலத்தில் இங்கணில் பிறந்து பிற ஊர்களுக்குச் சென்று பலர் அரசியல் அதிகாரிகளாகப் பணியாற்றியுள்ளனர். 1 உபயகுலாமலன், 2 மாவலி வாணாதிராயன், 3 மதுராந்தக மூவேந்தவேளான், 4 பராந்தக மூவேந்த வேளான், 5 இங்கண் நாட்டுப் பல்லவராயன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

உபயகுலாமலன்

இவன் மனுநீதி சோழனின் அமைச்சனாக விளங்கியவன். இவன் ஊர் இங்கணாட்டு பாலையூர் என திருவாரூர்க் கல்வெட்டுக் கூறு கிறது.

குலோத்துங்கசோழ மாவலி வாணாதிராசன்

இவன், உபய குலாமலன் வழி வந்தவன். விக்ரமசோழன் காலத்தவன். இவனைத் திருவாரூர் கல்வெட்டு ஆதி விடங்கன் என்று கூறுகிறது. விக்ரமசோழன் இவனுக்குத் திருவாரூரில் மாளிகையும், சில பரிசுகளும் அளித்து போற்றினான்.

பராந்தக மூவேந்த வேளான்

இங்கண் நாட்டு, சிற்றிங்கணைச் சேர்ந்த இவன் குடந்தை கீழ்க் கோட்டம் இறைவனுக்கு வேதம் வோதும் 20 சிவபிராமணர்களுக்கு உணவளிக்க நிலம் வழங்கியுள்ளான் (2301/911). இவன் மேற்படி கோயிலின் அதிகாரியாக குறிக்கப்படுகிறான்.

இங்கண் நாட்டுப் பல்லவராயன்

இவன் ஆதித்தக் கரிகாலன் காலத்தவன். திருவிடை மருதூர் கல்வெட்டில் குறிக்கப்படும் இவன் சிற்றிங்கண் உடையான் கண்ணனான இங்கண் நாட்டுப் பல்லவராயன் என்று குறிக்கப் படுகிறான் (228/1908).

மதுராந்தக மூவேந்த வேளான்

இவன், இங்கண் நாட்டுப் பல்லவராயன் காலத்தில் திருவிடை மருதூர் கோயில் அதிகாரியாகக் குறிக்கப்படுகிறான்.

இங்கணாட்டு எடுத்த பாதம் உடையார்

முதலாம் இராசராசன் கல்வெட்டில் குறிக்கப்படும் இவன்[23] இராசராசனின் திருமந்திரவோலை எழுதும் அதிகாரியாகக் குறிக்கப் படுகிறான். இவன் ஊர் இங்கணாட்டு ராஜகேசரி நல்லூர். இவ் ஊரை தண்ணீர்க்குன்றம் என கல்வெட்டுக் கூறுகிறது.

இங்கண் அதிகாரிகள்

எண்கண் கல்வெட்டுக்களின் மூலம் இவ்வூரில் பணி செய்த சில அதிகாரிகளின் பெயர்களை அறிய முடிகிறது.

1 குலமாணிக்க தேவனான உத்தமசோழன்
2 பாலை வாயில் உடையான் இங்கநாட்டுக்கோன்
3 பாலை வாயில் உடையான் கூத்தின் சோலை
4 சோழமங்கல வளவரையன் திருவையாறுடையான்
5 நெற்குப்பை எருதுடை சிவ கல்லி அரையன்
6 மழையூருடையான் வீரை சோழன்
7 உலகாண்டான் பரகேசரி விழுப்பரையன்
8 ஊர்க்கணக்கு-பெரும்புலியூருடையான்
9 புரவுவரி - ஸ்ரீகரணநாயகம் கூடலூர் உடையான்
10 புரவுவரி - குற்றங் கிழான்; பழையனூருடையான்
11 புரவுவரி - எழிலூருடையான், மேலூருடையான்

12 முகவெட்டி - அண்ணவாயில் உடையான்
13 திருமந்திரவோலை - நெறியுடைய சோழ மூவேந்த வேளான்

முதலியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

அடிக்குறிப்புக்கள்

1. Y. Subbarayalu, 'Political Geography of the Chola Country, p.20
2. 'இங்கள் நாட்டு செல்லூர், கரைவீரம் உமை செப்புத் திருமேனியில் உள்ள கல்வெட்டுப் பகுதி
3. S.I.I. vol. VII, No. 96
4. A.R.E. 223 of 1911
5. A.R.E. 230 of 1911
6. A.R.E. 14 of 1890
7. S.I.I. vol. II, No. 4
8. A.R.E. 279 of 1895
9. S.I.I. vol. III, No. 2, pp. 106-107
10. கல்வெட்டாய்வாளர்கள் திருமதி. மார்க்சியகாந்தி, திரு. அ. இராசேந்திரன் முதலியோரால் முதன்முதல் கண்டுபிடிக்கப்பட்டு படியெடுக்கப்பட்டது.
11. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு இருபதாவது மேச நாயற்று பூர்வ பக்ஷத்து ஏகாதசியும் நாயற்றுக் கிழமையும் பெற்ற சித்திரை நாள் குலோத்துங்க சோழ வளநாட்டு இங்க ணாட்டு இங்கணான பவித்திர மாணிக்கச் சதுர்வேதி மங்கலத்து . . . . இளமை நாச்சி . . . அழகு நாயன் . . . " —(Unpublished)
12. Temple census report, Tanjore District
13. S.I.I. vol. II, No. 70
14. S.I.I. vol. II, No. 70
15. S.I.I. vol. XVIII, No. 24
16. Y. சுப்பராயலு, 'Political Geography of the Chola Country Chola mandalam No. 32
17. A.R.E. 49 of 1927-28
18. S.I.I. vol. II, No. 4
19. S.I.I, vol. VII, No. 96
20. நன். கல்வெட்டு 109/1977
21. நன். கல்வெட்டு 106/1977
22. S.I.I. vol. II No. 27
23. S.I.I. vol. II, No. 27.

சோழர் கால ஆதுலர் சாலைகள்

தே. கோபாலன் எம்.ஏ.,
தொல்பொருள் அலுவலர்,
திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை

முன்னுரை

சங்க காலத்திலிருந்து கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை சோழர்கள் தென்னிந்தியப் பகுதியை மட்டுமின்றி வடபகுதியிலும், கடல் கடந்தும் தங்களது வலிமையை நிலை நாட்டிய ஈடு இணையற்ற வேந்தர்கள் ஆவர். இவர்கள் காலத்தில் ஆதுலர் சாலைகள் (மருத்துவச் சாலைகள்) அமைத்தது பற்றியும், அவற்றிற்கு அவர்கள் வழங்கிய கொடை பற்றியும், அவர்கள் காலத்து மருத்துவ நிலை பற்றியும் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சோழர் காலப் பேரிலக்கியங்களான கம்ப ராமாயணம், சீவகசிந்தாமணி முதலியன அக்காலப் பிணிகள், மருந்து, மருத்துவர்களைப் பற்றிய சில குறிப்புகளைத் தருகின்றன. இருப்பினும், சோழர் கால மருத்துவத்தைப்பற்றி அறிதற்கு பெருந் துணையாக நிற்பது அக்காலக் கல்வெட்டுக்களே. திருமுக்கூடல், திருப்புகலூர், திருவாவடுதுறை, கீரகளூர், கூகூர், கடத்தூர் ஆகிய இடங்களில் காணப்படும் சோழர் காலத்திய கல்வெட்டுக்கள் அக் காலத்திய மருத்துவத்தைப் பற்றிய அரிய செய்திகளை நமக்கு வழங்குகின்றன.

வீரசோழன் ஆதுலர் சாலை

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் திருமுக்கூடல் என்னும் ஊரிலுள்ள வெங்கடேசப் பெருமாள் கோயிலில் காணப்படும் வீர இராசேந்திர சோழனின் 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இங்கு ஒரு ஆதுலர் சாலை அமைத்தது பற்றிய முழு விபரங்களையும் நமக்குத் தருகிறது. அவற்றை ஈண்டு காண்போம். 'வீரசோழன்' என்ற பெயரில் இவ்வாதுலர் சாலை வெங்கடேச பெருமாள் கோயில் நிர்வாகத்தின் கீழ் இருந்துள்ளது. இக்கோயிலின் வருமானத்திலிருந்து ஒரு வேத பாடசாலை, மாணவர்கள் தங்கும் விடுதி, மருத்துவ விடுதி ஆகிய இம்மூன்றும் நடத்தப்பட்டு வந்தன.

ஆதுலர் சாலைப் பணியாளர்களும், பணிகளும்

மருத்துவர் வீர சோழன் ஆதுலர்சாலையில் நாடி பார்த்து மருந் தெழுதிக் கொடுக்கும் மருத்துவர் ஒருவர் இருந்தார். இவரது பெயர் 'சவர்ணன் கோதண்டராமன் அசுவத்தாம பட்டன்' எனக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவர் வம்சா வழியாக இத்தொழிலைச் செய்ய உரிமை பெற்றிருந்தார். இவருக்கு ஆண்டுக்கு 90 கலம் நெல்லும், 80 காசும் ஊதியமாக வழங்கப்பட்டது. இது தவிர, நிலமும் கொடையாக வழங்கப்பட்டது. மருத்துவருக்குக் கொடையாக வழங்கும் நிலத்தினை 'மருத்துவக்காணி' எனக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

அறுவை சிக்ச்சை செய்பவர்

அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் ஒருவரும் இவ்வாதுலர் சாலையில் பணிபுரிந்துள்ளார். இவரைச் 'சல்லியக் கிரியை பண்ணுவான்' எனக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவருக்கு 30 கலம் நெல்லும், 2 காசும் ஊதியமாக வழங்கப்பட்டது.

மருத்துவப் பணி மகளிர்

மருத்துவப்பணி மகளிர் இருவர் இருந்தனர். இவர்களை 'மருந்து அடும் பெண்டுகள்' என கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு பணி மகளிர்க்கும் 30 கலம் நெல்லும், 1 காசும் ஊதியமாக வழங்கப் பட்டது.

மருந்து கொணர்பவர்

மருந்து தயாரிக்க மூலிகைச் செடிகளைப் பறித்துக்கொண்டு வருவதற்காக இருவர் பணி புரிந்தனர். இவர்கள் மூலிகைச் செடி களைக்கொண்டு வருவதோடு அடுப்பு எரிக்க விறகும் கொணர்ந் தனர். இவை தவிர மருந்து தயாரிக்கும் பணியையும் செய்தனர். இவர்களுக்கு ஆள் ஒன்றுக்கு 30 கலம் நெல்லும், 1 காசும் ஊதியமாக வழங்கப்பட்டது.

நாவிதன் (அம்பட்டன்)

அறுவைத் தொழில் செய்யும் நாவிதன் ஒருவன் இவ்வாதுலர் சாலையில் பணிபுரிந்துள்ளான். நாவிதர்கள் சவரத் தொழிலையும், மருத்துவத் தொழிலையும் குலத்தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்கள் கத்தியைக் கையாளுவதில் திறமை பெற்றவர்கள். ஆதலின் நரம்பு, உடல் உள்ளுறுப்புக்கள் இவற்றைப் பாதிக்காவண்ணம்

சிறு அறுவை சிகிச்சை செய்தனர். இவர்களும் மருத்துவர் என அழைக்கப்பட்டனர். பிள்ளைப் பேற்றுத் துறையில் நாவிதர் மனைவிமார் ஈடுபட்டனர். இவர்கள் 'மருத்துவச்சி' என அழைக்கப் பட்டனர். இந்நாவிதனுக்கு 15 கலம் நெல் மட்டும் ஊதியமாக வழங்கப்பட்டது.

நீர் கொணர்பவன்

'வீர சோழன்' ஆதுலர் சாலைக்குத் தண்ணீர் கொண்டுவருவதற் காக ஒரு பணியாள் இருந்ததையும் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இவனைத் 'தண்ணீர் கொண்டுவந்து வைத்துச் சாய்ப்பான்' எனக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவனுக்கு 15 கலம் நெல் மட்டும் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

மருந்து வகைகள்

'வீர சோழன்' ஆதுலர் சாலையில் ஓராண்டிற்குத் தேவையான பல வகை மருந்துகள் இருப்பில் இருந்ததாக அவற்றின் அளவுடன் கல்வெட்டு குறிப்பிடுகிறது. அவையாவன:

	மருந்து	அளவு
1.	பிராமண்யம் - கடும்பூரி	1
2.	வாசா - கரிதகி	2 படி
3.	கோ-மூத்ரா-ஹதஹி	—
4.	தஸ-மூலா-ஹதஹி	1 படி
5.	பலாடக-ஹதஹி	1 படி
6.	கந்தீரம்	1 படி
7.	பலாகேரண்ட தைலம்	1 தூணி
8.	பஞ்சாக தைலம்	1 தூணி
9.	லசுணாதி ஏரண்ட தைலம்	1 தூணி
10.	உத்தம சரணாதி தைலம்	1 தூணி
11.	பில்வாதி கிரீதம்	பதக்கு
12.	மண்டூகர வதகம்	2,000
13.	திராவட்டி	நாழி
14.	விமலை	2,000
15.	சுனேத்திரி	2,000
16,	தமராதி	2,000
17.	வஜ்ர கல்பம்	தூணி-பதக்கு
18.	கல்யாண லவணம்	தூணி-பதக்கு

இவ்வாதுலர் சாலையில் 15 படுக்கைகள் இருந்துள்ளன. நோயாளிகளை 'வியாதிப் பட்டுக் கிடப்பார்' எனக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. ஒரு நோயாளிக்கு ஒரு நாளைக்கு 1 நாழி அரிசி வழங்கப்பட்டது. இவ் ஆதுல சாலையில் இரவு முழுவதும் விளக்கு எரிக்க 2¼ காசும், விளக்கு ஒன்றுக்கு ஆழாக்கு எண்ணெயும் வழங்கப் பட்டது. இது தவிர ஆதுலர் சாலையில் உள்ள மருந்துகளைப் பத்திரப்படுத்தி வைக்க 40 காசுகள் வழங்கப்பட்டன.

சுந்தர சோழ விண்ணகர் ஆதுலர் சாலை

குந்தவைப் பிராட்டியார் தஞ்சையில் தன் தந்தையின் பெயரால் 'சுந்தர சோழ விண்ணகர் ஆதுலர் சாலை' என்ற மருத்துவ விடுதி ஒன்றை நிறுவி அதனை நடத்தி வருவதற்கு மருத்துவக் காணியாக நிலமும் அளித்துள்ளார் என்பதைக் கல்வெட்டு மூலம் அறிகிறோம். இவ்வைத்திய சாலைக்கு அளித்த நிலத்தை வைத்தியர் சவர்ணன் அரையன் மதுராந்தகனும் அவனுடைய வாரிசுகளும் அனுபவிக்க லாம் என மற்றொரு கல்வெட்டு அறிவிக்கின்றது.

திருப்புகலூரில் ஆதுலர் சாலை

விக்கிரம சோழனின் 2-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு திருப் புகலூரில் 'தேவருடையான் மதுக்கினியான் ஆன விராட ராசன்' என்பான் முடிகொண்ட சோழப் பேராற்றின் வடகரையில் ஆதுலர்க் கும் அனாதையர்க்கும் வைத்தியம் செய்யவும், உணவு அளிக்கவும் ஒரு ஆதுலர் சாலையும், மடமும் ஏற்படுத்தினான் என்பதைக் குறிக்கிறது.

மருத்துவக் கல்லூரி

விக்கிரம சோழனின் 3-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று திருவாவதுறையில் ஒரு வைத்தியக் கல்லூரி இருப்பதைக் குறிப்பிடு கிறது. இங்கு மாணவர்களுக்குச் சரக சம்ஹிதையும் அஷ்டாங்க ஹிருதமும் கற்பிக்கப்பட்டன. மற்றும் முன்னூற்றி அறுபத்து நால்வன் அறச்சாலையில் மருத்துவ நூல் படிப்பவர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. மாணவர்களுக்கு உணவளிக்கும் மடம் ஒன்றில் மருத்துவம் படிக்கும் மாணவர்களுக்கும் உணவளிக்கப்பட்ட தாக இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில் பெருவலூரில் வேத, சாஸ்திர, வைத்தியப் பண்டிதர்களுக்கு 12 வேலி நிலம் கொடையளித்துள்ளதாக இரண்டாம் குலோத்துங்கனின் 13-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் குறிக்கிறது. இராசேந்திர சோழ சம்புவராயன் என்பான் இப்பண்டிதர்கள் தங்குவதற்கு மனைகள் வழங்கியுள்ளான்.

மூன்றாம் இராசேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்று சுப்பிரமணியசிவம் என்பார் திருத்தொண்டத் தொகையான் திரு மடத்துக்கு நிலம் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது. மடத்திற்கு வரும் யாத்ரீகர்கள் நோய்வாய்ப்படின் அந்நில வருமானத்தின் ஒரு பகுதியைக் கொண்டு இலவச வைத்திய உதவி செய்தனர் எனக் கல்வெட்டுக்கள் மூலம் அறிகிறோம்.

சோழர் கால மருத்துவர்கள்

சோழர் காலத்துக் கல்வெட்டுகள் பல மருத்துவர்களின் பெயர் களைக் குறிப்பிடுகிறது. அவர்கள் முறையே சவர்ணன் அரையன் சந்திரசேகரன், கோதண்டராம அசுவத்தாமபட்டன், மங்களாதி ராசன் சீராளன். மூன்றாம் இராசராசசோழன் காலத்தில் குன்றத் தூர் நாடு முழுவதும் மருத்துவம் செய்தவர் 'மங்களாதிராசன் சீராளன்' எனப் பெயர் பெற்றவர். இம்மருத்துவர்கள் சைவசிகாமணி சிவகீர்த்தி கடகமெடுத்த கூத்தபிரான் எனப் பல சிறப்புப் பெயர் களைப் பெற்றனர். சோழர் கால ஆதுலர் சாலைகளில் இருவகை மருத்துவர்கள் இருந்தனர். ஒருவர் கைநாடி பார்த்து பொதுப் பிணி நீக்கும் மருத்துவர் ஆவர். மற்றொருவர் உடற்கூறுகளை ஆராய்ந்து பின் கட்டி, இரணம் முதலியவற்றை அறுத்து அறுவை சிகிச்சை செய்பவர். இவரைக் கல்வெட்டுக்கள் 'சல்லியக்கிரியை பண்ணுவான் எனக் குறிப்பிடுகிறது.

பிணி நீங்க இறை வழிபாடு

தஞ்சை மாவட்டம், கூகூரில் காணப்படும் கல்வெட்டு அதிராசேந்திரன் தன் மூன்றாம் ஆட்சியாண்டில் கொடிய நோயி னால் துன்புற்றான் என்றும், அவ்வரசன் உடல்நலம் பெற அவ்வூர்க் கோயிலில் இருமுறை தேவாரத் திருப்பதிகங்கள் பாடப்பெற்றன என்றும் அறிகிறோம். கோவைமாவட்டம், கடத்தூரிலிருந்து கிடைக்கும் கொங்கு நாட்டு மன்னன் விக்கிரம சோழதேவனுடைய 21-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வரசன் அதிகாரிகளுள் ஒருவ ரான விக்கிரமசோழ திரிபுவன சிங்கதேவன் என்பான் தன்னுடைய மேக நோயைத் தீர்த்தருளியதற்காக அவ்வூர்ச் சிவன் கோவிலுக்கு நிலம் அளித்த செய்தியைக் குறிப்பிடுகின்றது.

மருத்துவக்காணி–சிறிய வழக்கு

தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கீரக்களூர் கிராமத்தில் அகத்தீஸ்வரர் கோயிலுள்ள இரண்டாம் இராசேந்திர சோழனின் 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒரு சிறிய வழக்கை

விவரிக்கின்றது. அஃதாவது, களப்பாழ் சபையார் கீரகளூர் ஸ்ரீபுருஷோத்தமதேவர் வாசல் மடத்தே கூட்டம் குறைவறக்கூடி இருந்து 'வைத்தியக்காணி' யாக நிலத்தை அனுபவித்து வந்த 'காஸ்யபன் அரையன் அரைசான ராஜகேஸரி மங்கலப் பேரையனின்' காணி நிலமும், மனையும் செல்லாது என்று சபையோர் அபகரித்துக் கொண்ட பின் அந்த வைத்தியன் சமூக வழக்கப்படி சபையோர்க்கு விண்ணப்பஞ் செய்கின்றான். பரசுராமன் என்பவன் வைத்தியனுக்குப் பயிர் செய்ய நிலம் கொடுக்கப்பட்டிருந்தது என சாட்சி கூறியபின் அபகரித்துக் கொண்ட நிலத்திற்குத் தலைமாறாக அவனுக்கு நிலம் வழங்கப்பட்டதாக இக்கல்வெட்டுக் கூறுகிறது.

மருத்துவச் செடிகள்

'செங்கழுநீர்' என்ற மருத்துவச்செடி பற்றித் தாரமங்கலம், செங்கம் இன்னபிற இடங்களில் உள்ள சோழர்காலக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இதனை நடுவதற்கு அரசாங்கத்திடம் உரிமை பெறவேண்டியிருந்தது. சேலம் மாவட்டத்துச் சோழர் காலக் கல்வெட்டுக்கள் 'வழுதிலை' (கண்டங்கத்திரி) என்ற நாட்டு மருந்துச்செடி பயிரிட்டதைக் குறிப்பிடுகின்றன.

முடிவுரை

சோழர்காலத்தில் பல இடங்களில் மருத்துவச் சாலைகளும், மருத்துவக் கல்லூரிகளும் ஏற்பட்டன. நன்கு தேர்ச்சி பெற்றோர் மருத்துவத்தொழிலைச் செய்தனர். இத்துறையில் புலமைபெற்றோர் மாணவர்களுக்கு மருத்துவ விதிமுறைகளைக் கற்பித்தனர். குறிப்பாகக் கோயில்களில் ஆதுலர் சாலைகள் நடத்தப்பெற்றன. அரசர்களாலும், அரச மாதேவியராலும் மருத்துவர்களுக்கு வரிநீக்கி நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டன. வைத்தியர்களுக்கு விடப்பட்ட நிலங்களை வழிவழியாக அனுபவித்தவர்கள் இலவச வைத்தியம் செய்தனர். இவர்கள் காலத்தில் ஆதுலர் சாலைகளில் ஆயுர்வேத மருத்துவமே சிறப்பாக நடத்தப்பெற்றன.

★

இராசராசன் ஆட்சியில் பாண்டியநாடு

புலவர் செ. போசு, எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, மதுரை

சோழர் வரலாற்றில்-முதன்முதலில் பாண்டி நாட்டைக் கைப் பற்றித் தனது நேரடி ஆட்சியின்கீழ் கொண்டு வந்த மாமன்னன் என்ற பெருமைக்குரியவன் முதலாம் இராசராசன் ஆவான். முற்காலச் சோழர் வரலாற்றில் இடம் பெறும் முதலாம் பராந்தகனும், சுந்தரச்சோழனும் பாண்டியர்களை வென்று தம்பெயரை முறையே 'மதுரை கொண்ட கோப்பரகேசரி' என்றும், 'மதுரைக் கொண்ட கோ இராசகேசரி' என்றும் அழைத்துக்கொண்டிருப்பினும் பாண்டிய நாடு இப்பெருமன்னர்களின் நேரடி ஆளுகைக்குக்கீழ் கொண்டுவரப் படவில்லை.

சுந்தர சோழனின் கல்வெட்டுக்கள் எதுவும் பாண்டிய நாட்டில் காணப்படவில்லை. ஆனால், முதலாம் பராந்தகன் கல்வெட்டுக்கள் பாண்டியநாடு முழுவதும் கன்னியாகுமரி வரை சில இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன. இதனால் முதலாம் பராந்தகனின் வெற்றி பாண்டிய நாட்டின்மீது எடுக்கப்பெற்ற ஒரு படையெடுப் பாகவே தோன்றுகிறது. பராந்தகச்சோழன், சோழ நாட்டிலிருந்து படையெடுத்து ஈழம் வரை சென்ற காலங்களிலும், பாண்டிய நாட்டுப் படையெடுப்பின்போதும் அவனது கல்வெட்டுக்கள் பாண்டியநாட்டில் பொறிக்கப் பெற்றிருக்கவேண்டுமே அன்றி வேறில்லை எனலாம்.

இவர்களுக்குப் பின்னர், முதலாம் இராசராசன் பாண்டிய நாட்டைத் தனது நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்து வரிவசூல் செய்திருக்கின்றான். இராச்ராசன் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாடு அவனுக்குக் கட்டுப்பட்டிருந்தது என்பதற்குப் பாண்டிய நாட்டில் காணப்படும் அவனது கல்வெட்டுக்களே நமக்குச் சான்றாக நிற்கின்றன. தஞ்சையில் காணப்படும் முதலாம் இராசராசனின் 25-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, பாண்டிய நாட்டில் வரி செலுத்தாது நின்ற ஊர்களின் பட்டியலைத் தருகின்றது.[1] இராச ராசனின் நிர்வாகப் பிடியின்கீழ் பாண்டியநாட்டு ஊர்கள் வந்த மையும், அவ்வூர்களின் வருவாய் உரிய அலுவலர்களால் கணக்கிடப்

பெற்று தண்டப்பெற்றமையும் இக்கல்வெட்டு நமக்குப் புலப்படுத்து கின்றது.

இராசராசனின் இப்பாண்டிய நாட்டு வெற்றி அவனது காந்த ளூர்ச்சாலை வெற்றிக்கு முன்னர் கிடைத்த வெற்றியாகும். சேரநாட் டிலுள்ள காந்தளூர்ச்சாலைக்குப் பாண்டியநாட்டைக் கடந்தே செல்லவேண்டும். எனவே இராசராசன் முதலில் பாண்டிய நாட்டை வென்று அதன்பின்னர் காந்தளூர்ச்சாலை வெற்றியை ஈட்டியிருக்க வேண்டும்.[2] ஆனால் இராசராசனின் மெய்க்கீர்த்தி பாண்டிய நாட்டு வெற்றியை முதலில் கூறாது, காந்தளூர்ச்சாலை பெருவெற் றியைப் பெருமை கருதி முதலில் எடுத்துக் கூறுகின்றது. ஆயின், மெய்க்கீர்த்தியின் இறுதிப்பகுதி, 'செழியரைத் தேசுகொள் கோ இராசகேசரிவர்மர்' என்று முடிகின்றது.

இராசராசனின் இருபதாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றும், அவன் மதுரையை அழித்து கொல்லம், கொல்லதேசம், கொடுங்கோளூர் ஆகியவற்றைக் கைப்பற்றியதாகக் கூறுகின்றது.[3] இராசராசன் சேரநாட்டின்மீது படையெடுத்துச் சென்றபோது, வழியிலிருந்த பாண்டிய நாட்டில் இருந்து அவனை எதிர்த்தவன் 'அமரபுயங்கன்' என்ற பாண்டிய மன்னனாவான் என்று திருவாலங் காட்டுச் செப்பேடு கூறுகின்றது. இவனே இராசராசன் காலத்தில் பாண்டியநாட்டை ஆட்சி செய்த மன்னனாவான்.[4] இராசராசன் பாண்டிய நாட்டின்மீது பல படையெடுப்புக்களை மேற்கொண்டு அதனைத் தம் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்திருக்க வேண்டும்.[5]

காந்தளூர்ச்சாலை வெற்றி அவனது நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுவதால் கி.பி. 988-இல் காந்தளூர்ச் சாலை போர் நடைபெற்றிருக்கவேண்டும். அதற்கு முன்பாக அவன் பாண்டியநாட்டைக் கைப்பற்றியிருக்கவேண்டும்; அமரபுயங்களைப் போரில் வென்றிருக்க வேண்டும். இருப்பினும், பாண்டிய நாட்டில் அவனது எட்டாம் ஆட்சியாண்டில் இருந்துதான் இராசராசனின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தரிசனங்கொப்பு என்ற ஊரில் காணப்படும் இராசராசனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே இவற்றில் பழமையான தாகும்.[6] இதற்குப் பின்னர் இராசராசனின் கல்வெட்டுக்கள் தொடர்ந்து பாண்டியநாட்டில் காணப்படுகின்றன. எனவே காந்த ளூர்ச்சாலை வெற்றிக்குப் பிறகு நான்கு ஆண்டுகளாகத் தன்னாட்சி யுடன் விளங்கிய பாண்டிய நாட்டை மீண்டும் எட்டாம் ஆட்சி

யாண்டில் படையெடுத்துத் தமது ஆளுகையின் கீழ் இராசராசன் கொண்டு வந்திருக்கவேண்டும் என்று கருதலாம்.

இராசராசன் பாண்டிய நாட்டை வென்றதன் நினைவாக, தன்னை 'பாண்டிய குலாசனி' என்று அழைத்துக் கொண்டான்.[7] மேலும், தனது வளநாட்டுப் பிரிவு ஒன்றுக்கு 'பாண்டிய குலாசனி வளநாடு' என்று பெயரிட்டுக்கொண்டான். பாண்டியனோடு இராசராசன் பகைமைப் பூண்டு விளங்கினாலும், பாண்டிய நாட்டிலிருந்த வேறுசில பாண்டியரோடு உறவு பூண்டு மணவுறவு செய்து கொண்டிருப்பதையும் அவனது கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. அவனுடைய பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றில்[8] 'பஞ்சவன் மாதேவியார்' என்பவரும், இருபத்தெட்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில்[9] 'மீனவன் மாதேவியார்' என்பவரும் அவனது தேவியராகக் குறிப்பிடப்படுகின்றனர். இப்பெயர்களைக்கொண்டு இவர்கள் பாண்டியர் குலப் பெண்டுகள் என்றறிய முடிகின்றது. ஆனால், இவர்கள் எந்தப் பாண்டியனுடைய மக்கள் என்றறிய முடியவில்லை.

பாண்டிய நாட்டை இராசராசன் வென்று ஏராளமான பொருட்களை, தாம் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோயில் பண்டாரத்தில் கொண்டுவந்து சேர்த்தான் என்று அங்குள்ள கல்வெட்டுக்கள் இன்றளவும் நின்று நிலவி நமக்குத் தெரிவிக்கின்றன.

பாண்டிய நாட்டில் கைப்பற்றிய செல்வங்களைக் கொண்டும், ஊர்களில் வசூலித்த வரிகளைக்கொண்டும் இராசராசன் பாண்டிய நாட்டைத் தனது நிர்வாகப் பிடிக்குள் கொண்டுவர பல ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றான். இன்னும், பாண்டிய நாட்டில் சோழர்களின் வல்லாண்மை நிற்கும் வகையிலும், பாண்டிய நாட்டு மக்கள் சோழர்தம் வல்லாண்மையை நினைத்துக் கொண்டிருக்கும் வகையிலும் பாண்டியநாட்டு ஊர்கள், நாடுகள், கோயில்கள் நீர்நிலைகள் இன்னபிற பலவற்றிற்கும் தனது பட்டப்பெயர்களை விருதுப் பெயர்களைச் சூட்டியிருக்கின்றான். பாண்டியரைப் புகழ்ந்து போற்றும் வகையில் இருந்த பழைய பெயர்களை நீக்கிச் சோழர்கள் தொடர்பான பெயர்களைப் பல ஊர்களுக்குச் சூட்டி மகிழ்ந்திருக்கின்றான். பாண்டிய நாட்டிற்கென்று தனது பெயர் பொறித்த காசுகளை வெளியிட்டுள்ளான்.

மலைநாட்டவர் படையெடுக்காத வகையிலும், பாண்டிய நாடு தனது நிர்வாகப் பிடியிலிருந்து மீளமுடியாத வகையிலும் தம்முடைய பேராற்றல் நிறைந்த படைப்பிரிவுகளைச் சேர்ந்த படைவீரர்களைப்

பாண்டிய நாட்டில் பல இடங்களில் நிறுத்தியிருக்கின்றான். இவர்கள் இராசராசன் பாண்டிய நாட்டில் ஏற்படுத்திய வளமிக்க வருவாய் தேடித்தரும் சதுர்வேதி மங்கலங்களையும், சமயச் சிறப்பு உடைய கோயில்களைக் காத்து நின்றதையும், பாண்டிய நாட்டில் பல சமயப் பணிகளையும், அறப் பணிகளையும் செய்து பாண்டிய நாட்டு மக்கள் மனதில் இடம் பிடித்து இராசராசனின் நிர்வாகத் திற்குத் துணைபுரிந்தனர் என்பதையும் பாண்டிய நாட்டில் காணக் கிடக்கும் இராசராசனின் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. மேற் குறிப்பிட்ட, இராசராசனின் இச்செயல்களே பாண்டியரை மீண்டும் தலையெடுக்காத வகையில், இரு நூற்றாண்டுகளுக்கு மேலாகச் சோழர்களின் அடியொற்றி நடக்கும் அடித்தளத்தை அவனது மகனான இராசேந்திரனுக்கும், அவனது பின்னோர்க்கும் ஏற்படுத் திக் கொடுத்தது எனலாம்.

நாட்டுப் பிரிவு

பாண்டிய நாட்டை இராசராசன் கைப்பற்றிய பிறகு பாண்டி மண்டலம் என்ற அதன துபெயரை மாற்றி கி.பி. 991-இல் இராசராச வளநாடு என்று பெயரிட்டு அழைத்துள்ளான்.[10] இப்பெயரையே கி.பி. 1012-இல் இராசராசமண்டலம் என்று மாற்றி அமைத்துள் ளான்.[11] இதனைத் தொடர்ந்து இராசராசன் மகன் இராசேந்திரன் பாண்டிய நாட்டை உத்தமசோழ வளநாடு, முடிகொண்ட சோழவள நாடு மதுராந்தக வளநாடு என்று பல வளநாடுகளாகப் பிரித்து பாண்டிய நாட்டு நிர்வாகத்தை நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பெயர் மாற்றம்

பாண்டிய நாட்டில்-இராசராசன் ஆட்சியில், பல ஊர்களுக்குச் சூட்டப்பெற்றிருந்த பாண்டியர் புகழை நினைவூட்டும் பல பெயர் களை நீக்கிவிட்டு இராசராசனின் பெயர்கள் சூட்டப்பெற்றுள்ளன. மதுரைக்கு அருகில் உள்ள சோழவந்தான் இராசராசன் காலத் திற்கு முன்பு சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் பட்டப் பெயரான 'சோழாந்தகன்' என்ற பெயர் சூட்டப்பட்டு 'சோழாந்தகச் சதுர்வேதி மங்கலம்' என்றழைக்கப்பட்டது. இராசராசனின் ஆட்சி யில் இப்பெயர் நீக்கப்பட்டு 'ஜனநாதன்' என்ற அவனது சிறப்புப் பெயரால் இவ்வூர் 'ஜனநாதச் சதுர்வேதி மங்கலம்' என்றழைக்கப் பட்டது.[12]

கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம் என்ற பெயர் ஓர் ஊருக்கு இயல்பாக வழங்கி வந்துள்ளது. இப்பெயர் இராசராசன் ஆட்சியில் நீக்கப்பட்டு 'முடிகொண்ட சோழநல்லூர்' என்று அழைக்கப்பட்டுள்

ளது.[13] இதேபோன்று, மதுரை மாவட்டம் வத்தலக்குண்டு பகுதியில் உள்ள ஓர் ஊர் 'நெற்குப்பை வளநாட்டு கேரளாந்தகபுரம்' என்று அழைக்கப்பட்டுள்ளது.

பாண்டிய நாட்டில் உள்ள பலகோயில்கள் இராசராசனின் இயற் பெயராலோ, அல்லது புனைப்பெயர்களாலோ மாற்றி அமைக்கப் பட்டதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. திருச்செந்தூர் அருகில் உள்ள ஆத்தூர் பெருமாள் கோயில் 'இராசராச விண்ணகர்' என்றும்[14], சேரன்மாதேவியில் உள்ள பெருமாள் கோயில் 'நிகரிலி சோழ விண்ணகர்' என்றும்[15] அழைக்கப்பட்டிருக்கின்றன. பாண்டிய நாட்டைச் சோழமயமாக்க இராசராசன் செய்த இச்செயல்களுக்கு இன்னும் பல எடுத்துக்காட்டுக்களை அவனது கல்வெட்டுக்களில் காணலாம்.

பாண்டிய நாட்டில் இராசராசன் படைப் பிரிவு

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் பகுதியில் அமைந்த திருவாலீசுவரம் போன்ற இடங்களில், இராசராசனின் பல வெற்றிகளுக்குக் கரணியமாக இருந்த 'மூன்றுகை மாசேனை' என்று அழைக்கப்பட்ட படைப்பிரிவைச் சேர்ந்த வீரர்கள் நிலையாகத் தங்கியிருக்கின்றார்கள். அப்பகுதிகளில் இருந்த கோயில்களைக் காத்து நின்றார்கள் என்று திருவாலீசுவரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.[16] இக்கல்வெட்டில் இராசராசனின் பெயர் குறிக்கப்படாவிட்டாலும், கல்வெட்டில் இராசராசனின் வெற்றிகள் விரித்துப் பேசப்படுவதால் இது முதலாம் இராசராசனின் காலத் தியது என்று பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் கருதுவது பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.[17]

'மூன்று கை மாசேனை' என்ற இப்படைப் பிரிவு முதலாம் குலோத்துங்கன் காலத்திலும் இப்பகுதியை ஒட்டிய சேரன்மாதேவி யில் இருந்திருக்கின்றது.[18] பாண்டிய நாட்டில் இருந்து மலை நாட்டிற் குச்செல்லும் பெருவழியில் சேரன்மாதேவி, திருவாலீசுவரம் ஆகிய பகுதிகள் உள்ளன. மலை நாட்டிலிருந்து எத்தகைய தாக்குதலும் நடைபெறாத வகையில் இராசராசன் இப்படைகளை இங்கு நிறுத்தி யிருக்க வேண்டும். இப்பகுதியில், முற்காலப் பாண்டியர் காலத்தில் பாண்டியர்க்கும் ஆய் மன்னர்களுக்கும் போர் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பாண்டிய நாட்டில் உள்நாட்டுக் குழப்பத்தைத் தவிர்க்கவும், மலைநாட்டுப் படையெடுப்பைத் தவிர்க்கக் கருதியும், அதனை அடக்கி ஆளக் கருதியும் இம்மூன்று கை மாசேனையை

முதலாம் இராசராசன் இப்பகுதியில் நிறுத்தியிருக்க வேண்டுமெனக் கருதலாம்.

இராசராசனின் படைப் பிரிவுகளில் 'பாண்டிப்படை' என்று ஒரு படைப் பிரிவே இருந்திருப்பது குறிப்பிடத்தக்கது.[19]

இராசராசனின் படையில் எழுபதுக்கும் மேற்பட்ட படைப்பிரிவுகள் இருந்திருக்கின்றன. இவற்றின் பல பிரிவுகளைச் சார்ந்த படைத் தலைவர்களும், படைவீரர்களும் பாண்டிய நாட்டுப் படையெடுப்பில் கலந்துகொண்டு அதன் ஆளுமையில் பங்கு பெற்றிருக்கின்றனர்; பல அறப் பணிகளையும் செய்திருக்கின்றனர்.

ஆத்தூர்க் கல்வெட்டொன்றில், 'அருண்மொழி தேவர் தெரிந்த பரிவாரத்தார்' என்ற இராசராசனின் படைப்பிரிவைச் சார்ந்தவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.[20] இவர்கள் இங்குள்ள கோயில் இறைவனுக்கு திருவமுது செய்ய ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

சுசீந்திரம் கல்வெட்டில், 'ஈழநாட்டு மழவரையன் சென்னி கண்டன்' என்ற படைத்தலைவன் அங்குள்ள இறைவனுக்கு நந்தா விளக்கு அளித்திருப்பது குறிப்பிடப்படுகின்றது.[21] மதுரைக்கு அருகிலுள்ள சோழவந்தான் பகுதியில் இருந்த பெருமாள் கோயில் ஒன்றுக்கு நிலமளித்த செய்தியைத் தெரிவிக்கும் கல்வெட்டு ஒன்றில், 'தேனூர் மூவேந்த வேளானாயின கிழவன் சோலை' என்பவனும், இன்னும் பல படைத் தலைவர்களும் குறிப்பிடப்படுகின்றனர்.[22]

காசுகள்

இராசராசன் தாம் வெளியிட்ட ஈழக்காசுகளில் ஒரு புறம் நிற்கும் நிலையில் உள்ள ஈழ மனிதனின் அருகில் மீன் இலச்சினையைப் பொறித்து அக்காசைப் பாண்டிய நாட்டில் புழக்கத்தில் கொண்டு வந்திருக்கின்றான்.

பிரம்மதேயங்கள்

பாண்டிய நாட்டுப் பிரம்மதேயங்களின் வரலாற்றில் இராசராசன் காலம் குறிப்பிடத்தக்க காலமாகும். இவனுடைய காலத்தில் குறிப்பாக வைகைக் கரையிலும், தாமிரபரணியின் கரையிலும் மேலும் பாண்டிய நாட்டின் பிறபகுதிகளிலும் பல பிரம்மதேயங்கள் புதுப்பிக்கப் பெற்று அவற்றிற்குப் பிடாகைகள் (Hamlets) சேர்க்கப் பட்டு விரிந்த அளவில் அந்தணர்க்குச் சதுர்வேதி மங்கலங்களாக அளிக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றுக்குச் சில எடுத்துக் காட்டுக்களாக கீழ்க்கண்ட பாண்டிய நாட்டுச் சதுர்வேதி மங்கலங்களைக் கூறலாம். சோழவந்தான் பகுதி வீரபாண்டியன் காலத்தில் சோழாந்தகச் சதுர்வேதி மங்கலமாக சிறிய பகுதியாக விளங்கியது. இது இராசராசன் காலத்தில் 'ஜனநாதச் சதுர்வேதி மங்கலம்' எனப் பெயரிடப்பட்டு விரிவாக்கப் பட்டுள்ளது. சேரன்மாதேவிச் சதுர்வேதி மங்கலம் இராசராசன் காலத்தில் நிகரிலிச் சோழச் சதுர்வேதி மங்கலம் என்று மாற்றப் பெற்று விரிவாக்கப்பட்டது.[23] இளங்கோயில்குடி என்று பிரம தேயமாக விளங்கிய அம்பாசமுத்திரம் பகுதி மன்னார் கோயில், பிரமதேயம், திருவாலீசுவரம் பகுதிகளுடன் சேர்க்கப் பெற்று இராசராசச் சதுர்வேதி மங்கலம் என்று இராசராசன் பெயரில் பல பிடாகைகளைக் கொண்ட சதுர்வேதி மங்கலமாக மாற்றப் பெற்றுள்ளது.[24] பாண்டிய நாட்டில் இப்பிரமதேயங்களின் வளர்ச்சி இராசராசனுக்கு, பாண்டியநாட்டுப் பகுதிகளில் அமைதியையும், ஆன்மீகப் பெருமையையும் ஈட்டிக் கொடுத்தது எனலாம்.

சமயப்பணியும், கலைப்பணியும்

சமயத்தின் அடிப்படையில் பாண்டிய நாட்டில் இராசராசன் எடுப்பித்த கோயில்களும், திருப்பணி செய்த கோயில்களும் பலவாகும். ஆத்தூர் சோமநாதர் கோயிலும், பள்ளி கொண்டார் கோயிலும், சேரன்மாதேவி இராமசாமி கோயிலும், அம்பைநாதசாமி கோயிலும், பிரமதேசம் சிவன் கோயிலும், கோட்டாறு சோளீசுவர முடையார் கோயிலும், தரிசனங்கோப்பு சிவன்கோயிலும் பாண்டிய நாட்டில், இராசராசன் காலத்துக் கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன.[25]

இவற்றில், திருவாலீசுவரம் கோயில் மிக உன்னதமான இடத்தைப் பெற்று விளங்குகிறது. இராசராசன் பாண்டிய நாட்டில் கோயில்களை எடுத்தபோது பாண்டிய நாட்டுக் கலைமரபைப் பின்பற்றி, தேவகோட்டங்களில் சிற்பங்களில்லாமல் எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்கோயில்கள் எல்லாம் சோழநாட்டுச் சிற்பிகளும், பாண்டிய நாட்டுச் சிற்பிகளும் இணைந்து பங்கு கொண்டு செய்ததாக சோழ, பாண்டியர் கலைப்பாணிகளின் கூட்டுக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. கட்டடக்கலையின் அழகும், அவற்றில் உள்ள சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும் பாண்டிய நாட்டு மக்கள் மனதில் அவனுக்கு உயர்ந்த இடத்தைத் தேடி தந்தன.

இராசராசனின் இத்தகைய செயல்கள் தான் பாண்டிய நாட்டில் அவனது நிலைத்த ஆட்சிக்கு உறுதுணை புரிந்தன. அமைதியான ஆட்சிக்கும், பாண்டிய நாட்டில் சோழரது நீண்ட ஆதிக்கத்திற்கும் பெருந்துணை புரிந்தன.

அடிக்குறிப்புகள்

1. S.I.I. Vol. III, No. 9
2. K. A. Nilakanda Sastri, The colas, Madras University Madras 1984 p. 170
3. A.R.E 394/1911
4. டாக்டர் கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை 1977 பக். 89
5. K.A. Nilakanda Sastri. The Colas, p. 171
6. திருவாங்கூர் தொல்லியல் தொகுதி, பக். 238
7. டாக்டர் கே. வி. ராமன், பாண்டியர் வரலாறு பக். 89
8. A.R.E. 672/ 1909
9. A.R.E. 1909/p. 91
10. Dr. Subbarayalu, Some reflections on Pandi Mandalam (700-1300) in Damilica Vol. II part 3 p. 27
11. Ibid
12. A.R.E. 134/1910
13. நடன. காசிநாதன், கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள் 1968/38-1, தொகுதி IV
14. A.R.E. 415/1929-30
15. A.R.E. 180/1895
16. A.R.E. 120/1905
17. The Colas, p. 455
18. A.R.E. 189/1895
19. A.R.E. 255/1911
20. A R E. 419/1929
21. நடன. காசிநாதன், கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள் தொகுதி II 1968/204
22. A.R.E. 134/1910
23. A.R.E. 180/1895
24. A,R.E. 116/1905
25. S. R. Balasubramaniam, Middle Chola temples, Thompson Press (Ind.) Ltd., Hareyana 1975

கோயில் திருப்பணியில் குணமதாசர் குடும்பம்

ச. கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,
தொல்பொருள் அலுவலர், தருமபுரி

முதலாம் இராசராசன் தான் எடுப்பித்த பெரியகோயில் திருப்பணியில் தன் குடும்பத்தையே அர்ப்பணித்தான். அதேபோன்று குணமதாசர் என்பர் தான் எடுப்பித்த சிவன் கோயிலுக்குத் தன் குடும்பத்தையே அர்ப்பணித்ததைத் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி நகரில் உள்ள சோமீசுவரர் கோயிற் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

கிருஷ்ணகிரி பழையபேட்டை சோமீசுவரர் கோயில் அண்மையில் புதுப்பிக்கப்பட்டு நன்னீராட்டு விழா நடைபெற்றது. இக்கோயில் குறித்து ஆய்வுச் செய்யச் சென்றபோது வில்வமரத்தின் அருகில் சில உதிரிச் சிற்பங்கள் பார்வையில் பட்டது.[1] அவற்றுள் மூன்று உதிரிச்சிற்பங்கள் கல்வெட்டுக்களுடன் காணப்படுகின்றன.

முதல் உதிரிச் சிற்பம் குணமதாசர் சிற்பமாகும். இரண்டாவது சிற்பம் குணமதாசரின் மகன் சிற்பம். மூன்றாவது உதிரிச் சிற்பத்தில் குணமதாசரின் இரண்டு மனைவியர் உருவங்கள் உள்ளன. உதிரிச் சிற்பங்களின் சிற்ப அமைப்பையும், அவற்றுள் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் அமைப்பையும் நோக்கும்போது கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு என முடிவுச் செய்யலாம். இக்கருத்தை உறுதி செய்யும் வண்ணம் இரண்டாம் சிற்பத்தின் கல்வெட்டு வாசகம் அமைந்துள்ளது:

> 'இவர் குணமதாசர் மகன் கங்கை கொண்ட
> சோழப் பல்லவ
> ஆதித்தன்'

குணமதாசரின் மகன், கங்கை கொண்ட சோழன் என்ற பட்டத்துடன் கூடிய பல்லவ ஆதித்தன் என்றறிகிறோம். சோழர்களின் அதிகாரிகளில், பலருடைய பெயர்களில் இயற்பெயர்களுடன் பட்டப் பெயர்கள் சேர்ந்திருக்கும்.[2] சிலவற்றுள் இயற் பெயர்கள் இருக்காது. சிலவற்றுள் இரண்டுப் பட்டப் பெயர்களுடன் இயற்பெயர்கள் இருப்பதைப் பார்க்கலாம். இங்கே ஆதித்தன் என்ற இயற்பெய

ரையும் கங்கை கொண்ட சோழன், பல்லவன் என்ற இரண்டு பட்டப் பெயர்களையும் பார்க்கிறோம்.

'கங்கை கொண்ட' என்ற விருது முதலாம் இராசேந்திர சோழனுக்குரிய சிறம்பான விருதுகளுள் ஒன்றாகும், முதலாம் இராசேந்திரன் கி. பி. 1012-1044 வரை அரசாண்டவன் என்பதால் அவ்வரசன் காலத்திலோ அன்றி அவனுக்குப் பின்னரோ கங்கை கொண்ட சோழப்பல்லவ ஆதித்தன் வாழ்ந்திருக்கவேண்டும். வீரராசேந்திரனுடைய கங்கைகொண்ட சோழபுரத்துக் கல்வெட்டில் 64 அரசியல் அதிகாரிகளின் பெயர்களுள், இருவருடைய பெயர்களில் கங்கைகொண்ட என்ற அடைமொழி காணப்படுகின்றன.[3] பல்லவரையனாகிய கொங்கன் கங்கை கொண்ட சோழனையும், கங்கை கொண்ட சோழப் பல்லவரையனாகிய ஏறன் செல்வனையும் இதில் காண்கிறோம். இக்கல்வெட்டு 216 வரிகளைக் கொண்டுள்ளது. வீரராசேந்திரனின் கல்வெட்டான போதிலும் முதல் இராசேந்திரன், முதல் இராசாதிராசன் ஆகியோரின் ஆணைகளையும் உள்ளடக்கிய கல்வெட்டாகையால் மேலேகண்ட இரு அதிகாரிகளும் முதல் இராசேந்திரன் காலத்திலும் அதிகாரிகளாக இருந்தவர்கள் எனலாம்.

இதேபோல் இங்குள்ள கங்கைகொண்ட சோழப்பல்லவ ஆதித்தனும் முதல் இராசேந்திரன் காலத்தில் வாழ்ந்த அதிகாரியாக இருக்கலாம். மலையமானாட்டை அரசாண்ட கங்கைகொண்ட சோழ மிலாடுடையான்[4] என்ற குறுநில மன்னனும் முதல் இராசேந்திரன் காலத்தில் இருந்ததால் கங்கைகொண்டசோழ என்ற பட்டப் பெயருடன் கூடிய பல்லவ ஆதித்தன், முதல் இராசேந்திரன் காலத்தில் கிருஷ்ணகிரி என இன்றழைக்கப்படும் எயில் நாட்டின் அரசியல் அதிகாரியாக இருந்திருக்கவேண்டும்.[5] இந்தக் கங்கைகொண்ட சோழப் பல்லவ ஆதித்தன் கோயிலுக்கு என்ன தானம் செய்தான் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றில்லாவிடினும் சிற்பச் சான்றுள்ளது. கங்கைகொண்ட சோழப் பல்லவ ஆதித்தன் உருவத்திற்கருகில் சிவலிங்கமும், விளக்கும் காணப்படுகின்றன. சிவலிங்கத்தைத் தாபித்து, விளக்கு வைக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருந்திருக்க வேண்டும்.[6] முதலாம் இராசேந்திரனின் 29-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1041) நிகரிலி சோழமண்டலத்துத் தகடூர் நாட்டுப் புறமலை நாட்டுத் தீர்த்தமலை உடைய மகாதேவர் கோயிலைப் புதுப்பித்து, முகமண்டபமும் எடுப்பித்து, இரண்டு திருவிளக்கும் வைத்த புறமலை நாடாழ்வான் கற்கடை வயிரியன் வியளன் என்ற அதிகாரியைத் தீர்த்த மலைக் கல்வெட்டில் பார்க்கிறோம்.[7] விளக்கு வைக்கும் திருப்பணியில் முதல் இராசேந்திரன் காலத்து அதிகாரிகள் பலர்

எனலாம். 'தாசர்' என்பது அடிமை அல்லது 'தொண்டர்' எனலாம். 'குணம' என்ற வரியை குணம் என்றும் படிக்கலாம் என்பதால், நற்குணங்களுக்குத் தாசர் என்றோ தருமதாசர் என்றோ பொருள் கொள்ளலாம். குணமதாசர் அல்லது குணம்தாசர் வேறு கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளாரா? என்றுத் தெரிய வில்லை. தருமபுரி நகரில் உள்ள குண்செட்டிகுளமும், தருமபுரிக்கு அருகாமையில் உள்ள குண்செட்டி பட்டி என்ற ஊர்ப்பெயரும் இப் பெரியார் பெயருடன் தொடர்புடையவையா? என ஆய்வு செய்ய வேண்டும். மகனைப் போல தந்தை அதிகாரியாக இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆயின் சிவனடியாராக இருந்துள்ளார் என்றுக் குறிப் பிடலாம்.

குணமதாசர் தேவிமார்களில் சிறிய காமவை வலப்புறமும், பெரிய காமவை இடப்புறமும் உதிரிச் சிற்பத்தில் பார்க்கிறோம். அரச மாதேவியர் போல் காட்சி தருகின்றனர். ஒருத்திக்கு மார்பில் கச்சை இல்லை. இளையவளுக்குக் கச்சு உள்ளது. ஆடைகள் நன்றாகக் காட்டப்பட்டுள்ளன. எனினும், ஒருவர் முகம் உடைந்த நிலையில் உள்ளன. மேற்கண்ட சிற்பங்களுடன் சடாபாரத்துடன் கூடிய சிவன், கையில் சூலம் ஏந்திய அம்மன், முருகன், நந்தி போன்ற உதிரிச் சிற்பங்களும் உள. இவற்றின் காலத்தை கி. பி. 11-ஆம் நூற்றாண்டாகக் குறிப்பிடலாம். குணமதாசர் எடுப்பித்த சிவன் கோயில் அவர் காலத்தில் என்ன பெயரில் வழங் கியதோத் தெரியவில்லை. ஆயின், இன்று சோமீசுவரர் கோயில் என வழங்கப்படுகிறது. கோயில் முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டு விட்டதால் கோயிலின் பழைய கட்டட அமைப்பைக் காணமுடியாது.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோட்டையும், பல கோயில்களை யும் தன்னகத்தேக் கொண்டுள்ள கிருஷ்ணகிரியில் தொன்மையான கல்வெட்டுக்களுடன் கூடிய உதிரிச்சிற்பங்கள் குணமதாசர் குடும்பத் தாருடையதே எனலாம்.

அடிக்குறிப்புக்கள்

1. 23-2-1984 அன்று கிருஷ்ணகிரி பழைய பேட்டை சோமீசுரர் கோயிலில் உள்ள உதிரிச்சிற்பங்களை ஆய்வு செய்யச் சென்றபோது என்னுடன் வழக் கறிஞர் திரு. பாலசுப்பிரமணியம், இராமானுஜம் நஞ்சுண்ட செட்டியார் ஆகியோர் உடன் வந்தனர்.
2. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு.
3. கங்கைகொண்ட சோழபுரம் (ஆங்.) தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு.
4. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு.

ஈடுபட்டமை நாமறிவோம். எனவே கங்கைகொண்ட சோழப் பல்லவ ஆதித்தனும் இப்பணியில் ஈடுபட்டிருக்கலாம்.

குணமதாசர் உருவம்

குணமதாசர் உருவம் பொறித்த உதிரிச் சிற்பத்தில் இரு வரிகளைக்கொண்ட கல்வெட்டு உள்ளது. அக்கல்வெட்டு, கோயில் எடுத்தவர் பெயரைச் சுட்டுகிறது.

"இக்கோயில் எடுப்பித்த
குணமதாசர் இவர்"

என்று கோயில் கட்டியவர் பெயரையும், உருவத்தையும் ஒருங்கே உதிரிச் சிற்பத்தில் பார்க்கிறோம். மூன்றாவதாக உள்ள சிற்பம் இரு பெண்களின் சிற்பமாகும். சிற்பத்தின் மேற்புறம் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது:

"இவர்கள் குணமதாசர் தேவிமார் சிறிய கா
மவையும் பெரிய காம
வையும்"

இக்கல்வெட்டு வாசகத்தை நோக்க குணமதாசருக்கு இரண்டு மனைவிகள் என்பதும், அவர்கள் உருவங்களே ஈண்டுள்ளவை என்றும் அறிகிறோம். இவர்கள் என்ன தானம் செய்தார்கள் என்றறிய கல்வெட்டுச் சான்றில்லை. கோயிலில் இவர்கள் உருவங்களும், பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளதால் இவர்கள் ஏதாவது தானம் செய்திருக்கவேண்டும் என யூகிக்கலாம். இவ்விருவரில் யாருடைய மகன் கங்கைகொண்ட சோழப் பல்லவ ஆதித்தன் என்பதும் தெரியவில்லை.

கங்கைகொண்ட சோழப் பல்லவ ஆதித்தன்

அமர்ந்த நிலையில் கையில் உருத்திராட்ச மாலை பிடித்துள்ளான். கழுத்தில் அணிகலன், காதுகளில் குண்டலங்கள் உள. தலையின் மேற்புறம் கொண்டை சிறிது சாய்ந்துள்ளது. இவ்வுருவத்தின் அருகில் சிவலிங்கமும், விளக்கும் உள்ளன. சிவனடியார் போல் உருவம் உள்ளது.

குணமதாசர்

இவர் கங்கைகொண்ட சோழப் பல்லவ ஆதித்தன் போலின்றி மெலிந்த தோற்றத்தில் காணப்படுகிறார். முதலாம் இராசேந்திரன் காலத்தில் சதுரானன பண்டிதர், ஈசான பண்டிதர் போலக் குணமதாசரும் சிவாலயத்தை எடுப்பிக்கும் திருப்பணியில் ஈடுபட்டார்

எனலாம். 'தாசர்' என்பது அடிமை அல்லது 'தொண்டர்' எனலாம். 'குணம' என்ற வரியை குணம் என்றும் படிக்கலாம் என்பதால், நற்குணங்களுக்குத் தாசர் என்றோ தருமதாசர் என்றோ பொருள் கொள்ளலாம். குணமதாசர் அல்லது குணம்தாசர் வேறு கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளாரா? என்றுத் தெரிய வில்லை. தருமபுரி நகரில் உள்ள குண்செட்டிகுளமும், தருமபுரிக்கு அருகாமையில் உள்ள குண்செட்டி பட்டி என்ற ஊர்ப்பெயரும் இப் பெரியார் பெயருடன் தொடர்புடையவையா? என ஆய்வு செய்ய வேண்டும். மகனைப் போல தந்தை அதிகாரியாக இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆயின் சிவனடியாராக இருந்துள்ளார் என்றுக் குறிப் பிடலாம்.

குணமதாசர் தேவிமார்களில் சிறிய காமவை வலப்புறமும், பெரிய காமவை இடப்புறமும் உதிரிச் சிற்பத்தில் பார்க்கிறோம். அரச மாதேவியர் போல் காட்சி தருகின்றனர். ஒருத்திக்கு மார்பில் கச்சை இல்லை. இளையவளுக்குக் கச்சு உள்ளது. ஆடைகள் நன்றாகக் காட்டப்பட்டுள்ளன. எனினும், ஒருவர் முகம் உடைந்த நிலையில் உள்ளன. மேற்கண்ட சிற்பங்களுடன் சடாபாரத்துடன் கூடிய சிவன், கையில் சூலம் ஏந்திய அம்மன், முருகன், நந்தி போன்ற உதிரிச் சிற்பங்களும் உள. இவற்றின் காலத்தை கி. பி. 11-ஆம் நூற்றாண்டாகக் குறிப்பிடலாம். குணமதாசர் எடுப்பித்த சிவன் கோயில் அவர் காலத்தில் என்ன பெயரில் வழங் கியதோத் தெரியவில்லை. ஆயின், இன்று சோமீசுவரர் கோயில் என வழங்கப்படுகிறது. கோயில் முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டு விட்டதால் கோயிலின் பழைய கட்டட அமைப்பைக் காணமுடியாது.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோட்டையும், பல கோயில்களை யும் தன்னகத்தேக் கொண்டுள்ள கிருஷ்ணகிரியில் தொன்மையான கல்வெட்டுக்களுடன் கூடிய உதிரிச்சிற்பங்கள் குணமதாசர் குடும்பத் தாருடையதே எனலாம்.

அடிக்குறிப்புக்கள்

1. 23-2-1984 அன்று கிருஷ்ணகிரி பழைய பேட்டை சோமீசுரர் கோயிலில் உள்ள உதிரிச்சிற்பங்களை ஆய்வு செய்யச் சென்றபோது என்னுடன் வழக் கறிஞர் திரு. பாலசுப்பிரமணியம், இராமானுஜம் நஞ்சுண்ட செட்டியார் ஆகியோர் உடன் வந்தனர்.
2. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு.
3. கங்கைகொண்ட சோழபுரம் (ஆங்.) தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு.
4. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு.

5. கிருஷ்ணகிரியையொட்டிய பல ஊர்கள் எயில் நாட்டில் இருந்தன. கிருஷ்ணகிரி என்ற பெயர் விஜயநகரப் பேரரசர் காலத்தில் ஏற்பட்டதாகும். இவ்வூர் நரசிம்ம பெருமாள் கோயில் கல்வெட்டில் இவ்வூருக்கு மேலைக் கோட்டை என்று குறிக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்திலும் இப்பெயரே இருந்திருக்கலாம்.
6. குணமதாசர் மகன் பல்லவ ஆதித்தன், சிவலிங்கத்தைப் பூசிப்பதாகவும் குறிப்பிடலாம்.
7. தருமபுரி கல்வெட்டுக்கள், தொகுதி 1, தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு,

★

வீரகேரள விண்ணகரத்தில் முதல் இராசராசன் கல்வெட்டுக்கள்

வெ. வேதாசலம், *எம் ஏ.,*
காப்பாளர்
திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை

பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் திருமால் குடிகொண்ட கோயில்களை விண்ணகரம் என்று குறிப்பிடுகின்றன. மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்திலுள்ள தென்கரை என்ற கிராமத்திலும், அதன் சுற்றுப்புறங்களிலும், இவ்வூரினை ஒட்டிச்செல்லும் வைகையாற்றுப் பகுதியிலும் திருமாலுக்காக எடுப்பிக்கப் பெற்ற விண்ணகரங்கள் பல புகழ்பெற்று விளங்கியிருக்கின்றன. தென்கரை சிவன் கோயிலான மூலநாதசுவாமி கோயிலின் மகாமண்டபத்திற்கு முன்புள்ள முகமண்டபம் பிற்காலத்தில் இப்பகுதியிலிருந்து அழிந்துபோன விண்ணகரங்களிலிருந்து எடுத்துவரப்பெற்ற தூண்களைக்கொண்டு கட்டப்பெற்றதாகும். இம் முன்மண்டபத்திலுள்ள தூண்கள் மூலநாதசுவாமிக்கோயிலைச் சார்ந்தவை அல்ல. அவை இப்பகுதியில் முன்பு பெருமையுடன் விளங்கிக் காலவெள்ளத்தால் அழிந்துபோன இரண்டு விண்ணகரங்களுக்கு உரியவையாகும். அவற்றில் ஒன்றே வீரகேரள விண்ணகரமாகும். இதனை உறுதி செய்யும் வகையில் இத்தூண்களில் இவ்விண்ணகரத்திற்கு விடப் பெற்ற நிவந்தங்களைக் குறிக்கும் முதல் இராசராசனின் மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று, புதியதாகக் கண்டறியப்பட்ட கல்வெட்டாகும். மற்ற இரண்டு கல்வெட்டுக்களின் வாசகங்களும் இதுவரை வெளியிடப்பெறவில்லை. இக்கல்வெட்டுக்களை முழுமையாகப் படித்தாய்வதும் இவ்விண்ணகரம் எங்கிருந்தது, இக்கல்வெட்டுக் குறிக்கும் வீரகேரளன் யார்? என்பதை கண்டறிவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வீரகேரள விண்ணகரம்

வீரகேரள விண்ணகரத்தில் இருந்த நான்கு தூண்கள் மூலநாதசுவாமிகோயில் முன்மண்டபத்திலுள்ள தூண் வரிசையில் காணப்படுகின்றன. இந்நான்கு தூண்களில் மூன்று தூண்களில் மட்டும் வீரகேரள விண்ணகரத்தைச் சார்ந்த முதல் இராசராசன் காலத்துக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மற்றொன்றில் கல்வெட்டு

இல்லை. மற்றொரு தூண் ஏனைய மூன்று தூண்களைப் போன்றே ஒத்த அமைப்பைக்கொண்டு விளங்குவதால் அதுவும் வீரகேரள விண்ணகரத்தின் இடிபாட்டிலிருந்து எடுத்துவந்து கட்டப்பட்டிருக்க வேண்டும். ஒரு காலத்தில் இத்தூண்கள் அனைத்தும் வீரகேரள விண்ணகரத்தின் அர்த்தமண்டபத்தையும் மகாமண்டபத்தையும், அணி செய்த தூண்களாக விளங்கியிருக்க வேண்டும். பிற்காலத்தில் அவ்விண்ணகரம் அழிந்த பின்னர் அவற்றிலிருந்து எடுத்து வந்து தென்கரைச் சிவன் கோயில் முன்மண்டபம் கட்டுவதற்காகப் பயன் படுத்தியிருக்கவேண்டும் எனலாம். இத்தூண்களில் அழகிய அன்னமும், கொடியும், மலரும், தெய்வ உருவங்களும் வடிக்கப்பட் டுள்ளன.

விண்ணகரம் இருந்த இடம்

தென்கரைப் பகுதியில் இவ்வீரகேரளவிண்ணகரம் எங்கே இருந்தது? என்று தெரியாமல் அதன் அடிப்பகுதி முதல் அனைத்துப் பகுதிகளும் அது இருந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு காலவெள்ளத்திற்கு இரையாகி அழிந்து போயின. நமக்குக் கிடைத் துள்ள வீரகேரள விண்ணகரத்து இத்தூண் கல்வெட்டுக்களே, அது எங்கே இருந்தது என்பதற்கு ஆதாரமாக விளங்குகின்றன.

முதல் இராசராசனின் 17-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று" பாகனூர்கூற்றத்து ஜனநாத சருப்பேதிமங்கலத்து நடுவில் ஸ்ரீகோயில் ஸ்ரீவீரகேரள விண்ணகரம்" என்று இக்கோயில் அமைந் திருந்த இடத்தைப்பற்றித் தெரிவிக்கிறது.[1] பாகனூர்க்கூற்றம் என்பது சோழவந்தான், தென்கரையைச் சார்ந்த பகுதிகள் ஆகும் சோழவந்தானும் அதனை அடுத்துள்ள தென்கரை, முள்ளிப்பள்ளம் முதலிய ஊர்கள் இராசராசன் காலத்தில் இப்பாகனூர் கூற்றத்து ஜனநாதச் சதுர்வேதிமங்கலத்து ஊர்களாக விளங்கின. எனவே இக்கோயில் சோழவந்தான், தென்கரை, முள்ளிப்பள்ளம் முதலிய ஊர்களுள் ஒன்றிலேயே கட்டப்பெற்றிருக்கவேண்டும்.

நடுவில் ஸ்ரீகோயில்

இரண்டு ஆறுகளுக்கு இடையே அமைந்த (ஆற்றிடைக்குறை) பகுதியை 'நடுவில்' என்று பழந்தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள் குறிக் கின்றன. இவ்விண்ணகரம் அமைந்த பகுதியை 'நடுவில் ஸ்ரீகோயில்' என்று கல்வெட்டில் குறிக்கப்பெறுவதால் இது இரண்டு ஆறுகளுக்கு இடையே இருந்த திட்டிலேயே இருந்திருக்கவேண்டும் என்பது தெளிவாகின்றது. தென்கரைக்கு மேற்கிலுள்ள மன்னாடிமங்கலத்தை அடுத்து வைகையாற்றின் தென்புறத்திலிருந்து 'சின்னாறு' என்ற

பெயரில் ஒரு பெரிய கால்வாய் பிரிந்து முள்ளிப்பள்ளம், தென்கரை வழியாக வைகையாற்றினை ஒட்டியே தென்கரைக் கிராமம் வரை சென்று, பின்னர் அங்கிருந்து விலகிக் கூத்தியார்குண்டு என்ற ஊரினை நோக்கிச் செல்கின்றது. இன்று இச்சின்னாற்றிற்கும், வைகையாற்றிற்கும் இடையே தென்கரை வரை அமைந்த பகுதி, தென்னந்தோப்புகள் நிறைந்த அழகிய திட்டாகக் காட்சியளிக்கின்றது. இப்பகுதியே முதல் இராசராசன் கல்வெட்டில் "ஜனநாத சதுர்வேதிமங்கலத்து நடுவில்" என்று குறிக்கப்படும் பகுதியாக இருக்கவேண்டும்.

தென்கரை, முள்ளிப்பள்ளம் முதலிய ஊர்களின் கரைகளை ஒட்டிவரும் இத்திட்டுப் பகுதியை ஆய்வு செய்ததில் இடிந்துபோன இப்பழங்கோயிலின் இடிபாடுள்ள எதுவும் புலப்படவில்லை. ஆனால் புதியதாகக் கண்டறியப்பட்டுள்ள மூலநாதசுவாமி கோயில் முன்மண்டபத்துத் தூணில் காணப்படும் முதல் இராசராசனின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இக்கோயில் முள்ளிப்பள்ளத்திற்கு அருகில் இருந்தமையை உய்த்துணர வைக்கிறது. எனவே இவ்வீரகேரளவிண்ணகரம் முள்ளிப்பள்ளத்திற்குக் கிழக்கேயும் சோழவந்தானுக்கு மேற்கேயும் உள்ள இடைப்பகுதியில் வைகையாற்றிற்கும் சின்னாற்றிற்கும் இடையே அமைந்தத் திட்டில் எடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஒரு காலத்தில் இங்கு மண்மூடிய பெரியமேடு ஒன்று இருந்ததாகவும், அதனை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்று விட்டது என்றும், இங்கு ஏராளமாய் சிதறிக்கிடந்த கற்களை அப்புறப்படுத்திவிட்டனர் என்றும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். தற்போது இம்மேட்டுப்பகுதி கோயில்மேடு என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வீரகேரள விண்ணகரத்தின் அழிவு

திருவரங்கம் போன்று ஆற்றிடைக்குறையில் அமைந்த அரங்கம் திருமாலுக்கு உகந்தது என்ற நோக்கில் இவ்விண்ணகரமும் ஆற்றிடைக் குறையில் எடுக்கப்பெற்றிருக்க வேண்டும். இப்பகுதியில் அமைந்துள்ள குருவித்துறை சித்திர ரதப் பெருமாள் கோயிலும் ஆற்றிடைக்குறையிலேயே கட்டப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வீரகேரள விண்ணகரம் சின்னாறு, வைகை என்ற இரு ஆறுகளுக்கு இடையே அமைந்த சிறிய திட்டில் எடுப்பிக்கப்பெற்றமையால், அடிக்கடி ஏற்பட்ட ஆற்றுப்பெருக்கிற்கு இலக்காகிப் பிற்காலத்தில் சிதைந்து போயிருக்கவேண்டும். இவ்வீரகேரள விண்ணகரத்தின் அமைவிடமே இதன் அழிவிற்கு வழிகோலியது எனலாம். பிற்காலத்துக் கல்வெட்டுக்களில் இவ்விண்ணகரத்தினைப் பற்றிய

குறிப்புக்கள் காணப்படாமையால் இது முதல் இராசராசன் காலம் முடிய மிகச் சிறப்புடையதாக விளங்கி அதனைப் போற்றிக் காக்க முடியாமல் படிப்படியாக அழிவுற்றிருக்கவேண்டும் எனக் கருதலாம்.

வீரகேரள விண்ணகரக் கல்வெட்டுக்கள்

முதல் இராசராசன் (கி.பி. 985-1014) காலத்தினைச் சார்ந்த மூன்று கல்வெட்டுக்கள் இவ்விண்ணகரத்தைப் பற்றிய செய்திகளை நமக்குத் தருகின்றன. இவற்றில் ஒன்று இராசராசனின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டைச் சார்ந்ததாகும். இது புதியதாக கண்டறியப்பெற்ற கல்வெட்டாகும். மற்றவை இரண்டும் பதினேழாவது ஆட்சியாண்டைச் சார்ந்தவையாகும்.[2] இக்கல்வெட்டுக்களின் முழுமையான வாச்கங்கள் இன்னும் வெளிவரவில்லை. இவை பல அரிய வரலாற்று உண்மைகளை நமக்குத் தருகின்றன.

இவ்வீரகேரள விண்ணகரம் ஸ்ரீபராந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் அமைந்திருந்தது. பராந்தகச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் இக்கோயிலுக்கு முள்ளிக்குடியில் நிலம் விற்றுக் கொடுத்தனர். சோழநாட்டுத் திரைமூர் நாட்டிலுள்ள சாத்தமங்கலம் என்ற ஊரினைச் சார்ந்த பனையன் ஆதிச்சனாயின இராசராசத் தமிழ் பேரரையனுக்கு இந்நிலங்களை விலைக்குப் பெற்று அளித்தனர் என்று முதல் இராசராசனின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ காந்தளூர்ச்சாலை கலமறு
2 த்த கோஇராசராச கேசரிபன்மக்
3 கு யாண்டு பன்னிரண்டாவது பாக
4 ஞார் கூற்றத்து தேவதான [பிரம]
5 தேயம் ஸ்ரீபராந்தகச் சருபேதி [மங்க]
6 லத்துச் மகாசபையோம் விற் .
7 . . . . . த்து இவூர் .
8 . . . . . க்கு இவன்
9 . . . . . களுக்கு
10 . . . . . .
11 [ராச] சோழநாட்டு திரைமூர் நாட்டுச் சாத்த
12 மங் . . . . . .

13 ராச . . . . . எங்களூர்
14 வடபடாகை . . . . ண்டு . .
15 . . . . . .
16 . . . . . ணோக்கிய கி
17 ணறும் மற்றும் இவ்வூர் சுட்டி வருவது
18 உடும்போடி ஆமை தவழ்வது எப்பே
19 ர்பட்ட . . . . . .
20 யது குடுத்தோம் மகாசபையோ[ம்]
21 பனையன் ஆதிச்சன் ஆயின இரா
22 சராசத் தமிழ்ப் பேரரரையனுக்கு இ
23 ப்பரிசு விற்றுக் குடுத்த இம் முள்ளிக்கு
24 டிக்கு விலைப்பொரு . . . . . .
25 முன் . . . . . பொன் எ
[26 முதல் 37 வரை வரிகள் சிதைந்துள்ளன.]
38 பொருள் மாவறுதிப் பொருட் செல
39 வோலை காட்டக் கடவோம் அன்றி இதுவே
40 ய் விலையோலையும் பொருட் செ
41 ல வோலையும் ஆவதாகவும் இப்
42 பரிசு விற்றுக்குடுத்த இம்முள்ளி
43 க்குடிக்கு . . . . . .
44 று இக்காசு . . . . இந்நிலத்தால்
45 . . . . . ண்டு இறையிலி
46 யாக கல்மேல் வெட்டிக் குடுப்ப[தா]
47 தாக இப்பரிசு தெரிக்கரை இட்டுக் கரைபோந
48 து பொன்னம்புறத்து உதையதி
49 வாகரக் கிரமவித்தந் பணிக்கச் சோமந்
50 கிருஷ்நந்பணிப்ப பணியால் பணிச்சு
51 விற்று விலையோலை செய்து குடு
52 த்தோம் மகாசபையோம் பனை
53 யன் ஆதிச்சன் ஆன ராசராசத் தமி
54 ழ்ப் பேரரையனுக்கு இம்மகாசபை
55 யார் பணிக்க எழுதினேன் . . . .
56 . . . வீர . . . திரை . . . .
57 . . . எழுத்து

இராசராசனின் பதினேழாவது ஆட்சியாண்டிலிருந்து பராந்தக சதுர்வேதிமங்கலம் சனநாதச் சதுர்வேதிமங்கலம் என்று இராசராசன் பெயரால் மாற்றப்பெற்ற ஜனநாதச் சதுர்வேதிமங்கலத்தில் இக் கோயில் அமைந்திருந்ததையும், இக்கோயிலின் திருச்சென்னடைக் காக நிலம் தானமாகத் தரப்பட்டதையும் இராசராசனின் பதினேழாவது ஆட்சியாண்டு கல்வெட்டு தெரிவிக்கின்றது. சோழவந்தானில் இருந்து வைகையின் வடகரை வழியே மதுரை செல்லும் வழியில் அமைந்த தேனூரைச் சார்ந்த ஜனநாதப் பல்லவரையன் கோதண்டன் சோலை என்பவன் தனது ஊரிலேயே இருந்த இந்நிலத்தை இக் கோயிலுக்குத் தானமாக நீர்வார்த்துக் கொடுத்தான். இந்நிலங்களை இவன் உடன்பிறந்தான் கோதண்டன் குடியோம்பி, கோதண்டன் பூவணவன், மகன் பூவணவன் கோதண்டன், கோதண்டன் வீர கேரளன் ஆகியோரிடமிருந்தும் தனது ஊரினைச் சார்ந்த தேனூர் மூவேந்த வேளான் கிழவன் சோலையிடமிருந்தும் முறையே முக்காலே முக்காணி அரைக்காணியும், பத்துமா நிலமும் விலை கொண்டு பெற்றுத் தானமாக நீர்வார்த்துக் கொடுத்தார்.[3] இச் செய்தி இக்கொடையைப் பாதுகாக்கும்படி வடமொழியில் அமைந்த சுலோகமாகவும் மற்றொரு கல்வெட்டில் பொறிக்கப்பெற்றுள்ளது.[4]

இராசாசிரயனின் பதினேழாவது ஆட்சியாண்டில் தேனூரில் ஜனநாதச் சதுர்வேதி மங்கலத்தில் அமைந்த திருமால் ஆலயத்துக்குக் கோதண்டன்சோலை தேனூரில் இருந்த நிலங்களைத் தானமாகத் தந்துள்ளான் என்று இராசராசனின் வடமொழிக் கல்வெட்டிற்குப் பொருள் கொள்ளாது கோதண்டன் சோலை ஜனநாதச் சதுர்வேதி மங்கலமான தேனூரில் இருந்த திருமால் ஆலயத்திற்கு தேனூரில் நிலங்களை வழங்கினான் என்று தவறாகப் பொருள்கொண்டு இக் கல்வெட்டினைப் பதிப்பித்துள்ளனர்.[5] தேனூருக்கும் ஜனநாதச் சதுர்வேதிமங்கலத்திற்கும் தொடர்பில்லை. ஜனநாதச் சதுர்வேதி மங்கலம் என்பது சோழவந்தான் ஊர்ப்பகுதிகளுக்கு இராசராசன் காலத்தில் வழங்கப்பெற்ற பெயராகும். தேனூர் சோழவந்தானில் இருந்து கிழக்கே ஐந்து கல் தொலைவில் அமைந்த ஊராகும். இது ஜனநாதச் சதுர்வேதிமங்கலம் அமைந்திருந்த பாகலூர் கூற்றத்து ஊர்களில் ஒன்றாக விளங்கியது. இக்கல்வெட்டே இராசராசனின் பதினேழாவது ஆட்சியாண்டு கல்வெட்டாக விரிவாக தமிழ்மொழி யிலும் பொறிக்கப் பெற்றுள்ளது. தமிழ்க் கல்வெட்டின் வாசகம் முழுமையும் படித்தோர் இம்முடிவிற்கே வருவர்.

இராசராசனின் அதிகாரிகள்

தென்கரையில் காணப்படும் இம்முதல் இராசராசனின் மூன்று கல்வெட்டுக்களில் கீழ்க்கண்ட இவனது மூன்று அதிகாரிகள் குறிப்பிடப்படுகின்றனர்.

1 பனையன் ஆதிச்சரையனாயின இராசராசத் தமிழ்ப் பேரரரையன்
2 ஜனநாதப் பல்லவரையனாயின கோதண்டன் சோலை
3 தேனூர் மூவேந்த வேளானாயின கிழவன் சோலை

தெரிக்கரையிடுதல்

இராசராசன் காலத்தில் இப்பகுதியிலிருந்த சதுர்வேதிமங்கலத்து மகாசபையாரின் நடவடிக்கைகளை இராசராசனின் இக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இராசராசனின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் தமிழ்ப் பேரரரையனுக்கு முள்ளிக்குடியில் இருந்த நிலங்களை விற்று விலையோலையும் செய்து கொடுத்துள்ளனர். இக்காரியத்தை இச்சபையின் அங்கத்தினர்கள் அனைவரும் சேர்ந்து செய்யாது அதற்கென்று அங்கத்தினர்களில் சிலரை நியமித்து அவர்களைக்கொண்டு செய்து முடித்துள்ளான். இவ்வாறு செய்ய அவர்களை நியமித்த முறையே கல்வெட்டில் 'தெரிக்கரையிட்டு கரை போதல்' என்று குறிப்பிடப்படுகின்றது. இம்மகாசபையின் உறுப்பினர்களான பொன்னம்புறத்து உதைய திவாகரக் கிரமவித்தனும் சோமன் கிருஷ்ணனும் இச்செயலைச் செய்து முடித்துள்ளனர். இம்முறை தமிழ்நாட்டில் பிரமதேயங்கள் தங்களுக்குரிய சபையின் காரியங்களைச் செய்து முடிக்கும் முறைகளில் ஒன்றாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வீரகேரளன் யார்

இப்பெருமாள்கோயில் எப்போது கட்டப்பட்டது என்று அறிவதற்கு நேரடியான கல்வெட்டுச் சான்றுகள் இல்லை. ஆனால் இக்கோயில் முதல் இராசராசன் கல்வெட்டுக்களிலேயே குறிக்கப் பெறுவதால் இது இராசராசன் காலத்திற்கு முன்பே எடுக்கப் பட்டுவிட்டது என்பது தெளிவாகின்றது. இக்கோயில் 'வீரகேரளன்' என்ற ஒரு மன்னனின் பட்டப்பெயரில் எடுக்கப்பெற்றிருப்பதால் அப்பட்டம் யாருக்குரியதாக விளங்கிற்று என்று கண்டறிந்தால் இக்கோயில் எப்போது கட்டப்பட்டது என்பதற்கு விடை கிடைக்கும்.

முதல் இராசராசனுக்கு 'வீரகேரளன்' என்ற பட்டப்பெயர் இருப்பதாகத் தெரியவில்லை. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பழனிப் பகுதிகளில் ஆண்ட சேர மன்னர்களில் சிலர் வீரகேரளன் என்ற பெயருடன் விளங்கியிருக்கின்றனர். இவர்களது ஆட்சிப்பகுதி தென்கரைப் பகுதியில் இல்லாமையால் இவர்களால் இவ்விண்ணகரம் எடுக்கப்பெறுவதற்கு வாய்ப்பில்லை. இப்பெயரும் அவர்களுக்கு உரியதில்லை.

பத்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த சோழன் தலைகொண்ட வீரபாண்டியனுக்கும் (கி.பி. 946 956) சிவகாசிச் செப்பேட்டில் குறிக்கப்பெறும் வீரபாண்டியனுக்கும் 'வீரகேரளன்' என்ற பட்டப்பெயர் இருந்தது என்பது முறையே கல்வெட்டு, செப்பேடு முதலியவற்றால் தெரியவருகின்றது. இவ்விருவரும் ஒருவரா? வெவ்வேறு காலங்களில் வாழ்ந்தவர்களா? அல்லது பாண்டியர் செப்பேடு பத்து என்ற நூலினைப் பதிப்பித்த ஆசிரியர் கருதுவது போன்று சிவகாசிச் செப்பேட்டை வெளியிட்ட வீரகேரளன் முதலாம் இராசாதிராசன் மெய்க்கீர்த்தியில் அவனால் தோற்கடிக்கப் பெற்றதாகக் கூறப்பெறும் பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரகேரளன் என்ற பாண்டிய மன்னனா என்பதை இனி காணலாம்.

சிவகாசிச் செப்பேட்டை வெளியிட்ட வீரபாண்டியனுக்கு (வீரகேரளனுக்கு) மானாபரன் என்ற தந்தையும் சுந்தரபாண்டியன் என்ற தமையனும் இருந்தனர். இம்மூவரையே கி.பி. 1018 முதல் 1054 வரை சோழநாட்டில் ஆட்சிபுரிந்த முதலாம் இராசாதிராசன் வென்றான் என்று அவனது மெய்க்கீர்த்தி பின்வருமாறு தெரிவிக்கின்றது."

> "தென்னவர் மூவருள், மானாபரன் பொன்முடி ஆனாப் பெருமணிப் பசுந்தலை பொருகளத்தரிந்து, வாரளவிய கழல் வீர கேரளனை முனைவயிற்பிடித்து தனததிவாரணக் கதக்களிற்றா னைதைப் பித்தருளி, அளவில் பெரும்புகழ்ச் சுந்தர பாண்டியன் கொற்ற வெண்குடையுங் கற்றை வெண்கவரியும் சிங்காதனமும் வெங்களத்திழந்து, தன்முடிவீழத் தலைவிரித் தடிதளர்ந்தோட தொல்லைய முல்லையூர்த் துரத்தி"

இதனால் சிவகாசிச் செப்பேட்டை பதிப்பித்த ஆசிரியர் இம் முதலாம் இராசாதிராசன் மெய்க்கீர்த்தியில் குறிக்கப்பெறும் வீர கேரளனும் சிவகாசிச் செப்பேட்டில் குறிக்கப்பெறும் வீரகேரளன் என்ற மற்றொரு பெயரினையும் பெற்ற வீரபாண்டியனும் ஒருவர்

எனக்கொண்டு சிவகாசிச் செப்பேட்டை வெளியிட்டவன் முதல் இராசாதிராசன் காலத்தில் வாழ்ந்த வீரகேரளன் என்ற பாண்டியன் ஆவான் என்பர்.[7]

மேலும் மானாபரன், வீரகேரளன் (வீரபாண்டியன்), சுந்தர பாண்டியன் ஆகிய மூவரும் சமகாலத்தவர், இராசாதிராசன் கல்வெட்டில் குறிக்கப்பெறும் வீரகேரளனின் உடன்பிறந்தான் சுந்தரபாண்டியன் அவனது இறப்பிற்குப்பின்னும் உயிர்வாழ்ந்தவன், கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் சுந்தர பாண்டியன் இறப்பிற்குப் பின்னும் உயிர் வாழ்ந்தவன், அவன் தான் உயிரோடு இருக்கும்போது இன்று இராமநாதபுர மாவட்டத்திலுள்ள பள்ளி மடத்தில் அவனது தமையனுக்காக பள்ளிப் படைக்கோயில் கட்டியிருக்கின்றான் என்று கூறுவர். மேலும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரபாண்டியன் சோழன் தலை கொண்டவன் என்றும், 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரகேரளன் (வீரபாண்டியன்) சோழன் தலைகொண்டவன் அல்லன் என்றும் கூறுவர்.[8]

இம்முடிவுகளுக்கு மாறாகச் சிலமுடிவுகள் நம் மனத்தில் தோன்றத்தான் செய்கின்றன. சோழன் தலைகொண்ட வீரபாண்டியனும், சிவகாசிச் செப்பேட்டை வெளியிட்ட வீரபாண்டியனும் ஒருவரே என்ற முடிவே வலிமையுள்ளதாகத் தோன்றுகிறது.

இராசாதிராசன் கல்வெட்டில் குறிக்கப்பெறும் வீரகேரளனும், சிவகாசிச் செப்பேட்டில் குறிக்கப்பெறும் வீரபாண்டியனும் ஒருவர் எனக் கொண்டமைக்குச் சாசனத்தில் வரும் மானாபரன், சுந்தரபாண்டியன் என்ற பெயர்களினால் ஏற்பட்ட மயக்கமேயன்றி வேறில்லை. மேலும் இராசாதிராசன் கல்வெட்டில் குறிக்கப்பெறும் வீரகேரளனுக்கு வீரபாண்டியன் என்ற பெயரே இருந்ததாகத் தெரியவில்லை. அச்சாசனத்தில் வரும் வீரகேரளன் என்ற பெயரினை இயற்பெயராகக் கொள்ளாமல் சிவகாசிச் செப்பேட்டில் வரும் வீரபாண்டியனின் பட்டப்பெயராகக் கொண்டமையே மேலே கூறிய முடிவுக்கு கொண்டு சென்று விட்டது.

சிவகாசிச் செப்பேட்டை வெளியிட்ட வீரகேரளன் என்ற பட்டப்பெயரினைக் கொண்ட வீரபாண்டியனும், இராசாதிராசன் கல்வெட்டில் குறிக்கப்பெறும் வீரகேரளன் என்ற இயற்பெயர் கொண்ட பாண்டிய மன்னனும் வேறுவேறு பாண்டியமன்னர்கள் ஆவார்கள். இவர்கள் இருவரும் ஒருவரல்லர். வெவ்வேறு காலங்

களில் வாழ்ந்தவர்கள். இருவரும் மானாபரன் என்ற பெயரினை யுடைய தந்தையையும் சுந்தரபாண்டியன் என்ற பெயரினைக் கொண்ட தமையனையும் பெற்றவர்கள் ஆவார்கள்.

சிவகாசி செப்பேட்டை வெளியிட்ட வீரபாண்டியன் தந்தை மானாபரன் பெயரும், தமையன் சுந்தரபாண்டியன் பெயரும் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் கல்வெட்டுக்களிலேயே குறிக்கப்பெறுகின்றன. உசிலம்பட்டி வட்டத்திலுள்ள ஆனையூர் ஐராவதேச்வரர் ஆலயத்திலுள்ள சோழன் தலைகொண்ட வீரபாண் டியனின் கல்வெட்டு ஒன்று, அவன் மங்கலபுரத்திலுள்ள தனது அரண் மனையான 'மானாபரன் திருமாளிகை' யில் இருந்த வீரகேரளன் என்ற அரியணையில் அமர்ந்திருக்கும்போது அக்கோயிலுக்குக் கடவுள் அருளால் தான் அரசன் ஆனமைக்காகச் சில தானங்கள் செய்திருக்கின்றான். மானாபரன் என்பது அவனது தந்தை பெயரி னையும் 'வீரகேரளன்' என்பது அவனது பட்டப் பெயரினையும் வைத்து முறையே அரண்மனைக்கும், அரியணைக்கும் இட்ட பெயர் களாகும்.

இராமநாதபுர மாவட்டத்திலுள்ள திருச்சுழியலுக்கு அண்மை யிலுள்ள பள்ளிமடம் என்ற ஊரில் தமையன் சுந்தரபாண்டியன் பெயரில் 'சுந்தரபாண்டிய ஈச்வரமுடையார்' என்ற பள்ளிப்படைக் கோயில் ஒன்று எடுக்கப்பட்டதை இச்சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.' இதனாலும், மேலேகண்ட பிற சான்றாலும் வீரகேரளன் என்ற பட்டப் பெயரினைக் கொண்ட வீரபாண்டியன், அவன் தந்தை மானாபரன், தமையன் சுந்தரபாண்டியன் ஆகிய மூவரும் ஒரே காலத்தில் வாழ்ந்த வர்கள் என்பது தெளிவாகின்றது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரகேரளனின் தமையன் சுந்தரபாண்டியனோ தனது அண்ணன் வீரபாண்டியன் இறந்ததற்குப் பின்னும் உயிர் வாழ்ந்து இருக்கிறான் என்று இராசாதிராசன் மெய்க்கீர்த்தி தெரிவிக் கின்றது. ஆனால் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீர பாண்டியனின் தமையன் சுந்தரபாண்டியனோ வீரபாண்டியன் உயிரோடு இருக்கும் காலத்திலேயே அவனுக்கு முன்னர் மறைந்த வன் ஆவான். தனது தமையன் வீரபாண்டியனால் பள்ளிப்படை எடுப்பிக்கப்பட்டவன் ஆவான்.

சிவகாசிச் செப்பேட்டை வெளியிட்ட வீரபாண்டியனுக்குச் 'சோழன் தலைகொண்ட' என்ற விருது செப்பேடுகளில் காணப்பட வில்லை என்ற காரணம் பற்றிச் சிவகாசிச் செப்பேட்டை வெளி

யிட்ட வீரபாண்டியனும், சோழன் தலைகொண்ட வீரபாண்டியனும் ஒருவரல்லர் என்று சொல்வதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏன் எனில் சிவகாசிச் செப்பேட்டை வீரபாண்டியன் தனது மூன்றாவது ஆட்சியாண்டிலேயே வெளியிட்டு விட்டான். அப்போது அவன் சோழனின் தலைகொள்ளவில்லை. தனது ஆறாவது ஆட்சியாண்டி லிருந்தே அவன் தன்னை 'சோழன் தலைகொண்ட' வீரபாண்டியன் என்று அழைத்துக் கொள்கிறான். 'சோழன் தலைகொண்ட' நிகழ்ச்சி நடைபெறாத மூன்றாவது ஆட்சியாண்டிலேயே சிவகாசிச் செப்பேடு வெளியிடப்பட்டுவிட்டது. அதனால்தான் இந்நிகழ்ச்சி நடைபெறாத காலத்தில் வெளியிடப்பெற்ற செப்பேட்டில் அவன் தன்னைச் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் என்று குறித்துக் கொள்ளவில்லை.

மேலும் சிவகாசிச் செப்பேட்டில் ஆணத்தியாகக் குறிக்கப் பெறும்[10] வீரபாண்டியனின் அதிகாரியான தென்னவன் உத்திர மந்திரி இயக்கன் செல்வனின் பெயர், சுசீந்திரத்திலுள்ள மாறஞ் சடையன் என்று ஆட்சியின் தொடக்க காலத்தில் பெயர் பெற்று விளங்கிய சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் கல்வெட்டு ஒன்றிலும்[11] சோழன்தலைகொண்ட வீரபாண்டியன் என்ற பெய ருடன் பொறிக்கப்பெற்றுள்ள வீரபாண்டியனால் எடுக்கப்பெற்ற சுந்தரபாண்டிய ஈச்வரமுடையார் பள்ளிமடம் பள்ளிபடைக்கோயில் கல்வெட்டு ஒன்றிலும்[42] குறிப்பிடப்படுகின்றது. எனவே சிவகாசிச் செப்பேட்டை வெளியிட்ட வீரகேரளன் என்ற வீரபாண்டியனும், சோழன் தலைகொண்ட வீரபாண்டியனும் ஒருவரே என்பதும் சோழன் தலைகொண்ட வீரபாண்டியனே சோழன் தலைகொள் வதற்கு முன்னர் சிவகாசிச் செப்பேட்டை வெளியிட்டு விட்டான் என்பதும் தெளிவாகின்றது.

எமது ஆய்வால் படித்தறியப்பெற்ற முதல் இராசராசனின் கல்வெட்டுக்களிலேயே வீரகேரள விண்ணகரம் குறிக்கப்பெறுவதால் 'வீரகேரளன்' என்ற பட்டப்பெயரால் எடுப்பிக்கப்பெற்ற விண்ண கரம் முதல் இராசராசன் காலத்திற்கு முன்னரே எடுப்பிக்கப் பெற்றி ருக்கவேண்டும். எனவே வீரகேரளன் என்ற பட்டப்பெயரினைக் கொண்ட மன்னனும் முதல் இராசராசன் காலத்திற்கு முன்பே வாழ்ந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. முதல் இராச ராசன் காலத்திற்கு முன்னர் வாழ்ந்த 'வீரகேரளன்' என்ற பட்டப் பெயரினைக்கொண்ட மன்னன் யாரென்றால் நாம் மேலே கண்ட சிவகாசிச் செப்பேட்டை வெளியிட்ட சோழன் தலைகொண்ட வீரபாண்டியனேயன்றி வேறு யாராகவும் இருக்க வாய்ப்பில்லை.

இச்சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் இப்பகுதியின் வளர்ச்சியில் பல்வகையில் நாட்டம் செலுத்தியவன். இவன் காலத்திலேயே இப்பகுதியிலிருக்கும் கீழ்மாத்தூர்க்கோயில் கற்றளியாக்கப் பட்டது. ஆனையூர்க் கோயிலில் பல திருப்பணிகள் செய்யப் பட்டன. சோழனை வெற்றி கொண்டதன் நினைவாகத் தென்கரை, முள்ளிப்பள்ளம், சோழவந்தான் பகுதிகளைச் சோழாந்தகச் சதுர் வேதிமங்கலம் என்ற தன்பெயரில் அந்தணர்களுக்குத் தானமாக வழங்கியவன் இச்சோழன் தலைகொண்ட வீரபாண்டியனே ஆவான். இவற்றையெல்லாம் செய்த இவ்வீரபாண்டியனே தான் தானமாகத் தந்த சோழாந்தகச் சதுர்வேதிமங்கலத்தில் அவன் பட்டப் பெயராகிய 'வீரகேரளன்' என்ற பெயரில் இவ்வீரகேரள விண்ணகரத்தை எடுப்பித்திருக்க வேண்டும் எனலாம். எனவே இவன் ஆட்சிபுரிந்த கி.பி. 946-க்கும் 966-க்கும் இடைப்பட்ட காலத்தில் இம்மன்னனால் இவ்விண்ணகரம் எழுப்பப்பட்டிருக்கவேண்டும்.

அடிக்குறிப்புக்கள்

1 A.R.E. 134 of 1910, கல்வெட்டு வாசகம் பார்வை படியெடுக்கப் பட்டது.

2 A.R.E. 132, 134 of 1910

3 A.R.E. 134 of 1910

4 A.R.E. 132 of 1910, கல்வெட்டு வாசகம் நேரில் படிக்கப்பெற்றது.

5 மேற்படி.

6 பாண்டியர் செப்பேடுகள் பத்து-தமிழ்வரலாற்றுக் கழகம், சென்னை, 1967, பக். 184-186

7 மேற்படி

8 மேற்படி

9 S.I.I. vol. XIV No. 79 முதல் 83 முடிய

10 பாண்டியர் செப்பேடு பத்து, சிவகாசிச் செப்பேடு, வரி 75-76

11 நடன. காசிநாதன் (தொகுப்பாசிரியர்), கன்னியாகுமரி கல்வெட்டுக்கள். கல்வெட்டு எண். 1968-81 தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை. 28

12 S.I.I. vol. XIV No. 79, அடிக்குறிப்பு காண்க.

☆

சோழலங்கேஸ்வரன் யார்

ஆ. பத்மாவதி எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28.

முதலாம் இராசேந்திர சோழன் தனது 10-ஆவது ஆட்சி யாண்டில் [கி.பி. 1021-22] தன் புதல்வன் ஒருவனை பாண்டி நாட்டை ஆட்சி செய்ய அனுப்பி அவனுக்கு பாண்டியரின் சிம்மாசனப் பெயரினைச் சூட்டி ஜடாவர்மன் சுந்தர சோழ பாண்டியன் என்ற பெயரில் ஆட்சிபுரியச் செய்தான். அவன் ஒரு சுதந்திர மன்னனைப் போன்று பாண்டி நாட்டில் ஆட்சி செலுத்தினாலும் அரசியல் ரீதியாகவும் சோழப் பேரரசர்களுக்கு கட்டுப்பட்டிருந்தான் என்பது தெரியவருகிறது.

இவ்வாறு பாண்டிய கேரள மண்டலங்களை ஆள துணை அரசனை அனுப்பியது போன்று பின்னர் பிற மண்டலங்களுக்கும் அனுப்பியிருக்கலாம்[1] என்கிறார், திரு சாஸ்திரி அவர்கள். அவ்வாறு அனுப்பியதற்கு சோழ பாண்டியர் கல்வெட்டுக்கள் போன்று பிற துணை அரசர்களின் கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்காத காரணத் தால் அனுப்பியிருக்கலாம் என்று ஊகித்து எழுதியிருக்கிறார்.

இலங்கை பல்கலைக்கழக வரறாற்றுத் துறைத்தலைவர் கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா அவர்கள் இலங்கையிலுள்ள காந்தளாய் சிவன் கோயிலில் கிடந்த ஒரு கற்பலகையிலுள்ள கல்வெட்டை கி.பி. 1972-இல் பதிப்பித்துள்ளார்கள். அக்கல்வெட்டு,

1 ஸ்வஸ்திஸ்ரீ கோ சங்க வன்மரான உ
2 டையார் ஸ்ரீ சோழ இலங்கேஸ்வரதேவற்கு
3 யாண்டு பத்தாவது[2] . . . . .

எனத் தொடங்குகிறது. இக்கல்வெட்டை சோழ பாண்டிய மன்னனின்

"கோச்சடைய பன்மரான உடையார் ஸ்ரீசுந்தர
சோழ பாண்டிய தேவர்க்கு யாண்டு . . . ."

எனத்தொடங்கும் கல்வெட்டோடு ஒப்பிட்டு, எவ்வாறு சோழ இளவரசன் பாண்டி நாட்டில் துணை அரசனாக ஆளும் போது பாண்டியனின் சிம்மாசனப் பெயர்களுள் ஒன்றாகிய சடையபன்மன் என்ற பெயரையும் தன் பெயரோடு சேர்த்து ஆண்டானோ, அது

போல இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஒரு துணை அரசன் இலங்கை அரச வம்சத்தின் சிம்மாசனப் பெயர்களில் ஒன்றாகிய சங்கபோதி வர்மன் என்பதின் சுருக்கமான சங்கவர்மன் என்ற பெயரையும் சேர்த்து சோழ இலங்கேசுவரன் என்ற பெயரில் சோழ பாண்டியன் போன்று ஆண்ட ஒரு சோழ இளவரசனின் கல்வெட்டு இது என்று திரு. இந்திரபாலா அவர்கள் மிகவும் தெளிவு படக் கூறியிருக்கிறார். மேலும் எவ்வாறு சோழ பாண்டியன் அரசியல் ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் பேரரசனுக்குக் கட்டுப்பட்டிருந்தானோ, அது போலவே சோழ இலங்கேசுவரனும் ஆட்சி நடத்தியிருத்தல் வேண்டும் என்கிறார்.

இந்த சோழ இலங்கேசுவரன் கல்வெட்டில் காலத்தை நிர்ணயிப்பதற்கு சில காலக் குறிப்புக்கள் உதவுகின்றன. இக்காலக் கணிப்பில் ஒன்று கி.பி. 1033 அல்லது கி.பி. 1047 ஆகலாம் என திரு. இந்திரபாலா கூறுகிறார். இந்த இரண்டு கால கட்டங்களில் எது உண்மையானது என்பதை ஆராய முனையும்போது முதலாம் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன் வீரராசேந்திரன் ஆகியோர் மெய்க் கீர்த்திகளைத் துணைக்கொள்கிறார்.

முதலாம் இராசேந்திரனுக்குப் பிறகு பதவியேற்ற முதலாம் இராசாதிராசனும், தனது பேரரசின் பல்வேறு மண்டலங்களுக்குத் தன் உறவினரை அனுப்பியது பற்றிக் கூறும்மெய்க்கீர்த்தி, சோழ இலங்கேசுவரனையும் (இலங்கையற் கிறைவன் என்று) கூறுகிறது.[3] இவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த இரண்டாம் இராசேந்திரனும், வீரராசேந்திரனும் தங்கள் தந்தையும், தமையனும் குறிப்பிட்டவர்களையும், இன்னும் தம் மக்கள் பேரர் பலரையும் பல்வேறு மண்டலங்களுக்குப் பொறுப்பாளராக அனுப்பியிருக்கின்றனர்.[4] இவர்கள் இருவரும் சோழ இலங்கேசுவரன் பற்றி குறிப்பிடவில்லை எனக் கூறும் திரு. இந்திரபாலா அவர்கள், இதையெல்லாம் ஆய்வு செய்து சேர நாட்டிற்கும் இலங்கைக்கும் தொடர்ச்சியாக இளவரசர்கள் முதலாம் இராசாதிராசன் காலத்திற்குப் பின் அனுப்பப்படவில்லை என்ற முடிவுக்கு வருகிறார். முதலாம் இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன் ஆகியோர் கல்வெட்டுக்கள் இலங்கையில் கிடைக்க, இராசாதிராசன் கல்வெட்டுக்கள் மட்டும் கிடைக்கவில்லை என்பதால் இராசாதிராசன் காலத்தில் கி.பி. 1047-ல் இலங்கையில் நியமனம் செய்யப்பட்டவனாகவே இந்த சோழ இலங்கேசுவரன் இருத்தல் வேண்டும் எனக் கூறுகிறார்.

மிகத்தெளிவான முறையிலும், சிறந்த வரலாற்றுக் குறிப்புக்களுடனும் சோழஇலங்கேசுவரன் கல்வெட்டைப் பதிப்பித்த திரு.

இந்திரபாலா அவர்களின் கட்டுரையிலிருந்து சோழ இலங்கேசுவரனாக இலங்கையில் பதவி வகித்த சோழ இளவரசன் யார் என்ற கேள்வி நம் முன் எழுகின்றது. அவன் யார்? என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தம் உறவினர்களை முக்கிய பதவிகளில் அமரச் செய்த முதலாம் இராசாதிராசனும், அவன் தம்பியரும் வயதில் மூத்தவர்களை முதலில் கூறி, இளையோர்களை அடுத்தடுத்து வயதுவாரியாகக் கூறியிருக்கின்றனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இங்கு முதலாம் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன் ஆகியோரது தம்பியர் மட்டுமே நம் ஆய்வுக்குத் தேவைப்படுகின்றனர். முதலாம் இராசாதிராசன் தம் தம்பியர் நால்வரை மீனவன், கங்கன், இலங்கையற்கிறைவன், பல்லவன் ஆகிய பதவிகளில் அமர்த்தியதைக் குறிப்பிடுகிறான். பதவியின் பெயர்களைக் கூறிய இராசாதிராசன் அப்பதவிகளை வகித்த தம்பியர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை.

இவனுக்கு அடுத்து பட்டத்திற்கு வந்த இவனது தம்பி இரண்டாம் இராசேந்திரன் தனது காலத்தில் பதவி வகித்த உறவினர்களைக் குறிப்பிடும்போது பெயரோடு சேர்த்து வகித்த பதவியின் பெயரையும் குறிப்பிடுகிறான். இராசாதிராசனும் இராசேந்திரனும் அண்ணன் தம்பியர் ஆதலால் இவர்கள் குறிப்பிடும் தம்பியர், இருவருக்கும் தம்பியர். ஆகையால் பதவியோடு பெயரையும் சேர்த்துக் குறிப்பிட்ட இரண்டாம் இராசேந்திரனின் கல்வெட்டை முதலாம் இராசாதிராசனின் கல்வெட்டோடு ஒப்பிட்டுச் சோழ இலங்கேசுவரன் என்ற பதவி வகித்த இளவரசன் யார்? என்பதைக் கண்டு பிடிக்க முடியும்.

முதலாம் இராசாதிராசன் காலத்தில்

பதவி	—	வகித்தவன் பெயர்
மீனவன்	—	இல்லை
கங்கன்	—	இல்லை
இலங்கையற்கிறைவன்	—	இல்லை
பல்லவன்	—	இல்லை

இரண்டாம் இராசேந்திரன் காலத்தில்

பதவி	—	வகித்தவன் பெயர்
சோழபாண்டியன்	—	மும்முடி சோழன்

கரிகாலசோழன்	—	வீரசோழன்
சோழகங்கன்	—	மதுராந்தகன்
சோழ அயோத்தியராசன்	—	பராந்தகன்

முதலாம் இராசாதிராசன் காலத்தில் மீனவன் எனக் குறிப்பிடும் பதவி, சோழபாண்டியன் என்ற பதவியைக் குறிக்கும். இராசாதிராசன் காலத்தில் சோழபாண்டியன் (மீனவன்) பதவியை வகித்தவன் இளவரசன் சடாவர்மன் சுந்தர சோழ பாண்டியன் என்பவன். இவனே இராசாதிராசனுக்குப்பின் இரண்டாம் இராசேந்திரன் என்ற அபிடேகப் பெயருடன் சோழ மன்னனாகப் பொறுப்பேற்றவன். இவன் மன்னனான பின் இராசாதிராசன் காலப் பட்டியலில் உள்ள மூவரையும் புதிதாக ஒரு தம்பியையும் தனது காலப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளான். புதிதாகச் சோழ அயோத்தியராசன் பதவி வகித்த பராந்தகனைக் குறிப்பிடுகிறான். இந்த பராந்தகன் என்ற தம்பி இராசாதிராசன் காலத்தில் வயதில் மிகவும் இளையவனாக இருந்திருப்பான் போலும்.

எனவே இராசாதிராசன் காலத்தில் உள்ள நான்கு பதவிகளையும், இரண்டாம் இராசேந்திரனும், அவன் காலப் பட்டியலில் உள்ள முதல் மூவரும் ஆக நால்வரும் வகித்திருத்தல் வேண்டும்.

இந்த அடிப்படையில் இலங்கையற் கிறைவனாகப் பதவி வகித்தவன் யார் என்பதை அறிய முடியும். இராசாதிராசன் காலத்து முதல் பதவியாகிய மீனவனாக சுந்தரசோழ பாண்டியன் என்னும் இளவரசன் பதவி வகித்தான் என்றும், இவனே அண்ணன் இராசாதிராசனுக்குப்பின் இரண்டாம் இராசேந்திரன் என்ற பட்டப் பெயருடன் சோழ மன்னன் ஆனான் என்பதையும் கண்டோம். இவன் தனது தந்தை காலமாகிய கி.பி. 1021-22 முதல் கி.பி. 1051-52 வரை, அதாவது 30 வருடங்கள் சோழபாண்டியனாகப் பதவி வகித்தான். எனவே 'மீனவன்'- சுந்தரசோழ பாண்டியன் ஆவான்.

இரண்டாம் இராசேந்திர சோழன், சோழபாண்டியனாகப் பதவி வகித்துச் சோழ மன்னனான பின்னர், தனது ஆட்சிக் காலத்தில் மும்முடிச்சோழன் என்பவனைச் சோழபாண்டியனாக நியமித்தான். இந்த மும்முடிச் சோழனே இவன் காலத்துப் பட்டத்து இளவரசனாகவும் காணப்பட்டான். எனவே மூப்பு நிலை அடிப்படையில் சோழ பாண்டியனாக இராசேந்திரன் காலத்தில் பதவி வகித்த மும்முடிச் சோழனே, இராசாதிராசன் காலத்தில் இரண்டாம்

பதவியாகிய கங்கனாகப் பதவி வகித்தவன். எனவே 'கங்கன்'-மும்முடிச் சோழன் ஆவான்.

மூன்றாவது பதவியாகிய இலங்கையற் கிறைவன் என்ற பதவியை வகித்தவன் யார் என்பதே நமக்கு இங்கு முக்கியமானது. இது வரையில் முதலாம் இராசாதிராசன் காலத்தில் மீனவனாக சுந்தர சோழ பாண்டியனும் [இரண்டாம் இராசேந்திரன்] கங்கனாக மும்முடிச் சோழனும் பதவி வகித்தனர் என்று பார்த்தோம்.

இந்த கங்கனுக்கு அடுத்த பதவியை வகித்தவன் தான் இலங்கையற் கிறைவன் என்பதையும் [முதலாம் இராசாதிராசன் காலப் பட்டியல் மூலம்] அறிவோம். எனவே கங்கனாகிய மும்முடிச் சோழனுக்கு இளையவன் தான் இலங்கையற் கிறைவனாகப் பதவி வகித்தவன். அப்படியானால் மும்முடிச் சோழனுக்கு இளையவன் யார்? இரண்டாம் இராசேந்திரன் காலப் பட்டியலில் மும்முடிச் சோழனுக்கு இளையவனாக வீரசோழன் என்பவன் குறிக்கப்படுகிறான். ஆகவே இந்த வீரசோழன் தான் இலங்கையற் கிறைவனாகப் பதவி வகித்தவன் என்பது உறுதியாகிறது. இவன் வகித்த பதவியை முதலாம் இராசாதிராசன் இலங்கையற் கிறைவன் எனக் குறிப்பிட்டிருக்க, இரண்டாம் இராசேந்திரன் கரிகாலசோழன் எனக் குறிப்பிடும் காரணத்தை அடிக்குறிப்பு 5-இல் காண்க.

இலங்கையற் கிறைவனாக அதாவது இலங்கேசுவரனாகப் பதவி வகித்த கரிகாலசோழனாகிய வீரசோழனே வீரராசேந்திரன் என்ற அபிடேகப் பெயர் பெற்றுச் சோழ மாமன்னன் ஆனான். இவனுக்குக் கரிகாலசோழன், வீரசோழன் ஆகிய பெயர்கள் இருந்ததை இவன் கல்வெட்டுக்களால் அறியலாம்.

வீரராசேந்திரன் இலங்கையில் ஆட்சி செய்த பதவியை, மூத்த தமையன் இராசாதிராசன், இலங்கையற் கிறைவன் என்றும், இளைய தமையன் இராசேந்திரன் கரிகால சோழன்[5] என்றும் குறிப்பிடு கின்றனர். எனவே இராசாதிராசன் காலப் பட்டியலில்,

மீனவனாக—இரண்டாம் இராசேந்திரன், கங்கனாக—மும்முடி சோழன், இலங்கையற்கிறைவனாக—வீரசோழன், பல்லவனாக-மதுராந்தகன் ஆகியோர் பதவி வகித்திருந்தனர் எனக்கொள்ளலாம்.

இராசாதிராசனுக்குப் பின்னர் இரண்டாம் இராசேந்திரன் பதவி வகித்ததுபோல, அவனுக்குப் பின்னர் மும்முடிச் சோழனல்லவா சோழப் பேரரசன் ஆகியிருத்தல் வேண்டும். வீரசோழனாகிய வீர

ராசேந்திரன் எப்படிச் சோழப் பேரரசன் ஆனான் என்ற வினா எழும்.

இரண்டாம் இராசேந்திர சோழன் காலத்தில் பட்டத்து இளவரசன் மும்முடிச் சோழனாகிய சோழபாண்டியன் ஆவான். இவனேதான் அபிடேகம் பெறும்போது இராசமகேந்திரன் ஆனான். இந்த இராசமகேந்திரன்தான் கங்கவாடிப் போரில் உயிர் துறந்தவன்[6] என்பதற்கெல்லாம் கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. ஆகையால்தான் இளவரசனாக இருக்கும்போதே இராச மகேந்திரன் இறந்துவிட்டதால் வீரசோழனாகிய வீரராசேந்திரன் சோழப்பேரரசன் ஆனான் என்பது தெளிவாகும்.

ஆக இராசாதிராசன் குறிப்பிடும் இலங்கையற்கிறைவன் வீர சோழனாகிய வீரராசேந்திரனே. இவனது கல்வெட்டே இலங்கை யிலுள்ள காந்தளாயிற் சோழலங்கேசுவரன் கல்வெட்டு என்பது உறுதியாகிறது.

மேலும் இலங்கையிலுள்ள இரண்டாம் இராசேந்திரனின் 15-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று அபயாஸ்ரய வளநாட்டைக் குறிக்கிறது.[7] அபயாஸ்ரயன் என்ற பெயரைச் சோழ மன்னர்கள் இருவர் மட்டுமே பெற்றிருந்தனர்.[8] ஒருவன் வீர ராசேந்திரன், மற்றவன் முதலாம் குலோத்துங்கன். இருவரில் முதலாம் குலோத்துங்கன் இலங்கையை வென்றானே தவிர, ஆட்சி செய்யவில்லை. இலங்கை மன்னன் விஜயபாகுவின் தங்கை மித்தா வின் மகன் மானாபரணனுக்குத் தன்மகள் சுத்தமல்லியை மணம் செய்து கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டான். எனவே இந்த அபயாஸ்ரய வளநாடு முதலாம் குலோத்துங்கன் பெயரில் அமைந் திருக்க முடியாது என்பதால் உறுதியாக இலங்கையில் ஆட்சிபுரிந்த வீரராசேந்திரன் பெயரிலேயே அமைந்திருக்கவேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இனி, சோழ இலங்கேசுவரனின் காந்தளாயிற் கல்வெட்டிற்கு வருவோம். இதில்

> "யாண்டு பத்தாவது . . . . இய்யாட்டை
> கும்பநாயற்று பூர்வ பட்சத்து துவாதசியும்
> செவ்வாய் கிழமையும் பெற்ற ஆயில்யத்து
> நான்றிரவு"

கூட்டம் நடைபெற்றதாகக் காணப்படுகிறது.

இந்த வானியல் குறிப்பை ஆய்ந்த குடந்தை திரு. என். சேது ராமன் அவர்கள், இக்கல்வெட்டு கி.பி. 1047-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதி திங்கட் கிழமையைச் சேர்ந்தது எனக் கூறி யுள்ளார்.[10]

ஆக சோழலங்கேசுவரன் முடிசூடிய ஆண்டு கி.பி. 1038-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் என்பது தெரிய வருகிறது. ஆகவே இந்த சோழஇலங்கேசுரன் இராசாதிராசன் காலத்திலல்ல; தந்தை முதலாம் இராசேந்திரனின் காலத்திலேயே சோழலங்கேசுவரனாகப் பொறுப் பேற்றிருக்கிறான் என்பதும் தெரிய வருகிறது.

யோகி மல்லவரம், கன்னியாகுமரி, திருப்பனந்தாள் ஆகிய ஊர் களில் உள்ள வீரராசேந்திரனின் கல்வெட்டுக்கள் அவனை வீர சோழன் என்றும் கரிகால சோழன் என்றும் குறிப்பிடுகின்றன.

எனவே, இலங்கையற் கிறைவனாக முதலாம் இராசாதிராசன் காலத்தில் மட்டும் அல்ல, அவனுக்கு முன்பும் பின்பும் தொடர்ந்து அனுப்பப்பட்டிருக்கின்றனர் என்பது தெரிய வருகிறது. சோழ இலங்கேசுவரன் எப்போது முடி சூடினான் எனத் தெரியவில்லை என்று திரு. இந்திரபாலா அவர்கள் எழுப்பிய கேள்விக்கும் விடை கிடைத்து விட்டது.

முதலாம் இராசேந்திரன் இலங்கையைக் கைப்பற்றியது கி.பி. 1017-ஆம் ஆண்டு. சோழஇலங்கேசுவரனாக வீரசோழனை நியமித்தது கி.பி. 1038-ஆம் ஆண்டில். எனவே இவ்விடைப்பட்ட காலத்தில் முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டுக்கள் இலங்கையில் கிடைக்கின்றன.

இரண்டாம் இராசேந்திர சோழன் காலம் வரையிலும் வீர சோழனே இலங்கைக்குப் பொறுப்பாளனாக இருந்தான் என்றாலும், இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் சாளுக்கியருக்கும் சோழருக்கும் இடைவிடாத போர் நடைபெற்றதால், வீரசோழனாகிய வீர ராசேந்திரனும் தன் அண்ணன் தம்பியரோடு கங்கவாடி, வேங்கி, கொப்பம், முடக்காறு ஆகிய இடங்களில் நடந்த போரில் பங்கு பெற்றிருந்தான். எனவே இலங்கை சோழப் பேரரசனின் நேரடிப் பார்வையில் இருந்தது என்பதற்கு ஆதாரமாக இரண்டாம் இராசேந்திரனின் இலங்கை சங்கிலி கந்தவர் கல்வெட்டையும் மற்றுமிரு கல்வெட்டையும் சான்று காட்டலாம்.

வீரராசேந்திரனின் சகோதரர்கள் முதலாம் இராசாதிராசன், இராசமகேந்திரன், மதுராந்தகன், பராந்தகன் போன்ற பலர் சாளுக்கியர்களுடன் நடந்த போரில் உயிர் துறந்து விட்டனர். ஆதலால் சாளுக்கிய நாட்டை முற்றிலும் வென்றுவிடும் நோக்கத்தில் முழுதும் போரில் ஈடுபட்டிருந்தான் எனத் தெரிகிறது. அதனால்தான் வீரராசேந்திரன் தன் மெய்க்கீர்த்தியில் 'தந்நுடன் பிறந்த முந்நவர் விரதமுடித்து வீரசிம்மாசனத்து வீற்றிருந்த' செய்தியைக் குறிப்பிடுகிறான். இத்தகைய மாபெரும் வீரனே வீரராசேந்திரன். அவனே சோழ இலங்கேச்வரனாக பதவி வகித்திருந்தான் என்பது தெளிவாகிறது.

அடிக்குறிப்புக்கள்

1 K. A. Nilakantasastri, The Cholas, page No. 197.

2 K. Indra Pala-காந்தளாயிற் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கல்வெட்டு 1972

3 N. Sethuraman, The Cholas.

4 Ibid

5 இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் இலங்கையை ஆளச் செய்த சோழ இளவரசனை-கரிகால சோழன் என அழைத்தான்' சங்க காலக் கரிகால சோழன் காவிரியின் இருமருங்கும் கரை கட்டும்போது அவனால் தோற் கடிக்கப்பட்ட திரிலோசன பல்லவனையும் இன்னும் சில மன்னர்களையும் இலங்கைக் கூலிகளையும் சேர்த்து மிக நீண்ட காவிரிக்கு இரு கரையையும் உருவாக்கச் செய்தான் என்பதால், கரிகால சோழன் இலங்கையையும் வென்றிருந்த செய்தி தெரிகிறது. (Ep. Indica vol XI page 340) அதனால் தான் இலங்கையை ஆளச் சென்ற சோழ இளவரசன் கரிகாலன் என அழைக்கப்பட்டான் போலும்.

6 N. Sethuraman, The Cholas.

7 Epi. Tamilica-Article No 9, Fourteen cola inscriptions from the Ancient Rajaraja Perumpalli (Velgam Vehera Natanar Koil) at Periyakulam.

8 K. A. Nilakanta Sastri, The colas, page 293.

9 (i) S.I.I. vol, XVII, No. 301
(ii) A.R.E. No. 74/1931-32
(iii) T.A.S. vol. VIII, part I, page 149

10 "This was a day of Dwadasi. It was current upto. 41 of the day. It was current from Sunrise 6 a.m. to 3.50 p.m. The day was a day of Dwadasi On that Dwadasi Tuesday star Ayilyam must be current in the night. Actually star Ayilyam commenced at. 68 of the day. It means that it commence at 10.19 p.m. night when the members could have assembled. There will be moon light and 10.19 was cool night. This is the correct date" –N. Sethuraman.

சோழர் காலத்தில் வணிகச் சங்கங்கள்

தி. சுப்பிரமணியன்
காப்பாட்சியர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, கோயம்புத்தூர்

சோழர் காலத்தில் பல சபைகள் தன்னிச்சையாகச் செயல் பட்டுள்ளன. அவையாவன: ஊர், சபை, நகரம் முதலியனவாகும். இவைகள் அரசனின் அங்கீகாரம் பெற்று அந்தப் பிரிவிற்குத் தேவையான நடைமுறைகளை வகுத்து எல்லாவகை நலன் களையும் பெற்று வந்துள்ளன. இந்தச் சபைகள் சோழர் காலத்தில் உயர்ந்த நிலையை அடைந்தன. அதற்குப்பின் செல் வாக்கை இழக்கத் தொடங்கிவிட்டன. மற்ற சபைகளைக் காட்டி லும், வணிகச் சபைகளே நீண்ட காலம் செல்வாக்குடன் இருந் துள்ளன.

ச்ங்க காலந்தொட்டே வணிகர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று வியாபாரம் செய்து வந்தனர். இத்தகைய வியாபாரக் கூட் டங்களை இலக்கியங்கள் 'வணிகச் சாத்து' என்று அழைக்கின்றன. வணிகக் கூட்டங்களைக் குறிக்கக் கல்வெட்டுக்களில் இந்தச் சொல் அதிகம் கையாளப்படவில்லை. பிரான்மலைக் கல்வெட்டில் மட்டும் 'ஏறு சாத்து, இறங்கு சாத்து' என்று குறிப்பிடப்படுகின்றது.[1] வட மொழியில் வணிகக் கூட்டங்களை 'ஸ்ரினி' (Sreni) என்று கூறுவர்.[2] அதாவது 'ஸ்ரிஸ்தி' என்றால் வணிகர் என்று பொருள். இதையே ஐரோப்பிய நாடுகள் 'கில்டு' (Guild) என்று அழைக்கின்றன. வணி கர்களுடைய அமைப்பைக் குறிக்கப் பொதுவான சொல் இல்லை எனலாம். ஆகவே 'வணிகர்கள் சங்கம்' என்று எடுத்துக்கொள்ள லாம். சங்கங்கள் வணிகர்களுக்கு இன்றியமையாததாகத் திகழ்ந் துள்ளன.

வணிக சங்கங்கள்

வணிகர்களிடையே சங்கங்கள் தோன்றப் பல காரணங்கள் இருந்தன. இவர்கள் வியாபாரத்தின் பொருட்டு மற்ற இடங்களுக்குச் செல்லும்பொழுது காடுகளையும், மலைப்பகுதிகளையும் கடந்து சென்றனர், ஆறலைக்கள்வர்கள், காட்டு மிருகங்கள் போன்றவற் றின் இன்னல்கள் அதிகம் இருந்ததை இலக்கியங்கள் விளக்குகின்றன.

வணிகர்கள் இரவு நேரங்களில் தங்கி இருக்கும்பொழுது தங்களுடைய வீரதீரங்களைப்பற்றிப் பேசிக்கொள்வார்கள். இவ்வாறு பேசுவதால், அதனைக் கேட்ட திருடர்கள் பயந்து ஓடிவிடுவர்.[3] வணிகர்களின் தொகை பெருகியதால் வியாபாரம் நேர்மையாகவும், முறையாகவும் நடைபெறவேண்டுமென எண்ணினர். இதையே கல்வெட்டுக்கள் 'சமய தன்மம் இனிது நடத்துகின்ற' என்று கூறுகின்றது.[4] அதாவது, வணிகச் சங்கங்கள் வகுத்த சமய தர்மத்தின்படி வியாபாரம் செய்கின்ற வணிகர்கள் என்பது பொருள். ஆகவே, வணிகர்கள் நேர்மையைக் கடைப்பிடிக்கவும், தங்களுக்குப் பெருவழிகளில் வருகின்ற இடர்ப்பாடுகளைக் களையவும் சிறிய வணிகர்கள் பெரிய வணிகர்களுடன் சேர்ந்து சென்றனர். தமிழ்நாட்டில் இத்தகைய நிலைகளே 'சங்கங்கள்' தோன்றக் காரணமாகும்.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மாதவா என்ற சட்டவல்லுனர்[5] 'கிராமத்தில் நடைபெறுகின்ற நல்ல செயல்களை நடைமுறைப்படுத்த, கெட்ட நிகமத்தில் உள்ளவர்களும் ஒன்றாக இணைந்து செயல்பட்டால்தான் முடியும் என்கின்ற காரணத்தால் இத்தகைய சங்கங்கள் ஏற்பட்டன' என்று கூறுகின்றார். வட இந்தியாவில் மௌரியர் காலத்தில் இருந்தே இந்தச் சங்கங்கள் காணப்படுகின்றன. பொருட்களைத் தனித்து விற்பனை செய்ய இயலாத காரணத்தால் வணிகர்கள் ஒன்றாகச் சேர்ந்துக்கொண்டனர். கைவினைஞர்கள் தங்களுடைய அந்தஸ்தை நிலைநிறுத்துவதற்கு வணிகர்கள் சங்கங்களுடன் சேர்ந்துகொண்டனர்.[6] ஐரோப்பிய நாடுகளிலும் சங்கங்கள் இருந்தன. அங்கு திருடர்களின் கொடுமைகளைத் தாங்காமலும், வளர்கின்ற நகரத்தின் தேவையை பூர்த்தி செய்யும்பொருட்டும்,[7] வேறுசில இடங்களில் வேலையாட்களின் பற்றாக்குறையினால் ஒருவகையான வேலையாட்களைத் தனக்குள் அடக்கி வைத்துக்கொள்ள முயன்றனர். பொருட்களை விற்பனை செய்யப் பொது இடங்கள் தேவைப்பட்டதாலும், கைவினைஞர்கள் வியாபாரிகளாக மாறியதாலும் சங்கங்கள் தோன்றின என்று கூறப்படுகின்றது[8].

சங்கங்கள் முதலில் வணிகர்களிடம் மட்டுமே காணப்பட்டன. மத்திய காலத்தில் இவை வணிக சங்கங்கள், கைவினைஞர் சங்கங்கள்[9] என இரண்டாகப் பிரிந்தன. கைவினைஞர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களைத் தாங்களே விற்பனை செய்ய வேண்டியிருந்தது. இவர்கள் வணிகர்களுடன் போட்டியிட்டுப் பொருளை விற்பனை செய்தனர். இவர்களால் தனி மனிதனாக வணிக கூட்டங்களுடன் வியாபாரம் செய்ய இயலவில்லை. கைவினைஞர்கள்

சமூகத்தில் கீழ்த்தரமாக மதிக்கப்பட்டனர். அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்கவில்லை. எனவே, தங்களுடைய உரிமைகளைப் பெறவேண்டி, உற்பத்திப் பொருள்களை நியாயமான விலைக்கு விற்க வேண்டிச் சங்கங்களை அமைத்துக்கொண்டனர். முதலாம் இராசராசனின் தஞ்சைக் கல்வெட்டில்[10] ஆடு மேய்க்கின்ற இடையர்கள் தங்களுக்குள் ஒரு சங்கம் வைத்திருந்தனர் எனக் குறிக்கப்படுகிறது. அந்தச் சங்கத்தைச் சேர்ந்த 'ஏரன் சாத்தன்' என்பவன் கோயிலுக்கு வேண்டியவைகளைச் சேர்த்துக் கொடுத்ததாகத் தெரிகின்றது. இத்தகைய சங்கங்களை எல்லாக் கைவினைஞர்களும் வைத்திருந்தனர்.

சங்கங்கள் முதலில் சாதி அடிப்படையில் இருந்தன.[11] பரம்பரை பரம்பரையாக ஒரு தொழிலை, ஒரு குறிப்பிட்ட சாதியினரே செய்து வந்தனர். இவர்களுடைய சங்கத்தில் மற்றவர்கள் இருந்ததாகத் தெரியவில்லை. விஞ்ஞானீஸ்வரர், 'ஒருதொழிலைச் செய்கின்ற எல்லாவகையான சாதியினரும் ஒரு தொழில் சங்கத்தில் இருக்கலாம். ஆனால், பலதரப்பட்ட வர்ணத்தைச் [varnas] சார்ந்தவர்கள் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள்'[12] என்று கூறுகின்றார். சோழர் காலத்தில் பல சாதியினர் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்துள்ளனர். இதற்கு உதாரணமாக 'ரதக்காரர்கள், கீழ்கலனை, அஞ்சுவண்ணத்தார்' போன்றவர்களைக் கூறலாம்.[13] முதலாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டு பல தொழில் செய்த கைவினைஞர்களை ஒன்றாகச் சேர்த்து 'ரதக்காரர்கள்' என்று அழைக்கிறது. இதில் தச்சர் கொல்லர், மணிவினைஞர், தட்டார், ஓவியர், வண்ண கம்மியர் போன்ற தொழில்களைச் செய்பவர்கள் இருந்தனர். இவர்கள் 'அறுவகைத்தொழில் நால்வகை ரதக்காரர்' என்று குறிக்கப்படுகின்றனர்.[14] இவர்களுக்கு முதலைக்கொடி சின்னமாக இருந்தது. அக்கசாலையையும் தங்களுடைய ஆளுகையின்கீழ் வைத்திருந்தனர். பிராமணர்களும், சத்திரியர்களும், வைசியர்களும் தேவையான பொருட்களை ரதக்காரர்களிடம் இருந்தே பெற்றனர். சோழர் காலத்தில் ஏற்பட்ட கலைச் சிறப்பு வாய்ந்த சிற்பங்களை வடித்துக்கொடுத்த பெருமை இவர்களையே சாரும்.

சோழ நிகமம்

வணிகர்கள் வாழ்ந்த இடம் 'நிவேஷ்' என்று அழைக்கப்படுகின்றது.[15] இந்தச்சொல் நாளடைவில் 'நெகமா' என்று மறுவி வழங்கியது. மௌரியர் காலத்திய முத்திரையிட்ட காசு ஒன்றில் ஒரு புறம் 'நெகமா' என்று பொறிக்கப்பட்டுள்ளது.[16] நெகமா என்று இருப்பதால், இந்தக் காசு வணிகர்களால் வெளியிடப்பட்டது

எனலாம். பிருஹத்தல்ப சூத்திர பாஷ்யம் என்ற நூல் இருவகையான நிகமங்கள் இருந்ததைக் கூறுகின்றது.[17] ஒன்று சரக்குகளைச் சேர்த்து வைக்குமிடம். மற்றொன்று சரக்குகளைச் சேர்த்து வைக்காத இடம். முதலாவது இடத்தில், அடமானம் மூலம் வியாபாரம் நடைபெற்றது. இரண்டாவது இடத்தில், வட்டிக்கு சரக்குகளைக் கொடுப்பதைத் தவிர மற்ற எல்லாவகையான வியாபாரமும் நடைபெற்றது. இதே காலத்தில் தமிழ்நாட்டிலும் இத்தகைய நிகமங்கள் இருந்துள்ளன. மீனாட்சிபுரம் தமிழி கல்வெட்டில் நெகமம் என்ற சொல் வருகின்றது.[18] இது வெள்ளறை நிகமத்தில் உள்ள வணிகர்கள் செய்த தானம் பற்றியது. காலம் கி.மு. 2,3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கூறுவர்.[19] இதைப் போன்றே சோழர் காலத்திலும் ஒரு நிகமம் இருந்தது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சென்னை அருங்காட்சியகச் செப்பேட்டில் 'சோழ நிகமம்'[20] இருந்ததைப் பற்றியும், இங்குள்ள வணிகர்கள் கோயிலுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்ததைப்பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

வணிகக் கல்வெட்டுக்கள்

சோழர் காலத்திய வணிகர்களின் கல்வெட்டுக்கள் சில தனிப் பலகைக் கல்லில் கிடைக்கின்றன. இந்தக் கல்லின் முன்பக்கம் சில சின்னங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.[21] அவை மகிசாசூரமர்தனி, குடை, சாமரம், கத்தி, சுருள், கொடுவாள், சூலம் மற்றும் பல யூகிக்க முடியாத உருவங்களைக் காணலாம். இந்தக் கருவிகள் வணிக வீரர்கள் வைத்திருந்த படைக் கருவிகளாக இருக்கலாம். வணிகர்களுக்குத் தனிக்குடை இருந்தது என்பதை இதனால் அறிகிறோம். இந்தச் சின்னங்களுக்குக் கீழ் கல்வெட்டு காணப்படுகின்றது. நானாதேசி, நகரம் எறிவீரர், முனைவீரர், கொங்காள்வர், மணிக்கிராமத்தார், வளஞ்சியர் போன்றவர்களும் மற்றும் பலரும் வணிகச் சங்கங்கள் வைத்திருந்தனர்.

அஞ்ஞூற்றுவர் வணிகர்களிலே சிறந்து விளங்கியவர்கள். இவர்கள் 'அய்யம் பொழில்' என்ற இடத்தைத் தலைமை இடமாகக் கொண்டு பல இடங்களுக்கும் சென்று வியாபாரம் செய்துள்ளனர். இவர்களுடைய கல்வெட்டு மத்திய இந்தியா, கருநாடகம், தமிழகம், ஆந்திரம், கேரளம் போன்ற பகுதிகளில் மட்டுமின்றி இலங்கை, மலேசியா, சுமத்திரா போன்ற நாடுகளிலும் கிடைக்கின்றன. அவர்கள் திரிந்து சென்று வியாபாரம் செய்கின்றவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்கின்றனர்.[22] இவர்களுக்கென்றே கல்வெட்டில் தனி மெய்க்கீர்த்தி உண்டு.

பல வணிகர்கள் நகரங்களுடன் சேர்ந்த ஒரு பகுதியில் வாழ்ந்து வந்தனர். சாலிய நகரத்தார், சங்கரப்பாடி நகரத்தார், வாணிய நகரத்தார், பெரு நகரத்தார், பாரக நகரத்தார் மற்றும் பலர் இந்த நகரத்தார் சங்கத்தைச் சார்ந்தவர்களே. சாலிய நகரத்தார் துணி, நூல் வியாபாரிகள் ஆவர். சோழர் காலத்தில் பல இடங்களில் இவர்களைப்பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. சிதம்பரத்தில் இவர்களுக்குத் தனி வீதி ஒன்று இருந்தது. சோழர்களுக்கென்றே தனியான ஒரு சாலியப் பிரிவினர் இருந்தனர். அவர்கள் 'சோழ சாலியர்' என்று பெயரிட்டு அழைக்கப்பட்டனர்.[23] சங்கரப்பாடியார் பற்றிய கருத்துக்கள் வேறுபாடானவை. 'சங்கர என்பதற்குப் பலவகையான சாதியைச் சார்ந்தவர் என்றும், பாடி என்றால் குடியிருப்பு என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது.[24] 'செக்கு என்பது 'சக்கு' சக்கரம்-சக்கரபாடி, சங்கரப்பாடி என்று மறுவி வந்ததாகவும் கூறப்படுகின்றது.[25] இவர்கள் எண்ணெய் வியாபாரிகள் ஆவர். சென்னை அருங்காட்சியகச் செப்பேடு சங்கரப்பாடியார்களுக்கென்று இருபத்தைந்து வீடுகள் இருந்ததாகக் கூறுகின்றது. உத்தரமேரூர்க் கல்வெட்டிலும் இவர்களுடைய பெயர்கள் இடம் பெற்றிருக்கிறது. வாணிய நகரத்தார்கள் இவர்களிடமிருந்து சிறிது மாறுபட்டவர்கள். இவர்களும் எண்ணெய் வியாபாரிகள் ஆவர். வாணிய நகரத்தார்கள் சங்கரப்பாடி நகரத்தார் பெற்றிருந்த மதிப்பை பெறவில்லை. நகரத்தின் நடைமுறைகளைப்பற்றி கவனிக்கும் வாரியம் நகரவாரியம் எனப்படும். தில்லைஸ்தானம் கல்வெட்டு[26] நகர வாரியத்தில் உள்ளவர்கள், நகர வாரியம் நடத்துகின்ற கூட்டத்தில் கலந்துக்கொள்ளவேண்டும் என்று கூறுகின்றது. திருச்சிராப்பள்ளி, வாலிகண்டபுரம் கல்வெட்டில் 'நகரக்காணி' பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. எனவே, நகரத்தாருக்கு நிலக் காணியாட்சியும் இருந்தது தெரியவருகின்றது. மணிக்கிராமத்தார் சோழர் காலத்தின் முற்பகுதியில் இருந்து வியாபாரம் செய்து வந்துள்ளனர். பல கொடும்பாளூர் மணிக்கிராமத்தார், உறையூர் மணிகிராமத்தார், வாலிகண்டபுர மணிக்கிராமத்தார் போன்றோர் பல இடங்களில் காணப்படுகின்றனர். இவர்கள் உள்நாட்டில் மட்டுமின்றி வெளி இடங்களிலும் வியாபாரம் செய்து வந்துள்ளனர்.

வணிக வீரர்கள்

வணிகர் தங்களுடைய பொருட்களை பாதுகாக்கவும், வழித்துணையாக வருவதற்கும் வீரர்களை வைத்திருந்தனர். இவர்கள் வணிகர்களுடன் சேர்ந்தே குறிக்கப்படுகின்றனர். செட்டிபுத்திரர்கள், முனைவீரர்கள் எறிவீரர்கள், கொங்காள்வார் மற்றும் பலர்

கல்வெட்டுக்களில் வருகின்றனர். கொங்குவால் என்பவர்கள் கத்தியை கையில் வைத்திருக்கும் கொங்கு நாட்டைச் சார்ந்த வீரர்கள். இவர்கள் வணிகர்களுடைய பாதுகாவலுக்கு வணிகர்களுடன் செல்பவர்கள் என்று கூறலாம்.[27] எறிவீரர்கள் என்பவர்களும் ஒரு வகையான வணிகர்கள். 'எறி' என்றால் 'வழி' என்று பொருள் உள்ளது. ஆகவே 'வழியில் உள்ள வீரர்கள்'[28] என்று பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த வீரர்கள் வணிக சங்கத்தின் ஒரு அங்கமாவர்.

சங்கங்களின் நெறிமுறைகள்

சங்கங்கள் தங்களுக்குள் பல நெறிமுறைகளை வைத்திருந்தது என்பதற்கு வெளிப்படையாகச் சான்றுகள் இல்லையென்றாலும், சில கல்வெட்டுக்களில் வருகிற நடைமுறைகளைப் பற்றி ஆராயும் போது இவை இருந்திருக்க வேண்டும் என்று யூகிக்ச முடிகிறது. சங்கங்களின் நடைமுறைகளை மீறி நடப்பவர் தண்டிக்கப்பட்டனர்.[29] இவர்கள் அந்தச் சங்கத்தில் இருந்து நீக்கப்படுவதோடு நாட்டிலிருந்தும் நீக்கப்படுவார்கள். அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டவர்கள் மற்ற வணிகச் சங்கங்களுடன் சேர்த்து விடாமல் பார்த்துக் கொள்வார்கள்.

சோழர் காலத்தில் இத்தகைய நிகழ்ச்சி ஒன்று தென் ஆற்காடு மாவட்டம், நல்லூரில் கிடைத்த கல்வெட்டில் தெரிய வருகின்றது.[30] அங்கு நிலவிய பஞ்சத்தால் மக்கள் தங்களுடைய வீட்டு மனைகளை விற்று விட்டு, வெளி இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுது சாதி சபையினர் 25 புடவைகளை இவர்களுக்கு தானமாக கொடுத்து போகாமல் தடுத்து விட்டனர். அத்துடன் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் வெளியாட்களுக்கு விற்பனை செய்யக் கூடாது என்றும், இதை மீறி நடப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறுகிறது. தண்டனையாக 65 கழஞ்சு பொன் கொடுக்க வேண்டும் என்றும், அவர்கள் இந்தச் சபையில் இருப்பதற்கான உரிமையை இழக்க வேண்டும் என்றும் காணப்படுகின்றது. இரண்டாம் இராசேந்திரனின் காலத்தைச் சார்ந்த நார்த்தாமலைக் கல்வெட்டில்[31] தேவதான நிலத்தை நகரத்தார் சங்கம் பகிர்ந்து கொடுத்து நடைமுறைகளைப் பார்க்க பல அதிகாரிகளை நியமனம் செய்துள்ளனர் எனப் குறிக்கப்படுகிறது. வீரசோழப் பேரங்காடியை மதுராந்தக நகரத்தார் சங்கம் மேற்பார்வை செய்துள்ளது.[32] இதை மேற்பார்வை செய்தவர்கள் வியாபாரி பட்டன், இரண்டு செட்டிகள், மதுராந்தக நகரத்தார் சங்கத்தைச் சார்ந்தவர் ஆவர். இவர்களுடைய சங்கக் கூட்டங்கள் பொது இடங்

களிலும், கோயில்களிலும் நடைபெற்றுள்ளன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல கொங்குநாட்டுக் கல்வெட்டுக்களில் கம்மாளர்கள் தங்களுக்குச் சில உரிமைகள் வேண்டும் என்று கோரியுள்ளனர். திருமண காலத்தில் இரட்டைச் சங்கு ஊதிக்கொள்ளும் உரிமை, செருப்பு அணிந்துகொள்ளும் உரிமை போன்ற அடிப்படையான உரிமைகளைப் பெற்றுள்ளனர்.[33] இவற்றையெல்லாம் நோக்குங்கால் இவர்களுக்குள் ஒரு அமைப்பு இருந்தது என்பதையும், அந்த அமைப்பே 'சங்கம்' என்பதையும் உறுதியாகக் கூறலாம்.

சங்கங்களும், அரசியலும்

சமூகத்தில் வணிகர்கள் அரசனுக்கு அடுத்த இடத்தில் வைத்து மதிக்கப்பட்டனர். வணிகர்களுக்காக எழுந்த சில காப்பியங்களும் உள்ளன. சிலப்பதிகாரம் இவர்களை 'அரசர் பின்னோர்' என்று அழைக்கின்றது,[34] இவர்கள் அரியணை ஏறும் வாய்ப்புப் பெற்றவர் என்பதைப் பெரியபுராணமும்[35] எடுத்தியம்புகின்றது. கருநாடர் மன்னன் வாரிசின்றி இறந்தவுடன், மூர்த்தியார் என்ற வணிகனுக்கு முடிசூட்டி அரசுரிமை அளிக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்தில் முதலாம் குலோத்துங்கன் அரியணையைப் பெற உதவியுள்ளான்.

வலங்கை, இடங்கைப் பிரிவுகள் சோழர் காலத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளது. இடங்கைப் பிரிவில் பெரும்பாலும் வணிகர்களும், கைவினைஞர்களும் இருந்தனர். கி.பி. 1218-ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டில்[36] இடங்கை 98 பிரிவில் உள்ளவர்கள் ஒரு தாய் மக்களாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றது. 'அஞ்சுவண்ணத்தார்' இடங்கைப் பிரிவின் முக்கியமான கூறாக கருதப்படுகின்றது.[37] இந்த பிரிவினர் வரி கொடுமையைத் தாங்காமல் பல இடங்களுக்கு வேலை தேடிச் சென்றனர் என்பதைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. திருச்சி மாவட்டம், ஆடுதுறையில் உள்ள கல்வெட்டு வலங்கைப் பிரிவினர் அரசாங்க அதிகாரிகளுடன் சேர்ந்துகொண்டு இடங்கை 98 பிரிவினர்களுக்கு இழைத்த அநீதியைக் கூறுகிறது.[38]

ஸ்ரீரங்கம் கல்வெட்டில் வலங்கை, இடங்கை ஆகிய பிரிவினருக்கு இடையே கலகம் ஏற்பட்டதாக அறிகின்றோம்.[39] வணிகச் சங்கங்கள் வரிச்சுமையைத் தாங்க முடியாமலும், தங்களுடைய சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளவும் இந்தக் குழப்பம் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்தக் காலத்தில் வணிகர்களுடைய படைகளுக்கும், அரசனுடைய படைகளுக்கும் இடையே சண்டை நடந்தது. இந்தக் கலகத்தை முதலாம் குலோத்துங்கன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். ஆகவே, இந்தக் காலத்தில் அதிராசேந்திரன் உயிர்

துறந்தான். இவனை அடுத்து, குலோத்துங்கன் அரசாட்சியைப் பெற்றான்.[40] கலகத்திற்குச் சாதகமாக இருந்த வணிகர்களுக்குக் கைமாறாக 'சங்கம்' என்ற வரியை வாங்குவதைத் தவிர்த்து, அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றான்.

சித்தரமேழிப் பெரிய நாட்டார்

12-ஆம் நூற்றாண்டில் சித்திரமேழிப் பெரியநாட்டார் சோழ நாட்டில் மிகுந்து காணப்பட்டனர். இவர்கள் தங்களுக்கென்று தனிக் கொடி (சித்திரமேழி) வைத்திருந்தனர். இவர்களுடைய தொழில் விவசாயம் ஆகும். கொங்கு நாட்டைச் சேர்ந்த விசயமங்கலம் கல்வெட்டில், சித்திரமேழி விண்ணகரத்தாழ்வார் கோயில் இடங்கைப்பிரிவினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறுகின்றது.[41] பிரான்மலைக் கல்வெட்டிலும் சித்திரமேழிப் பெரிய நாட்டாருக்கும், வணிகர்களுக்கும் தொடர்பு இருந்தது தெரிகின்றது.[42] ஆகவே, இவர்கள் பிற்காலத்தில் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்க வேண்டி, வணிகர்களுடன் வர்த்தக ஒப்பந்தங்கள் வைத்திருந்தனர் எனத் தெளிவாகத் தெரிகின்றது.

சோழர் காலத்தில் பல நகரங்கள் உருவாவதற்கு வணிகச் சங்கங்களும், கைவினைஞர் சங்கங்களும் உதவியுள்ளன. பெரும்பாலும் ஒவ்வொரு நாட்டுப் பிரிவிலும் ஒரு நகரம் இருந்துள்ளது. சிதம்பரம், சோழர் காலத்தில் சிறப்படைந்த ஒரு நகரம். இதை நகரமாக்கப் பல கைவினைஞர்களும், வியாபாரிகளும் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.[43] அவ்வாறு குடியமர்த்தப்பட்டவர்கள் வியாபாரிகள், வெள்ளாளர், சங்கரப்பாடியர், சாலியர், பட்டணவர் இவர்களுடன் தச்சர், கொல்லர், தட்டார், கோலியர் ஆகியோர்களும் ஆவர். இவர்களுக்கென்று தனித்தனி வீதிகள் அமைத்து குடியமர்த்தினர். திருவாரூர் நகரமும் மூன்று பெரிய வீதிகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. சாலிய நகரத்தார் வாழ்ந்த வீதியை செயசிங்க குலகாலப் பெருந் தெருவு என்றும், ஆடு மேய்க்கின்ற இடையர் வாழ்ந்த பகுதியைத் திரிபுவன சுந்தரப் பெருந்தெருவு என்றும், சிற்பிகளும் கைவினைஞர்களும் வாழ்ந்த பகுதியை நாற்பத்தெண்ணாயிரம் பெருந்தெருவு என்றும் பெயர் வைத்துள்ளனர். தஞ்சையில் நகரத்தார் தெருக்கள் இருந்துள்ளன.[44] அவை நித்தவினோதப் பெருந்தெருவில் நகரத்தார், மும்முடி சோழப் பெருந்தெருவில் நகரத்தார், திரிபுவன மாதேவிப் பேரங்காடி நகரத்தார் முதலியன.

சங்க காலத்திலிருந்து காணப்பட்ட வணிகச் சங்கங்கள் சோழர் காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. இவைகள்

உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம் ஆகியவற்றைச் செய்து சோழர்களின் செல்வாக்கை பெருக்கின. இந்த சங்கங்கள் சோழர் ஆட்சிக்குப்பின் வலிமை இழக்கத் தொடங்கின. எனினும் விசயநகர காலத்திலும் சில இடங்களில் சங்கங்கள் நிலைபெற்று இருந்தன. சங்கங்கள் கைவினைஞர்களின் சமூக அந்தஸ்தை உயர்த்த பாடுபட்டதுடன், தற்காலத் தொழிற் சங்கங்கள் ஏற்படவும் வழி வகுத்துள்ளன.

அடிக்குறிப்புக்கள்

1 K.V. Subramanya Aiyar, Largest Provincial Organisations in Ancient India, p. 53.
2 A. Appadurai, Economic conditions in Southern India, p.336
3 சுப்பிரமணியம், இந்திய வணிக நெறிகள், தமிழாக்கம் ப. 298.
4 K.V. Subramanya Aiyar, Largest Provincial Organisation in Ancient India.
5 A. Appadurai, Economic Conditions in Southern India. p. 248.
6 Ramilathapar, A History of India, p. 109.
7 The Pre capitalistic Socio Economic Formations, A collection pp. 42-43.
8 The pre capitalistic Socio Economic Formations, A collection, p. 40.
9 T.V. Mahalingam, South Indian Polity, p. 392.
10 S.I.I. vol. III. p. 18.
11 A. Appadurai, Economic Condition in Southern India, p. 357
12 Vijūunesvara The Mita*k*sara, II, p. 30.
13 Burton Stein, Peasant State and Society in Medieval South India, p. 198.
14 K.V. Subramanya Aiyar, Largest Provincial Organisations in Ancient India, pp. 28,29.
15 சுப்பிரமணியம், இந்திய வணிக நெறிகள், பக். 296.
16 Memoriss Series, No. 6, Coins and Early Indian Economy, pp. 170-171.
17 சுப்பிரமணியம், இந்திய வணிக நெறிகள், பக். 296.
18 இரா. நாகசாமி, கல்வெட்டியல், பக். 49,50
19 Iravatham Mahadevan, Tamil Brahmi Inscription, p. 14.
20 S.I.I. vol. III, p. 128.
21 தொல்லியல் கருத்தரங்கு, தொகுதி 1, வீரபட்டணக் கல்.
22 K. Indrapala, Some Medieval Mercantile Communities of South India and Ceylon. p. 30

23 Kenneth R. Hall, Trade and State craft in the age of the Colas. p. 54

24 Ibid.

25 எஸ். வைத்தியநாதன், சங்கரபாடியார், சைவசித்தாந்தம் (இதழ்).

26 Kenneth R. Hall, Trade and State craft in the age of the Colas, pp. 56–7

27 K.A. Nilakanta Sastri, Tamil Merchant Guild in Sumatra, p. 139.

28 Kenneth R. Hall, Trade and State craft in the age of the Colas, p. 143.

29 Imperial Gazetteer, vol. V, p. 101.

30 Kenneth R. Hall, Trade and State craft in the age of the Colas, p. 121.

31 Ibid, pp. 59-60.

32 A.R.E.,395 of 1922.

33 கோவை, பதிவு அலுவலர் கல்வெட்டுப் பதிவேடு.

34 ஆராய்ச்சி, மலர் 1; இதழ் 1, பக். 49.

35 சேக்கிழார், பெரியபுராணம், மூர்த்திநாயனார் புராணம்.

36 Burton Stein, Peasant State and Society in Mediaeval South India, pp. 182-3.

37 Ibid, p. 196.

38 A.R.E. 34 of 1913.

39 S.I.T.I. vol. III, part II, p. 800.

40 Ibid. p. 76.

41 A.R.E. 546 of 1905.

42 K. V. Subramanya Aiyar, Largest Provincial Organisation in Ancient India, p. 60.

43 Kenneth R. Hall, Trade and State craft in the age of the Colas, pp. 52-3.

44 K.A. Nilakanta Sastri, The Colas, pp. 449-50.

தெலுங்குச் சோழர்கள்

ர. சாந்தகுமார்
காப்பாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, குற்றாலம்

தென்னிந்தியாவின் தெலுங்குப் பகுதியை இடைக்காலத்தில் அரசாண்டவர் தெலுங்குச் சோழர்கள். சுமார் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆண்ட புண்ணிய குமாரன் சோழ ராசாவின், மலேபாடு சாசனத்தில் ரேனாண்டு ஏழாயிரம் சீமையை ஆண்ட தெலுங்குச்சோழரின் நான்கு தலைமுறை விளக்கப்பட்டிருக்கிறது. ரேனாண்டின் எல்லை கிறுதோர் என்று பாகிபல்லி[1] கல்வெட்டிலிருந்து அறிகிறோம். இந்த கிறுதோர் வடபெண்ணை ஆற்றின் கிளையான குந்தேறு[2] நதியாக இருக்கலாம் என்று அறிகிறோம். கடப்பை, கர்நூல், அனந்தப்பூர் மாவட்டங்களைக்கொண்டது ரேனாண்டு ஏழாயிரம். உறையூரை ஆண்டவனும், காவிரிக்கு அணை கட்டியவனும், காசியப கோத்திரத்தில் பிறந்தவனுமான கரிகாலனின் மரபினர் என்று இவர்கள் தம்மைச் சொல்லிக் கொண்டார்கள். களப்பிரரின் படையெடுப்பினால் மங்கிய சோழ வம்சத்தின் கிளையினர் பல இடங்களில் குடியேறிச் சிறுசிறு நாடுகளை நிறுவிக்கொண்டனர். இவர்களில் ஒருவர் ரேனாண்டு தெலுங்குச் சோழர்கள்.

மலேபாடு சாசனத்தில் கண்ட முதல் மன்னன் நந்திவர்மன். இவனுக்கு மூன்று குமாரர்கள். அவர்களில் ஒருவனான தனஞ்சய வர்மனின் மகன் சோழ அரசன் விக்கிரமாதித்த சத்தியாதித்தனும், அவன் மகன் புண்ணிய குமாரனும் பல சிறப்புப் பெயர்கள் கொண்டவர்கள்.

சித்தி (சித்த வட்டம்) ஆயிரமும் இச்சீமையோடு சேர்க்கப்பட்டது. இது, பாதாமி சாளுக்கிய மன்னர்களுடன் தொடர்பு கொண்டிருந்தது. இரண்டாம் நந்திவர்ம பல்லவ அரசனின் வேலூர்ப்பாளையச் சாசனத்தில் குறிக்கப்பட்ட குமராங்குச சோழ அரசனும் இந்த வம்சத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம். ரேனாண்டு தெலுங்குச் சோழ வம்சம் வைதும்பரால் வெல்லப்பட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன் மறைந்தது.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் ஜடாசோடனின் புதல்வன் பீமன், இராட்டிரகூட 3-ஆம் கிருஷ்ணனுக்கு சிற்றரசனாக இருந்து பெடக் கல்லு (கர்நூல் மாவட்டம்) நகரத்திலிருந்து கிருஷ்ணா நதிக்குத் தெற்கிலுள்ள சில நாடுகளை ஆண்டு வந்தான். வைதும்ப மன்னன் கண்டதிருநேத்திரனை வென்று, வேங்கி மன்னன் தானார்ணவனையும், அவன் தம்பி விமலாதித்தனையும் கொன்று, காமார்ணவனையும் வென்றான். வேங்கியும், கலிங்கமும் இவன் ஆணைக்கு அடங்கின. வேங்கி இளவரசர்கள் சத்திவர்மனும், விமலாதித்தனும் சோழப் பேரரசன் முதலாம் இராசராசனிடம் அடைக்கலம் புகுந்தார்கள். இராசராசனும் பீமனுடன் போர் புரிந்தான். கி. பி. 1001-இல் காஞ்சியைப் பிடித்த பீமன், சோழப் பெரும் படையின் உதவியால் சக்திவர்மனால் தோற்கடிக்கப்பட்டு மாண்டான்.

சோழப் பேரரசில் முதலாம் இராசராச சோழனுக்கு முன் தெலுங்குச் சோழர்களைப் பற்றிய குறிப்பு காணப்படவில்லை. முதலாம் இராசராச சோழன் தன் அதிகாரத்தால் பல நாடுகளை வென்றான். அதன்பிறகு தெலுங்குச் சோழர்களைப் பற்றிய குறிப்புகள் தெரியவருகின்றன. தென்னார்க்காடு மாவட்டத்தில், முதலாம் இராசராச சோழன் கல்வெட்டில், பொத்தப்பிச் சோழன் சத்தியரையன்[3] என்ற ஒரு பெயர் குறிப்பிடப்படுகிறது.

முதலாம் இராசராச சோழனுக்குப் பின்வந்த அரசர்கள், தெலுங்கு தேசப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தியபோதும், தெலுங்குச் சோழர்களைப் பற்றிக் குறிக்கவில்லை. ஆனால், முதலாம் குலோத்துங்கசோழன் காலத்தில் தெலுங்குச் சோழர்களைப் பற்றிய குறிப்புகள் சில கிடைக்கின்றன:

முதலாம் குலோத்துங்க சோழனின் தெலுங்குச் சிற்றரசர்கள்

1. கங்கைகொண்ட இராசராச தேவன் என்கின்ற பொத்தப்பிச் சோழர் (கி.பி. 1071).[4]
2. பொத்தப்பி காமதேவ சோழ மகாராசா (கி.பி. 1106).
3. மகாமண்டலேசுவர கரிகால சோழ மகாராசா (கி.பி. 1107).
4. மகா மண்டலேசுவர பிரகோட்டத்து சூரப்ப ராசா (கி.பி. 1113).
5. முதலாம் கொங்கனும் அவன் மகன் சோழனும்.

கங்கைகொண்ட இராசராசதேவன் என்கின்ற பொத்தப்பிச் சோழ சிற்றரசன் சோழப் பேரரசில் பணிபுரிந்தவன்.

பொத்தப்பி காமதேவ சோழ மகாராசா மகாமண்டலேசுவர கரிகால சோழ மகாராசனாக இருக்கவேண்டும் என்று தோன்று கிறது. இவன் கர்நூல் மாவட்டத்தின் ஒரு பகுதியை ஆட்சி புரிந்தவன்.

முதலாம் கொங்கனும், அவன் மகன் சோழனும் ஆந்திராவி லுள்ள வேலநந்தியை ஆண்டு வந்தனர். குலோத்துங்கச் சோழன் இவர்களுடன் நல்லுறவு வைத்திருந்தான். மேற்குச் சாளுக்கிய மன்னன் ஆறாம் விக்ரமாதித்தன் வேங்கி மண்டலத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதியையும் கைக்கொண்டபொழுது முதலாம் கொங்கனும், அவன் மகனும் சாளுக்கியனுக்குச் சிற்றரசர்களாக மாறிவிட்டனர்.[5]

விக்கிரம சோழன் காலத்து தெலுங்குச் சோழ சிற்றரசர்கள்

வேலநாண்டு முதலாம் இராசேந்திர சோழன் என்பவனும், விக்கிரம சோழ பேரரசனின் 12-ஆம் ஆட்சியாண்டில் குறிப்பிட்டுள்ள சோழியன் என்கின்ற இராசேந்திர சோழ கங்கராசன் என்பவனும் ஒருவனாகவே அறிகிறோம். வேலநாண்டு முதலாம் இராசேந்திர சோடனின் மகன், இரண்டாம் கொங்கனும் விக்கிரம சோழனின் சிற்றரசன் என்பதனை விக்கிரமசோழனின் மற்றொரு கல்வெட்டால் அறிகிறோம்.[6] விக்கிரமசோழன் மேற்குச் சாளுக்கியனின் மீது கொண்ட வெற்றியினால் வேலநாண்டு சிற்றரசர்கள் விக்கிரம சோழனின் தலைமையை ஏற்றுக் கொண்டனர். விக்கிரம சோழன் மேற்குச் சாளுக்கிய மன்னனை எதிர்த்துப் போர் புரிந்தபொழுது தெலுங்குச் சோழ சிற்றரசர்கள் விக்கிரம சோழனுக்கு உதவி புரிந்துள்ளனர்.

இரண்டாம் குலோத்துங்கனின் சிற்றரசர்கள்

வேலிநாடு (அ) வேலநாண்டு குலோத்துங்க சோழ இரண்டாம் கொங்கராசன் என்கின்ற மகாமண்டலேசுவர கொங்கையனும் இரண்டாம் கொங்கனும் ஒருவரே ஆவர். இரண்டாம் கொங்கன் ஸ்ரீசைலத்திற்கும், மகேந்திரமலைக்கும் இடைப்பட்ட பகுதியை ஆண்டிருக்கவேண்டும்.

இப்பேரரசனின் மற்றொரு சோட சிற்றரசன் மகாமண்ட லேசுவர பல்லாய சோட மகாராசா. இவனுடைய கல்வெட்டு குண்டூரில் கிடைப்பதால் இவன் இப்பகுதியை ஆண்டிருக்கலாம் என்பதை அறிகிறோம்.

குண்டூர் மாவட்டத்தில் உள்ள கோணிதேனாவை ஆண்ட சிற்றரசன் திரிபுவனமல்லதேவ சோழ மகாராசனும் குலோத்துங்கனின் சிற்றரசனே.

மகாமண்டலேசுவர பீமநாயகன் என்னும் வேங்கி தேச சாளுக்கிய அங்ககார என்ற குடும்பப் பெயர் கொண்டவனும் இரண்டாம் குலோத்துங்கனின் தெலுங்கு சிற்றரசனேயாவான்.

நெல்லூர் மகாமண்டலேசுவர வீரநாயகன் நல்லசித்தரச தேவ சோழனும் குலோத்துங்கச் சோழனின் சிற்றரசன். கடப்பாவில் கிடைக்கும் கல்வெட்டிலிருந்து நல்லசித்தரச தேவ சோழனுக்கும், பொத்தப்பி சிற்றரசனுக்கும் பகைமை இருந்ததை அறிகிறோம்.

இரண்டாம் இராசராச சோழனின் சிற்றரசர்கள்

மகாமண்டலேசுவர திரிபுவன மல்லதேவன் மற்றும் வேலநாண்டு சிற்றரசனான இரண்டாம் கொங்கன் என்றழைக்கப்படும் குலோத்துங்கன் ஆகியோர் இரண்டாம் இராசேந்திரனின் தெலுங்கு சோழச் சிற்றரசர்களாக இருந்தனர். மதுராந்தக பொத்தப்பிச் சோழம(ல)ம தேவராசருடைய சகோதரன் விமலதேவனும் பேரரசனின் தலைமைக்கு அடிபணிந்தான்.

கரிகாலனின் வம்சத்தில் உதித்தவனான பொட்னசோழனின் மகனான மகாமண்டலேசுவர ஜிக்கிதேவ சோழ மகாராசனும் இரண்டாம் இராசராசனின் சிற்றரசன். இவன் ஆட்சி செய்த பகுதி எது என்று தெரியவில்லை. கோனமண்டல சிற்றரசன் இராசேந்திர கோனராசுவும் இரண்டாம் இராசராசனின் சிற்றரசன். கொண்ட போதுமதி பூதராச என்ற சோழ சிற்றரசன் இரண்டாம் இராசராசனின் பேரரசிற்கு கீழ்ப்படிந்தான். இரண்டாம் இராசராச சோழப் பேரரசனின் 19-ஆம் ஆட்சியாண்டுக்குப் பிறகு வேலநாட்டுச் சிற்றரசர்களில் இரண்டாம் குலோத்துங்க இராசேந்திர சோழனின் கல்வெட்டுக்கள் தெலுங்கு தேசத்தில் காணப்படுகின்றன.

இரண்டாம் குலோத்துங்க இராசேந்திர சோடன் வேலநாண்டின் சிறந்த அரசன். இவன் இறந்தபின் அரசாட்சிக்கு அவனுடைய பிள்ளைகள் போட்டியிட்டனர். அதோடு காகதீய வலிமை பெருகியதால் வேலநாண்டு பலமிழந்தது. ஆனாலும் காகதீய கணபதி இதன் மீது படையெடுக்கும் வரை (13 நூற்றாண்டு வரை) வேலநாண்டு இருந்து வந்தது.

மூன்றாம் குலோத்துங்கனின் தெலுங்குச் சோழ சிற்றரசர்கள்

மூன்றாம் குலோத்துங்கனுக்கு தெலுங்கு சோழர்கள் சிற்றரசர்களாக இருந்ததைத் தொண்டை மண்டலத்திலுள்ள கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். குலோத்துங்க சோழனின் 26-ஆம் ஆட்சியாண்டில் நல்லசித்தன் குலோத்துங்கனின் சிற்றரசனாக மாறியுள்ளான். நல்லசித்தனின் பட்டத்தரசி பல தானங்கள் செய்துள்ளாள். இது பற்றிய செய்திகளை திருப்பள்ளிவனம்[7] (செங்கை), காளஹஸ்தி (சித்தூர்), நந்தலூர் (கடப்பா) போன்ற இடங்களில் கிடைக்கும் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது இத்தானங்கள் மூன்றாம் குலோத்துங்க சோழனின் 18, 19 மற்றும் 24-ஆம் ஆட்சி ஆண்டுகளில் வெளியிடப்பட்டுள்ளன.

மதுராந்தக பொத்தப்பிச் சோழர் நல்ல சித்தரசன் என்பவனுக்கு எர்ரசித்தா என்ற இளைய தம்பியும், மயிலம்மதேவி பெத்தராசா என்ற மகனும் இருந்தனர். எர்ரசித்தனுடைய மூன்று மக்கள் மன்மசித்தன், பெத்தராசன், தம்முசித்தன் என்பவராவார்.

நல்லசித்தன் ஆட்சி செய்து கொண்டிருக்கையில் மன்மசித்தன் இணையாக முடி சூடிக்கொண்டான். எர்ரசித்தாவும், மயிலம்மதேவி பெத்தராசனும் ஆட்சியில் மன்மசித்தனுக்கு வாய்ப்பளித்தார்கள். மன்மசித்தனின் தம்பி பெத்தராசன் வாரிசான சிறிது காலத்திலேயே தம்முசித்தனுக்கு கி. பி. 1205-இல் முடியைத் தந்தான்.

தம்முசித்தனுக்கு அடுத்து வந்த தெலுங்குச் சோழர்களின் பரம்பரையைப் பற்றிய விவரம் குழப்பமாக உள்ளது. ஒரே பெயரையே பலர் வைத்துக்கொண்டதாலும், பட்டப்பெயர்கள் ஒன்று போலவே தோன்றுவதாலும் பெருங்குழப்பம் ஏற்படுகிறது.

முதலாம் மன்மசித்தன் என்ற நல்லசித்தனுக்குப் பிறகு அவன் தம்பி தம்முசித்தன் கி.பி. 1205-இல் ஆட்சிக்கு வருகிறான். இவனின் மூன்று கல்வெட்டுக்கள் காஞ்சியில் உள்ளன. தம்முசித்தனுக்குப் பிறகு முதலாம் திக்கன் என்ற அலுந்திக்க காளத்தி ஆட்சிக்கு வருகிறான். இவன் விக்கிரமசிங்கபுரத்தை ஆண்டதையும், காஞ்சியைக் கொண்டதையும், கம்பபுரிப் போரில் சோமேசுவரனைத் தோற்கடித்ததையும் வீரராசேந்திரனின் 13-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறிகிறோம். ஏறக்குறைய 25 கல்வெட்டுக்கள் வரதராசப் பெருமாள் கோயிலில் உள்ளன. பெரும்பாலானவை மூன்றாம் இராசராச சோழனின் ஆட்சியாண்டைச் சேர்ந்தவை. இதிலிருந்து இவன்

பெயரளவில் சிற்றரசனாக இருந்தான் எனத் தெரிகிறது. இவனின் முழுப்பெயர் மதுராந்தக பொத்தப்பிச் சோழன் திருக்காளத்திதேவன் என்ற கண்டகோபாலன். இவனின் கல்வெட்டு ஒன்றில் காஞ்சியைக் கைப்பற்றியதைக் கூறுகிறான்[8]. இவன் கோயில் பூந்தோட்டத்திற்கு அளிக்கப்பட்ட நிலத்திற்கு வரிவிலக்கு அளித்தான்[9] இவன் விஷ்ணு கோயிலுக்கு வரிவிலக்கு அளித்ததை மற்றொரு கல்வெட்டால் அறிகிறோம்.[10] கோயில் தோட்டப் பராமரிப்புக்கும், அன்னதானத்திற்கும் இவன் மனைவி இலக்குமிதேவி கொடையளித்தாள். இவள் யாதவ ராய சிற்றரசனின் மகளாக இருக்கலாம்.[11] இவன் பெயரில் கண்ட கோபாலப்பெருந்தெரு என்ற வீதி உள்ளதை இவனின் கல்வெட்டால் அறிகிறோம்[12].

இரண்டாம் மன்மசித்தா என்கின்ற விஜயகண்டகோபாலன்

இவன் கி.பி. 1250-இல் முதலாம் திக்கனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தான். இவன் மூன்றாம் குலோத்துங்கனின் சோழ சிற்றரசன் ஆவான். திரிபுவன சக்ரவர்த்தி விஜயகண்டகோபால தேவன் என்பது இவனுடைய முழுப்பெயர் என்று கல்வெட்டில் அறிகிறோம். இவன் தன்னைக் காஞ்சியின் அதிபதி என்று அழைத்துக்கொண் டான். இதிலிருந்து இவன் சுதந்திரமாக ஆட்சி செய்திருக்கிறான் என்று அறிகிறோம்.

அடிக்குறிப்புக்கள்

1. Ep. Carn, Vol X, p. 62
2. Ep. Ind. Vol. XI, P. 337
3. A.R.E. 49 of 1918
4. A.R.E. 415 of 1904
5. A.R.E. 345 of 1893
6. A.R.E. 103 of 1922
7. A,R.E. 317 of 1929
8. A.R.E. 446 of 1919
9. S.I.I. Vol. IV, No. 851
10. A.R.E. 620-1 ,1919
11. A.R.E. 46 of 1893; S.I.I. vol IV, No. 859
12. A.R.E. 609 of 1919

★

இராசராசன் பிறந்த, முடிசூடிய, நீத்த நாள்கள்

என். சேதுராமன்
இயக்குநர்

இராமன் & இராமன், கும்பகோணம்

பிற்காலச் சோழமரபை நிறுவிய விசயாலயனின் பரம்பரை தமிழகத்தைத் தொடர்ந்து ஆட்சி செய்தது. ஆதித்தன், முதற் பராந்தகன் ஆகியோர் முடி சூடிய ஆண்டுகள் முறையே கே.வி. சுப்பிரமணிய ஐயர், கீல்ஹார்ன் ஆகியோரால் நிறுவப்பட்டுள்ளன. உத்தம சோழனின் ஆட்சியாண்டு, கிருஷ்ணசாஸ்திரி அவர்களால் கூறப்பட்டிருந்தும் ஐயங்கட்கு இடமிருந்தது. கும்பகோணம் நாகேசுவரன் கோயிலில் தன்னால் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல்வெட்டின் மூலம் இக்கட்டுரையாசிரியர் உத்தமசோழன் முடி சூடிய ஆண்டு கி.பி. 971 என்று அறுதியிட்டுள்ளார்.[1]

தமிழகம் முழுவதும் மட்டுமன்றி கர்நாடகத்தின் தென் மாவட்டங்களிலும் முதலாம் இராசராசனின் கல்வெட்டுக்கள் பரவிக் கிடைக்கின்றன. காலக்குறிப்புக்கள் அடங்கிய அவனது பத்துக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்ததன் மூலம் இராசராசன் முடிசூடிய நாள் கி.பி. 985, ஜூன் 25க்கு மேல் ஜூலை 25க்குள் என்று கீல்ஹார்ன் முடிவு செய்துள்ளார்.[2] அவற்றுள் சிலவற்றை இங்கே காண்போம்.

கர்நாடக மாநிலம், ஸ்ரீரங்கப்பட்டினம் வட்டம், பலமுரி அகத்தீசுவரர் கோயிலிலுள்ள இராசராசன் கல்வெட்டு,[3] சகம் 831-இல் அவனது 28-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது. அதிலுள்ள காலக் குறிப்புக்கள், குறிப்பாக உத்தராயண சங்கராந்தி பற்றிய குறிப்பு அவன் 984-ஆம் ஆண்டு டிசம்பரில் இருந்து 985-ஆம் ஆண்டு டிசம்பருக்குள் முடிசூடியிருக்கவேண்டும் என்பதை உறுதி செய்கின்றது. வடஆர்க்காடு மாவட்டம் திருவல்லத்தில் கிடைக்கும் இராசராசன் கல்வெட்டில்[4] உள்ள கணிதக் குறிப்புக்கள் (குறிப்பாக சந்திரகிரகணம்) அவன் கி.பி. 984-ஆம் ஆண்டு டிசம்பருக்கு மேல் 985-ஆம் ஆண்டு செப்டம்பருக்குள் ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும் என ஒருபடி முன்செல்ல வழிவகுக்கின்றது.

அடுத்து சுசீந்திரம் கல்வெட்டில்[5] இதில் 'யாண்டுபத்தும் யாண்டு துடங்கின கற்கடக நாயற்று' என்று வருவதன் மூலம் இராசராசன்

நிச்சயமாகக் கற்கடக மாதத்தில் (ஆடி) தான் முடிசூடினான் என்பதையும், எனவே ஒவ்வொரு ஆட்சியாண்டும் முடிவதும், தொடங்குவதும் கற்கடக மாதத்தில்தான் என்பதையும் நாம் முடிவு செய்யப் பெரிதும் துணை செய்கிறது. இதனை மிகச்சரியாக உணர்ந்த திரு. கீல்ஹார்ன் அவர்கள் இராசராசன் முடிசூடியது கி.பி. 985-இல் வரும் கற்கடக மாதமே என்றும், அது கி.பி. 985-ஆம் ஆண்டு ஜூன் 25-க்கு மேல் ஜூலை 25க்குள் என்றும் முடிவாகக் கூறியுள்ளார்.

மேலும் ஆய்வு செய்த ராபர்ட் சீவல் அவர்கள், இராசராசனின் கோனேரிராசபுரம் கல்வெட்டில்[6] வரும் காலக் குறிப்புக்கள், கி.பி 1010, ஜூலை 12-ஆம் நாளைச் சுட்டுவதால், அது அவனது 26-ஆம் ஆட்சியாண்டு ஆதலின், அவன் முடிசூடிய நாள் கி.பி. 985 ஜூலை 12-ஆம் நாளுக்கும், 25-ஆம் நாளுக்கும் இடையில் என்று மேலும் நுணுகிக் கூறியுள்ளார். இதில் அவர் ஆங்கில ஆண்டு முறையினைக் கருத்தில் கொண்டுள்ளார்.

இந்திய ஆண்டுக் கணிப்பு

முன்னர் ஆய்வு செய்த அறிஞர்கள் அனைவரும் ஒரு மன்னனின் ஒரு ஆட்சி ஆண்டினை, ஓர் ஆங்கில ஆண்டுடன் ஒப்பிட்டுக் கணக்கிட்டுள்ளனர். அதன்படி ஒரு ஆண்டு என்பது 365 அல்லது 360 நாள்களைக் கொண்டது ஆகும். ஆனால் தற்போதைய ஆய்வுகள், இந்து மன்னர்கள் அந்த முறையில் தம் ஆட்சியாண்டைக் கணக்கிடவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. சான்றாக ஒரு மன்னன், மகர (தை) மாதம் வளர்பிறை பூர்வபட்சம், ரேவதி நட்சத்திர நாளில் முடிசூடி இருப்பின், அவனது இரண்டாம் ஆட்சி ஆண்டு அதே மகர மாதம் பூர்வபட்சம், ரேவதி நட்சத்திரம் வரும் அடுத்த ஆண்டில் தொடங்கும். இதன்படி, ஒரு ஆட்சியாண்டு என்பது 354 நாள்கள் முதல் 385 நாள்கள் வரை வேறுபட்ட முறையில் அமையும்.[7] எனவே இம்முறையில் கணக்கிடும்போது முன்னர் ஆங்கில ஆண்டு முறையில் இடப்பட்ட கணக்குகள் மாறுபடுகின்றன.

சில மரபுகள்

தமிழக மன்னர்கள் உயிர்வாழும் காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நட்சத்திரத்தோடு தொடர்புறுத்திக் கொண்டாடினர். பிறந்தநாளும், முடிசூடியநாளும் இவ்வகையில் சிறப்புப் பெற்றன. ஆனால் இறைவனுக்கு நிகழ்த்தப் பெறும் விழாக்கள் திதியினை அடிப்படையாக வைத்துக் கொண்டாடப்படுகின்றன. சான்றாக

ஸ்ரீராமநவமி, கோகுலாஷ்டமி, விநாயக சதுர்த்தி ஆகிய வகைகளைக் கூறலாம். ஒரு மனிதன் இறந்துபோனால், அவன் இறைவனோடு ஒருங்கு வைத்து மதிக்கப் பெறுதலின், அவனது இறுதிச் சடங்கோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் திதியோடு தொடர்புறுத்திச் செய்யப்படுகின்றன. அவைகளுக்குச் சான்றாக நிற்கும் கல்வெட்டுக்கள் மிகப்பல. இந்த அடிப்படை வழக்கத்தினைப் புரிந்துகொண்டு அதனடிப்படையில் காலக்குறிப்புக்களையும், பிற சான்றுகளையும் ஆராய்வதன் மூலம் இராசராசனின் பிறந்த, முடிசூடிய, நீத்தநாள்களைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வழி ஏற்படுகிறது.

முன்னர் குறிக்கப்பட்ட கோனேரிராசபுரம் கல்வெட்டு 26-ஆம் ஆட்சி ஆண்டில், கற்கடக மாதத்து அபரபட்க்ஷத்து சதுர்த்தசியும், புனர்வசுவும், புதன்கிழமையும் கூடிய நாளில் எழுதப்பெற்றது. இது மிகச் சரியாக ஆங்கில ஆண்டு கி.பி. 1010 ஜூலை மாதம் 12-ஆம் நாள் ஆகும். கற்கடக மாதத்துப் புனர்வசு நாள் கி.பி. 985-ஆம் ஆண்டில் ஜூலை மாதம் 18-ஆம் நாளில் வருகிறது. அது அவனது முதல் ஆட்சியாண்டைக் குறிக்கும். அடுத்து உடையார்குடியில் உள்ள மூன்றாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கற்கடக மாதத்துத் திருவாதிரை நட்சத்திரத்து சனிக்கிழமை எழுதப்பட்ட இராசகேசரி வர்மனின் கல்வெட்டு[8] ஆய்வுக்குப் பெரிதும் பயன்படுகிறது. இதில் உள்ள காலக்குறிப்புக்கள் இது இராசராசனின் கல்வெட்டே என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. கி.பி. 988-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17-ஆம் நாள் இதன் சரியான ஆங்கில ஆண்டு ஆகும். 3-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த இராசராசனின் இக்கல்வெட்டு மூலம், கி.பி. 985-ஆம் ஆண்டு கற்கடக மாதம் திருவாதிரை நாள் இராசராசன் ஆட்சியாண்டில் வரவில்லை. அது ஜூலை மாதம் 17-ஆம் நாள் ஆகும். மேற்கூறிய இவ்விரு கல்வெட்டுக்கள் மூலம், கி.பி. 985-ஆம் ஆண்டு ஜூலை 17-இல் ஆட்சிக்கு இராசராசன் வரவில்லை என்பதும், கி.பி. 985 ஜூலை மாதம் 18-ஆம் நாள் இராசராசன் ஆட்சிக்கு வந்து விட்டான் என்பதும் தெளிவாகிறது. எனவே கி.பி. 985, ஜூலை 18-ஆம் நாளான கற்கடக மாதத்து அபர பக்ஷத்து புனர்வசு நட்சத்திரம் சனிக்கிழமையன்று இராசராசன் முடிசூடினான் என்பதும் உறுதியாகின்றது.

சுந்தரசோழனின் மக்கள் இருவருள் முன்னவனான ஆதித்த கரிகாலன் கி.பி. 960-இல் முடிசூட்டப்பட்டு கி.பி. 965-இல் கொலையுண்டான்[9]. மக்கள் இராசராசனே முடிசூடவேண்டும் என விரும்பினர்.

தஞ்சை இராசராசேச்சுரம்

இராசராசனின் பெரும் படைப்பான ஓங்கு புகழ் இராசராசேச்சுரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று,[10] அவனது 25-ஆம் ஆட்சியாண்டில் 275-ஆவது நாளில், விமானத்தில் வைக்கக் கலசம் கொடுத்ததைக் குறிக்கிறது. 25-ஆம் ஆட்சியாண்டு கி.பி. 1009-இல் கற்கடக மாதத்து அபரபக்ஷத்து புனர்வசு நாளாகிய, சூலை 22-ஆம் நாள் தொடங்குகிறது. இக்கல்வெட்டில் குறிக்கப்படும் 275-ஆவது நாள், கி.பி. 1010-ஆம் ஆண்டு ஏப்ரல் 22-ஆம் நாள் வருகிறது. இது சித்திரை மாதத்து 31-ஆம் நாள் சனிக்கிழமை ஆகும். அன்று புனர்வசு நக்ஷத்திரம் திகழ்ந்தது. கோயிற்பணி முடிந்து கும்பாபிஷேகம் செய்யப் பெற்றதும் இந்நாளே. தான் பிறந்த சதய நாளில் குடநீராட்டு செய்யாது, தான் ஆட்சிப் பொறுப்பேற்ற புனர்வசு நாளில் கோயிலில் குடநீராட்டுப் பெருவிழா செய்ததன் மூலம் தன் நாடும், மக்களும், முடியும், அரசும் சிறப்பு பெற விரும்பிய அவனது பெருந்தன்மை புலப்படுகிறது. அவனோ தன் சிற்றப்பனாரே முடிசூட வேண்டும் என்று விரும்பினான். முடிவில் அவன் விரும்பியபடியே கி.பி. 971 இல் உத்தம சோழன் முடிசூடினான்.

ஆட்சிப் பொறுப்பேற்றல்

உத்தம சோழன் கி.பி. 971-இல் அரசேற்று, 16-ஆண்டுகள் ஆட்சிபுரிந்ததைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. திருப்புறம்பியத்தில் கிடைக்கும் இராசராசனின் 3-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று[11] (கி. பி. 988) செம்பியன்மாதேவி, தன் மகன் பெயரால் கொடுத்த கொடையொன்றினைக் குறிக்கிறது. எனவே அதுவரை உத்தமன் உயிரோடிருந்தது உறுதி. இதனால் கி.பி. 985-இல் இராசராசனுக்கு உத்தம சோழனே முடிசூட்டியுள்ளான் என்பதனை எளிதில் உணரலாம். இதனைத் திருவாலங்காட்டுச் செப்பேடும் வலியுறுத்தும்.

இராசராசன் பிறந்த நாள்

வரலாற்றில் சில மரபுகள் உண்மைகளாகி ஆய்வுக்குத் துணை நிற்கின்றன. ஆதித்தன் கொலையுண்டபோது, இராசராசன் அரசுப் பொறுப்பேற்கும் வயதும், தகுதியும் உடையவனாக இருந்தான். ஒருவன் ஆட்சிப் பொறுப்பேற்க வேண்டுமாயின் திருமணமானவனாக இருத்தல் வேண்டும். மக்கள் இராசராசன் ஆட்சிப் பொறுப்பேற்க விரும்பினர் என்பதிலிருந்து கி.பி. 965-இல் இராசராசன் மண முடித்த இளவயதினனாக, சுமார் 18 வயதினனாகவேனும் இருந்திருத்தல் வேண்டும். அக்காலத்தில் ஓர்

இளவரசர் மணமேற்கும் வயது குறைந்தது 14 என்பதும் நினைவு கொள்ளத்தக்கது. எனவே உத்தமன் ஆட்சிப்பொறுப்பேற்கும் போது இராசராசன் சுமார் 24 வயதினனாகவேனும் இருந்திருக்கலாம். திருப்பழனத்தில் கிடைக்கும் உத்தம சோழனின் 2-ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு,[12] 'உடையார் அருமொழிதேவத் தெரிஞ்ச கைகோளரைக் குறிப்பிடுகிறது. இதில் வரும் 'உடையார்' என்ற அடைமொழி, வீரனாக விளங்கிய, படைத்தலைமை ஏற்றுச் சிறப்புப் பெற்ற இளவரசனாக, 26 வயதுடைய இராசராசனாக - ஏற்கத் தக்க வகையில் விளங்குகிறது. இந்தப் பின்னணியில் பார்த்தால் இராசராசன் கி.பி. 947-வாக்கில் பிறந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வரலாம். இது பராந்தக சோழனின் ஆட்சிக் காலத்தில் வருகிறது. அவன் துலா மாதத்து (ஐப்பசி) சதய நட்சத்திரத்தில் பிறந்தான் என்பதனை கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன.[13]

இராசராசன் நீத்த நாள்

இராசராசனின் கல்வெட்டுக்கள் அவனது 29-ஆவது ஆட்சி யாண்டுவரை கிடைக்கின்றன.[14] 29-ஆம் ஆட்சியாண்டில் அவன் இறந்திருத்தல் வேண்டும். 29-ஆம் ஆட்சியாண்டு, கி.பி 1013-ஆம் ஆண்டு கற்கடக மாதத்துப் புனர்வசு நாளில் அதாவது சூலை மாதம் 10-ஆம் நாளில் தொடங்குகிறது. கி.பி. 1014-ஆம் ஆண்டு கற்கடக மாதத்துப் புனர்வசு நாளுக்கு முதல் நாள் அதாவது சூன் 28-ஆம் நாளில் முடிவடைகிறது. எனவே இவ்விரு நாள்களுக்கும் இடையில் ஏதோ ஒரு நாளில் அவன் காலமடைந்திருத்தல் வேண்டும். இக் காலப் பகுதி அவனது மகன் இராசேந்திரனின் 2-ஆவது ஆட்சி யாண்டில் வருகிறது.

தஞ்சைப் பெரிய கோயிலில் அரச குருவான ஈசானசிவம் தந்த கொடைகளைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்று உள்ளது.[15] அக் கல்வெட்டு முற்பகுதியில் இராசராசனின் 29-ஆவது ஆட்சியாண்டு வரை கொடுத்த கொடைகளைக் குறித்த பின்னர், பிற்பகுதியில் இராசேந்திரனின் 2-3-ஆம் ஆட்சியாண்டுகளில் கொடுத்த கொடை களைத் தொடர்ந்து குறிப்பிடுகிறது. இரு வேறு மன்னர் காலங் களில் ஒரே மனிதர் கொடுத்த கொடைகளைத் தொடர்ந்து ஒரே கல்வெட்டு குறிப்பிடுவதிலிருந்து இராசராசனின் 29-ஆம் ஆட்சி யாண்டும், இராசேந்திரனின் 2-ஆம் ஆட்சியாண்டும் இணைகின்ற உண்மையினைத் தெரிந்து கொள்ளலாம். இராசேந்திரனின் 2-ஆம் ஆட்சியாண்டிலேயே கொடுக்கப்பட்ட மற்றொரு கொடையினைத் தனியாக மற்றொரு கல்வெட்டு குறிப்பதும் இங்கு கூர்ந்து நோக்கத் தக்கது.[16]

இராசேந்திரன் கி.பி. 1012-ஆம் ஆண்டு ஆனி மாத மிருகசீரிஷ நாளில் முடிசூட்டப் பெற்றான். அவனது இரண்டாம் ஆட்சியாண்டு கி.பி. 1014 ஆனி மாத மிருகசீரிஷ நாளின் முதல் நாள் முடிவடைகின்றது. அது மே மாதம் 30-ஆம் நாள் ஆகும்.

இராசராசனின் 29-ஆம் ஆட்சியாண்டு தொடங்கிய கி.பி. 1013-ஆம் ஆண்டு சூலை 10-ஆம் நாளிற்கு மேல்; இராசேந்திரனின் 2-ஆம் ஆட்சியாண்டு முடிந்த கி.பி. 1014-இல் மே 30-ஆம் நாளிற்குள், ஏதோ ஒரு நாளில் இராசராசன் இறந்திருத்தல் வேண்டும். இதனை வலியுறுத்தும் வகையில் திருவலஞ்சுழியில் கிடைத்த இராசேந்திரனின் கல்வெட்டு[17] அமைகிறது. அக்கல்வெட்டு இராசேந்திரனின் 3-ஆம் ஆட்சியாண்டு 221-ஆம் நாளில் பொறிக்கப்பட்டது. அவனது மூன்றாம் ஆட்சியாண்டு கி.பி. 1014-ஆம் ஆண்டு ஆனித் திங்கள் மிருகசீரிஷ நாளில் அதாவது மே மாதம் 31-ஆம் தேதி தொடங்குகிறது. அதன்படி திருவலஞ்சுழிக் கல்வெட்டில் குறிக்கப்படும் 221-ஆம் நாள் கி.பி. 1015-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆறாம் தேதி ஆகும்.

இக்கல்வெட்டு இராசேந்திரன் எள்மலையில் புகுந்து 12 பொற்பூக்களை இக்கோயிலில் எழுந்தருளியுள்ள க்ஷேத்திரபாலப் பிள்ளையாருக்குக் கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது. கல்வெட்டு அதனைத் 'திலபர்வதம் புக்கருளி' என்ற தொடரால் குறிப்பிடுகிறது. எள் சிறப்பிடம் பெறும் நிகழ்ச்சி ஒன்று உண்டென்றால், அது சிரார்த்தம் எனப்படும் திவசச் சடங்கே ஆகும். அப்போது எள் பிராமணர்களுக்கு அளிக்கப் பெறுவது மரபு. எனவே இக்கல்வெட்டில் குறிக்கப் பெறுவது, இராசராசனின் முதலாண்டு நினைவுச் சடங்கே (திவசம்) என்று கொள்வதில் தவறில்லை. இவ்விளக்கம் சரியானது என ஏற்றுக் கொண்டால், கி.பி. 1015 ஜனவரி 6-ஆம் நாள் இராசேந்திரன் தந்தையின் முதலாண்டு நினைவினைச் செய்துள்ளான். அந்நிகழ்ச்சி முன்னர் குறிப்பிட்ட மரபின்படி, சந்திரமான முறையில், திதியினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அன்று, மாக மாதம் பூர்வபட்சத்து சதுர்த்தசி ஆகும். எனவே இராசராசன் இறந்ததும் அதற்கு முந்திய ஆண்டு மாக மாதம் பூர்வபட்சத்து சதுர்த்தசி என்று முடிவாகிறது. இக்காலக் குறிப்பு கி.பி. 1014-ஆம் ஆண்டு ஜனவரி 17-ஆம் நாள் ஆகும். அதுவே இராசராசனின் இறுதி நாளும் ஆகும்.

முடிவுரை

மேற்குறித்த ஆய்வுகள் மூலம், இராசராசன் ஏறக்குறைய 947-ஆம் ஆண்டில், ஐப்பசி மாத சதய நாளில் பிறந்திருக்கலாம்

என்பதும், ஆண்டுதோறும் ஐப்பசி சதய நாளில் பிறந்தநாள் விழா கொண்டாடினான் என்பதும் தெளிவு. அம்மாதத்தில் இருமுறை அந்த நட்சத்திரம் வந்தால், பின்னால் வரும் நாளே விழாவுக்குரிய நாள் ஆகும்.

இராசராசன் முடிசூடியது கி.பி. 985-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18-ஆம் தேதி ஆகும். கற்கடக (ஆடி) மாதத்து அபர பட்சத்து புனர்வசு நாளில் முடிசூடியதால், அதே மாதம் அதே நட்சத் திரத்தில் அவனது ஒவ்வொரு ஆட்சியாண்டும் தொடங்கும். இரு முறை அந்த நட்சத்திரம் வருமாயின், முன்பு கூறியது போல, பின்னால் வரும்நாளே அடுத்த ஆட்சியாண்டு தொடங்கும் நாள்.

இராசராசனின் இறுதிநாள் கி.பி. 1014-ஆம் ஆண்டு ஜனவரி 17-ஆம் தேதி; அதாவது மாக மாதம் பூர்வபட்சத்து சதுர்த்தசி நாள் ஆகும். அவனுக்கு நினைவுச் சடங்கு ஆண்டுதோறும் மாக மாதத்து பூர்வபட்சத்து சதுர்த்தசி நாளில் செய்யப்பட்டது.

இன்று நாடு இராசராசன் முடிசூடிய ஆயிரமாவது ஆண்டினை நினைவு கூரும்வகையில் விழா எடுத்துச் சிறப்பிக்கின்றது. அவனது 1000-ஆவது ஆண்டு கி.பி. 1984, கற்கடக (ஆடி) மாதத்து அபர பட்சத்து புனர்வசு நாளில் அதாவது ஜூலை 27-ஆம் நாள் வெள்ளிக் கிழமை தொடங்குகிறது. கி.பி. 1985-ஆம் ஆண்டு கற்கடக (ஆடி) மாதத்து அபர பட்சத்து புனர்வசு நாளுக்கு முதல்நாள், ஆதாவது ஆகஸ்டு 13-ஆம் தேதி முடிவுற்று. மறுநாள் 1001-ஆம் ஆண்டு தொடங்கிறது.

அடிக்குறிப்புக்கள்

1. N. Sethuraman 'Early Cholas', p. 12.
2. E.I. IX, p. 217.
3. A.R.E. 5 of 1895—E.I. IV, p. 68.
4. S.I.I. III 49; E.I. IV, p. 66.
5. A.R. E. 71 of 1896; E.I. V. p. 44.
6. A.R. E. 642 of 1909; E I. XI. p. 241.
7. N. Sethuraman 'The Regnal year' Journal of the Epigraphical Society of India, Vol V. 1978.

8. A.R.E. 599 of 1920; S.I.I. XIII No. 60.
இக் கல்வெட்டு, கண்டராதித்தனுடையது எனவும்; அது குறிக்கும் நாள் கி.பி. 951-ஜூலை 5-ஆம் தேதி எனவும் குறிக்கப்பட்டுள்ளது. கண்டராதித்தன் ஆட்சிக்கு வந்தது கி.பி. 950 என்று தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது. இது இராச ராசன் கல்வெட்டேயாகும்.

9. N. Sethuraman-Early Cholas, p. 123.

10. S.I.I. II. No. 1. பகுதி 5, வரி 1,

11. A.R.E. 338 of 1917.

12. S.I.I. XIX எண். 29. பரகேசரிவர்மன் ஆண்டு 2. இதனை இராசேந்திர னின் 2-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு எனக் (கி.பி. 1014-ஆம் ஆண்டு) குறித்துள்ளனர். இம்முடிவுக்கு வர உள்ளிருக்கும் செய்தி இடந்தரவில்லை. இராசராசனின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் நாடுகள், வளநாடுகளாகவும் கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டன. திருப்பழனம் இராசராச வளநாட்டு மிறைக் கூற்றத்தில் அமைந்தது, இக்கல்வெட்டிலோ, இராசராச வளநாடு குறிக்கப்படவில்லை. எனவே இது இராசராசனுக்கு முற்காலத்திய உத்தம சோழன் காலக் கல்வெட்டாதல் வேண்டும். இதனை திரு.எஸ்.ஆர். பால கப்பிரமணியம் அவர்களும் தமது 'முற்காலச் சோழர் கலை' என்ற நூலில் குறித்துள்ளார். பக். 155

13. S.I.I. V. 979, (இன்னும் பல உள்ளன)

14. 29-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் பல: (a) S.I.I. XXIV. எண். 19 ஸ்ரீரங்கம் கல்வெட்டு இராசராசனின் 32-ஆம் ஆட்சியாண்டிய் எழுதப் பட்டதாகத் தவறுதலாகக் குறிக்கப்பட்டுள்ளது. மத்தியக் கல்வெட்டுத் துறை இயக்குநர் திரு. கே. வி. ரமேஷ் அவர்கள், அதில் ஆட்சியாண்டு 22 என்றுதான் இருப்பதாகவும்; 32 எனத் தவறுதலாக வெளியிடப்பட்டு விட்டது எனவும் எனக்குத் தெரிவித்துள்ளார்.

(b) கன்னியாகுமரி குகநாதசாமி கோயில் கல்வெட்டு, திருவாங்கூர் தொல்லியல் தொகுதி 4-இல் 168-ஆம் எண்ணாக வெளியிடப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு முதல் இராசாதிராசனின் 31-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது. ஆனால் தவறுதலாக இராசராசன் என்று படிக்கப்பட்டதால், பதிப்பித்தோர் இதனை இரண்டாம் இராசராசன் கல்வெட்டாக இருக்கும் என்று எழுதிவிட்டனர். இத்தவறினைத் திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் சரியாகக் கண்டுபிடித்துத் தமது நூலில் எழுதியுள்ளார். (The Cholas Vol. I. Part II. பதிப்பு 1936). இக்கல்வெட்டு 'பெரும்புகழ் கோராஜகேசரிவர்மன் உடையார் ஸ்ரீராசாதிராசதேவர்' என்றே தொடங்கு கிறது. தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீட்டிலும், கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள் (தொகுதி I 1965/111) திருவாங்கூர் தொல்லியல் தொகுதியில் உள்ளதையே மீண்டும் பதிப்பித்துள்ளதால், அதே தவறு காணப்படுகிறது.

15. S.I.I. II. No. 90.

16 S.I.I. II. No. 60.

17. S.I.I. VIII. No. 236.

★

சோழர் காலத்தில் விளக்கு தானம்

கி. ஸ்ரீதரன்
பதிவு அலுவலர்
தஞ்சாவூர்

விளக்கு ஒரு மங்கலப் பொருள். புறத்திருளை நீக்கும் அகல் விளக்குப் போன்று, அகத்திருளை நீக்குவதற்கு, ஞான விளக்காகிய இறைவன் நமக்குத் துணை நிற்கவேண்டும். அத்தகைய இறைவனை அப்பர் பெருமான், உள்ளமாகிய தகழியில், உணர்வு என்னும் நெய்யை வார்த்து, உயிர்ப்பு என்னும் திரியைச் செவ்விதின் அமைத்து, ஞானம் என்னும் சுடரை ஏற்றி, அதைக்கொண்டு நோக்கினால் இறைவன் திருவடிகளைக் காணலாம் என்று கூறுகின்றார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இறைவனை 'சோதியே சுடரே சூழொளி விளக்கே' 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி' 'சுடர்கின்ற கோலந்தீயேயென மன்னு சிற்றம்பலவர்' என்றெல்லாம் போற்றுகின்றனர்.

கல்வெட்டுக்களில்

இவ்வாறெல்லாம் போற்றப்படும் விளக்கை, இறைவன் ஆலயங்களில் ஏற்றிவைக்க, நாடாண்ட மன்னர்களும், மக்களும் தானம் அளித்தனர். விளக்குக்கு அளிக்கப்பெற்ற தானம் சிறந்ததாகக் கருதப்பட்டது. தமிழகத்தில் உள்ள கோயிற் கல்வெட்டுக்களில் 90 விழுக்காடு கோயிலுக்கு விளக்குக்காக அளிக்கப்பெற்ற தானத்தைப் பற்றியே கூறுகின்றன.

விளக்குகள் எரிக்கப் பொருட்கள்

விளக்குகள் எரிக்க நெய் அல்லது எண்ணெய் வேண்டும். நெய் வாங்கிக்கொள்வதற்குப் பொன் தானமாக அளிக்கப்பெற்றதாகப் பல கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. நெய் பெறுவதற்குப் பசுக்கள், ஆடுகள், எருமைகள் கொடுக்கப்பட்டன. பசு, ஆடு, எருமைகளின் எண்ணிக்கை குறைந்துவிடாமல் இருக்க எருதும், கிடாயும் சேர்த்துக் கொடுக்கப்பட்டன. இதைக் கல்வெட்டுக்கள் 'சாவா மூவாப் பேராடு' எனக் குறிப்பிடுகின்றன. இவ்வாறு அளிக்கப் பெற்ற ஆடுகளையும், பசுக்களையும் சிலர் கோயிலின் சார்பில்

பெற்று விளக்கு எரிப்பதற்கு நெய் அளித்து வருவார்கள். அவர்களைக் 'கோயில் மன்றாடிகள்', 'திருவிளக்குக் குடிகள்' எனக் கல்வெட்டுக்கள் உரைக்கின்றன. கோயில் விளக்குகளுக்காக அளிக்கப்பெற்ற நிலம் 'திருவிளக்குப்புறம்' என அழைக்கப்பட்டது. விளக்குக்குத் தேங்காய் எண்ணெய், இலுப்பை எண்ணெய் ஆகியவையும் வழங்கப்பட்டன. தஞ்சை மாவட்டம், திருக்கண்ணபுரம் சௌரிராசப் பெருமாள் கோயிலிலுள்ள மூன்றாம் இராசேந்திரனின் 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டில், கோயிலில் தென்னை மரங்களைப் பராமரிப்பவர்கள் ஒரு கோல் நிலத்திற்கு மூன்று உழக்கு தேங்காய் எண்ணெய் அளித்திடவேண்டும் எனக் கூறப்படுகிறது. செந்தலைக் கோயில் இறைவனுக்குப் பகல் விளக்கெரிக்க சுவாமிநாத இளவரசன் என்பவன் இலுப்பைத் தோட்டம் ஒன்றைத் தானமாக அளித்தான்.[2]

கோயில்களில் விளக்கு எரிப்பதற்குப் பலவகையான விளக்குகள் தானமாக அளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. கல்வெட்டுக்களில் நந்தா விளக்கு, சந்தி விளக்கு, அரை விளக்கு, கால் விளக்கு போன்ற விளக்கு வகைகள் கூறப்படுகின்றன. நந்தா விளக்கு என்பது இறைவன் அருகில் எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும். சந்தி விளக்கு என்பது காலை, மாலை இரு நேரங்களில் மட்டும் ஏற்றப்படும், விளக்குகள் வெள்ளியாலும், செம்பாலும் செய்து கொடுக்கப்பட்டு அவற்றின் எடை எவ்வளவு என்பதும் குறிக்கப்பட்டு உள்ளன. இராசராசனின் தேவியான உலக மாதேவி திருவையாறு கோயிலுக்கு ஈழச் சியல் விளக்கு, மலையான் சியல் விளக்கு, சோழச்சியல் விளக்கு, ஓர்க்குட விளக்கு, அனந்தலை விளக்கு ஆகியவற்றை அளித்தாள் என அக்கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[3] இவை அனைத்தும் செம்பினால் செய்யப்பட்டவை. மலையான்சியல், ஈழச்சியல் போன்ற விளக்குகள் இராசராசன் பெற்ற வெற்றிகளால் சோழ நாட்டிற்கு வழக்கத்திற்கு வந்திருக்கலாம். மேலும் பஞ்சாரத்தித் திருவிளக்கு என ஒரு விளக்கும் குறிப்பிடப்படுகிறது. முதலாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று மாத்தூர் சிவன் கோயிலுக்கு 'ஐந்து நிலைக் குத்துவிளக்கு', 'மூன்று நிலைக் குத்து விளக்கு' ஆகியவை கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.[4] திருமணஞ்சேரிக் கோயிலுக்குத் 'தொங்கும் விளக்கு' ஒன்று அளிக்கப்பட்டது. திருச்சாற்றுறை கோயிலுக்குச் செம்பினால் ஆன 32 அகல் விளக்குகள் அளிக்கப்பட்டன. முதலாம் இராசராசன் காலத்தில் ஸ்ரீவிசய மன்னனின் பிரதிநிதியாகிய நிமிலன் அகத்தீசுவரன் நாகைக் காயாரோகண சுவாமி கோயிலுக்குப் 'பாவை விளக்கு'

'குரக்கு விளக்கு', 'மத்த விளக்கு' போன்றவற்றைத் தானமாக அளிக்க, இரன் சடையன் என்ற தேவர்கண்ட ஆசாரியன் இவற்றை வடிவமைத்தான் என அக்கோயில் கல்வெட்டு கூறுகிறது.[5]

பெயர்கள்

முதலாம் இராசராசனின் சின்ன காஞ்சீபுரத்திலுள்ள கீழைக் கல்வெட்டில், மும்முடிச்சோழன் என்பவன் அரசனின் அனுமதியோடு பல நாடுகளை வென்று, அங்கிருந்து கொண்டுவந்த பொருட்களில் பத்து விளக்கு எரிக்க 100 ஆடுகளைத் துர்க்கை கோயிலுக்கு வழங்கினான். அவ்விளக்குகளுக்கு 'இராசராசன்' என்று பெயரிட்டான் எனக் குறிப்பிடப்படுகிறது.[6]

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் அணுக்கி நக்கன் பரவை நங்கை என்னும் பெண்ணரசி திருவாரூர் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்திருக்கிறாள். ஆரூரன் திருக்கோயிலுக்கு மாமன்னன் இராசேந்திரனும், பரவை நங்கையும் நேரில் பவனி வந்து கோயிலுக்குள் நுழைந்து இறைவன் முன்பு நின்று வணங்கினர். அவர்கள் நின்று வணங்கிய இடத்தில் பரவை ஒரு குத்துவிளக்கை ஏற்றினாள். இதைத் தவிர 15,579 பலம் எடையுள்ள 28 பிரம்மாண்ட குத்துவிளக்குகளையும் 'பச்சைப்பாவை உமைநங்கை', 'பாவை சரியாமுலை நங்கை' எனப் பெயரிடப்பட்ட இரண்டு பாவை விளக்குகளையும் அளித்திருக்கிறாள். எனவே அக்காலத்தில் விளக்குகள் பல பெயரிடப்பட்டு வழக்கில் இருந்துவந்திருக்கிறது என்பதை அறியமுடிகிறது.

விளக்கு தானங்கள்

ஒருவர் குற்றம் புரிந்து தண்டனை வழங்கப்படும்பொழுது, சில குற்றங்களுக்குக் கோயில்களில் விளக்கெரிக்கத் தானம் அளித்ததாகப் பல கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

ஒரு ஊரில் அண்ணன் தம்பி சண்டையில், தம்பி அடித்து அண்ணன் இறந்து விட்டான். வழக்கு ஊரார் சபை முன் வருகிறது. அண்ணனுக்குப் பின்னர் பெற்றோர்களை கவனித்துக்கொள்ளத் தம்பியைத் தவிர வேறு ஒருவரும் குடும்பத்தில் இல்லை. எனவே அவ்வூர்க் கோயிலுக்கு அரை விளக்கு எரிக்கப் பொருள் கொடுக்க வேண்டும் எனச் சபையினர் தீர்ப்புக் கூறினார்கள். இத்தீர்ப்பு முறைக்குச் 'சுத்த பட்டிகை' என்று பெயர் இச்செய்தி வட ஆர்க்காடு, தாமரைப்பாக்கம் அக்னீசுவரர் கோயில் கல்வெட்டில் காணப்படுகிறது.[8]

திருக்கோயிலூரில் உள்ள மூன்றாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று வேடன் ஒருவன் காட்டுப் பன்றியைத் துரத்திச் சென்று அதை குறிவைத்த அம்பானது, தவறி ஒருவர்மீது பாய்ந்த குற்றத்திற்காகக் கோயிலில் விளக்கெரிக்க 32 பசுக்களைத் தானமளித்ததைக் குறிக்கிறது.[9]

முதலாம் இராசராசனின் முன்னிலையில் குதிரைச் சேவகன் அரங்கன் காரியான சோழவிச்சாதிர முத்தரையன் என்பவனுக்கும், காரிகுளிப்பாகை என்பவனுக்கும் விற்போர் நடந்தது. போரில் சோழவிச்சாதிர முத்தரையன் எறிந்த அம்பு, காரிக்குளிப்பாகையின் தோளைத் துளைத்து அவன் இறந்துவிட்டான். இறந்தவனின் உறவு முறையினராகிய கண்டன் காரி, கண்டன் பொற்காரி, குட்டி பொன்னாடை ஆகியோர் அவனுக்காக நொந்தா விளக்கு அளித்தனர் எனக் கரந்தை சிவன் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[10]

இதைத் தவிர விழாக்களின்போது விளக்குகள் பிடிப்பதற்கும், அவற்றைப் பராமரிக்கவும் தானமளிக்கப்பட்டதையும், எவ்வளவு நேரம் விளக்குகள் எரிய வேண்டும் என்பதையும் சில கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

முதலாம் இராசேந்திர சோழனின் 9-ஆம் ஆட்சி ஆண்டில் கார்த்திகைத் திங்கள், கார்த்திகை விழா நாளில், விளக்கு எரிக்க 16 நாழி நெய்க்காக 16 ஆடுகளைத் திருப்பாற்றுறை மக்கள் கோயிலுக்குத் தானமாக அளித்துள்ளனர்.

மன்னார்குடி வட்டம், திருவீராமீசுவரம் கோயிலில் மூன்று விளக்குகள் $7\frac{1}{2}$ நாழிகை எரிப்பதற்காக 19 காசுகள் நிவந்தம் செய்து கொடுத்ததாக முதலாம் இராசேந்திரன் கல்வெட்டுக் கூறுகிறது.

எனவே மேற்கண்ட வரலாற்றுச் சான்றுகள்மூலம் கோயில்களில் என்றென்றும் விளக்குகள் எரிவதற்கும், இதன்மூலம் இதைச்சார்ந்த தொழிலைக் கொண்ட மக்கள் வளமாக வாழவும் வழிவகுத்துக் கொடுத்திருந்தனர் சோழ மன்னர்கள் என்பது விளங்குகின்றது.

அடிக்குறிப்புக்கள்

1. தஞ்சைக் கோயில் கல்வெட்டுக்கள் —தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு.
2. தென்னை வளம்,இலுப்பை கட்டுரைகள், தமிழக வரலாற்றுக் கருத்தரங்கு.
3. சு. இராசகோபால், திருவையாறு.
4. A. R. E. 485 of 1902.
5. A. R. E. 161 of 1956-57.
6. A. R. E. 79 of 1921. S. I. I. vol. XIII No. 149.
7. திரு. பொன்னுசாமி, திருவாரூர், தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு,
8. திரு. கு. தாமோதரன், தமிழக வரலாற்று அருவியில் சில மணிகள்; பக். 64.
9. A. R. E. 138 of 1906,
   திருமதி மார்க்சியகாந்தி, இராசராசன் கண்ட விற்போர், கல்வெட்டு இதழ்-3.

சோழர் காலத்தில் ஆறுகளும், வாய்க்கால்களும்

ச. செல்வராசு
தொல்பொருள் அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சிதம்பரம்

தென்னகத்தின் தானியக் களஞ்சியமாகத் திகழ்வது தஞ்சை. இத்தஞ்சையை தலை நகராகக் கொண்டு சீரும் சிறப்புமாக ஆட்சி புரிந்தவர்கள் சோழ மன்னர்கள் ஆவர். காவிரியாறும் அதன் கிளை களாக நிலவும் பல சிற்றாறுகளும் சோழ மண்டலத்தை என்றும் குன்றாத வளம் படைத்த பெரு நாடாக்கியது.

சோழ மன்னர்கள் மிகவும் திறமையாக, நேர்த்தியாக ஏரிகளை யும், குளங்களையும் வெட்டி ஆற்று நீரைத் தேக்கி வாய்க்கால்கள் அமைத்து நில வளத்தை உயர்த்தியுள்ளார்கள். பல்லவர்கள் காலத்தில் காடு மேடாக இருந்த நிலங்களையும், தரிசு நிலங்களையும் செம்மைப் படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற முறையில், திருத்தியமைத்த பெருமை சோழர்களையே சாரும். ஒரு நாட்டின் இன்றியமையாத வருமானம் அந்நாட்டின் விளை பொருளைக் கொண்டே அமையும். நிலத்தின் தன்மை குறைந்தால் விளைச்சல் குறையும். அதனால் அரசுக்குச் சேர வேண்டிய நில வரிகள் தேங்கி நிற்கும் சோழ மன்னர்கள் இதன் அடிப்படையை நன்கு உணர்ந்ததன் விளைவு தான் பெரிய பெரிய ஏரிகளும், குளங்களும், வாய்க்கால்களும் ஆகும். ஏரிகளையும், வாய்க்கால்களையும் பற்றிய பண்டைய குறிப்புக்களில், கல்வெட்டுக்களில் சோழர்கள் காலத்தில் தான் அதிகமான குறிப்புக் கள் கிடைக்கின்றன. இக்குறிப்புக்களைக் கொண்டு நோக்கும்போது சோழர்கள் காலத்தில்தான் நீர்ப் பாசன வசதிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

சங்க காலச் சோழர்கள்

சோழன் கரிகாற் பெருவளத்தான் காவிரியின் இருமருங்கும் கரையெடுத்து, அதனை நாட்டிற்குப் பயன்படும்படி செய்து புகழ் எய்தியவன் ஆவான். ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழனுலாவில் 'பொன்னிக் கரை கண்ட பூபதி' என்று இவனைப் புகழ்ந்துள்ளார் [1]

திருவாலங்காட்டுச் செப்பேட்டிலும், வீரராசேந்திர சோழனது கன்னியாகுமரிக் கல்வெட்டிலும் கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்தது கூறப்பட்டுள்ளது.

ஆறுகளும், ஏரிகளும், வாய்க்கால்களும்

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் ஆட்சி புரிந்த சோழ மன்னர்கள், பல ஆறுகளையும், ஏரிகளையும், குளங்களையும் புதியதாக அமைத்தும், பழுது பார்த்தும், பண்படுத்தியும் உள்ளனர். இவை தொன்று தொட்டு வழங்கி வரும் பெயர்களால் அறிய முடிகின்றது. தஞ்சைக்கு வடபுறத்தில் உள்ள வடவாறு வீரசோழ வடவாறு எனவும், திருப்பனந்தாளுக்கு வடக்கேயுள்ள கொள்ளிடப் பேரணையில் இருந்து பிரிந்து வடக்கே ஓடும் வடவாறு மதுராந்தக வடவாறு எனவும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழர்கள் காலத்தில் வாய்க்கால்களையும் ஏரிகளையும் மன்னர்கள் பெயரிலும், தேவிகள் பெயரிலும் மற்றும் அதிகாரிகள் பெயரிலும், அமைத்து, அதை காலங்காலமாகத் தொடர்ந்து அழைத்து வந்துள்ளனர். இராசேந்திர சோழன் தன் தலைநகரைத் தஞ்சையில் இருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றி அமைத்ததோடு மட்டுமின்றி, அவ்வூர் மக்களுக்கு உரிய நீர்ப்பாசன வசதியையும் அமைத்தான். கங்கை வரை சென்று தன் வெற்றியைக் கண்ட இவன் கங்கை நீரை எடுத்து வந்து அதன் நினைவாக ஓர் பெரிய ஏரியைத் தனது தலைநகருக்கு மேற்கே வெட்டி, அதில் கங்கை நீரைக் கலந்து, சோழ கங்கம் என்று பெயரிட்டான். மேலும் இதனை நீர்மயமான வெற்றி என்று குறிப்பதால் அதன் நினைவாக ஏற்படுத்தப்பட்டது இப்பேரேரி என்பர். இங்கு பல வாய்க்கால்களையும் வெட்டியுள்ளான். அவற்றில் குறிப்பிடத்தகுந்தது 'இராசராசன் வாய்க்கால்' ஆகும். தன் தந்தையின் பெயரில் வாய்க்கால் அமைத்துப் பெருமைபடுத்தியுள்ளான். இந்த ஏரி நீர் அவ்வூர் முழுவதும் தொடர்ந்து கிடைக்கும் வகையில் பெரிய மதகுகளையும் அமைத்து சீரான முறையில் நீர்ப்பாசனத்தை அமைத்து நாட்டு வளத்தை உயர்த்தி உள்ளான்.

மன்னர்கள் பெயர்களில் ஆறுகள்

மன்னர்கள் பெயர்களிலும் ஆறுகளை அழைத்தமை தற்பொழுது வழங்கி வரும் பெயர்களைக்கொண்டு அறியமுடிகின்றது. அவை யாவன : முடிகொண்ட சோழப் பேராறு, வீரஇராசேந்திர சோழப் பேராறு, புத்தாறான குலோத்துங்க சோழப் பேராறு. இப்

நோக்குமிடத்து இதைப் புதியதாக அமைத்து அதற்குக் குலோத்துங்கனது பெயரிட்டு அழைத்தமை நன்கு புலப்படுகின்றது.

தேவிகள் பெயர்களில் ஆறுகள்

மன்னர்கள் மட்டுமின்றி, அனைத்துச் செயல்களிலும் தேவிகளும் இணையான பங்கு பெற்றமை அக்காலக் கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகின்றது. கொடையளிப்பதும், கோயில் எழுப்புவதும், விளக்கு அமைப்பதும் மட்டுமின்றி நீர்ப்பாசனம் செய்தும், அதற்குரிய வழி முறைகள் வகுத்தும் தேவிகள் தங்களது பங்கை செவ்வனே செய்து வந்துள்ளனர்.

பிற வாய்க்கால்கள்

மன்னர்கள், தேவிகள் பெயர்களைத் தவிர, அரசு அதிகாரிகள் பெயர்களிலும் மற்றவர்களின் பெயர்களிலும் வாய்க்கால்களை ஏற்படுத்திச், சிறப்புச் செய்து உள்ளனர். அவையாவன; தாமோதர வாய்க்கால், தென்பூமி வாய்க்கால், தருமி வாய்க்கால், ஆனைமடை வாய்க்கால், வீரநாராயண வாய்க்கால், அம்மையப்பன் வாய்க்கால், திருவாஞ்சியதேவன் வாய்க்கால், சோமநாதன் வாய்க்கால், முன்னூற்றுவன் வாய்க்கால், மூவாயிரவன் வாய்க்கால் என்பன. இறுதியாக கூறப்பட்ட இரண்டு வாய்க்கால்களும் வணிகர்கள் தாங்கள் ஒரு குழு அமைத்து ஏற்படுத்திய வாய்க்கால்கள் ஆகும்.

ஏரி வாரியம்

நீர்ப்பாசன வசதிகள் அதிகம் மேற்கொள்ளும்பொழுது அதற்குரிய செலவுகளை ஈடு செய்ய வரியும் அதிகரிக்கும். அம்முறையில் ஏரிகளையும், வாய்க்கால்களையும், குளங்களையும் கண்காணிப்பதும், அவற்றைப் பராமரிப்பதும், அந்தந்த ஊர்ச் சபையாரின் பொறுப்பாக இருந்ததைக் கல்வெட்டுக்களிலிருந்து அறியலாம். அதற்கு என ஒரு குழுவை அமைத்து அதனை வாரியம் என்று பெயரிட்டு அழைத்தனர். ஏரியைக் காக்கவும், கண்காணிக்கவும், வரிவசூல் செய்யவும் ஏரிவாரியம் அமைத்துச் செயல்பட்டு வந்தமையைக் கல்வெட்டுச் செய்திகள் மூலம் அறியமுடிகின்றது. அந்தக் குழுவினர்கள் அவ்வப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதும் முதல் பராந்தகச் சோழன் காலத்து உத்திரமேரூர் கல்வெட்டிலிருந்து தெரிய வருகின்றது. சிறுசிறு ஊர்களில் உள்ள குளங்களில் கிடைக்கும் மீன் விற்பனையைக்கொண்டு, அந்தக் குளங்களைச் சீர்ப்படுத்த வேண்டும் என்ற பழக்கம் இருந்ததையும் அறிகிறோம். இன்னும் புதுச்சேரிக்குப் பக்கத்திலுள்ள பாகூர், திரிபுவனி போன்ற இடங்

களில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் குளங்களின் பராமரிப்புக்கென்று சில நிவந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன என்பது தெரிகிறது. மேலும் ஏரி ஆயம் என்ற சிறு வரியையும் வசூலித்து வந்துள்ளனர்.

ஏரிகளின் பிற அமைப்புக்கள்

ஏரியை வெட்டுவதோடு மட்டுமின்றி அந்நீரைத் தேக்கித் தகுந்த அளவு நீரை வெளியே எடுத்துச் செல்லவும் உபயோகப் படுத்தவும், ஏரி குளங்களிலிருந்து சிறுசிறு வாய்க்கால்களை அமைத்தனர். அவ் வாய்க்கால்களைப் பற்றியே மேலேக் கண்டோம். இந்த வாய்க்கால் களையும் ஏரி, குளங்களையும் இணைக்கும் இடத்தில் மடையை எழுப்பி உள்ளனர். இதுபோன்றே மடை, மதகு, குமிழி, தூம்பு ஆகியவைகளையும், வாய், வாய்த்தலை, தலைவாய் போன்ற நீர்க் கால்களையும் அமைத்துப் பாசனத்தில் மிகுந்த அக்கறை காட்டி யுள்ளனர்.[5] எனவே நிலங்களை அளந்து செம்மைப்படுத்தி நீர்ப் பாசன வசதியையும் அமைத்துச் செழிப்புடன் வாழ்ந்து நாட்டை மேல்நிலையில் வைத்த பெருமை சோழர்களையேச் சாரும் என் பதில் ஐயமில்லை.

அடிக்குறிப்புக்கள்

1 சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு.

2 டாக்டர் இரா. நாகசாமி, திருத்துறைப் பூண்டி கல்வெட்டுக்கள்

3 ஆ. பத்மாவதி, நன்னிலம் கல்வெட்டுக்கள்.

4 திரு. அமலநாதன், கையேடு, நீர்ப்பாசனங்கள்.

5 சு. இராசகோபால், பண்டைய நீர்ப்பாசன அமைப்புகள் பற்றிய தொல்லியல் ஆய்வுகள்.

பெருமுக்கல் கல்வெட்டு

புலவர் தாமரைக்கண்ணன்
அச்சிறுப்பாக்கம்

விக்கிரம பாண்டியன் ஆட்சியில் பெருமுக்கல்

தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில், திண்டிவனத்திலிருந்து மரக்காணம் போகும் பேருந்து வழியில் 11-வது கிலோ மீட்டரில் பெருமுக்கல் என்னும் ஊர் உள்ளது.

ஊரை அடுத்து மூன்று பெரிய குன்றுகள் இருப்பதால், பெருமுக்கல் (பெரிய மூன்று கற்கள்) என்ற பெயர் இவ்வூருக்கு வழங்கியது.

கல் என்றால் சிலை, மலை, பாறை, முத்து, வீரக்கல், கபூனம், விஷம் தீர்க்கும் மணி என்ற பொருள்கள் உண்டு. நோய் போக்கும் அரிய மருந்துச் செடிகள் நிறைந்து இருந்ததாலும் 'பெருமுக்கல்' என்ற பெயர் இவ்வூருக்கு வந்திருக்கலாம்.

'முக்கல்' என்பதற்கு 'மக்கள்' என்ற சிறப்புப் பொருள் உண்டு. அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த பெருமக்கள் வாழ்ந்ததால், இவ்வூர் பெருமுக்கல் என்னும் பெயரைப் பெற்றிருக்கவும் வாய்ப்பு உண்டு.

முக்கல் ஆசான் நல்வெள்ளையார் என்ற சங்ககாலப் புலவர் பெருமுக்கலில் வாழ்ந்துள்ளார்.

அவர் பாடிய சங்கப்பாடல் ஒன்றே ஒன்றுதான் கிடைத்துள்ளது. நற்றிணையில் 272-ஆம் பாடலாக விளங்கும் அப்பாடல் நெய்தல் நிலத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது.

நீர்க்காக்கைச் சேவல் ஒன்று சூல்கொண்ட தன் பெட்டைக்குக் கொடுக்க அயிரை மீனைத் தேடும் கற்பனையுடைய பாடல் அது.

பெருமுக்கலுக்கு அண்மையில் நெய்தல் நிலம் இருப்பதால், நெய்தலில் திளைத்தது போலும் புலவர் கற்பனை.

பெருமுக்கல் புற்றிடங்கொண்டார் கோயில்

பெருமுக்கல் மலையுச்சியில் விளங்குகிறது புற்றிடங்கொண்டார் கோயில். இக்கோயிலில் ஒன்பது கல்வெட்டுக்கள் உள்ளன.

முதலாம் குலோத்துங்கன் காலத்திலேயே இந்தக் கோயில் இருந்தது. இருந்தாலும், விக்கிரமசோழனின் மூன்றாவது ஆட்சி யாண்டில் (கி.பி. 1121) கனகராயன் என்னும் காக்கு நாயகன் இந்தக் கோயிலைக் கட்டியுள்ளான்.

உப்பளம் நன்கொடை

மரக்காணம் ஊர்ப் பெருமக்கள் இந்தக் கோயிலுக்கு ஓர் உப்பளத்தை நன்கொடையாக அளித்திருந்தனர். உப்பளத்தின் வருவாயைக்கொண்டு நீண்ட நாள்களாகக் கோயில் திருப்பணிகள் செம்மையாக நடந்து வந்தன.

சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த கோப்பெருஞ்சிங்கன் ஆட்சிக்குப் பிறகு அந்த உப்பளத்தின் வருவாய் கோயிலுக்குச் சரியாகக் கிடைக்கவில்லை. அதனால், கோயிலின் நீர்ச்சுனைகளும், குளங்களும் பாழ்பட்டுப் போயின.

அந்தத் தன்மத்தைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும் என்று விக்கிரம பாண்டியனுடைய ஏழாவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1275) பெருமக்கள் ஒன்றுகூடி முடிவெடுத்துள்ளனர்.

இச்செய்தியைப் பற்றிக் கூறும் விக்கிரம பாண்டியனுடைய கல்வெட்டு, சோழர்களின் ஊராட்சி முறையைப் பின்பற்றிய சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்:

"ஸ்வஸ்திஸ்ரீ கோமாற பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரம பாண்டிய தேவற்கு யாண்டு ஏழாவது (கி.பி. 1275) ஜயங் கொண்ட சோழமண்டலத்து ஓய்மானாடான விசைய ராசேந்திர வளநாட்டு, மரக்காணத்து ஊரவரோம், புத்தூரான உத்தம சோழப் பாண்டியராயன் வாய்க்கா வளத்துக்குக் கிழக்குத் திருமலைச் சொக்கன் என்று பேர் கூவப்பட்ட அளம் ஒன்றும் பெருமுக்கில் திருமலையில் உடையார் ஸ்ரீவான்மிகீசுவரமுடைய நாயனார்க்கு, குடிநீங்கா தேவதானம் நெடுநாள்பட அனுபவித்துப் போந்து பல்லவன் கோப்பெருஞ்சிங்கர் நாளது துடங்கி, வாபி, குளங் கரையும் அழிந்து பாழ் கிடக்கையில், இவ்வாண்டைப் பங்குனி மாதம்

முதல், குடி நீங்கா தேவதானம் கடிந்து இன்னாயனார்க்குத் திருநாமத்துக் காணியாகத் தந்தோம் மரக்காணத்து ஊரவரோம், இவை அணுக்கப் பல்லவரையன் எழுத்து, செம்பியன் பல்லவரையன் எழுத்து, தென்னவதரையன் எழுத்து, வாகுலராயன் எழுத்து, மழவராயன் எழுத்து, தேவகண்டன் எழுத்து, குருகுலராயன் எழுத்து, செம்பியதரையன் எழுத்து, மீனவன் மூவேந்த வேளான் எழுத்து, செழியதரையன் எழுத்து, விசையராயன் எழுத்து, திண்டிவனமுடையான் எழுத்து, வானவன் விழுப்பரையன் எழுத்து, தேவாண்டை எழுத்து, விக்கிரம சோழப் பட்டின னாட்டு வேளான் எழுத்து, குலோத்துங்க சோழப் பட்டின னாட்டு வேளான் எழுத்து, குன்றமெடுத்தான் எழுத்து, திருவண்ணாமலையுடையான் எழுத்து, குருகுலராயன் ஆதிபுருஷன் எழுத்து, இராசமாணிக்கப் பல்லவரையன் எழுத்து, அருள்மொழிப் பல்லவரையன் எழுத்து, பட்டின நாட்டு வேளான் எழுத்து, தென்னவராயன் எழுத்து, இராசராசப் பட்டின னாட்டு வேளான் எழுத்து, வில்லவன் விழுப்பரையன் எழுத்து, திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து, சிவக்கொழுந்தன் இராசேந்திர சோழ விழுப்பரையன் எழுத்து, அரையன் சிற்றம்பல முடையான் எழுத்து, அரும்பாக்கியான் எழுத்து, நல்லாதன் திருவண்ணாமலையுடையான் மளவராயன் எழுத்து.

(கட்டுரை ஆசிரியரால் 12.7.1980-ல் இக்கல்வெட்டு படியெடுக்கப்பட்டது.)

தமிழகத்தில் உள்ள எத்தனையோ கல்வெட்டுகளில் சான்றாகவும் நெட்டெழுத்தாகவும் பலர் இருந்ததை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இப்படி ஒரே கல்வெட்டில் அதிகாரிகளும் ஊர்ப்பெரு மக்களுமாக முப்பத்தொரு பெயர்களைக் காண்பது சுவையான ஒன்றாகும்.

மரக்கானத்து (தற்போதுள்ள மரக்காணம்) ஊர்ப்பெருமக்கள் பெருமுக்கல் திருமலையில் உள்ள வன்மீக ஈசுவரர் கோயிலுக்கு ஓர் உப்பளத்தை நன்கொடையாகக் கொடுத்ததை இக்கல்வெட்டு திருத்தம் செய்து உறுதிப்படுத்துகிறது.

விக்கிரம பாண்டியனுடைய காலத்திய இக்கல்வெட்டிலிருந்து பலவகைப்பட்ட சுவையான செய்திகளை நாம் தெரிந்துகொள்கிறோம்.

ஒன்று,

திண்டிவனமுடையான், திருவண்ணாமலையுடையான், திருச்சிற்றம்பலமுடையான் என்று ஊர்ப் பெயர்களையும் தங்கள் பெயரோடு சிலர் அந்த நாளில் கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது. இவ்வூர்கள் பெருமுக்கலுக்கு அண்மையிலும் சேய்மையிலும் இப்போதும் உள்ளன.

மற்றொன்று,

அரையன், பல்லவரையன், மழவராயன், மூவேந்தவேளான் விழுப்பரையன் என்பன அக்காலத்தில் அரசர்கள், வீரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் வழங்கிய பட்டப் பெயர்களாகும்.

அரசர்களால் வழங்கப்பட்ட அந்தப் பட்டப் பெயர்களையுடைய பல்வேறு அதிகாரிகளும் பெருமக்களும் இந்த நன்கொடையைக் குறிக்கும்போது சான்றாக இருந்திருக்கிறார்கள்.

இன்னொரு முக்கிய வரலாற்று செய்தியையும் இக்கல்வெட்டு நமக்குத் தெரிவிக்கிறது.

தற்போதுள்ள திண்டிவனம் (கிடங்கில்) எனும் நகருக்கு மேற்கே உள்ள மாவிலங்கையைத் தலைநகராகக் கொண்டு கடைச் சங்க காலத்தில் ஆண்டவன், நல்லியக்கோடன் எனும் அரசன். அவன் மரபினராகிய ஆதன்வில்லி, வில்லிஆதன் முதலியோரை நினைவூட்டும் வகையில் 'நல்லாதன்' எனும் பெயரும், நல்லியக் கோடன் ஆண்ட 'ஒய்மா நாடு' எனும் நாட்டுப் பெயரும் சுமார் எழுநூறு ஆண்டுகட்கு முன்பு வரை வழக்கில் இருந்தன என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

அடுத்து, விக்கிரம சோழப்பட்டின நாடு, குலோத்துங்க சோழ பட்டின நாடு இராசராசப் பட்டின நாடு என்று பல பட்டின நாடுகள் அரசர்களின் பெயர்களோடு சேர்ந்து கடற்கரையை ஒட்டிய நாடுகளாக விளங்கின என்று வரலாற்று உண்மையையும் இக்கல்வெட்டு நமக்கு உணர்த்துகிறது.

மற்றும் பட்டின நாட்டு வேளான் என்பவன் சிறுபாணாற்றுப் படை என்னும் பத்துப்பாட்டு நூல் கூறும் எயிற்பட்டினத்தில் (இப்போதுள்ள மரக்காணத்தின் பகுதிகளில்) இருந்தவனாக இருத்தல் வேண்டும் என்ற எண்ணத்தையும் அது உண்டாக்குகிறது.

யாவற்றுக்கும் மேலாக இப்போது மரக்காணம் என்று வழங்கி வரும் ஊரின் பெயர் மரக்கானம் என்ற அழகான பைந்தமிழ்ச் சொல்லாக இருந்திருக்கிறது.

மரம் என்றால் மரம், மூலிகை, மரக்கலம், வண்டி, படகு என்று பல பொருள்கள் உண்டு.

கானம் என்பதற்கு இசைப்பாட்டு, காடு, சோலை, வாசனை, வேதத்தின் இசை, கூட்டம், நிறை என்றெல்லாம் பொருள் உண்டு.

மரக்கானம் என்பதற்கு மூலிகைகள் நிறைந்த காடு என்றும், மரக்கலங்கள் நிறைந்த துறைமுகப்பட்டினம் என்றும் காற்றில், பண் இசைக்கும் மரங்கள் அடர்ந்த காடு என்றும், வேதங்களின் இசை முழங்கப் பெற்ற மரங்கள் செறிந்த ஊர் என்றும் ஆழ்ந்த அழகிய பல பொருள்களைக் கொள்ளலாம்.

அவ்வளவு அழகான பொருள்களைக் கொண்ட மரக்கானம் என்னும் ஊரை நாம் இப்போது மரக்காணம் என்று தவறான பொருளில் அழைக்கிறோம் என்பதை இக்கல்வெட்டால் நாம் அறிகிறோம்.

வரலாற்றுக்கு முற்பட்ட தஞ்சை மாவட்டம்

கே. எஸ். சம்பத்
வ. மு. அகழ்வாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை

மனித இன வரலாற்றை ஆய்வோர், அதனை வரலாற்றுக்கு முந்தையகாலம், வரலாற்றுக்காலம் என இருவகையாகப் பிரிப்பர். எழுத்துச் சான்றுகள் தோன்றிய பிறகு கிடைக்கும் செய்திகளை வரலாற்றுக் காலத்தில் சேர்ப்பர். அதற்கு முந்தைய எழுத்துச் சான்றுகள் இல்லாத காலத்தினை வரலாற்றுக்கு முந்தைய காலம் எனக் குறிப்பிடுவர்.

தமிழ்நாட்டை நெடுங்காலம் ஆண்டுவந்த மூவேந்தர்கள் சேர, சோழ, பாண்டியர்கள் ஆவர். சோழர் காலத்தினைப் பற்றிக் கல்வெட்டுக்கள், இலக்கியங்கள், ஆலயங்கள், மற்றும் சுவடிகள் மூலமாக நன்கு அறிய முடிகிறது. ஆனால் சோழநாட்டின் தொல் பழங்காலத்தைப் பற்றிச் சோழநாட்டில் மக்கள் தொடர்ந்து வாழ்ந்ததற்கான தொடர்ச்சியினைப் பற்றிப் பல தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்துள்ளனர். இன்னமும் ஆராய்ந்து வருகின்றனர்.

தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, தென்னார்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகள் சோழ நாட்டின் பகுதிகளாகக் கூறப்படுகின்றன

இவைகளில் குறிப்பாகச் சோழநாட்டின் மையப் பகுதியான தஞ்சை மாவட்டத் தொல் பழங்காலத்தினைப் பற்றி இக்கட்டுரையில் ஆராய்வோம்.

மையோசின், பிளையோசின் காலம்

'கடைப் பேரூழி'க்காலம் 650லட்சம் ஆண்டுகளிலிருந்து 10லட்சம் ஆண்டுகள் வரை நீண்டு கிடக்கின்றது. 640 லட்சம் ஆண்டுகளைக் கொண்டது. இக்காலத்தில் (Eiocene) இயோசீன் ஊழிக்கு முந்தைய கிரிடேசியஸ் ஊழிக்காலத்தில், காவிரிக்கும் வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஊடுருவியிருந்த கடல் இக்காலத்தில் பின் வாங்கியது. இதன் விளைவால் நேர்ந்த படிவுகளிலிருந்துதான் தஞ்சை, காரைக்கால் பகுதிகளில் பெட்ரோலியம் எடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மற்றும் தஞ்சை, காரைக்கால் கடற்கரைப் பகுதிகளில் காணப் படும் படிவ அமைப்புக்கள் மையோசீன் (Miocene) பிளையோசீன் (Pliocene) காலத்தைச் சார்ந்தவையாகும்.

வரலாற்றுக் காலத்தில் உட்படும் ஆண்டுகளை விடப் பல மடங்கு தொல் பழங்காலத்தில் உள்ளன. ஏறக்குறைய 20 லட்சம் ஆண்டுகளிலிருந்து கி.மு. 4000 வரைக்கும் இருக்கக் கூடிய காலத்தை உலக அளவில் வரலாற்றுக்கு முந்தையகாலம் எனத் தொல்லியல் அறிஞர்கள் மதிப்பிடுகின்றார்கள்.

தொல் பழங்காலத்தைப் பழைய கற்காலம், இடைக் கற்காலம், கடைக் கற்காலம், புதிய கற்காலம் மற்றும் பெருங் கற்காலம் என வகைப்படுத்திக் கொள்ளலாம்.

பழைய கற்காலம்

தமிழகத்தில் இக்காலம் 3 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இக்காலத்தில் மனிதன் விலங்குகளை வேட்டையாடி, குகைகளி லும், திறந்த வெளிகளிலும் திரிந்து வந்தான். அப்போது அவன் கற்களைக் கொண்டு, கைக்கோடாரி, கிழிப்பான், மரபீசியம் அல்லது கோடகக் கருவி, முக்கோணக்கருவி, நீள்வட்டக்கருவி, பிறைக்கருவி, எனப் பல வகைகளில் கருவிகளைச் செய்து வாழ்ந்து வந்த காலமாகும்.

தஞ்சை மாவட்டத்தில் வங்கானங்குடிக்காடு என்னுமிடத்தில் முதற் கற்காலக் கருவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இருப்பினும் முதற் கற்காலக் கருவிகள் செங்கை மாவட்டத்திலும் வடஆர்க்காடு மாவட்டத்திலும் அதிக அளவில் கிடைக்கின்றன. பாலாற்றுக்கு வடக்கே நிறையக் கருவிகளும், தெற்கே மிகக் குறைந்த அளவிலும் கிடைக்கின்றன. ஏனெனில் இக்கருவிகள் செய்வதற்குப் பயன்படும் குவார்ட்சைட் எனப்படும் கற்கள் வடக்கு மாவட்டங்களைப் போல் தென் மாவட்டங்களில் கிடைப்பதில்லை. எனவே தஞ்சை மாவட்டத் தில் நமக்குப் பழைய கற்காலத்தினைப் பற்றிய விவரங்கள் போதிய அளவில் கிடைக்கப் பெறவில்லை.

கடைக் கற்காலம்

இக்காலம் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இக் காலங்களில் மனிதன் சிறிது நாகரிகமுற்று விலங்குகளை வேட்டை யாடியதிலிருந்து உணவுப் பொருட்களைத் தயார் செய்யும் நிலைக்கு

முன்னேறியிருந்தான். நுண்ணிய கருவிகளைத் தயார் செய்யும் கலையையும் கற்றிருந்தான்.

தஞ்சை மாவட்டத்தில் கடைக் கற்காலக் கருவிகள் பூதலூரிலும், வல்லத்திலும் ஆனந்தக்காவேரி ஆற்றங்கரையிலும் கிடைக்கப் பெற்றுள்ளன.

பூதலூர் கடைக்கற்காலக் கருவிகள் கறுப்பு பசால்ட் (Black Basalt) எனப்படும் படிவத்திலிருந்து உருவாக்கப்பட்டது. சில வகைக் கருவிகள் கிரிஸ்டல், அகேட் எனப்படும் உயர்வகைக் கல்லிலிருந்து செய்யப்பட்டவையாகும்.

இவ்வூரில் கிடைக்கப்பெற்றுள்ள கற்காலக் கருவிகளை மிகவும் அரியதொரு கண்டுபிடிப்பாக அறிஞர்கள் கருதுகின்றனர். இங்கு கிடைத்தவை மூலக்கல் (Core), முனைகள், (Points), ஆப்லிக் மற்றும் பிளாக் பேஸ்ட் ஆகியனவாகும்.

வல்லத்தில் சில சில்லுகள் (Flakes) கிடைத்துள்ளன. இவை குவார்ட்ஸ் எனப்படும் படிகக் கல்லிலிருந்து செய்யப்பட்டவை. இவற்றை குவார்ட்ஸ் தயாரிப்பு அல்லது வல்லம் தயாரிப்பு என அழைக்கின்றனர். இங்கு கிடைத்த முக்கியமான கல்வகைகள் கிரிஸ்டல் பாறை, கருங் குவார்ட்ஸ், (Black Quartz) அமெதிஸ்ட் ஆகியவை.

இக்காலக் கட்டத்திலும் கூட மக்கள் விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்து வந்தனர். அதே நேரத்தில் இப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள கடைக்கற்காலக் கருவிகளின் மூலம் தானியங்களை அறுவடை செய்யும் கலையினையும் அறிந்திருந்தார்கள் என அறிகிறோம்.

மேற்கண்ட கற்காலக் கருவிகளின் கண்டு பிடிப்புக்களிலிருந்து அப்பகுதிகளில் வாழ்ந்த மனிதர்கள் விலங்குகளை வேட்டையாடுவதிலிருந்து உணவுப் பொருட்களைத் தயார் செய்யும் நிலைக்கு வளர்ச்சி அடைந்துள்ளார்கள் என அறிகிறோம். மேலும் விலங்குகளை வேட்டையாட இங்கு கிடைத்த கருவிகளை வில்லின் முனையில் செருகி உபயோகித்துள்ளனர்.

ஆனால் நமக்கு இப்பகுதியில் கிடைக்கக்கூடிய கற்காலக் கருவிகளுடன் எந்தப் பானை ஓடுகளும் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே சரியான காலத்தினை கணிக்க இயலவில்லை. ஆனால் இக்கருவி

களின் தயாரிப்பு முறைகள் மற்ற இயல்புகளைக் கொண்டு காலத்தை கி.மு. 4000 என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். செம்பினால் செய்த அம்புமுனைகள் குறிப்பிட்ட அளவில் வல்லத்தில் கிடைத் துள்ளன என்பதும் இங்கே கருதத் தக்கது.

பெருங்கற்காலம்

இது 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம். ஈமச் சின்னங் களைப் பயன்படுத்தி மக்கள் வாழ்ந்த காலத்தைப் பெருங் கற்காலம் என அழைக்கிறோம். இறந்தவர்களைப் புதைத்த இடத்திலோ அல்லது அவர்களது எலும்புகளைப் புதைத்த இடத்திலோ பெரிய கற்களைக்கொண்டு எடுக்கப்பட்ட ஈமச் சின்னங்களைப் பெருங்கல் சின்னங்கள் என்று கூறலாம்.

தஞ்சை மாவட்டத்தில் கீழ்க்காணும் பகுதிகளில் பெருங்கற்கால பானைஓடுகளும், சவக்குழிகளும் காணக்கிடைக்கின்றன. அவை

1 தேரழுந்தூர் — மயிலாடுதுறை வட்டம்
2 கண்டகை — நன்னிலம்
3 பிட்டச்சேரி — நன்னிலம் வட்டம்
4 பெருங் கடம்பலூர் — நாகப்பட்டினம் வட்டம்

இப்பகுதிகளில் பெருங்கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கின்றன.

பழைய கந்தர்வக் கோட்டையில் மூன்று கற்கிடை கிடைத் துள்ளன.

மேலும் மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் தேற்குப் பகுதியின் சார்பில் திரு. பி. சரண் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட புற ஆய்வில் பல இடங்களில் முதுமக்கட் தாழிகள் புதைக்கப்பட் டிருக்கும் இடங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. மேலே கூறப் பட்டிருக்கும் இடங்களில் வெளிக் கொணரப்பட்ட தாழிகள் பெருங் கற்கால கருப்பு சிவப்பு நிறப் பானை ஓடுகளுடன் இணைந்து கிடைத் துள்ளன. கீழ்க்கண்ட பகுதிகளிலும் அவை பெருமளவில் கிடைக் கின்றன.

1 ஆக்கூர்
2 கீழ் வேளூர்
3 சிக்கல்

4 தில்லையாடி
5 வல்லம்
6 கீழப்பெரும்பள்ளம்
7 மணிக்கிராமம்
8 வீரமாத்திருப்பு
9 வானகிரி
10 பழையாறைக்கு அருகிலுள்ள நந்தன்மேடு
11 இடைமணல்

சமீப காலத்தில், மயிலாடுதுறை வட்டத்தில் கொத்தவநல்லூரிலும் சில முதுமக்கட் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன*. ஒரு தாழியில் மனிதனின் சுட்ட எலும்புகள் கிடைத்துள்ளன. தாழியின் உள்ளே கருப்பு மற்றும் கருப்பு-சிவப்பு நிற கலையங்களும், பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. தாழியின் அடிப்பகுதி முக்கோண வடிவிலான கருங்கல் பீடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பெருங்கற்காலச் சின்னங்கள் பல்வேறு வகைப்படும். அவற்றைத் தொல்லியல் வல்லுநர்கள் பல வகையாகப் பிரித்துத் தொகுத்துள்ளனர். அவையாவன: 1 கல்திட்டை, 2 கல்பதுக்கை 3 மண்குவை, 4 கல்குவை, 5 கற்கிடை, 6 கல்வரிசை, 7 தொப்பிக்கல் 8 குடைக்கல், 9 குடைவரைத் தாழ்வறைகள், 10 தாழிகள் முதலியனவாகும்.

நமக்குத் தஞ்சைப் பகுதியில் கிடைக்கப்பெற்றுள்ள பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் பெரும்பாலும் தாழி (urn) வகையைச் சார்ந்தவையே. பழைய கந்தர்வக்கோட்டையில் கற்கிடை வகையைச் சார்ந்த ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன.

மேற்கண்ட கூற்றுக்களின் வாயிலாகச் சோழ நாட்டில், மனித இனம் தொடர்ந்து வாழ்ந்திருந்ததற்கான அறிகுறிகள் நமக்குத் தெரியவருகிறது. பழையகற்கால, கடைக்கற்கால மற்றும் பெருங்கற்கால மனிதர்கள் அங்கு வாழ்ந்திருப்பதோடு தங்கள் வாழ்க்கை முறையினையும் சிறப்பாக அமைத்துள்ளனர் என்பதையும் அறிகிறோம்.

* கல்வெட்டாய்வாளர் அ. இராசேந்திரன் கண்டுபிடித்தவை.

பழையாறை - அகழ்வாய்வு

து. துளசிராமன்
அகழ்வாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்தில் கும்பகோணத்திற்குத் தென்மேற்கே நான்கு கி.மீ. தூரத்தில் உள்ள கீழ்ப்பழையாறு என்னும் சிற்றூரே முன்னாளில் பிற்கால சோழர்களின் இரண்டாவது தலைநகரமாகவும், அரச குடும்பத்தினரின் வாழ்விடமாகவும் விளங்கிய பழையாறையாக இருத்தல் வேண்டும். அக்காலத்திய பழையாறை நகரம், வடக்கே தற்கால தாராசுரத்திலிருந்து தெற்கே நந்தன்மேடு வரை பரவியிருந்திருக்கலாம். இதற்கு ஆதாரமாக நுழையூராகிய முழையூர், பம்பப்படையூர், ஆரியப் படையூர், புதுப்படையூர், மணப்படையூர், சோழன் மாளிகை, இராசேந்திரன்பேட்டை என வரலாற்றுத் தொடர்புடன் கூடிய பெயர்களோடு அமைந்த ஊர்கள் இங்கு ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ளமையைக் கூறலாம்.

பழையாறையின் தொன்மையும், பெயராய்வும்

பட்டீஸ்வரத்திற்கு மேற்கே உள்ள நந்தன்மேட்டுப் பகுதியிலும், கீழ்ப்பழையாறைக்குத் தென்மேற்கே உள்ள திப்பிராசபுரத்திலும், உடையாளூருக்கு அருகிலும் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. இவை பழையாறைப் பகுதியில் பெருங்கற்காலம் முதல் மனிதர்களின் குடியிருப்புப் பகுதிகள் இருந்திருக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. தொடர்ந்து இவ்விடம் படிப்படியாகப் பெருகிப் பல்லவர் காலத்தில் நந்திபுரி, நந்திபுரம் என்னும் பெயரோடு திகழ்ந்தது. பல்லவ மன்னன் நந்திவர்மன் இதனைத் தன் பேரரசின் தென்பகுதித் தலைநகரமாகக் கொண்டான்.

தேவார மூவர், இதனைப் பழையாறை, ஆறை, பழசை எனப் பல பெயர்களில் குறிக்கின்றனர். சோழர் காலத்தின் முற்பகுதியில் அதாவது முதல் இராசராசன் காலம் வரையில் 'நந்திபுரமாகிய பழையாறை' என்றும்; முதலாம் இராசேந்திரன் காலத்தில் இவன் சிறப்புப் பெயரால் 'முடிகொண்டசோழபுரம்' என்றும், வீரராசேந்திரன் காலத்தில் 'ஆகவமல்ல குலகாலபுரம்' என்றும்,

இரண்டாம் இராசராசன் காலத்தில் 'இராச்ராசபுரம்' என்றும், பிற்காலத்தில் மீண்டும் 'முடிகொண்டசோழபுரம்' எனவும் பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டது.

கல்வெட்டுக்கள் குறிக்கும் பழையாறை அரண்மனைப் பகுதிகள்

பழையாறையிலிருந்த அரண்மனைப் பகுதிகளைப் பற்றிச் சோழர் கால கல்வெட்டுகளில் பல குறிப்புகள் காணப்படுகின்றன.

முதலாம் இராசராசன் காலத்திய திருச்செங்கோட்டுச் செப்பேடு, வரி செலுத்தாதவரை ஒதுக்க வேண்டி வந்தாலோ, குறைகள் ஏதாவது ஏற்பட்டாலோ சோழர் கோநகருள் ஒன்றாகிய நந்திபுரத்தில் பின் பற்றப் பெறும் விதி முறைகளின் படியே முடிவு எடுக்கப்பட வேண்டும் எனக் குறிக்கிறது.

பழையாறையில் 'அவனிநாரணபுரம்' என்னும் பகுதி இருந்ததைத் தஞ்சைக் கோயிற் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

முதல் இராசேந்திர சோழனின் கல்வெட்டுக்கள், பழையாறை அரண்மனையின் தெற்குப் பக்கத்தில் உணவு சாலை இருந்ததையும், மற்றும் சனிமண்டபம், மதுராந்தகன் திருமாளிகை போன்றவை இருந்ததையும் குறிக்கின்றன.

முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டொன்று பழையாறை அரண்மனையில் 'வாணாதிராயன்' இருக்கை ஒன்று இருந்ததையும், விக்கிரம சோழனின் கல்வெட்டால் இராசேந்திரசோழன் என்னும் பெயரால் 'வெளிமேல மண்டபம்' ஒன்று இருந்ததையும் அறிகிறோம்.

முதலாம் இராசராசனின் தமக்கை குந்தவைப் பிராட்டியாரின் கல்வெட்டுக்கள் பழையாறை அரண்மனையிலிருந்த ஆதிபூமியையும், ஆச்சி கோயிலின் முன் இருந்த கூடத்தையும் குறிக்கின்றன.

வேப்பத்தூர்க் கல்வெட்டொன்று பழையாறை அரண்மனையில் இராசேந்திரன் என்னும் பெயரால் ஒரு சாலை (மண்டபம்) இருந்ததைக் குறிக்கிறது.

மேற்கண்ட கல்வெட்டுக்கள் குறிக்கும் பழையாறை அரண்மனைப் பகுதிகளை வெளிப்படுத்தி அக்கால மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கை நெறிகளை முறையாக ஆய்வு செய்யும் பொருட்டுத் தொல்லியல் மேற்பரப்பு ஆய்வையும், அகழ்வாய்வையும் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மேற்கொண்டது.

மேற்பரப்பாய்வு

1964-65 ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் ஆய்வுத்துறை பழையாறையில் தொல்லியல் மேற்பரப்பாய்வு மேற்கொண்டு சோழர்கால, கட்டடப் பகுதிகளின் எச்சங்கள் மற்றும் முதுமக்கள் தாழிகள் ஆகியவற்றைக் கண்டு பிடித்தது.

1984-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை நந்தன்மேடு, நாதன்கோயில், கீழப்பழையாறை, சோழன் மாளிகை ஆகிய இடங்களில் விரிவான தொல்லியல் மேற்பரப்பு ஆய்வு செய்தது. நந்தன்மேடு என்பது பட்டீஸ்வரத்துக்கு மேற்கே சுமார் பத்து ஏக்கர் நிலப் பரப்பிற்கு பரந்து காணப்படும் மேட்டுப் பகுதியாகும். இம்மேட்டினையொட்டி 'திருமலைராஜன்' ஆறு பாய்கிறது. மேட்டின் வடக்குப் பகுதியை ஆறு அரித்துச் சென்றுள்ளது. இப்பகுதியை ஆய்வு செய்ததில் செங்கற் சுவர் பகுதி காணப்பட்டது. இம்மேட்டில் ஏராளமான அளவிற்கு இடைக்காலப் பானை ஓடுகளும் கல்மணிகளும், கண்ணாடி மற்றும் சங்கு வளையல் துண்டுகளும், சுடுமண் கெண்டியின் மூக்குப் பகுதிகளும் கிடைத்துள்ளன. இப் பகுதியை நந்தன் என்னும் மன்னன் ஆண்டதாகவும் அவனுடைய மாளிகை இருந்த பகுதி இதுவென்றும் செவிவழிச் செய்தி செப்புகிறது. இதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதுமில்லை. நந்தன் என்பது நந்திவர்மனைக் குறிக்கலாம்.

நாதன் கோயில் என்னும் ஊரில் நந்திபுர விண்ணகரம் என்னும் கோயில் உள்ளது. இக்கோயிலுக்கு வடமேற்குப் புறத்தில் ஒரு மேடு உள்ளது. இம்மேட்டில் மேற்பரப்பு ஆய்வு செய்ததில் மத்திய காலப், பானை ஓடுகளும், சீனநாட்டுப் செலிடன் இனப் பானை ஓடுகளும், சுடுமண் கெண்டியின் மூக்குப் பகுதிகளும், கண்ணாடி வளையல் துண்டுகளும் கிடைத்தன. இங்கு கிடைத்த சில முழுமையான செங்கற்கள் (19X19 செ.மீ.) சதுர வடிவில் காணப்படுகின்றன.

கீழப்பழையாறை என்பது முழையூரிலிருந்து பம்பப்படையூர் வழியாகத் திருமலைராஜன் ஆற்றினைக் கடந்து சென்றால் ஆற்றுக்கு தென்புறத்தில் காணப்படும் ஒரு சிற்றூராகும். இவ்வூரின் தென் மேற்கில் சோமநாதசாமி ஆலயம் உள்ளது. பிற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்த இவ்வாலயத்திற்குத் தெற்கிலும் தென்மேற்கிலும் சுமார் இருபது ஏக்கர் பரப்பில் பரந்த மேடு காணப்படுகிறது. இதில் தற்போது பயிர் செய்யப்பட்டு வருகிறது. இம்மேட்டிலிருந்து கருப்பு சிவப்பு வண்ணப் பானை ஓடுகள் சிலவும், மத்திய

கால ஓடுகளும், சுடுமண் விளக்குப் பகுதிகளும், பீங்கான் ஓடுகளும் கிடைக்கின்றன.

பட்டீச்வரத்திற்கு வடக்கேயும் தாராசுரத்திற்கு மேற்கேயும் உள்ள ஒரு சிற்றூர் சோழன் மாளிகை என்பது. இவ்வூருக்கு மேற்கே திருமலைராஜன் குளத்திற்கு பக்கத்தில் உள்ள மேட்டுப் பகுதியை 'மாளிகைமேடு' என்று அழைக்கின்றனர். இப்பரந்த மேட்டில் எங்கு தோண்டினாலும் குவியலாகச் செங்கல் துண்டுகள் கிடைக் கின்றன. இச்செங்கற்கள் 40X20X10 செமீ. அளவிற்கு காணப்படு கின்றன. கூரைக்காக வேயப்பட்ட நீள் சதுர கூரை ஓடுகளும் கிடைக்கின்றன. இரண்டாம் இராசராசன் பேரரணும், மிகுந்த பாது காப்பும் உடையதொரு அரண்மனையை அமைத்தான் எனப் பல்லவ ராயன்பேட்டைக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. அந்த அரண்மனை இருந்த இடம் இதுவாக இருத்தல் வேண்டும்.

அகழ்வாய்வு

பழையாறையில் விரிவான தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற் கொள்வதன் பொருட்டு முதற்கட்டமாகக் கீழப்பழையாறை சோம நாதசாமி கோயிலுக்குத் தென்கிழக்குப் பகுதியில் உள்ள மேட்டுப் பகுதியில் ஒரு குழியும் இதே கோயிலுக்கு கிழக்குப் புறத்தில் நாதன் கோயிலுக்குப் போகும் வழிக்குத் தென்புறத்தில் இரண்டு குழிகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இந்த அகழ்வாய்வு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநரின் மேற்பார்வையின் கீழ், தொல்பொருள் ஆய்வாளர்கள், திருவாளர்கள் து. துளசிராமன் மா. செந்தில்செல்வகுமரன், ம. இராமகிருட்டிணன் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.

காலவரையறை

பழையாறை அகழ்வாய்வில் இரண்டு காலகட்டங்களைச் சேர்ந்த பண்பாட்டுத் தொடர்ச்சி காணப்படுகிறது. முதல் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு தொடங்கி கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரையிலும், இரண்டாவது காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரையிலும் பரவியிருந்தது.

செங்கற் கட்டடப் பகுதி

மூன்றாவது அகழ்வுக் குழியின் வடக்குப்புறத்தில் 85 செ.மீ. ஆழ அளவில் கிழக்கு மேற்காகச் செல்லும் செங்கற் சுவர்ப்பகுதி ஒன்று காணப்பட்டது. இச்சுவர்ப் பகுதி மொத்தம் ஐந்து வரிசை செங்கற் களை கொண்டுள்ளது. பிற்காலத்தில் இச்சுவர் செங்கற்களுக்காக

சிதைக்கப்பட்டுள்ளது என்பதைக் கிழக்கு மற்றும் மேற்குப் பக்கச் சுவர்கள் (Sections) தெளிவாகக் காட்டுகின்றன. இந்த செங்கற் சுவர் தலைப் பகுதி (Header) நேர்பகுதி (Struebere) என்னும் முறையில் சுவர் முழுவதும் 24X12X4 செ.மீ. அளவுள்ள முழு செங்கற்களை அடுக்கிக் கட்டப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்பு கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வாய்வில் கிடைத்துள்ள செங்கற் சுவர்களை ஒத்துள்ளன. இச்சுவரினையொட்டி இடைக்காலப் பானை ஓடுகளும் கூரையோடுகளும் கிடைப்பதைக் கொண்டு இக்கட்டடப் பகுதியைச் சோழர் காலத்தைச் சேர்ந்ததாகக் கணிக்கலாம்.

பானை ஓடுகள்

பழையாறை அகழ்வாய்வில் இடைக்காலத்தைச் சேர்ந்த சொர சொரப்பான சிவப்பு வண்ண ஓடுகள், கருப்பு வண்ண ஓடுகள், அலங்காரம் செய்யப்பட்ட ஓடுகள், வண்ணம் தீட்டப்பட்ட ஓடுகள் முதலியன அதிக அளவு கிடைத்துள்ளன. கருப்பு சிவப்பு வண்ண (Black and Red ware) ஓடுகள் சிலவும் கிடைத்துள்ளன.

அலங்காரம் செய்யப்பட்ட பானை ஓடுகள் பளபளப்பாக வும் சிவப்பு வண்ணமாகவும் உள்ளன. கலயங்களைச் சூளையில் இடுவதற்கு முன்னர் அவற்றின் மேற்பகுதியில் உலோக முத்திரை களைக் கொண்டு அழுத்தி அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. ஒரு புள்ளியைச் சுற்றி ஒன்று அல்லது இரண்டு வட்டங்கள் கொண்ட அலங்காரமும், குச்சியைக் கொண்டு புள்ளிகள் குத்தி சாய்வான கோடுகள் போன்று வரிசையாகப் பொறித்த அலங்காரமும் இதில் காணப்படுகின்றன.

கருப்பு மற்றும் சிவப்பு வண்ண ஓடுகளில் அழகிய வண்ணக் கோடுகள் தீட்டப்பட்டுள்ளன. சூளையில் இடுவதற்கு முன் கலயங் கள் மீது வெள்ளைக் களிமண்ணைக் (Kaolin) குழைத்து நேர்க்கோடு கள், சதுரக்கோடுகள், சாய்சதுரக் கோடுகள் வரைந்து பின்னர் அதற்கு மேல் சிவப்பு வண்ணம் பூசப்பட்டுள்ளது. கருப்பு வண்ண கலயங்கள் மீது செங்காவியைக் குழைத்து அலங்காரக் கோடுகள் தீட்டியுள்ளனர்.

தொல்பொருட்கள்

இதுவரை இங்கு மேற்கொண்ட அகழ்வாய்வில் இரும்பு ஆணிகள், கண்ணாடி மற்றும் சங்கு வளையல் துண்டுகள், சுடுமண் விளக்குகள், கெண்டியின் மூக்குப் பகுதிகள், பொம்மையின் உடைந்த பகுதிகள்,

கலசம் போன்ற அமைப்பு, செப்புப்பொருட்கள், சுடுமண் எடைகள், காதணிகள், ஆகியவை கிடைத்துள்ளன. இவை இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளைத் (கி.பி. 6-14 ஆம் நூற்றாண்டு) தெரிவிக்கின்றன.

இரும்பு ஆணிகள்

ஐந்து செ.மீ. முதல் இரண்டு செ.மீ. உயரம் வரையிலான இரும்பு ஆணிகள் இங்கு கிடைத்துள்ளன. இவை அக்காலத்தில் கட்டடங்களின் கூரைப் பகுதியில் அமைக்கப்படும் மரச் சட்டங்களை இணைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இது போன்ற இரும்பு ஆணிகள் கங்கைகொண்டசோழபுரத்திலும் கிடைத்துள்ளன. செம்புப் பொருள் ஒன்று இங்கு கிடைத்துள்ளது. இது சிமிழ் போன்ற சிறிய பொருளின் மூடியின் மீது அமைக்கப்படும் கைப்பிடியாக இருக்கலாம்.

வளையல் துண்டுகள்

இங்கு கண்ணாடி, அரக்கு மற்றும் சங்கு வளையல் துண்டுகள் கிடைத்துள்ளன. கண்ணாடி வளையல் துண்டுகள் மேல் பாள நிலையிலும், அரக்கு மற்றும் சங்கு வளையல் துண்டுகள் அதற்கு அடுத்த பாள நிலைகளிலும் கிடைக்கின்றன. கண்ணாடி வளையல்கள் கருப்பு மற்றும் மஞ்சள் வண்ணங்களிலும், அரக்கு வளையல் துண்டுகள் கருப்பு மற்றும் சந்தன வண்ணங்களிலும் காணப்படுகின்றன.

சுடுமண் விளக்குகள்

முதற் குழியில் உடைந்த சுடுமண் விளக்குகளின் பகுதிகளும், மூன்றாவது குழியில் 100 க்கு மேற்பட்ட முழுமையான விளக்குகளும் கிடைத்துள்ளன. இவற்றுள் மூன்றாவது குழியில் 51 செ.மீ. ஆழ அளவில் செங்கல் சுவர்ப் பகுதியை யொட்டி ஒரே இடத்தில் 100க்கு மேற்பட்ட விளக்குகள் முழு வடிவில் ஒன்றின் மீது ஒன்று அடுக்கப்பட்டிருந்தன. இவை இரண்டு வடிவில் உள்ளன. சிறிய வடிவிலான விளக்கு தற்போது கிராமப் புறங்களில் வழக்கிலிருக்கும் அகல் போல் உள்ளது. நான்கு திரிகள் வைத்து எரிப்பதற்கு ஏற்ற வகையில் அமைந்து அலங்காரங்களுடன் காணப்படும் பெரிய வடிவிலான விளக்கு ஒன்று இங்கு உடைந்த நிலையில் கிடைத்துள்ளது. இவ்விளக்கின் நடுப்பகுதியில் ஒரு சிறிய மேடான அமைப்பு காணப்படுகிறது. இது நீண்ட திரியினைச் சுற்றி வைப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது எனலாம்.

சுடுமண் கெண்டியின் மூக்குப் பகுதிகள்

இடைக்காலத்தில் சுடுமண்ணால் ஆன கெண்டிகள் வழக்கத்தில் இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இத்தகைய கெண்டியின் மூக்குப் பகுதிகள் இடை வரலாற்றுக்கால வாழ்விடங்கள் அனைத்தி லும் பெரும் அளவிற்கு கிடைத்துள்ளன. கங்கைகொண்ட சோழ புரத்தில் முழுவடிவில் ஆன சுடுமண் கெண்டி ஒன்று கிடைத்துள்ளது. இது குறுகிய வாயும் அகன்ற நடுப் பகுதியும் வட்டமான அடிப்பகுதி யையும் கொண்டுள்ளது. இதன் நடுப்பகுதியில் தண்ணீர் சொரியும் மூக்குப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. இம்மூக்குப் பகுதிகள் தாமரை மற்றும் மேடு பள்ளங்கள் போன்ற பல்வகை அலங்கார அமைப்புக்கள் கொண்டுள்ளன. பழையாறை அகழ்வாய்வில் இதுவரை ஐந்து வகை அலங்கார அமைப்புக்கள் கொண்ட சுடுமண் கெண்டியின் மூக்குப் பகுதிகள் கிடைத்துள்ளன.

சுடுமண் பொம்மை

மூன்றாவது அகழ்வாய்வு குழியில் உடைந்த சுடுமண் பொம்மை யின் இடுப்புப் பகுதியும் கைப் பகுதியும் கிடைத்துள்ளது. இப் பொம்மை கால்களை நீட்டி அமர்ந்துள்ளது போல் அமைந்துள்ளது. இடுப்பில் தொப்புளும், ஆண் குறியும் காணப்படுகின்றன. இது போன்ற சுடுமண் உருவங்கள் கோவை மாவட்டத்தில் உள்ள போளுவாம்பட்டி என்னும் ஊரில் முழு வடிவில் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவற்றுள் சில ஆண் குறிகளுடனும், சில பெண் குறிகளுடனும் காணப்படுகின்றன. இப்பொம்மைகள் வளமை சடங்கிற்காக (Fertility Cult) படைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடம் உண்டு.

சுடுமண்ணாலான கலசம் போன்ற அமைப்பு

வட்டமான அடிப்பகுதியும், கலசம் போன்ற மேல் பகுதியையும் கொண்டு விளங்கும் முழு வடிவிலான சுடுமண் உருவம் ஒன்று கிடைத்துள்ளது. இது வழிபாட்டிற்காக படைக்கப்படும் பொருட் களில் (Votive object) ஒன்றாக இருக்கலாம்.

கீழ் பழையாறையைத் தொடர்ந்து சோழன் மாளிகை, நந்தன் மேடு, நாதன் கோயில் போன்ற இடங்களிலும் அகழ்வாய்வு செய்யப் படவுள்ளது.

இறுதியாக, கீழ்ப்பழையாறை அகழ்வாய்வு மேற்கொள்ள அனுமதி வழங்கிய நிலவுரிமையாளர்கள் திரு. மோகன், திரு. நாராயணசாமி ஆகியோருக்கும், அகழ்வாய்வில் பங்குகொண்ட தொழிலாளர்களுக்கும் மிக்க நன்றி.

*

சோழர் காலத்தில் தண்ணீர்ப் பந்தல்

திருமதி சீ. வசந்தி
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை

கோடைக் காலத்தில் நீர் வேட்கையைப் போக்கத் தண்ணீர்ப் பந்தல் அமைத்துத் தண்ணீர் வழங்குதல் தமிழர் மரபு. தமிழ் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் தண்ணீர்ப் பந்தலைப் பற்றிய குறிப்புகள் விரவிக் கிடக்கின்றன.

இலக்கியங்களில் தண்ணீர்ப் பந்தல்

தமிழ் இலக்கியங்களில் தண்ணீர்ப் பந்தல் நீர்பந்தர், தண்பந்தர், பந்தர் எனப் பலவாறாக வழங்கப்பட்டுள்ளது. தண்ணீர்ப் பந்தல் காஞ்சி மாநகரில் அமைந்திருந்ததை மணிமேகலை,

"நிறைந்த பந்தற் றசும்புவார் நீரும்"[1]

என்பதால் அறிகிறோம்.

மற்றொரு காப்பியமான சீவகசிந்தாமணி தண்ணீர்ப் பந்தலில் வழிப்போக்கர்களுக்கு வழங்கிய நீரில் பூவும், சந்தனமும் கலந்திருக்கும் என்பதை,

"தலைத் தணில் மலரணிந்து சந்தனஞ்செய் பந்தரும்"[2]

எனக் குறிக்கிறது.

கல்வெட்டுக்களில் தண்ணீர்ப் பந்தல்

பல்லவர் காலத்திலும், பின்னரும் தண்ணீர்ப் பந்தல் அமைக்கப் பட்டிருந்ததற்குச் சான்றுகள் கல்வெட்டுக்களில் உள்ளன. சோழர் காலத்தில் தண்ணீர்ப் பந்தல்கள் பல அமைந்திருந்த செய்தியைக் கல்வெட்டுக்களைக் கொண்டு அறிகிறோம்.

தண்ணீர்ப் பந்தலுக்கு வைக்கப்பட்ட பெயர்கள்

பொதுவாகத் தண்ணீர்ப் பந்தலுக்கு அக்காலத்தில் இருந்த மன்னன் பெயரையோ அல்லது அதிகாரி மற்றும் தண்ணீர்ப் பந்தலை வைத்தவர் பெயரையோ சூட்டுதல் மரபு என்பது கல்வெட்டுக்களின் மூலம் அறியப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அகத்தீஸ்வரம் என்ற ஊரில் உள்ள இரண்டாம் இராசராசனின் 31-ஆவது

ஆட்சியாண்டு கல்வெட்டில் அங்கு அமைந்திருந்த தண்ணீர்ப் பந்தல் முதலாம் இராசராசனின் பேரால் 'செயங்கொண்ட சோழன்' தண்ணீர்ப் பந்தல் என வழங்கப்பட்டது தெரிகிறது.[3] முதலாம் இராசராசனின் 24-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'இராசராசன்' தண்ணீர்ப் பந்தல் பற்றிக் குறிக்கிறது.[4] செவ்வலிமேடு என்ற ஊரில் சாலைக் கிணறு தண்ணீர்ப் பந்தல் என்ற தண்ணீர்ப் பந்தல் இருந்திருக்கிறது.[5] மற்றொரு கல்வெட்டு ஒரு தண்ணீர்ப் பந்தல் இராசக்கத் தண்ணீர்ப் பந்தல் என அழைக்கப்பட்டதைக் குறிக்கிறது.[6]

தண்ணீர்ப் பந்தல் இருந்த இடங்கள்

தண்ணீர்ப் பந்தல்கள் பொதுவாகக் கோயில்களில், மக்கள் கூடும் மண்டபங்களில், பெருவழிகளில், மடங்களில் மற்றும் சோலை சூழ்ந்த இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

திருச்செந்துறையில் கல்லம்பலம் என வழங்கப்பட்ட அம்பலத்திலும்,[7] திருப்பாலத்துறை[8] மற்றும் செந்தலையிலும்[9] உள்ள அம்பலங்களிலும் தண்ணீர் வழங்கப்பட்டது.

உத்திரமேரூரில் பிராமணி மண்டபத்தின் முன்பு தண்ணீர் பந்தல் அமைந்திருந்தது.[10]

செவ்வலிமேடு என்ற இடத்தில் தண்ணீர்ப் பந்தல் அமைக்க மடம் கட்டப்பட்டிருந்தது.[11]

குமரிகழிக்குடியில், ஐயப்பன் வேதியன் சாத்தன் கோயில் திருச் சுற்றில் தென்புறத்தில், உத்தமச் சோழப் பேரேரியின் கீழ்க்கரை வழியாக, மேற்கு நோக்கிச் செல்லும் பெருவழியில் ஒரு தண்ணீர்ப் பந்தல் அமைந்திருந்தது.[12] உக்கலில், மேலைப் பெருவழியில் மற்றொரு தண்ணீர்ப் பந்தல் அமைந்திருந்தது.[13]

தண்ணீர்ப் பந்தல் அமைத்தோர்

தண்ணீர்ப் பந்தல் அமைத்தோரில் அமைச்சர்களும், அதிகாரிகளும், அரசனின் பணிமக்களும் மற்றும் பிராமணர்களும் இடம் பெற்றுள்ளனர்.

சோழ அரசனின் மந்திரியான தென்மங்கலக் காலன் என்ற அய்யன் நம்பி ஒரு தண்ணீர்ப் பந்தலை அமைத்துள்ளான்.[15]

முதலாம் இராசேந்திர சோழனின் சேனாபதி மதுராந்தகன் பரகேசரி மூவேந்த வேளான் என்பவன் பிரம்மதேசம் என்ற ஊரில்

தண்ணீர்ப் பந்தலை வைத்தான்.[16] இராசராச நாராயணன் சம்புவரயரின் அதிகாரி ஆற்பாற் கிழான் பெருங்கருணை ஆளன் தண்ணீர்ப் பந்தலை ஏற்படுத்தினான்.[17]

முதலாம் இராசராசனின் பணிமகன் ஆவூரைச் சேர்ந்த கண்ணன் ஆருரான், பெருவழியில் தண்ணீர்ப் பந்தல் அமைத்திருந்தான்.[18]

பிராமணர்களில் பாரதாயன் நக்கன் கண்டன் என்பவனும்,[19] ஒளப்புறை அச்சாமி கிரமவித்தன் சோமாசியார் மகன் நாகநந்தியும் தண்ணீர்ப் பந்தலை அமைத்துள்ளனர்.[20]

நீர் அட்டியோர்

உடையார்குடி ஆழ்வார் திருக்கோயிலின் முன்பு தண்ணீர் அட்ட மூவாயிரத்துனூற்றுவன் என்னும் பிராமணன் ஒருவன் பணியாளனாக நியமிக்கப்பட்ட செய்தியை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[21] செவ்வலிமேடு என்ற இடத்தில் தண்ணீர்ப் பந்தலில் தண்ணீர் அட்ட பிராமணன் ஒருவன் அமர்த்தப்பட்டான்.[22] இவ்விரு கல்வெட்டுக்களை நோக்கும் பொழுது தண்ணீர்ப் பந்தலில் நீர் அட்ட பிராமணர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

இரவிலும் தண்ணீர் வழங்குதல்

திருப்பாலத்துறை கல்வெட்டில் அவ்வூர் அம்பலத்தில் வைக்கப்பட்ட தண்ணீர்ப் பந்தலில் இரவில் விளக்கெரிக்க விளக்கிற்கு எண்ணெய் நானாழி நெல் அளிக்கப்பட்டது. இதனால் தண்ணீர்ப் பந்தல் இரவு நேரங்களிலும் இயங்கின எனத் தெரிகிறது. மேலும் பாண்டியன் கோமாறஞ்சடையனின் 35-ஆவது ஆட்சியாண்டில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து விளக்கெரிக்கத் தானம் அளித்த செய்தியைக் கூறுகிறது ஒரு கல்வெட்டு.

தண்ணீர்ப் பந்தல் பராமரிப்புக்குத் தானம்

தண்ணீர்ப் பந்தலைப் பராமரிக்க வழங்கப்படும் நிலத்தானத்தை 'பானி விருத்தி' எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

தண்ணீர்ப் பந்தலைப் பராமரிக்க நிலம், நெல், பொன் முதலியன அளிக்கப்பட்ட செய்திகளைக் கல்வெட்டுக்களைக் கொண்டு அறியலாம்.

தண்ணீர்ப் பந்தலைப் பராமரித்தோர்

உத்திரமேரூரில் உள்ள ஏரி வாரியம் செய்யும் பெருமக்களே பங்குனி மாதம் உத்திர நட்சத்திரம் தொடங்கி கார்த்திகை மாதம்

கார்த்திகை நட்சத்திரம் முடிய ஆண்டு தோறும் கண்காணிக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டிருந்தது.[42]

பராமரித்தோருக்கு ஊதியம்

தண்ணீர்ப் பந்தலில் தண்ணீர் ஊற்றுபவனுக்கு நெல் குறுணியும், இரவில் விளக்கெரிப்பவனுக்கு நாநாழியும், அப்பந்தல் தூய்மை செய்து மெழுகுவானுக்கும், தண்ணீர் வைக்கத் தேவையான பானைகள் செய்யும் குயவனுக்கும் ஆக மொத்தம் மூன்று கலம் நெல் அளிக்கப்பட்டதை ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. தண்ணீர்ப் பந்தலுக்குத் தேவையான நீரை இறைத்துத் தொட்டியில் நிரப்புவார்க்கு அருமொழிதேவன் என வழங்கப்பட்ட மரக்காலால் தினம் 2 குறுணி வீதம் ஆறு மாதங்களுக்கு முப்பது கலம் நெல் வழங்கப்பட்டது. தண்ணீர் வழங்குபவனுக்கு நாள்தோறும் இரண்டு குறுணி வீதம் ஆறு மாதங்களுக்கு முப்பது கலம் நெல் வழங்கப்பட்டது. பானை செய்யும் குயவனுக்கு மாதத்திற்கு 2 தூணி வீதம் ஆறு மாதங்களுக்கு நெல் 6 கலம் அளிக்கப்பட்டது. இதே கல்வெட்டில் தண்ணீர் எடுக்கும் கிணற்றையும், நீர் நீரப்பப்பட்ட தொட்டியையும் பழுது பார்க்கும் பணியும் ஆண்டுதோறும் செய்ய வகை செய்யப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. கன்னியாகுமரியில் இருந்த தண்ணீர் பந்தலுக்குத் தினம் 16 நாழி நெல் அளக்கப்பட்டது. செந்தலைக் கல்வெட்டில் நீர் அட்டுவானுக்கு எட்டு மா நிலம் வழங்கப்பட்டிருந்தது.

இறந்த இடத்தில் தண்ணீர்ப் பந்தல்

பிரம்மதேசத்தில் முதலாம் இராசேந்திரன் இறந்த இடத்தில் அவன் மனைவி வீரமாதேவி உடன் கட்டை ஏறி இறந்ததால் அவளின் உடன் பிறந்தானாகிய சேனாபதி மதுராந்தகன் பரகேசரி மூவேந்த வேளான் என்பவன் ஒரு தண்ணீர்ப் பந்தலை நிறுவினான். இதனை அவ்விருவர் உயிர்களின் தாகம் தீர்க்கும் பொருட்டு நிறுவியதாகக் கூறுகின்றான்.[26]

ஒரு கல்வெட்டில் தண்ணீர்ப் பந்தல் 12 கோல் நீளமும், 11 கோல் அகலமும் உடையதாக இருந்தது தெரிகின்றது.[27] தண்ணீர்ப் பந்தல் உள்ள இடங்களில் பயன் தருகின்ற மரங்களை நடவும், பந்தலைச் சுற்றி வேலி போடவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்குத் தேவையான தண்ணீர் ஆற்றிலிருந்தும் கிணற்றிலிருந்தும் கொண்டுவரப்பட்டது.

தண்ணீர்ப் பந்தல், தண்ணீர் வழங்கப்படும் இடமாக மட்டு மின்றி, கிராமச்சபை கூட்டம் நடைபெறும் இடமாகவும் இருந்ததை மணிமங்கலம் கல்வெட்டுக் கூறுகிறது.

தண்ணீர்ப் பந்தலுக்காகக் கணிச்சைப்பாக்கத்து திருவேகம்ப முடையான் என்பவன் நிலத்தைத் தானமாக அளித்தான். ஆனால் தண்ணீர்ப்பந்தல் ஏதோ காரணத்தால் அமைக்கப் பெறவில்லை. தண்ணீர்ப் பந்தலுக்காக அளிக்கப்பட்ட நிலம், சிறுத்தொண்டர் மடத்தை நடத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டதை அறிகிறோம்.

அடிக்குறிப்புக்கள்

1 மணிமேகலை, காஞ்சிமாநகர் புக்கக்காதை, பக்கம் 32
2 சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம் பாடல் எண். 75
3 கன்னியாகுமரி கல்வெட்டுக்கள், தொகுதி 1 எண். 1966-111 தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.
4 S.I.I. Vol. III Part 1, No. 4
5 Ibid No. 49
6 Ibid Vol. XIV No. 40
7 Ibid Vol. VIII No. 607
8 Ibid No. 582
9 Ibid Vol. XIII No. 187
10 Ibid Vol. VI No. 360
11 Ibid Vol. VII No. 49
12 கன்னியாகுமரி கல்வெட்டுக்கள், தொகுதி 1 எண். 1968-111
13 S.I.I. Vol III No. 4
14 கன்னியாகுமரி கல்வெட்டுக்கள் தொகுதி 1 எண். 1968-110
15 Ibid
16 பிற்காலச் சோழர் வரலாறு-சதாசிவ பண்டாரத்தார்-பக். 194
17 S.I.I. Vol. VII No. 49
18 Ibid Vol. III No. 4
19 Ibid Vol. VIII No. 607
20 Ibld Vol. VI No. 360
21 I bid Vol. XXI No. 27
22 I bid Vol. VII No. 49
23 I bid Vol. VIII No. 582
24 I bid Vol. VI No. 360
25 Ibid Vol. III No. 4
26 பிற்காலச் சோழர் வரலாறு-சதாசிவ பண்டாரத்தார்-பக். 194
27 கன்னியாகுமரி கல்வெட்டுக்கள்-தொகுதி1 எஸ். 1968-111
28 Topographical list of Inscriptions from Madras Presidency, by Rangacharya, No. 820 (290-1887)
29 கல்வெட்டுக்களும் தண்ணீர்ப் பந்தலும் - கி. ஸ்ரீதரன் (தினமணிச்சுடர் 21-4-1974)

சோழர் கால நந்தவனங்கள்

ம. இராமகிருஷ்ணன்
காப்பாட்சியர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, தஞ்சாவூர்

பூந்தோட்டம் என்பதின் வடசொல் நந்தவனம் என்பதாகும். மல்லிகை, இருவாட்சி, சண்பகம் போன்ற மனந்தரும் மலர்ச் செடிகளும், தெங்கு, பனை, கமுகு, இலுப்பை போன்ற மரவகைகளும் நந்தவனத்தினூடே வளர்க்கப்பட்டன. சோழர் காலத்தில் தெங்கு நந்தவனம், கமுகு நந்தவனம், பூ நந்தவனம் எனப் பலவகைப்பட்ட நந்தவனங்கள் இருந்தன.

தோற்றம்

தெய்வ வழிபாட்டிற்காக சோழர் காலத்தில் மிகுதியான நந்தவனங்கள் தோற்றுவிக்கப்பட்டதை கல்வெட்டுகள் பேசுகின்றன.[1] எனினும் மக்களின் பயன்பாட்டிற்காக[2] தனிப்பட்டோருக்குறியதாகவும்,[3] ஊரார்க்குரியதாகவும்,[4] பிரமதேசத்துச் சபைக்குரியதாகவும்,[5] நகரத்தார்க்குரியதாகவும்[6] நந்தவனங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

முதலாம் பராந்தகன் காலத்தில் செம்பியன் சோழவரையன் என்னும் ஓர் அதிகாரி, அய்யப்பாடி என்ற ஊரைத் திருத்தியமைத்த போது அவ்வூரில் தெங்கும், தமனகமும், இருவாட்சியும், மருவும், செண்பகமும், செங்கழுநீரும், மாவும், பலாவும், கமுகும், பனையும் உள்ளிட்ட பயன்தரு மரங்கள் நடவும், இடவும் பட்டன.[7] பிரம்மதேய பள்ளிச் சந்தங்கள் ஏற்படுத்தியபோதும் மலர் செடிகளையும், பயன்தரு மரங்களையும் நடவித்ததை செப்பேடுகள் கூறுகின்றன.[8] கண்டராதித்தன் மனைவி செம்பியன் மாதேவியார் திருவல்லம் சபையிடமிருந்து நிலம் வாங்கி, கோயிலுக்காக புதியதொரு நந்தவனம் அமைத்த செய்தி மற்றொரு கல்வெட்டு மூலம் தெரியவருகிறது.[9]

நிலம்

பூ வகைக்கும், மர வகைக்கும் ஏற்ற நன்செய், புன்செய் நிலங்களிலும், பாழ்பட்டுக் கிடந்த நிலங்களிலும்[10] நந்தவனங்கள் அமைக்கப்பட்டன. பயிருக்குத் தக்கபடி நிலங்கள் தரம் பிரிக்கப்பட்டிருந்தன. கமுகு நிலம், இலுப்பைக் கழனி, தெங்குக் கொடித்

தோட்ட நிலம், மாந்தோட்ட நிலம், பெரும்பூவும், குறுவையும் விளையும் நிலம் என்று வெவ்வேறாகக் குறிக்கப்பெறுகின்றன.[11]

பல இடங்களில் நிலத்தைத் திருத்தி நந்தவனப் பயிர் ஏற்றியதையும், கல்வெட்டுக்களில் காணமுடிகிறது. 'நந்தவனம் அமைப்பேன் என்று காடும் கள்ளியும் வெட்டி, மேடு பள்ளமும் ஒப்பித்து' நாலும் வேலியும் அமைத்து, நாறுப்பூத் திருப்பள்ளித் தாமம் மல்லிகையும், பெருஞ் சண்பகமும், இருவாட்சியும் உள்ளிட்ட மற்றும் எல்லா பூ மரங்களும் வைத்த நிலமும் வேலியமைத்து நீர் இறைத்து கன்று வைத்து மேடும் பள்ளமும் திருத்தி, நன்செய், புன்செய், தோட்டங்களில் பயிர் செய்வித்தும்,[12] எனக் கூறப்படுகிறது.

பூந்தோட்டமும், பணியாட்களும்

கோயிலில் உறையும் இறைவனுக்கு திருப்பள்ளித் தாமம் சாத்துவதற்காக விடப்பட்ட பூ நந்தவனங்கள் சோழர் கால கல்வெட்டுக்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இதற்காக விடப்பட்ட நிலம் 'திருமாலைப்புறம்' எனப்பட்டது. இங்கு மல்லிகை, செண்பகம், இருவாட்சி மற்றும் பூ மரங்கள் வைக்கப்பெற்றன. திருவிடைமருதூரில் மல்லிகை, சிறு செண்பகம் இரண்டிற்கும் தனித் தனியாகத் தோட்டங்கள் இருந்ததை இவ்வூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.

இவ்வாறு நடப்பட்ட மலர்களைப் பயிர் செய்யவும், பறிக்கவும், மாலைத் தொடுக்கவும், இறைவனுக்குச் சாத்தவும் பல தரப்பட்ட பணியாளர் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களை நந்தவனக் குடிகள் என கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[13] இப்பணியாளர் நந்தவனத்தைப் பராமரித்து கோயில் காரியம் செய்கின்ற பெருமக்களில் ஒருவராக விளங்கினர்.[14] நந்தவனத்தைப் பராமரிக்கும் தலைமை கண்காணி 'நந்தவனம் நாயகம் செய்வார்'[15] என்றும், அவருக்கு கீழே பணி செய்வோர் 'பேர்' என்றும், பேர்களுக்கு கீழ்ப் பணியாளர்களாக 'கொற்றுக்கள்' என்பாரும் இருந்தனர்.[16] இவர்களைத் தவிர 'நந்தவனம் இருக்கும் குடிகள்[17] என்பார் நந்தவனத்திலேயே நிலையாக தங்கியிருந்து நந்தவனப் பயிர்களுக்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தனர்.[18] மலர்களைப் பறித்து பல வகையான பூக்களை மாலையாகத் தொடுக்கும் பணியாட்கள் திருப்பள்ளித் தாமம் தொகுப்பர் எனப்பட்டனர். மானிகள் இப்பணியில் அமர்த்தப்பட்டச் செய்தி நங்கவரம் கல்வெட்டிலிருந்து தெரியவருகிறது. இவர்கள் பூப்பறித்து திருப்பூமண்டபத்தே சேர்த்தனர்.

அதனை மாலையாகத் தொடுக்க ஆட்கள் இருந்தனர். இப்பணியில் தேவரடியாரும் இருந்தனை மன்னார்குடிக் கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது.

ஊதியம்

இப்பணியாளர்களுக்கு ஊதியம் ஆயுள் முழுமையும் அனுபவித்துக்கொள்ள நிலமாகக் கொடுக்கப்பட்டது. சில வேளைகளில் காசாகவும், நெல்லாகவும் கொடுக்கப்பட்டது. அவை ஆண்டு ஊதியமாகவும், திங்கள் ஊதியமாகவும், நாள் ஊதியமாகவும் இடத்திற்கும், வேலையாட்களுக்கும் ஏற்றாற்போல் வழங்கப்பட்டது. நந்தவனக் குடிகளுக்கு இடமும், உடுக்க உடையும் கொடுக்கப்பட்டது.[20]

வரிகள்

விளைகின்ற மலர்களுக்கு மாவடை, மரவிறை, மரமஞ்சாடி, ஈழம்பூட்சி, குவளைக்காணம் என்ற பல வரிகள் விதிக்கப்பட்டன. நந்தவனத்தைக் காப்பதுபோன்ற பணிகளுக்காக பாடிகாவலும், வெள்ளான் வெட்டியும்,[21] வேலிக்காசும்[22] வழங்கப்பட்டது. கோயிலுக்குரிய நந்தவனத்தில் பணி புரிந்தோர்க்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.[23] சோழர் காலத்தில் எல்லா வகையான நந்தவனங்களையும் கண்காணிக்க அரசின் தோட்ட வாரியங்கள் ஊர் தோறும் இருந்தன.

தானங்களும் பெயர்களும்

இப்பணிகளை செய்கின்ற பணியாளர்களுக்கும், இத்திருப்பணிக்கும் கோயிலின் பெயராலும், நந்தவனங்கள் பெயராலும் நிலங்கள் தானமாக விடப்பட்டன.[24] அவை பெரும்பாலும் அரச தேவியர்களாலும், அரசர்களாலும் வழங்கப்பட்டன. நந்தவனங்களின் பெயரால் விடப்பட்ட நிலங்கள் திருநந்தவனப்புறம் என்று அழைக்கப்பட்டது. திருநந்தவனத்திற்கு தானங்கள் நிலம், மாடை, நெல், காசு போன்றவையாகக் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு தானங்கள் வழங்கிய அரசர், அரசியர், உயர் அதிகாரிகள் பெயர்களும், சில பெயர்கள் சாத்தப்பட்ட இறைவனின் பெயர்களும் நந்தவனத்திற்கு சூட்டப்பட்டன. கண்டராதித்தன் திருநந்தவனம், செம்பியன் மாதேவி திருநந்தவனம், எதிரிலிச் சோழன் திருநந்தவனம், அவனி ஆளப் பிறந்தான் திருநந்தவனம் என்று அரசர் அரசியர்களின் பெயர்களும், உதையமார்த்தாண்ட

மூவேந்தவேளானாயின கருமுகைத் திருநந்தவனம் என்று அரசியல் உயர் அதிகாரியின் பெயரிலும், ஸ்ரீகயிலாசமுடையார் திருநந்தவனம், செம்பியன் ஈசுவரமுடையார் திருநந்தவனம் என்று கோயிலில் உறையும் இறைவன் பெயர்களிலும் நந்தவனங்கள் இருந்தன.

பூ நந்தவனங்களைப் போன்று இறைவழிபாட்டிற்காகத் தெங்கு, கமுகு, இலுப்பைத் தோப்புக்களும் சோழர் காலத்தில் தனித்தனியே அமைக்கப் பெற்றிருந்தன என்ற செய்தி கீழ்க்காணும் கல்வெட்டுக் குறிப்புக்களிலிருந்து அறிய முடிகிறது. நாற்பத்தெண்ணாயிரம் தெங்கம் பிள்ளைகள் நின்ற தோட்டத்தை மங்கையர்க்கரசி என்பவள் தானமாகத் தந்தாள் என்பதைத் திருவண்ணாமலைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.[25] திருவாடுதுறை மகாதேவர்க்கு எழுநூறு தெங்கம் பிள்ளைகள் வைத்த நந்தவனம் இருந்தது. அதேபோன்று கமுகு தோட்டம் இருந்தமையை உத்தம சோழன் கல்வெட்டுக் கூறுகிறது.[26] இலுப்பை நிறைந்திருந்த இடம் 'இலுப்பைக் கழனி' என்றழைக்கப் பட்டது. செந்தலையில் இறைவனுக்குப் பகல் விளக்கெரிக்க சுவாமிநாதயிளவரசன் என்பவன் இலுப்பைத் தோட்டம் ஒன்றினைத் தானமாகத் தந்தான் என்று மற்றொரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.[27]

மேற்காணும் கல்வெட்டு மற்றும் செப்பேட்டுக் குறிப்புக்களிலிருந்து நந்தவனங்கள் இறைவனின் நிலையான இருப்பிடமாக விளங்கிய தோடன்றி, இலக்கியங்கள் பலவற்றில் குறிக்கப்பெறுவது போல சோழர் காலத்தில் அரசர்கள், மேன்மக்கள் முதலானோர் பொழுதுபோக்கும் இடமாகப் பயன்படவில்லை என்ற செய்தி குறிப்பிடத்தக்கதாகும்.

அடிக்குறிப்புக்கள்

1 ARE 273, 259, 282, 300, 301, 303 and 304 of 1913.
2 S.I.I. Vol. VIII No. 333
3 Ibid Vol. IV No. 498
4 Ibid Vol. XIX No. 290
5 Ibid Vol. VIII No. 151
6 Ibid No. 639
7 Ibid Vol. XIX No. 344
8 Ibid Vol. III, Part III
9 Ibid Part II-151
10 Ibid Vol. VIII No. 640

11. டாக்டர் இரா. நாகசாமி, யாவரும் கேளிர், பக்கம் 46-7
12. S.I.I. vol. V. No. 411
13. ,, vol. XIV, No. 132.
14. ,, vol, III, No.
15. ,, vol. VIII, No. 56.
16. ,, No. 55, 56.
17. ,, vol. XIX, No. 62.
18. ,, vol. III, part III, No. 151, 151A.
19. ,, vol. XIV, No. 132.
20. ,, vol. II, part II, No. 87.
21. ,, vol. VIII No. 56.
22. ,, vol III part III No. 68.
23. ,, part II No. 86.
24. A.R.E. 300, 310, 311, 315 of 1913
25. S.I.I. vol. VIII, No. 151.
26. Ibid vol. XIX No. 393.
27. A.R.E. 285 of 1926.

இராஜராஜீச்வரத்தில் பறையறைவு

டாக்டர் இரா. நாகசாமி
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

தஞ்சாவூரில் இராஜராஜன் பெரியகோயிலைத் தோற்றுவித்து அதற்கு ஆண்டுதோறும் பெரிய திருவிழா நடத்த ஏற்பாடு செய்தான். அதை 'ஆட்டைப் பெரிய திருவிழா' என்று அழைத்தான். அந்தத் திருவிழாவில் கொடியேற்று நாளன்று திருப்பறையறைவு கேட்பிக்கப்பட்டது. திருப்பறையறைவு என்றால் என்ன? அது எப்பொழுது செய்யப்படவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு முன்னால் இந்தக் கல்வெட்டைப் பார்ப்போம்.

தஞ்சாவூர் இராஜராஜீச்வரர் கோயிலில் திருவாய்க்கேழ்வி என்ற பணியை ராஜகேஸரி கோதண்டராமன் என்பவன் செய்தான். இவனுக்கு ஜயங்கொண்டசோழ கடிகைமாராயன் என்றும் பெயர். இவனுடைய இப்பட்டப் பெயர்களிலிருந்து இவன் இராஜராஜனின் பாராட்டுப் பெற்றவன் என்று தெரிகிறது. இக்கோயிலில் ஆட்டைப் பெரிய திருவிழாவில் கொடியேற்ற நாளன்று ஐவர் திருப்பறையறைவு செய்யவேண்டும். ஆடவல்லார் (நடராஜர்) திருமேனி இவ்விழாவில் வீதி உலாவாக மூன்று நாள் எடுத்துவரப்படும். இதில் ஆடவல்லார் வீதி உலாவரும் முதல் நாளன்று ஐந்து பேர் பறையறைந்து "ஆடவல்லார் எழுந்தருளும் நாள் இன்றுள்ளிட்ட மூன்று நாள்" என்று சொல்லவும் வேண்டும். இதற்காக இவன் நாற்பது காசு வைத்தான். இந்தக் காசை வீரநாராயண மங்கலம் என்ற ஊர்ச் சபையார் பெற்றுக்கொண்டு ஆண்டுதோறும் வட்டியாக ஐந்து காசு கோயிலுக்குக் கொடுத்தனர். இந்த ஐந்துகாசும் பறையறைவு செய்வதற்காகக் கொடுக்கப்பட்டது. இராஜராஜனுடைய 29-வது ஆட்சியாண்டில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. அதாவது கி.பி. 1014-வது ஆண்டில் நடைபெற்றது,

இக்கோயிலில் பெரிய திருவிழா ஆண்டுதோறும் ஒன்பது நாள்களுக்கு நடைபெறும் பெரியதிருவிழா என்பதைப் பிரும்மோத்ஸவம் என்றும், மகோத்ஸவம் என்றும் அழைக்கிறார்கள். இக்கல்வெட்டிலிருந்து பெரிய திருவிழாவுக்கு முதலில் கொடியேற்றம் நடைபெற்றதும்

அன்றுதான் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்றும் அறிகிறோம். இன்றும் உத்ஸவங்கள் தொடக்கத்திற்குக் கொடி ஏற்றம் உண்டு.

இந்த மரபை எடுத்துக் கூறும் நூல்கள் ஆகம நூல்களாகும். மகோத்ஸவ விதி என்ற அத்யாயத்தில் விழாவிற்கான விதிகள் கூறப்படுகின்றன. திருவிழாக்கள் ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என ஒற்றைப்படை நாள்களுக்குக் கொண்டாடப்படும். இதில் ஒரு நாளுக்கோ, மூன்று நாள்களுக்கோ, ஐந்து நாள்களுக்கோ நடைபெறும் திருவிழாக்களுக்குக் கொடி ஏற்றம் கிடையாது. 7, 9 நாள்களுக்கு நடைபெறும் விழாக்கள் கொடி ஏற்றத்தோடு தொடங்கும், இதைக் 'கொடி ஏற்றம்' என்றும், 'துவஜாரோஹணம்' என்றும் கூறுவர். பெரிய திருவிழாக்களில் தொடக்கத்தில் கொடி ஏற்றம், பேரிகை அடித்தல், பாலிகை இடல் என்ற மூன்றும் இன்றியமையாதவை. கொடிக்கம்பம் எவ்வாறு இருக்கவேண்டும்; கொடித்துணி எவ்வாறு இருக்கவேண்டும்; கொடியில் என்ன எழுதவேண்டும்; கொடி எவ்வாறு ஏற்றப்படவேண்டும்; என்ற விதிகள் உண்டு. இதைக் கூறும் ஆகம நூல்கள் கொடியை ஏற்றியவுடன் 'பேரிகை' அடிக்கவேண்டும் என்று கூறுகின்றன. பேரீதாடனம் என்று வடமொழியில் இதைக் கூறுவர். பேரிகைதானே? மடமட என்று எடுத்து அடித்துவிடக் கூடாது. பேரிகை என்பது தெய்வ அம்சம். அதற்கு உரிய வழிபாடு உண்டு. அந்த மரபையும் ஆகம நூல்கள் கூறுகின்றன.

அழகாக அலங்கரித்த மண்டபத்திலோ அல்லது கொடிக்கம்பத்தின் அருகிலோ பசுஞ் சாணத்தால் மெழுகி, அந்த இடத்தை இரண்டு பகுதியாகச் செய்யவேண்டும். ஒன்றில் அஸ்திரதேவரைக் கொண்டு வந்து வைக்கவேண்டும். மற்றதில் பேரிகை (முரசு) வைக்கவேண்டும். பேரிகையை, அஸ்திரதேவருக்கு முன் வைக்கவேண்டும். பேரிகையை புதிய வஸ்திரத்தால் (துணியால்) அலங்கரிக்கவேண்டும். புண்யாஹம் ஓதி அந்த தீர்த்தத்தைப் பேரிகையின் மீது தெளிக்கவேண்டும். பிறகு அஸ்திர தேவருக்குப் பூஜை செய்யவேண்டும். சூலத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு தேவதை உண்டு. அவற்றைப் பூஜிக்க வேண்டும். பின்னர் பேரிகை பூசை. பேரிகையின் அதிதேவதை நந்திகேசுவரர். ஆதலின் நந்திகேசுவரரைப் பேரிகையின் நடுப்பகுதியில் பூஜிக்கவேண்டும். அதன் இருமருங்கும் சூரியன், சந்திரனையும், கோணத்தில் சண்டிகேசுவரரையும், சுற்றிலும் திசைக் காவலர்களையும் (திக் பாலர்களையும்) பூஜிக்கவேண்டும். பிறகு நந்திகேசுவரருக்கு நைவேத்யம் காண்பிக்க வேண்டும். பிறகு தாம்பூலம்

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY

கொடுக்கப்படும். பிறகு எல்லாத் தெய்வங்களையும் ஆவாஹித்த வேண்டும். 18 கணங்களுடன் ஈசுவரரையும் நக்ஷத்ரங்களையும், புண்ணிய நதிகளையும், சமுத்திரங்களையும், குலமலைகளையும், பாதாளங்களையும், திக்பாலர்களையும், அனைவரையும் அங்கு எழுந்தருளுங்கள் என்று வரவேற்கவேண்டும். பிறகு எல்லா ஜனங்களுக்கும் விழாவும், தீர்த்தமாடலும் நடைபெறும் எனக் கூற வேண்டும். பிறகு பேரிகை வாசிப்பவரை (முரசு அறைபவரை) அழைத்துப் புண்ணிய நீர்த்தெளித்து, அவரது கையில் நீரும் மலர்களும் கொடுக்கவேண்டும். அவரும் பேரிகையில் மலரிட்டு, அதைக் கையில் எடுத்து முதலில் 'திக்தாம் தாளங்களை' வாசிக்க வேண்டும். அப்பொழுது இசையும் நிருத்தமும் நடைபெறும். அதன் பிறகு விருஷதாளம் வாசித்துப் பிறகு எல்லா தாளங்களையும் வாசிக்கவேண்டும். தொடர்ந்து எட்டுதிசைகளிலும், நாட்டிய மகளிர் (சிவகணிகையர்) எல்லா வாத்யங்களும் இசைக்க நடனமாட வேண்டும். வீணை முதலிய தந்திரீ வாத்யங்களும், முரசு முதலிய தோல் வாத்யங்களும், கஞ்சதாளம் முதலிய கன வாத்யங்களும், குழல் முதலிய துளை வாத்யங்களும் நான்கு வகை வாத்யங்களாகும். இத்துடன் பாடுவார் குரல் இசையும் சேர்ந்து 'பஞ்சமகா சப்தங்கள்' என்று அழைக்கப்படும். இவை இசைக்க பெண்கள் ஆடவேண்டும். இதுவே கொடி ஏற்றியவுடன் நடைபெறும் (பேரிதாடன) 'பேரிகை முழங்கும்' விழா. பேரிகை என்பது வடமொழிச் சொல். இதை தொன்று தொட்டு 'பறை' என்று கூறுகிறோம். ஆதலின் 'பறை அறைவு' என்பது பேரிகையை முதலில் விதிப்படி அடிப்பது என்னும் விழாவின் அங்கமாகும். இதைத்தான் ராஜராஜீசுவரர் கோயிலில் நடைபெற்ற திருக்கொடி ஏற்றும் நாளன்று 'திருப்பறையறைவு கேட்பிக்க' வகை செய்யப்பட்டது.

அஜிதாகமம் என்னும் நூல் பேரிகை பூஜை செய்து, உத்ஸவம் பற்றியும், தீர்த்தமாடல் பற்றியும் எல்லா ஜனங்களையும் கேட்பிக்கச் செய்யவேண்டும் என்று கூறுகிறது. 'உத்ஸவ அவபிருதெள பஸ்ச்சாத் ச்ராவயேத் ஸகலம் ஜனம்' என்று கூறுகிறது. தஞ்சைக் கல்வெட்டு அதே சொல்லைக் 'கேட்பிக்கும் கடிகையார்' என்று கூறுவது கவனிக்கத்தக்கது. அத்துடன் 'ஆடவல்லார் எழுந்தருளும் நாள் இன்றுள்ளிட்டு மூன்று நாள்' என்று திருப்பறையறைவு கேட்பிக்கும் கடிகையார் என்று கூறுகிறது. எல்லா மக்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற ஆகம விதிப்படியே தஞ்சாவூர் கோயிலில் செய்யப்பட்டது. இதில் மற்றும் ஒரு சிறப்பும் காணப்படுகிறது. இதற்கு ஏற்பாடு செய்தவன் இக்கோயிலில் திருவாய்க் கேழ்வி செய்தவன்

ஆவான்: அரசன் ஆணையையோ, கோயிலில் குருவின் மூலம் செய்தியையோ கேட்டுப் பிறருக்கு எடுத்துக் கூறுவது 'திருவாய்க் கேழ்வி' என்ற பணியாகும். இது மிகமிகப் பொறுப்புவாய்ந்த பணி. இவனுக்கு இராஜராஜன் 'கடிகை மாராயன்' என்ற பட்டம் அளித்திருக்கிறான். இவன் கோயிலில் தான் செய்த பணிக்கு ஏற்ப, வழிபாட்டிலும், திருவிழாவின்போது பிறருக்கு எடுத்துக் கூறும் 'பறையறைவு கேட்பிக்க' வகை செய்துள்ளான். இவ்வாறு பறையறைவு செய்பவர்களையும் கல்வெட்டு 'கடிகையர்' என்று கூறுவது ஒரு சிறந்த செய்தியாகும்.

★

சோழர் காலத்தில் பண்டாரம்

இரா. செல்வராசு
தொல்பொருள் அலுவலர்
கோவை

பண்டாரம் என்பது கருவூலமாகும். சோழர் காலக் கல்வெட்டுக்களில் இது கருவூலம் என்றும், கருவூலகம் என்றும் அழைக்கப்படுகின்றது. இக்காலத்தில் கல்வெட்டுக்களில் குறிப்பிடும் பண்டாரத்தின் பணியென்ன? எங்ஙனம் பணியாற்றியது? பணியாளர்கள் யாவர்? என்பதை இக்கட்டுரை ஆய்கிறது.

பண்டாரம் என்பது பண்டங்களைச் சேமிக்கும் இடமாகும். பண்டைய தமிழகத்தில் அரசின் முக்கிய வருவாய் நிலவரியே. நிலத்திலிருந்து வரும் இவ்வரி பணமாகவோ, பொன்னாகவோ மட்டுமின்றிப் பொருளாகவும், அதாவது பண்டங்களாகவும் (நன்செய், புன்செய் தானியங்கள்) பெறப்பட்டன. இதன் காரணமாகவே பண்டாரம் என அழைக்கப்பட்டது. பண்டாரத்திற்குச் சரக்கறையென்று தமிழ்ச் சொல்லகராதி பொருள் கூறுகிறது. சரக்கு என்றால் பொன் என்று பிங்கலந்தை பொருள் கூறுகிறது. தேவாரம் சரக்கறை என்றால் பண்டங்கள் வைக்குமிடம் என்கிறது. பண்டாரம் என்ற சொல்லின் வேர்ச்சொல் பண்டாரா (Bandara) என்ற வடமொழிச் சொல்லே யாகும். இதன் பொருள் பொக்கிஷம் அல்லது கருவூலமாகும்.

சங்க காலத்தில் பண்டாரம்

சங்க இலக்கியங்களில் பண்டாரம் நேரிடையாகக் குறிப்பிடப்படாவிடினும் 'நிதி' என்ற சொல்லில் பயின்று வருகின்றது. இச்சொல் கிட்டத்தட்ட பண்டாரத்தைக் குறிக்கும் சொல்லேயாகும். அகநானூற்றில் குடவாயிற் கீரத்தனார்,

..... வெல் வேல்
கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடு தரு நிதியினும் செறிய (அகம்: 234)

என்று சோழ மன்னன் குடவாயில் என்னும் நகரின்கண் வைத்த நிதியைக் குறிப்பிடுகிறார். மற்றொரு அகப்பாடலில் மாமூலனார்,

..... வெல் போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல் லோ

என்று நந்தர்களுடைய நிதியைக் குறிப்பிடுகிறார். பரிபாடலில் நல்லந்துவனார்,

கண்டார்க்குத் தாக்கணங்காமிக் காரிகை காண்மின்
பண்டாரம் காமன் படையுவள் கண் காண்மின்

என்று பண்டாரத்தைக் குறிப்பிடுகிறார்.

பல்லவர் காலத்தில் பண்டாரம்

சங்க காலத்திலிருந்த பண்டாரம் பல்லவர் காலத்திலும் தொடர்ந்து இருந்தது. தண்டன்தோட்டப் பட்டயத்தில் வட மொழிச் சுலோகத்தில் குமாரன் என்பவன் குறிக்கப்படுகிறான். அரசாங்கக் கருவூல அதிகாரியாக இருந்த இவன் கல்வி கேள்வி களில் சிறப்புமிக்கவன் என்பதைப் பட்டயத்தின் வாயிலாக அறிய முடிகிறது. (பல். செப்: பக்: 235)

சோழர் காலத்தில் பண்டாரம்

சோழர் காலத்தில் பண்டாரம் மிகவும் சிறப்பாக இயங்கி யமைக்குக் கல்வெட்டுக்கள் சான்று கூறுகின்றன. சோழர்களுடைய கல்வெட்டில் தஞ்சையிலுள்ள வல்லம், 'கருவூலகமான வல்லம்' என்றழைக்கப்படுகிறது. இதை நோக்கின் இக்காலத்தில் வல்லத்தில் பண்டாரம் இருந்திருக்க வேண்டும் என்று தெரியவருகிறது. இக் கருத்தை உறுதிப்படுத்துவது போன்று இவ்விடத்தின் மேற்பரப்பை ஆய்வு செய்ததில் முப்பதுக்கும் அதிகமான காசுகள் கண்டுபிடிக்கப் பட்டன.

பண்டாரத்தின் வகைகள்

தமிழகத்தில் மூன்று வகையான பண்டாரங்கள் இருந்தன. அவை: 1. இராசபண்டாரம் 2. நாட்டுப்பண்டாரம் 3. ஸ்ரீபண்டாரம் முதலியன.

இராச பண்டாரம்

இராச பண்டாரம் நாட்டையாளும் மன்னனுக்கு உரிமை உடையதாகும். திருவள்ளுவர் அரசன் என்பவனுக்குப் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் இவை ஆறும் இருக்க வேண்டும் என் கிறார். இப்பாடலில் கூழ் எனப்படுவது செல்வம் ஆகும். இங்கு

கூழ் எனப்படுவது மன்னனுக்குச் சொந்தமான இராசபண்டாரத்தில் இருந்த செல்வத்தையே குறிக்கும். இராசபண்டாரத்திலிருந்தே மன்னர்களும், தேவிமார்களும், இளவரசர்களும், பல கோயில்களுக்குத் தானம் அளித்தனர். அதற்கான பொருள் பகை மன்னர்களைப் போரில் வென்று நாட்டையழித்துப் பண்டாரங்களைக் கைக்கொண்டதன் மூலம் வந்தது 'உடையார் ஸ்ரீ இராசராசதேவர் சேரமானையும், பாண்டியர்களையும் மலை நாட்டு எறிந்து கொண்ட பண்டாரங்களில் யாண்டு . . . . . .' என்னும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு வரிகளால் இதை அறியமுடிகிறது. மேலும் நிலவரி, புரவரி, கடமை, மகமை போன்ற வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய் மேற்படி பண்டாரத்திற்கே போய்ச் சேர்ந்திருக்கலாம்.

நாட்டுப் பண்டாரம்

இராசபண்டாரத்தைப் போலவே ஒவ்வொரு நாட்டிலும் நாட்டுப் பண்டாரம் இருந்தது. இப்பண்டாரத்திலுள்ள காசையே, ஊர்ச்சபை நடத்தவும், நற்காரியங்களைச் செய்யவும் பயன்படுத்தி இருக்கலாம். இப்பண்டாரத்துச் செல்வத்தையே நாட்டைப் பாதுகாப்பதற்கு வேண்டிய படைக்கும், படை வீரர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியத்திற்கும் செலவழித்திருக்க வேண்டும். சில வகையான வரிகளின் மூலம் கிடைக்கும் வருவாயே நாட்டுப் பண்டாரத்தின் முக்கிய வருமானம் ஆகும். பிராமணர்களுக்குக் கொடுக்கப்படும் பிரம்மதேயத்திலிருந்து வரும் வருமானமும் இப்பண்டாரத்திற்கே போய் சேர்ந்திருக்கக்கூடும்.

ஸ்ரீபண்டாரம்

இராச பண்டாரம், நாட்டுப் பண்டாரம் போன்றே ஒவ்வொரு பெரிய கோயிலிலும் ஒரு பண்டாரம் இருந்தது. தஞ்சைப் பெரிய கோயிலிலும், திருவண்ணாமலைக் கோயிலிலும் பண்டாரங்கள் இருந்தன. மன்னர்களால் கோயில்களுக்கு அளிக்கப்பட்ட தேவ தானங்களும், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கொடுக்கும் தானங்களுமே ஸ்ரீபண்டாரத்தின் முக்கிய வருமானமாகும். இப் பண்டாரத்திலிருந்தே கோயில்களில் திருவிழாக்கள் நடத்தவும், திருமடை விளாகங்கள் கட்டவும், நொந்தா விளக்கு எரிக்கவும், தேவகன்மிகளுக்கு ஊதியம் அளிக்கவும் செலவிடப்பட்டது. கோயில் பண்டாரங்கள் வங்கி போல அமைந்து வைப்புப் பணங்களைப் பெற்றும் கடனுதவி அளித்தும் மக்களுக்கு உதவியதாகப் பேராசிரியர் டி. வி. மகாலிங்கம் தம்முடைய நூலில் குறிப்பிடுகிறார்.

பண்டாரத்தில் பணியாற்றும் பணியாளர்கள்

பண்டாரத்தில் பலவகையான பணியாளர்கள் பணியாற்றியதைக் கல்வெட்டுக்களின் வாயிலாக அறிய முடிகிறது.

சங்க காலத்தில் 'கனகச் சுற்றம்' என்ற அலுவலர் இருந்தார். இவர் கஜானா அதிகாரியாவார். பண்டாரத்தின் தலைவன் 'பண்டாரி' என அழைக்கப்பட்டான். சிவன் கோயிலிலுள்ள பண்டாரத் தலைவனுக்குச் 'சிவபண்டாரி' யென்றும், விஷ்ணு கோயில் பண்டாரத் தலைவனுக்கு 'ஆழ்வார் பண்டாரி' யென்றும், கோயிலிலுள்ள இரத்தினம், நகை முதலியவற்றைக் காக்கும் அதிகாரிக்கு 'மாணிக்கப் பண்டாரங் காப்பான்' என்றும் பெயர். இத்தகைய மாணிக்கப் பண்டாரங்கள் பலர் இருந்தனர் என்பதைத் தண்டன் தோட்டப் பட்டயத்தின் வாயிலாக அறியலாம். பண்டாரத்தைக் காவல் புரிபவனைத் திருமெய் காப்பான் என்றனர். பண்டாரத்திலிருந்து பொருள் கொடுக்கும்படி ஆணையிடும் அதிகாரி கொடுக்குப் பிள்ளை என அழைக்கப்பட்டதை உழலூர்க் கல்வெட்டின் மூலமாக அறிய முடிகிறது. அரசாங்க மூலபண்டாரம், மாணிக்கப் பண்டார காப்பான், கொடுக்குப் பிள்ளை என்பவர்களின் பொறுப்பில் செயல்பட்டு வந்ததைப் பெரியபுராணத்தின் வாயிலாக அறியமுடிகிறது. நாட்டில் உள்ள பண்டாரங்கள் சரிவர நடைபெறக் கண்காணிப்பு அவசியம். இவ்வாறு கண்காணிக்கும் அதிகாரியே பண்டாரக் கண்காணி ஆவான். இவனுடைய பணி பண்டாரங்களைக் கண்காணிப்பது, கோயிலுக்குரிய நிலத்தின் விலையை நிச்சயிப்பது, விற்பது, விற்ற நிலத்திலிருந்து வரும் வருமானத்தைப் பண்டாரத்திற்கு அனுப்புவது முதலியனவாகும்.

பண்டாரங்கள் மிகவும் கண்காணிப்போடு இருப்பினும் இதைப் பகைவர் கொள்ளையடித்துவிடுவதை ஸ்ரீரங்கம் கல்வெட்டு தெரிவிக்கிறது. இவ்வாறு கொள்ளையிடப்பட்ட பண்டாரத்தை மீண்டும் புனரமைப்பதுமுண்டு. கோனேரின்மை கொண்டான் கல்வெட்டொன்று பேரூரிலுள்ள பண்டாரம் கொள்ளையிடப்பட்டதையும், அழிவுபட்ட பண்டாரத்தைச் சீர்ப்படுத்துமாறு தேவகன்மிகள் மன்னனிடம் எடுத்துக் கூறியதையும், மன்னன் தான் விலைகொடுத்து வாங்கிய நிலத்தைத் தானமாகக் கொடுத்தான் என்பதையும் கூறுகிறது.

பண்டார வாரியம்

சோழர் காலத்தில் தோட்ட வாரியம், ஏரி வாரியம், பொன் வாரியம் எனப் பல வகையான வாரியங்கள் இருந்ததைப் போன்று

'பண்டார வாரியம்' என்ற ஒரு வாரியம் இருந்ததை ஸ்ரீரங்கம் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. மேற்படி வாரியத்தில் பணியாற்றிய பணியாளர்கள் யார் என்பதையும், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையினையும், தகுதிகளையும் அறிய இயலவில்லை. பண்டார வாரியத்தை அறிய இயலாவிடினும், 'புரவரித் திணைக்களம்' என்ற சொல் பல கல்வெட்டுக்களில் பயின்று வருகின்றது. புரவரி என்பது ஒரு வகையான (நில) வரியென்றும், திணைக்களம் என்பது அலுவலகம் (அ) துறையென்றும் நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகிறார்.

பண்டாரக் கல்

பண்டாரக் கல் என்ற சொல் பல கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. தஞ்சையின் இப்பண்டாரக் கல்லினை 'ஆடவல்லான்' கல் என்று ஒரு கல்வெட்டுக் குறிக்கிறது. பண்டாரக் கல் என்பது ஒரு வகையான நிறையாகும். இக்கல்லைக் கருவூல அதிகாரிகள் பயன்படுத்தினார்கள். பண்டாரக்கல் என்பது நிறுத்தல் அளவையாகப் பயன்படுத்தப்பட்டதை,

> . . . . ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீராஜராஜீசுவரமுடையார்க்குக் குடுத்த பொன்னின் கிடாரம் ஒன்று ஆடவல்லானென்னும் கல்லால் நிறை . . . .

என்ற கல்வெட்டு வரிகள் மூலம் அறியலாம்.

பண்டார வாடை

மன்னனுக்குச் சொந்தமான இடமோ (அ) கிராமமோ பண்டார வாடை என்று அழைக்கப்பட்டது. இன்றும் பண்டார வாடை என்ற ஊர்ப் பெயர் வழக்கத்தில் உள்ளது. இவ்வூர் அன்று மன்னனுக்குச் சொந்தமானதாக இருந்திருக்கவேண்டும்.

சங்ககாலத்தில் சற்றே துளிர்த்த பண்டாரம் பல்லவர் காலத்தில் பரவிச் சோழர் காலத்தில் செழித்தோங்கியதைச் சான்றுகள் வாயிலாகக் கண்டோம்.

★

பள்ளிச்சந்தம்

ஆர். வசந்தகல்யாணி
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை

கி.மு. 3-ஆம் நூற்றாண்டுத் தொடங்கிச் சமணமதம் தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்தது. பத்திரபாகு என்ற முனிவரின் சீடரான வைசாக முனிவரால் சமணமதம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாடு முழுவதும் பரப்பப்பட்டது என்ற கருத்திற்கு வலிமை சேர்ப் பதுபோல் மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டங்களில் மலைப் பாறைகளில் வெட்டப்பட்டுள்ள ஏராளமான, 3-ஆம் நூற் றாண்டைச் சார்ந்த கல்வெட்டுக்கள் சமணத் துறவிகளுக்கு அளித்த தானம் பற்றியதாகவே உள்ளன. கி.மு. 3-இல் தொடங்கி கி.பி. 3-4-ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த சமணப் பெரியார்கள் பெரிய ஊர்களுக்கு அருகாமையில் உள்ள மலைகளில் தனித்து வாழ்ந்திருந்தனர். இப்பெரியார்களுக்கு மக்களும், மன்னர்களும் மலைகளிலுள்ள கற்பாறைகளைச் செதுக்கி படுக்கைகளை அமைத்துக் கொடுத்தனர். இவ்வாறு செய்தளித்தவர் யார் என்பதை அக்கல்லிலேயே வெட்டி வைத்தனர். தமிழ்நாடு முழு வதும் குறிப்பாக மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, பழனி, கரூர் போன்ற இடங்களைச் சுற்றியுள்ள மலைகளில் இது போன்ற கல்வெட்டுக்கள் நமக்குக் கிடைக்கின்றன. சமணப் பெரியார் களுடைய அறிவிற்கும், மக்கள் நல்வாழ்வின்பால் அவர்கள் கொண்டி ருந்த ஈடுபாட்டிற்கும் கைமாறாகவே மக்களும், மன்னரும் இது போன்ற கொடைகளை அளித்தனர் என்று கொள்ளலாம். ஐந்து மா விரதங்களைத் தவறாது மேற்கொண்டொழுகிய அவர்கள் மக்க ளுடன் கலவாது தனித்தே இருந்தனர். பின்னர் மதத்தைச் சீரிய முறையில் பரப்பத் தனித்து வாழ்ந்தால் இயலாது என்பதுணர்ந்து மக்களுக்குக் கல்வி அறிவை போதிக்கவும், மருத்துவ உதவிகளை வழங்கவும், அபயமாகப் புகலிடம் அளிக்கவும், அதன்வழி மதத்தைப் பரப்பவும் தாங்கள் வாழ்ந்த மலைப்பகுதியோடு, மக்களின் இருப் பிடங்களுக்கு அருகாமையிலும் வாழத்தலைப்பட்டனர்.

சமண மதத்தையும் மக்கள் வாழ்க்கையையும் பிரிக்க இயலாத அளவு மக்கள் வாழ்வோடு இணைந்து கலந் தனர். இதனால் மதத்திற்கும், மக்களுக்கும் இருந்த இடைவெளி

குறைந்தது. மக்களின் ஆதரவு பெருகத் தொடங்கியது. முதலில் பாறைகளில் படுக்கை செய்தளித்த அவர்கள் பின்னர் வழிபாட்டிற்கென இறை உருவங்களையும் பாறையில் செதுக்கினர். அடுத்து அவ்விறை உருவங்களின் பூசைக்கெனப் பொருட்களையும், சமணப் பெரியார்களுக்குச் சிறு தானங்களையும் வழங்கினர். இவ்விதம் ஆரம்பித்த தானங்கள் சிறிது சிறிதாகப் பல்கிப் பெருகின. சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கையற்றிருந்த சமணர் அவற்றில் ஈடுபாடு கொள்ளும் ஒரு கால கட்டத்திற்கு வரலாயினர். பௌமசரியா (அ) விமலசூரி என்னும் பிராகிருத நூல் சமணத் திருவுருவ வழிபாடு, உருப்பிரதிட்டை, அபிடேக ஆராதனை ஆகியவை பற்றி ஓரளவு எடுத்துரைக்கிறது. இந்நூல் கி.பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டது.[1] எனவே இதே காலத்தையொட்டித் தமிழ்நாட்டிலும் உருவ வழிபாடு தொடங்கி இருக்க வேண்டும். இக்கருத்தை வலிமைப்படுத்துவதாக மதுரைக் காஞ்சியில்,

வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்
பூவும் புகையுஞ் சாவகர் பழிக்கச்
சென்ற காலமும் வருஉ மையமும்
இன்றி உட்டோன்றிய ஒழுக்கமொடு நன்குணர்ந்து
வானமு நிலனுந் தாமு முதுணரும்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
ஆன்றடங் கறிஞர் செறித்தனர் நோன்மார்
கல்பொளிந்தன்ன விட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண்டன்ன வயங்குடை நகரத்து

— வரிகள் 475-484

என்ற வரிகள் அமைந்துள்ளன.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டுத் தொடங்கி கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை சமண சமயத்தின் வளர்ச்சியும் மக்கள் ஆதரவும் சீராக உயர்ந்து கொண்டே வந்தது. மன்னரும் மக்களும் பேராதரவு அளித்துப் போற்றினர். இதன் பின்னர் கி.பி. 6-7-ஆம் நூற்றாண்டுகளில் அப்பர், ஞானசம்பந்தர் தலையெடுத்துச் சிறப்பாக இருந்த சமண சமயத்தை வீழ்த்துவதையே நோக்கமாகக்கொண்டு, 'பக்தி இயக்கம்' என்ற வழியில் மக்கள் மனங்கவரும் வகையில் இந்து சமயத்தைப் பரப்பி உயர்வு பெறச் செய்யலாயினர். சமணர்கள் எண்ணிறந்த துன்பங்களை அடைந்தனர். கழுவிலேற்றப்பட்டும்,

அவர்தம் சொத்துக்களும், பாழிகளும் அழிக்கப்பட்டும் பெருந்துன்ப மடைந்தனர். அவருடைய கொள்கைகளையும், செயல்களையும் இழித்துரைத்து, சமண மதம் சிறிது தொய்வடைந்தது. சமயப் பூசல் மிகுந்தது. இது மிகக் குறுகிய காலமே எனலாம். மீண்டும் சமணம் விழிப்புக் கொண்டு பல புதிய மாறுதல்களுடன் வேகமாகச் செயல்படத் தொடங்கியது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வாரங்க சரித என்னும் சமண நூல் இருவ்தமான வழிபாடுகளைப் பற்றிக் கூறுகிறது.[2] 1. பாவ பூசை (Bhāva puja) 2. திரவிய பூசை (Dhravya puja) என்ற இரண்டில் பாவ பூசை என்பது மனத்தினை ஒருமுகப்படுத்தி இறைவனை அதன்மூலம் வணங்குவது, திரவிய பூசை என்பது விக்கிரக ஆராதனை, அபிடேகம், பூசை முதலியனவற்றுக்குச் சிறப்பிடம் அளித்து அவ்வித முறையில் வழி பாடு செய்வது. இதே காலத்தைச் சார்ந்த பத்ம புராணம் என்னும் நூலும் உருவ வழிபாட்டை வலியுறுத்தி எழுதப்பட்டது. பிற் காலத்தே எழுதப்பட்ட யசஸ்திலகசம்பு, வசுநந்தீஸ்வராவகாசாரம் போன்ற நூல்களும் உருவப்பிரதிட்டை, தூப ஆராதனை ஆகிய வற்றை வலியுறுத்துவனவாக எழுதப்பட்டன. இந்த சமண சமயக் கொள்கை மாற்றம் தமிழ்நாட்டிற்குப் பொருத்தமாக அமைந்து விட்டது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் தொய்வடைந்த மதம் தழைக்கு முகமாகப் பல்வேறு உருவங்கள் படைக்கப்பட்டு வழிபாடு பெருகத் தொடங்கி விட்டன. கழுகுமலை, சித்தன்னவாசல் போன்ற ஊர்களில் ஏராளமான உருவங்களும், கோயில்களும் எழுப்பப் பட்டன. கோயில்களும், திருஉருவங்களும் தோன்றிய உடனேயே அதற்கான வழிபாடு, வழிபாட்டுக்கு நிவந்தங்கள் என்ற அமைப்பும் வளர்ந்து கொண்டே வந்தது.

பள்ளிச்சந்தம்

சமணர் கோயில், அவர்களுடைய மடம் (அ) கல்விச்சாலைக்குப் பள்ளி என்று பெயர். சமணப் பெரியார்கள் அறிவு ஜீவிகள். தாங்கள் தங்கி இருந்த இடங்களிலேயே மக்களைக் கூட்டி அறிவுக் கண்ணைத் திறந்தனர். பள்ளிகளில் சிறார்களைக் கூட வைத்ததால் அவை பள்ளிக்கூடம் என்றழைக்கப்பட்டன. இன்றும் கல்விச் சாலை கள் பள்ளிக்கூடம் என்றே அழைக்கப்படுகின்றன. இந்தப் பள்ளி களுக்குச் சொந்தமாக வழங்கப்பட்ட நிலம், ஊர் போன்ற எல்லா வற்றையும் பள்ளிச்சந்தம் என்று வழங்கினர். சொந்தம் என்பது சந்தம் என்றானது. வடமொழிச் சொல்லான 'ஸ்வதந்தி' அதாவது ஒருவருடைய உரிமை என்பதனின்று இச்சொல் வந்தது என்பர்.[3]

கிருஷ்ணசாஸ்திரி என்பார் 'சத்' என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்ததாகக் கருதுவர்.[4]

இந்தப் பள்ளிச் சந்தங்கள், கோயில்களுக்கும், சமண மடங்களுக்கும், சமய ஆசாரியர், மாணாக்கர்களுக்கும் வழங்கப்பட்டன. பல்லவ மன்னன் சிம்மவர்மனது ஆறாம் ஆட்சியாண்டில் வஜ்ரநந்தி என்னும் சமணப் பெரியாருக்குப் பள்ளிச் சந்தமாக நிலமளித்ததைக் கூறும் பள்ளன் கோயிற் செப்பேடே தமிழ்நாட்டில் கிடைத்த முதல் தமிழ்ச் செப்பேடும், பள்ளிச்சந்தம் பற்றிக் கூறும் முதல் செப்பேடும் ஆகும்.

தானம் அளிக்கும்போது ஒரு ஊரையே தானமாக-பள்ளிச் சந்தமாக வழங்குவதுண்டு. திருநறுங் கொண்டை[5] 'திருப்பருத்திக் குன்றம்[6]' திருமலை[7] போன்ற ஊர்கள் முழுவதுமாகப் பள்ளிச் சந்தமாக வழங்கப்பட்டன. திருமலை ஜினாலயத்தில் உள்ள முதல் இராஜேந்திர சோழனின் கல்வெட்டு "..... ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் பங்கள நாட்டு நடுவில் வகை முகைநாட்டும் பள்ளிச் சந்தம் வைகவூர்த் திருமலை ....." என்று குறிக்கிறது.[8] இவ்வாறு ஒரு ஊரையே தானமாகக் கொடுப்பது சைவ, வைணவக் கோயில்களுக்கும் உண்டு. இவற்றை முறையே தேவதானம், திருவிடையாட்டம் என்று கூறுவர். இவ்வாறு சைவ வைணவக் கோயில்களுக்குத் தானம் அளிக்கும்போது அவ்வூரில் ஏற்கெனவே பள்ளிச்சந்த நிலங்கள் இருக்குமானால் அவற்றை நீக்கி, மீதம் மட்டுமே வழங்கப்பட்டு, சமணர்க்கு அளிக்கப்பட்ட கொடை சிறப்பாகக் காப்பாற்றப்பட்ட நிலையினையும் சில கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.[9] முதற் பராந்தகன் காலத்தில் கடைக் கோட்டூர் என்ற ஊர் தானமாக அளிக்கப்பட்டபோது ஏற்கெனவே உதயேந்திரம் செப்பேட்டுப்படி இரண்டாம் பிருத்வீபதி திகம்பர சமணர்க்குப் பள்ளிச் சந்தமாக அளித்த இரண்டு பட்டி நிலத்தையும் நீக்கி வழங்கப்பட்டதை அறிகிறோம்.

நிலத்தானம்

புதுக்கோட்டை வட்டத்திலுள்ள, ஆளுருட்டி மலையில் உள்ள முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுடைய (கி.பி. 1216) கல்வெட்டொன்று பாம்பையூருடையான் செங்குடி ஆனையடி தேனற் பெருமகன் என்ற வியாபாரி திருமானைமலை நாயனார் கோயிலுக்கு அர்ச்சனா போகமாகப் பெரிய பள்ளிவயல் என்ற நிலத்தைப் பள்ளிச் சந்தமாக அளித்தான் என்று கூறுகிறது.[10]

திருமெய்யம் வட்டம் பொன்னமராவதி கோளீஸ்வரர் கோயிற் கல்வெட்டு ஒல்லையூர்க் கூற்றத்துக் கொன்றையூரான உத்தம சோழ புரத்துப் பள்ளிச்சந்தம் பற்றிக் கூறுகிறது.[11]

திருமெய்யம் வட்டம், காரையூர் சுந்தரராசப் பெருமாள் கோயிற் கல்வெட்டு, ஒல்லையூர்க் கூற்றத்துக் காரையூர்ப் பள்ளிச்சந்த நிலத்தைக் கூறுகிறது.[12]

செங்கை மாவட்டத்திலுள்ள, சிறுவாக்கம் சீகரணப் பெரும் பள்ளிக்கு நிலங்கள் தானமளிக்கப்பட்டன.[13]

திருக்கோயிலூர் திருவீரட்டானமுடைய தேவருக்குரிய நிலம் தானம் செய்யப்பட்டதைக் குறிக்கும் கல்வெட்டில் பள்ளிச் சந்தமாகிய இயக்கிப்பட்டி குறிக்கப்படுகிறது.[14]

புதுக்கோட்டை வட்டம், நார்த்தாமலை திருமயக் கடம்பர் கோயிலுக்கருகே உள்ள பாறையில், குலோத்துங்கனின் 27-ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இரட்டைபாடி கொண்ட சோழவளநாட்டுத் தெலுங்க குலகாலபுரத்துப் பள்ளிவயல் நிலம் பற்றியும், இவ்வூர்த் திருமானைமலை அருகதேவற்குப் புறகரை நிலம் இரண்டு மா பற்றியும் கூறுகிறது.[15]

சிதம்பரம் கோயிற் கல்வெட்டுக்கள் திருவம்பலப்பள்ளி நல்லூர் என்னும் ஊரையும், ஆற்றூரான இராசராச நல்லூரில் இருந்த பள்ளிச் சந்த நிலங்களையும் குறிக்கின்றன.[16]

ஊர், நிலம் ஆகிய இவை தானம் செய்யப்பட்டது மட்டுமல்லாது, ஒரு குறிப்பிட்ட வருவாயிலிருந்து வரும் வரிப்பணமும் பள்ளிக்குத் தானம் செய்யப்பட்டது. திருநறுங்கொண்டையிலுள்ள குலோத்துங்க சோழனின் 9-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு வீர சேகர காடவராயன் என்பான் இங்கிருந்த நாற்பத்தெண்ணாயிரப் பெரும்பள்ளிக்கு வரித்தானம் செய்துள்ளதைத் தெரிவிக்கிறது.[17]

வடார்க்காடு மாவட்டம் பஞ்சபாண்டவர் மலையிலுள்ள முதல் இராசராசனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இலாடராசன் வீரசோழன் என்னும் குறுநில மன்னன் திருப்பான்மலையிலுள்ள இறைவனிடம் அளவுகடந்த பக்தியுடையவன் என்றும்; அவன் தன் மனைவியின் வேண்டுகோளுக்கிணங்கக் கூரகம்பாடி என்ற ஊரில் இருந்து கிடைக்கும் சில வருவாய்களை அவ்விறைவனுக்கு தானமாக அளித்தான் என்றும் ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.[18]

இறைவன் கோயிலில் உள்ள அடியார்கள் உண்ண ஏராளமான தானங்கள் அளிக்கப்பட்டன.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஆனந்தமங்கலம் பாறைச் சிற்பங்களின் கீழ் பொறிக்கப்பட்டுள்ள முதற் பராந்தகன் கல்வெட்டொன்று விளையபாகுரக் குரவடிகளின் மாணாக்கர் வர்த்தமானப் பெரியடிகள் என்பார் ஜினேந்திரப்பள்ளி அடியார்களுக்கு உணவளிக்கப் பொன் கொடுத்த செய்தியைக் கூறுகின்றது.[19]

கழுகுமலையில் உள்ள மாறஞ்சடையனுடைய மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'சித்தாந்தம் உரைக்கும் படாரர் உள்ளிட்டப் பதின்மர் வயிராக்கியர்க்கு ஆகாரத் தானமாகத் தனமுதல் குடுப்பித்துக் கிணறு எடுப்பித்ததைக் குறிக்கிறது.[20]

அடுத்து, சமணப் பெரியார்களும், அவர்தம் மாணாக்கர்களும் சிறந்த முறையில் போற்றப்பட்டனர். அவர்களுக்கும் பள்ளிச் சந்தங்கள் வழங்கப்பட்டன. செஞ்சி வட்டம் தொண்டூரிலுள்ள முதற் பராந்தகன் கல்வெட்டொன்று விண்ணகோவரையன் வைரி மலையன் என்பான் குணநெறிமங்கலமாகிய வழுவா[மொ]ழி ஆராந்தமங்கலமும் தொண்டூர் பள்ளியுடையான் விளாகமும் மடைச் செறுவுக்கு மேபால் அத்திமொட்டைக் கிணறுந் தோட்டமுந் தொண்டூர்த் தெற்கில் வாசலில் வழிக்குக் கீழ்பால் வடபால் கிணறுந் தோட்டமும் இவழியின் மேல்வழி வழுவாமொழிப் பெரும்பள்ளி விளாகமும் இவையணைத்தும் பறம்பூர் வச்சிரசிங்க [இ]ளம்பெருமானடிகளுக்கும் இவர்வழி மாணாக்கற்கும் உரித்தாகப் பள்ளிச் சந்தமாகத் தாரையட்டிச் செய்து குடுத்ததைக் கூறுகிறது.[21]

மேலும் ஆன்றவிந்தடங்கிய சமண ஆசாரியர்களது அறிவில் பெருமதிப்புக்கொண்டு அவர்களுக்கு நிலமளித்த சிறந்த நிலையினையும் காண்கிறோம். மலையத்துவஜன் என்ற சமண முனிவர் தேனூர் மலையில் தவமியற்றி வந்தார். அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில், அப்பகுதியை ஆட்சிபுரிந்து வந்த இருக்குவேள் வம்சத்துக் குறுநில மன்னன் ஒருவன் சென்றபோது அம்முனிவரின் அறிவாற்றலைக் கண்டு வியந்து அவருக்கு இறையிலியாகப் பள்ளிச்சந்த நிலம் அளித்துச் சென்றான் என்ற செய்தியைப் புதுக்கோட்டை வட்டம் தேன்மலையில் அமைந்த கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.[22]

கோயில் வழிபாட்டிற்கும், அடியார்கள் உணவு உண்பதற்கும், ஆசாரியர்களுக்குச் சிறப்பு செய்வதற்கும் மட்டுமின்றிக் கோயிலைப்

பராமரிக்கவும்; கோயிலுக்குச் சொந்தமான ஏரிகளைப் பராமரிக்கவும் கூடத் தானங்கள் வழங்கப்பட்டன. தென்னார்க்காடு மாவட்டம் ஜம்பையில் உள்ள முதற் பராந்தகனின் 21-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு வாளையூர் நாட்டுப் பெரும்பள்ளி என்னும் சமணக் கோயிலுக்குரிய ஏரியைப் பராமரிக்கும் பொருட்டு நிலம் (ஏரிப்பட்டி) தானம் செய்ததைத் தெரிவிக்கிறது.[23]

மேலும் ஒரே ஊரில் ஒரு பகுதி தேவதானமாகவும் மற்றொரு பகுதி பள்ளிச்சந்தமாகவும் இருக்கும் நிலையில் இரண்டுமே தனித் தனியே ஊர்ச்சபையை நடத்துதலும் உண்டு. எடுத்துக் காட்டாகச் சாத்தமங்கலம் என்ற ஊரில் ஒருபகுதி தேவதானமாகவும் மறுபகுதி சமணப் பள்ளிச்சந்தமாகவும் செயல்பட்டன. பொது விவகாரம் வந்தபோது இரண்டு சபைகளும் கூடி ஊருக்குச் சொந்தமான நிலத்தில் ஒரு குளமும், நந்தவனமும் அமைக்க நிலம் பகிர்ந்து இறையிலியாகச் செய்து, இறையை இரண்டு சபைகளும் பகிர்ந்து கொண்டன என்று பார்க்கிறோம்.[24]

இவ்வாறு மேற்கண்ட எடுத்துக்காட்டுகளினால் சமண மதத்தின் மேல் மக்களுக்கிருந்த பற்றும், அவர்கள் காலந்தோறும் சமணக் கோயில்களுக்கும், பெரியார்களுக்கும் அளித்து வந்த தானங்கள் குறித்தும் அறியப்படுகிறது. மேலும் பல்லவர், பாண்டியர், சோழர் என்று அரசர்களும், பொது மக்களும் தொடர்ந்து ஆதரித்துவந்தனர். ஏராளமான பள்ளிச் சந்தங்கள் வழங்கப்பட்டன. இந்துக் கோயிலும், மதமும் போற்றப்பட்ட அதே நிலையில் சமணமும் போற்றப்பட்டது. இடையிடையே ஏற்பட்ட சிறுசிறு தொய்வுகள் தவிர கி.மு. 3 முதல் கி.பி. 12-ஆம் நூற்றாண்டுவரை சமணம் சிறப்பாக ஆதரிக்கப்பட்டு வளர்ந்தது என்பதற்கு மேற்கூறிய கல்வெட்டுக்களே சான்று.

அடிக்குறிப்புக்கள்

1 Raghava Varier, M. R. 'Socio Economic Functions of the Jain Temples SVASTISRI F.N. p. 183. Agam Kala Prakashan; Delhi 1984.

2 Ibid

3 Desai, P.B. Jainism in South India and some Jaina Epigraphs; Gulabchand. Hirachand Doshi; Jaina Samskrti Sannakshana Sangha: Sholapur-1957 p .79

4 South Indian Inscriptions, Volume II p. 52 f.n. 2

5 Annual Report on Epigraphy 385 of 1902

6 Ibid 381 of 1929

7 South Indian Inscriptions Vol. XVII No. 67

8 Ibid-

9 S.I.I. Vol. II No. 76

10 Ibid Vol. XVII No. 397

11 Pudukkottai State Inscriptions No. 578

12 Ibid No. 584

13 A.R.E. 430 of 1922: Mad. Ep. Rep. 1926-27, 1923.

14 S.I.I. Vol VIII No. 889

15 Pudukkottai State Inscriptions No. 158

16 S.I.I. Vol. VIII No. 48

17 Epigraphy Report 1901-2

18 Epigraphia Indica Vol. IV p. 137

19 A.R.E. 1923 pp. 128-9

20 S.I.I. Vol. V No. 405

21 Ibid Vol. XIX No. 80

22 Pudukkottai State Inscriptions Vol. I No. 9

23 A.R.E. 44 of 1937-8

24 Ibid 466 of 1912

★

ஒரு சோழ அரசனும், மதப் பூசலும்

எஸ். சௌந்தரபாண்டியன்,
எம்.ஏ., (தமிழ்), எம்.ஏ., (ஆங்.), பி.எட்., டிப்.வ.மெர.
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5

காலின் மெக்கன்சி (1754-1821) என்பார் தொகுத்த வரலாற்றுச் சுவடிகளில் வரலாகும் வரலாறு அனைத்தும் ஏற்புடையனவா?

இதற்கு விடையாக, சி.எம். இராமச்சந்திரனார் கருத்தை வைக்கலாம். மெக்கன்சியின் புராணச் சுவடிகளிற் பேசப்படும் மாந்தர் பழக்கவழக்கங்கள் கருத்தில் கொள்ளத்தக்கனவே. மெக்கன்சியின் வரலாற்றுச் சுவடிகளில் பயிலும் அரசர்களின் பெயர்கள் தவறாகப் போனாலும், அவ்வரசர்கள் புரிந்த வினைகள் முற்றிலும் ஒதுக்கத்தக்கன அல்ல.[1]

எனவே, இக்கருத்தின் அடிப்படையில் சோழ அரசர்கள் பற்றிய அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடி ஒன்றை[2] *ஆய்வோம். முதற்கண், அச்சுவடியின் திரள் கருத்தைக் காணலாம்.*

"தென்பெண்ணை ஆற்றுக்குத் தென்பகுதியில் வீரசோழன் ஆண்டனன். வடபகுதியில் அவன் உடன்பிறந்தான் ஆண்டான். வீரசோழன் சைவ மதத்தினன். அவன் வைணவர்களைத் துன்புறுத்தினான். ஒரு நாள் திருவந்திபுரம் எனும் ஊரிலுள்ள வைணவக் கோயிலை அழிக்க முற்படுகையில் வீரசோழனுக்கு ஒரு மனமாற்றம் ஏற்பட்டது. அன்று முதல் வைணவர்களைத் துன்புறுத்தாது அமைந்தனன். மாறாக, வைணவர்களுக்குப் பல தானங்களைச் செய்குவானாயினன். பிறகு தஞ்சை மாவட்டப் பகுதியிலுள்ள அறந்தாங்கிக்கு அமைதியான வாழ்வு வாழ்வான் வேண்டிச் செல்கின்றான்."

இச்சுவடியிலிருந்து நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளத்தகு கருத்து, வீரசோழனுக்கும், வைணவர்களுக்கும் இடையேயான மதப் பூசல் எனலாம்.

வீரசோழன் வைணவக் காழ்ப்பில், வைணவக் கோயில்களை இடித்துத்தள்ளும் செயலையும் புரிகிறான். சுருங்க உரைக்கில்,

அவன் நாட்டிலிருந்து வைணவத்தை நீக்கிச் சைவத்தைப் பரப்ப விழைகிறான்.

வைணவர் துன்புறுத்தலின் உச்ச கட்டமாக, வீரசோழன் இராமானுஜரை 'சிவாத் பரதரம் நாஸ்தி' (சிவனைவிடச் சிறந்தது வேறில்லை) என ஓலையில் எழுதும்படி ஆணையிடுகிறான். அஞ்ஞான்று, கூரத்தாழ்வார் அவ்வோலையில், 'த்ரோணமஸ்தி ததஹ பரம்' (பதக்கு குறுணியைவிடப் பெரியது.) என்று வரைகிறார். வடசொல்லான சிவம் என்பதற்குக் குறுணி என்ற பொருளும் உளது. எனவே கூரத்தாழ்வார், மதிநுட்பத்துடன், குறுணியே [சிவமே] பெரியது என எண்ணவேண்டாம்; பதக்கு, குறுணியைவிடப் பெரியது, அதிகமானது' எனக் குறிப்பிட்டார். அதுகேட்ட வீரசோழனின் கண்கள் சிவந்தன. கூரத்தாழ்வாரின் கண்களை அழிக்க ஆணையிட்டான்.

கண்கெட்ட கூரத்தாழ்வாருக்கு ஆறுதல் புகன்ற இராமானுஜர் அங்கிருந்து ஸ்ரீபெரும்புதூர் சென்றார்.

இங்கு, இவ்வரலாற்றை விளக்கும் பிற அச்சு நூற்களுக்கும், அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகச் சுவடிக்கும் சிறிது வேறுபாடு தென்படுகிறது.

சுவடியின்படி, மேற்குறித்த நிகழ்ச்சியில், வீரசோழனே ஒரு பெருமாள் கோயிலுக்குச் செல்வதாகவும், அங்கு இராமானுஜரைச் சந்திப்பதாகவும் உளது. ஆனால், ஒரு வடமொழி நூற்படி வீரசோழன் இராமானுஜரை அவனது அரண்மனைக்கு வர அழைப்பு விடுக்கிறான். அதற்குக் கூரத்தாழ்வார், தானே இராமானுஜரின் வேடத்தில் வீரசோழன் அவைக்குச் செல்கிறார்.[3] வடமொழி அச்சு நூலின் இக்கருத்தையே பிறிதொரு வடமொழி நூலும் புகல்கிறது.[4] சுவடி சாற்றுவதை ஏற்றுக்கொண்டால், இராமானுஜரின் 'காஷாய'த்தைத் தான் அணிந்துகொண்டு சென்ற களங்கம் கூரத்தாழ்வாருக்கு வராதொழியும் எனக் குறிப்பிட இடமுளது.

பொதுவில், மேற்குறித்த நிகழ்வால், சைவ வைணவப் பூசல் அச்சோழன் காலத்தில் இருந்தது எனத் தெளிவுறுகிறோம். அச்சோழன் காலத்தை அறிய இங்கு முயல்வோம்.

உடையவர் என்று அறியப்பெறும் இராமானுஜரின் காலம் கி.பி. 1017-1137 ஆகும்.[5] கூரத்தாழ்வார் பிறந்தது கலி 4109 அதாவது[6] கி.பி. 1008 ஆகும். எனவே, வீரசோழனின் காலம் கி.பி.11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகலாம்.சுவடி பகரும் இவ் வீரசோழன் யார்?

இராமானுஜருடன் மலைந்து விஷ்ணுவின் மூர்த்தத்தை (சிலையை) கடலுக்குள் வீசிய ஒரு சோழன் குறித்து வரலாற்றாசிரியர் பேசுகின்றனர். அச்சோழனோடு, சுவடி குறிப்பிடும் வீர சோழனை இணைத்துக் காணலாம்.

விஷ்ணுவின் திருமேனியைக் கடலுள் வீசியெறிந்தவன் கிருமிகண்ட சோழன் என்பவனே எனச் சாற்றுகின்றன வடமொழி நூற்களான திவ்யசூரி சரிதமும், யதிராஜ வைபவமும்[7]. கி.பி. 1070-இல் மறைந்த அதிராஜேந்திரன் என்பானே, கிருமிகண்டசோழன் ஆவான் என்பது கே. ஏ. என். சாஸ்திரியார் கருத்து.[8] ஆனால், சாஸ்திரியாரின் கருத்திலிருந்து மாறுபடுகிறார் டி.வி.எஸ். பண்டாரத்தார்.[9] இன்னும், இராமானுஜரைத் துன்புறுத்திய சோழன் குலோத்துங்கசோழனே என்ற கருத்தும் உள்ளது.[10]

எனவே சோழர் வரலாற்றில் வரும் சோழ அரசன் ஒருவனோடு, இவ் வீரசோழனை உறுதியாக இணைக்க மேலும் வலுவான சான்றுகள் தேவைப்படுகின்றன எனல் சாலும்.

முடிவாக, அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகச் சுவடி வாயிலாக, சோழர் வரலாற்றில், கி.பி. 11-ஆம் நூற்றாண்டில், சைவ-வைணவ மதப் பூசல் இருந்தது எனவும், அப்பூசல் விரைவில் ஒரு முடிவுக்கு வந்து, பூசலற்ற நிலை தோன்றியது எனவும் அறிகிறோம்.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் முகிழ்த்த தமிழ் இலக்கியங்களை மேற்காணும் வரலாற்று அடிப்படையில் ஆய்தல் நலம்.

அடிக்குறிப்புக்கள்

1 சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், சோழன் பூர்வ பட்டயம் (1950), முகவுரை.

2 அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடி எண். ஆர். 7756

3 யதிராஜ வைபவம், சுலோகம் 95

4 திவ்யசூரி சரிதம், அத். 18, சுலோ. 74.

5 தமிழ்க் கலைக்களஞ்சியம், தொகுதி 2, பக். 75

6 அண்ணங்கராச்சாரியார், கூரத்தாழ்வான் வைபவம், (1929), ப. 2

7 டி.வி.எஸ். பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, தொகுதி 1, ப. 257

8 கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, சோழர் வரலாறு, தொகுதி 1, ப. 354.

9 டி.வி. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, தொகுதி 1, ப. 258

10 அண்ணங்கராச்சாரியார், கூரத்தாழ்வான் வைபவம், ப. 19

★